369

# திவ்விய ஸூரி சரிதம்

இப்பிரபந்தம்
மைசூர் மஹாராஜா சர்வகலாசாலைகளில்
பிரதம தமிழ்ப் பண்டிதராயிருந்த
மஹாவித்வான்
கோழியாலம் கோயில் சப்தம் வங்கீபுரம்
ஸ்ரீநிவாஸாசாரியரால்
இயற்றப்பட்டு,

அன்னார்
புத்ரபௌத்திரர்களால்,
ஸ்ரீ உப. வே. வங்கீபுரம் வாஸுதேவசாரியரின்
முகவுரையுடன்

வேதாந்த தீபிகை
கார்ய நிர்வாக ஸபையாரால் பல அச்சுக்கூடங்களில்
பதிப்பிக்கப்பட்டது.

பிரமாதி ஐப்பசி மாதம் } 1939.

ALL RIGHTS RESERVED

ஸ்ரீ:
ஸ்ரியை நம:

# முகவுரை

'திவ்ய ஸூரி சரிதம்' என்னும் இக் கிரந்தத்தை இயற்றிய ஆசிரியர், 'கோயில் சப்தம் வங்கீபுரம் ஸ்ரீநிவாஸாசார்யர்' என்னும் ப்ரஸித்திபெற்ற தமிழ் வித்வான். இவர் வங்கீபுரம் வம்சத்தைச் சேர்ந்த ஆசார்ய புருஷ குலத்தில் ஜனித்த ஸ்ரீ வைஷ்ணவர். இவருடைய பூர்வீகர்கள் அநேக வருஷங்களுக்கு முன் ஸ்ரீரங்கத்தில் வஸித்துவந்தார்கள் என்றும், பிறகு பெருமாள் கோயிலுக்கருகிலுள்ள மருத்தாம்பாடி என்னும் ஸ்ரீ கிராமத்தில் குடியேறி கோழியாலம் என்னும் ஸ்ரீ கிராமத்தில் பூ ரூப சொத்துக்களைப்பெற்று ஸ்ரீவரத ராஜனுடைய திருவடிவாரத்தை அலங்கரித்து வந்தார்களென்றும் நாம் கேட்டிருக்கின்றோம். இப்பொழுது பரமஹம்ஸ பரிவ்ராஜகராய்ப் பெருமாள் கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கோழியாலம் ஸ்வாமிக்குப் பூர்வாச்ரமத்தில் இக் கிரந்தாசிரியர் பித்ருவ்யர். ஜ்ஞாநாநுஷ்டாநங்களிலும் ஆபிஜாத்யத்திலும் மிக்க யஶஸ் பெற்றிருக்கும் தக்ஷிண தேசத்திய ஸ்ரீ வைஷ்ணவ குலங்களுள் இந்தக் குலமும் ஒரு பெரிய குலமே.

இந்த ஆசிரியர் பால்யத்திலேயே, 'ஸ்ரீரங்கராமாநுஜ மஹா தேசிகன்' என்று ப்ரஸித்திபெற்றிருந்த ஸ்ரீகேதாண்டிப்பட்டி ஸ்வாமியின் கடாக்ஷத்திற்குப் பாத்ரமாகி, அந்த ஸ்வாமி ஸந்நிதியிலேயே பஞ்ச ஸம்ஸ்காராதிகளைப் பெற்று க்ரந்த காலக்ஷேபாதிகளையும் செய்து, அவருடைய அஸாதாரணமான அநுக்ரஹத்திற்கும் ஆஸ்பதமானார். ஏற்கெனவே தமிழில் சிறந்தப் பயிற்சியைப் பெற்றிருந்த இவருக்கு, இப்பொழுது இந்த ஸ்வாமியின் விசேஷித்த அநுக்ரஹ பலத்தாற்போல அந்தப் பாஷையில் அஸ்யாத்ருசமான கவந சக்தியும் ஆவிர்ப்பவித்தது. அதன் பயனாக இவர் அப்பொழுதே 'ஸ்ரீ ரங்கராமாநுஜ நூற்றந்தாதி' என்னும் ஒரு க்ரந்தத்தைத் தமது ஆசார்யருடைய வைபவ விஷயமாக இயற்றி, அந்த ஸ்வாமியின் திருவடியில் ஸமர்ப்பிக்க, அந்த ஸ்வாமியும், அந்த க்ரந்தத்திலுள்ள பலவித பெருமைகளைப் பார்த்து வியப்படைந்து, நமது ஆழ்வார் ஆசார்யர்களின் சரித்ரத்தை இம்மாதிரி பாடல்களால் ப்ரஸித்திபடுத்துவது இவருடைய கவந சக்திக்கு அநுரூபமாக இருக்குமென்று திருவுள்ளம்பற்றி, இவரை அம்மாதிரியான கைங்கர்யத்தில் நியமித்தார். அந்த நியமநத்தை எவ்வித விளம்பமுமின்றிக்கே அநுஷ்டிக்க வேண்டுமென்னும் ஆவல் இவருக்கு இருந்தும் அநேக விக்நங்கள்

நேரிடவே அது அப்பொழுது நிறைவேறாமல் நின்றுவிட்டது. அதற்குப் பிறகு இவர், சில வருஷகாலம் சிற் சில வித்யா சாலைகளில் தமிழ் ஆசிரியராய் இருந்து, பிறகு மைஸூர் ஸர்வ கலா வித்யாசாலையில் சற்றேறக் குறைய பத்து வருஷகாலம் தமிழ் ஸம்பந்தமான ஆதிபத்யத்தை வஹித்து, பிறகு பங்களூரிலிருக்கும் ஸெண்ட்ரல் காலேஜில் மூன்று வருஷம் பாஷா ப்ரவசநத்தைச் செய்து, 1910-வது வருஷத்தில் லௌகிக வ்யாபாரங்களிலிருந்து நிவ்ருத்தரானார். மைஸூர் ராஜாங்கத்தில் இருந்தபொழுது, அந்தத் தேசத்திய மஹாராணியினுடைய வேண்டுகோளுக்கு இணங்கி, 'மைஸூர் அரசு' என்னும் பெயருடன் செய்யுள் ரூபமான க்ரந்தமொன்றை எழுதினார். அதில், மைஸூர் மஹாராஜர்களின் சரித்ரம் வெளியிடப்பட்டிருப்பதுடன், அந்த ராஜ வம்சம் பூர்வ காலத்திய யது குலத்தைச் சேர்ந்ததென்றும் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. இந்த க்ரந்தத்தை முடித்தவுடன், பூர்வம் தமது ஆசார்யரால் தமக்குச் செய்யப்பட்டுள்ள நியமநத்தை நிறைவேற்றாமல் வேறு வ்யாபாரங்களில் தாம்ப்ரவர்த்தித்து அந்த நியமநத்தை அநாதரித்து விட்டதைப்பற்றி ஒரு அநுதாபம் ஜநிக்கவே, இவர் ப்ரஸ்துத திவ்ய ஸூரிசரித்ரத்தை எழுத ஆரம்பித்தார். * அது பூர்த்தியாவதற்கு முன்னதாகவே நேத்ரத்தில் ஸ்வல்ப அபாடவம் உண்டாயிற்று. அந்த அபாடவம் பலப்படுவதற்கு முன் க்ரந்தத்தைப் பூர்த்திசெய்துவிட வேண்டுமென்று த்வரைப்பட்டு, அதை ஒருவாறு முடித்துவிட்டு, பிறகு பெருமாள் கோயிலிலேயே ஸந்நிதித் தெருவில் ஸ்ரீ வரதராஜனுடைய திருவடி வாரத்தில் வஸித்துக் கொண்டு, அவனுடைய திவ்ய ஸேவையால் அநுக்ருஹீதராய் 1917-ம் வருஷத்தில் இந்த விபூதியைவிட்டு விலகிப் பரமபதமென்று சொல்லப்படும் ஸ்ரீ பூரண்யனுடைய திருவடிகளை அடைந்தார். பெருமாள் கோயிலில் அசக்தியுடன் எழுந்தருளியிருக்கும் பொழுதும், ஆசார்ய கைங்கர்ய ரூபமாக ஸ்ரீ தேசிக ப்ரபந்தத்திற்கு ஒரு எளிய தமிழ் உரையைத் தெளிவான தமிழ் நடையில் எழுதி ப்ரசுரம் செய்தார். திவ்ய ஸூரி சரிதம் என்னும் இக் க்ரந்தம் மாத்ரம் அச்சுப் பதிப்பிக்கப்படாமல் தங்கிவிட்டது. இதை அச்சுப் பதிப்பித்து வெளியிடுவதைத் தமக்கு ப்ராப்தமான கைங்கர்யம் என்பதை நன்கு உணர்ந்த அவருடைய புத்ரராகிய ஸ்ரீ உ. வே. தேவநாதாசார்யரும் அவருடைய பௌத்ரர்களாகிய ஸ்ரீ ஊ. வே. கஸ்தூரிரங்காசாரியர் ஸ்ரீ உ. வே. வரதாசார்யர் இவர்களும், ஸ்ரீ வேதாந்த தீபிகையின் பத்ராதிபர்களுடைய ஸஹாயத்தை அவலம்பித்து அந்தத் தீபிகையின் வாயிலாக இதனை ப்ரசுரம் செய்வித்திருக்கிறார்கள். சென்ற ஆடி மாஸத்திய ஸஞ்சிகையுடன் இது பூர்த்திபெற்று ஒரு புஸ்தக ரூபமாய் ஸமக்ரமாக வெளி வந்தது.

தீபிகை வாயிலாக இந்த க்ரந்தம் வெளிவந்ததைப்பற்றி நாம் விஜ்ஞாபநம் செய்துகொள்ள வேண்டிய அம்சம் ஒன்று உண்டு. ஸ்ரீ தேவ

* இது இந்த க்ரந்தத்தின் முதல் சர்க்கம் 4-வது பாடலில் விளங்குகின்றது.

நாதாசார்யர், தீபிகையின் அதிகாரிகளுடன் இந்த விஷயத்தைப்பற்றி முதல் முதலில் ப்ரஸ்தாவித்தபொழுது அக்காலம் தீபிகையின் நிர்வஹணமே மிக்க ச்ரமத்துடன் நடைபெற்று வந்துகொண்டிருந்த காலமாயிருந்தபடியால், இந்த க்ரந்தத்தை ப்ரசுரிப்பதன் பாரத்தை ஏற்றுக்கொள்வது தீபிகைக்குப் பாதகமாகுமென்று அவர்கள் பயந்தார்கள். பிறகு, ஸ்ரீ தேவநாதாசார்யர், இந்த க்ரந்தத்தை அச்சுப்பதிப்பிப்பதால் ஏற்படும் செலவின் பெரும்பாகத்தைத் தாம் கொடுப்பதாக ஒத்துக்கொள்ளவே, தீபிகையின் அதிகாரிகள் அதற்கு இணங்கி, ஒவ்வொரு ஸஞ்சிகையிலும் எவ்வெட்டுப் பக்கங்கள் வீதம் இந்த க்ரந்தத்தை ப்ரகாசிப்பிக்க ஆரம்பித்தார்கள். மூன்று நான்கு வர்ஷகாலம் அம்மாதிரி ஸ்வல்பம் ஸ்வல்பமாக ப்ரசுரிக்கப்பெற்று இப்பொழுதுதான் அது பூர்த்தியை அடைந்தது. இம்மாதிரி தீபிகையுடன் ஒன்றுகவே இது வளர்ந்து வந்தன் பயனுக இதற்கு என்ன நன்மை நேர்ந்தது என்பதை நாம் சொல்ல அசக்தராக இருக்கிறோம்; தீபிகைக்கு அப்பொழுதைக் கப்பொழுது நேர்ந்த ச்ரமத்தை இதுவும் பங்கிட்டுக்கொள்ளும்படி ஸம்பவித்தது என்பதை மாத்ரம் நாம் அறிவோம். இந்தப் புஸ்தகத்தின் அமைப்பைச் சற்று ஊன்றிப்பார்க்கு மவர்களெல்லாருக்கும் அது நன்கு விளங்கும். உபயோகப் படுத்தப்பட்டிருக்கும் காகிதம் முதலிய த்ரவ்யங்களின் தாழ்மையும் அச்சுப்பதிப்பிப்பதன் சீர்மைக்குறைவும் அவைகளுக்கு நிமித்தபூதர்களாயிருக்கும் எங்களுக்கே லஜ்ஜையை ஜநிப்பிக்கின்றன. பத்தரை மாத்துத் தங்கத்தில் இழைக்க வேண்டிய ரத்நத்தைப் பித்தளையில் இழைத்து விட்டோமே என்று நாம் வருந்துகின்றோம். இதற்கு முக்ய சொந்தக்காரராக இருக்கும் ஸ்ரீ தேவநாதாசார்ய ஸ்வாமி இந்தத் தோஷத்தைச்சற்றுப் பொறுத்து நிற்பாராக.

ஆனால், ஒரு அம்சத்தில் நாம் கொஞ்சம் ஸந்தோஷத்தைச் செய்துகொள்ளவும் இடம் இருக்கின்றது. இம்மாதிரி க்ரந்தங்களை எழுதும் க்ரந்த கர்த்தாக்கள், ப்ராயேண, தமது மநஸ்ஸில் தோன்றும் அர்த்தங்களுக்கு அநுரூபங்களான வாசகங்களைத்தேடி அமைக்கும்பொழுது முதலில் தோன்றும் சில சப்தங்களை எழுதியும் பிறகு அவைகளை மாற்றியும், சில சப்தாந்தரங்களை மற்றுள்ள சப்தங்களால் அநுமாநம் செய்து கொள்ளும்படி விட்டு விட்டும், சிலவிடங்களில் பௌர்வாபர்ய மாறுதலைச் சிற்சில குறிகளால் மாத்ரம் ஸூக்ஷ்மமாக ஸூசிப்பித்தும், இவ்வாறு, பிறகு அந்த க்ரந்தம் தம்மாலேயே சரியான ஸ்வரூபத்தை அடைவிக்கும்படி ஹஸ்த லிகிதங்களை அமைப்பது வழக்கம். அம்மாதிரியே இந்த க்ரந்தமும் எழுதப்பட்டிருந்தது. தமிழில் சிறந்த ஜ்ஞாநமுள்ளவர்களைத் தவிர்த்த மற்றை எவரும் இதற்குச் சரியான ஸ்வரூபத்தை ஏற்படுத்துவதற்கும் அச்சுப்பதிப்பிப்பதற்கு அபேக்ஷிதமான சீர்திருத்தத்தைச் செய்து கொடுப்பதற்கும் சக்தராக மாட்டாரென்று தோன்றினபடியால், அப்படிப்பட்ட தமிழ் வித்வானைத் தேடிப்போகும்

படி நமக்கு ஸம்பவித்தது. அப்பொழுது தீபிகையில் அந்வயம் பெற்றிருந்த சைதாப்பேட்டை டீசர்ஸ் காலேஜ் தமிழ்ப் பண்டிதர் உரைகடம் ஸ்ரீ. உ. வே. ஸுதர்சநாசார்ய ஸ்வாமி, மிக்க க்ருபையுடன் தாம் அந்தப் பாரத்தை வஹிப்பதாக ஏற்றுக்கொண்டார். அவருடைய பராமர்சத்தால், அந்த க்ரந்தத்திற்கு இயற்கையாக இருந்த ஒளி எவ்விதம் வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றது என்பதைத் தமிழ் ஜ்ஞாநமுள்ளவர்க ளெல்லாரும் நன்கு அறிவார்கள். ஸ்ரீ ஸுதர்சநாசார்ய ஸ்வாமியால் ஏற்பட்டுள்ள இந்த குணாதிசயத்திற்கு, தீபிகையின் ஸம்பந்தம் ஒருவாறு காரணமாகின்றது என்பதை நினைத்து நாமும் இதனால் ஒருவித த்ருப்தியை அடைகின்றோம்.

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தில் ஆழ்வார்களென்றும், ஆசார்யர்களென்றும் சிறந்த மெய்யடியார்கள் பலருண்டு. அவர்களுக்குள், 'த்ரமிடோபநிஷத்துக்கள்' என்று சொல்லப்படும் அத்யாத்ம விஷய ப்ரபந்தங்களை அருளிச் செய்தவர்கள் ஆழ்வார்களாவார்கள். இவர்கள் பகவானுடைய மங்கள குணங்களிலே மூழ்கி அவைகளில் நன்றாக ஆழ்ந்திருப்பவராதலால் இவர்கட்கு, 'ஆழ்வார்' என்று திருநாமம். இவர்களுடைய ப்ரபந்தங்களே ஸாரதமங்கள் என்பது ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய கொள்கை. இப்படி அவர்கள் கொள்கையைக் கொள்வதற்கு ப்ரதாந காரணமென்னவென்றால், வேதாந்த ரஹஸ்யத்தை இவைகளே மிக்க தெளிவுடன் வெளியிடுகின்றன என்பதே. நிற்க, இந்த ப்ரபந்தங்களை ஸேவிப்பதால் பரமாத்ம விஷயமாகச் சித்தத்திற்கு அநிர்வசநீயமான ஆநந்தாதிசய மொன்று உண்டாகின்றது என்பதும் ஸகல ஜாதீயருக்கும் இவை உபஜீவ்யமாக இருக்கின்றன என்பதும் அதற்குக் காரணாந்தரங்களாகும். இதை ஸ்ரீ தேசிகன், தமது ஸ்தோத்ர ரத்ந பாஷ்யத்தில் பின் வருமாறு விளக்கி இருக்கிறார்.

"வராஶரவ்யவஙாஜவி வெஷாஷூரஹவ்யுவெஶஷ்ராதிஶய ஹெதஹெமெதஷஃ வரஶாக்ஷதநி விஷூரஜ்ஞக்ஷதமெஷெவெழாவ ஜீவெர்ரவ்யூஹமெணஃ" என்று.

ஸ்ரீமத் த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளியிலும்,

"யதத்க்ஷ்ய த்ரும் ஶரதீநாம் ஊநிமண விஹிமெதஷெஷிஹா மெஷஃ வர்ரமெணஷூதாவஸ ஸகுவஸீநஃ ஶஂஶயநஶநெதஷஹீதா ஸாவழஹளஜீ"

என்றும் அநுக்ரஹித்திருக்கிறார். நம்மாழ்வாருடைய திவ்ய ஸூக்தி பிறந்த பிறகு, வேதாந்த ரஹஸ்யத்தை உணர்த்தும் வ்யாபாரத்தில் வேத வாக்யங்களுக்குக் கொஞ்சம் ஓய்வு ஏற்பட்டது போலும்.

"யஸ்ய ஸாரஸ்வதஸ்ரோதோ வகுளாமோதவாஸிதம்
ஶ்ருதீநாம் விஶ்ராமாயாலம்"

இவ்வாழ்வார்கள், பொய்கைமுனி, பூதத்தார், பேயாழ்வார், திருமழிசைப் பிரான், நம்மாழ்வார், குலசேகரன், விஷ்ணு சித்தர், தொண்டரடிப் பொடி, திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார், எனப் பதின்மர். நம்மாழ்வாரது சிஷ்யரான மதுரகவியையும் பெரியாழ்வாரது பெண்பிள்ளையான ஆண்டாளையுங் கூட்டி ஆழ்வார்கள் பன்னிருவரென்பதும் ஸம்ப்ரதாயம். இவர்களுடைய வரலாறு, ப்ரஹ்மாண்டம் பாத்மம் மார்க்கண்டேயம் என்னும் புராணங்களிலும் வேறுசில உபபுராணங்களிலும் எதிர்கால வரலாறுகளை விவரிக்குமிடத்துக் கூறப்பட்டிருக்கின்றது. திவ்ய ஸூரி சரிதம் * ப்ரபந்நாம்ருதம் என்னும் வடநூல்களிலும், குரு பரம்பரா ப்ரபாவங்களென்கிற மணிப் பிரவாள கிரந்தங்களிலும் ப்ரபந்த ஸாரம் முதலான தமிழ்ப் பிரபந்தங்களிலும் இவர்களைப் பற்றிய வரலாறுகள் காணப்படுகின்றன. சில க்ரந்தங்களில் விரிவாகவும் மற்றும் சில க்ரந்தங்களில் சுருக்கமாகவும் இவை வர்ணிக்கப்பட்டிருக்கிறபடியால், சிற்சில விடங்களில் ஒன்றோடொன்று முரண்படும் சில அம்சங்களையும் நாம் பார்க்கின்றோம். இவைகளை விலக்கி விட்டால், ப்ரதாந அம்சங்களில் இந்த க்ரந்தங்களுள் பரஸ்பரம் பேதம் உண்டென்று சொல்வது ஸாத்யமில்லை.

வேதாந்தார்த்தங்களைத் தர்க்கம் முதலிய சாஸ்த்ரங்களை முன்னிட்டு ஸம்ஸ்க்ருத பாஷையில் விவரித்து அது வழியாக நமக்கு உபகாராதிசயங்களைச் செய்தவர்களை நாம் ஆசார்யர்களென்று சொல்லுகிறோம். அவர்களுள் ப்ரதாநர்கள் நாத முநிகள், உய்யக் கொண்டார், மணக்கால் நம்பி, ஆளவந்தார், பெரிய நம்பி, எம்பெருமானர் ஆக அறுவர். இவர்களுள் முதல்வராகப் படிக்கப்பட்டுள்ள நாதமுநிகளுக்கு ஸாக்ஷாத் நம்மாழ்வாரே யோக தசையில் ரஹஸ்யார்த்தங்களை உபதேசித்தாரென்றும் அவருக்குப்பின் வரும் ஆசார்யரொவ்வொருவரும் தம் தமக்கு முன் வந்துள்ள ஆசார்யர்களுடைய ஸ்ரீ பாதத்தில் ஆச்ரயித்த வரென்றும் நாம் க்ரந்தங்களிலிருந்து அறிகின்றோம். எம்பெருமானருடைய திருவடிகளில் ஆச்ரயித்த முதலிகளும் அவர்களுக்குப்பின் வருபவர்களும் நம் ஸம்ப்ரதாயப்படி வெவ்வேறாக இருக்கிறபடியால், எல்லாருக்கும் பொதுவாகச் சொல்லவேண்டு மிடங்களில் எம்பெருமானருடன் இந்த ஆசார்ய பரம்பரையை முடித்துப் பேசுவது வழக்கம்.

இந்த க்ரந்தத்தில் கீழ்க்கூறப்பட்டுள்ள ஆழ்வார் ஆசார்யர்களுடைய வரலாறுகளே வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் மதுரகவியாழ்வாரின் வைபவம் ப்ருதக்காக வர்ணிக்கப்படவில்லை; நம்மாழ்வாருடைய வைபவத்தில் 5-வது ஸர்க்கமாக அது அமைக்கப்பட்டிருக்கின்றது. உறையூர் நாச்சியார் வைபவமென்று பதினெட்டுப் பாடல்களை அடக்கியுள்ள ஒரு சிறிய ஸர்க்கமும் ப்ருதக்காகக் காணப்படுகின்றது.

* இப்பெயரையே இந்த ஆசிரியர் தமது க்ரந்தத்திற்கும் வைத்திருக்கின்றார் என்பது குறிக்கத்தகுந்தது.

ஸ்ரீ தேசிகனுடைய வைபவமும் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றது. உய்யக்கொண்டார் மணக்கால் நம்பி இவர்களுடைய வரலாறு வர்ணிக்கப்படவில்லை. இந்த இரண்டு மூன்று அம்சங்களைத் தவிர்த்து மற்றை ப்ரகாரங்களெல்லாவற்றிலும் இந்நூல் பூர்வ க்ரந்தங்களை அநுஸரித்தே பேசுகின்றதென்றும், தக்க ஆதாரமின்றிக் கேவலம் கற்பனையாக யாதொரு கதையும் இதில் எழுதப்படவில்லையென்றும் நாம் த்ருடமாகச் சொல்வோம்.

இவர்களுடைய கால நிர்ணயத்தைப்பற்றி நாம் விசாரிக்கப் புகுவது இவ்விடத்தில் அவசியமில்லையாதலால், அதில் நாம் ப்ரவர்த்திக்கவில்லை. ஆசார்யர்கள் ஸம்பந்தப்பட்டபர்யந்தம், நாதமுனிகள் சற்றேறக்குறைய ஆயிரத்து நூறுவருஷம் முன் இருந்ததாகவும் அவருடைய பௌத்ரராகிய ஆளவந்தார் அதற்கு நூறு வருஷம் பிந்தியும் [916-1040], எம்பெருமானார் என்று சொல்லப்படும் ஸ்ரீ ராமாநுஜாசார்யர் ஆளவந்தார் காலத்திற்குப் பிறகு நூறு வருஷத்திற்குள் இருந்ததாகவும், [1017-1137] அதற்குப் பிறகு இருநூறு வருஷத்திற்குள்ளாக ஸ்ரீ தேசிகனுடைய காலமென்றும் [1268-1369] நிர்விவாதமாக ஏற்படுகின்றது. ஆழ்வார்களுடைய காலத்தைப்பற்றி அம்மாதிரி நிர்ணயம் காணப்படவில்லை. அவர்களுடைய காலம் நாதமுனிகள் காலத்திற்கு அநேக வருஷங்கள் முன்னதாகவே இருந்திருக்க வேண்டும் என்று மாத்ரம் சொல்லக்கூடும். இவ்வளவுக்கு மேற்பட்டு இது விஷயமாக அதிக சர்ச்சையில் ப்ரவர்த்திப்பது நிஷ்ப்ரயோஜநமாக இருக்குமாதலால் நாம் இதிலிருந்து நிவ்ருத்தராகிறோம்.

இவர்களுடைய சரித்ரத்தைப் பற்றியும் நாம் விஜ்ஞாபநம் செய்து கொள்ளப் போவது அதிகம் இல்லை. வடகலை குருபரம்பரை தெங்கலை குருபரம்பரை ஆக இந்த இரண்டு க்ரத்தங்களுமே அந்தச் சரித்ரத்தை விஸ்தாரமாக விளக்கும் க்ரந்தங்கள். இந்நூலின் ஆசிரியரும் அந்த க்ரந்தங்களையே ப்ரதாந ஆதாரமாகக் கொண்டிருக்கிறார் என்பது இந்நூலிலிருந்தே நன்றாக விளங்குகின்றது. ஆனால், இந்தக் குரு பரம்பரா க்ரந்தங்களுள் காணப்படும் சிற்சில ஐதிஹ்யங்கள் உண்மையாக நடைபெற்றவை தாமோ என்னும் ஒரு ஸம்சயம் மாத்ரம் நமக்கு உண்டு. கேவலம் பகவத் க்ருபையால் மாத்ரம் நேரக்கூடிய அதிமாநுஷ ஸம்பவங்களை நாம் சிறிதேனும் ஆக்ஷேபார்ஹமாகச் சொல்லமாட்டோம். யோக மஹிமையாலும் சக்தி விசேஷத்தாலும் ஆச்சர்யகரங்களான கார்யங்கள் நேரக்கூடும். ஆனால் அப்படிப்பட்ட ஆச்சர்ய கரங்களான ஸம்பவங்களை வர்ணிப்பது மாத்ரமின்றிக்கே சாஸ்த்ர விருத்தமான கார்யங்களையும் அந்த ஐதிஹ்யங்கள் சிற்சில விடங்களில் வற்புறுத்துகிறபடியால், அப்படிப்பட்ட விருத்தாநுஷ்டாநங்களின் வர்ணநத்தைக் கல்பிதங்களென்றே சொல்லவேண்டுமென்பது நமது அபிப்பிராயம். ஸாதாரண மனிதர்கள் போலத் தாமாக முயன்று தத்வஜ்ஞாநத்தைப் பெறுதலின்றி எம்பெரு

மான் தானேவந்து தன்னைக் காட்டிக்கொடுக்கக் கண்டு ஜ்ஞாந வைராக்ய பக்திகளை எளிதிற் பெற்று, ப்ரபஞ்சத்தவரைப் பிறவிப் பெருங்கடலி னின்று கரையேற்றவென்றே பூலோகத்தில் திருவவதரித்த அநந்த கருட விஷ்வக்ஸேநர்முதலான நித்ய ஸூரிகளும், தமது ஆயுள் நாளில் பகவதாஜ்ஞையாகிற சாஸ்த்ரத்தை அதிக்ரமித்தும், அக்ருத்ஸ்நவித்துக் களான ஸாமாந்ய ஜநங்களைத் தர்ம மார்க்கத்திலிருந்து சலிப்பிக்கும்படிக் கும் நடந்தார்களென்றால் அது எவ்விதத்தில் விச்வஸிக்கக்கூடியதாகும்? கர்ம பந்தத்திற்கு உட்பட்டிருந்த விச்வாமித்ரர் முதலானோர் மேநகை முதலியவர்களுடைய வலையில் அகப்பட்டுக்கொண்டார் என்பது உபபந்ந மாகலாம்; "மற்றொன்றும் வேண்டா மனமே மதிளரங்கர் கற்றின மேய்த்தகழலிணைக்கீழுற்ற திருமாலை பாடுஞ் சீர்த்தொண்டர் பொடி யெம் பெருமானை யெப்பொழுதும் பேசு" என்று கொண்டாடக்கூடியவரும் வைஜயந்தி என்னும் வனமாலையின் அம்சமானவருமான தொண்டரடிப் பொடியாழ்வாரும் தேவ தேவியின் வலையில் அகப்பட்டாரென்றால் அது நம்பத் தகுந்ததாகுமோ? அப்படி காமக்ரோதாதிகளுக்கு ஒரு பொழுதும் இரையாகாமல் இருப்பதன்றோ ஆழ்வார்களின் ஏற்றம்? தேவதைகளின் ப்ரபாவத்தைச் சரிவர அறியாத ஸங்குசித ஜ்ஞாநத்தை உடைய இந்த்ராதிகள் ஸத்வ குணம் குறைந்து ரஜஸ்தமஸ்ஸுக்கள் மேலிட்டிருக்கும் காலங்களில் பெரியோர்களை அவமதிப்பது ஸஹஜமா யிருக்கலாம்; குணத்ரயத்தைத் தாண்டி நிற்கும் திருவாழி யாழ்வானின் அம்சமான திருமழிசைப் பிரானும் ராகத்வேஷாதிகளுக்கு வசமாகி, பாகவதோத்தமனென்று கொண்டாடப்படும் ஈசனை அவமதிப்பது அவ ருக்கு அநுரூபமாகுமோ? தேவதாந்தரத்தைப் பரதேவதை யென்று கொண்டாடுவதே பாரமைகாந்த்ய விருத்தமென்பதை அவர் அறியமாட் டாரோ? 'தஸ்மாச்சாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்யாகார்ய வ்யவஸ்திதௌ" என்னும் வாக்யத்துக்குக் கட்டுப்பட்டு அந்திம திவஸாவதியாக சாஸ்த்ரீய நியமங்களை உள்ளபடி அநுஷ்டித்து வந்த பரமாசார்யன், "ஸந்யாஸா: ப்ரத்யவஸிதா: ஸர்வத்ரோஹக்ருதாவஸா:' என்று இப்புடையில் நிந்திக்கப் கப்பட்டிருக்கும் ஸ்வதர்ம ப்ரம்ச ரூபமான கார்யத்தைச் செய்யத் துணிந்தாரென்றும், தமது ஆசார்யனுடைய ஸந்நிதியில் தம்மாற் செய்யப் பட்ட ப்ரதிஜ்ஞையைக் கடந்தாரென்றும் இன்னும் இவைபோன்ற வேறு அசாஸ்த்ரீய கார்யங்களைச் செய்தாரென்றும் சொல்வது ஸாஹஸ மன்றோ? இவைபோன்ற அநுபபந்நங்களான ஐதிஹ்யங்களை, 'அவை கேவலம் சிஷ்ய ப்ரசிஷ்யர்களுடைய ப்ரதிபத்தி அதிசயத்தின் கார்யங் களே' என்று ஸ்துதிபரமாக எடுத்துக்கொள்வதுதான் உசிதமாகுமே தவிர்த்து அவைகளை வஸ்து ஸ்திதியாக நினைத்து அம்மாதிரியே அவை களை நூல்களில் அமைப்பது உசிதமாகுமோ என்பது நமது அதிசங்கை. ப்ரஸக்தாநுப்ரஸக்தமாக இதை நாம் இவ்விடத்தில் ப்ரஸ்தாவிக்கப் புகுந்ததைப் பெரியோர்கள் க்ஷமித்தருளவேணும்.

மற்றைப்படி இந்நூலில் சொற்செறிவு அர்த்தபுஷ்டி ராஸிக்யம் முதலியவைகளைப்பற்றி, தமிழ்ப் பாஷையில் எவ்வித ஜ்ஞாநமுமற்று இருக்கும் நாம் பேச முயல்வது மிகவும் ஸாஹஸமாகும். ஆனாலும், பாகாதிகளில் ஜ்ஞாநமற்றவர்களும் பக்வாந்நத்தின் ரஸத்தை உணர்வதுபோலும், ஸங்கீதத்தில் ஸ்வல்ப பயிற்சிக்கும் ஸம்பாவனையிராமல் இருக்கும் பசு சிசு முதலியவர்களும் காநத்தை அநுபவிப்பதுபோலும், நாம் இந்நூலின் மஹிமையை அநுபவிக்கிறோம் என்று சொல்லத் துணிவோம். பக்ஷயத்தின் ஸ்வாரஸ்யம் உண்பதால் தெரியுமென்று பாஷாந்தரத்தில் பழமொழி ஒன்று உண்டு. ரஸம் என்னும் விஷயத்தில் அத்யந்தம் அஜ்ஞராயிருக்கும் நம்மையும் இந்த நூல் ஆநந்திப்பிக்கின்றதென்றால் அந்த நூலின் மஹிமையை அதிலிருந்தே எல்லாரும் அநுமித்துக்கொள்ளலாம். இந்தத் திவ்ய ஸூரிசரிதம் வஸ்து ஸாமர்த்யத்தால் சாச்வதச்ரேயஸ்ஸூக்கும் உபகாரகமாகுமாதலால், இதை ஆஸ்திகர்களெல்லாரும் ஸேவிப்பார்களென்று நாம் நம்புகிறோம்.

மாம்பலம், மதராஸ்.<br>20—8—'37

வங்கீபுரம் வாஸுதேவாசார்யன்

Liberty Press, Madras.

ஸ்ரீ

# திவ்விய சூரி சரிதம்

## கடவுள் வணக்கம்

உலக மூய்யவு யர்ந்தருண் மீனென
விலகி யன்றவு ணன்றனை யீர்ந்துபின்
குலவு மாமறை கொண்டயற் கோதிய
மலரு மாமுகன் றாண்மலர் மன்னுவாம். 1

ஆய வேந்தன கங்கலந் தாய்ச்சிய
ராய மாமயில் வெள்ளமன் றூடிய
பேயு மாமுகி லென்னப் பிறங்கிய
மாய வன்பத மாமலர் நாடுவாம். 2

பேதை வையக மூய்ந்து பிழைத்திடக்
கீதை யென்றுதன் கீர்த்தி தனஞ்சயன்
காதி லோதிய பாற்கடற் கன்னியி
னாத னாண்மலர்ச் சேவடி நண்ணுவாம். 3

## வரலாறு

### வேறு

என்னுயிர்தந் தளித்ததிரு வரங்கராமா
னுசமுனியின் றிருவடியா னிழைத்தநூலைத்
தன்னரிய செவிசேர்த்தித் தகையவாக்கு
மெமதருளா லுனக்கியைந்த தாலேயெங்கும்
பன்னரிய வுடையவரே முதலாயுள்ள
வாரியரைப் பாடுகநீ பரிவாயென்று
சொன்னதிரு வருண்மறந்தே மானிடத்தைச்
சொல்லியவென் னாத்துலங்கத் துவக்கினேனே. 4

## அவையடக்கம்

### வேறு

பணிபதிக்கும் பகரரிய பகடார்ந்த வாரியர்சீர்
துணிவுகொடு யான்புகலத் துவக்கியதுஞ் சிறுபுழையார்
கணிலரிய வூசியதின் கண்ணகன்ற வானமெலா
மணிலிருந்து நோக்குதற்குப் புக்கதனை மானுமரோ. 5

பெரும்புலவர் பேசவுறு மாழ்வார்க ளாரியர்க
ளிரும்புகழை யானிசைக்க வீங்குமனந் துணிந்தேன்
கரும்பெரிய காடமலை சென்றடைந்த கால்வழியில்
விரும்பியடை சிறுநரியின்வினையுணர்ந்து நாண்டுறந்தே. 6

நல்லா சுரந்திடுந்தீம் பாலே நனிநிறைந்த
செல்லாச் சிறுகலமுஞ் செப்ப முறுவதென
வெல்லார் குரவ ரிரும்பரிசு பாடியதாற்
கல்லாத வென்கவியுங் கனம்பெருகக் காண்குவரே. 7

## நூல்

### க-வது சருக்கம்

### வைகுந்தச் சிறப்பு

திருத்தகு மெவர்க்கு முற்றுந் தேர்ந்தென்றுந் தெரிதற் கெட்டா
துருத்தகு மமர ரெல்லா முணர்ந்துணர்ந் திறைஞ்சற் பாற்றாய்ப்
பெருத்தவைம் பூதமாதி யவைகளிற் பிணைந்த வேழாய்
விரித்தவா வரணத் திற்கும் பகுதிக்கும் வெளியாய் நின்றே. 1

மறையினாற் பரமா காச மதுவென வழங்கற் பாற்றாய்க்
கறைமிடற் றவனால் வேத னாதியர் கருத்து நாவு
மறைதர நினைத்தற் காகாத் தன்னுழை யடைந்தோர் மீளக்
குறைதரும் பிறிது லோக மிழிந்திடாக் குணத்த தாகி. 2

முகுந்தனென் றரிய நாம முராரியு மிதனா னேற்கத்
தகுந்தகு மெனவெல் லோரும் புகழுறுந் தன்மைத் தாகிச்
சுகந்தனக் குறையு ளாகிச் சோதியின் வடிவா யந்த
முகுந்தனுக் கியைந்த முக்கால் விபூதியாய் முதன்மை யாகி. 3

இன்னமு மெவர்க்கு மென்று மியம்பொணா மகிமைத் தாகிப்
பன்னரும் பகிரண் டத்துப் பரம்பத மெனலா யோங்கும்
பொன்னெடு வுலக மொன்று வைகுந்த மெனும்பேர் பூண்டு
மின்னிடு மதன்கண் பாயுந் தரங்கிணி மிகுந்த தொன்றே. 4

அதுகொடும் பவமென் காட்டுத் தீயினா லழுங்கு வோர்க்குச்
சுதையெனக் குளிர்ந்து வெப்ப மாற்றிடுஞ் சுருதி நாதன்
பதுமநா பன்ற னம்பொற் கருணையே யுருகிப் பாயு
மிதுவென வெவரு மேத்தி யிசைந்திடற் கியைந்த தம்மா. 5

தன்னிடை முழுகு வோர்க டந்துக ளொழிப்ப தாலே
பன்னுவ ரதற்கு நாமம் விரசையென் றெவரும் பாங்காய்
மின்னிய தரள முண்டு மிதந்திடு மரச வன்னங்
கன்னலின் சுவையு முண்டு சத்துவங் கலந்த தாங்கே. 6

அன்றியும் படியு முத்தர்க் காம்பவத் துவக்கில் வந்து
கன்றிய வுடலைக் காதி யைந்துப நிடத ரூபந்
துன்றிய வளிக்கும் பின்னுஞ் சுழியெனு மெழிலா ருந்தி
யொன்றியின் கோக மாகுந் துணைமுலை யுடைத்தாய் மன்னோ. 7

மிருணுளத் தாரந் தாங்கி மிழற்றுவண் டலர்த்துஞ் செய்ய
திருநாடுங் கமலம் பூவாந் திருவிழி யவையுங் கொண்டு
பெருமாளை யடையப் போந்த பிறப்பறு மவர்க்கு நல்கு
முருகாரும் பெரிய முத்தித் திருவெனக் குலவு மாதோ. 8

அத்தலை யிலகுஞ் சோலை யதனிடை யரிய ஞான
நித்திய சூரி வர்க்க நிழன்மலர்க் கனிக டம்மாற்
பத்தியாய்த் தழைத்து மோங்கும் பாதப மவையாய்ப் போந்த
முத்தருக் குதவா நிற்கு முராரியின் கருணையாலே. 9

கனககல் லார நாறுந் தாமரை முதல காணற்
கினியவாய் மலர்ந்து வண்டு பாண்செய வினையொன் றின்றி
மணியெனு மதுர நீருந் ததும்பவை ரம்ம தீய
மெனவொரு பெயரு தாங்கிங் யிலகுமோர் தடமு மாங்கே. 10

அத்திருப் பொய்கை யோரத் தலர்ந்துமீ துயர்ந்து தோன்றும்
வித்தகத் தொடுநீள் போதி விருக்கத்தண் ணிழற்க ணென்றுஞ்
சித்திரத் தெழுதும் பாவை திகைத்திடத் துலங்கு மோரார்
முத்தணி முறுவ லாரைஞ் ஞூற்றுவர் முதத்தின் வாழ்வார். 11

அவரன வரத மாங்கே யடைதரும் பெரியோர் தம்மைத்
திவளொளி மணிப்பூண் வெண்பட் டாடைதே மாலை தோர்ந்து
நுவலருஞ் சுண்ண மாதி விழுப்பொரு ளவற்றி னோன்மை
யிவருற மகிழ்ந்து பேணி யலங்கரித் திடுவர் மாதோ. 12

குரவர்தங் கருணை யாலே கோதுறுந் துவக்கு நீத்தே
இரவியே முதல வானோ ரிடையிடை வழுத்த வேறும்
புரையறு மவர்க ளங்க மானவ கரமாம் பூவை
விரவலுந் திவிய மங்க ளத்துரு விழைந்து சேர்வார். 13

ஆங்கிரும் பொழில்க ளூடே யருங்கிளி குயில்க ளாகி
யோங்கிய சூரி சங்க மிவ்வுல குயர்ந்தோர்க் கல்லால்
தாங்கரித் தயலோர் தம்மை யென்றுதண் ணமிழ்தே யென்னத்
தீங்கரும் பியைய நாளுந் தெளிவுற விசைக்கு மாதோ. 14

கடிபொழி லிடையி லெங்குங் காந்தார மளிகள் பாடு
மடைவுட னெழுங் கொழுங்கி னமர்ந்தமா கந்தந் தம்மின்

மிடைதரு மினிய சாரி கைக்குல மிழற்றுங் கீத
மடைதரும் புதிய முத்தர்க் கருஞ்செவி விருந்தா மன்றே. 15

சோதியி னுருவா யந்தத் தொல்லுல கிடையிற் றோன்று
மாதியா நகர மொன்ற யோத்தியென் றருத்தத் தாலே
யோதுவ ரதனை மேலோ ரதன்பரி சுரைத்தற் கெம்மாற்
போதுமோ வெனினுந் தன்னம் புகலுதும் விழைவின் மன்னோ. 16

பத்திக்கும் பிர பத்திக்கு முயர்ந்தவர் பலனு மன்றிப்
புத்திக்கும் தெளிவ தாகும் பொருவிலா னந்தந் தேங்கு
முத்திக்கேத் திரமா மென்று முழங்குறு மினிய கீத
மெத்திக்குந் தனக்குள் ளாக்கி யெழிற் கெலா முறையு ளாமால். 17

பன்மணி யவற்றி னுகிப் பளபளென் றிலகிப் பாங்காய்
மன்னுமா வரண மீரைஞ் ஞூற்றினல் வளைக்கப் பெற்ற
வுன்னவு மரிய செம்மை யுற்றிடு முத்தி கோடி
தன்னையங் கடையச் சூழ்ந்த தன்மையை நிகர்க்கு மாதோ. 18

செம்பொனி னொளி ரனேக கோபுர முடியிற் சேர்ந்தே
யும்பரி னடித்துக் கொள்ளுந் துகிற்கொடித் தொகையா மோங்குந்
தம்பெருங் கரங்க டம்மா லழிவுறுந் தன்மைத் தாய
வெம்பும்வே றுலகை யெல்லாம் வெறுத்திழித் தசிக்கு மன்றே. 19

ஒன்பது மணிக ளார்ந்த தோரண முயர்ந்து மின்னும்
மன்பெரு வியப்பு நோக்கி லிந்திர தனுவே மானும்
மின்பசு மரகதத் தின் மேவிடு மவைக ளெல்லா
மின்புறு மெமுனை வானி லெழுந்துலாய்க் திடுவ போலும். 20

கடைகாணற் கரிய காந்திப் பளிங்கினு லமைந்த வீதி
தொடையாடும் பவனகோடி மணியொளி துலங்கத் தன்மேன்
முடியாரு மணிக ளோரா யிரங்களின் மொய்க்குஞ் சோதி
வடிவாரு மனந்தன் பாய லனந்தனை நிகர்க்கு மன்னோ. 21

விண்ணிடை விளங்கும் சோதி முடியுடைக் கனக மாட
மெண்ணுதற் கரிய வாங்கே யெழிலுறு மெகினந் தூங்கு
மொண்ணறுங் கமல நீல மாதிக ளொருங்கு பூத்த
தெண்ணறு மமுத மாருந் திருக்குளம் பலவா மன்றே. 22

திருவமர்ந் திணையொன் றில்லா மணியொளிர்ந் தினிய தேனூர்
மருவன் மாலை யார்ந்து மதியென நிலவு காலுந்
தரளமா வடமுஞ் சேர்ந்த தன்மையா லுலகந் தாய
திருவடி யுடைய மாயன் றிகழுரம் புரையு மாதோ. 23

கஞ்சனைக் கடிந்த மாலுங் கமலமா மயிலு மாட
மஞ்சரி யுடைய காம வல்லியிற் பிணைந்த தெய்வத்
தஞ்சருந் தருக்கண்மீதே யடர்ந்துபன் மணி யொழுங்கி
னெஞ்சலி விழைத்த செய்குன் றெங்கணு முயர்ந்து தோன்றும். 24

இவ்வண மரிய செல்வ மேய்ந்தவந் நகரந் தன்னிற்
செவ்விய பவன மொன்று வைகுந்த மெனலாய்ச் செம்பொன்
கவ்விய மணியிற் செய்த தோரணங் கலந்தா னந்த
திவ்விய சுதையி னாலே தீற்றலுற் றொளிரு மன்றே. 25

அங்கொளிர் தமனியக் குன் றனையவா யிரங்கா லோங்கும்
வெங்கதி ரனேக கோடி விண்ணிடை விளங்கு மாபோற்
செங்கதிர் மணிக ளார்ந்த சிகரங்கள் செறிந்த தாலே
மங்கள மணிமா மண்ட பம்மென வயங்கு மொன்றே. 26

அதனிடை விமல நாத னிருவிபூ திகளு மாரத்
ததைவுற வெழுதி யைந்து தருமலர் பரப்பி நாளு
விதமணி தெளித்து மேலாந் தருமாதி சூரியாகு
மிதமுறு மிருநான் காய பாதமு மியைந்து மற்றும். 27

ஆயிரந் தள மலர்ந்த வனசமொன் றழகின் மீதே
மேயிருங் கலையின் மிக்க திருவனந் தாழ்வான் மென்மை
யாயமின் போக மார்ந்தே யவன்பண மணியின் சோதி
பாயவே துலங்கு முற்று மோரரித் தவிசு பண்பின். 28

அந்தமா வரிசு மந்த வாதனத் தலரா ளோடுஞ்
செந்துவ ரிதழார் பூமி நீளையா ருடனுஞ் சேர்ந்தே
யெந்தமா வுலகங் கட்கு மீசனு யிலகுங் கஞ்ச
வுந்தியான் மகிமை யீங்கே யுரைக்குதுஞ் சிறிது மாதோ. 29

அவனடி யிணையை யொக்கு மம்புய மழகி னென்று
நுவல்கினு மதுதான் மாயச் சகடற நொதுத்த வின்று
புவனம தொருங் களந்து தூதுபோ யுவகை பூக்கு
மவிரிழை யரிவை யாகக் கல்லையு மமைத்த தின்றே. 30

எந்தையின் கணைக்கால் காக ளத்திருஞ் செருக்கை யீருஞ்
சுந்தரக் கடலின் மூழ்கு மைநாகச் சுடிகை மானு
மந்தமார் முழந்தா ளன்றி யெளவனு ராமத் தோங்கும்
விந்தைசேர் கதலி யென்ன விளங்குறுந் தொடைக ளன்றே. 31

வேறு.

மின்னரிய மேகலையி ரத்தின கரங்கண்
மன்னரிய பொற்றுகின் மறைத்திடு நிதம்பம்

பன்னரிய மாலைவெயில் பாய்ந்திட வதன்கண்
டுன்னரிய தூயமுகி லென்னநகு மென்ப. 32

அந்தவுத ரந்தனி லணிந்தவரை மூன்று
மெந்தைகொளு மூவுலகி னெல்லையென மின்னும்
பந்தமறு நான்மறை பழுத்தமலர் மேலோன்
வந்ததிரு வுந்தியெழில் வழங்கவரி தாமால். 33

செந்திரு வணிந்திடு பளிங்கினொளி செய்யுஞ்
சுந்தர வுரத்தரிய தொல்புருட னாகும்
விந்தைமணி யும்பகுதி விண்ணவர்க ளாதன்
விந்தமெனுந் தோள்களிடை வெம்மருவ தாகும். 34

பூதமெனும் வைசயந்தி மாலையொழில் பொங்கும்
மாதவனு ரத்துறையு மாமலர் மடந்தை
காதலொடி ருந்துகளி தூங்கவவன் காண
ஆதரவி னாடுமணி யூசலின லங்கும். 35

அத்திருவு ரத்தின்முறை யாயொளிர னேக
முத்தணிவ டங்களளி வீசுவன மாலை
அத்தனெழி லார்கவியி னொன்றின் மிசையொன்றாய்ப்
பத்தியினெ ழுந்திரையின் பான்மையுறு மன்றே. 36

புந்தியகங் காரமெனும் பொன்வளையி ரண்டுங்
கந்தமலர்க் கைகளிடை யேந்தியடி யார்க
ளெந்தபொழு தென்கருதி யேங்குவரோ வென்றே
சிந்தையொடி லங்குமெழில் செப்பவரி தம்மா. 37

வாமகம லக்கரமென் பாம்பணையில் வைத்துச்
சேமமருண் மற்றதுவுஞ் சேர்த்திமுழந் தாண்மே
லேமமுறு மாழிவளை பின்னுள விரண்டில்
தாமொளிர வீற்றருளுந் தன்மைசொல லென்னே. 38

கங்கணகெ யூரமணி காந்தியொரு நான்காம்
பங்கய மலர்க் கரங்க ணின்று மிசை பாயச்
சங்கநிகர் கண்ட நிறை சாந்தமொடு நான
மெங்குமண மின்கமழத் தங்குமெழி லென்னே. 39

ஏரெனும ணன்கொ ளுவி ருந்துல்கை யாள
நேருமரி பீடமெனு நீரச முகத்திற்
காரணம தின்றியொரு புன்முறுவல் காணச்
சீரொடுது லங்குமிதழ் செம்பவள மன்னே. 40

காணரிய நாசியிரு பாற்கடல்க லக்கா
தேணரிய செங்கரையெ னச்சுடரு மிக்க
மாணரிய நீண்டகலு மன்னுகரு ணைக்கண்
பூணரிய மூன்றுவணம் பூண்டிலகு மாதோ. 41

மென்மைகரு மைக்கிட மெனச்சுருளு மேவி
யின்மைபெறு குந்தளவெ ழிற்செனியி லெல்லாம்
நன்மைபெற மின்னுமுடி நற்சுடரி னன்றே
தொன்மைபெறு முச்சுடரி ரந்தனசொ லிக்கும். 42

கருணைவய மாமொருசங் கற்பமதி லாகும்
பரிவுடன ளித்திடுவ தப்பெரிய பண்பிற்
குரிமையுறு வாரடிய ரத்தகையர்க் குள்ளா
மிருமைபெறு தனவிபவ மெத்தனையு மாங்கே. 43

முப்பொழுது ணர்ச்சியுளன் மூன்றுகுண மூர்த்தி
முப்பொரிய தாமனவன் முத்துயரொ ழிப்போன்
ஒப்பறுமு விக்கிரம னுலகமொரு மூன்றுஞ்
செப்பமுற நன்களிக்குஞ் செம்மலவன் கண்ணன். 44

வெண்கவிகை பாதுகையும் வியணையு மேனை
யொண்மணிய ருஞ்சுடரு மொப்பரிய பட்டுந்
திண்பெரிய ஞானமுள சேடனக லாமே
பண்பினுட னுயடிமை பண்ணவொளிர் கிற்பான். 45

அன்பனும டிப்பணியி னைழப்பவனு மாகும்
மின்கொடிதேர் மேல்விரிவி தானமொடு வீசு
மின்புறமெ ழிற்சிவிரி யாயுமியைந் தென்றும்
பொன்புரைம றைக்கலுழன் பொங்கமகி ழோங்கும். 46

வேறு

இருவிபூதி யுங்கரத்தி லேந்துவேத் திரந்தனக்
கொருமையாகி யோங்கவன்மை யுற்றதேவ ரொன்னலர்
வெருவுமாறு வீறமைந்த சேனைநாத னண்டையிற்
றிருவருள்வி ளைந்துநிற்க வீற்றிருந்து திகழுமால். 47

பத்தியென்ப தற்கிலக்கும் பண்பமைந்த பத்தராஞ்
சத்துவங்க றங்கநின்ற சனகனாதி யோகிய
ரெத்திறத்தி யம்பினாலு மீறுறாத தன்மையை
நித்தமும்பு கழ்ந்துமாடு நின்றகங்க ளிப்பரே. 48

சண்டனாதி வாயிலோருஞ் சண்டமாரு தம்புரை
மிண்டனான குமுதனாதி மிக்ககணநாதருந்
திண்டிறக்க ரீமுகத்த னாதியோருந் திகழ்படை
கொண்டுகைகு வித்துநின்று கூறுமாறி றைப்பரே. 49

திதியின்மைந்த ருயிர்குடிக்குந் திண்மையைம்ப டைகளும்
மதிநிறைந்த சேதனங்க ளாகிமூர்த்திமான்களாய்ப்
பதுமநாபன் பாதபங்க யங்கள்வாழ்கநாளுமென்
றதிசயித்த சயமுழக்க வாரவாரஞ் செய்யுமே. 50

உலகமுற்று மீன்றவன்னை யாகியேது வொன்றிலா
தலகிலாத கருணைசெய்யு மம்புயத்த கத்தளா
யிலகுசெல்வி யமையமொன்றி லித்தகைப்ப ரன்றிரு
மலர்முகத்தை நோக்கிமெல்ல மாற்றமொன்றிசைப்பளால். 51

வேறு

ஆக்கலு மளித்தலு மழிக்குஞ் செய்கையு
நோக்குமுன் வயமென நுவல்வ ராயினு
நீக்கமற் றிரண்டையு நிலவு நேமியாய்
காக்குமின் செயலையே கலந்து காண்பையால். 52

அத்தொழி லிரண்டினை யயனரற் களித்
தெத்திற மதத்தரு மியைந்து நின்செயற்
கொத்துள மகிழ்வுறச் செழிப்ப தோர்ந்துனைத்
தொத்தறும் விண்டுவென் றிசைப்பர் தொன்மையோர். 53

கருமமும் பிரமமுங் காட்டு மாரணம்
வரைவில படைத்ததின் வழியில் வைகிடுந்
திருவுபப் பிரமமென் றெவருந் தேர்ந்துவாழ்
புரையில நூல்பல புகன்றி றைத்தனை. 54

உய்ந்திடுந் தடமிவை யொன்று மோர்கிலா
தந்தமி லனாதியா யடைந்த வல்வினைப்
பந்தமி திறுக்கிடத் தியங்கிப் பற்பல
ரந்தக ரெனக்கெடுந் தடத்திற் காயினர். 55

உண்மையை யுணர்கிலா துனதின் னுணையை
யெண்ணலி லவமதித் தெழுந்த நீதியை
நண்ணிய நிருபரை யடக்க நானிலம்
பண்ணவர் பரவநீ பரிந்து போந்தனை. 56

தசரத தனயனு மெதுகுலத் தவன்
வசையறு புதல்வனு மாகி வையக
மிசையெழுந் திடினுமீ மெலிந்த சீவரித்
திசையுறக் கொணர்கிலே திரும்பிப் போந்தனே. 57

என்றனை யியம்பிடக் கேட்ட வெந்தையும்
நன்றுறுங் குறுநகை புரிந்து நாறல
ரொன்றிய தேவிநீ யுரைத்த பின்னரே
நின்றது நினைவிது நிகழ்த்தக் கேட்டியால். 58

ஆசுரத் தனத்தனு லகத்தின் சும்மையால்
வாசனை வயத்தராய்ப் புவியின் மாந்தர்கண்
மாசறும் பலவவ தார மாடியான்
ஆசறத் தெருட்டினு மறிவொன் றின்றியே. 59

மயங்கிய மனத்தராய் மாறி மாறியே
யியங்கிடு மெந்திர மெனப் பிறப்பது
முயங்கிட வுருள்வது மாகி யோவலில்
பயங்கொளு நரகவிண் பயன்க டுய்ப்பரால். 60

தொடர்தரு பழவினைத் துவக் கறுத்துநம்
மிடமுற வியைந்தருள் கரணங் கொண்டவர்
கொடுவினை புரிகுவர் சமிதை கொய்திடும்
படைகொடு பசுவின்வால் பரித லென்னவே. 61

ஆகையி னவரையான் விரகின் மீட்டிடத்
தோகையே யிங்ஙனந் துணிந்துளே னெனப்
பாகடு கிளிமொழி யதுவென் பாங்கென
வோகையி னுபேந்திரன் மறித்துங் கூறுவான். 62

ஐவகை யவதரிப் படைந்துளே னெழின்
மைவிழி மடைந்தையே யவற்றுண் மண்ணகங்
கைவழி யமுதெனக் கலந்த ருச்சையா
யுய்வழி யிதுவென வொளிரு கின்றனன். 63

பூமியு நீளையும் பொருந்த நீயுமென்
காமுறு மருகினில் வளையுங் காவிரித்
தாமமா ரரங்கமே முதல தண்பொழி
லேமமார் பதிகளி லிலகு மெம்மையே. 64

அனந்தனே யாதியா மரிய சூரிகள்
நனந்தலை யுலகினி லுதித்து நான்மறைத்
தனந்தனுல் விளக்கிடத் தயங்கு மாந்தர்கண்
மனந்தெளி வுறவிவண் மணந்து வாழ்வரால். 65

பற்பல வருணமா யவர்கள் பார்மிசை
யுற்பவித் திடுங்கையி லுதிப்ப ணீளைய
மற்புட னிலகுமாழ் வார்க ளாரியர்
பொற்புறு மிவரெனப் புகல்வ ராங்கரோ. 66

ஏதியே முதலிய வுதிக்கு மிவ்வகைப்
போதவா ரியர்மறைப் பொருளைத் தண்டமிழ்
வேதமா யிழைத்தெனை விரும்பும் பல்வகை
மேதகுந் திருப்பணி யிழைத்து மேவுவார். 67

ஐம்பொறி வழிமனம் வலிக்க வாடியும்
வம்புறுந் துறைபல துணிந்து மாழ்கியும்
வெம்புறுங் கொடுந்தடம் படிந்த வேழமா
யம்புவி யறிவில ரழுங்குவா ரெலாம். 68

வாய்மையின் வழியினி லெமது வைபவந்
தூய்மையி னுதிப்பவர் துலக்கி யெம்பதம்
ஆய்மையி னருளினு ளான மார்த்திரம்
பாய்மதக் களிறெனை வடைப்பர் பான்மையால். 69

அடைந்தவ ரனந்தனு தியர்க ளன்னவின்
குடைந்தபூந் தேன்கலந் தொளிருங் கோதையாய்
மிடைந்துநந் திருப்பணி மிழற்ற யாவரு
முடைந்திடும் பெருங்களி யுததி யாடுவார். 70

எனத்திரு மகட்கிசைத் தெதிர்த்த கஞ்சனுல்
பனைக்கரக் களிறிறப் படுத்த மாயனும்
நினைத்தன னருகுள நித்தர் பூமிசைத்
தனித்தனி யுதித்திடத் தயையி னென்பவே. 71

உ-வது சருக்கம்

## முதலாழ்வார்கள் வைபவம்

காளியன் முடிமே னடித்ததுங் கல்லைக்
கவின்பெறு வனிதையாக் கியதும்
நீளுல கொருங்கே யளந்ததுங் குடிலச்
சகடிற நிமிர்ந்துதைத் ததுவும்
வாளியல் கரத்துப் பஞ்சவர் பெருக
வளம்பெறுந் தூதுசென் றதுமாந்
தாளதா மரையா ளிறைமலர்ப் பதமெந்
தலைமிசை தரித்துவாழ் குதுமே. 1

முத்தியைப் பயக்கும் புரிகளோ ரேழின்
முக்கிய மெனத்துலங் குவதா
யுத்தம மகஞ்செய் கலைமகள் கணவ
னுத்தர வேதியென் றுளதா
யத்தகைப் பிரமன் பெயர்கவென் பதனா
லவனரி தனையருச் சித்த
வித்தக நகர மாகையிற் கச்சி
யெனுமொரு திருநகர் விளங்கும். 2

பங்கயன் புரிந்த வேள்வியின் வபையைப்
பரிவுடன் கவர்ந்தெழும் பவளத்
தங்கனாழ் வரத னம்மலர்த் தாள்கள்
வணங்குற விழிதரு மமரர்
செங்கதிர் முடிக ளுரிஞ்சிடச் சிதறும்
பொன்பிதிர் பரவலின் முழுது
மங்கதைத் தருவைந் தடர்ந்தபொன் னகரென்
றறைகுவ ரறிவினிற் பெரியோர். 3

பற்பல வடுக்கிப் பளிங்கினா லுயர்ந்த
பவனமி தன்பர்பாற் பயிலும்
மற்புறு கலவி புரிந்தயர்ந் துறங்கு
மங்கனைத் திரண்முகத் தழகைச்
சிற்சில கவரச் செறிந்திட வவர்கண்
ணட்டிய மைபடிந் துறலால்
பொற்புறு கருமை வடிவிடை யிலகப்
போந்திடுந் திங்கள்வா னகமே. 4

அளவிடற் கரிய கடவுளர் நிலயத்
தந்தர மளவிடுஞ் சிகரத்
திளவெயி லெறிக்குங் கதிர்மணி யொளியாற்
சிவந்தரு கொழுகுறு மெழிலார்
வளம்பல தருநன் னதியது வேக
வதியெனப் பகருவ ரதனைத்
தளவமின் முறுவ லரம்பையர் ககனத்
தரங்கிணி யெனமகிழ்ந் தடைவார். 5

மறையவர் புரியு மகத்திடை யெழும்பு
நறும்புகை விண்ணக மறைக்க
நறைநிறை துளவத் தார்புனை வரத
னுள்விழ வவற்றினிற் கறங்கும்
பறைகளு முழங்க வறுபதம் பாடு
மருமலர்ப் பைம்பொழி லிடையே
யுறைதரு மயில்கள் காரென மருண்டங்
குவப்புட னடிக்கும்வே னிலினும். 6

விண்ணக மெழுந்த வெண்மணி மாட
நிரைமிசை விண்ணதி பெருகத்
தண்ணிளம் பிறையு மூர்தலி னிழைத்த
தவம்பெறும் போகிக ளுறையக்
கண்ணொரு மூன்று முடைக்கறை மிடற்றே
காம்பரக் கடவுளின் பொலிவை
நண்ணிய வெமக்கார் நிகரெனப் பொங்கி
நகுமெனப் புகலுறு நாளும். 7

கலிவயத் தனராய்க் கருத்தழிந் தலையுஞ்
சேதனர் படுந்துயர் களையப்
பொலிவுற வெழுந்த தூப்புலன் வரதன்
பொன்னடி புரிந்தரு ளாள
நிலவிடு நீயிக் கரிகிரி யிகந்து
நின்பரம் பதத்தினு மடியேற்
கிலமன மென்று சூளுரைத் திடினித்
திருநகர்க் கிணைபிறி தெவனோ. 8

காண்கினு மருகித் தீண்டினும் வினையைக்
    கலக்குறு மனந்தமா சரசின்
பாங்கரின் மதமாப் பருப்பத முடிமேற்
    பைம்பொனிற் பளபளென் றிலகும்
மாண்பரு புணிய கோடியென் றெவரு
    மகிழ்ந்தடை விமானம திடையே
காண்புறு மருளா ளன்றனைக் கண்ட
    கண்களே கண்ணெனத் தகுமே. 9

இப்பெரும் பகடார் நகர்தனிற் பதினெண்
    டிருப்பதி களிலெழி லேய்ந்த
மைப்புய னிறமால் கண்வளர்ந் தருளு
    மாமதிற் றினகரத் தருகார்
அப்பெனு மமுத நிறைதரும் பொய்கை
    யாடகத் தாமரை மலரில்
அப்பெருந் திருமா லங்கையிற் சங்கத்
    தஞ்சமாய்ப் பொய்கையா னுதித்தான. 10

முந்திய யுகத்தே நாலிரண் டிலக்கத்
    துடன்சில வாண்டுகண் முடிந்து
பிந்திய வொருசித் தார்த்தியைப் பசியி
    லட்டமி பிணைந்திடு மோணத்
திந்தமா வுலக முய்ந்திட வுதித்த
    விப்பெரும் பொய்கையாழ் வானுங்
கந்தமா மலராள் கணவனம் மலர்த்தாள்
    கருதியே தவந்தனி லிருந்தான். 11

பின்மறு தினத்தின் மாவலி புரத்திற்
    பேய்முலை சுவைத்தவற் குரிய
பொன்மலர்க் காவின் மாதவி மலரி
    லவன்கதை யஞ்சமாய்ப் போந்த
நன்மைசேர் பூத நாதனுந் திருமா
    லடியெனு நளினமே நாடித்
தொன்மைசேர் யோகத் துறைபிற மாது
    தோன்றுமா றருந்தவ மிழைத்தான். 12

மறுதினம் பேயா னந்தகத் தஞ்ச
    னாகியே மயிலையி லிலகும்

வெறிகமழ் துளவன் கேசவன் கோயி
லருகொரு விரைமலர்க் கிணற்றி
லறுபத முரல்செவ் வல்லியின் மலரி
லவதரித் தஞ்சன வண்ணன்
மறையுறு பொருளென் றவன்றனைக் காண
மன்னிய தவம்புரிந் துறைந்தான். 13

கருவிலே திருவாய்ந் தெழுந்தவம் முதலாழ்
வார்களோர் மூவருங் கலையிற்
பெருகியே யொழுக வுலகினிற் பலர்தே
தான்மவா தியர்களாய்ப் பெருமான்
மருமலர்த் தாள்கண் மருவுத லின்றி
மறுகட வுளர்தமை யருச்சித்
திருமையு மிழந்து பிறப்பிறப் பென்னு
மிருதலைக் கொளியிடைப் புழுவாய். 14

உழல்வது கண்டு நாரணன் றிருத்தா
ணிணைப்பது முயர்ந்த நற்குருவின்
கழலடைந் தவர்தங் கடைக்கணிப் புறலுங்
கரியமா லடியர்தம் பதத்தை
விழைவுடன் கண்டு பணிதலு மன்றி
வேறொரு விரகிலை யமுத
மெழில்பெற வடைய வென்றுல கறியத்
தெருட்டிடத் துணிந்தனர் மறையால். 15

துணிந்தெழுந் தாங்காங் கொளிர்ந்தரு ளருச்சை
யெம்பெரு மானடி தொழுதுங்
குணங்கொளுந் தமது மதந்தனைப் பெருக்கிக்
குவளையுங் கமலமு முதலா
மணங்கமழ் மலரார் பெண்ணையின் கரையின்
மன்னுமங் கோவலூர் தன்னை
மணந்தரு ளாய னூரடி பணியத்
தனித்தனி மறைந்தன ரவனே. 16

கார்முகில் படியுங் கனகமா மதில்சூழ்
சினகரம் புகுந்தவர் கமலை
மார்புறத் திகழும் பூவரா கன்றன்
மலரடி பணிந்தகங் குழைந்து

நேர்பெறத் துதித்தா னந்தவா ரிதியின்
மூழ்கிமெய்ப் புளகொடு நிலவிப்
பேர்கில மனத்தின் பேர்ந்தவர் வெவ்வே
றிடங்களிற் பிறங்கினர் பெரியார். 17

ஒருவரை யொருவ ருணர்கிலா துறைய
வொண்கதிர் குடகட லொளிக்க
விரவினிற் பொய்கை யாநெரு மனையி
னிடைகழி தனிற்படுத் திருக்க
புரையறு பூதத் தானவண் போந்தெற்
குண்டுகொ லிடஞ்சிறி தென்ன
வொருவரே படுப்ப ரிருவரே யிருப்ப
ரொன்றுமேல் வருகவென் றுரைத்தான். 18

கேட்டவ னுழைய விருவரு மிருக்கக்
கேழ்கிள ரல்லியி னுதித்தோன்
மீட்டவ ணெழுந்தெற் குண்டுகொல் சிறிதின்
றிரவினின் மேவிட மென்ன
வாட்டமின் றொருவர் படுக்கலா மன்றி
வைகலா மிருவரே மூவ
ரீட்டியே நிற்க லாந்திரு வுளமே
லெழுந்தருள் கெனவவ ரிசைத்தார். 19

மூவரு மந்தக் கடைத்தலை நின்று
முதமொடுங் குசலமே வினவி
மேவிய கலப்பு நன்றிது நமது
விழைவுமிக் கடைகுது மென்று
காவிபோல் வண்ணன் கண்ணனுங் கிடியுங்
காற்றுமே கலந்துகு மழையைத்
தேவரு மறியா தியற்றியங் கெழுந்து
திகைத்திட வவர்நெருக் கினனால். 20

வேறு

மண்ணவர் பருகியுய்ய மறையெனு மமுதங்கால்
விண்ணவர் பெருமானந்த விமலராங் கழையைப்புக்கு
நண்ணியு நெருக்கவிந்த நடலையீங் கடைதற்கென்னென்
றெண்ணியே யவர்கணெஞ்சந் தியங்கியே யிருக்குமெல்லை. 21

பொய்கையா னருக்கனாகும் பொருவருஞ் சுடரையேற்ற
வுய்கையார் பூதத்தானு ஞானமா மொளியைத் தூண்டச்
செய்கையா லிந்தவந்த காரமு மகன்றுசெங்கேழ்
மெய்கைபாக் கலுழன்மீது மாதவன் மிளிர்ந்தான்மன்னோ. 22

மான்றன துரிவையாலே மார்புறை மலர்மேன்மாதைத்
தான்மறைத் தனனென்றோதுந் தன்மையாற் களவின்கண்ணும்
பான்மையிற் பிரியாதொன்றும் பங்கயத் தணங்கினோடும்
வானகத் திலகுவானை மூவரும் வணங்கிப்பின்னும். 23

ஆடினா ரங்குமிங்கு மோடினா ருடலமெங்குங்
கூடினார் புளகநாவுங் குழறிடக் குணங்கடம்மைப்
பாடினா ரகங்குளிர்ந்தார் பரமனுங் கடைக்கணித்து
மாடொளிர் நிலயந்தன்னை மறைந்துடன் மணந்தான்மன்னோ. 24

தாங்கண்ட செயலைவையந் தான்றெளிந் துய்யத்தேறி
யாங்கவர் முறையேமூன்றந் தாதியா மொருமுந்நூறும்
பாங்குடன் வரைந்தத்தேக ளீசனைப் பணிந்துமீண்டு
நீங்கருந் தலங்கடோறுஞ் சென்றனர் நிமலரன்றே. 25

---

## திருமழிசையாழ்வார் வைபவம்

மூதண்டம் பிளக்கவார்த்து முர்ணெயி லிலங்கைசெற்ற
கோதண்டன் பெருமையிவ்வா றவருல கறியக்கூடி
வேதங்க ணான்கினாலும் விளக்கியே விளங்குங்காலைப்
போதங்கொண் மழிசையாழ்வான் போந்தமை புகலுகிற்பாம். 26

பிருகுவும் வசிட்டன்றானும் பிறங்குயாழ் முனியுஞானம்
பெருகுநற் சுகனும்பெற்ற தாதையு முதலாமற்ற
விரிசடைத் தவத்தராய விருடிகள் விரவிமுன்னர்
ஒருபக லயனையண்மி யின்னண முரைக்கலுற்றார். 27

கலைமகட் கிறைவயாங்கள் காசினி யிடையிலீண்டி
நிலைபெற வசித்தற்கான நின்மல தலமேதென்ன
வுலகையு மழிசையுங்கண் டுண்மையை யுணர்ந்துவல்லே
துலையொன்று கொணர்கவென்று துவட்டனுக் குரைத்தானன்றே. 28

உரைத்தலுங் கொணர்ந்தத்தச்ச னொலிகட லுலகையெல்லாம்
பரப்பியோர் புறத்தின்மற்றைத் தட்டிலப் பதியைத்தானே
நிரப்பலும் விதேகனாண்ட நிகரறு மழிசைநிற்க
வரைக்குலத் துடனேமற்ற வையக மெழுந்ததம்மா. 29

கண்டதை முனிவரெல்லாங் களிப்பொடு வியந்துபோற்றிக்
கொண்டினி யிதுவேநன்ம கீசார மெனவேநான்கு
துண்டனைத் தொழுதுமீண்டத் தொல்பதி யணுகினாளுங்
கொண்டலார் வண்ணன்றன்னைக் குறித்திருந் தவத்திலார்ந்தார். 30

அவர்களி லொருவனாய பார்க்கவ னரியையுள்ளப்
பவர்நிறப் பதுமத்தூடே பதிந்திட விளக்கிவையத்
தெவர்களு மிறும்பூதெய்தக் கால்சரு கிவற்றையுண்டு
தவர்களுக் கரசேயென்னத் தகுமென வொழுகினானால். 31

பாம்பொடு பயிலும்பஞ்சா னனத்தொடு கரியும்பாயும்
வேங்கையி னுடனேமானும் விருப்பொடு பயிலுமந்த
மேம்படு முனிவனோற்கும் மிகுமணம் விரவப்பூக்கும்
பூம்பொழி லிடையிலந்தப் புனிதனின் றகைமைதன்னால். 32

ஆயிரம் விழியோனந்த வருந்தவன் றவத்தின்மிக்க
தாயவெய் யொளியைநோக்கித் தன்பத மலைக்குமிந்தத்
தூயவெந் தவமென்றெண்ணிக் குலைத்திட வதனைத்தோகை
யாயவங் கலுழுமோர்பெண் ணரசியை யழைத்துச்சொல்வான். 33

பங்கயத் திடையிரண்டு செங்கயல் பயில்வதொப்ப
வங்கலுழ் வதனமாதே யம்புவி வதனமென்னப்
பொங்குறு மழிசையூடு பொருவருந் தவயோகத்திற்
றங்குபார்க் கவன்றனோன்பைத் தடுத்திடங் கெழுகவென்றான். 34

மொழிவது செவியுற்றந்த முருந்துறழ் முறுவன்மாதுங்
கொழுமலர்க் கணையோன்வெய்ய பூங்கழை குழைத்துப்பின்ன
ரெழுதர வெழுந்துவிண்ணி னின்றுமவ் விருடிவாழும்
பழுதறு பழுவத்தூடு மின்னெனப் பொலிந்துநின்றாள். 35

காலமும் வயந்தமாகிக் கானக முழுதுமாலை
மாலையாய்த் தழைத்துயர்ந்த மரங்களும் பழுப்புநீத்துக்
கோலமார் பசியசெய்ய குழைதளிர் மலிந்துநானா
மாலுறு மணங்கள்வீசும் மலர்சினை குழையப்பூத்த. 36

வயந்தநா யகனைக்கண்டிவ் வாறலர்ந் திலகுசோலை
யியைந்தநா யகனைக்கண்டோர் துடியிடை யிழைத்தபூவார்
நயந்திடு புதியகூறை நன்குடுத் தணிகள்பூண்டு
செயந்தரப் பொலிவதொக்குஞ் செறிகுழன் மலர்கள்சேர்த்தி. 37

மாதவிமலர்க் குள்ளாடி மணம்புதி துடனின்சேவல்
போதரப் பூத்தமாவின் பொழிலிடம் பிரிந்துசாம்பும்
ஆதர முடையபேடைக் குயிலதை யகற்றமூடி
மேதகு புதியவாசை மனைவிபான் மேவுகென்றே. 38

தும்பிகண் மதுவையுண்டு துணையுட னினிதுபாடும்
வம்புலாம் பொழிலினூடே வளர்முருக் கீன்றதோடு
தம்புகழ் நாசியொக்கு மென்றதைத் தமதுமூக்கின்
வெம்பியே கறிக்கும்பைந்தார்ப் பசுங்கிளித் திரள்கள்வீழ்ந்தே. 39

வந்தவள் கரியகூந்தன் முகிலென மருண்டுவாசக்
கொந்தலர் பொழிலின்மஞ்ஞைக் குலநடம் புரியக்கீதம்
விந்தையி னளிகள்பாட வேங்கையின் முழக்கமென்னும்
மூந்துறு முழவமார்ப்ப முல்லைமான் முறுவல்பூக்கும். 40

தாதவிழ் தருவின்மாலைத் தையனு மிணையபோழ்தத்
தோதருந் தவசிமுன்ன ருலவிட வவனுநோக்கி
யீதென முகிலினின்று மிறங்கிய கொடிமின்னென்று
மாதுரு வெடுத்தென்மாடு நடைபயில் வதனைமானும். 41

சேகுயர் கனகத்தாலிச் சேயிழை யுருவமுற்று
மாகியங் கனுழ்வதென்ப தொன்றல வியப்பிவ்வாட்டி
யோகியு மருளற்கொத்த வுறுப்பெலா மொளிரும்வண்ணம்
வாகைநுண் கலையையீங்கு வகையுற வுடுத்ததென்னே. 42

என்றவன் கலங்குமாறவ் வேந்திழை தெரியலோடுந்
துன்றிருங் கூந்தல்சோரத் துணைக்கரும் புருவவில்லை
நன்றுற வளைத்துநீல நயனவே லவன்றன்பேராக்
குன்றெனுங் குணமுங்குன்றப் போழ்ந்திடக் குறித்துவிட்டாள். 43

அன்னது தவசிநெஞ்சிற் பாயுமு னனங்கன்றென்ற
லின்னிசைக் குயில்களாதி பரிகரத் துடனேயேன்று
கன்னலின் றனுவைவாங்கிக் காரளி யொழுங்காநாணின்
மன்னிய வுரத்தின்விட்ட மலர்க்கணை நுழைந்தமாதோ. 44

நுழைந்ததும் படிவத்தோனு நோன்பினைத் துறந்துமுன்னம்
விழைந்துமே னகையின்வஞ்ச மயற்குழி விழுந்தான்போலக்
குழைந்தக மவண்மேற்காதல் கொண்டவ ளுடனேகூடி
யிழைந்தனன் கணமுநீங்கா தகங்களித் திருந்தான்மன்னோ. 45

பாலொடு கலந்தநீரிற் பண்ணவ னொழுகுநாளி
லாலிளந் தளிர்போலந்த வரம்பையி னகடுவீங்கி
நாலிரண் டிரண்டுதிங்க ணடந்தபி னுற்பந்தன்னான்
மேலுறப் பிணித்தபிண்ட மொன்றினை மெலிந்துபெற்றாள். 46

பெற்றபி னதனையன்னாள் வைத்தொரு பிரப்பந்தூற்றில்
விற்றரு விமானமூர்ந்து விண்ணுல கெழுந்தபின்னர்
நற்றவன் விரதம்போய தெனநனி நலிந்துதேறி
மற்றொரு வனத்திற்சென்று தவநெறி மணந்துநின்றான். 47

முன்னொரு மூவர்வந்த வாண்டுதைம் மகத்திற்றோன்று
மன்னதோர் பிண்டந்தன்னைப் போழ்ந்துமா லழலுமாழி
தன்னொளி யுருவந்தாங்கி மழிசைமன் னுதயமானான்
பொன்னிகர் கலுழனண்டம் போழ்ந்துமுன் னுதித்தபோலும். 48

பிறந்திடு குழவியாழ்வான் பான்முலை பெறுதலின்றிக்
கறந்திடு கறவைநீப்பக் கதறிளங் கன்றேபோலச்
சிறந்திடு தொனியிற்சால வாற்றலுந் திருமாதோடு
முறைந்திடு மழிசைதன்னி லுவணகே தனனுந்தோன்றி. 49

கருணையா மிரதமூறுங் கடைக்கணிப் பெனுந்தீம்பாலைப்
பருகுமா றளித்தேசெய்ய பறவையி னெழுந்தபின்னர்க்
கருடவா கனனீத்த கடுமையை நினைந்துநெஞ்ச
முருகியஞ் சனையின்செல்வ னுறழ்ந்தூரத் தழுதானன்றே. 50

வேறு

அங்கி ரும்பிரம் பறுப்பவ ரணுகியச் சிசுவைச்
சங்கை கொண்டுகண் ணுறுகையி லைவரிலோர் சதுரந்
தங்கு வோன்றிரு வாளனென் றொருபெயர் தரித்தோன்
பொங்கி யுள்ளமப் புலவனைக் கரங்களி லெடுத்தான். 51

சென்று தங்குரம் பையினிடம் பங்கயச் செல்வி
யென்ற தன்மனைக் கிழத்தியி னெழிற்கரத் தளிக்க

வின்றி நாமகப் பேற்றினை யினைவது தேர்ந்தே
நன்று நாரண னளித்தன னமக்கெனக் களித்தாள். 52

உச்சி மோந்தகங் குழைந்தக டுளைந்துதா னீன்ற
பச்சை யங்குழந் தையினிடம் பரிந்திடும் பாங்கி
னிச்சை யாலெடுத் தெழிலுறு மார்புட னணைக்கக்
கச்சை யங்குயத் தமுதமுங் கான்றது கடுகி. 53

ஒழுகு மின்பய முதவவு மருந்திடா தொன்று
மழுகை யின்றியு மசைவது மின்றியு மரியின்
கெழுவு தண்ணருட் பயந்தனைப் பருகியே கிளர்ந்து
வழுவ ருந்திரு வறிவொடு வளர்ந்தனன் மாதோ. 54

இன்ன வாறுமைத் திராவரு ணியையியைங் திவனும்
மன்னு காலையி லத்திரு மழிசையி லுறைவோன்
உன்னு நீதிய னுழவர்தங் குலத்தினி லுதித்தோன்
அன்ன செய்திதன் செவியுற வதிசயித் தாங்கே. 55

கன்று கொண்டபின் கறந்திடு கறவையி னமுதஞ்
சென்று கொண்டவன் மழிசையான் பெறலருஞ் செவ்வி
நின்று கொண்டுகண் புளகுட னிமிர்தர மகிழ்ந்து
நன்று கொண்டவர் நாண்மல ரடிசிரங் தொழுது. 56

விந்தை யாயவ தரித்திடு மெந்தையே வினையேன்
றந்த விந்ததெள் ளமுதினை யமுதுசெய் கென்று
சிந்தை யோடவன் பரவிட வவனருள் செய்தே
யந்த நற்சுவை யமிழ்தினை யமுதுசெய் தனனால். 57

எச்ச மின்றியே மூப்பினிற் பெருகிய விவனும்
நீச்ச மன்புடன் மனைவியு நியமமுஞ் செறிய
வைச்ச தீஞ்சுவைப் பயந்தனை வாய்மடுத் தாழ்வான்
மெச்ச யாவருஞ் செழித்தனன் மெலிவறப் பரிவின். 58

ஏரின் வாழ்பவ னிவ்வண நிகழ்த்திட வொருகா
லார வுண்டபின் மிகுந்திடு மமுதையவ் வாழ்வா
னீரி துண்ணுமி னெனவருள் புரிந்தன னியமஞ்
சாரு மத்திருத் தம்பதி தமையழைத் தருகே. 59

பத்தி யாலவர் பவித்திரத் துடன்பரு கியதுஞ்
சத்தி யாலதின் மளர்தரு முதுமையுந் தணந்து
சித்தி யாதயௌ வனமது செறிந்தெழில் பெருகும்
வித்தி யாதர மிதுனமா மெனவிளங் கினரால். 60

பின்ப வன்றன தில்லவ ளொடுமுதம் பெருகி
யன்பு கூர்ந்தொழு கமயமோர் தினந்தனி லாழ்வா
னின்பு கூர்ந்தருள் பயமது பருகிய வியைபால்
தன்க ருங்குழன் மனைவியுந் தரித்தனள் கருவை. 61

திங்க ளொன்பதுந் தீர்ந்தபின் மதியினிற் றெரிவை
பொங்கு ஞானியாம் புதல்வனை யுயிர்த்துமுன் பொருவி
லெங்கு மஞ்சுறுஞ் சிலைக்கர விதுரனை யீன்ற
கொங்கு வார்குழற் கொம்பனை யெனவொளி கூர்ந்தாள். 62

கண்ட வன்மகப் பேற்றினைக் களிக்கடன் மூழ்கி
யெண்டி சைக்கணு மிசைபெறுங் கணிகண னென்னுந்
தண்ட மிழ்ப்பெயர் சாத்தினன் வளர்ந்திடத் தக்க
*வண்டி லெண்ணருங் கலைகளு மறிவுற வமைத்தான். 63

கற்று யாவையுங் கருத்துறக் கணிகணன் கலையிற்
சொற்ற நன்னெறி யொழுகியே சுருதியோர் பரவும்
நற்ற வந்தனக் குறையுளா மழிசைமன் னளினப்
பொற்றி ருப்பதப் பணிவிடை புரிந்தனன் போந்தான். 64

பத்தி சாரனும் பாலமு தருந்தலு மொருவி
முத்தர் வாழெது கிரியவன் முளரியின் பதத்தை
வைத்த வன்றிருக் கருணையாம் வழிதரு மமுதை
நித்த முண்டக நிறைவுறச் செழித்தன னெறியால். 65

போத மூர்த்தியா யின்னணம் பெருகினும் புனிதன்
சாதி பெற்றிடுந் தொழில்கொடு தரையினர் மருளப்
பீத கப்பிரம் பறுத்ததின் முறம்பல பின்னி
யாத ரத்துட னனைவருங் கொளவிலைப் படுத்தே. 66

மாச டைந்திடுங் குரம்பையுண் மகிழ்ந்துறை தரினுந்
தேச மெங்கணுந் தெளிவுறுந் தனதொளி பரப்பி

* ஆண்டு என்பதன் குறுக்கல்.

வீசு வெங்கதிர்க் கடவுளால் வெளியிரு ளகலி
ஞசு தங்கக விருளொழிந் தகலவீற் றிருந்தான். 67

வேடர் வைகுறுஞ் சேரியும் பின்பவன் விடுத்துக்
காடெ ழுந்தவ னுயிர்ப்பினைக் காண்கொணு தடைத்துப்
பாடு றுந்தன தகந்தனைப் பகலென விளக்கி
நாட ருந்திரு நாரணன் றனையதி னிறுவி. 68

நாலி ரண்டியோ கந்தனை நணுகியப் பெருமான்
காலி ரண்டினுங் கமலமா மலர்க்கடைப் பற்றிப்
பாலி ரண்டினும் பசையற வொருவியே யைந்தி
னேலி ரண்டுநா ளுண்டினை யீவ்வணங் கழித்தான். 69

வேறு.

பின்பொன்றே டொன்றெவ்வாப் பிணங்குபல
சமயங்கள் பேசுந் தன்மை
நன்காயத் துணிந்துலுக சாக்கியகா
பிலசமண முதல நாடும்
வன்பாய புறச்சமயத் தொடுசைவம்
வைசெடிகம் பாட்ட மன்றி
யின்பறுமா யாவாத முதலறியாச்
சமயத்து மிழிந்து மன்னே. 70

அந்தந்த மதங்களிலும் மவரவரா
யாசரித்தே யனைத்துந் தேர்ந்து
மெந்தெந்த விதத்திலுமோர் பயனின்றிக்
களைந்தவற்றை யிறைவ னுண்மை
யிந்திந்த விழிசமயத் துழலுபவர்க்
கொருபோது மெட்டா தென்று
மொரந்த மதத்தினரை நீத்தவற்றை
நோன்மையுறு மொன்றே யென்று. 71

இவ்வண்ண மொருநாறுண் டிச்சமயக்
குட்டைகளைக் குழப்பி யேறி
யுய்வண்ணம் வைணவமே யல்லாதொன்
றில்லையென வுணர்ந்து தேறி

யவ்வண்ண வெழிற்கலச வாரிதியி
 லாடியய னானுர்க் கீசன்
செவ்வண்ணத் திருமகளார் மார்பினனே
 பரம்பொருளென் றறிந்து தேர்ந்தான். 72

ஆழ்வானும் வேதாந்த விழுப்பொருளின்
 மேலிலகு மரிய சோதி
வாழ்வாக வறிவுறவே வாமனனு
 மதுகொண்டு மயர்வை யென்றும்
போழ்வாளின் மதியருளித் தனதான்ம
 சொரூபமதைப் புலப்ப டுத்தித்
தாழ்வாரே கண்டறியுந் தன்னரிய
 ஞானுதி களையுந் தேற்றி. 73

காமற்குத் தந்தையென்று கழறுவதை
 நிண்ணயிக்குங் கண்ட கண்க
ளேமமுறும் பெயர்வரிதா யெழிலார்ந்த
 திருவுருவு மிலகுஞ் சோதித்
தூமணிகள் பலநிரைத்த முடிமுதலாத்
 தொகைபெறுபல் பணியுந் தொன்மை
யாமவுணர் குலங்களையு மயிலார்ந்த
 வைம்படையு மடைவே தோன்ற. 74

ஒருகணமு மகலாமே தனையுருவா
 யுரத்தெழுந்த வலர்மேன் மாது
மிருபுறமு மிணைந்துறையும் பூநீளை
 யெனுமெழில்சேர் நாய்ச்சி மாரு
முருகிமன மெம்பெருமா னியைபொன்றே
 தாரகமாய்ச் சூழ்ந்தே யுய்யும்
பெருகரிய ஞானியனந் தன்முதலாம்
 பரிசனத்தின் பெருமை தானும். 75

இன்னுமுள வானந்த மயமாயுஞ்
 சத்துவமா யிணைந்து முள்ள
தன்னெருமா நித்தியவி பூதியையுந்
 தாங்காணத் துலக்கி மற்றும்
பன்னரிய கால்பகுதி புருடமய
 மாய்நிகழும் படைத்த லாதி

மன்னுமொரு முத்தொழிலு மன்னுதிரு
விளையாட்டு மறிவித் தானல். 76

பொறிகாலுந் திகிரிகொடு வெங்கரவைப்
போழ்ந்துகரி புரந்த மாலின்
னெறியாலே தெருட்டியிடத் தெருண்டவனு
னிலைதுளங்கா வுளத்தோ டென்று
மறியாத பேரின்பப் பரவையிடை
யாழ்ந்தரியே யளிகள் பாடும்
வெறியாருந் துளவமுடி வித்தகனே
யுனதருளால் வினைபோ யுய்ந்தேன். 77

சாக்கியமுங் காபிலமுஞ் சங்கரனு
ராக்கியதுஞ் சமணந் தானும்
னோக்கியுமன் றொருபயனு நுகராது
விழற்கிறைத்த விதமே நொந்து
பாக்கியமும் பண்டுளதா லுனதரிய
பங்கயத்தாள் படிந்த வெற்குப்
பார்க்கவரி தென்னுளதென் றவனடியைப்
பணிந்துபர வசமாய் நின்றான். 78

அம்புதமா ரின்பொழில்சூழ் திருமழிசை
யானிந்த வடைவே தேர்ந்து
நம்பெருமாள் திருவடியை யொருநொடியு
மறவாமே நவின்று நாவா
லம்புமலர் மல்கருங்க சேந்திரபுட்
கரணியிருங் கரையி லார்ந்தே
யும்பர்தொழும் பரிசுடனே யோகியிறை
யாகிமகிழ்ந் துறைந்தா னங்கே. 79

வேறு

சங்கர பரிபவம்

ஆங்கம் மேலோ னுறைபோழ்தி
லரனு ரஞ்சொன் மலைகளும்
பாங்கர் படிய வம்பரத்திற்
படருங் காலை யவர்நீழல்
தாங்க லாகா தெனவொதுங்க
வியந்து கண்டத் தம்பதிக
ளோங்கு மூர்த்தி தனைநிறுத்த
வுமையா ளீசற் கீதுரைப்பாள், 80

முக்கண் முதல்வா மூவுலகும்
முதல்வ னீயே யென மொழிந்துன்
பக்கஞ் சாரு மெனப் பெருமை
பாராட் டுவையே பலகாலு
மிக்கேழ் கிளரு மிருடியுநஞ்
சாயை யிகழ்ந் திங் கொதுங்குவதேன்
றக்கன் வேள்வி தகர்த்தவனே
தரையிற் போது மவனருகே. 81

என்றத் தோகையி சைத்ததுகேட்
டெருதேத் தீசன் முறுவலித்துக்
குன்றத் தீசன் குலமகளே
கொழுமா மலராள் கொண்கனது
நன்றுற் றிடுமிவ் விளையாட்டின்
னான்கு முகத்தோன் படைத்திடுவன்
பொன்றத் துடைப்ப தெனது செயல்
புருடோத் தமனே புரந்தருள்வான். 82

தண்ணார் கமலத் திசைமுகனுந்
தன்னாண் முழுதுந் தளர்ந்ததற்பின்
விண்ணோ டிந்த மூவுலகும்
வீய வண்டங் கரந்தொழிய
மண்ணோ டைம்பூ தங்களுமம்
மாயன் மாயை தனிலொடுங்கக்
கண்ணா ரந்த வைகுந்தங்
கலந்தே யின்பக் கடலாழ்வான். 83

ஆங்கே யாமு மடைகுவதி
னிவனே யல்லா லொரு தெய்வம்
நாங்கண் டறியோ மவன்பதமே
நாடி யிவனு நோன்புறலா
லீங்கு நம்மை மதித்துரையா
னென்ன வவளு மிறையே நாம்
பாங்கி னவனைப் பார்த்துவரந்
தந்தே படர்து மெனப்பகர்ந்தாள். 84

பகரக் கேட்டே விண்டுபதி
படருஞ் சடையா னிழிந்தவன் கண்

முகமே நிற்க வெதிர் நோக்கா
தவனுங் கீழாய் முகங் கோட்டித்
துகளார் கந்தைத் துண்டுகளைத்
தொடரப் பொத்தி யுறவவனுந்
தகவி லென்னை மதியாமே
யுறைவ தென்ன தகவென்றான். 85

மெய்யே நின்னு லெற் கியையும்
விழைவே தென்று மிழற்றவிவன்
ஐயே வேண்டும் வரமளிப்ப
லறைக வென்ன வரனுழ்வான்
கொய்யுந் தாதைத தலைக்கா நீ
கொடுப்ப தெனக்கொன் றில்லை யென
வெய்ய நுதற்கண் பசுபதியும்
வீடின் மற்றும் விளம்புவனால். 86

முனிவர் குலத்தின் சேகரநின்
மூவாவிரதத் துள மகிழ்ந்து
கனிவாய் வேண்டும் வரமளிக்கக்
கைலை நீத்துன் கண்முகப்பே
தனியே நின்று நனிவேண்டுந்
தன்மை யுணரா தகற்றுவதும்
முனியும் வினையை நோற்பவர் தம்
மொய்ம்பிற் கியல்போ வென மொழிந்தான். 87

மொழியக் கேட்ட மழிசையனும்
முறுவல் பூத்து வரைவில்லோய்
ஒழிவி லின்ப வுலகருள
வொல்லு மென்னி லுதவு கெனக்
கழிய வுள்ளம் வெள்கியது
கருணை செய்வோன் திருமாலே
யொழிய வேறு வரித்திடுகென்
றுரைக்க முனியு மோதுவனால். 88

ஆயின் முத்தி யளித்தலையே
லானையுரித்தோ யின்றெழிவோர்
வாயின் சின்னு ளிருந்தகலும்
வண்ண மிழைத்தி யெனவவனும்

மாயு முயிரைத் தடுத்திடலென்
மாடும் வினையின் மாய்வரெனப்
பாயு மூசி யுடனிழையும்
பாயும் வரமே னுந்தருவாய். 89

என்றவ் வாழ்வா னிகழ்ந்திடலு
மேந்து மழற்கை யுருத்திரனும்
நன்று நன்றென் றுருத் தெழுந்தே
நமனூர் நமனென் றெனையறியா
யன்று சென்ற வனங்கனெறி
யடைகென் றின்னே நுதல்விழியைக்
கன்றி நின்று கனன்றெரியைக்
காலும் வகையே திறந்தனனால். 90

அழற்க ணின்றுங் கடைக் காலத்
தவனி யெரிக்கும் வடவையெனத்
தழற்பி ழம்பாங் கெழுந்தழலத்
தனதே ரிதயத் தாமரையின்
மழைக்கண் மலர்மா மங்கையுடன்
மன்னும் பெருமான் மலரடியே
பிழைக்குங் கதியென் றடைக்கலஞ்செய்
போழ்தின் முனிவன் பெருமானும். 91

இடங்கர் வலிக்க வாற்றுதன்
றிரங்கி யழைத்த மதகரிக்குப்
படங்கொள் பாய றணந்துவிரைந்
தெழுந்த பாங்கின் படிவமறைத்
திடங்கொள் வானி விருந்தனது
வவத்தாள் பெரிய விரனுதியி
னடங்கும் விழியைத் திறந்திடுகென்
றுரு முணரா தருளினனால். 92

இருடி யிறையு மெம்பெருமா
னிசைத்த துணர்ந்து தளராமே
விரைவி லடியின் கண்டிறக்க
வெயில்கால் கோடி வெங்கதிர்கள்
புரையு முழுத்தீப் பிழம்பேய
தனின்றெ ழுந்து புவிமுழுதும்

பரவிக் கங்கைச் செஞ்சடையன்
    பாங்கர் வளைந்து தகித்ததரோ. 93

அப்போ தன்ன னுதல்விழியு
    மடங்கி நுளம்பி னேழ்பரியோன்
வெப்பங் காலும் வெயிலிடையே
    புரண்டு வெதும்புங் கீடமெனச்
செப்பற் கரிய துயருழந்து
    செங்கட் கருமா மழைமுகிலே
யிப்போ தருளா மழை சொரிந்தென்
    னிடும்பை யகற்ற வென விரைந்தான். 94

நாரி பாக னிவ்வணமே
    நலியக் கண்ட வானவரும்
வேரி மாறு மலரவனும்
    வெருவிப் போந்து விரைவுடனே
காரி நிகர்க்குங் கண்மலராள்
    கணமும் வரையா துறை நிறத்தோன்
பாரை யளக்கும் பதமலர் தம்
    பைம்பொன் முடிமேற் படவீழ்ந்தார். 95

வீழக் கண்ட நெடுமாலும்
    வேயுந் தருமா மலர்த் தொடையீர்
பாழிப் புயவெந் தானவர்நும்
    பாடு பறிக்கப் பயந்திரோ
ஆழிப் புவியிற் கஞ்சன்முத
    லடலா ரவுணர் தமையடர்த்தோர்
தாழக் குலேந்திங் கென்புகுந்த
    தஞ்சா தடைவே சாற்றுதிரே. 96

என்னக் கமல யோனியுமா
    லிமையோர் சூழ வெழுந்து கரந்
தன்னன் முடியிற் கூம்பியிட்த்
    தாயர யுலகந் தாங்கிறையே
நின்னின் னடியன் றிருமழிசை
    நிலவ நின்று னடிவிரலின்
கண்ணின் னழலாற் கரிகரிந்து
    கண்மூன் றுடையோன் கலங்குவனல். 97

அதுவே யொன்றோ வவ்வனலா
லவனி யெல்லாந் தீந்தொழியும்
மதுவார் தண்ணந் துளவத்தார்
மாயா முந்திக் காக்கிலேயேல்
பொதுவர் மனையி னறுநெய்பால்
புகழ வருந்தும் புயல்வண்ணா
மதமா வளித்த வடைவேயிம்
மங்கை பாகற் கருளென்றான். 98

முப்பான் மூன்று கோடியெனும்
மூவா வமரர் முனிகணங்கள்
துப்பே ரிதழா ளயிராணித்
தொய்யின் முலைதோய் விண்ணவர்கோன்
அப்பா லன்ன முகைத்திடுவோன்
முதலா மிந்த வமரரெலா
மப்பா வென்றவ் வமலற
வையன் முறுவல் பூத்தருள்வான். 99.

கேளீ ருலகி லெவரேனுங்
கிளர்ந்தே யெமக்குத் தீங்கிழைக்கின்
கேளீ ரென்றே யவர்சமிப்பேங்
கெடலி லெந்த மடியார்பால்
கோளில் புரை யொன்றிழைப்பவரைக்
குழைய வொறுப்பேமெனவருளி
மாள வுலகம் பெயும்புட்க
லாவர்த் தம்மென் மழைவிளித்தே. 100·

நீவி ரின்னே தாழாமே
நிலமாவுலகிற் படர்ந்தலவன்
காவி னீழல் வயல்வரம்பின்
முழையி னூடே கண்வளர
மேவு நாரை யுழுபடையின்
மேயுங் கயலைக் கவர்பெரிய
வாவி செறியும் வளமலிநன்
மழிசைத் தீயை மாற்றுதிரே. 101·

என்ன செவிகொள் ளெழிலிகளு
மெந்தாயுன்ற னெழிற் காத்தின்

மின்னுந் திகிரித் திருவுருவாய்
　　மிளிரு மாழ்வான் பதவிரலின்
மன்னுந் தீமூண் டெரிந்திடினெம்
　　மழையி னவிக்கும் மதுகையிலே
மன்ன வழலே யம்பகங்கொண்
　　டணுகிக் காண்டற் காருளரே. 102.

எந்தம் பகடு வியனுலக
　　மெங்கும் புகழ வீங்கதுவு
மிந்த நெறியி னகலற்க
　　வென்றே யவையாங் கிரங்கிடமா
னந்தம் பணியிற் படர்கவுமக்
　　கணுகுந் திறலு ஈனியென்ன
வந்த வருங்கார்க் குலமடைய
　　வாங்கே மீண்டு படர்ந்தனவால். 103.

காண்போர் காணுங் காநொடியிற்
　　ககன மெங்குஞ் சாலமெனச்
சேண்கா ராழி முழுதுமெழுந்
　　திடையொன் றின்றிச் செறிந்ததென
மாண்பா ரெங்கு மனநடுங்க
　　விடியு மின்னு மலிந்துமுனந்
தூண்போ லாயர் படப்பொழிந்த
　　தாரை நிகர்ப்பச் சொரிந்தனவே. 104.

சொரியத் திணைகள் வேறறியுஞ்
　　சூழ்ச்சி யின்றித் தொல்புவியில்
பெரிய பிரள யம்மிதுவென்
　　றெவரும் பேதுற் றழுங்கவெள்ளம்
விரியத் தரணி மிசைப்புரள
　　வாழ்வா ரடியின் விழிநெருப்புந்
தெரியத் தெரிய மதமடங்குந்
　　திறமே முற்றுந் தணிந்ததரோ. 105

வேறு

செவியுற்ற போழ்தத்து மகமுட்கு
　　மச்செப்ப வரிதாய திண்மாரியின்
புவியுற்ற பெருவெற்பி னசையாது
　　புருடோத்த மன்பாதமேபுக்தியின்

சவியுற்ற மலர்வைத்த வன்றன்னை
யெயத்த வத்தோர டைந்தார் தனு
மவியுற்ற பின்வன்னி யழலேந்தி
தெளிவுற்றெ ழுந்தங்க கந்தேறினன். 106.

தேறித்தி றந்தேக ணெதிர்நின்று
திகழ்கின்ற திறலாரை முகநோக்கியே
மீறித்த னக்குள்ள டங்காவி
யப்போடு மேனின்ற வானோர்களைக்
கூறிக்கு றிக்கொண்டு ரோளிர்க
ளினியிக்கு ணக்குன்ற னத்தோன்றுமில்
வீறுற்ற முனிபத்தி சான்னெ
னும்பேர்வி ளங்கத்த மைத்தோங்குமே 107.

அடியாருண் முதலம்ப ரீடன்ற
னலோர்மு னறியாது முனிபட்டினை
படியாய தென்பாடு மீங்கென்றி
டங்கொண்ட பைந்தோகை யுடனேந்தருத்
தொடையாடு சுரர்கான வதைநன்கு
ரைத்தெந்தை துளவாடு புயமாயவன்
வடிவாரு மடியாரை வெல்வாரு
முளர்கொல்லோ வகையாரு மெவராயினும். 108.

என்றேதி ருப்பாக வதர்வீறு
மெழில்பஞ்ச விதமாந்தி ருத்தங்களுங்
குன்றாத குருபாதம் பயில்வண்ண
மோடின்ன குறையாத தருமங்களும்
நன்றாய தைந்தந்த நளியோகி
விடைகொண்டு வானாடர் புடைசூழ்வர
மன்றாடு பெருமானு மலைமானும்
வெண்சோதி மலைமீது றச்சென்றனன். 109.

ங-வது சருக்கம்

கண்ணொன்று மில்லான்ம கன்முன்ன
மேலோர்க லந்துள்ள மன்றத்திடைப்
பண்ணொன்று மொழியாளை வலிகொண்டி
ழுத்தாடை பரிவின்று களைபோழ்தவண்

மண்ணின்ற மரமேங்க மாயாவெ
னக்கூவி மாசோடு கதறத்துகில்
எண்ணென்ற இல்லாது வளரப்பு
ரிங்தோனெ ழிற்பாத மேயேத்துவாம். 1.

மழிசைப்பி ரானவ்வ ணம்மாத
வன்பாத மலர்காடி யுறைபோழ்திலோர்
பொழுதிற்பு லிப்போத்தி னிவர்தந்து
மிசையேகு மோர்கொங்க ணன்போம்பொறி
யெழுகிற்கி லாதேத டைப்பட்டு
நிற்கத்தி யக்குற்ற வன்னெங்க ணு
மழிவுற்ற நெஞ்சோடு நோக்குற்ற
பின்பார கத்துங்க ணேச்சேர்த்தனன். 2.

கந்தைத்து ணிக்குப்பை பொத்திப்பொ
லிந்துள்ள கலைஞான முனிகண்டிவ
ரிந்தப்பு லிப்போக்கு மிடர்கொள்ள
நின்றாரெ னத்தேர்ந்தி ழிந்தையரே
சிந்தத்து கட்சீரை தைப்புத்த
விர்ந்திச்செ ழும்பட்டி னிற்செய்துறு
மிந்தத்தி ருக்கஞ்சு கங்கொள்ளு
மென்றென்னை யியச்சி ரித்தன்னவர். 3.

நீதந்த தென்விந்தை யென்மீது
நிலவுற்ற திக்கஞ்சு கங்காணெனப்
போதந்தி கழ்ந்தோரெ ழின்மேனி
மீதாயி ரஞ்சோதி போன்மின்னிடும்
பேதம்ப டுந்தாம மணிவார
ணங்கண்டு பெருவிம்மி தங்கொண்டபின்
னேதந்த விர்ந்துள்ள தவவீர
ரேயிந்த குளிகைக்கொ ரிணையின்றரோ. 4.

இதுகோடி யாமோர்க டும்பொன்னை
யும்போழு மெனவொன்ற வன்காட்டவன்
முதுவெந்த வத்தோர்ந கைத்தஞ்ச
விக்குண்டு லைக்கும்ம லங்கொண்டதைப்
புதுமைக்கு ணங்கொள்ளுங் குளிகைக்கு
ளுயர்வென்று போற்றும்வ ணஞ்செய்ததைச்
சதகோடி கோடிக்கு மேலாய
திதுபோழு நீ கொள்ளெ னச்சாற்றினர். 5.

வேறு.

கண்ட வன்னதைக் கழிபெ ரும்வியப்
புண்டு மாதவ ருயர்ப தஞ்சிரங்
கொண்டி ஞசியுங் குளிர்ம னத்துடன்
புண்ட ரீகமே லிவர்ந்து போகினன். 6

போய பின்பவன் புனித மாதவர்
சேய தோர்மறு வினைஞ் சேர்ந்தவண்
மாய வன்பதம் மனத்தி ருத்தியே
மேய ருந்தவம் மேவி னின்றனர். 7.

ஆங்க னேகபோழ் தடைய முன்னுதித்
தோங்கு மூவராழ் வார்க ளொன்றியே
வாங்கு பொன்னியி னிடையில் வண்பணிப்
பாங்கு பாயலிற் பள்ளி கொண்டருள். 8.

அரங்க னுதியா யருச்சை யாயொளிர்
பரங்கொ ஞரணற் பணிந்து வாழ்த்தியே
மரங்க ளோங்குமவ் வனத்தில் வந்தனர்
வரங்க ளோர்சுடர் வளர நோக்கினர். 9.

இத்தி ருச்சுட ரேதென் றேவியக்
தத்தி ருத்தவ ரருக ணைந்துகண்
டெத்தி றத்தரோ விவரெ னுமகிழ்ந்
தொத்து ளம்பகத் துண்மை கண்டனர். 10.

கண்டு காதலின் மழிசை மன்னரே
கொண்டு சேமமே குலவு கின்றிரோ
பண்டை யோமிவண் படர்ந்து ளேமென
விண்டு கண்ணவர் விமித முற்றரோ. 11.

நீவிர் போதர னென்னல் செய்தவ
மேவ மேவினீ ரெனவந் நால்வரு
மோவ லின்முதத் தொன்று கூடியே
யாவி யொன்றென வளவ ளாவியே. 12.

கண்களா னந்த நீர்கள் காலவுந்
திண்கொ ளத்தழீஇத் தேனின் பால்பழம்
பண்கொள் கன்னலுங் கலந்த பாங்கென
வெண்கொ ளாமகிழ் வெய்தி வாழ்ந்தனர். 13.

இன்ன ணங்குருந் தொசித்த வெம்பிரான்
பொன்ம லர்ப்பதம் புகழ்ந்து போற்றியே
பன்னெ டும்பகற் பண்பி னால்வரு
மன்ன கானகத் தமர்ந்து வைகினார். 14.

வாச நாறுமவ் வனந்த ணந்துபின்
பாச றும்மவ ராசை யோடுபோய்ப்
பேச ரும்பிணைப் பேயர் வந்தருள்
கேச வன்கிளர் மயிலை கிட்டினார். 15.

வண்டு பாண்செய வண்பொ ழிற்குளே
தெண்டி ரைக்கடன் முழவு தேழ்த்திடத்
கண்ட ணிற்குரற் கஞ்ச மார்த்திடத்
தண்ட லைச்சிகி தாந டித்திட. 16.

ஒன்றன் மீதொன்று யொளிரு மாடங்கள்
வெண்சு தாரசங் கலந்து விம்மியே
துன்று தெண்டிரைத் தோய ராசியை
நன்று மின்னியே நகைத்தல் செய்திட. 17.

திருவி ழாவருத் தேர்க ளூர்ந்திடும்
மருவு வான்கொடி பல மலிந்திடுந்
தெருவொ டின்னபல் செல்வ மல்கிடு
மரிய வல்லியங் கேணி தன்னுழை. 18.

இஞ்சி கோபுரம் மெங்கு மாழையாம்
மஞ்சு றங்குமா மாக மோங்கிருஞ்
செஞ்செ வேலென விலகு செம்மணி
விஞ்சி டங்கொளின் னிலைய மேவியே. 19.

விசயன் றேரிடை வீற்றி ருந்ததை
விசையி னூருசம் மட்டி வேய்ந்தரு
கிசைய வெம்மனை யிணைந்தொ ளிர்ந்திடப்
பசை யினின்றருள் பார்த்த சாரதி. 20.

திருமு கத்தெதிர் திகழு மல்லிபுட்
கரிணி யின்கரை கலந்தங் நால்வரும்
பெருகு யோகமே பிணைந்து றைந்தனர்
திரும ணாளனா ரடிகள் சேரவே. 21.

ஒழுக வவ்வண மொருதி னந்திரு
மழிசை யாரிடம் மற்ற மூவருந்
தழுவி யின்விடை தாம டைந்துமுன்
புழுவ லன்புட னொருவியத் தலம். 22.

ஆழி சூழுல கெங்கு மார்ந்திடும்
போழ கத்திரட் புனித நீர்படிந்
தாழி வாழ்கரத் தரியை வாழ்த்தியே
தாழு மாசையிற் றும்ப டர்ந்தனர். 23.

வேறு

படர்ந்தபின் மழிசை மன்னன் பாரெலாம் படியவீறு
மடர்ந்த பூம் பொழி கள் சூழ மழிசையை யணுகிப் பூணத்
தொடர்ந்த வெம்பவத்தை வீட்டுந் தூநிறத் திருமண் ணேடிச்
சுடர்ந்த வேங் கடத்தின் மேவுஞ் சோதியை நினைந்து நைந்தார் 24.

அடியிடை முடியி னான்மூ வுலகமு மடைந்து தத்தஞ்
செடியினைக் களைய வீறுஞ் சேடன துருவா மந்தத்
தடவரை யொளிருங் காயா வண்ணனத் தவத்தோர் துஞ்சும்
வடுவறு கனவி னம்மண் வைகுறுந் தலத்தைச் சொன்னான். 25.

துயிலெழுந் தவருந் தூய கனவின்மா லருளிச் செய்த
செயிறரு தலத்திற் சென்றாங் கீகுதெண் மண்ணைக் கொண்டு
பயில்வுறும் பன்னீ ரங்கத் தணிந்தது லங்கப்பாங்கின்
மயர்வற வவன்றனும மத்துணை மகிழ்ந்து போற்றி. 26.

ஈறிலா வின்பங் கொண்டே னென்பிறப் பகன்று விண்டேன்
பேறெலாம் பெற்றே னையம் பிரிந்தெழ மயக்கு நீத்தேன்
மாறுகொண் மற்றைத் தெய்வ மணமிலா மலரே யென்று
தேறினே னெனவா னந்தந் தேக்கு றமகிழ்ந் துறைந்தார். 27.

சிலபக லகன்றபின்னர்ப் பொய்கையா ருதித்த செய்ய
தலங்களிற் சிறந்த கச்சித் தலந்தனின் வதிய வெண்ணி
மலர்தலை மழிசை நீத்து மலையெனு மிரத மூரும்
பலமறு ககன்ற வந்தப் பட்டணஞ் செறியச் சேர்ந்தார். 28.

சத்திய விரதக் கேத்தி ரம்மெனச் சகங்கள் போற்று
மத்திரு நகருள்வெஃகா வெனுமொரு தலத்தி னைஞ்ஞா
றுத்தொளிர் சுடிகைச் செய்ய மணியொளி பரவத் தன்மேல்
சத்திர மதனன் போலுஞ் சவிகொள்பாம் பணையின் மீதே. 29.

கருமுகி லிடையின் மின்சேர் காட்சியாய்க் கமல மார்பி
னிருபுறத் தவனி நீளை யிணைந்துறப் புறத்தே கஞ்ச
மருவுவோன் மருவுயோக நித்திரை மணந்தோ ரோங்கு
மரகத கிரிநேர் மாயன் மலர்ப்பதம் பணிந்து போற்றி. 30.

ஆடக நளினத் தூடே பொய்கை யாரவ தரித்த
பீடுறு மரிய பொய்கைத் தடந்தனிற் பிணைந்தே யோகம்
மூடிய விழியராகி முகுந்தனை நினைந்து மூன்றா
றேடுறு நானூறாண்டு மொருகண மெனவே நீத்தார். 31.

கணிகணன் பணிகள் செய்ய விவ்வண முறையுங் காலிற்
கணிகையோர் நரைத்து மூத்துப் பிணிகளி னலிந்து காப்போர்
மணியொரு வரையு மின்றி மழிசையார் வதியுஞ் சூழ
லணுகினா ருய்யும் வண்ண மறிவெனு மிகுளை காட்ட. 32.

போந்தவன் புனித வாப்பி நீரினான் மெழுகித் தூய்மை
யாந்தரை முழுதும் பொன்னி னலகிட்டுத் துகள கற்றி
மாந்தளி மலர்கண் மானுங் கோலங்கள் பலவுந் தீட்டி
யாந்தனாற் பணிகளின்னு மாற்றின ணிதமும் போந்தாள். 33.

பலபக லகல வீங்கே யொருதினம் பத்தி சாரர்
விலகிட விமைகள் கண்கள் விழித்தெதிர் பணிக ளாற்றுங்
குலைகுலைந் துடலஞ் சோரு நரைத்திடு குழலி நோக்கி
யிலகிடு மவளி னந்த விருப்பிடந் தனையுங் கண்டார். 34.

கண்டவ ரவள டைந்த கதியினை யண்டைய ஞானக்
கண்டனின் முதியளே நின் கருத்தினைக் கழறுகென்ன
விண்டொழிந் தெனது மூப்பிங் கிளம்பெண்ணாய் விளங்கவென்பால்
கொண்டருள் புரிக வென்று கூப்பினள் கரங்கண் மாதோ. 35.

ஏம்பலி னவளிவண்ண வேண்டிட விருடி யாங்கே
யாம்படி யருளே பாயுங் கடைக்கணி னமர்ந்து நோக்க
வாம்பல மாய விஞ்ஞை யாடுவார் செயலே யென்ன
மேம்படு மரம்பை மான மிளிர்ந்தன ளிமைப்பின் மன்னோ. 36.

கயிரவ மனைய வாயுங் காரெனுங் குழலுந் திங்கள்
பயில்வுறு முகமும் வேலைப் பழித்திடு விழியுங் காம்பி
னயமுறு புயமுங் கஞ்ச நலமுறுங் குயமு நண்ணி
வயதுமோர் பதினா றாகி மதனனு மருள நின்றாள். 37.

நின்றவ டன்னையாழ்வார் நின்மனக் கியையும் வண்ணஞ்
சென்றுவாழ் குதியென்றேவச் சேயிழை யவளுமந்தக்
குன்றெனுங் குணத்தி னார்பூங் குரைகழல் வணங்கிமீண்டு
பொன்றிகழ் புரியின் வேறோர் புறமிருந் தொழுகி னாளால். 38.

அவ்வண் மொழுகு நாளப் புரிதனி லவனி யாண்டு
தெவ்வரை யடக்குந் திண்மைப் பல்லவ ராய னென்பான்
கொவ்வைய்ங் கனிவாயந்தக் குயின்மொழி யெழிலை நோக்க
நவ்விநேர் விழியி னாளு நரபதி யுளையக் கண்டான். 39.

கண்டவ ணயன வேலுங் கருப்புவின் மதன னம்பு
மண்டல பதியின் மார்பிற் பாய்தலு மாழாந் தந்தத்
தொண்டைவாய் மயிலன்னாடன் ஞெய்யின்மா முலையிற் றோய்ந்தங்
கண்டரு மருந்திக் காணு வருஞ்சுகம் பருகிப் போந்தான். 40.

கின்னர மிதுனம் போலக் கிளிமொழி யுடனே காளை
பன்னரும் பகல்கள்போகம் பருகியே யொழுகு நாளம்
மன்னவன் றனக்கு மூப்பு வரவர மலிய நொந்து
தன்னலின் குதலை யாளை விளித்திது கழற லுற்றான். 41.

மதகரி முகத்திற் சூழி மானமென் றுகின் மேலார்ந்த
திதலைபொன் பூத்து மேனுைக் கிருங்குலத் தெரிவை நீயே
பதமுறும் பருவம் வாய்ந்து மூப்புறு துறைய யானே
முதுமையிற் பெருகி நாளு மொய்ம்பிழந் தழுங்க லென்னோ. 42.

கற்பகத் தடியில் வாழுங் காந்தையர் குலமே யன்றிப்
பொற்புறும் புவியின் மாதர் மூப்புறு துறைத லென்னோ
நிற்கிது நிகழ்தற் கேதோ மறையுள தனை நீயே
யற்பினி லறைக யானு மவ்வண மடைவ லென்றான். 43.

என்றது செவியி னேற்ற வேந்திழை யிரங்கி யைய
நன்றுறு மழிசை/நாத னருளினன் மிடைந்தே னிந்தப்
பொன்றரும் பருவ நீயு நின்னகம் புகுந்து நாளு
மொன்றிய வைய மேற்குங் கணிகணற் குரைத்தி யென்றாள். 44.

கேட்டது கிளர்வா ளேந்துங் குரிசிலு மகிழ்ந்து கேண்மை
நாட்டியக் கணிகண் ணன்க ணலமுற விளித்து நாளென்
வீட்டினுக் கழைத்தாய் நின் மழி சையார்க் கியம்பி வேண்டித்
தாட்டுணை தொழுது பையத் தகவினிற் கொணர்க வென்றான். 45.

முறுவலித் தவனாள் வேந்தே முழுதுல கொருகோலோச்சு
மிறையவ னெனினு மன்னா ரேறெடுத் தவனை நோக்கார்
பிறரகத் தடியும் வையார் பிறைமுடிப் பெருமா னாதி
யிறைவர்க ளவர்பா லீண்டிக் கருத்தழிந் தகன்றா ரன்றே 46.

ஆகையி னின்னை யீங்கோ ரருத்தமாய் மதியா ரென்றத்
தோகைபங் குடலன் செய்தி துலங்குற நுவல மன்னன்
வாகையை யெனது பாவால் வகையுறப் பாடு கென்ன
நாகையாப் புலவன் மற்று நரபதி வதன நோக்கா. 47.

வாய்கொண்டு மனிதர் பாட வந்திடு கவியே னல்லே
னாய் கொண்ட சீராதி நாரண னவன்றன் பாதங்
தோய்கின்ற பெரியோர் தூய புகழினைத் துதிக்க நின்றேன்
பேய்கொண்ட நரரைப்பாடிப் பெறும்பயன் விரும்பேனென்றான் 48

இயம்பலும் புலவன் பால னிருகணுஞ் சிவக்கச் சீறிச்
செயம்படு மெனது சீர்த்தி செந்தமிழ்க் கவியினேறி
நயம்பட நினது நாவீங் கொருப்படா தாயி னின்னை
பயம்படு மெனது தேயம் பரித்திடா தெழுக வென்றான். 49.

கொற்றவ னுரைத்த மாற்றங் கொதிகொளக் கேட்ட கண்ணன்
மற்றுரை வழங்கலின்றி மன்னவை தணந்து போந்து
நற்றவ ரடியை நண்ணி வணங்கி யிந் நகரை நீந்திச்
சிற்றறி வுடையேன் செல்ல வருள்கெனச் செப்பி னானால். 50.

ஏதையா விந்தமாற்றஞ் சிக்கென் விசைத்தா யென்றம்
மேதையா ரிருடிகேட்க மிழற்றின னவனு மன்னன்
கோதையா ருரையைக் கொண்டா ராங்கவர் குழைந்து நெஞ்சம்
வாதையா ரரயன் றேயம் வரைவதே தகுதி யாமால். 51.

கோடுறுங் கோற்கீ ழார்ந்து வாழ்வரின் வயமா வாழுங்
காடுறுஞ் சுகமே யென்று கண்டவர் கழறு மாபோல்
நாடிது நினக்கா காத நமக்குமத் தகையே நாமுங்
கூடவே வருதும்போது மென்றவர் குடிசை நீத்தார். 52.

நீத்தவர் சொன்ன வண்ணஞ் செய்தவெம் பெருமா னையப்
பூத்திரு வடியைப் போற்றிப் புயல்வண்ணா கணிகண் ணன்பின்
னீத்திந் நகரைச் செல்வே னீயுமுன் னுரகப் பாயைப்
பேர்த்தொன்று நினைதலின்றிச் சுருட்டிக்கொள் பெருமவென்றார் 53

த்தரைக் கணமு நீங்காப் பரம்பொருண் மழிசை மன்ன
னித்திறந் தொழுதுபோற்ற வெழுந்துடன் படர வாங்கே
த்திரு நகருண் மற்ற வாலயக் கடவு ளெல்லாங்
கொத்துடன் றிரண்டுகூடப் போந்தன வென்ப மாதோ. 54.

வேறு.

முன்னே காருத் தன்வனம் போகத்
தளிரும் பூவு முகம்வாடி
மன்னே சினையின் மரங்கள் சோர
மாநீர் நதியுந் தடம் யாவுங்
கொன்னே கொதிகொண் டழல வின்னுங்
கூறக் கூடாக் கொடுமை பல
தன்னே ரில்லா வந்நகர் கொண்ட
தகவே பின்னீர்ந் தடைந்ததரோ 55

ஊழிக் காற்று மோங்கி யடிக்க
வுதிரங் காலு மழைபொழிய
வீழத் தூம கேது வுடிக்க
விரவும் பகலும் வேறுணரார்
சூழத் திமிரஞ் சோரவு முள்ள
மகவும் பாலும் பருகாமே
யாழக் கோயிற் பொலிவுங் குன்றி
யழகார் கச்சி மழுங்கியதே 56

இறைவன் றன்னின் பொன்னகர் மானு
நன்னக ரிங்கே யெழில்குன்றுங்
குறையைத் தன்கண் குறுகுந் தேர்ச்சித்
துணைவர்க் கோதிக் கரைபோழ்தின்
மறையைக் கூர்ந்தே யாய்ந்தவர் மன்னு
மழிசைக் கிறைவர் மலரடியி
னுறையுங் கண்ணற் கின்ன விழைத்தே
யுற்ற பயன்கா ணிதுவென்றார். 57

கண்ண னு மாழ்வா ருடனே கக்கார்
வண்ண னு மாங்கே கால்வைத்தா
னெண்ணலி னின்னே யெல்லவ ரும்போ
யன்னவர் தாளில் சரண்புக்கால்

பண்ணுறு மிந்தப் பட்டண மென்னப்
பார்த்திவ னன்றே பலர்சூழ
மண்ணி னடந்தே யண்டையி லாழ்வார்
மன்னிய வேரிக் கையில்வந்தான் 58

வந்தவ னந்த வானவர் தாளின்
மந்திரி மாரின் வணங்கிக்கண்
சிந்துட நீரென் சிந்தையி லேழைத்
தன்மையி னுற்றும் புகரெல்லா
மந்த முறுங்கண் ணுடியின் மின்னு
நுந்த மனத்தே யடையாமே
யிந்த விரும்பே தைக்குல முய்ய
மீண்டெழு கென்ன விரங்குற்றான் 59

நீரே கிழிய வெய்த வகுப்போ னீரவர்
வெப்பங் கெடு மென்னப்
பபரோ ரின்றும் பகறும் வண்ணங்
கண்ணன் சீற்றங் கரந்தொழிய
வேரா ரிதயத் தின்குரு பாதத்
தெய்தி? பொறுத்தி யெனவேண்டச்
சீரார் செல்வத் திருமா மழிசைச்
செல்வரு மாங்கே சினம் விண்டார் 60

விண்டுக தத்தை விண்டுவின் பாதங்
கொண்டு சிரத்தின் வெறிநாறுந்
தண்டுள வத்தார் தாமரை யாள்சே
ரின்கடி மார்பா கணிகண்ணன்
றண்டலை சூழமுங் கச்சியின் வைக்க
கொண்டன னெண்ணந் தான்மீள்வான்
ப்ண்டென நீயும் போந்த வணைய
பாம்பணை மீதே பளிகொள்வாய் 61

அடியா ராதீ னத்திரு மாலே
யென்றவ ராங்கோ ரரும்பாவின்
படியால் வேண்டக் கொண்ட னிரத்தோன்
பண்டுபோ லந்தப் பதியேகி

முடியா ராயிரம் பணி மீதே மூக்கண
ஞதி யிமையோர்வந்
தடியார்க் துய்ய வின்றுயில் கொண்டா
னந்தணர் போற்ற மறைபோற்ற 62

வே று.

எம்பெருமா னிவ்வண்ண மீண்டருள வங்கரி
னும்பர்களு மற்றுளதம் மாலயம்வந் தொன்றினரால்
வம்பலரின் வாவிசெறி யங்கரம் பண்டையினும்
வெம்பதுய ரொழிந்து விறிச் செழித்ததரோ. 63

கானம் படர்ந்தரக்கர் காலழிய வேர்களைந்து
மானம் பெருகிரகு நாதன்பின் மணந்தருவ
வீனந் தவிர்ந்தொளிர்ந்த வின்னகர்நேர் தன்னகரைக்
கோனும் விழிகுளிரக் கொண்டுமகிழ் நோக்கியுடன். 64

வில்லெறியும் பூண்பலவுங் கோசிகமும் விளம்பரிய
பல்லாயி ரம்புரியும் பைம்பொற் கவரிகளும்
நல்ல கவிகைகளு மின்னபல நற்பொருளு
மல்லன் மழிசையிறை மலரடியிற் கொண்டளித்தே 65

போற்றித் தொழுதிறைஞ்சப் பொன்னருள்செய் தன்னவரு
மேற்ற வனேக்கடைக்கணித் தேயேகு கெனவிடுத்தச்
சாற்றற் கரும்பொருளைச் சலசநய னன்பதத்திற்
கேற்ற தெனவரித்தே யிதயங்க ளித்திருந்தார். 66

மாமழிசை மன்னவன்சொல் வண்ணமல ராள்கணவ
னுமென் றருளி யிழைத்ததி னத்தொல்பதியிற்
சேமம் பெறவிலகு மன்னவற்குச் செகமுழுது
நாமம் யதோத்தகர னென்றே நவின்றிடுமே 67

பல்லாண் டவர்மினுமப் பட்டணத்தில் வீற்றிருந்தே
யெல்லா ரெயிற்குடந்தை யேரார ராவமுதன்
மல்லாண்டதிண்டோள் மணி வண்ணன் றுள்போற்றச்
செல்லாநின் றுரெழுந்தி யோகஞ் சிதையாமே. 68

போமா றிடையொளிரும் புலியூரென் றூர்பதியாய்
காமா ரணமோது மந்தணர்கள் கண்டிவரைத்
தாமா ரணமிறுத்தித் தாழ்ந்தகுலத் தாரென்றத்
தீமா வினையினவர் விட்டவிடந் தேடினரால். 6

நிறுத்துமிடந் தோன்றும னின்றலையக் கண்டாழ்வார்
கறுத்தவொரு நெல்லெடுத்துக் கையுகிரி னூற்போழ்ந்தக்
குறிப்பி னுணர்த்தமனங் கொண்டவரும் விண்டதல்ம்
வெறுத்துத்தம் வெள்ளறிவை யிருடி தமையியங்தே. 70

எக்குலத்தா ராயினுமா லேரார் மலரடியைத்
தக்க படியடையி னந்தணருந் தாமவரே
மிக்க குலத்துதித்து மத்திருவை மேவாதார்
கைக்கு மிழிகுலத்துக் காராளர் தாமவரே 71

என்று மிகப்போற்றி யெல்லோருந் தாங்களித்துத்
துன்றி யவரடியைத் தொன்முறையி னேபணிந்து
நின்றெம் பிழைபொறுப்பி ரென்றுபல நிகழ்த்த
நன்றூர் திருவுள்ளத் தாழ்வார் நனிகுளிர்ந்தார். 72

பின்பத் திருப்பதியிற் பீடார் மழிசையிறை
யின்புற் றெழுந்திசைக ளெங்கு மவணருச்சை
தன்படிவ மாயொளிரும் தாமரையாள் கோன்றிரும்ப
அன்பினதைக் கண்டவர்க ளானந்தித் தந்நகரில். 73

மிக்கவவி சொரிந்து மேலா மகம்புரியுந்
தக்கவொரு பரம பாகவதர் தாங்கேட்க
விக்கதையை நன்கியம்ப லென்னே யெனவியந்து
புக்கவரு மாழ்வாரின் பொன்னடியைத் தான்பணிந்தே. 74

கண்ணனடி யார்பணிந்து கண்படைத்த பேறுடையேன்
பண்ணுமென துமகச் சாலையுறும் பாதமலர்
நண்ணிப் புனிதமுற நல்லருள்செய் கெனப்பழிச்ச
வண்ண மவர்வேண்டு மாழ்வாரும் வந்தடைந்தார். 75

அந்த மகம் புரியு மரியாத கோவிதனும்
முந்தவெது நாயகற்கு முரசக் கொடியுயர்த்தோ
னந்தமுறு மக்கிரபூ சனையாங் கிழைத்தபடி
யிந்தத் திருமழிசை யிறைவர்க்கிழைத்தனனால். 76

அந்நாட் சிசுபால னுய்ச்சியர்க டாங்களிக்க
மன்னோர் குரவைபுரி மாயன் றனைப்பழித்த
தென்னேயவ் வேள்வியிடை யிருந்த சிற்சிலரிந்
நன்னு வலர்வெறுக்க நாடா திழித்துரைத்தார். 77

கண்டப் பரிபவத்தை யரிபாத கோவிதனித்
துண்டக் குலம்பிதற்றுந் தோமொழியை யான்பொறுக்கேன்
பண்டைப் பெருமறையின் பண்புணர்ந்தீ ரென்றாழ்வார்
இண்டைத் திருமுகத்தை நோக்கி யிறைஞ்சினனால். 78

அப்போ தருந்தவருந் தந்தகைமை யாங்கொளிர
வெப்போதுந் தம்மிதய கஞ்சத் தெழுந்தருளு
மொப்போ தருந்திருமா லொண்பதத்தைத் தானினைந்தே
யிப்போ தெழுந்தடியே னின்னல்களை கென்றிறைஞ்சி. 79

மாயா மதுசூதா மாலே மணிவண்ணா
காயா வெனுநிறத்தாய் கையாருஞ் சக்கரத்தாய்
தீயார் செருக்கொழியத் திண்மனத் தென்னுள்ளதுபோ
லாயா வெளிப்பட்டிங் காள்கவென வேத்தினரால். 80

ஆட்பட்ட வர்துயரை யாற்றுத வாளரியுந்
தாட்பட்ட வரித்தகவே பழிச்சவுடன்
கோட்பட்ட வெங்கிகிரி முதலாங் குலவுபடை
நாட்பட்ட செம்மலர்க்கை நான்கிடையு நன்கொளிர. 81

ஆழ்வாரே தன்னுருவா யாங்குதிக ழத்திகழத்
தாழ்வாயு ரைத்தவருந் தக்கமகஞ் செய்தவருங்
கேழ்வாய்தி ருத்திகிரிக் கேசவனே நீசரெமை
வாழ்வார்ந் திடவருள்வா யென்று வணங்கினரால். 82

ஆனகதுந் துபிதுதித்த வந்நாளப் பேருருவந்
தான்மறைத்த தன்மையினே யீங்குமது தான்மறைக்க
வானவருந் தாள்பணியவ் வாழ்வாரம் மாமகம்பின்
மானமுறத் தானடத்தி மற்றவரைக் கடைக்கணித்தே. 83

அஞ்சலிசெய் தெல்லோரு மானந்த நீர்வடியப்
பின்செலவோ ரோசனைபின் னிற்கவெனப் பேரருள்செய்
தெஞ்சலில் வேள்விகளி னின்புகைமே லென்மறைய
விஞ்சுந் திருக்குடந்தை வெம்பதியை யண்மினரே. 84

வேறு.

திரைக் கரத்தி னுடகத் திரள்க ரைக்கண் சேர்த்தலா
லுரைக்க லுற்ற பொன்னி யென்னு மோடமந் நதித்தடம்
வரைக்க லங்க ணிரைத்த தென்ன வைகுமாட வீதிசூழ்ந்
திருக்க வோங்கு பைம்பொனு லயத்து வாயி லெய்தியே. 85

செங்கதிர் மணிக்கு வட்டிஞயி ரஞ்செ றிந்தவோர்
திங்க ளென்னும் வெண்பொருப்பி னூடுமோர் தெளிந்தகார்
பைங்க திர்மணிப் பருப்ப தம்படிந்த பான்மையாய்
மங்களத்து றங்கு மெந்த மாயனைப் பணிந்தரோ. 86

நடந்த கால்க ணொந்தவோ நடுங்க ஞால மேனமா
யிடந்த மெய்கு லுங்கவோ விலங்கு மால்வ ரைச்சுரங்
கடந்த கால்ப ரந்தகா விரிக்க ரைக்கு டந்தையுள்
கிடந்த வாறெழுந்தி ருந்துபேசு கென்று கேண்மையால். 87

ஊறு தேனின் பாட லொன்று ரைக்கவா ராவமுதனும்
நாறு பைந்து ழாய்முடியை மீதெழுப்ப நல்லுரை
கூற யோகிபின்ன ருள்ளங் கொண்டுவப் பருங்கவி
யீறு கொள்ள வாழி கேசனேயெனப் பழிச்சினர். 88

இந்தவண்ணம் வாழ்த்தவத் திருக்கு டந்தையெம்பிரா
னந்தவண்ண மீதுநோக்க ருந்துயில் புரிந்திடத்
தந்திருக்க ரத்திலத்த குஞ்சுடர் பொருத்தியே
முந்தியோக நேமமுற்றிரு மாதமுற் றிருந்தரோ. 89

ஈறி லாது துய்த்த வந்த வின்பவெள் ளமுற்றவும்
வீறு நான்முகன் றிருவந் தாதி யாயும் விழைதருங்
கூறு திருச்சந் தவிருத் தங்க ளென்றுங் கூறரும்
பேற ளிக்கு மார ணங்க ளென்று வையம்பேசவே. 90

நன்க மைத்து நாலா யிரத்தெழு நூறென்று நவிலுறு
மின்ப முற்ற வருடமிவ் விரும்பு விக்க ணின்றுபின்
பொன்க லுழ்ந்த திருவை குந்த மென்றுவையம் போற்றுறும்
மின்க லந்த நாட கத்து மேவியங் கொளிர்ந்தனர். 91

முற்றிற்று

---

## நம்மாழ்வார் வைபவம்

### 4-வது,சருக்கம்

---

ஏறுபோரி லொன்னலர்கள் செகுத்திடே னெனக்கரத்
தேறுவில்லி றங்கவிட்ட வெழில்விளங்கு பற்குனற்
காறதுய்யு மருள்வதென்னு மாற்றினெங்கு மனைவருங்
கூறியுய்ய மறைதெரித்த கொண்டருள் வணங்குவாம். 1

மீளவிலின்ப மேவமின்னும் பரதகண்ட மென்னுமிக்
கோளமர்ந்த பொழில்வளத்தில் குணநிறைந்த புண்ணியம்
நீளவோடு மென்னலாய பொருநையென் றநீணதி
வாளைபாயுங் கங்கையென்ன வளஞ்சுறக்க வொழுகுமால் 2

அத்தரங்கி ணித்தடத்தி லமரருரை யண்மிநீ
யெத்திரத்தை யென்றசிப்ப தென்னலாய வெண்சுதை
வைத்தெறிக்கு முடிதுலங்கு மனைசெறிந்த குறுகையென்
றொத்த நாம மோங்கு செல்வ நகரமொன்று குலவுமே. 3

குலவுமந்த நகரையாதி வழுதிநாடன் கோடிடா
தலகில்கா லங்காண்டுதன் மரதனொன்று ருமறைதரும்
புலவுநாறு வேல்பிடித்த புதல்வனாள வீந்தனன்
நலமுறந்த நரபதிக்கு மைந்தன்சக் ரபாணியே. 4

அவன்றனெச் சமச்சுதன் செந்தாமரைக் கண்ணனவன்
றவந்தனிற்சி றந்தசெல்வ னன்னவன்றன் றனயனங்
குவந்தளிக்குஞ் செங்கணன்பொற் காரியன்ன வுத்தமற்
கவந்தளிக்கு மதலையன்ன வரசன்மைந் தன்காரியே. 5

காரிமைந்தன் மாறனுமிக் காவலற் குளந்தபொற்
காரியுந்தனின் மகற்குக் கடிமணம் புரிந்திடச்
சீருறுங்க ருத்தெழுந்து திருவண்பரி சாரமென்
பேரடைந்த பேறுயர்ந்த வூரடைந்து புக்கனன். 6

வழிவழியாய்ப் பரமபத நாதன்பாதம் வாழ்த்திவாழ்
வழியுதித்து வைகுதிரு வாழுமார்ப னென்றவன்
கழியகங் களிக்கவாருங் காவல்செய் கண்ணிய
னழகுமிக்க விழையுமாடத் தவன்களிக்க வெய்தினான் 7

வந்தவற்க வன்றகுந்த வண்ணமேறு பூசைசெய்
திந்தவெங்கு லம்பிழைக்க வீந்தெழுந்த தென்னெனக்
கந்தமாம லர்க்குழலுன் னுடையநங்கை கைம்மல
ரந்தமாரென் மைந்தன்பற் றுமாசையுற் றடைந்தனன் 8

என்றுரைத்த போழ்தவன்ற னேந்திழைப் புதல்வியைச்
சென்றிவள்வி ழைந்துகேட் குஞ்செந்தவஞ் செய்தேனென
நன்று பொங்கி யொன்றுபட்டே பொழ்ந்திலந்த நரபதி
தன்றிருப்பு ரம்படர்ந்து தக்கவோரை தன்னிலே. 9

தனயனோடுங் கிளைகளோடுந் தழங்குபேரி கைக்குலத்
தினியகவ்வை யோடுந்தானை யெங்குஞ்சூழ மீண்டுமவ்
வனையுமாட வண்பரிசா ரத்தையண் மிவானவ
ரனைவரும்வ ழுத்தமன்ற லாரணத் தினுற்றியே. 10

வண்டலம்புஞ் சோலைசூ ழுமந்தமுந்து வளநகர்க்
கண்டிருவாழ் மார்பனென்னுங் கார்முகிற் பதந்தமைக்
கெண்டையங்கண் மருகிமைந்தன் கிளைஞ்சருந் தொடர்ந்துறக்
கண்டுபோற்றி மீண்டனன்றன் கடிநகர் குறித்தரோ. 11

வேறு.

அரையன் மகற்கு மணஞ்செய் தனனங்கு மீண்ட
வுரைதஞ் செவிக்கு ளுறவந்ந கர்மாந்தர் யாரும்
வரையஞ் சுமாட மிசைவான வளூரி லாட
வரைவெஞ் சுவண்ணத் றுகிற்றண்டு வயங்க நட்டார். 12

புடையா ருமொளித்த மாமலர்ப் பொங்கு கூதனைக்
குடையா வருந்திவரி வண்டுகள் கூர்ந்து கால
விடையா ருமீரம் புலராத மறுகி னங்குந்
தொடையா டுபூங்கா வணமோங்கித் துலங்க வேய்ந்தார். 13

சேகுற் றசந்த மணித்தோ ரணஞ்சேர வீக்கிக்
காகுத் தனுடற் சனகன் மகள்கைபி டித்தன்
றேகுற் றகாலவ் வெழின்மா நகரேய்ந்த கோல
மாகத் துலங்க விதுவும் வனைந்தார்க ளன்றே. 14

இவ்வா றிழைத்தந் தணர்பூ ரணகும்ப மேந்தி
யவ்வா ரணத்தின் முறையோ தமுழக்கு மார்ப்பு
மெவ்வாய் முரசத்திரள் விஞ்சவும் வீழ்வின் யாரு
மொவ்வா தமன்னன் றனைப்போந் தெதிருற்று வந்தார். 15

தோகைக் குலங்களென மங்கையர் தோன்றி யாட
பாகொக் குமென்னப்ப லமங்கையர் பாடல் பாட
வாகைப் புயத்தாண்வள மாநகர் வீதி போந்து
மாகக் குவட்டின்ம னைத்தன்னு ழைவந்து புக்கான். 16

பின்னர் தகாரிபிணை நேர்விழி நங்கை யோடும்
பொன்னந் தநாடரெனப் போகமும் பொங்கி யுண்டு
பின்னம் படாதுமனை வாழ்க்கையும் பொட்பி னாற்றி
மன்னும் பொழுதத்தி னியாயது மற்று ரைப்பாம். 17

வாயா லொருகால் வழங்கிற் பவக் குப்பை வாட்டுங்
காயா நிறத்துத் திருநம்பி கலந்து மின்னுஞ்
சேயா ரணத்தின் றெளிவிண்ணு லகத்துஞ் சேரும்
வீயா வளத்தென் றிசையின்பு றமேவு மூராம். 18

குறுவென் மொழியை முதற்கொண்ட குடியெ னும்பே
ருறுமப் பதியிற் பெருஞ்செல்வத் தொருவன் விஞ்சு
மிறுமாப் புறும்பின் னவனாரண மாதி யெல்லாம்
குறையா துணர்ந்து குறிப்பின்ற ருநீதி யொன்றும். 19

முன்னு ளிருடிக்கு லஞ்செய்த விம்மூல வேத
மன்னு புராணமுதல் யாவையும் வாய்மை யன்று.
லென்னு னுமொன்றுமிவை முற்றிலு மின்றி மாய்ந்திந்
நன்னு டனைத்துமத மொன்றுற நாட்டு கிற்பான் 20

பீடா ரொரு பிள்ளையை யிங்ஙனம் பெற்றெ டுப்பே
னீடா தெனத் தன்மனத் தேநிலை கொண்டு நின்று
வாடா தநம்பி மலர் தாண்மனத் தார வைத்துக்
கோடா தருவெந்தவஞ் செய்தனன் கூர்ந்து மன்னோ. 21

சீரார் தவஞ்சேரிரு டித்திரள் சென்று காரி
யேரார் முகத்திற்கெதிர் நிற்றலு மாங்க வன்கண்
டாரா வமுதக்கட லாடின னென்ன வின்புற்
றோரா வரிசையுவந் தேற்கவ வற்கிழைத்தான். 22

வந்தீ ரெனதின்குல முய்ந்திட வந்தி ரேனும்
நுந்தம் பணியென்சிரங் கொள்ள நுவல்க வென்ன
நந்தா தவாய்மையவ ராசி நவின்று நன்று
கொந்தா ரலங்கற்குவ வுப்புயற் கோதலுற்றார் 23

நண்ணார் தடைவுண்டொளிர் கூரயினண் ணுங்கையாய்
மண்ணோ ருழவனொரு வன்மறை மற்ற நாலு
மெண்ணா திழிந்தவென வேசிப் புவன மெங்கு
மொண்ணா யிழைக்குஞ்சுத னைப்பெற வோர்ந்து மன்னோ 24

வீறார் குறுங்குடியி னன்றொரு வெந்த வத்தை
மாறா யிழைத்து வருகின்றனன் மன்ன வின்னே
நாறேர் துள்வத்திரு நம்பியை நாடி நீயும்
பேறே பெருகும்பெரு வைணவ வேள்வி யாற்றின். 25

வாரே றுங்கொங்கை வளர்கோவி யருள்ளத் தோடுஞ்
சீரா ருமாடைகளும் காதல் சிறந்து கொண்ட
காரா ருமேனிப் பெருமானவன் கட்க மொன்றுன்
னேரே யெழுந்தே யருளுங் கொளரின் கரத்தே. 26

நீயந் தவாளி னவன்சென்னி நிலத்து வீழக்
காயந் தகாளி லொருபின் னவனகந் தறித்த
மாயன் றிருத்தா சரிதிக்கிளை யென்ன மன்ன
நேயந் தனுலிப் பெருநன்றி நிகழ்த்துக வென்றார் 27

கேட்டந் தவண்ண மறிகெண்டையின் கேளி ரென்ன
நாட்டங் கொணங்கை யுடனுயந்தம் முனிக டம்மைக்
காட்டுங் கருவிபென வாய்ந்தரு கார நங்கை
மூட்டும் களவியிடை பெய்தவிழுற் றினுல் 28

அக்கா லைநம்பி யவன்கண் முகப்பே யெழுந்து
மிக்கா ரயினுந் தகமொன் றவன்மே வவீந்து
மிக்கா லுனக்கேன் றதுகே ளென்வேந் தலைய
நற்கா தலனென் றருள்கென் னநயந் திரந்தான் 29

கோணைக் களியுற்று வசுதேவன் குலத்தி லன்னுண்
மாணப் பிறந்த தகவே யுன்மனைக் கிழத்தி
யேணற் கருவிலினி யானுதித் தெங்கு மென்சீர்
பேணிப் பலரும் பெருகக் கொளச்செய் குவன்காண். 30

தாழா தினியிக் கரவான் கொடத்தா னவன்மெய்
வீழா மடிய விரைந்தே கிகீவிட்டு கென்றக்
கேழார் திகிரிக் கிளர்மா முகில்வாய் மலர்ந்து
சூழா மறைக்கு தித்துத் தொடரக் கரந்தான். 31

கங்கா தரவின் முறித்துக் கலியாணங் கண்ட
சிங்கா ரனேகத் திருக்காரி யுஞ்சிக்கெ னச்சென்
றுங்கா ரமிட்டக் குறுகான் சிரம்வீழ வோச்சி
யங்கா ருமேத்த வயவாகை யணிந்து மீண்டான். 32

வேறு

பண்டே யீசன்பார் வதியங்கைம் மலர் பற்றக்
கண்டே வானோர்தா பதரோடுங் கயிலைக் கண்
கொண்டே யானந்தம் பெருங்கூட்டங் கொளவப்பான்
மண்டாழ்ந் தாழுமங் கையோர்புங்கன் வயந்தன்றே. 33

ஏனிப் பாலிவ் வண்ண மழுந்தற் றெனமுன்னும்
வானத் தச்ச னங்கை குவித்து மதிசூட
ஞானத் தில்லாங் கும்ப முனீச னடங்கேதென்
பானிற் பின் னிப்பாலெழு மென்றே பகர்ந்தான். 34

அம்மா வப்பே ராற்ற லுறுங் கொலவற் றென்றப்
பெம்மான் பேசப் பின்னு மிவனனிப் பிரமாண்டஞ்
செம்மா கோலின்சீர் கொளின்மேலா மொருபாலி
னிம்மா வங்குட் டத்தினன் றட்டே யிறங்கும்மே. 35

என்றத் தச்சன் சொல்லுதன் முன்னே யிருமுங்கீர்
பொன்றப் பானஞ் செய்தவன் பொங்கி யெழுபாரு
மின்றற் றெல்லா மாய்ந்தன வென்றே சுரர்கம்ப
மொன்றச் சீறியா ணனை நோக்கியுரை செய்வான். 36

என்பே ராற்ற லின்ன தென்றோ ராயநகை செய்தா
யுன்பேர் வஞ்சத் துள்ளவ ரின்று முதலூனுந்
தின்போ ராகிக் கள்ளு மிழிந்தே திரிகிற்பார்
பொன்பேர் கள்ள ரென்றெனுஞ் சாபம் புரிதந்தான். 37

அந்தச் சாபத் தேறிடி யுண்ட வரவென்ன
நொந்தத் தச்ச னுண்மையி னுன்பேர் விறல்யானும்
முந்தச் செப்ப முன்னுத லின்றி முறையின்றி
யிந்தத் தீய சாப மிழைத்தா யிதுகேண்மோ. 38

கன்னன் மானுஞ் செந்தமி ழுன்ருன் கடல்சூழு
மின்னன் மேதினித் தலையெங்கு மிழிந்துள்ளார்.
சொன்னன் கோரா வாயின் முகத்திற் சொலன்மேவு
மென்னங் குள்ளம் பொங்கி யெழுந்தே யிசைத்திட்டான். 39

வேறு

விச்சுவ கரும னிந்த விதமெதிர் சபித்தலோடு
மச்சிறு கடத்தின் வந்தோ னூழியி னவனி யெல்லா
நச்சுறுந் தனது நாவின் விழுங்கிடக் கிளர்ந்து பேழ்வா
யச்சுறத் திறந்து காயு மந்தகன் கடுப்பப் பொங்கி. 40

ஆங்குல கனைத்துந் தீய வண்டமும் பிளந்து சாய
வீங்குறுந் தொனியுந் தூம விதானமும் விரவ வெந்து
மோங்குறுஞ் சிகையின் விஞ்சுங் கடையன லுமிழ்ந்து கண்க
டாங்கரும் புலிங்கங் காலத் தழலெனச் சிவந்து மற்றும். 41

முழையெனத் திறந்த வாயி னுசியின் முதிர்ந்து வீசுந்
தழைதரு தருவுந் தீயுந் தன்மையா முயிர்ப்பு மந்நாள்
பழையவேழ் புவன முற்றும் பாழ்பட விசைத்துச் சாடுங்
குழைதரு சண்ட வாயு வெனக் குலை குலையச் சீறி. 42

மும்மை சாலுலகத் தோடிம் மூதண்ட முடிய வின்னே
வெம்மை சேர்தவத் தாரென்றன் விறலினிற் புரிவே னென்றுங்
கும்மென வுருத்த போழ்தே விதிர்விதிர்த் துலைந்த வெங்குஞ்
செம்மை சேரமரா யாருஞ் சிதைந்துளம் வெருவி னால். 43

குடங்கையிற் பரவை யெல்லாங் குடித்திடு முனியுஞ் சீறின்
மடிந்திடா துலக மூன்றும் வாழ்வதுஞ் சரத மாமே
முடிந்தது மூவ ராற்றுந் தொழிலு மிப்பகலே யென்று
நடுங்கினர் கமலை நாயக னற்பதம் பழிச்சு கிற்பார். 44

விண்முதற் பெருகு பூத மாயு மவ்வுறவின் வீறு
மெண்ணறு மியங்கி யங்காப் பொருள்களி னுளத்து மன்னுங்
கண்ணனே கரியைக் காத்தோர் கரிதனைக் கடிந்த மேக
வண்ணனே குறளாய் மற்றும் வானுற வளர்ந்த மாலே. 45

இக்குறு முனியின் சீற்றத் தெமையவிர் தொழித லின்றி
யிக்கணத் தளிப்பா யென்றே யெழிற்கரங் குவித்து மாழ்க
விக்குவின் மதனைச் செற்றோன் பிரமனே டிருடி முன்போர்
திக்கதம் புலனை வென்றோர்க் கியையுமோ விசையின் மிக்கோய். 46

குறுமுய லிடமுஞ் சீற்றங் கொண்டரி வனத்தில் வாழும்
மறியெலாம் படுத்தன் மானு மற்றன தெழுச்சி யீங்கே
பொறுபொறு நினது பூந்தேன் பொருவு மித்தமிழே வையம்
நிறைதருங் கலைகட் கெல்லா முடியென நிலவ யானே. 47

அப்பர் சுந்தரர் மாணிக்க வாசக ரெனவே யாருஞ்
செப்பிட வுதித்துச் செய்ய தமிழ்கொடு தலங்க டோறு
மொப்புற வமிழ்தி னெங்கும் பாடுவேன் பகர்ந்தே னுண்மை
யிப்பெரும் வெகுளி விள்க வெனப்பல விசைத்தான் மன்னோ 48

அவ்வணஞ் சபதஞ் செய்து மவர்சின மடங்கா தாகிப்
பவ்வநீர் பருகுந் தீய் வடவையிற் படர்ந்து மீறத்
தெய்வவான் மலருள் வைகுந் திசைமுகன் மதுர மானுங்
கொவ்வைவாய் திறந்து கோல நன்மொழி பகர லுற்றான். 49

ஆரண நான்கு மாய்ந்தா யவைகளின் முடியுந் தேர்ந்தாய்
காரண முணர்ந்து நன்னூன் முறையெலாங் கருதி வையம்
நாரண னடியை நாடி யுய்ந்திடச் செலுத்துஞ் செய்ய
வேரண வுலக வாசா னெனப்பல ரிசைக்க நின்றாய். 50

கருவினு ளுறையுஞ் சேயுங் காலினு லுதைத்த தென்று
தெரிவுறு மனேயு மந்தச் சிசுவினைச் சினந்த துண்டோ
விரிதழ லனைய சீற்றந் தணிந்தினி விமலே கேள்வன்
மருமல ரடியை நாடி யருந்தவ மகிழ்ந்து செய்வாய் 51

அருண்மழை பொழியு மந்தக் கருமுகி லெழுந்துன் முன்னர்
மருவுமுன் மனத்தின் வண்ணம் புரியுமென் றுணர்ந்து தேற்றத்
திருமுனி தெளிந்து சிந்தை வெகுளிபோய் மகிழ வெங்கும்
பருவர லொழிந்து தண்மை பரந்தகங் குளிர்ந்த மாதோ 52

அக்கணத் தெழுந்தத் தெய்வ முனியுஞ் சந்தட வி யாடி
வெப்புறு முலகந் தண்மை வேய்ந்தகங் குளிர வீசு
மிக்குவில் லீரதி கேள்வ னூர்திரின் றெழும்புந் தென்பாற்
சக்கர மணுகிச் சங்க சக்கரன் பதத்தை நாடி. 53

ஊன்றிய வொருதா ளாலே யுறுதியா முளத்தா னின்று
கான்றிடு வெயிலோன் றன்னைக் கண்களை மலர்த்திக் கண்டே
யான்ற வெங்கனற் பிழம்பு மருகுற வெரிந்து விஞ்ச
நோன்றன னுணவு மின்றி நோன்மையிற் பலவாண் டன்றே. 54

நினைப்பவு மரிய வெய்ய நீடவ முதிர வன்னேன்
தனிச்சிரத் தெழுந்த வேகத் தவக்கனற் கொழுந்தின் வானோர்
துனிப்பட வெதும்பக் கண்ணோ ராயிரந் துலங்கு வேந்தன்
பனிப்பிறைச் சடையோன் பாங்கர் படர்ந்தனன் பகர்ந்தான் மன்னே. 55

செவியுறுஞ் சிவலு மந்தச் செழுந்தருப் பொழிலோர் சூழச்
சவியுறு மெகின வூர்தி சார்பணைந் திதனைச் சாற்ற
நவினுறு மறைநான் கந்த நான்முகத் தவனும் வந்த
தியுறு மமர ரோடுந் திருமனன் பதத்தைச் சார்ந்தான். 56

சார்ந்து சங்கதி யியம்ப வடியவர் விழுமந் தன்னைத்
தேர்ந்தொரு கணமுந் தாழா வெம்பிரான் றிருவின் றிங்க
ளார்ந்த பொன்வதன நோக்கா விளநகை யமர்ந்து பூப்ப
நேர்ந்துள கலுழன் மீதே நிவந்துட னிவர்ந்தா னங்கே. 57

ஆரண வுருவா மந்த வருணன திளவன் மீதே
சீரணி மலர்த்தாள் சேர்த்திச் செவ்விதி னமரு முன்னம்.
வாரணி முலையு லோபா முத்திரை கணவன் வைகுங்
காரணி பொருப்பி னன்னேன் கண்முகப் பெழுந்து நின்றான். 58

நின்றருந் தவத்தே யுன்ற னினைவு முற்றுறற்குப் போந்தே
னென்றிசைத் தருள லோடு மிருடி கண்டிறப்பப் பொன்னங்
குன்றின்மேற் பலசெந் தோட்டு மரைமலர் மலர்ந்த கோலந்
துன்றுமைங் கொண்டன் மூன்று மின்னுடன் றுலங்கக்கண்டான்,59

ஆறஞ்சு மூன்று கோடி யமரரு முனிக டாமு.
மேறுஞ்சி ரொருத்த னன்ன னிந்திரன் முதலெல் லோரு
நாறுஞ்செம் மலர்க்கை கூப்பி நனிதுதித் தடைய நாப்பண்
வீறுஞ்செங் கலுழன் மீதுன் விரைமலர்ப் பதநான் காண. 60

செய்தவென் றவமே செய்ய தவமெனச் செப்ப லாற்று
மெய்தருந் திருவு மின்னு மென்னுள தெனவே போற்றிக்
கைதலை மிசையே கூம்பக் கண்களிற் களிநீர் கால
மெய்ததை புளகி னூர மெய்மறந் தாடி னானே. 61

தாமரைக் கண்ண னந்தத் தாபத னிரும்பே ரன்பார்
தாமமார்த் திடவே யுள்ளந் தண்மையிற் குளிர நோக்கி
நாமகி மூணியு நம்மாழ் வார்முதற் கலிய னீருய்ப்
பூமியி னுதித்தே யுன்றன் பொருவருந் தமிழின் மாதோ. 62

சுருதிக ளடைய வாரா வமுதெனச் சுவையே பாயும்
விரிதமிழ் வேத மென்று விளங்குறுஞ் செய்யு ளாக
வரிதினி லியற்றி யங்கண் மாநிலத் தவையே மூந்திப்
பரிதியின் கதிர்க ளென்னப் படர்தரப் புரிது மன்னே. 63

ஆகையி னினிநின் சிந்தை யகற்று கென்றருளித் தோகை.
பாகனம் புயத்தோ னுதி பண்ணவ ரவர்தஞ் சூழ
லேக வின்கருணை செய்தே யெழில்விழை திருவை குந்தம்
வேக வெங் கலுழன் மீதே விரைந்தெழுந் தடைந்தா னன்றே. 64

எண்ணுளா ரெண்ணே போலு மெங்கணும் விரவிக் காணும்
விண்ணுளார் பெருமா னேக விழுத்தவன் மகிழ்ந்தத் தெய்வப்
பண்ணுளார் முடியின் வாழும் பருப்பதத் துறைந்தே யிந்த
மண்ணுளார் மகிழுஞ் செய்ய தமிழினை வளர்த்தி வாழ்ந்தான். 65

வேறு.

பரமபதத் தெழுந்த விடையோரேழ் செற்றுப்
பைங்கழைத் தோணப் பின்னை மணந்தமாயன்
விரைமலராட் கிசைத்தபடி முன்னே பொய்கை
வேரிமல ரிடையுதித்தோர் முதலா நால்வர்
தரைமிசையே யவதரிக்கப் பணித்துங் கும்பர்
தனிலெழுந்தோர்க் கறைந்த வணந்தனது சேனைக்
கொருமகிமை யதிபதியை மருங்கிற் கூவி
யொளிர்பவளந் திறந்திதனை யுரைக்க லுற்றான். 66

காரிக்குங் குறுமுனிக்குங் கழறினே மக்கட்பேரை
யின்படி யிழைக்கக் கடல்சூழ் வையத்
தூருக்கு ளுயர்குருகை நகரா ளந்த
வுத்தமற்குப் புத்திரனா யுதித்து வேதம்
பாரிக்கும் பொருள்களைப் பைந்தமிழின் பாவாய்ப்
பாடுக நீ பண்புறு மப்படிவந் தன்னி
லாருக்கு மறிவருமெம் பங்குஞ் சேரு
மடைகவெனப் பகர்ந்தருளிப் பரிந்து விட்டான். 67

அத்திருவாய் மொழிவழியச் சேனை மன்ன
னுழத்தியர்கள் களைகளைய வலரு நீலஞ்
சித்திரமா ரெமதுவிழிக் கிணையா மென்று
சினந்தவற்றைப் பறித்தெறியும் வரம்பின் பாங்கர்
நித்திலங்க ணிலவெறிக்கப் பகலு மாம்ப
னிரைமலருந் தடவயல்சூழ் குருகை வேந்தன்
பத்தினியின் றிருக்கருவிற் படிய வந்தப்
பைங்கிளியும் பளபளெனத் துலங்கிப் பின்னும். 68

கஞ்சத்தைப் பழித்த திருக்கவுளும் வெண்மை
கலந்த குயச்சூசுக முங்கறுத்து வாசக்
கஞ்சமலர் விழியிரண்டுங் கிறழ்ந்து நோக்கக்
கருவினுறை படைத்தலைவன் கரத்தி லேந்து
மஞ்சுளமார் பொற்பிரம்பே மான நீல
மயிரொழுக்கும் புலப்படமுன் காண்டற் கொல்லாக்
குஞ்சரமும் பூங்கொடி நேரிடையுந் தோன்றக்
கோடொரு மூன்றுங் காக்கக் குலவினளால். 69

அச்சிறிய மருங்கு புலப்பட்ட துண்மை
யறிவில்லா வாதியரின் மறைந்த வேதத்
துச்சியுறும் பரம்பொரு ளன்குணர்ந்தோர் தம்மா
லுலகறிய வொளிர்குவதே யுறழ்ந்த தன்றிப்
பச்சைமணின் னமுதமொழி யனிலம் வான
மாமிவற்றின் பண்புறு நற்செழிப்புந் தாலங்
கச்சைமுலை யுடனுசி யிவற்றின் கண்ணே
கண்டுறவோர் கண்களிக்க நிகழ்ந்த தம்மா 70

அவ்வளவே நவமதியு நடந்த பின்ன
ரையிரண்டா வதிற்கலி யிவ்வுகத்தே யாதி
திவச மொரு நாற்பான் மூன்றது வா மேலுந்
திருத்தகு நல்விசாக முறு கடகந் தன்னில்
திவளொளிசேர் முத்துயிர்த்த நந்தே போலுந்
திருமகனைப் பெற்றெடுத்துத் திகழ நீரு
மவனியெலாந் தெளிந்த னிலன் குளிர்ந்துலாவ வமர
ரெலாங் களித்தலரைச் சொரிந்தா ராங்கே. 71

திசையெங்குந் தெளிந்தன நூற்பயின்ற கல்வித்
திறத்தினர் தம்முளந் தெளிந்த தந்தணர்
வசையின்று மவிசொரிந்து வளர்த்துந் தீயும்
வலஞ்சுழலுஞ் சிகையோடுஞ் சொலித்த தோங்குங்
கசநிகர மணநாறுங் கரடமேழுங் கான்ற
திகங்களித் ததுகாண் பனியே காலுஞ்
சசியுதர முரிஞ்சிடு தென்மலையில் வாழுந்
தமிழ் முனியு முளங்குளிர்ந்து துதித்தா ரன்றே. 72

வண்டறையு மான்மதமே பயின்ற கூந்தல்
வசுதேவன் மனைக்கிழத்தி வயிறு வாய்த்த
புண்டரிகக் கண்ணனென வுதித்த வந்தப்
புத்திரற்கப் புயல்வண்ணன் புவனங் கீண்ட
திண்டிறல்சேர் கேழலுரு வுடனே வந்து
திருஞானப் பால்புகட்டத் தெவிட்டா வாங்கே
யுண்டதனைத் தாய்முலையைப் பருக லோடு
முலோதனமு மின்றுமறைந்தா ராழ்வா ரம்மா. 73

அவ்வண்ண மவர் பயமே யாதி யொன்று
    மருந்தாமே யிழிந்ததென வகன்றா ரேனும்
மெய்வண்ண நாடோறுஞ் சுருங்க லின்றி
    மேம்படக்கீழ் மலேமுகட்டின் மிசையே தோன்றுஞ்
செவ்வண்ணச் செழுங்கதிரோ னெனவில் வீசச்
    செழிப்பதுகண் டிருகுரவர் வியப்பின் விஞ்சி
யுய்வண்ண மிதுவென விக்காரணத்தி னேங்கு
    திருமாற னென்று மொருபே ரோதி. 74

ஆறிரண்டாந் திவசமதி லவரை யேந்தி
    யந்நகர்வாழ் பொலிந்துநின்ற பரமன் கோயி
லேறியவ னுலகளந்த வடிக்கீழிட் டாரிட்
    டவுடன் றவழ்ந்தவன் முன்னிசைக்கப் போந்தவ்
வீறுதிருச் சினகரத்தின் வடபாற் சேடன்
    விழுப்புளியந் தருவெனவே செழிக்கு மந்தப்
பேறமருந் தருவடி யிற்பதும வாச
    னத்தினராய்ப் பிறங்கி வலக்கரத்தின் மாதோ. 75

திருஞான முத்திரையுந் திகழக் கொண்டு
    மறுகரத்தை மடிமிசையே பொலிய வைத்துப்
பெருமானை நினைந்தவண்ணம் மௌனி யாகிப்
    பிறங்குவதைப் பெற்றவரோ டெவருங் கண்டு
திருமாலின் கருணையினே யுதித்த தீதோ
    ரவதார மெனவியந்து தெளிந்து மின்னோர்க்
கொருநாளுந் திருவுளத்திற் கியையா வண்ண
    முனூற்றிடவொல் லாதெனவுண் மகிழ்ந்தார் மன்னோ. 76

மற்றந்தத் திருப்புளியைச் சூழ வாச
    மலர்ப்பந்த ரமைத்திரவும் பகலு மாங்கே
பெற்றவரு மற்றவரும் புரந்து வந்தார்
    பின்பாழ்வா ரெண்ணிரண்டாண் டளவா யோக
முற்றமர்ந்தே கண்விழிப்பு முரையு மின்றி
    யொளிருகையிற் பரமபதத் துலகின் றூயாம்
பொற்றிருவு முபேந்திர னின்வதன நோக்காப்
    புன்னகையி னன்னயமாய்ப் புகலா நின்றான். 77

நம்மானை கொடுசேனைச் செல்வன் மாநீர்
நகர்க்குருகை யுதித்திட்டா னவற்கே வையந்
தம்மா வெம்பவந் தொலைத்துத் தளரா வின்பந்
தாமடைய விழைத்திடு மாறுபதே சிக்கப்
பெம்மானே வேண்டுவ லென்றிசைக்க வந்தப்
பேய்முலையில் வாய்வைத்த பெருமா னுள்ளஞ்
செம்மாந்து சிறுநகை செய்தின்றூர் போலுஞ்
செகத்திலெவர் பரிவரெனச் செப்பிப் பின்னும். 78

தன்சேனை பதியை விளித்துன்பங் காகித்
தரணியிட மவதரித்த சடகோ பற்குப்
பின்செய்ய படியினரெம் பெருமை கண்டு
பிழைத்திடு மிரகசியங் கள்பெறப்போ தித்து
நின்சாலம் பணிபுரிய மீள்க வென்று
நிகழ்த்தருள நிலமிசை யங்கிமலன் போந்து
மன்சேரும் புளியடியின் மௌனி யாகி
மன்னுகுரு கைப்பரனை மகிழ்ந்து கண்டான். 79

கண்டுதிரு விலச்சினையே முதலா வைந்து
திருத்தமு நன்கியற்றி யவர்கமல மானுந்
துண்டமதைக் கடைக் கணித்துத் திரும்ப வந்தத்
தூயவரும் பன்னிருபுண் டாமுந் தோன்றக்
கண்டொளிரக் கதிரவனைத் தின்றோ ருள்ளங்
களித்தாழ்வார் சடக்காற்றை யகற்று மாற்றூ
லெண்டிசையுஞ் சடகோப னெனவே போற்று
மெழிற்றிரு நாமமும்மிசைத் தாங்கிணைந்து வாழ்ந்தார். 80

ஸ்ரீ:

## நம்மாழ்வார் வைபவம்

### 5—வது, சருக்கம்

### மதுரகவி யாழ்வா ரவதாரம்.

பெரியவ னுடன்கவடு பேசி முனிராமப்
பிரியனை யுயர்ந்த வெதுகிரி மிசை பிறங்கத்
திருவுள முடன்றுவரை விண்டுகொடு சேர்த்த
திரியமுகில் பாதமலர் கண்டுதினம் வாழ்வாம். 1

மானசட கோபனினி மண்மிசை யுதிப்பா
ஞனவனி னுய்வனென நாடிமு னுதித்தும்
மானசை யினின்ற திருமதுர கவிவந்த
மேனிலை யுறுஞ்செயன் மிழற்றது முணர்ந்தே. 2

மண்மகண் முகத்திலக மென்னவெழின் மன்னும்
வண்மைமிகு பாண்டிவள நாடதனின் வாசத்
தண்மலரி ளம்பொழி றடங்களு மலிந்த
வொண்மைமிகு கோளூ ரெனவுண்டு நகரொன்றே. 3

அத்திரு நகர்க்கிடை யி லங்கையை யழித்த
வித்தக னிளைப்பொழிய வெண்பணியின் போக
மெத்தெனு மணைத் தலையின் மேவியறி யோக
நித்திரை யிழைத்தொளிரு நேர்மைபெற வையம். 4

கன்னன் மொழியார் குழல்புலர்த்தி யிடுகாலை
மென்னறு மகிற்புகையு மீதெழலி ஞங்கே.
பன்னரிய தேவநதி பானிற மொளித்தே
மன்னெமுனை யென்றுகண் மயங்குற வயங்கும். 5

மண்ணமரர் மாமறைக ளோதொலியும் வேள்வி
விண்ணமரர் பாகமுற கூவிசையும் வேலார்
கண்ணியர் நரம்பொடு கலந்தினிது பாடும்
பண்ணரவ முந்தினமும் பம்பியெழு மாதோ. 6

இலக்கணம் பயின்றிடுவ ரோர்புற மிருந்தே
சொலற்கருந் தருக்கமொடு சோதிடமு மோர்பால்
நலக்குரிய காவியமு நவின்றிடுவ ரோர்சார்
விலக்கரு வேதாந்த மொருவெள்ளிடை படிப்பார். 7

மந்திரமோ டஞ்சமிதை மன்னுகுசை யீர்வா
ரந்தமுறு சும்மையுட னம்மறுகு செல்வார்
சந்தைசொல வாய்மறைகள் சால்புதவு முந்நூ
லிந்துகர மென்னமுறுக் கெய்தவிழைக் கிற்பார். 8

அரிகரியென் றறைந்தபடி வைகறையி லேகி
விரிபுனல் படிந்தெழுந்து வெங்கதி ரிறைக்கு
மருமலரி னருக்கியமு மந்திரத்தி னீந்து
மருவலர் மந்தேகர் படமன்னு பவந்தீர. 9

எங்குமுறை யெம்பரனை யுள்ளமல ரேற்றி
மங்கள மருள்சபமு மாடியொளிர் வெண்மண்
ணங்கமோரீ ராறுகளின் மின்னவெழி றோண்மே
றோங்குதிருப் புட்டிலொடு தூமறுகின் மீள்வார். 10

இன்னதிரு மந்நகரி லேற்றமுறு சாம
மென்றுமறை யேய்ந்தகுலந் தன்னிடை யெழுந்தோன்
முன்னமம ருஞ்சிகையன் மூதறிவன் மாலே
யென்னரிய தெய்வமென் றிருந்தனனோர் பார்ப்பான். 11

சென்றயுகத் தீறிலொரு சித்திரை மதிக்க
ணென்றுமரு சித்திரையி லன்னவ னுவக்க
நின்றகண நாதர்களிற் குமுதனெனு நேயந்
துன்றுமொரு சூரிமக னாகவுதித் திட்டான். 12

அக்கருவி லேதிருவ டைந்தவருக் கின்றோர்
மிக்கநல மதுரகவி யென்றுபொருண் மேவுந்
தக்கதிரு நாமமமைத் தெக்கலை தமக்கு
மொக்கவிலை யாருமென வோதவு மிழைத்தார். 13

வாளை நிகர்ந் தாளை மருட்டங்கண் மடமாதர்
நீளவுல வந்நகரு ணின்றதிரு வாழ்வார்
காளையெரு தேழைமு னடர்த்தவெழிற் கண்ணன்
றாளமண நாறுமன தாமரையில் வைத்தே 14

யோகமிரு நான்கினுட னுற்றவணு றைந்தே
யேகவெகு நாள்களு மிரும்புவன மெங்கும்
போகியரும் புண்ணிய வனங்களிடை யாடி
மேகவணன் கோயிறொழு மேவிமன மன்றே. 15

கோகுல பிருந்தாவனங் கோகருண மாதி
நாகநிகர் நல்லதல மெங்குநணு குற்று
வேகமுறு கங்கைமுதல் வெம்பவம கற்றும்
பாகுநிகர் தீர்த்தங்களிற் பான்மை யுட னாடி. 16

ஏழ்பரியன் வாழ்மர பிருந்துல களித்த
பாழ்பட வரக்கர் திருப்பைம்புய லுதித்த
சூழ்புன லயோத்திநகர் மேவியிளஞ் சோதி
யூழ்பட வியங்குமரு யோகமதி லார்ந்தார். 17

அவ்வண மனேகபக லாரவொரு வைகல்
வவ்வுமுயிர் வானவன் வதிந்திடு திசைக்க
ணெவ்வறுமோர் சோதியுயர்ந் தோங்கியொளிர் நிற்கத்
திவ்விய சுவைக்கவி திருக்கணுறக் கண்டார் 18

கண்டிதெளி தன்றொரு கனம்பெருகு யோகி
யுண்டுகொல வண்சரத முண்டெனத் துணிந்தே
கொண்டுநிதி கூர்வறிஞன் கொள்ளுமகிழ் வென்ன
வண்டுதும வர்க்கருகி லென்னவகம் பொங்கி. 19

வேறு

சிக்கென் றெழுந்தன் னவர்சீ ரணிமைக்
கொக்குந் திறலா னமனோங் குதிசைப்
பக்கஞ் செலவவ் வொளிர்பார்த் தவணம்
நிற்கப் புறமன் னதுநீங் கினரே. 20

பின்கண் டதுமீண் டுபிளைந் துவியப்
பென்கண் டனமென் றுமகிழ்ந் துவர
முன்கண் டதுமூ தெயில்சூழ் குருகைக்
கண்கண் டுநடந் துகலந் தனரே 21

சடமா ருதஞ்சா டியசால் பினருந்
திடமா ரகக்கண் ணிறெரிந் தவர்தம்
மிடமா ருதலேன் றளிவிண் டுதவங்
கடைமா மலர்க்கண் களினோக் கினரே. 22

கருணா ரதமூ றுகடைக் கணிவ
ருருமேல் விழவோங் கியபத் தியினித்
திருமா றனெனைக் கரைசேர்த் தருளுங்
குருவே யெனவீழ்ந் துகுளிர்ந் தகமே 23

மாறன் மலரார் பதமன் னியவர்
கூறும் பணிசெய் துகுருக் களிட
மூறின் றுபயின் றுயர்வுற் றுயுநல்
லாறின் கொளவம் புவிகாட் டினரே 24

பன்னா ளவரவ் வணம்பண் ணுகையிற்
றென்னா டமர்தேர்ந் தசிலச் சிலர்க
ணன்மா றனெனா டிவணங் கியுநல்
கின்மா நெறியேக வியம்பு வரால் 25

உய்யும் மணியொன் றுளிருண் மையினைப்
பொய்யின் மதமா கியபூழ் திபல
வையம் மருள்கொள் ளமறைத் தனவால்
செய்யும் வகையொன் றுதெரிந் திலமே 26

நம்மே ரருளம் புதநோன் மைபெறச்
செம்மா மொழியா கியசீ ரமுத
மிம்மா நிலமுய் யவெழுந் துபெய
வம்மா துகணீங் கியலங் குமதே 27

என்றே யவரேங் கியிரங் கிடலுங்
குன்றோர் குருகைக் கிறைகொண் டருணீர்
நன்றே குகநா டுதுமவ் வணமென்
றன்றே யதனா றுதுணிந் தனரே. 28

தம்மின் றிருவாய் மொழிதஞ் செவியி
லிம்மென் னாறவெண் ணிநசைந் துறமச்
செம்மின் மதுரம் பெறுசீர் கவியை
வம்மின் னெனநன் குவழங் குவரே. 29

வேறு.

பரவியூக விபவங் களுமந் தரியாமி யர்ச்சையு மென்ப
முரணைவென் றவன்றன் னவதார மம்முறை மையின்முதனான்னைப்
பரவுமார ணம்பாஞ்ச ராத்திர விதிகா சங்களு டனன்றே
விரவுமா மிருதியு முலகுணர்ந் திடவிளக் கிடுமிக மாதோ 30

தாருலோ கசிலா வுருவா மருச்சா வதாரமு மின்பஞ் [வெய்துஞ்
சேருமா மறைப்பொரு ளெலாஞ்செறி தமிழ்மறை தனிற்றெளி
சீரினா லிருந்தெண் ணுதல்யோக மேசெய்கு தலருச் சித்த
லாரமூன் றிவையாற் றிமுன்யுகங் களிலடைந் தனரரும் பேறே 31

அந்தரும் பயனிக் கலியகத் தரிநாம கீர்த்தன மாற்றின்
வந்துசே ருமுன்செய் தவப்பய னிவண்வலி யவந்துறு மாபோ
லிந்தமா நிலங்க ளையுற வெம்பிரான் கலுழன்மீ திவர்ந்தேதன்
சொந்தமாம் பரிவா ரமுஞ்சூழ் வரத்தோன் றினன்முன மென்கண்

பாரமற்ற செங்கருணை யென்பாலிழைத்தா ரணப்பொரு ளெல்லாம்
பாரதத்தை முன்பரா சரன்மகன் முகம்பால் பாடிய பரிவேபோல்
பாரகத்தி னென்வா யினான்மறைப் பிரபந்த நான்கென வோங்கப்
பாரலைக் கடலெனப் பசுந்தமிழி னாற்பாடி னான்பரிந் தம்மா. 33

பாடி யென்னகம் பதிந்திடத் தந்தனன் பரமபத மனுகுற்றான்
நாடி யன்னவை நானிவண் மிழற்றுவ னன்குநீர் வரைகென்றாங்
காடி யின்முக மலர்தலு மதுரமே வழிகவி யாழ்வாரு
மேடு கொண்டெழுத் தாணியி னெழுதிட விசைத்தன ரவரம்மா. 34

இருக்கு வேதமா ரிரதநற் றிருவிருத்தம் மெனமணி வண்ணன்
றிருக்கு ணங்களைத் தெரித்திடு நூறது காண்டமேழ் கலந்துள்ள.
வுரைப்ப ரும்மெசுர் வேதமதி ரதமே யுறுசுவை யெழுபாடல்
விரிப்ப ரேதிரு வாசிரிய மதென விழுமியோ ரொருநாமம். 35

பெரியவுந் திருவும் முதலிடை களிற்பிணைந்து பின்கடை தன்னின்
மருவியுள்ள வந்தா தியைப்பெய ரினைமரு வியபிர பந்தஞ்
சொரியுதேன் கவியெண் பதிற்றே றெனச்சொல் லுவரது சோதிக்
கரியமா லுரைத்த ருளிய வதர்வணத் திரதமே கலந்தன்றே: 36

வாமனன் றிருவரை யறுகுணங் களைநரம் பொடுமிசை பாடுஞ்
சாமசா ரமேயா யிரத்தொடு செறிநூற் றிண்டெனச் சாற்று
மேமமார் கவியுள ததின்பெயர் திருவாய் மொழியெனும் வையம்
நாமமா யிரம்படைத் தவனன்றி தன்பக டெவர்நவில் கிற்பார். 37

கானநூல் வழிசது முறைபிறழ் கிலாக்கரு விகளுடன் பாடற்
கானதொன் பாதமிர தழுமார்ந் துளதக முருகிடற் பால
தீனமாய நுன்மதத் தினர்வா யடைக்கிற் பதாமிது கேட்டும்
வானநா டிருபாச மதொழித் தவர்மன மதர்ப்புற வீறும் 38

ஆரணங் களுமாக மமாதி நூலடை யவுமக டார்க்குங்
காரணம் மெனத்திகழ் தருபிரண வங்கலந்த வக்கர மூன்றுஞ்
சீரணிந்த முற்செய் யுளின்முத லடிமூன் றினுமுதல் சேரு
மோரணிந்த மற்றவை யுபநிடத மாறின் பொருண்முழு தூட்டும் 39

மோதருந் திரைப்பற வையின முதினைமொண்டு கொண்டெழு மங்
மேதினித் தலைப்பொழிவது கடுப்ப வெம்பர மதமிகவாட்டு (குன்
மேதகுங் கவியா கையிற் பராங்குச ரென்றிட மிளிர்கிற்போர்
வேதநான் கருஞ்சா ரமுமிவ் வணம்விளங் குறக்கொடு பெய்தார் 40

பெய்தவத் திருநா லொருநான் கையும்பெட் புறவரைந் தேற்ற
செய்தவத் தினர்யானு மிச்செகமு முய்ந்தன மெனவிரைந் தேத்தி
மெய்தவத் தெழுமா றனையன்றி யான்மேவி யுய்ந்திட வேறோர்
தெய்வதத் தையுங்கண் டிலேனெனவவர் திருவடிமுடி சேர்த்தார் 41

அச்சடத்தை யன்றகன் றவர்தமக் கருளன் பினையகன் ஞாலம்
மெச்சநற் கணினுண் சிறுத்தாம் பெனமிழற் றலுமொரு நாலாய்
வைச்சதஞ் செவிவாங் கருமதுர மேவழி தரவெ வரேனு
மூச்சவின் பதமளித் திவணொளிர் தாவிழைத் தனருவர் தம்மா 42

தாளதா மரைத்தட வயற்குரு கையர்தம்பி ரானது கேட்டு
நீளகங் களித்திருக் கையிற் பொலிந் தவணின்ற வெம்பெரு மானுங்
கோளமர்ந் ததன்மகிழ் மணத்தா ரவர்கொள் கெனவருள் கூற
நாளலர்ந் ததைத்தரித் தவர்வகுள பூடன னெனநவில் குற்றார். 43

பொலிந்து நின்றதிற் புனிதரா மதுரமா கவிகளின் பொருவற்ற
வலிந்த பத்தியிற் கரைந்தகமலர்க்கருண் மழைமிசை விழநோக்கி
மலிந்த வாண்டு முப்பானு டனேந்துமம் மகிழ்புளி யடியோங்கிக்
கலந்தொ ளிர்ந்தன ரருச்சையின்முன்னுருகையிகந்தனராங்கே 44

பின்னை யஞ்சுவைக் கவிகளு மாறனின் பிறங்கிருந் தமிழ் நான்கா
மின்ன முஞ்சுவை யமிழ்தினைப் படிமிசை யெங்கணும் பெயலாற்றி
மன்ன லின்றிய பரமதத் துகள்படிந் தடங்குற வயங்கிப்பின்
பன்ன ரும்விழா வயர்ந்தனர்பராங்குசர்க் கடைவுடன்பரிந்தம்மா 45

ஐந்து பத்துமே லாண்டுகள் வகுளபூட ணன்பத மருச்சித்தே
யெந்த பத்திக ளினுங்குரு பத்தியே யேற்றமென் றுணர்ந்தெங்கு
முய்ந்து பெற்றிட வுயர்பதம் விளக்கியவ் வொளிமணிநிரைமாடத்
தந்திருப் பதித னிலிருந் தெழிற்பரம் பதந்தனைமிடைந்தாரால் 46

நம்மாழ்வார் வைபவம்

முற்றிற்று.

ஆக சருக்கம் 5க்கு, செய்யுள் 204

## குலசேகர ராழ்வார் வைபவம்.

### 6-வது சருக்கம்

வேறு.

வேளை தப்பி விருந்தென வெம்முனி
நீள வந்து நெருக்க வழுங்கிய
காளை யைவர் களிப்புற வந்தருள்
தாளை யுற்று மகிழ்ந்து தளிர்த்துமே. 1

வெற்ப னேக மெனப்புவி வெம்பொருள்
பொற்போ டக்கு திரண்டு பொருந்தலா
லற்பி னம்மலை நாடென் றறைதரு
மற்பு தத்தி னமர்ந்துள தொன்றரோ 2

கூட லார்களெல் லாரையுங் கொன்றுவென்
ரூட லார்மன்ன ராள்கையிற் கொல்லியென்
ரூட லாம்பெய ரண்மி யமரரு
நாட லாகு நகரதற் குண்டரோ 3

பூவின் மேவிய புங்கவன் முன்றிரு
மேவு பொன்னக ரோடிதை மின்றுலைக்
காவ லின்னிறை யாற்றிட விங்கர்
தாவ ருங்கனத் தாலிவண் டாழ்ந்ததே 4

இரத்தி னத்திர ளெல்லலை வீசுமங்
குரைத்தி டற்கரு மாவண வோளிக
ளிரத்தி னுகர மென்னுங் கடலினைச்
சிரித்த சிப்ப தெனத்திகழ் கிற்குமே 5

ஓங்கு மாட மிசைக்குயி லேதியர்
பாங்கர் பாற்க லவிச்செரு பண்ணியே
வீங்க யர்வுயர் விண்ணிதித் தண்டுளி
தாங்கி வீசிளங் காலிற் றணியுமே. 6

தேவர் கோயிலுந் தேசிகர் கோயிலுங்
காவ லன்புவி காத்திடுங் கோயிலு
நாவ லர்கலை நாடுறு கோயிலு
மேவி யெங்கு மிடைந்தொளிர் கிற்குமே. 7

வேத சாலையும் வேள்வியின் சாலையும்
மாதர் மன்னுந டம்பயில் சாலையு
மோது பல்கலை யோர்தரு சாலையு
மேத கும்பல மேவியங் கென்பவே. 8

வைய மன்னவர் வையம தாருவார்
செய்ய வந்தணர் செம்மறை யோதுவார்
பொய்யி லாவணி கர்பொருள் போற்றுவார்
செய்வ ரின்பணி யேரினர் செவ்வனே. 9

பொன்னெ யின்மணி பூவையர் பூண்மணி
மன்னர் கோயின் மலிந்தெழு வின்மணி
யின்ன செஞ்சுட ரீண்டியெ றித்தலால்
பொன்ன னுடன் வல்லும் பொலியுமே. 10

நாலு வேதமு நான்கற மும்பொரு
ளாலு மன்னர ரண்படை நாலொடு
நாலு பாயமு நால்வகை யாழுமங்
கேலு மென்றுமெ ழில்பெற வென்பவே 11

ஒன்றெ னத்திகழ் மாயவ னொண்பத
நன்றி ரண்டையு நாடி நலிவுறும்
வென்று மூன்று புரைகளை வெஞ்சுக
மொன்றி வாழ்குவர் நால்வகை யோருமே 12

வேறு.

இன்னமு மிசைத்தற் கெட்டா விருபக டுடைய வந்தப்
பொன்னகர் புரந்த சேர பூபதி களிலோ வாய்மை
மன்னு திடவிர தத்த னெனவொரு மகிபன் றோன்றி
நன்னெறி வழுவ லின்றி நனிபகல் புரந்து மற்றும் 13

நாவலர் புகழ்ந்து பாடு நங்குலம் வளர்க்க விங்கோர்
காவல னிலையே யென்று கலுழ வாகனனைப் போற்றத்
தாவரு மவன்றன் மார்பிற் றயங்கொளி மணியே யந்தக்
கோவுள மகிழ மைந்த னாய்வரக் குறித்தா னன்றே. 14

இக்கலி யிருபத் தெட்டாம் பராபவத் தெழில் சூழ் மாசிக்
கொக்க வெண்புனர் பூசத்தி லுவண கேதனன்முன் செய்சங்
கற்ப மதழியா வண்ணங் கௌத்துப மரையன் றேவி
தக்க வின்கரு வினின்றுத் தனய னாயுதித்த தம்மா 15

கண்டது கொல்லி காவல் பூண்டவன் களித்தெல் லோர்க்கு
மொண்டரு நிதியை யீந்து கன்னலுங் கண்டும் மொய்த்துக்
கொண்டவர்க் குறவழங் கிக்குல சேக ராழ்வா ரென்று
மண்டலம் புகழுநாம கரணமு மதித்துச் செய்தான் 16

சருக்கரைக் கிடையே தோன்றித் தக்க போழ்தமுதம் பாய
மருக்கமழ் மலரி னோங்குங் கற்பக மெனவே யாழ்வார்
விருப்புற வளர்ந்து கல்வி வேலையை யறிவாம் போதத்
தொருப்படக் கடந்து காம னொளித்தெழச் செழித்தார்மன்னோ. 17

அவரும் பொறையு மாரா யறிவு மாற்றலரைத் தேய்க்குந்
தவர்செறி புயமு மாற்ற றதும்பிய வுரமுங் கண்டு
துவரித மொருபைந் தோகை தனையவர் மணக்கப் பேசி
யிவர்தர வதுவை யாற்றி யெங்கணுங் களிக்க மற்றும் 18

எழுகடல் வரைப்பின் மேவி ராச மண்டலங்க ளெல்லாம்
விழுநிதிக் குவையின் வாயில் வீழ்ந்திருந் திருக்க வோச்சும்
வழுவறு மொருகோ லன்னோர் வலக்கரத் திலகத் தந்து
முழுமணி முடியைத் தந்தை முடிமிசை முடித்தா னன்றே. 19

மல்லடு புயத்தி னன்னோர் மண்ணகந் துவக்கத் தாங்கத்
தொல்லருங் கமடஞ் சேடன் குலகிரி திதிக்கை யாசை
யெல்லையின் கிரிக ளின்ன வெடுத்த நஞ்சுமையைத் தீர்ந்தேம்
வில்லிய லிவரா லென்று வியனகை யடைய நின்றார். 20

அடையல ரவனி மாதர் மட்கட மகன்று விண்மீன்
மிடைதரு மமர மாதர் பொற்கட மிடைய மின்னுங்
குடைநிழல் குலவு மந்தக் கொற்றவன் கரத்தார் வாளைக்
கொடியதென் றறையு மாந்தர் கூர்மதி யிலர்கண் மாதோ. 21

செவியுறு கையினின் றேகுங் காவியச் சுவையிற் றேங்கு
மிவர்கையுந் துறக்க மீனும் திசையுறு நசையு நீதி
யவிரிரு நூலி னுசை யுடன்பகை யழிக்கு மேதிக்
குவையுறும் விழைவுந் தக்க கொடையதுங் கொள்வாரென்றும். 22

நயந்தவ ருவப்ப யாவும் நல்கிருந் தருவு மேரார்
செயந்தனின் றந்தை நாட்டிற் செழிப்பதற் கென்னே யென்னின்
வியந்திவர் கொடையை வெட்கி விண்படர்ந் தொளி . த தென்றால்
பயம்படு மவர்தம் பண்பை முற்றுறப் பகர்வ தென்னே 23

புலவு நாறுடல் வேலையன் புயல்வண னடியி னன்புங்
குலவு பாகவதர் மாடே கொண்டது மிகலித் தம்முன்
பலபட வாத மாடிப் பரம பாகவதர் பாங்கர்
நிலவிடு மதுவே பின்ன ரொருபடி நிமிர்ந்த தம்மா. 24

காசினிக் கிறைவர் காக்குங் கடைத்தலைக் காவல் வீரர்
கேசவ னடியார் தம்மைக் கேண்மையின் விடுக்க மாழைத்
தேசுறுங் கந்த வார மளவுஞ்சென் றிறைவர் செய்யும்
பூசனை விழைவி னேற்று வைகலும் புகழ்வர் மாதோ. 25

பதுமையின் கணவன் பாத பங்கயம் பயின்று வாழும்
மதனனை நிகர்க்கு மாழ்வார் மதமலைக் குழுவின் வைகுஞ்
சிதைவறுஞ் செல்வத் தூடு செறிதருந் திருநா ளெல்லாந்
ததையசி முனையின் வாழ்க்கை தானெனக் கழித்தார் தாமே. 26

அஞ்சன சைலனுதி யரங்க னன்றி லங்கை செற்ற
செஞ்சிலைத் திருவ னின்னோர் சேயடி களையே யுன்னி
நஞ்சர வணையான் பாத நணுகியே யிழைக்கு நாளு
மஞ்செறி பணியி லென்றே யார்துமென் றறைந்து போந்தார். 27

பரம பாகவதர் சூழப் பாரதஞ் செவியின் மாந்து
முருகுற மிராம காதைமோக பாகவத மாதிப்
பொருவரு புராணங் கேட்டு வைகலும் பொழுது நீத்துத்
திருமனன் றிருவாராத னத்தினுந் திகழ்ந்து மன்னே 28

காகுத்தன் கதையி லன்னான் சானகி வதன நோக்கிப்
பாதுற்ற நினையு மன்றிப் பண்பி லக்குவனைத் தானு
மேகத்தொல் லுயிரை யேனு மிழப்பினு மந்த ணூளர்க்
காகச்செய் யுறுதி யென்று மகல்கிலே னணங்கு போல்வாய். 29

என்றவ னுரைத்த மாற்ற மிருசெவி குளிரக் கேட்டுப்
பின்றய ரதன்சேய் தானு மொருவனே பிறங்கல் போல
நின்றவ ரெதிர்த்தீ ரேழா யிரமுக டிரத மூரும்
வன்றிர லரக்கரிந்த வான்செரு முடியும் வண்ணம். 30

தீதென வறிகிலே மென்றிருந் தவரி சைத்தா ரென்ற
காதையைச் செவியுற் றந்தக் கடுஞ்சம ரெதிரி னன்றே
தீதுற நிகழ்ந்ததென்று திருவுளந் துணிந்து பொள்ளென்
றேதிக ளுடனு லாய விரும்படை திரட்டிக் கொண்டே. 31

வம்மினெம் பெருமாற் கின்னே படைத்துணை வலிதிற் செய்து
மிம்மெனும் பொழுதி லந்த நிருதரை யெரித்து மென்றுங்
கும்மென வுறுக்கி வில்லுங் கையுமா யெழுந்த லூக்க
மம்முறை புராண கூடத்தனைவருங் களித்துக் கண்டார். 32

வில்லவர் பெருமான் றெய்வ பத்தியை வியந்தக் காதை
சொல்லுவோர் மறித்து மாற்றார் சொலற்கருந் திறனை வீழ்த்தி
வில்லொன்றால் விளங்கு வீரன் றனையனம் விழையுஞ் சீதை
புல்லினன் மகிழ்ந்தா ளென்றபொருள்படுங் கவியைச் சொற்றார். 33

ஏற்றது செவியி னாழ்வா ரிதயமும் பூரித் தேகுங்
கூற்றுமஞ் சனிகத் தோடு மீண்டிது கதையே யென்று
தேற்றியிவ் வண்ணந் தெய்வ நாயகன் புகழை நாளும்
போற்றியின் றதியா ராத னத்தையும் போந்தா ரன்றே. 34

வேறு

சுரும்பி மிருமண மாலையொடு பிறழுந்
தண்டிரளச் சோதி மாலை
விரும்பி யிளநிலை வெறித்துத் துயல்வருதோள்
வில்லவர்கோன் விமலை கேள்வ
னரும்பெ ரியவடி யாரோ டிவ்வண்ண
மனுதினமு மொழுகக் கண்ட
விரும்பு வியைப்புரப் பதினன் கெண்ணு
தொழின் மந்திரிய ரீண்டி மன்னோ. 35

அகடார வனுதினமும் வைதிக வேடந்
தரித்த வந்த ணாளர்
செகம்புரக்கு நமதிறைவன் றன்னுழையே
சேர்ந்தரசு செனுத்துமவ் வண்ண
முகவாமன் மனஞ்சு ழன்றே யுழன்றலையப்
புரிவ தினவ்வுபர்க்கோர் தம்பா
லகமாரா வணங்கசப்ப தொன்றி ழைத்துமெனத்
துணிந்தா ரறிவின் ஞங்கே. 36

துணிந்து வழிவழி யாளும் புரவலர்கள்
விலையிடுதற் கரிய தோண்மே
லணிந்தி லகுமாப ரணத்திரள் களிலொன்
றறியாம லொளித்தே யாழ்வார்
பணிந்திறைவ நும்பணியி லொன்றெ வரோபய
மின்றிக் கவர்ந்தா ரைய
வெணுந்திறமு மியலா விக்கொடுந் தொழிலை
யிழைக்கிற்ப தென்னோ வென்றார். 37

ஏலா வம்மொழி செவியி னேற்றவரும்
விம்மித முற்றினமாய் நின்ற
நாலா யுந்திறத் தினரே நுண்ணிய
வச்சாணி மலையெனவே யோடுங்

காலா ருந்தேர் நிலத்திற் கவிழாது
காப்பதென வரசுமெண்ணும்
பாலாரின்ப முதுபடா தோங்குமெனப்
பரம்பரையாய்ப் பகர்வர் மாதோ. 38

ஆகையினீ ரவனி யெலாநந் தலையிற்
றங்குது மென்றறைந்து நின்றும்
பாகைநிக ரஞ்சொ லரம்பையர் வதியு
முலகளவும் பரிய செம்பொற்
கோபுரமே தாங்கி யெனக்குலவு கிரீட
னிலமு நங்கோட்பா டின்றி
யேகியிடா தித்தலை யிலெனி னீயிரிசை
யாதிங் கெவர்தாம் போந்தார் 39

என்றியம்பக் குலைகுலைந்தவ் வேனுதித் தலைவ
ரைய்யே யிட்ட வேலி
நன்றுவளர் பயிர்மேய்ந் தானனி புரம்போ
ரிழைப்ப தெவன்றடையொன் றின்றிச்
சென்றிவணே காதுலரே யன்றி பெருமையறி
யாது சேர்வா ராரு
மின்றுமது திருவுளமே நன்றுணருமென
வழங்கி யிறைஞ்சி நின்றார். 40

ஆகா நீரறைகு வதியா முணர்ந்தே
மீங்கதனை யவிர்த்துங் காண்மின்
றகா தவினை நினைந்தீ ரென்றாழ்வார்
தம்மய லுறொருவன் றன்னை
யேகா நீயொரு பணியைக் கொணர்க
விரைந்தெனவ ருளிச்செய்ய வன்னோன்
போகா வோர்பொங் கரவைக்கு டமிவழியாற்
கொணர்ந்தான் பொருக்கென் றம்மா. 41

நாவி ரண்டை நீட்டியது நனிசீறிப்
படம்விரித்து நரபா லன்முன்
மேவி ருந்தவவை நடுவண் மிகைத்திருகண்
குருதியெழச் சிவந்தங் காடக்
காவலனுமொரு கடத்தைத் தந்ததனுட்
புகவிடுக்கக் கழறிக் காந்துங்

தாவருபொற் கடககரந் தாங்குவித்துத்
தாமரையாள் கணவன் றன்னே. 42

மனமல ருணிறுத்தி யவணின்ற வர்கள்
செவிகேட்ப மலராள் வாழுங்
கனக மணித்திரு மார்ப னடியவர்க
ளொருபோதுங் கள்ளா ராயின்
சினவரவு நன்கிழைக் கவென மொழிந்தச்
செங்கண் ணராவுறையும் பாண்டந்
தனுள ரவிந்தந் நிகர்க்குந் தங்கரத்தை
யிட்டினிது தடவி னுரால். 43

அக்காலப் பேருரக மடங்கி யவரங்
கரத்தின் முத்த மிட்டுத்
தொக்கா நின்றவ ரெதிரிற் புறம்போந்தத்
தூயவரை வலஞ்சூழ் வந்து
நிற்காமுன் னுடுவதை நீள்வா னினெருங்
கிமையோர் வியந்து வண்டு
மொய்க்கா வைந்தரு மருமா மலர்நிகர
மொண்டவர்மேற் பொழிந்தார் மன்னோ. 44

நீர்ததும்பி நிலவெறிக்கு நித்திலங் கணிரை
குயிற்றி நிலவு நேமி
யோர்ததும்புங் கவிகையின் கீழிருந் தரசு
செலுத்து குலசேக ரன்றன்
சீர்ததும்பு குணங்களை யங்கிருந் தவர்கள்
செயசெய வென்றெடுத்துப் பாடக்
கார்ததும்பு மேனியனுங் கமலை யோடு
கண்டகங் களித்தா னன்றே. 45

வேறு.

மாழ்கிய மனத்த மாத்திய ரஞ்சி
மல்லடு புயங்குலை குலையக்
கேழ்கிளர் மணியா ரந்தனைக் கொடுவந்
திறையெழில் கிடந்த தாளிட்டுத்
தாழ்தலை யுடனே வீழ்ந்தெழுந் தைய
தமந்தனி லழுந்தகத் தினராய்ச்

சூழ்தர லின்றி யிழைத்த வெம்பிழையைச்
சூழ்ந்திடா தளித்தருள் புரிவார் 46

ஏந்தலே யென்றுங் கிரங்குபு பழிச்ச
விலைநிகர் ரயிற்கரத் திறைவர்
சாந்தமே மணந்து சழக்கென மகனைத்
தமனிய மணித்தவி சிருத்திக்
காந்துபொன் மகுடம் புனைந்து பன்னீதி
கலந்த நல்லிதம் பலபுகட்டி
யாய்ந்துணை வரைவே றமைத்த வரவர்க்கா
மறத்துறை பணித்தனர் மற்றும் 47

நீளையி னுருவா யவதரித் துள்ள
நீணிற முகிற்குழ லலங்கல்
வாளையேய் கண்ணியம் புதல்வியைப் பொன்வழங்
கிருநதிக் கிடைய ரங்கத்
தாளர வணையிற் பள்ளி கொண்டவற்கே
யருங்கடி மணமிழைத் தளித்தக்
கோளமர் பரம வைணவர் குழுமங்
கூடியங் கொழுகினர் பலகால் 48

வைகலும் புலரி யெழுகையி லமரர்
வந்துவந் தரம்பையர் திரளின்
கொய்தல ருச்சித் தெழுமரங் கேசன்
குணக்கடல் குடைந்தன ரவர்தம்
மெய்கலு ழந்த மேன்மையை முகுந்த
மாலைபாய் வடமொழி தனிலுஞ்
செய்தனர் பெருமாள் திருமொழி யென்னச்
செந்தமிழ் தன்னி லுஞ் சிறந்தே. 49

ஆங்கவ ரொழுக வடமலை முகடா
ரலர்மகட் கிறைவனே ரமைய
ஈங்குவந் தெங்கண் மங்களா சாசனம்
புரிந்திடுக வென்றி சைக்கத்
தேங்கிய வுவகையொடு பரனடியார்
திரள்புடை சூழ்வர வெழுந்து
கோங்கிள முலையார் கண்ணயி னெறிசேர்
கொழுநகர்க் கச்சியின் மணந்தார். 50

மணந்தமு தொழுகு மலர்ந்த பாலாற்
றிலிழிந்த கங்குளிர்ப் புறத்தோய்ந்து
பணந்திக ழனந்த சரசினும் படிந்து
பருங்கரி கிரிமிசைப் பரவிப்
பணிந்தவர் தமக்கு வரமருள் வரதன்
பங்கயத் துணைப்ப தம் பழிச்சிக்
குணந்தனிற் பயின்றங் கிருந்தனர் சின்னு
ளெழுந்தனர் வடமலை குறித்தே 51

தாளகஞ் செறிவோர் தீவினை யெரிக்குந்
தன்மையால் வேங்கட மெனவே
நீளுல கறையும் வானவ ருலகந்
நெடுங்கடஞ் சூழ்கா நிலவுங்
காளமா முகில்க ணிரந்தரம் படியுங்
கனகமா முகடடர்ந் திலகுங்
வாளர வனந்த னுருவென வயங்கத்
திருமலை யிவர்ந்தனர் மாதோ. 52

ஆடுவோர் பங்கம் பாதலம் படிய
வடக்குறுஞ் சாமிபுட் கரணி
யேட்விழ் நறுந்தா மரைமண நாறு
மிரும்புனல் படிந்தெழுந் திமையோர்
தாதொழு மமைய கோக்கிருந் தடருந்
தமனியச் சிகரிசேர் நிலயத்
தூடடைந் துலகை யளந்தவ னொளியா
ருருவினைக் கண்டடி பணிந்தே. 35

கண்டகண் பெயர்க்குந் திறனிலா துருகிக்
கருத்தெழு முதமெனு மிரதங்
கண்டனில் வழிந்த தெனக்கணீ ருடலங்
கலந்திழி தரக்கரங் குவித்துப்
பண்டுபோற் கருதா தடியினைப் பரிபா
லித்தருள் பரமனே யென்று
மண்டரு மறையிற் பரவிடப் பெருமாள்
கடைக்கணித் தருளொடு மகிழ்ந்தார். 54

அத்திருப் பதியி லவ்வணம் பலவாண்
டடைதரக் கழித்தலைக் கடல்சூழ்

குத்தலை முழுது மரனிடர் தொலைத்த
குரைகழ லரியெழுந் தருளுந்
தொத்தறு தலங்கடொறு மவனடியார்
தொகுதியிற் படர்ந்தவன் விறலை
யெத்திறத் தவரு முணர்ந்துயும் வகையே
யிசைத்தனர் தொழுதன ரிருந்தார். 55

ஆக சருக்கம் 6க்கு, செய்யுள் 259

குலசேகர ராழ்வார் வைபவம்

முற்றிற்று.

---

ஸ்ரீ:

## விஷ்ணுசித்தர் வைபவம்.

வேறு.

முன்னோ ரந்தணன் முழுமிடி மணந்த செந்தவத்தோன்
றன்ன தின்னவ லயின்ற தற்கவன் றனைத்தனத
னென்ன மின்ன வாங்கிரும் பொருளருளிய விறைவன்
பொன்னி னின்னடி மலர்சிர முடித்தனம் புகன்றே. 1

நாடெ லாமிக நசைகொளும் வழுதி நாடதனிற்
பாட லாம்பல பகடுறுங் கவிஞரோர் நகர
மாட லார்திரு வில்லி புத்தூரென வதனை
மாட லாம்பொழின் மலர்மணங் கமழ்ந்தெழுந் தினமும். 2

வல்லி நுண்ணி டையரம் பையர்வதியு மந்நகரும்
வில்லி புத்தூரின் விழுநிதிக் குடைந்துளம் வெட்கி
வில்லி லின்பிறை வேணிய னளித்த தன்றென்றுற்
சொல்லி யெங்கதன் முடிவுறுஞ் சொலற்கரும் பணியே. 3

ஓங்கு மாமணி மாடமீ தலவறற் குழலார்
பாங்கி னனன மதியிள முறுவலிற் படரும்
பூங்க திர்த்திர ளிலவினிற் புனிதவிண் ணதியார்
தேங்கொ ளின்குமு தம்பல தெளிவுற மலரும். 4

மிக்க கன்மறு கிடையிடை யுலவுமெல் லியலார்
தொக்கி ருங்கடைக் கண்களின் சோதியுந் துவர்வா
யொக்க நீழலு நீலமு மாம்பலு முறழ்ந்து
புக்க தோரண மெனநிரை நிரையுறப் பொலியும். 5

பத்தி நித்திலப் பவனநின் றெழுதரு நிலவி
னத்தி ருப்புய வமரர் கோன் றென்றிரு * நகரைப்
பத்தி ரத்தினும் பணத்தினுஞ் சிறந்தவென் பகட்டிற்
கெத்தி ரத்தைநீ யெனப்பரி கசிப்பதை யிமையும். 6

அங்கு மாலிரும் பசியவா லதனிடைச் சயனித்
தெங்க டெய்வத மெனப்பத மிறைஞ்சிடப் புகுவோர்
தங்க டாபமுன் றகன்றுய ரின்பமே தழைக்கச்
செங்க ணங்கடை விருத்தருள் செய்திடுஞ் சிவக்க. 7

கங்கை யுஞ்சர சுவதியுங் கதிரவன் மகளு
மங்கு வந்துதோய் பவரகங்க ழுவியின் பருந்தப்
பங்க யச்செழுங் காடல ரமுதெனும் பயமார்
பொங்கி ருந்திரு முக்குள மெனப்பெயர் பொலியும். 8

வேறு.

மற்றுமியம் பற்கரிய மாண்பாரத் தொன்னகரில்
கற்றினமு மேய்த்த திருக்கண்ணன் கழலிணையே
பற்றென்று றையுமொரு முன்குடுமிப் பாகவதர்
பெற்றெடுத்த ரத்தினமே பெரியாழ்வா ரென்பவரே. 9

இந்தயுக நாற்பானே ழென்றகுரோ தனவருடத்
தந்தமுறு மானிமதிச் சோதித் திருநாளில்
சந்தமறைக் கலுழன்றன் பங்காமச் சால்பினரும்
வந்துதயஞ் செய்தனரவ் வந்தணர்கால் வழியிலக. 10

சாந்த மொடுதாந் தஞ்சாலுங் கருணையுநூ
லேந்த ரியகல்வி மணிவண்ண னிடத்தன்புந்
தேர்ந்த வர்க்குவிண்டு சித்தரென்னுந் திருநாமம்
பாந்தண் மிசைக்கிடந்த பரமனடியார் பணித்தார். 11

---

[* குறிப்பு:—இந்திரனுக்குத் தென்றிசையில் வசுவோகஸார மென்ற வொரு நகருண்டு.]

பொன்னன் புதல்வன் பூட்கயிறை வீடணனே
டின்னபர னன்பரெல் லோர்க்கு மித்தகையார்
பன்னற் கரியதிருப் பத்தரெனப் பார்த்தவர்கண்
மன்னுமகிழ் வுற்றறைய மாண்பா யொழுகினரால். 12

விண்டு சித்த ரெந்தை வியந்த வடவிருக்கங்
கொண்ட பெருங்கோ யிலற்குக் கொள்ளுந் திருப்பணிகள்
கண்டெடுதனை யான் புரிவேனென்று கருதியவன்
கொண்ட வெழிலீரைந்தவ தரிப்பைக் குறித்துணர்ந்தார். 13

ஒன்பா னவதாரத் தொன்னலன்பூ வாணிபணி
லன்பாய் மலர்த்தெரியற் காங்கெழுந்த தன்மையினே
மின்பாய் முகிலுரத் தாற்கந்த மிகும்பணியே
வன்பா யிழைத்திடுவே னென்றுமனம் வலிந்தே. 14

எல்லை யறிவரிதா யிரும்பெரிய வாராம
மொல்லென் றுடன்வளைத்தாங் கோளியுற வும்பர்களும்
புல்லரிய நாணுப் பூஞ்செடிக டாம்பதித்தே
யல்லும் பகலுமதை யாதரித்துப் போந்தடைவே 15

கிள்ளை மயில்போலுங் கேகயமென் புட் போலும்
வெள்ளை யனம்போலுங் விவிதநிற வேரிமலர்
கள்ளைப் பெருக்கநறுங் காலாய்ந் தெடுத்தழகே
கொள்ளை கொளத்தொடுத்துக் கொவிந்தற்கே யணிவார் 16

ஈதிங் ஙனநிகழ வின்னொன் றியம்புதுமண்
மீதெங் குங்கோல் செலுத்துமின்னு மணி முடியார்
பாதம் பணிந்தொழுகப் பாண்டியர்க ணன்றுளுந
மோதம் மெனவொளிரு மதுரையெனு மோர்நகரம் 17

பத்தி மணி மாட மீதிரவிற் பைந்தொடியா
ரத்தோ ரணநகரி லாங்குலவு வாரிடையி
னத்தங் கரனகர நாயகனு நன்முகமுஞ்
சித்த முணராதே தியங்கிடுமு ரோணியரோ. 18

பூட்டுந் தளையோடும் பொழியுங் கருமுகில்க
ளீட்டங் திரிவதென வெங்குமதி ரப்பிளிறும்
மோட்டின் முகபடத்த மும்மதத்துக் கைம்மலையின்
கூட்ட மசைந்தசைந்து வீதிதொறுங் கூர்ந்துலவும் 19

செங்கேழ் பரிதிமணிச் சேண்குலவு மாடமிசைச்
சிங்கா ரஞ்செய் மணியின் செப்பென் முலைமகளிர்
தங்கா தலர்விழையத் தாமணியுங் கஞ்சனம்போ
லங்கார் பலகணி யிலார்த்தொளிரும் வைகலுமே. 20

பூங்குழ லாரைம்பால் புலர்த்துமகிற் பூம்புகைவிண்
ணோங்கு மணிமாடப் பலகணியி னுள்ளி ருந்து
நீங்கிப் புறம்போகை நீள்சிறையிற் பட்டமுகி
லேங்கிக் களவினிரிந் தேழுவதேய்க் குமரோ 21

பொன்மணியின் றோரணமும் பூஞ்சாமு நித்திலத்தின்
மின்வடமுந் தொங்கவகன் மேலோங்கு காவணமும்
விண்மணியின் கோபுரங்கள் வீறுஞ் சினகரமுந்
தொன்மையுறு மந்நகரி யெங்குந் துவன்றிடுமே 22

வேறு

புந்தியி னளந்து போற்றற் கரிய வப்புரியின் வைகிச்
சிந்துவே முடங்க வையஞ் செவ்விதிற் புரக்கு மாற்றன்
முந்திய சீர்த்தி மும்மை யுலகினுர் முடலை வீரன்
இந்துவின் மரபிற் றோன்று மிருஞ்சுட ரென்ன நின்றான் 23

வல்லப தேவ னென்று வழங்குமோ ரிறைவன் வந்தோர்
சொல்லுமுன் வழங்கு மென்றுஞ் சுவணமோ டளித்த நீரே
யெல்லை யிலொலி யலாகி யிடை யறுதொழு கலாலே
மல்லலங் கடலுந் தோயம் வறத்தலின் மலியு மன்றே. 24

கூடலின் கோமான் கையிற் குலவுவாண் முகிலே யென்று
மாடலே னுகா தாகா ரெனுமன நிவக மந்த
நாடரு மசியைக் கண்டே நடலையி னிரியு மென்று
லாடலா ரவன்முன் போரி லாரெதிர்ந் தடுப்ப ரம்மா 25

அன்னவ னொருநா ளாரு மறிவுரு வேடந் தாங்கி
நன்னகர் நிலையா ராய நள்ளிர வுலவப் போந்த
தொன்னெடு மறுகி லோரில் வேதிகைப் புறத்தே துஞ்சும்
பன்னரு மறைவ லாள னொருவனைப் பரிவிற் கூவி. 26

ஆரையா நீயிவ் வூர்க்குப் புதியையா யடைந்தா யென்ன
வேரையாய் பவத்தின் விண்டு பதிப்புனல் படிந்து மீண்டு

சீரையாய் சனகி கேள்வன் செய்தசே துவின்கண் டோய
வூரையாள் பவனே போவல் வேதிய னொருவன் யானே. 27

என்ன வவ்வேந் தனீயே யெக்கலை யுணர்ந்தா யென்ன
மன்ன வவெவற் றினென்ன மதித்தடை யமுத மானும்
பொன்னெ டுமுலகம் போற்றுஞ் சுஞசீ ரன்றிற மேபோலு
நன்ன யமுளதொன் றீங்கு நவில்வது துணிதி நல்லோய். 28

ஆண்டெலாந் துய்க்க வோரெண் மதியி னின்முயல லாகு
மீண்டிய விரவிற் கேற்ற பகற்பொழு திழைக்க லொல்லு
மூண்டிடு முதுமைக் காய விளமையின் முயல வேண்டு
மாண்டகாய் மறுமைக் கிம்மை யடையவு முழைக்க லாமே. 29

அத்திநுண் மணலின் மிக்க வடுத்த பல்பிறவி தம்முள்
கத்திகைப் புயத்தா யொன்றிற் சிறிது மூன்றரி காண்டற்
கெத்திறத் தவர்க்கு மின்ப மேய்ந்திடு நெறியி னென்றாற்
புத்தியிற் சிறந்து பூப்போ ரொழிவரோ வதனி னென்றான். 30

அந்தண னறைந்த வந்த வரும்பொரு ளறிந்த வாழிச்
செந்தனிக் கரத்துச் செம்மல் சிக்கெனப் பவனம் புக்குத்
தந்தவுய்ந் திடுநா ளெல்லாந் துணந்தன வறிதே யென்று
சிந்தையிற் கலுழ்ந்து செல்வ நம்பியை விளித்துச் செப்பும் 31

என்குலம் படருமின் புரோகித மணிமேய தீம்பா
னன்கருந் திடுதற் காய வெடிப்பி னிற்க விழ்த்த நாடாப்
புன்கரும் பேதை யொப்பப் பொழுதெலாம் வறிதே போக்கி
யின்பரம் பொருளை யாராய் வின்றுசிற் றின்பந் தேக்கி. 32

போந்த நாளுன் மஞானம் பொருந்தியுய்ந் திடுமா றுன்றன்
கூர்ந்த புந்தியி னாராய்ந் துகூறுக வென்ன வந்தச்
சாந்தமா நிதியாங் கல்விச் சாகர னுளத்தி னோர்ந்து
காந்து பன்மணியா ழாரக் காவலற் குரைக்கு மாதோ. 33

கலைக்கடல் கடைந்து வாய்மை யறிவெனு மமிழ்து கண்ட
மலைக்கிணை யெனுமோர் சான்ற பெரியனை மணந்து வேதத்
தலைப்புறும் பொருளைத் தேறித் தணப்பரும் பிறவி நீத்துக்
கொலைக்கருங் கூர்வே லைய கூடுதி யமுத மென்றான். 34

இன்னணஞ் செவியி னேற்ற வெறும்வலித் தடந்தோள் வீரன்
பொன்னினற் கிழியொன் றாங்கே பொள்ளென வுயரத் தூக்கி
யின்னதிங் கெவர்வா தத்தி னிற்றுவீழ்ந் திடினு மந்த
மன்னெடுஞ் சமயத் தேவே மறையுறு பொருள தாமே. 35

ஆகையி னமைச்சர் காணீ ரவனியிற் பரவும் பல்ல
சாகையின் சமயத் தோர்கள் போந்தி வண்டமது கொள்கை
வாகைசேர் வகையின் வாதம் புரிகென வழங்கு கென்ன
வோகையி னுலகெங் கோட வுஞற்றின ரவரு மாங்கே. 36

கண்டது சமணர் சைவர் கபிலர் பவுத்த ரின்ன
மண்டல நிறையு நானா மதத்தின ரளப்பின் மாந்தர்
கொண்டல் கண்படுக்கு மிஞ்சிக் கூடலார் கோமான் வைகுந்
தண்டமிழ் வளருங் கோட்டி தன்னகம் பொதுளி னாரால். 37

நோக்குறு மளவே நெஞ்ச முட்கிட நுவலும் வாதம்
போர்க்கு வந்தவர் களார வாரத்திற் பொருவின் மாயன்
பாக்கியக் கெதுகொ லாமோ வெனப்பரிந் தவன்பொற் பாதம்
வாக்கினாற் பரவுஞ் சீரின் வைணவ ரலமந் தாரால். 38

வடபெருங் கோயி லானவ் வளவி லாழ்வாரின் வண்மைக்
கிடமுறுங் கனவின் கண்ணே யெழுந்து நீ மதுரைக் கேகித்
தடமறைப் பொருள்யா மென்னுந் தத்துவந் துலக்கு கென்னப்
படவர வமர்ந்தோ யென்றப் பண்ணவர் பகர்வர் மாதோ 39

கனித்திரக் கையனாயுன் கழலிணை கருதிக் கல்வி
தினைத்துணை பயில்கி லாது திரிதரு மடியே னெங்ஙன்
மனத்தினு நினைக்கொ ணாத மறையுறு பொருளை யாய்வேன்
சினத்தினி லிலங்கை செற்ற செஞ்சிலைப் புயத்தா யென்ன 40

பச்சையா லிலையின் பாயற் பரமனின் முறுவல் பூத்தே
யிச்சையா யெழுக நீயே நின்னக மிருந்தே யாமும்
மெச்சயா வருமெங் கெங்கு மெய்ப்பொருள் விளக்கு தும்பொன்
வைச்சயாப் புடனே வென்றி மணந்திவண் மீள்க வென்றான், 41

கண்விழித் தெழுந்தே யந்தக் கனவினின் பொருளை முன்னி
விண்வழுத் திருமவ் விண்டு சித்தருஞ் சனகி கேள்வ
னெண்விழுப் பதஞ்சே ராஞ்ச னேயனை யுறழ்ந்து ஞான
மெண்வழக் கிடுதற் கின்றி வீறிடக் கிளர்ந்து மன்னோ. 42

ஆரணம் பழுத்த நாவி னம்புவி யமரர் பல்லோர்
சீரினைப் புகழ்ந்து போற்றிச் சூழ்வரச் சிவிகை யூர்ந்து.
நாரணன் புகழை யன்றி நவின்றிடா மதுரை மூதூர்
காரணிந் துறங்கு மாழை மதிற்புறச் சோலை கண்டார் 43

செல்வ நம்பி யற்குங் காளச் செழுமுகில் விண்டு சித்தன்
வெல்லும் புன்மதங் களென்று கனவின் கண்விளக் கவன்றன்
மல்லடு திணிதோண் மன்னற் குரைத்திது மகிழ மன்னன்
பல்லியந் துவைப்பப் போந்தப் பண்ணவர்க் கருகு புக்கான் 44

புக்கவர் பொருவில் பாதம் பொன்முடி படியக் கண்டம்
மிக்கவ ராசி கொண்டு மேம்படக் கொணர்ந்து பூவி
னெக்கலை வலரும் பம்பு மவைக்களத் தரியி னேந்துந்
தக்கதோ ரிருக்கை யீந்து தனியுறு சிறப்புஞ் செய்தான், 45

கறுத்திடு மனத்த ராகிக் கண்டதங் கிருந்தோ ரெல்லா
மிறுத்திடக் கிழியைத் தத்தஞ் சமய நூலெடுத் துக்கத்தி
வறுத்திடு பயரை வித்தி வண்முளை கிளம்ப நோக்கி
வெறுத்திடு முழவ ரென்ன வெம்பினர் திகைக்கும் வேலை 46

நிருபனும் செல்வ நம்பி நேயனும் விண்டு சித்தர்
மரைமல ரடியைப் போற்றி மறைப்பொருள் மலர்த்து கென்னப்
புரையறு மவனும் வேத பூரணன் புகழை நாடி
வரையறும் பெருள்க ளெல்லா மனத்துறத் தொகுத்தார் மன்னோ

பங்கய னருளின் வன்மீ கம்முனம் பயந்தான் போலுஞ்
சங்கமாம் பாஞ்ச சன்னி யத்தினிற் றுருவன் போலுஞ்
சிங்கமா யெழுந்த தேவன் றிருவருள் கொடுதொல் வேதந்
தங்குவான் பொருள்க ளெல்லாந் தமதகம் பொலியக் கண்டார். 48

கண்டவா முழுதுந் தேற்றுஞ் சூலைந்தகங் கருதிச் சாம்பக்
கொண்டலி னிடித்துப் பெய்யுங் கொள்கை யாய்க் குமுறி யாடி
விண்டுவே யீறி லின்பம் விழைவுற வளிக்குந் தேவென்
றண்டரு மறிந்து தேற வரும்பொரு டெருட்டி வைத்தார். 49

வேறு.

இன்ன வண்ண மவரறு தியிட்டதாத லோடவை யிருந்தவ
ரென்ன வென்ன விதுவென்று விம்மித மதெய்தி நின்றிட விரும்பொனின்
மன்னு சுற்கமு மறுந்து மாதவர் மலர்ப்பதத் தருகு வீழ்முனம்
பொன்ன கர்த்திரு மலர்த் திரண்மழைய வைக்களத் தைநனி போர்த்ததே 50

சருதலர் குழுமி காத்துறங் குகடை நிருப னின்புரோ கிதனுட
னருகிடன் னவரி னடிவணங் கியடி யேம்பிழைத் தவிது வொன்றுமோ
தெரிதலின் றுமய லாழ்ந்துமாழ்கிய மூதேயம் யாவையும் பிழைத்தவே
பரிதல் கொண்டிவ னெழுந்து பண்ணு முனதரு ளினென்று பலபரவியே. 51

பட்ட யானைமிசை வைத்தறப் பரிய பம்பு வார்முர சதிர்ந்தெழ
வட்ட வெண்குடை நிழற்ற மிக்க பரிவார மெங்கணு நெருங்குறக்
கட்டி யம்பல ரெடுத்தி சைக்க விருகை குவித்தெவருங் காண்வர
நட்ட நீள்கொடி யடர்ந்த மாமறு கினகர் வலம்வர நடத்தினான் 52

அந்த வேலைக் கடல்வண் ணனம்புய மலங்குமா மயிலுடனவ
செந்தலைக் கலுழன் மீதிவர்ந் துதிசை முகன்முதல் விபுதர் செறியுற
நந்தகத் தினுட னெறிகனற் பொறியை நால்வகைப் படையுமின்செய
வந்தரத் தினிடை வந்துநின் றருளி யந்தநல் விழவை நோக்கியே. 53

வரையெனும் பிரம ரதமிவர்ந் தொளிரு
மைந்தனைத் தசவசி னீன்றவர்
வரையறும் பரம முதமுடன் விழைவிநோக்
குமாறு மனமகிழ் கையில்
புரையறுந் திருவின் வில்லிபுத் தூரிறை
பூத்த ஞானமொடு வானமே
னிரையின் மின்னுகட வுளரிடைப் பொலியு
நீல மேனியனை நோக்கினார். 54

வேறு.

காலதே யங்களிற் கட்டுணா வொன்றிவண்
வாலிதின் வந்தெனின் னம்பகத் தெதிருறச்
சீலமோ டெத்தவஞ் செய்துளே னெனினுமுன்
னேலுமோ விப்பெரும் பேறியா னெய்தவே. 55

என்றுகந் தடுபனைக் கரமதத் திபமிழிந்
தின்றுநா னுய்ந்தே னென்றிரு நிலம்படி யேவீழ்ந்
தொன்றுபே ருவகையிற் பலதரஞ் சிரமிசை
நன்றுசெங் கரமலர் நலமுறக் குவிகொளா 56

கண்களா விழிதருங் களிபுனற் பெருவெள
மெண்கொளா மயிர்சிலிர்ப் பேய்ந்தமெய் யெங்கணும்
மண்கொளா றென்னவே மறைசெயத் தனைமறந்
துண்களா லளிபடும் பாடுபட் டுருவேவ 57

காதலின் மக்களிற் காரண மின்றியே
தீதெனும் பரிவெனத் தேவதே வன்றனக்
கேதுகொல் தியையுமோ வெனமனச் சங்கையி
னோதினர் மங்களா சாசனத் துலகுய 58

சாலியின் குலைபழு ததிதெலிற் சாயுமா
போலவப் புனிதரும் பொருவறுஞ் செல்வமங்
கேலவந் தெய்தவு மெம்பிரானரு டனிற்
சாலவுந் தாழ்ந்தவன் றனெனத் தாழ்ந்தரோ 59

தாமிவர்ந் தருளுதந் தாவளக் கண்டையை
மாமலர்க் கைகளிற் றளமாய் மன்னியே
சேமமா மங்களஞ் சேருபல் லாண்டெனத்
தாமரைக் கண்ணனுக் காயவண் பாடினர். 60

ஆண்டபூ மாதினவ் வாண்டவன் பொங்கியே
மாண்டதன் குணமலா மலரவங் கருளவே
சேண்டிகழ் வடபெருங் கோயிலான் றிருவரு
ளீண்டிதிவ் வனுபவ மென்றவற் றுடியே 61

செவிமணிக் குழைகளைச் சேருநீள் விழிகளார்
குவிமுலைக் கோவியர் குரவைகொள் கண்ணனின்
கவிகளும் பிறர்களும் போற்றுமின் கதைகளைத்
திவியமா மமிழ்தினிற் றெளிவுறப் பாடியே 62

பாடுபல் லாண்டையே பான்மையிற் கொண்டுமுன்
றேட்டருந் திவ்விய தேசமெங் கணுமொளிர்
ஏடவிழ் துளபமா லேத்தரும் பகடினை
நாடியே பாடினர் நாகரம் போற்றவே 63

வேறு.

பெரியாழ்வார் திருமொழியென் றதற்கரும்பேர் பேசுவார்கள்
வரியாரும் பையரவப் பாயலிற்கண் வளர்பவனுந்
திரியாத ஞானியினைத் திருக்கடைக்கண் விழித்தருளித்
தெரியாதங் கெல்லவர்க்குஞ் சிக்கெனவின் னூடொளித்தான் 64
கந்தடுகிம் புரிகோட்டுக் கரிநிகரக் காவலனு
முயந்தனனுன் னருளினென வும்பர்தொ ழுமாழ்வாரின்
கந்தமலர்ப் பதம் போற்றிக் கைகுவித்து நிற்கவவர்
பந்தமறு பலர்கேட்பப் பார்த்திபனுக் கீதுரைப்பார் 65

நான்காய மாமறையின் றுணிபாய நற்பொருளைத்
தேன் காலத் தெரிப்பதுசெக் திருவை ணவ மொன்றே
வான்காண வழங்கு வன்மேகள் வாய்மைதவ ருவகையே
நான்காண வந்தவிந்த நாரணனூர்க் கார்நிகரே 66

மாயைகடந் தவனும் மன்னுசுத்த சத்துவமே
யாய்குணத் தாதிமத் தியாந்த ரகிதனுமாய்
மாயிருஞா லங்களெல்லா மாண்டவயிற் றுள்ளடக்கித்
தூயமல ருந்தியினின் றயனுரைத் தோற்றுவித்து 67

ஆனையுரித் தோன்றன்னை யவனு னுதிப்பித்துத்
தானையொளி ராழியுடன் றானே புரந்தளித்து
மேனையிரண் டுமவ ரளிக்க வீந்தருளம்
மானே மறைமுடியின் மன்னுமொரு தெய்வமரோ 68

பிரகிருதி கலவாது பிறங்குதிரு வைகுந்தத்
திரவிபல வெனவிலகு மாமணிபின் மண்டபத்தே
விரவிபெழி னித்தியசூ ரித்தொகையின் வீழ்துளப்ப
பரமனருள் பாடுவதே பகரரிய முத்தியென்ப 69

அத்தகைய பேறுறற்கோ வாசிரிய ரின்னருளைப்
பத்திபுரிக் தடைவேபண் ணிடுமு பாயமென்ப
ரித்தகைய் நெறிதணந்தோ ரிறப்புதிப் பினெப்பொழுதும்
மத்தமொடி யாப்புண்டு மறுகிச் சுழன்றலைவார் 70

விட்டவர்க்கும் வாய்ப்பரிய வீடுநினக் குரைத்தேன்
மட்டவிழு மணமாலை மன்னு வெனவருளிச்
சிட்டர்தொழ வானவர்கள் செய்யமலர் தூய்வழுத்தப்
பட்டறுதன் மும்மதங்கால் பகட்டின் மிசையிவர்ந்தார் 71

ஆங்குப் புரவலனு மளப்பரிய சிறப்பளித்துத்
தாங்குசெல்வ நம்பியொடு தான்சிறிது பின்படர்ந்து
பாங்கிற் கடைக்கணிப்பும் பரிவினின்மி னெனுமொழியுந்
தாங்கியரி தின்மீண்டு தடமதிலி னுட்புகுந்தான் 72

வழுதியவை நடுவண் வாய்மையிலை நிறுத்தழகன்
எழுதருமீங் கெனமருங்கில் வந்தியர்க ளேத்தெடுப்பக்
கெழுதகைமை யுடன்வருதல் கேட்டுநக ரெல்லோரும்
முழுதுமம ராவதியின் மூதூர் வனைந்துடனே 73

பொன்னே புரிந்தொளிரும் பூரணகும் பங்களுடன்
மின்னே ரிடைமடவார் மிழற்றிவர மங்களமும்
மென்னுடும் பீலியொடு முக்குடைக்கண் மிக்குமழ
வன்னரைச் சென்றெதிர்ந்தே யந்நகரங் கொண்டணைந்தார் 74

மண்டபமும் வாவிகளும் மன்னுநக ருண்ணுழைந்த
விண்டுசித்தர் கண்டுயிலும் விண்டுநில யம்புகுந்து
தண்டமென வீழ்ந்தெழுந்து தாமரையா ளுபகநின்
பண்டையருள் கொண்டுவயம் படர்ந்தே னெனப்பரவி 75

வாகைபெற மணந்த பொற்கிழியும் வாரணமு
மீகைமலி வல்லபதே வன்கொடுத்த வெப்பொருளுந்
தோகையுறை பங்கன் றன்பொழித்த மாலடியி
லோகையுட னளித்தா ருலகம் புகழ்நலத்தார் 76

மற்றந்த வெம்பெருமான் மகிழ்ந்து கடைக்கணிக்கப்
பெற்றின்று ளவமொடுதீர்த் தப்ரசாத மெல்லாஞ்
சுற்றுமவர் கட்குச்சொல் லிமுறை யின்மொழிகள்
பற்றகலு நன்மனத்தார் பான்மையுறு மில்லைந்தே 77

பூவாணி பன்மனைக்குப் பூவிழைந்து புக்கவற்குத்
தாவாமு தம்விளக்கத் தாமெடுத்த பூத்தொழிலே
மேவாவு றற்கரிய மிக்கவந்த நற்பணியே
யோவாதின் சீவனமென் றன்னி யிழைத்துவந்தார். 78

விஷ்ணுசித்தர் வைபவம்

முற்றிற்று.

---

ஆக சருக்கம் 7 - க்குச் செய்யுள்—337

ஸ்ரீ:

# தொண்டரடிப்பொடியாழ்வார் வைபவம்.

## 8 - வது சருக்கம்

ஃ வ ஹ.

முன்னு ளெய்த்தோ ரருமறையோன்
 முடுகுங் கங்கை யிடைமூழ்கித்
தன்னேர் பொய்கை தனிற்கிளம்பத்
 தார முடனே தயைபுரிந்த
பொன்னீண் முடியி னெதுவரைசேர்
 புகழார் திருநார ணன்மலர்த்தாண்
மன்னே நனவிற் கனவிடையு
 மறவா தாரே பிறவாதார். 1

தெங்குங் கமுகுந் தீங்கழையுந்
 தேன்சோர் கதலி நறும்பலவு
மெங்கும் பொதுளி வளம்பெருகு
 மெழிலார் பொன்னி வளநாட்டிற்
பொங்கும் பவங்க ளினைப்பினும்போம்
 பொன்பாய் நதியின் றண்கரையிற்
றங்கு மண்டங் குடியெனும்பேர்
 தாங்கிப் பொலியு மோர்பதியே. 2

எழுதாக் கேள்வி நான்கினையு
 மிகவா தோதி யனவரதம்
வழுவாச் செந்தீ வளர்ப்பவர்முன்
 வளருங் குடுமிச் செந்தலையார்
தொழுவார்க் கின்பந் தொழவருள்வோர்
 தோலா நூலின் றுணிவுடையோர்
எழுநா ருய மனையுடையா
 ரிருந்தா ராங்கின் வேதியரே. 3

காரார் கலியிற் காசினியோர்
 கருதா ரெம்மை யெனக்கருணை
சேரா நீலத் திருமேனிச்
 செங்கண் மாலத் திருப்பதியிற்

பாரா ணீளை பங்கயத்தா
    ளுடனே நின்று பரமபதந்
தாரா வின்பந் தமையுமவண்
    டந்தே யடைவோர்க் கிலகுலனால். 4

வேலைய் கண்ணா ளயிராணிக்
    கேள்வன் முதலாம் விண்ணவர்க
ளேலா வேள்வி யெப்பொழுது
    மிழைக்கு மறையோ ரழைப்பதினே
மேலா முலகி னடிக்கடியிங்
    கிழிதற் கிதுவே மிகவினிதென்
றுலா ரவ்வூர் தனிலுறைவா
    ரகலா தென்று மரம்பையரின். 5

கலியி லிருநூற் றெண்பத்தொன்
    பதுவென் கழியும் பிரபவத்தின்
மலியு மொன்ப தாமதியிற்
    கேட்டை நாளின் மாதவனார்
விலையில் வனமா லையின்பெருமை
    விரவுந் தொண்ட ரடிப்பொடியார்
நலிவி லவ்வூ ரொருமறையோர்
    மகவாய்த் தோன்றி நனிசெழித்தார். 6

நன்கே நாடு மங்கலத்தார்
    நணுகுங் காலைத் திருக்கருவிற்
பொன்கேழ் வதனப் பூவமரும்
    புள்ளே யென்னும் விழியிணையி
னென்கே சவனென் றிருவரங்க
    னிதயங் கூர்ந்து கடைக்கணிக்க
வின்கேள் விகளே முதலாய
    வெல்லா வுணர்வு மேய்ந்தனரே. 7

எனினு முலகிற் கியையவிளம்
    பருவத் தெழிலோ ராசிரியன்
கனிவி னருளிற் கலைகடலின்
    கரைகண் டில்வாழ் காதலகன்
றனையாள் கண்ணற் குறுபணியே
    யிழைக்க விரும்பி யெழுமதில்சூழ்

பனைசேர் கைம்மா படர்வீதித்
திருவ ரங்கம் படர்ந்தனரால். 8

படர்ந்தங் கரங்கன் கிங்கரர்கள்
பலரு மிவர்பண் புறையுளெனத்
தொடர்ந்து வழுத்த வறக்குரிய
தூய வையத் துணைவினராய்க்
கடந்தாழ் கரியைப் புரந்தவற்குக்
கமழ்தே மாலைத் திருப்பணியே
நடந்தா னலமென் றதுபுரியத்
துணிந்தே தலமு தாடியரோ. 9

பூவை முந்த மெனுமதற்குப்
புகலு மேல்பாற் பொன்னியலை
தாவுந் தடமோர் முடிக்குறையென்
றறையு மதனிற் றழையுமலர்க்
காவொன் றமைத்து வழைவகுளங்
காந்தள் குரவங் கமழ்துளவஞ்
சிவந்தியுமே முதலாய
சேருந் தருக்கள் பலநிரைத்தார். 10

இருமூன் றிருது வினுங்கமழு
மெழிலா ரலரோ மலரந்தத்
திருநந் தனத்தே தினங்கொய்த
தேமா மலரின் பூந்தொடையே
யருநா கணையான் றிருவரங்க
னங்க மெங்கு மாழ்வாரின்
பரிவோ டணிகு வதினன்றே
பகர்வர் தாமோ தரனென்றே. 11

புலனை வென்றே ரனைவருமிப்
பொருவில் விப்ர நாரணரே
விலையின் மணியா மெனமகிழ
விளங்குங் காலை யொருபகலின்
மலர்சே ரணங்கு மாயவரின்
மதிசே ரெழில்சேர் முகநோக்கி
நலனே விஞ்சு திருப்பவளந்
திறந்தே குயிலி னவில்குற்றாள். 12

கூடா தனையுங் கூட்டுமிணை கூடாக் கொற்ற முனக்குளதென்
ருடா நிற்றி யாண்பாலா யரம்பை யெதிர்நின் ருடுகினு
நாடி நின்ற விவர்பாலுன் னலியும் பகுதி புரிகுவதென்
காடாள் வித்தே யைவரையுங் காத்த கரியோ வெனநகைத்தாள். 13

கனகற் கொருதூண் போழ்ந்தெழுந்தோ னிலவே காலும்புன்முறுவ
லினிதிற் புரிந்தென் னிளமயிலே யிவரிற் பெரியோர் காமுகரி
லவனிக் கண்ணே யொருவருமின் றெனவே யாரு மறைதரயாம்
மனதிற் களிக்க நீயின்னே மாடுந் திறலைக் காண்டியென. 14

அருளி யாங்கே பொன்னுலகில் வதியு மரம்பை யாயமதின்
மருளு முனிவ ரெனும்வனப்பே மணந்தா டேவ தேவியென்பாள்
சுருளுங் கரிய குழற்சகியர் சூழக் கரம்ப னூரிடையே
யுருளுந் தேரார் மறுகினொரு மனையின் வதிய வுரைசெய்தான். 15

பையா ரரவ பாமபணயான் பணித்த பணிதன் றலைசுமந்து
செய்பா ரரிதோய் சேல்விழியச் சேண்பா லணங்கு விண்ணிழிந்து
மெய்யார் முலையும் பொய்யிடையு மேவு மாயம் புடைசூழச்
செய்யார் தீங்கை யவரணையச் செறிந்தா ளவ்வூ ருறைந்தாளே. 16

உறையுங் காலை யொருபோழ்தவ் வொளிகால் கபோலப் பளிங்குடையாள்
உறையூ ரிறையி னுழையேகிமீளு மமையத்துயிர்க்குறுக
ணிறையும் புரியா விப்பிரநா ராய ணன்ற னிரும்பொழிலில்
குறைய வழிபோ மினைப்பொருதண் குருந்தி னடியி னேதக்கினரால் 17

நன்றற கரிய வுடன்பிறந்தா ணிலவுந் திங்கண் முகநோக்கிக்
குன்ற நாணுங் குவிமுலையாய் தனதன் வனமுங் குறைந்துடையு
மன்றன் மலரே மலிதருமிம் மறைபோ னறையே பொழிபொழிலி
னென்ற னிதயம் பொங்குமித னெழினன் கடைவே காணுகவே.

அளியின் பாட னல்லுசவு மலரு மலரா மருக்கியமு
மிளியுஞ் சுவையின் மகரந்த மெனுமேற் றரிய பாத்தியமுந்
தளிரா நவபீ தாம்பரமே தாங்கு வனமான் கொண்டுநமக்
கொளிசேர் தருக்க ணிரையினிழைத் திடுமே யுபரா இத்தியங்காண்.

தனுவு நாணு முராணுழந்து தளருங் கணையுந் தடந்தேருந்
துணைவிற் பசிய பாய்மாவுந் துனிசெய் கரிய காகளமு
மினுமா மிவையே முதற்பலவா மிகலுக் குரிய வெப்பொருளு
நனியீங் கீண்டிக் கிடப்பதினே யனங்க வீர னனிசீறும். 20

துவளும் வல்லித் துணைப்புயமுந் தளிரே சேந்த துவர்வாயு
நவமா மலரி னின்னகையும் பராக மென்னு நளிர்சாந்துங்
கவலுந் தணந்தோர் களகண்டத் திசையின் முகம னும்படைத்து
மிவருங் காத லிவ்வனமான் செறிவோர்க் கின்ப மிழைப்பதுபார். 21

குரவந் தளவங் குருவழைமர் கோடல் படர்மா தவிநீல
மரவிந் தங்கை ரவமுதலா மளவி னான்கு வகைமலரிற்
பெருகு மதுவிற் படிந்துதவழ் பிள்ளைத் தென்ற லிவணடைவோர்
வருகவருகென் றணவின்மகிழ்ந் தெதிர்கொள் வகையே மானுமரோ.

வில்லார் குழையைக் கிழித்தகன்ற வேலேய் விழியா யிப்பெரிய
செல்லார் பாத பஞ்செறிந்து சினையே தழையுஞ் செழும்பொழிலே
ரெல்லா நோக்கி யென்றிதயந் தணிந்த தினியா மேகுதுமென்
றல்லார் கரிய குழலுரைக்க வவளு முறுவல் பூத்தறைவாள். 23

முனியு மருளு முகிழ்முலையாய் முராரி யரங்கன் வேட்டமிழைத்
தனையா முலகுக் கலரவளோ டணைபா விங்ஙு னயர்வுயிர்க்கின்
இனையா,வீந்த வழிநடப்பி னெமதா மயர்விங் ககல்வதுமோர்
வினையோ வென்றிவ் வணமொழிந்தே விபின மடைய நோக்கினரால்.

வேறு.

அவ்வா றவர்வன மெங்கணு மாடிப் படர்தரவங்
கொவ்வா நலத்துயர் விப்பிர நாரா யணரொருபால்
வெவ்வா றறுபகை வென்றவர் விழைவோ டாலவாலத்
தெவ்வா யடங்கலுங் கொத்துபு வீர்பைம் புனல்விடுத்தார். 25

ஆரோ விவருட லெங்கணு மடர்வுற் றெழுமயிரே
நேரா யவர்முக மீசையி னிலங்கண் டிடுந்தாடி
சீரார் மரைமணி சேர்திருத் துளவத் தொடுதிகழு
மேரார் வடமகன் மார்பக மெங்கும் பிளந்திலகும். 26

அங்கங் களினீ ராறெனுந் திருமட் குறியவிருந்
திங்கட் கதிரென வேயிரு தந்தங் களுந்திகழு
மிங்கிச் செழுவன பாலக ரிவரே யெனமதியா
வங்கப் புரிகுழ லாரிரு வோரும் மருகணைந்தார். 27

அணைந்தே சுகமென வாய்திறந் தவர்பா லுரையாடப்
பணந்தா ழரவல் குற்சிறு பைந்தோ கையுமவர்மற்

றிணங்கா தவளுட னாடுதற் கிருந்தார் வெறுமனைபம்
மணந்தாழ் குழன்மட வாண்முறு வல்பூந் தனள்புகல்வாள். 28

என்னே யிதுமுன் னாபடி யிருகால் பெறுவிலங்கோ
கொன்னே பிறந்துழ லின்சுகங் கூடா தவேவாரலியோ
மன்னே யானே யெதிர்வந் தெழின்மாற்றந் தருபொழுது
மென்னேர் முகந்தனை நோக்குத லின்றும் மெவருறைவார் 29

என்றே சியமொழி முன்மயில் செவியேன் றிடவெம்பி
நன்றே யுறைசெய் தாயிவர் நளினா பதிபதமே
யன்றே யுயும்வழி யென்றவன் பணியே விழைந்தயல்வே
றென்றே தெனினுந் தந்திரு வுளத்தே யகன்றுறைவார். 30

உனதா ரெழிலுடன் மாமையு முயர்சா யலுமயில்போல்
வனமான் விதிகொடி யாவரு மருளப் புரிசெயலுந்
தனமே தவத்திவர் பாலெது மாடுங் கிளர்தங்காய்
நினையா தொருதீங் கிங்ஙன மகல்வா யனநிகர்வாய். 31

என்னா வியம்பிட வன்னவ ளென்மா விறலறியாய்
சின்னா ளிலிப்புலன் வென்றவர் சிக்கும் வகைமயலிற்
பண்ணா விடிலுன தாளடி யாளாம் வகைபடிவேன்
சொன்னே னிதுதிண் ணம்மென நனிசீ றினள்சொன்னாள். 32

கேட்டே முனமுதி தந்தவன் கிளிமா லுறுமொழியாய்
விட்டே னுனைவீ டேகுவ னெனவிண் டுறுசேடிக்
கூட்டங் கொடுசென் றுளிவ ளுளமா வலிகொடுதம்
மீட்டந் தணந்த வணைதனி யுடனே யிருந்திப்பால் 33

வெயிலே யெறிபணி யாவையும் விண்டாள் விலையறியா
மயலே புரிமல ரேபயில் பட்டா டையும்விட்டாள்
புயலேய் குழற்பூ வுங்களைந் துடைகந் தையினுடுத்தாள்
செயலே தறியாள் போலவர் நயனக் கெதிர்சென்றாள். 34

சென்றன் னவர்பா தந்தன் செங்கை குவித்திறைஞ்சிக்
குன்றன் னவின்குணத் தோயடி யாளிந் நகர்குடிகொள்
ளொன்றின் மனவிலை மாதனை யுறவா டியேபலர்பாற்
சென்றாண் பொருமெகுத் தீயென வென்றே நனிசீறும். 35

பண்டே கொடுவினை யுண்டதிற் பரத்தைப் பிறப்பெடுத்தே
னொண்டேன் மனமொல் லாவினை யுஞற்றா வுடல்வளர்ப்பான்
றொண்டே நினதிழைப் பேன்பழ வினையின் பிணிதொலைப்பான்
கொண்டே யருள்புரப் பாயென வழுதா ணனிதொழுதார். 36

நெஞ்சந் தனில்வஞ் சந்தனை யொருபோ தினுநினையாச்
செஞ்சொன் முனிவர ரன்னவள் செப்பும் படியுளதென்
றஞ்சன் மனமென வெண்ணுபு வபயம் மருள்செய்யா
நஞ்செந் தொழினீ யுங்கொடு புரிவா யெனநவின்றார். 37

அன்றே முதலவர் சொல்வண மடர்பூஞ் செடியோங்க
நன்றே பனிநீர் பெய்வது முதலே வையுநவிலா
முன்றேர்ந் தடைவொடு செய்தன ளொழுகத் திருமுனியுஞ்
சென்றேந் துபுவரு பிச்சையின் சேடந் தனையருள்வார் 38

மணியாழ் பலபணி யாடையு மலர்மா லையுமொருவி
யணையார் வெருவர மின்னுறை யகறுங் கிளர்வாள்போல்
கணைமா ரணினென நின்றவள் காலங் கருதியுமவ்
வணநாள் பலகழியும் வகைபணி யாற்றுபு வந்தாள். 39

மற்றோர் தினமயி லன்னவண் மணிநீர் கொடுதகும்பின்
சிற்றே ரிடையிடு கச்செடி யடியிற் பெயுஞ்செவ்வி
புற்றே லரவணை யான்றிரு வுருவே நிகர்புயல்வான்
முற்றே றுபுவெறி காலொடு மூண்டே பொழிந்தன்றே. 40

அவ்வே லையிலாழ் வார்சிறு குடிலுட் புகுந்தவளைச்
செவ்வாய் மடமயி லேயிவண் செறிகென் றினிதிசைப்ப
வெவ்வா ளுடலெங் கும்மழை விழுநீ ரினிணையா
வொவ்வா மணியென வேநனி யொளிரச் செறிகுற்றார். 41

கந்தைத் துணிநனை யத்திகழ் காயங் குளிர்விஞ்சி
நொந்தத் தருணத் தேநடு நடுங்கும் படர்நோக்கி
யிந்தத் துகிலணி கென்றவர் மேலுள் ளதொன்றீந்தா
ரந்தக் கலையெதிர் கொண்டவ ளரையிற் செலவுடுத்தாள். 42

அக்கா லரவணை யானருள் சங்கற் பமுமனைய
வெக்கா லினுமிழி யாவவ ரிதயம் மவளெழிலின்
புக்கா வருகுரு குங்கன னவநீ தமேபோலும்
மிக்கா வலினு ருகத்தனி மீளா மயல்கொண்டார். 43

அதுகண் டலரம் போன்விடு கணையும் மவள்வதன
விதுநின் றெறிவிழி வேல்களு மீதயங் தனுட்புதையப்
பதுமம் பொருகரங் கொண்டவள் பைம்பொன் னுடறழுவாப்
புதுமென் மணநறுந் தேறலின் போகந் தனியுண்டார். 44

வேறு.

பின்னரப் பிணைய னாளும் பெய்கல னணிந்து திங்கண்
மென்னறுங் கலையே மானும் பூந்துகி லுடுத்து மின்ன
வன்னவ ரவண்மே லாசை நாடொறும் வளர வந்தப்
பொன்னவிர் திதலை பூத்த முலைவிலை மகளி னோடும். 45

காவத மணக்கும் பூவே கஞலிய சினையின் கீழும்
பாவளி பருகுந் தேன்சோ லலர்கொடிப் பந்த ருள்ளுந்
தேவரும் விழையு மின்னுந் திருத்தகு பொழிலி னூடே
மேவிய தலங்க டோறு மேவருஞ் சுகங்க டுய்த்தார். 46

கழிந்தபின் சிலநா ளாங்கே கதிர்மணி வடங்க டோய்ந்து
விழுந்திடாக் கொங்கை மங்கை விப்ரநா ரணரைக் கொண்டு
கொழுந்துக டருவின் மூடுங் குடிமிசேர் தனது மாடக்
கெழுந்தன டமக்கைக் கெல்லா மியம்பினள் களிப்பின் மாதோ. 47

தன்னமு மகல்வி லாது தங்கையி னமைசேர் தோண்மேன்
மன்னிய புயத்தி னோடு மணந்துறு மவரைக் கண்டு
கொன்னவின் முனைவேற கண்ணாப் கோதறு மிவரை யென்னை
யென்னையீங் கிழைத்தா யந்தோ வென்றன ளவளு மாங்கே. 48

நங்குலக் குரிய வீறு நகைமதி முகத்தா யோரா
திங்கிது புகல்வ தென்னே வென்பழி யகல முன்ன
மங்குநா னிழைத்த வொட்ட மமைவுற முடித்து விட்டேன்
பங்கமா ரடிமை விண்டே னென்றிவள் பகர்ந்து போனாள். 49

தவ்வையுந் தோழி மாருந் தன்றிறம் புகழ்ந்து பேசத்
திவ்விய மாத ராளத் தெய்வவான் முனியைத் தூர்த்த
ரெவ்வெவர் களுமி வர்க்கீ டின்றென விழைத்தே யின்பந்
துவ்வநன் களித்தெப் போழ்துந் துனியற வொழுகி னாளால். 50

அவருமுன் கலைக்கோட் டையன விரிழை மகளி ராலே
தவமிழந் தவர்பின் போன தன்மையாய்த் தேவ தேவி
குவிமுலைக் கோட்டில் வீழ்ந்து குளிர்புன லாங்கற் காற்று
நவையறு மலரின் றேண்டு நயந்திலர் மறந்தா ரன்றே. 51

காந்தண் மெல்விர லினந்தக் காரிகை கரிய மாலி
னேந்திய வாளை வண்ண மிழைத்தன மினிநா மிந்தச்
சாந்தமா நிதிக்கு நம்பாற் சலிப்புறப் புரிது மென்று
தேர்ந்தன ளொருநா ளந்தத் திருமுனி வதன நோக்கா. 52

என்னகா ணந்த ஞானி யிறையுநா ணிலியா யிங்குப்
பொன்னொரு தினையுந் தாரா தின்பமே புசிக்க நின்று
மென்னிரு குலத்தோ ரெல்லா மேசுவா ரிதனைக் காணி
னின்னிலென் னருகு றாதே நீயினி யொதுங்கி யென்றாள். 53

மற்றுமிப் புறத்தே சென்று கடுத்திட வவரு மாழ்கிப்
பற்றுறு தலைந்து வாடும் படர்கொடி யெனவே காம
முற்றதஞ் சிந்தை யேங்கி யவள்கடைத் தலைவா யொன்றி
யற்றவ ரிரப்பக் காக்கு மவ்வணங் கிடந்தா ரன்றே. 54

ஈங்கிவ ரிருப்ப வேழோங் கெயிலகத் தரவின் பாயற்
பாங்கரார் நாய்ச்சி மாரும் பங்கயத் தணங்கும் புல்லி
நீங்கரு மின்பந் துய்க்கு மேல்வையி லரங்க னேயந்
தாங்குவோ னடியார்க் காங்கு நகைத்தனன் றனியின் மாதோ. 55

கண்டது கமலை யென்னோ காரண நிகழா தீங்குக்
கொண்டது முறுவ லென்னக் கோமுனி நிலையைக் கூறப்
பண்டைய துணர்ந்து லோகம் பயந்தவண் மற்றும் வெம்பி
யண்டர்க ளதிபா வந்தோ யருள்கினி யவர்பா லென்றாள். 56

நன்றென நளினை நாயக னன்றிர விடையில் வேதந்
துன்றுமோர் மறையோ னாகித் துலங்குமோ ரிரணியத்தின்
தன்றிரு வள்ளந் தன்னைக் கரங்கொடு படர்ந்தத் தையன்
மென்றளிர்க் கரத்தி லீந்து மிழற்றுவல் கேட்டி நங்காய். 57

விரும்பிய நினது போகம் விப்பிர நார ணன்ற
னரும்பெருந் தூதாய் வந்தே னவனிதை நினக்குத் தந்தான்
கரும்புமென் கைக்குஞ் சொல்லாய் கழறிடு மெனது நாம
மிரும்புவி யடங்க லீவன்றே யழகிய மணவா ளன்காண். 58

என்கையி லவ்வளா னந்த மெனுஞ்சல நிதியி லாடித்
தன்கையி லதனை யேன்று கொண்டவர் தமையிங் கின்னே
மின்கலுழ் மேனி யாய்நீ கொணர்கென வரங்கன் மீண்டு
மன்புட னவர்பாற் சென்றா னவர்முன் றூத னானான். 59

அந்தண ரரசே நின்னை யணிகிளர் தேவ தேவி
வந்துதன் சயனம் வைக விரைந்தின்னே வழங்கு கென்று
ளிந்தநன் னிமிடந் தன்னி லெழுகென விதயம் பொங்கி
முந்துசென் முகுந்தன் பின்னே முடுகுபு நடந்து போனார். 60

போயவ ளொளிசேர் பொன்னின் வாயிலிற் புகுந்த மாயன்
மாயமாய் மறைந்து தன்மின் மணிமுடி நிலயஞ் சார்ந்தான்
றாயவ ரகத்துட் போகத் தோகையு மவரின் மார்பஞ்
சேயதன் கரங்க ளாலே தழுவின ளணையிற் சேர்ந்தாள். 61

ஈங்கிது நிகழ வோங்கு மெம்பிரான் சினக ரத்து
ளாங்கருச் சகனே யாதி யடியர்வை கறையிற் சென்று
பாங்குற விழைக்கும் பூசைப் பாத்திர மடைய நோக்கி
யேங்கின ரொருபொன் வட்டி லிலையெனக் குழம்பு மேல்வை. 62

வேசியி னகத்து வேலைக் காரியோர் விரகின் மிக்கா
ளாசையங் கிண்ண மொன்றோ ரந்தணன் றேவ தேவிக்
காசையாய் நெருந லீந்தா னென்றன ளவரு மாங்கே
மாசறு முறையூர் வாழும் வளவன்கண் வழங்கிக் கொண்டார். 63

புரையறப் புரக்கும் பூமி பாலனப் புழுகு நாறும்
விரைமலர்க் குழலி னாளைக் கூயதை வினவ வன்னா
டரையுறு விபுதன் விப்ர நாரணன் றந்தா னென்று
ளரைசனு முடனே யாழ்வார் தமைவிளித் துரப்பி மன்னோ. 64

வாய்மையை வழங்கு கென்று மருட்டிட வவரு மந்தோ
பாய்மதப் பகட்டி னாயோர் பாவமு மறியே னென்னத்
தூய்மைசே ரொருவன் றூதன் றந்தன னிவர்க்கா யென்றச்
சேய்மணிக் குழையாள் செப்ப வவரகஞ் சிதைந்து மற்றும். 65

தூதனு மெனக்கிங் கின்று தோன்றலே யவனி யென்று
நீதியிற் புரப்பா யென்ன நிருபனு மமைச்சர் காணீ
ரீதுநன் காராய்ந் துண்மை யுணர்ந்துகற் பவர்கட் கேற்ப
வோதிய முறைமைத் தண்ட முஞற்றுகென் றுரைத்து விட்டான்.

அமைச்சரு மவரை மூன்று விதத்தினா லாண்டு பின்னர்க்
கமைக்கொரு நிதியன் னாரே கள்ளரென் றுணர்ந்து தேறி
யமைக்குயர் புயத்தி னாளை மனைக்கெழ வனுப்பி யன்னோர் [னோ.
தமைச்சிறை யடைத்துத் தண்டம் விதித்திடத் துணிந்தார் மன்

மற்றந்த நிசியிற் றன்னின் மலர்ப்பத மடைந்தோர் துன்பஞ்
சற்றுங்கண் டிருக்க கில்லாச் சலசலோ சனனு மன்னன்
பற்றுஞ்செங் கனவி னூனே பண்புறு மவர்க்கா யந்தப்
பொற்றங்கக் கிண்ணந் தேவ தேவிபாற் புகுந்து தந்தேன். 68

நானர வணையின் மேய நளினநா யகனி யன்னோர்
பானலிங் கிடுவ தொன்றும் பார்த்திப விழையே லென்று
தானருள் புரிந்து தாழான் கரந்ததுந் தரணி பாலன்
வானமர் துயிலு ணர்ந்து மற்றது நினைந்து பொங்கி. 69

புலரியி லவைக்கண் போந்தெல் லரியணை பொலிந்து சூழும்
பலகலை யுணர்ந்த தேர்ச்சித் துணைவரே முதல் பல்லோர்க்
கலர்மகள் கொழுநன் சொப்ப னத்தெழுந் தறைந்த வெல்லாஞ்
செலமகிழ்ந் தறைந்தான் கேட்டோர் செப்பரு மிறும்பூதுற்றார். 70

பொள்ளென வழைத்தப் பாக வதரிரு புனித பாதந்
தெள்ளரி மகுடந் தீண்டப் பணிந்தெழுந் தடியேந் தேறு
துள்ளதை யிழைத்த வெல்லா முளங்கொளா தருள்க வென்றுங்
கெள்ளலி லுபசா ரங்கள் பலவிழைத் திறைவன் விட்டான். 71

பின்பவர் தெருண்டந் தோவென் பெரும்பிழை யிழைத்தேன் கண்
பொன்பயி லடியி லென்றன் புன்றொழிற் கவன்றா தாமோ [ணன்
நன்றென நடுங்கி நாணி நொந்தக நரக மானு
மன்பறு வனிதை மையற் படுகுழி யழுந்தி னேனே. 72

எனப்பல ரறிய வாய்விண் டிரங்கியம் மயலின் வேரை
நினைப்பெனுங் கனித்தி ரத்திற் களைந்தவ ணிருந்து நீங்கித்
தனக்கெதி ரரிய பேரூர் தடம்பொழி லரங்க நண்ணி
நினைப்பருஞ் சுருதி யாதி நீதிநூற் பலவுந் தேர்ந்தார். 73

தேர்ந்துழுக் கமன மாற்றுந் தீவினை யகலு மாறே
ரார்ந்த பாகவதர் பாத தீர்த்தமே யருந்திப் பன்னாள்
கூர்ந்திடுந் தொண்டர் பாத தூளியென் றுலகங் கூறும்
சேர்ந்தன ரொருபேர் மற்றுஞ் சிறந்தனர் முன்னு மாதோ. 74

மறைமுடி யுணர்ந்தோ ரெல்லா மனமிக மகிழ்ந்து போற்றப்
பிறைமுடிப் பெருமான் றாதை பிறந்தபூ வுந்தி மாலி
னறைவன மாலை யஞ்ச மாகையி னனந்த ஞானக்
குறையுளா யெவையு மங்கை நெல்லியங் கனிபோலுற்றார். 75

திருப்பள்ளி யெழுச்சி யென்றுந் திருமாலை யென்று மெங்குந்
திருப்பெயர் புசன்று போற்றுந் திவ்விய பிரபந் தங்க
ளுரைப்பரு மறையின் சார மொன்றியும் பர்களும் பாடக்
கருப்பிணி னிரத மூறக் கழறி னருலக முய்ய. 76

பண்டுசௌ னகனின் பாங்கர்ச் சதானீ கமுனியும் பைங்கேழ்க்
கொண்டல் போல்வண் ணனும மடையவுங் கூறக் கேட்டான்
றொண்டர் தாட்பொடி யாரின்று தோமற வருளு நூலிற்
கண்டுதன் பெயர்கண் முற்றுங் களித்தனன் கமலக் கண்ணன். 77

வேறு.

அருச்சைகளி லரங்க முடையானே பரம்பொருளா
யருச்சனை யடைந்தொளிரு மென்று துணிந்தவன்பா
லுருக்கிளரு முத்தமிதன் கொண்கனுழை யொழுகுந்
திருக்கிளரும் பக்தியோடத் தெள்ளிய ருறைந்தார். 78

அரங்கனடி யாரடி படிந்தமுடி யன்னோர்
வரங்கொளய னுதியர் வணங்கடிய ராகிக்
குரங்கினி னிலங்கைமுன் கொளுத்திய வவற்காங்
கிரங்களி மலர்ப்பணி யிழைத்தனர் மகிழ்ந்தார். 76

பின்னவர் விரத்தியையும் பேரரு ளரங்கன்
முன்னமெழி லைவர்களின் மூடனிடந் தூதாய்
மன்னவர் வணங்க வெழுந்தரு ளியது மான
வென்னுழை யெழுந்தனனே யென்பதையு மெண்ணி 80

கானமயின் மானுமெழி லக்கணிகை காதல்
தானுமொரு விக்கனக வள்ளமொடு தன்கண்
மானமுற வுள்ளபொரு ளுங்கொடு நடந்தே
வானவர் வணங்குதிரு வரங்கனடி வைத்தே 81

ஆரணமு ஞானியரு மயனரனு மாதி
யேரணவு வானவரு மின்னதென வோராச்
சீரண வுமையவருள் செய்கவென வாழ்த்தி
நாரண னருள்கொடு நடந்தனன் மனைக்கே.

## * தொண்டரடிப்பொடியாழ்வார் வைபவம்.

முற்றிற்று.

ஆகச் சருக்கம் 8 - க்குச் செய்யுள்—419

* குறிப்பு — இவரது வைபவம் ஆண்டாள் வைபவத்திற்கு அடுத்ததாக 14-வது சருக்கத்தில் வெளியிடுதல் வேண்டும். 8-வது சருக்கத்தில் வெளியிட்டது தவறுதல். மஹான்கள் க்ஷமித்தருளும்படி வேண்டுகிறேன்.

ஸ்ரீ

# ஆண்டாள் வைபவம்

## 8.- வது சருக்கம்

### வேறு.

வேதம் பயின்று மவையின் றெழுந்த
விரிநூல் பயின்று மிலகக்
கீதம் பயின்று மஃதன் றளித்த
குருவின் கிளர்ந்த வடியிற்
பேதம் பயின்று பிறவிக் குளாவ
ரெதிரிற் பிறங்கு கனிமே
லேதம் பயின்று படுகா யருந்து
மிவருக் கிணைந்த நரரே. 1

முன்னே மொழிந்த திருவில் லிபுத்தூ
ருறைவிண் டுசித்த முனிவன்
பொன்னு டடர்ந்த தருசேர் பொதும்ப
ரெனவோங் ககன்ற பொழிலுட்
டென்னு தெனுவெ னளிபா டுகுல்லை
வனமூடு சென்றோர் தினமே
தன்னேர் கனித்தி ரங்கொண்டு கொத்தி
நன்னீர் சொரிந்த தரைமேல். 2

போரால வால மதனிற் றழைந்து
பெருகுந் துழாயி னடியி
லேராரு மின்னி னுனியொன்று விண்ணி
னின்றங்கு வீழ்ந்த தெனலா
யோராலி லைக்க ணௌிரும் பரன்ற
னுரமின்னு கின்ற திருவின்
சீராரிளங்கு ழவியொன் றிலங்கு
செயல்கண்டு நின்று திகையா. 3

முன்பா ரளித்த சனகன் பொனேரி
னுழுசீரை தன்னின் முளையா
மின்பாவை யென்ன விவளிந்த மேதி
னியினின் றெழுந்தி லகுமென்

றன்பா யணைந்து தன்பொற் கரங்க
ளவைகொண் டெடுத்து மகிழ்போழ்
தின்பாக விண்டு சித்தற் கிசைத்த
தசரீரி யிந்த விதமே. 4

திருவில்லி புத்தூ ரிறையே முராரி
திகழைன மாக முனமிவ்
விரிபா ரணங்கு கொடுவந்த வேலை
யவளைய நிற்கு விழைவா
யொருநன் கிழைக்க வடியா ளெனக்கு
நின்னுள் ளுவந்த தருள்கென்
றிருகை குவிக்க வரியுங் களித்தெ
னெழிலம்பு விப்பெ ணிதுகேள். 5

நிறைவுற்ற வெற்கு விழைவென் பதொன்று
நிகழ்கின்ற தில்லை யெனினுங்
கறையற்ற வென்ற னடியார் களிக்க
வவர்செய் யுயர்ந்த பணியுள்
ளறைதற் கடங்க லறுமென் குணங்க
ளவைநன்கு போற்று கையுமின்
னறையுற்ற வாச மலரொன்று மாலை
நனி கொண்டு சாத்து கையுமே. 6

என்னெஞ் சுவக்கு முயர்தொண் டிவற்றை
யிதமுற் றிழைக்கு மவர்கண்
மன்னுஞ் சிறப்பு மகிழக் கொடுப்ப
லவைநீ நசைந்து புரிவாய்
கொன்னஞ் செனக்கு லவுமஞ் சனத்தி
னயிலின் குணத்த விழியாய்
பொன்னுஞ் சுரக்கு மவனென் றறைந்து
புக்கா னுயர்ந்த லவுகே. 7

அன்றே தொடங்கி யவதா ரமாக
வவனிப் பெணுரு மருக
ரின்றே யிருந்து மிவணீ யியைந்த
தகுமப் பனென்று குறியா
நன்றே யுமுன்ற ளளிபின் பொழிற்க
ணுதயம் புரிந்த விவளை
நின்றே டருங்கு ழலியென்று காவ
னீசெய்க வென்ற தினிதே. 8

வேறு

விண்வாணியி னுரைதன்செவி விழவில்லிபுத் தூரான்
பெண்சானகி யின்முன்சன கனுமம்புயம் பிறங்குங்
கண்வேலெனுந் திருவிற்கல சாம்போதியு மன்றே
கொண்மாபுகழ் கொண்டேனென வுரையாவுளங் களியா. 9

திருவாடியி னொருபூரநா டிகழப்பிறந் தவளை
யிருமாமலர்க் கரங்கொண்டுத னெழின்மார்புற வணையாத்
திருமாளிகை யணைந்தேதிரு சேரும்மனைய வள்கைக்
கருமாமணி யிதுகொள்கென வருளாவிஃ தறைவார். 10

பண்டேபுரி தவமுண்டதி னந்தம்பட்டர் பொழிலுட்
கண்டேனிவள் கருமாமுகிற் கருணைகொடு திருவே
தண்டேன் றுளிதுளவத் தடிதனில் யோனிசை யலளாய்
விண்டேமல ரெழுந்தாளினி விழைவிற்புரந் திடுவாய். 11

எனவப்பதி விரதாமணி யெனுமில்லவள் பொங்கி
யுனதித்திரு மனையம்புய மலரோவென வுரையாத்
தனதொத்தக கிலம்விம்முபு பெருகும் பயந்தந்தே
மனதிற்கியை வண்ணம்வளர் கரநன்கு வளர்த்தாள். 12

ஊர்தோறுறை யனைவோர்களு மிதுதஞ்செவி யுற்றே
பேர்போகிய வாழ்வாரகம் பெட்பிற்படர்ந் தனையா
வேர்தான்குடி கொள்ளுங்குழ லியினின்னொளி காணப்
பார்தாவிய பரமற்குறு திருவேயிவ ளென்பார். 13

திருவிண்டுசித் தரேயோபெருந் திருவொன்றின ரிவளால்
மருவுண்டன மனைவோருமென் றவர்யாவரு மகிழாக்
கருமென்குழ லவளைக்கரங் களினேசில ரணைவார்
புரிவார்திரு நடனஞ்சிலர் புகழ்பாடுவர் சிலரே. 14

பொன்னின்கடா ரத்தேநிறை பூங்கைதயலை புனைவார்
மன்னுந்திரு மஞ்சட்பொடி மணநாறு கற்பூரஞ்
துன்னுந்துக ளிவைமேலுறத் தூவிக்கலந் தெங்கும்
பன்னுஞ்சிறப் பவர்செய்தது பன்னுந்திற முளமோ. 15

இவ்வாறவ ணெழுந்தின்விழ வயரும்மெவர் தாமு
மொவ்வாமதர் வுறவவ்வவருள தந்நிலைக் கியைய
வவ்வானவர் புகழ்விண்டுசித்தரு மின்பரி சளித்தா
ரெவ்வானவர் களுமைந்தரு வின்பூமழை யிறைத்தார். 16

ஓதார்மறை யோதிக்கிழி யறுவா தமு னிழைத்தோர்
மாதேரிடக் கரமாகுமென் மலரிற்கொடி யுடையுந்
தாதார்கம லமுமாதியுந் தயங்கக்குறித் தரிக்கே
யாதாரமா யிவளாகுவ ளென்றேமுத மடையார். 17

மீண்டன்னவன் மிளிர்செந்தளிர் மேவும்பத வரைகண்
டீண்டும்விபு தரின்பன்னிய ரிலகுங்குழன் மலர்க
டீண்டும்வணங் குலவும்மிசை தென்றேநனி தெரிந்தே
பூண்டும்மிவள் புகழும்பெய ரெதுவென்றறி தாய்ந்தார். 18

மறையேதரு கோவித்திரு மாலுக்குத வுவளென்
றறியாவத னாலேயெழிற் கோதாவெனு மரும்பேர்
நெறியாளிடு நிறைஞானியுங் கனகச்சிறு கட்டி
லெறியாவொளி யிலகும்மணி யிழைத்தொன்றதி லிட்டார். 19

அத்தொட்டிலி னவளாட்டிடு மவர்வேறிசை பாடின்
பித்துப்பிடித் ததுபோலழும் பீதாம்பரன் பெருமை
வைத்திட்டது வழங்குந்தொறும் வனப்பார்மதி வதன
மத்திட்டொளிர் கமலம்மென வலர்ந்தங்கது கேட்கும். 20

அணியங்கணத் துகளின்னிடை மலர்க்கைம்முறை யமர்த்தி
மணிமின்சிறு சதங் கைச்சிலம் பின்னின்னிசை மலிய
வணியுஞ்செவி லித்தாய்முத லனைவோர்களுங் களிக்கத்
தணிவின்முறு வலிப்போடவ டவழ்ந்தேவிளை யாடும். 21

முகபங்கய மூசும்மள கமெனும்மளி நிரையை
நகுதன்கர நறுஞ்செந்தளிர் கொண்டேநனி யொதுக்கி
யுகுபற்பல மலரின்றுக ளொளிரும்மனை முழுதும்
மிகுபற்பல விதவாடல்கண் மேவித்திரி கிற்பாள். 22

வில்வீசிரத் தினமார்பணி விளங்கத்திரு நுதன்மேன்
மெல்வீமக ரந்தத்துடன் மிளிரத்திரு விதழ்வின்
டெல்வீசிள நகைசெய்யுமவ் வெழில்சேர்மக ளனையா
வல்வீசடர் குழலுச்சியி னையன்முகர்ந் துகப்பார். 23

அப்பெண்மணி மணிகுட்டிம மதனுட்டள தழகார்
துப்பின்னித ழொடுதோன்றுறுந் துண்டந்தனை நோக்கா
வொப்பின்றிய வொருபங்கய மிதுவென்றதைப் பிடிப்பா
னப்புங்கையி னதுருமையி னகலாததை நோக்கும். 24

மணிபித் தியின்மி னுருத்தனை நோக்க நணுகி யன்று
வணிபெற் றவோர்கனி யென்றதை யஃதெடுத்துக் கட்டிச்
யணுகிற் கிலதது தன்னையங் கழைக்குஞ் சூடு மாற்றுற்
ணணுகிச் சுவரு கின்னளி நண்பிற் பலவுபெருகச் சூடும். 41

வேறு

செவிலியின் காந்தன் மானுஞ் செவ்விர னுதியைப் பற்றி
யிவண்மெல வெழுந்தி ரத்தினச் சிலம்பொ லிப்ப வைக்குந்
திவளொளி செறிந்த செங்கேழ் மலரடித் திறங்கண் டன்ற
நவையறு விண்டு சித்தர் நளியுளங் களிப்பர் மாதோ. 26

காதலார் கைத்தா யன்னை யப்பவென் றழையக் கண்ட
மாதரா ளதனின் மற்றுங் கோவிந்தன் மருவு நாம
மாதரா திசயம் பண்டே யுண்டதி னறைந்து கொண்டே
போதராக் கரங்கள் கொட்டித் திருவுளம் பூரித் தாடும். 27

வாயச நமக்கு முன்னர் வடுவிழைத் ததுவென் றந்தத்
தீயசெந் துவை வரைந்து கலுழனைத் தெரிந்து கூவுஞ்
சேயசந் திரனங் கண்ணன் சிந்தையி னுதித்தா னென்றே
நேயசிந் தையினே வாவா வென்றிடு நிசியி னம்மா. 28

கோமறு கிடையி னெய்தி யிகுளையி னினத்திற் கூடிக்
காமரு புழுதி கொண்டு கடன்மலை யடவி சேர்ந்த
மாமகி யடங்க லுற்ற மந்திர மிழைத்து நாளுந்
தாமரை விழிய னென்னத் தானுமின் றொடலை யாற்றும். 29

காவியஞ் சுள்ளி நாப்பண் கமலபாத் திரத்துண் மல்க
மேவரு நறவ மாது ளம்பழ விதைக ளாகுந்
தூவரி நிறையப் பெய்து சண்பகச் சுடரு மூளத்
தேவரு மருந்திக் காண வடிசிலுந் தெரிந்து செய்வாள். 30

இன்னுமந் நீலச் சுள்ளி யிடைதுகிர்க் குழிசி யூடே
யின்னறும் பனிநீர் தேக்கிச் செம்மணி யெரியை மூட்டி
மின்னொளி வயிர மென்னு மேவரு மரிசி யிட்டே
யன்னவ ளடுதல் காண வனைவருங் களிப்ப ரம்மா. 31

மரகத மணியின் மாணிக் கத்தினும் வனைந்த கண்ணன்
விரவுருக் குமிணி யென்னு மிருபது மைகளை வேய்ந்த
தாளவெண் பந்தர்க் கீழே தாலகே தனன் செய் சேதி
நிருபனின் சமரத் தோடு நிகழ்த்துவள் வதுவை மாதோ. 32

நாடோறுங் கோதை தந்தை நந்தன நணுகி யன்று
கோடாரப் பூத்து வாசங் கொண்மல ரெடுத்துக் கட்டிச்
சூடாநின் றவர்கைக் காணா தளித்திடச் சூடு மாற்றாற்
பீடார மணக்கக் கண்ணன் பெருமிதம் பெருகச் சூடும். 41

யௌவனம் புதிய தேற்கு மிவளுடம் பெனும்பூ மீதே
திவ்விய நதிமீன் சோதி திகழ்முலை யிரத வீயு
நவ்வி சேர்விழி களாகு நீலமு நணுகி மாலென்
பவ்வ மேயடைய நாளும் பான்மையிற் படரு மாதோ. 42

அத்திருப் பருவ மன்னுட் கரிய பூடண முஞ்சாம
னத்திர மணியு மாகி யனந்த னம்பா யலான்றன்
வித்தக விழிம லர்க்கே பெருகுறு மமுத தாரை
யொத்த தாயொழு குமென்று மொருபடி முதிர்த லின்றே. 43

புதியயௌ வனத்த வன்னாள் பொன்னுடன் முகிழ்மென் கொங்கை
மதியிலார் புதிய செல்வ மணக் மே ணோக்கு மாபோல்
புதைதரத் தரள மாலை யிரண்டிடை பூரித் தோங்க
வதுபொரு திடுகு தொய்ப கொடிமருங் குடைய தாகி. 44

பிறைநுதன் மிசையே யேறி வளைந்துலாம் புருவ வில்லும்
பிறழ்கயல் பிணையுங் கண்க ளென்றிடுங் கணையும் பெய்த
நிறைமதி முகமென் செய்ய பங்கய மிடைந்து நீலஞ்
செறிதரும் புழுகு நாறுங் குடிலமாங் குழலுஞ் சேர்ந்தே. 45

ஒருமுனை யிரண்டு கொங்கை யோங்கலும் பிறிதோர் கோடி
பெருகிய நிதம்பந் தானும் பிறங்கிடக் கோத்து மின்னுங்
கருமணிச் சலாகை யென்று கழறுறு மயிரொ ழுங்கி
னரியவா யொளிரு மண்ட நாயகற் கமைந்த தானே. 46

மற்றுமத் திருவின் மேனி முலைமலை மணந்தங் காழும்
பெற்றவுந் திபெனும் வாவி பிணைந்துதோள் வல்லி யார்ந்து
கொற்றவேல் விழியென் வண்டுங் கூடியே மதன னுடற்
குற்றவா ராம மாக வொளிர்தரு மென்ப மாதோ. 47

**பெண்மணி யிவள பாங்கம் பெய்கொடுங் கணையா யந்த**
**வொண்மலர்க் கணையான் கண்ண னுரத்தினி லழுத்தி வெல்வா**
**னுண்மையீ தன்றே லண்ட நாதனா மொருவன் றன்னைத்**
**தண்மை கொண் மலராம் பெய்து தன்வயப் படுத்த லென்னே.** 48

கொண்டமூக் காறு நாறும் பங்கயங் குலவு மாதுங்
கண்டுதற் கடுகடுத்த தாலையுங் கண்ணன் கோதை
கொண்டையிற் புனைந்த தாரே புனைந்தகங் குளிரு மாற்றாற்
கொண்டனே ரதுவே மேன்மை கொண்டதென் றறைவ ரம்மா. 49

அமுதமா கிரணத் தன்னு ளானன மதிர்ந்து தேர்ந்து
கமழ்தா வுலக மூன்றிற் கடுப்பதொன் றிலதாய்க் கஞ்ச
மமர்தரு கடவுள் செய்தா னன்றெனி லரிமான் காணு
மிமிழ்தரு கலைக ளாலே யெங்ஙன நிறையு மாதோ. 50

புயலதை யவள ளிச்சப் பூந்தொடைக் குரிய நட்பாய்
நயமுள தெனவே நன்கு நவிலுறு மிலதேல் வையம்
வயமுற வளர்ந்த மாலின் கந்தரத் தொழு குறுந்தேன்
மயவிளங் துளவத் தாரின் மகிழ்வுற வணித லென்னே. 51

செய்யரித் தடங்க ணாளின் மேனியா நதியிற் சேர்ந்தே
தொய்யிலின் விகரிக் குங்கட் டோதி லெனுங்கோ கங்க
ளையமென் கரிய வாய மயிரொழுங் கெனும்பூ வல்லி
மெய்யுற வெழுந்த குஞ்சத் திணையென மிளிரு மன்றே 52

சேயிழை யுருவங் காமன் செங்கண் மாற்கெழு துமாணை
யாயபொன் னிலகு மோலை பாயடைந் ததனி னுப்ப
ணையலின் றறிய விங்குச் சுன்னமென் றெழுதி னன்கா
ணுயலின் றதனை யுந்தி யாமென லடுப்ப தன்றால். 53

நிலவுணும் பறவைக் கண்ணின் சேயொளி நிறைந்து செய்ய
மலர்மணச் செருக்கை வாட்டு மங்கையின் மலர்த்தாண் மாயன்
குலவுகௌத் துபமென் செய்ய குலமணி யுரைந்து நாளும்
வலிவுறு முரத்தின் வன்மை யெவ்வணஞ் சமிக்கு மம்மா. 54

கோதையிக் குணத்து மாயன் குலவுத்தோள் புல்லு மார்வம்
மீதுற விதுவின் றண்ணங் கலையென மிகுமின் வாசச்
சீதசந் தனத்து வீறுங் கொடியெனச் செழித்தா ணாளும்
வேதவிற் பனராம் விண்டு சித்தரின் மனையின் மன்னே. 55

ஆகச் சருக்கம் 8 க்குச் செய்யுள்- 474.

ஸ்ரீ

# ஆண்டாள் வைபவம்

## 9-வது சருக்கம்

நின்ன டைக்கல மென்றுவீ ழமர்க ணிலையின்
மன்ன மித்திரன் மரபினி லெழுந் துகான் மணந்து
தன்னு யிர்த்திருத் தன்னையுந் தணாந்தரக் கர்களைப்
பின்ன ழித்தசெம் பிரமமன் றோபரம் பொருளாம். 1

விண்டு சித்தரோர் பகன்மலி விரைமலர்த் தொடையல்
கொண்டொ சித்தவெங் குவலயா பீடவான் கோட்டை
யண்டர் கட்கிறை யாலிலைப் பாயலாற் கணிந்து
கண்டு மற்றகன் றீண்டினர் தமதகங் களிப்பின். 2

தன்க ருத்தெலாந் தாமரை விழியவ னுழையே
நன்கி ருத்தியந் நாரணன் குணமெலா நணுகி
யின்பு றத்திருக் கோதையவ் வெல்லையி னவரை
யன்பி னிற்பணிந் தின்னண மறைதன்மே யினளால். 3

அண்ட கோடிக ளவைபரு வரலுரு தளிக்குங்
கொண்டல் வண்ணனின் குணகண சரிதமே முற்றுங்
கண்டொ ளிர்ந்தனை யாதலிற் காசினித் தலையவ்
வண்ட நாயக னருச்சை யாயமர் தலமுழு தும். 4

வாவ னூகனுய் வளரருந் தந்தையே யருள்கென்
றுவ லாடவள் வினவுற வருந்தவத் திறையாம்
பாவ லார்களிற் சிறந்தவப் பாகவ தருமத்
தேவ தேவியின் றிருவுளங் குளிர்ப்புறத் தெரிப்பார். 5

பெண்ணி ரத்தின மெனத்தகை பிறங்கருந் தனமே
யெண்ணி னூறுட னிணைந்த வெட்டவன் னலமென்ப
மண்ணி னத்தல மகிமையிற் படிந்திடு மவரே
நண்ணி முத்தியி னெறிமுதற் றணிவுற மிசைவார். 6

கேளொ ணுவவர் கெடலரு மவைகளின் விறலே
நீள யாவையு நிகழ்த்தினர் வருகையின் மதுரை
யாள னங்கிருட் டினனரு முடலையை யறையும்
வேலை யன்னவன் கொண்டதே விம்மித மெனலாம். 7

பின்னர்ச் சுந்தர ராசனின் பெருமைகள் பேசக்
கன்ன லுங்கசப் புறுமிள மழலையங் கன்னி
பொன்னின் மின்னுறும் பொருவரு முடலெலாம் புளகந்
துன்ன மன்னிய மலர்ச்சியின் றுணையுமொன் றுளதோ. 8

வேறு லோகமே யிருமஃ தெனும் வேங்கடத் துறையு
நாறு பைந்துழாய் நாரணன் பகடுகண் முழுதுங்
கூறு போதவள் குளிர்மதி முகந்தனிற் கொண்ட
வீறு மின்விகா சந்தனை விளம்பவீ றுறுமோ. 9

பங்க யத்திதழ்த் தடங்கணி பரம்பதம் படிமே
லிங்கி தென்றல விறைஞ்சிடு மரங்கநா யகன்றன்
பொங்கு வைபவத் தமிழ்தினைப் புதிதுண மீண்டுந்
தங்கு மால்விழை வொடுந்திருத் தந்தைதா டொழுதே 10

தாதை யேயயன் றுதையா மரங்கனின் றகையார்
காதை யாவையுங் கழறுக விரிதர வெனலும்
மாத ரார்சிரோ மணியுளக் கருத்தினை மகிழா
வாத ரம்பெரு கவை யெலா முணர்ந்தன ரறைவார். 11

நந்தி ருக்குலம் பெருகுற வுதித்திடு நங்காய்
முந்த னத்தினன் முகுந்தனின் றுணைமல ரடியைச்
சிந்தை யிற்பதித் திரும்பகற் செழுந்தவம் புரிய
விந்தி ரைக்கிறை யிதயநன் குவந்தன னிதனால். 12

பின்ன ராரண மயமெனப் பிறங்குபொன் முடியார்ந்
தின்ன லாறரும் பிரணவத் தெழிலுரு வேய்ந்து
மின்ன லாரிஃ தரங்கமா விமானமா மிகைசேர்
பன்ன லாந்திருப் பாற்கட லிடையெழுந் ததுகாண். 13

வேறு

செங்கதிர்க ளொருகோடி யொருங்கெழுந்த செவ்வினையச்
சழக்கென் றந்தப்
பொங்குகதி ரூர்தியெழப் பூந்தவிசன் கண்விழித்துக்
காணுங் காலை
யங்கதனு ளுபநிடத மனைத்திற்குங் கந்தமென
வலங்கு மாயன்
றிங்களெனப் பளபளெனத் திகழளந்தப் பாயலிடைத்
திகழக் காணு. 14

ஆனந்தக் கூத்தாடி யங்குமிங்கு மாயோடி
யவனா லன்றே
தானந்தப் பெற்ற வொருநான் மறையான் றழதழத்த
நாவா லேத்தி
நாணிந்தப் பேறடைந்த நற்றவமே யுற்றதவ
மென்று நாடா
வானுந்தப் பொன்முகடா ரூர்தியினை வலம்வந்து
பணிந்து மாங்கே. 15

அறிதுயிலா ரதனிடையே யப்பெருமா ளாணையினா
னதனைக் கொண்டே
நிறைதிருசேர் தன்னுலக மிடைந்தங்க நின்மலனை
நெடுநாள் வாசஞ்
செறிதுளப மலர்கொண்டா ராதனஞ்செய் தேபிறகச்
செங்கண் மாலின்
புறுதிருமா மகமொன்றுங் கிழைத்திடுதற் கோரமையந்
துணிந்தான் மன்னோ. 16

அம்மகத்திற் கமரரவு ணேசர்களு மருந்தவரு
முதலா மற்றை
மும்மையுல கங்களுறு முக்கியரும் படர்போழ்து
முடுகி வாவுஞ்
செம்மையுறு மேழ்ப்பரியோ னின்மரபின் சேகரனு
மனுவின் மைந்த
னம்மகிமை யளவரிய வரங்கனெழிற் கடலாடி
யகம்பூ ரித்தான். 17

வேறு

மகமுடியா வவபிருத மயனா ராட
மனுதனயன் வன்பரிசும் விடையுங் கொண்டு
நகுகனக முடிச்சிகரிப் புரிசை சூழு
நாகர்களுக் கருந்துணையா மயோத்தி நண்ணி
நிகரரிய திசைமுகனார் வழுத்து மந்த
நெடியதிரு வரங்கனைத்தான் பரவ நாளு
மகவுறுதி யுடனரிய தவத்தி லந்த
வம்புயனை யுளத்தமையா வுழந்தான் மன்னோ. 18

தன்றங்கை நெறிபிறழா துலகந் தாங்குந்
தடம்புயத்தத் தராபதியின் றவத்தின் மேன்மை
நன்றந்த நான்முகத்தோ னுணர்ந்தே யன்னோ
னலமிகுந்த பத்திதனக் குவந்து தாழான்
மின்றந்த வோங்கார விமானந் தன்னின்
மீளியவன் கண்முகப்பின் மிளிர வந்தப்
பொன்றந்த திணிதோளா னிதியைக் கண்ட
மிடியனென வதுகண்டான் பூரித் துள்ளம். 19

முதவமுத முளத்தடங்கா தெழுந்து பாய
மொய்புளக முடன்முழுது முளைத்து வீறத்
துதிபுரியு மவற்கருளி யிதனைத் தோன்றா
னின்னரிய தவத்தினுனக் களித்தே னிந்த
மதுரிபுவை யின்றுமுறை யருச்சித் தைய
மறுதினமே யென்னுழைமீண் டளிப்பா யென்று
சுதைபுரைய மொழிந்தருளி யுடனே செய்ய
சூட்டெகின மிசையிவர்ந்து மறைந்தான் மன்னோ. 20

பின்னரவன் பெருமிதங்கொண் டாரா தித்தே
பெறலரிய பேறடைந்தா னவனே யாதி
யன்னமர பினரெவரு மடைவே பூசித்
ததன்பிறகத் தாசரதி யடைந்த காலை
யொன்னலரா நிசிசரரை யொழித்து மீளா
வுலகாளு முடிசூடி யொளிர வாங்கே
தன்னையகல் கிற்கிலனாய்த் தவிக்கும் வீட
ணன்றனக்கீது வந்தளித்தான் றயையின் மிக்கான். 21

நீடூழி யுயிர்வாழ்வு மமர ரூரை
நிகர்க்குமிலங் காபுரியு மருளிப் பின்னிப்
பீடாரு மரங்கனையு மளிக்கப் பெற்ற
பிசிதாசன் பெருமகிழ்வின் மீண்டு சென்று
கோடோரந் தனிற்றிரையிற் கனக முய்க்குங்
குளிர்புனல்பாய் பொன்னியிணைக் கிடையே தூய
நீடேரின் சைகதக்குன் றலையே வைத்தா
னெடியவிமா னந்தனையோர் நியமத் தாலே. 22

நியமமதை நிறைவேற்றி மீள வந்த
நிலவரிய யானத்தைப் பெயர்க்கு மெல்லைப்
புயமதனுக் கஃதசையாப் பொருப்பே யென்னப்

பொருந்தியது கண்டவனும் புதுமை யெய்தித்
துயருறலு மசரீரி யுரையா லந்தத்
தொல்லரங்கன் வீடணனின் றாய வுள்ள
மயர்வொழிக வயலகன்ற யாறு சூழு
மரும்புளின மிதனுழையே யமர்வோம் யாமே. 23

இத்தலையிற் றருமவரு மனுமீங் கொன்பா
னிரும்புனித நறுந்தீர்த்தக் கரைமே லெம்மை
வைத்தமன னவிருடி களுநன் றுற்றும்
வளர்தவக்கேய் வண்பலனா யமர்ந்து நின்றன்
மைத்திரள்கண் முடிதவழு மாட கூட
மதிளிலங்கை யனவரத நோக்கா நின்றே
பைத்தநறும் பாம்பணைமேற் பள்ளி கொளாவாம்
படர்குகவுள் ளுவந்தென வீங்கருளி னால். 24

எம்பெருமான் றிருவாக்கி னிதயம் பூரித்
திருநிலமேல் விழுந்தெழுந்து வலஞ்சூழ் வந்து
மும்பர்தொழு மரங்கேசா வருடந்தன்னி
லொருமுறையிங் கணுகியுனை யருச்சித் துய்வேன்
சம்பரவை ரியையளித்த சலசக் கண்ணா
வென்றுதுதி புரிந்தந்த வரமுஞ் சார்ந்தே
தம்பிதச கந்தரன்ற னெழுந்து சென்றான்
றாமரையாள் கொழுநனு மாங்கமர்ந்தா னம்மா. 25

வேறு

நாறுபுன்னை தீரநண்ணுந் திங்கட் பொய்கை
வீறரங்க விமானத்தோ டீரேழ் வையந்
தேறியுய்யும் வண்ணந் திருவரங் கனந்த
வாறமர்ந்தே யிங்ங னருளுமென்று மம்மா. 26

பொன்னங் குன்றமென்னப் பொலியுமாட வோளி
மன்னுமுறை யூரின் மண்டலம் புரக்குஞ்
சென்னிமுன்னஞ் செய்த செந்தவத்தின் மாவை
மின்னுஞ் சுதையாக மேவினன் மகிழ்ந்தான். 27

அவளனங்க னம்பே யென்னமிளிர்ந் திந்தப்
பவளவா யரங்கன் றன்னைமணம் பண்ணா

டிவளரங்க ணந்தத் தினம்புனைந்த கோலங்
தவளநாக ராசன் றனுரைப்ப தென்னே. 28

அன்றுமுத லையற் கமரர் முதலாரு
நன்றழ குறும ணாளப் பெருமாளென்
றொன்றுநா மங்கூறி யுள்ளங் களிகொள்வார்
மின்றயங் குமேனி மேதினித் திருவே. 29

கோளொன் பதினொன்றே கொள்ளுமா ழித்தேரோன்
கோளொன் றியவண்ணங் கொண்டல் வண்ணன்கூடி
யாளுந் திருப்பதி யாகுநூற் றெட்டுள்ளு
நீளு மிவ்வரங்க நேர்மை தன்னினென்ப. 30

இத்திரு வரங்கற் கிதரநூற் றேரேழும்
வித்தகத் தினோரோர் வேலை விளையாடுஞ்
சித்திரப் பொழிலாய்த் திகழு மென்றுமேலோ
ருத்திகொண் டுரைப்பா ரும்பர் தொழுநங்காய். 31

என்றுரைத்த காலை யிலகிழையாள் பின்னு
மன்றளித்த வன்னன் மறுதினமே தன்கட்
பின்றிருப்பு கென்று பேசியும் பலநா
ளென்றிருப்பா தின்னுமிருந்த தென்னச் சொல்வார். 32

பெண்மணியே வேதன் பேசிய தவனுள்
வண்மனுவந் தரநா லேழதின் வைகும்
மண்முழுது மாங்கே மடியுமந்த வூழிக்
கண்மணந் திடுவன் கஞ்சனிதை மற்றும். 33

மாதரசே யென்று மாதவ னுரைக்கும்
போதன நடையாள் பொங்கிமரை யோடை
யாதவனு லோங்கு மாறரங்கத் தம்மான்
மீதின் மயலோடும் மீறினனு டோறும் 34

வண்மையயனு சகமன றுரைக்கு மவ்வேதம
பண்டைமொழி போலப் பாவையன்று தொட்டக்
கொண்டல்வண் ணனென்றே குவலய முழுதுங்
கண்டவுன்கட் காமங் கழிபெருக மாழ்கும். 35

வேறு

இன்னண மவளரங் கேசன் றன்னையே
தன்னகின் ஞெமுங்குறத் தழுவு மாசையால்
பன்னரும் பகடுறும் பயந்த பாவலர்
பொன்னடி தொழுதுபின் புகலு மீங்கரோ. 36

அன்பினிற் பெற்றவென் னரிய தாதையே
கற்பினிற் புறங்குலக் கன்னி மாரிரும்
பொற்புறுங் கண்ணனைப் புணரு மாறுநீ
யெற்பரிக் தருள்கென வியம்ப லாயினர். 37

பொதுவிய ரன்றுபொற் பூவை மேனியன்
மதுவழி துளபமால் மார்பம் புல்லுற
மதர்வினின் மார்கழி விரத மாடியே
யிதமுறுங் கண்ணனை யிணைந்து வாழ்ந்தனர். 38

நீயுமங் ஙகாறு மதியி னேமமா
யேயுமின் விரதம திழைக்கி லெங்கணும்
தோயுமப் பரம்பொரு ளுவந்து தோன்றியுன்
பாயுன தருத்தியின் படியி ழைக்குமால். 39

என்னவாங் கியம்பலு மெழிற்பூங் கோதையும்
பன்னிரு மதியிலும் பரிய மார்கழி
தன்னிலக் கோவியர் தன்மை யெய்துறூ
வன்னவ ரதனிடை யிழைத்த யாவுமே. 40

தேவரும் விழைவதாய்த் தீஞ்சு வைத்ததாய்
மேவரு மமுதினை மிடைதற் காந்திருப்
பாவையென் றொருபிர பந்த மாகவே
யாவலின் முப்பது கவியி னாற்றினள். 41

மற்றினி யிரதமே யூறு மாண்பதா
யுற்றநா றடனொரு நாற்ப தாங்கவி
பெற்றிடு நாய்ச்சியார் திருமொ ழிப்பெயர்
சொற்றன ளரியநூல் சுருதி யென்னவே. 42

மூன்றெனு நவையினை முறுக்கி மூன்றனுட்
சான்றிடும் வாய்மையை விளக்கிச் சம்பவர்

தான்றொலேங் தொழிந்திடத் தயங்கு மவ்விரண்
டான்றநூல் களுமவை யறிதல் சாலுமே. 43

கங்குலும் பகலுமக் கஞ்சக் கண்ணினு
ளங்கலு மரங்கன்மே லாசை விஞ்சிடப்
புங்கவன் மலர்க்கணை புகுந்த நெஞ்சகஞ்
செங்கனல் புகுந்தபோற் சிதைந்து சாம்புமால். 44

பதமுறு மங்கையம் பருவ நம்மதை
யிதமுறப் புயங்களா லிறுகப் புல்லுதன்
முதலருஞ் செய்கையா லரங்கன் மூந்தியெவ்
விதநுகர்ந் திடுமென நினைந்து வெம்புவாள். 45

சிந்தைசெய் திவ்வணந் துயிலுஞ் செவ்வியிற்
சுந்தர வரங்கனைச் சூழ்ந்த வண்ணமுன்
னந்தமார் கனவிடை நனவி லாற்றுமா
றிந்துமா முகிகலந் தின்பங் கூருமால். 46

ஆங்கருந் துயிலுணர்ந் தரவ ணைப்பரன்
பாங்கரி னமர்கிலா தழுங்கிப் பண்பினந்
தாங்கிய கனவினுக் கொன்றுந் தந்திலே
னீங்கிய ததுவென நினைந்து நையுமே. 47

பானலங் கண்ணினு ளுடலப் பைங்கொடி
வேனில்வேள் குனிசிலை விசித்த நாரியின்
வானுறு மொலியினு னடுங்கும் வண்மைபோ
ரூனைசந் திடும்வறி தொவ்வோர் காலையே. 48

மயர்வினின் மன்னு மவ்வுரு மனைந்துபின்
னயர்வுற வதுகரந் தகல வையனென்
னுயர்வுறு முளமல ரொளித்திட் டானென
வியர்வுற நெட்டுயிர்ப் பெறிந்து விம்முவாள். 49

உண்டலுங் கோசிக வுடையு மங்கொரீஇ
வண்டலும் வரைந்தனள் கழங்கு காணுமுள்
விண்டனள் பணிகளும் வீயுங் கொய்கிலள்
கொண்டலின் வண்ணவென் றொளித்துக் கூறுமால். 50

எம்மைமுன் மீறிய இதுவ யங்கொளற்
கம்மவிவ் வடியமே யனையு மென்றவள்
செம்மைசேர் மலர்முகச் செவ்வி வவ்வினான்
பொம்மலின் கரங்களாற் பொலியுந் திங்களே. 51

ஆசைநோ யின்னணை மடக்க இல்லளாய்க்
கூசியூ ரறியுமென் றுணர்ந்து கூர்தரும்
வாசமென் குழலியர் வளைந்து சூழ்வரப்
பூசெறி தருமெழிற் பொதும்ப ரெய்தினாள். 52

எய்தியு மென்பய மிதய மீர்த்திடு
மைதிகழ் மலர்வனத் தாடு மண்டுதீ
வெய்தெழுங் கனலொடு மிடைந்த தொத்ததே
மெய்திகழ் மடமயில் விரக வெம்மையே. 53

அனங்கனின் வில்லொடு ஞமலி யஞ்சுகம்
வனங்கெழு பிகமிவை செறிந்து வந்தெதிர்க்
கனங்குழை தனின்முனரி ரிந்த காரணச்
சினங்கெழு தரச்செருச் செய்ய மேயவால். 54

கானமா மயிலனாள் காமத் தீயினைத்
தான்மிடைந் தோங்குற வளர்த்த தன்மையா
னானிலம் வன்னியைக் காற்றி னண்பனென்
றானமின் றொருபெய ருரைக்கு முண்மையே. 55

மாரனங் கிருப்பது மறந்து சேயிழை
யாரமா வனத்தினூ டாங்குப் புக்கனன்
பாரகத் தெவர்களும் பண்ணு முன்வினை
நீரதின் மனஞ்செல நிகழ்வ ராங்கரோ. 56

பொதும்பரு ணிரல்பட பொதுளுஞ் சாலையை
மதன்படை நிறைதர மணந்த சாலையும்
முதம்படு பிகரவ முறுக்கு நஞ்சுமாய்ச்
சதங்கையின் பதத்தினா ணினைந்து சாம்புமால். 57

மந்தமா மாருதங் குளிர்ந்து லாவினும்
சிந்துமந் தாரமா மலரின் றேன்றுளி
யுந்தியங் குலவுற வுளைந்து நையுமால்
சந்தமா மகரிகை தயங்கு கொங்கையாள். 58

அங்கையி னகன்றகண் ணணங்கி னுண்சிறு
தங்கமென் கொம்பெனத் தயங்கு மின்றனு
வெங்கதிர் விதுசெறி தினத்தின் மற்றைநா
டிங்களின் கலையென வெளுத்துத் தேய்ந்ததாம். 59

வேறு

கோதைபவ தாரங் கொள்ளும் பொழுதவண
கேதனன்ற னனுக்கிரகை கிளர்கவரிச் செங்கரத்தா
ளோதுமறை யொருவற்கவ் வூருதித் தவளுக்
காதரவு விஞ்சுசகி யாகியுட னுறைவாள். 60

தன்றோழி யிவ்வண்ணந் தாமோ தரன்விழைவாற்
குன்றுருவ முங்குவது கண்டவனைக் கூடியுய்ய
நன்றேது ணிந்தவளை நண்ணியந்தப் பூங்காவி
லென்றேவி யொன்றிசைப்ப வீங்கென் றியம்புவளால். 61

அம்மா வினவுவதொன் றுண்டுநினை யாதரவால்
இம்மா நிலவலயத் தேய்ந்தகழி யார்வலர்கள்
எம்மா விதமிடுக்க ணொருவர்க்கி யைந்திடினுந்
தம்மா னுகர்வனவென் றெல்லவருந் தாமுறுவார். 62

ஆவிநிகர் பாங்கி யழகாருஞ் சிந்தையினை
மேவியுன்றன் மெய்ம்முழுது மிக்கெரிப்ப தொன்றுளதாம்
காவிநிகர் கண்ணனையே காயம்பொலி விழந்தா
யோவியமும் பின்னுறுமுன் பொற்பெங் கொளித்தனையோ. 63

சேந்துந் தணிந்துஞ் செறிந்து மெலிந்துமணங்
கூர்ந்துங் குலவுங் குழைமலர்கள் கொண்டிழைத்தே
யேந்து நறுஞ்சயன மெப்போது மேவிழைவாய்
மாந்துமளி பூங்குழலாய் மாரன் செயலிதுவோ. 64

தண்ணா ரிளங்குழவித் தென்றலுக்குந் தண்கரத்தோ
னொண்ணா ரினிய நிலவிற்கு முன்னுடலம்
புண்ணா டயிலி னுலைவதுபோற் கூசுகையாற்
கண்ணா ரலர்க்கணைகள் காய்ந்தனவோ கண்மணியே. 65

பெற்றார் பெரியார் பெட்பாருஞ் சேடியினை
முற்றா ரிவராருங் காணாதுன் னுள்ளமலர்ப்
பொற்றா மரைவிழி யெப்பொற்பா ரிளம்புருடன்
கற்றாழ் முலைமயிலே கள்ளமுற வந்துறைந்தான் 66

தன்செய் யுளமறியா தம்புவியிற் றானெளிக்கு
மென்செய் தியுமிலதே யிகுளையுமத் தகையவளே
மின்செய் மணியிழையாய் மெய்யே மிழற்றுவையே
னன்செய் கையொன்றதற்கு நாடுதுமென் றாளணவாய். 67

கேட்டே கிளிமொழியாள் கெண்டையங்க ணென்சகியே
நாட்டா மரைவிழியார் நாரா யணனன்றி
மாட்டா ரெவரேனு மன்னியுற வென்மனத்து
ளாட்டா னின்றான வனேயம்மா வுள்ம்புகுந்தே. 68

என்றே குயிலனைய வேந்திழையு முண்ணாணி
யின்றேன் றுளித்திடுசெங் குமுதமெனு மோர்பவள
நன்றே திறந்திசைக்க நாடியவ ளோர்படத்தை
முன்றேவி கண்ணுறநன் றேவிரித்தாண் மொய்குழலாள் 69

தாயேயித் தாரணியுட் டாமோதர னருச்சை
மேயேதிக ழுருவ மெல்லாமிளிர் மிதன்கண்
நீயேதுள நிறுவி நித்தங்கரை குதியோ
வீயேயெழிற் கரத்தால் விளக்குகதை யென்றனளால். 70

கோதையத னிடையே கூர்ந்திலகும் பொன்னரங்கன்
சோதிவடி வொன்றனையே சுட்டிக் கடைக்கணியா
யாதுமறை யாமே நாணா வருத்திறைஞ்சி
மாதரசி நிற்க மற்றவளு மீதுரைப்பாள். 71

கண்ணே கரும்பே கற்கண்டே கானமிழ்தே
யுண்ணேய மென்பா லுள்ளதெனி னாளியுடன்
பண்ணாது கள்ளம் பகர்வாயீங் குண்மையினைத்
தண்ணார் பொழிலரங்கன் றன்விழைவு கொண்டனையேல். 72

வாய்மை வழங்குதியேல் வானவருங் காணரிய
தூய்மை நதியிடையிற் றுஞ்சுந் திருவரங்க
னாய்மையிலே நின்னுழையே யென்று மமர்ந்தருள
நோய்மை சிறிதின்றி நொய்திற் கொணர்குவல்காண். 73

பாங்கிமொழி யமுதிற் பைங்கிளியா ளுள்ளநிறைந்
தாங்குறையு நாண மகலவவள் பொங்கி
மாங்குயிலின் வாய்திறவா வெண்ணகையின் மின்றாள
மாங்கிளரு மாலையனுக் கிரகைக்கிட் டுரைப்பாள். 74

காரா ரரங்கன் கலவியமு தம்பருக
நீரா யுருகுமெனை நீயதனின் மூட்டுவையேற்
சீராருஞ் செந்திருவே செய்தா யவதார
மேராருங் காரணமா யெனையளிக்க வுண்மையினே. 75

கண்ணார வென்றன் கழிவிரகங் கண்டனையா
லெண்ணலு மெய்தலுறு வெழிலரங்க னின்புணர்ப்பை
நண்ணு நனிமகிழ நங்கா யருளுதியேற்
பெண்ணாய்ப் பிறந்திடுமென் பேறளித்தாய் நீயலையே. 76

கைம்மா றிதற்கெளியேன் கருதி நினக்களிக்க
விம்மா வுயிருளதொன் றீது நினதருளி
னம்மா விங்குய்ந்த தெனிலன்றோ நினதிதுவு
மெம்மா பரிசுதவு மிவ்வுலகம் பெய்ம்முகிற்கே. 77

சேடியெனப் பலவுஞ் செப்பிவிடக் கவவள்
வாடியிடேன் மாதவனார் வந்தா ரென மதியென்
றாடியினி துரைகளங் கைகுவித் திறைஞ்சி
நாடித்திரு வரங்க நன்னிமித்தங் கண்டடைந்தாள். 78

9-வது சருக்கம் முற்றிற்று.

ஆகச் சருக்கம் 9-க்குச் செய்வுள் - 553.

---

ஸ்ரீ

## ஆண்டாள் வைபவம்

### 10-வது சருக்கம்

பொன்னன் புதல்வன் பலதுன்புழந் தெய்த்தபோது
நின்னங் கழற்கா ளினைவோடு நிகழ்ந்தவண்ணங்
கன்னங் கரியமுகில் வண்ணவென் கண்ணநின்றுண்
டுன்னுந் நினைவை யொருவாதருண் மன்னவற்கே. 1

கோதைச் சிலதி குறுகும்பொழு தங்கரங்கன்
மேதக்க வேனிற் சிறப்பெய்துற மிக்கவாசப்
போதுற்ற பூங்கா விடையோங்கிப் பொலியுமோரின்
சீதத் தணிந்து திகழ்மண்டபஞ் சென்றுசேர்ந்தான். 2

அங்கின னொலிய பலபல்லிய மார்ந்திசைப்பப்
பொங்கும் மறையின் புகழ்வைணவர் போற்றிசைப்ப
வங்கங் குளிரு மபிடேக மடைவினாடி
யெங்கும் புகழுமணி யாவையு மேய்ந்துமன்னோ. 3

தொண்டைக் கனியின்றுவர் வாய்மயிலார் தடத்தில்
கொண்டிக் குரலு மணியாழு முவந்துபாடக்
கண்டுற் றறுசுவையி னுண்டியுங் கண்டுவந்து
பண்டைச் சடங்கு பலவும்முறை முற்றிமற்றும். 4

பக்கம் படர்ந்த மலர்வல்லியின் பாதபங்க
டொக்கங் கணிந்த நிழலிற்சில தொண்டர்சூழப்
புக்கங் குலாவு பொழுதின்னிளந் தென்றல்வீச
நிற்கும் வசந்தத் தொடுகாமனை நேரறிந்தான். 5

அங்கே யனேக சுமனத்திர ளார்ந்துவாசந்
தங்கே ரரிய வனமாலை யணிந்துசால
அங்கா மசனக மெனும்படி யார்ந்துதன்கட்
பங்கே ருகமுன் னுறைமாதவப் பண்புகண்டான். 6

பரபுட்ட மாகுமெழிற் காகளம் பண்பினோங்க
விரைவுற்ற மந்த பவளத்திரு தேரின்மேவி
யருகிற் பொருந்த வசந்தம்மெனு மவ்வமைச்சன்
விரவிக் கணின்முன் விளையாடினன் காமனாங்கே. 7

பைங்கிள் ளையின்றே ரனங்கன்மலர்ப் பாணமேறச்
செங்கண் ணரங்கன் றிருவுள்ளஞ் சிறிதுநைந்து
இங்கந் தருப்பன் கணைக்கெம்முள முங்கெடற்கென்
றங்கெண் ணுசிந்தை யுடனார்ந்தன னாதிதேவன். 8

அக்கா லணைந்த வெழிற்கோதையின் றாதியங்குப்
புக்கா வருகிலொரு பூங்கொடி போர்த்தவில்லுண்
மிக்கா வலோடு மறைந்தேயிருந் தையன்மேனி
யொக்கா தசெவ்வி முழுதுங்களித் துற்றறிந்தாள். 9

### வேறு

அப்பன்மத னற்கும்மிவ னவன்பூங்கணை பாய
வெப்பும்விர கவனல்சுட விரைமாமலர் விரவுஞ்
செப்பந்திகழ் சயனத்திடை செறியும்மிடை யிடையே
தப்பொன்றில தொருபேரறந் தன்சிந்தையி லுறுமே. 10

அதியாதரங் கொண்டேயது நிகழும்மனை யல்லை
மதியாதொளி ரிருகண்களு மலர்ந்தேயுறு மிமையா
மதியார்வத னமுமெங்கனு மலியும்புள கங்க
ளிதியாததி வியர்வும்முழு தெழின்மேனியு மெழுமே. 11

பரசிந்தையி னுழலுந்திரு வுள்ளம்படு பாடிம்
முரசெந்துவை முனம்வென்றவன் முகமிங்குரை செயலால்
அரசுந்தெரி வையாகட்கெது வோவொன்றிவ ணணைவான்
பிரசந்தரு மலரம்பினிற் பெரிதும்படு மன்றே. 12

எம்மானுள மிலகுந்திரு வெஞ்செல்வியோ வென்றே
நம்மாலொனு மளவும்மது நணுகிப் பெருமான்முன்
செம்மாமண முணர்ந்தேசெலுஞ் செயல்செய்புது மென்றே
யம்மாமயி லரங்கன்றிரு முன்மெல்லென வடைந்தாள். 13

பலவின்சுளை விரியப்பெரு குறும்பின் பிழிபாயக்
குலவுஞ்செநெல் வளருந்தட வயல்சூழ் வில்லிபுத்தூ
ரிலகும்விண்டு சித்தன்மகட் கிறைதுதியிவ் வடியாண்
மலருன்பதம் வணங்கும்மென மகிழாநனி தொழுதாள். 14

செவியின்னமிழ் தனையின்களி யுடனெம்பரன் செலவுண்
டவிழ்மென்மல ரமளித்தலை யெழுந்தார்ந்தெழில் வலஞ்சேர்
சவியின்சுடர் நயனந்துடி தருமெம்பய னிதுவென்
றவிருங்குழை மணியாளவ ளழகார்முக னோக்கா. 15

பட்டர்க்கிறை மகடன்னரு ளுடனிங்கெழும் பாவாய்
கட்டப்படு மென்சிந்தையும் களிகூர்ந்திடு நின்னால்
வட்டக்கலை நிதிசேர்திரு வதனத்தவ ளுடனவ்
வெட்டக்கரை விதயத்தனு நன்றேயில குவரே. 16

என்கட்கரு மணியன்னவ ளென்னுண்ணசைந் துளையிங்
கன்பிற்செல விடுத்தாளதை யறியப்புகல் கெனலும்

மின்கட்டழ கியனுக்கிர கையுமாமுத மேவிப்
பின்பப்பெரு மாளின்புறுந் திருவாய்மொழி பேசும். 17

மாயாவிண்டு சித்தன்மகண் மருவும்முன தருளின்
னேயாவரு சுகமேயுள ரெழிலாருகின் மேனி
தோயாமினுங் குழலன்னவ டோயுந்தொடை யுலுப்பை
யீயாகினக் கிருகைகுவித் திவைவாஞ்சையி னியம்பும். 18

வரையாதன வரதந்திரு வைகும்வரை மார்பா
வொரிராவுள முருகப்புலி யதுநீடுனை யுவந்தே
கரையாமன மடியாள்படுங் கட்டம்பல கங்குல்
விரையாய்மதன் பகழிக்கெனை யிடுகிற்பது மழகோ. 19

சேடிக்குல நின்காதலிற் சிதையும்மெனை மலரின்
மாடித்திகழ் சயனத்திடை மனநைந்துகி டத்தப்
பாடற்றடி யார்செண்பக வனமூடதிற் படுப்பேன்
வாடிக்கரிந் திடும்பனி வர்சப்பல மலரும். 20

அன்றைவரி னடிமைக்குறு மானம்பறி யாமே
நன்றின்னரு ளாங்கேயிழைத் தனையின்றிவ ணலியக்
கன்றும்மலர்க் கணையானழி மானந்தனைக் காப்பா
யென்றின்னன விசையாவவ ளீங்கென்றனை விடுத்தாள். 21

ஐயாவவ ளாயனந்தனக் கம்போருக மஞ்சும்
மெய்யாமுறு வற்பந்தியின் மெளவன்முகம் வாடுஞ்
செய்யாமுலை களுக்கிந்திரன் கரிமத்தகஞ் சிதையுந்
துய்யாவல்ல கியிஞேசையுந் துவளுங்குர லிசையின். 22

வேறு

காதள வோடிக் கடைசிவந் தகன்ற
கண்மலர்ப் பார்வைமுன் னனங்க
ஞதரம் பெருகுங் கன்னலுங் கையு
மாயன வரதமா டிடுமாற்
பேதையி னிளமைப் பருவமா மதிபாற்
பெருகுறுஞ் சவிக்கட லிடையே
மேதக வெழுந்த வலம்புரி யென்ன
மிளிர்தருங் கமுகுகந் தரமே. 23

பூங்கழைக் குமரன் பகடெனும் பரவை
பொங்குறுந் திங்களின் கரமாய்
மாங்குயின் மழலை மாதராள் காணு
மாந்தரின் கண்களுக் கொளியி
னெங்குமா மணியி னொருசுட ராகி
மும்மையா முலகினு முறையும்
பூங்குழ லரிவை மாரெனும் பாவை
பலபடப் புதுமையின் வளையா 24

நெடும்பகல் பயின்ற விரணிய கருப்ப
னிலவுறு மோவியத் துறையிற்
படும்பயன் பெரிது மிவளெனத் துலங்கும்
பங்கய தளவிழி யிணையுள்
ளிடும்பையிற் பெருகு மம்பினிற் கரந்தே
ரின்முறு வலித்தலுந் தணந்து
தடம்பெருங் குயத்துட் டயங்கெழில் வடத்துத்
தாளமும் பொரிந்திடத் தளரும். 25

பிரிவெனு மழலிற் பேதுறு மனத்தின்
குரலெனத் தழகழு ரைக்கு
மரிதினிற் புறம்போ நெட்டுயிர்ப் பனல்பாயந்
தானனங் கரிகறுத் திலகு
முருகவிழ் முல்லை யாய்ச்சியர் முன்ன
னினதெழில் படிந்திடும் படியே
மருவியிம் மாதுன் மரைமல ரடியே
மணந்தன ளிடைவிடா துறையும். 26

காவதங் கமழுங் கடிமலர்ப் பராகங்
கயர்வுறத் தொகுத்ததிற் செறியு
மாவலின் வண்ட லயர்தரு சிற்றி
லிழைத்ததை யாயர்பா டியினின்
றேவுறு தரிய கோவியர் குரவை
யுவப்புற விழைத்தமா மாயன்
மேவிய சகடு படுத்திடு மடியின்
மிதிப்பதென் றேவென மிழற்றும். 27

படர்தரு குந்தத் தருநுனி யிவர்ந்து
தன்விலை யரியபூம் பட்டை

யடலூறு முன்றன் மலர்க்கரத் தேந்தி
யாங்கமர்ந் தனையென மருளா
மிடைதரு வனத்து ளெம்மயி லொருபூந்
தருவினை மிசையுற விழியாப்
புடவை யருள்வாய் பூமகள் கணவா
வென்றுரைத் தஞ்சலி புரியும். 28

தேன்றுளித் திடுசெந் தாமரை மலரைச்
சிவணிடுங் கண்கணீர்த் ததும்ப
வான்றுதித் திடுநின் வரைநிகர் மார்பின்
வனமுலை புதைதரப் புல்ல
வேன்றுகுத் திடுமுன் னல்வினை யுளதே
விதுசெறிந் திடுகெனத் தாளந்
தான்றெருத் தனஞ்சுக் குறுமிடை சகுனந்
தரைமிசை மண்டல முறவே. 29

மாந்தளி ரருந்தி மாதவிப் புதருண்
மறைதருங் காலகண் டத்தைக்
காந்தளங் குலியாற் கருத்தசைந் தழைத்துக்
காதல னிவணுறும் வண்ணந்
தேர்ந்திசைக் குதியே நீங்கனி தினமுந்
தருகுதுந் தீங்குற வனங்கன்
போந்திட விசைக்கிற் பூம்பொழிற் புறத்தே
போம்படி துரத்துது மெனுமால். 30

உறங்குழி யுனதங் கரங்களிற் றனதின்
கந்தரத் திடையொளிர் மாழை
நிறங்கிளர் தாலி நிலவுற முடிந்து
நெருப்பிடை பூம்பொரி சொரிந்து
மிறங்கியின் பதநின் னெழிற்கரத் தெடுத்தாங்
கம்மியின் மேலுற வினைத்தே
யறங்கெழு வதுவைவத் திருவிழா வாற்றக்
கண்டவ ணயிலுணர்ந் தயர்வாள். 31

காவுழி யகன்ற வாவியா ரன்னங்
கண்டது கடல்வணன் வளையென்
றுவகையின் மருளா வதைவிளித் தைய
வாரண நாயகன் வதனம்

மேவிய மணமம் புயத்ததோ வன்றி
மிகுமரி சந்தனத் ததுவோ
கோவியர் விழைய்பு மிதமுறு சுவையு
மியாவதோ வெனுமகங் குளிரா 32

அம்பரங் குழுமுங் கார்முகிற் படல
மையமின் படிவமென் றயிர்த்து
நம்புமின் னசையி னருகுறு மாயர்
தனைவிளித் தரங்கமா நகரா
னெம்பிரா னீதோ வெழுந்தன னிடும்பைக்
கிலக்கமா யினையுமென் றிறத்தைச்
சம்பரா ரியினு லவனுழை யேகிச்
சாற்றுமி னெனவறை தருமால் 33

மற்றுவெங் கதிரின் வெயின்மறைத் தகல்வான்
மலிபல துகிலரங் கேசற்
குற்றவா ராம மெனுங்கரி கிரிவேங்
கடமுத லுயர்தலம் பலவு
முற்றுறு முலையீ ரெழுந்தவ ணொளிரு
மூலகா ரணமதற் கிவனை
யெற்றுறு திருந்தா லினியுயிர்த் துறையா
ளெனவிரங் கிடுகென விசைக்கும். 34

பையறு வரவப் பாயலான் கையி
னொருவனை பற்றுறு தென்றென்
கையறு திலகு மதனையும் பையக்
கழன்றிட விழைத்திதைக் கவர்வான்
பொய்யறு விரகொன் றிழைத்தனன் போலும்
பொருந்தியென் கண்முகப் பிரந்தான்
மையறு மணியி னிறத்தினுங் களிக்க
மற்றெனக் கருத்தியே னிலதோ. 35

வேறு

அடியிரண்டி னுலகுமூன்று மபகரித்த நாறகரன
கொடியின்வாடுங் கொழுக்கொம்பற்ற கொள்கையாய வென்கரத்
திடுதெரிந்த கங்கணத்தி லின்னுமாசை யெய்திடன்
மிடியின்மீது செல்வனூரு மிகுதியை விளக்குமால். 36

விரகின்மீது வெம்மைகாலும் விதுகரங் குளிர்ந்ததென்
றுரைதருவ துவனுதித்த வென்னையிங் குழன்றிட
வரைகடுங்கண் வாரிவண்ண னீரமற்ற சிந்தையைக்
கிருபைதங்கு நிதியதென்று கிளக்குந்தன்மை யொக்குமே. 37

மாணியாய ரங்கனன்று மாவலிக்க ணேந்துதன்
பாணியார்ந்த கங்கணத்தை யப்ரபூத மென்றுணர்ந்
தேணியன்ற வென்கரத்தி னிலங்குகங் கணத்தினை
நாணிகந்தொ ளிந்துமெல்ல வவ்வுதற்கு நாடுமோல். 38

அன்றயோத்தி மன்னகன்ற வம்புராசி மீதணை
சென்றிழைத்த ரக்கரைச் செகுத்தெழிற் செனகிபை
யொன்றுசெய்தி கண்டரங்க னொருமுயற்சி யுமுறு
இன்றெனைப்பு ணர்ந்துமின்ப மெய்தவென்கு மட்டலோ. 39

முந்திரும் பிரளயக் கடற்கணூடு மூழ்கிய
விந்தமே தினிப்பெணுய்ய வேனமா யெடுத்தவ
னைந்துசோக சாகரத்து ணுடக்குமென் கரம்பிடித்
தந்தமா யெடுத்தளிக் கிலாததென்ன பரவமே. 40

முன்னுருக்கு மிணிகவர்ந்து முன்னலா லளித்தவன்
றன்னெழிற் குருகுமாதர் கட்கருளுந் தானென்ப
துன்னிலுண்மை யேனுமிங் குணர்ந்துனையு மொழிவிலா
தென்னையாங் கெழுந்தளிக்க கில்லதென்ற னெளிமையே. 41

தந்திகோத மன்மனைவி தசகளத்தன் தம்பியோ
டைந்துவீரர் பன்னியின்ன வடியவர்க் கருளுமே
லிந்துவூரும் பிரணவத்து ளிலகரங்க ணினையுமென்
சிந்தைநோ யறிந்தளித்த லின்றிதென்ன செய்தியோ. 42

அவளுறுதி யான்பிழைக்கே னென்னுமுன் னறைதருங்
கவளமா கரிக்குலத்த கதிரவன் குலத்திறை
பவளவா யரங்கனின்ற தைமறந்த பான்மையுந்
தவளநஞ்ச ராவினொன்றுந் தங்கியூறுந் தன்மையோ. 43

என்னவின்ன பலசெறிந்த திருமொழி யியம்புறு
வுன்னையெந்த வண்ணமேனு மொன்றவொன்று நசையினு
லன்னமன்ன வவளெழும்பு மாருயிர்த் தகைத்தெழின்
மன்னுகண்ட மன்னரிற்கு மென்றுசேடி செப்பினள். 44

வேறு

செப்பக் கேட்ட சிரீதரனச் செவ்வாய் மயிலி னசைநோயை
வெப்புச் சிறிது விண்டனனு மெனினு மவளார் வேதனையின்
கப்பக் கவலுங் களிப்புமணங் கமழுங் குழல்சேர் சிலதிமுகத்
தற்பிற் கடைக்சண் பாய்தரவிங் கறைத லானு னருணிதியான். 45

மின்னே யென்னே மதன்பகழி மிளிருங் கோதை யிதயத்தும்
பின்னே யிங்கும் பீழைமிகப் பிளக்கு மிந்தப் பெருங்கொடுமை
தன்னு னன்றே நின்சகியின் றனிமை நேயி னிருமடங்காய்
மன்னே யானிங் குழன்றலைவேன் மலையீ துண்மை யறியீரே. 46

ஓவா துன்றன் றேழியினை யுள்ளத் திருத்தி யவளுருவ
மேவா நின்றே யளிகேட விதியி னுனே மேதினியிற்
பாவாய் நின்றே னிதுவாய்மை யன்றே லந்தப் பைங்கிளியின்
பூவா முடல நீவாமே யென்னே வுயிரிற் பொருந்துவதே. 47

ஓரேர் பொருதுவ ரொண்டொடியா ளன்றென் னுர்வந் தனிலுழந்தே
நோரா தன்றே யுயிர்நீத்தா ணிலவும் பூணு யதன்பயனிங்
காரா தல்லும் பகலுமுன தழகார் சேடி மணவின்ப
மோரா நைந்து மனமுருகி யுடல மின்னுங் கரிகறுத்தேன். 48

மானே யென்று மரகதமா மணியே மானு மென்னுடலந்
தேனே யுன்றன் றிருமொழியா டிறமா யொன்று நசைப்பிணியிற்
றுனே யிங்கு வெளுத்ததுகாண் டண்ணங் கதிரி னிலவுறலு
நீனு றியல்பி னெகுவான நிலவும் வண்ண நீள்குழலாய். 49

அவுண ரஞ்சு மடலாரென் னையா யுதமு மைங்கணையான்
றுவளும் பூவா ளியைவெல்லுந் துப்பின் றென்னே துவளுறுமால்
குவளை நாறும் நீள்சகியார் குழைசேர் விழியின் கடைகணிப்பிற்
றிவளுஞ் சிறிய பங்கடலைச் செறிந்த செருக்கின் றிறமதுவே. 50

அழலைச் சொரியு மம்புலியா திகளா லலமந் தென்னிதயங்
கழலற் கரிய வுயிரினையிங் காலக் கருதி யதுமற்றம்
மழலைச்சொல்லி விழைவானே வாளா விருந்த தெனிலுயிரி
னெழிலிற் குறையு ளாமவளே யெற்கிங் கரிய திருவன்றே. 51

தென்றற் குழவி யென்விரகத் தீயை வளர்க்கு மதுவெனிறு
மன்றற் குழலி மகரிகைசேர் நகிலந் தோய்ந்த மலர்த்தெரிய

லொன்றிப் புதிய மணங்கொண்டிங் குலவுந் திறத்தா ளதையுடலங்
கன்றிக் கருமை யெய்திடினுங் காதல் விஞ்சிக் கலந்துறுமே. 52

அல்லார் குழலி னன்புமிகச் செருகிக் கண்டிங் கவள்விடுத்த
மெல்லா ரரிய விம்மலரின் விரைசேர் பிணையன் மேனளின்
மல்லால் வஞ்ச மல்லடர்த்த வென்றன் றேண்மே லம்மயிலின்
புல்லா நின்ற பைங்கழை நீர்ப் புயமே போலு மிதமருண்மே. 53

பீடார் கீசப் பெருமகனின் பிறங்கன் மீதிற் பிரிவழலால்
வாடா நிற்க வளரானுமன் வலியா ரரக்க ரூரிடைநின்
றேடார் குழலி யின்புறவன் றீயக் கொண்டிங் கெற்களித்த
சூடா மணியைச் சூடுசுகந் தருமா லிங்கித் தொடையலரோ. 54

கன்னன் மொழியா ளணிந்துதவுங் கமழுந் தொங்கல் கட்புலனுக்
குன்னுந் திங்க ளுயர்கலைபா முள்ளக் கிரசா யன மிதுவாம்
மன்னும் படிவ மணிந்திடுநான் மகிழுங் கடலின் னமிழ்தமுமா
மென்னின் னுயிரு மிதனனே தளிரா நின்றிங் கிருந்திடுமால். 55

வேறு

முனியும் மாழ்குறு முகிழ்மென் முத்தணி முலையா யிப்புவிமேன்
மினுமென் னூறொருமி மிடையென் மூர்த்திக ளெல்லாம் குருகையர்கோன்
புனையும் மின்றமி ழெனுமொப் பொன்றறு புதுமா றமவருந்தப்
பொனின்மா ளிகைபல சேரத் திருநகர் விரைவிற் போந்திடுவார்.

ஆங்குப் பொய்கையிருழ்வா ராதி யாங்கே யார்த்தரலுங்
கோங்கிற் பொலிதரு கொங்கைக் கோதையின் கூடப் பட்டர்பிரான்
பாங்கிற் படர்தரு மக்கா லென்னுயர் பத்த ரொன்றுபடா
வேங்குற் றூர்தரு மெங்கட் கேய்திரு மணநன் கிழைத்திடுவார். 57

என்றந் நாதனு மிசையா வின்றிரு நாமம் பொறித்தொளிரு
மின்றன் னூழியு மிலங்கே யின்மண நாறும் பிணையலுமீந்
துன்றன் றேழியு முவந்தின் புறுவண முதவித் துயர்சிறிது
மின்றென் றும்வண மியம்புற் றூற்று கென்றிசை விட்டனனால். 58

கொண்டக் கொம்பனை யாளக் குறைவறு கோளா ரின்பொருளக்
கொண்டற் கிணைய னரங்கன் றூடொழு கருளுங் கொண்டவனை
விண்டத் திகரன் வெயிலா னேமுது வேனிற் கண்வெம்மை
மண்டத் தீயவ ளிக்கம் பரமெழு மழையின் னளியென. 59

வாடும் கோதை யிடத்தில் வாளியும் வந்தப் பொருளுதவக்
கோடுண் கொடியி னெழுந்தா ளுள்ளமுங் கூறப் பெருமிதமே
நாடும் கதிரவ னுதயங் கள்ளியி னவிலுந் திருவரங்கன்
கூடுஞ் சமயமுங் குறுகுந் தினமவள் குறியா விருந்தனளால். 60

10-வது சருக்கம் முற்றிற்று.

ஆகச் சருக்கம் 10-க்குச் செய்வுள் - 613.

---

ஸ்ரீ

## ஆண்டாள் வைபவம்

### 11-வது சருக்கம்

வேறு

மாமறை மொழியின் வண்ண மலிதரும் பொழில்க ளெல்லா
மாமள வறிந்து காக்கு மாதிமூ லத்திற் கூனந்
தீமையிற் றெரிக்கு மாந்த ரீன்றெடுத் தளித்தோர் தேத்து
நோமுரை பகரு மாக்க ணுகர்வதே நுகர்வ ரன்றோ. 1

பட்டர்க ளிறையு மைந்து பகழியான் விழவுக் கேய்ந் த
கட்டழ குடைய கன்னிப் பருவமுங் கரிய மாலைத்
தொட்டனை தரவி ழைந்த வவளது தூய வாய
விட்டமு முணர்ந்து ஞானத் திழைத்திடற் கிசைந்தா ராங்கே. 2

சடந்தனை முனிந்த யோகி சன்னிதிக் கடியா ரோடு
மிடைந்திடு மரங்க னென்று மிளிர்தரு மனத்திற் கொள்ளாப்
படந்திக ழரவி னல்குற் பாவையிற் றமது பாத
மடைந்திடு மதுரை யாளு மரசனுந் தொடரப் போந்தார். 3

வேந்தருக் குரிய பல்ல வீறுடன் குருகை கூடி
மாந்தளி ரனைய மேனி மாதரா ளிறைவ ரோடும்
வீழ்ந்தடி வணங்க நம்மாழ் வாரகம் விழைவிற் பொங்கிக்
காந்தளங் கரத்தி னனைக் கடைக்கணித் தருளி னரால். 4

கோதையின் பெரிய தந்தை பின்னரங் குரையிற் கொள்ளா
வேதமாந் தமது பாடற் றமிழமிழ் தருந்த மேவி
யாதரம் பெருக முன்ன ரமருமா நூற்றெட் டாய
மேதரு குலத்து மாய னருச்சைகண் மிளிரக் கண்டார் 5

மற்றுமாம் பிலத்தி னீழன் மலிதரு மரங்க னாதிக்
கொற்றவெண் குடைக விக்கக் குலவருச் சைகளைக் காண்பான்
கற்றிடுங் கலைம கட்குக் கணவனே முதலாந் தேவர்
பெற்றநற் குழாங்கொண் டண்டவெளியெங்கும் பொலியக் கண்டார்

பொய்கையார் தலையா யெங்கும் புகழ்மது ரகவி யீறா
யுய்யமா வுலகம் வந்த வுயர்வுறு வாழ்வா ரெல்லா
மெய்தியாங் கொருவர் தம்மை யொருவர்க ளிறைஞ்சத் தாமு
மெய்திக ழகத்தி னானே யளவளாய் மிகக்க ளித்தார். 7

அடியவர் முறையின் முந்தும் பராங்குச னடியிற் றத்த
முடியுறப் பணிந்தே யந்த முதலாழ் முதல யாரும்
வடிவுறு மவரின் வேத வாய்மொழி புரிந்து கேட்டுப்
படியறுந் தமது பாவை யவர்கொளப் பணித்தார் மன்னோ. 8

குருகையார் கோமான் பின்னுங் கூடு மாழ்வார் களோடு
மொருகலை நுதலாள் செய்த வுவமையொன் றரிய பாடன்
மருவுறு பிரபந் தங்கண் மனமுறச் செவியுற் றின்பம்
பெருகுறு மவற்றின் சாரம் பெரிதென வுவந்து மற்றும். 9

அனங்கனின் றுணையா மந்த வாய்மயிற் பருவ மன்னாண்
மனங்கணன் மருமம் புல்ல மாழ்குவ திவற்றை யொராக்
கனங்குழைக் கருத்தின் வண்ணஞ் சுயம்வரங் கடிதின்முற்ற
நினைந்தனர் நிருப னோடு மதுரமா கவியை நோக்கா. 10

நித்தில நிரையைக் கைர வத்தினு ணிரைத்தன் மானு
மொத்தவெண் ணகையா ளிந்த வுயர்திரு மணத்திற் கேய்ந்த
பத்திர மமையு மெல்லாப் பணியினீ ரமைக்கு கென்ன
வத்திரு மொழியின் வண்ண மவர்விழைந் திழைக்க லானார். 11

பளிங்கினாற் சுவரா மோங்கிப் பருத்ததூண் வயிர தானும்
விளங்குவெண் பொற்றகட் டான் வேய்ந்ததா மீதின் முற்றுங்
களங்கமிற் றுகிரி னானே யுத்திரங் கலந்த தாங்கீழ்த்
தளங்கிளர் மரக தத்தின் பலகைகள் படுத்த தாமால். 12

பித்திகைத் தலங்க டோறும் பீதக வாடை மாயன்
வித்தக விபவ முற்று மோவியத் துறையிற் றீட்டி
யத்தகை யமர்ந்த வெண்பட் டாடை மீதலங் கவார்த்துக்
கத்திகைத் தரள மாலை கலந்துநான் றிடுமோ மெங்கும். 13

மணிவிளக் கொழுங்கின் மின்னு மகரதோ ரணங்கண் மன்னு
மணிகிளர் வரயி ரூேறு மரம்பையுங் கமுகுந் துன்னுங்
கண்ணருச் சைகளின் மூர்த்தி யிடையுறக் கர்ணத் தானே
மணியிழைத் தமைத்த நாற்றெட் டார்தன மன்னு மாமே. 14

இன்னுமம் மகத்திற் கெய்து மிருடிக ளிறைவ ரீட்ட
மன்னுற வவர்க்குத் தக்க மாழையந் தவிச னேகந்
துன்னுமா மதனுள் வெப்பந் தோன்றுரு திளங்கால் செய்யு
மின்னிருஞ் சிவிறி யேந்து மெந்திரப் பாவை பல்ல. 15

இடைவதூ வரர்கள் கேறி யிருந்திடற் கியைந்த மேடை
யிடையினின் றெழும்பு நாளு விரத்தினத் தொளியின் சேர்க்கை
யிடையினி திருந்து வேட்கு மெம்பிரா னெவர்க்கு மெட்டா
திடையனுயப் பலவா யிங்கே யிலகுவ னென்ப போலும். 16

பகடினு முணர்ந்து ரைத்தற் ககப்படாப் பண்பிற் றுய்வெண்
பகடிவர் சுனுசி ரன்றனு லகமேற் படிய மின்னு
முகடின்மா மணியின் மண்ட பந்தனை முடித்தா ரெங்கு
முகடிருத் துவது மீதே யொளிர்தர நாட்டி னூரால். 17

மங்கள மதற்கு மும்மை யுலகினர் மணத்த லாலே
யங்கவர்க் கியையும் வண்ணம் பொருளெலாந் தொகுத்த தன்றிச்
செங்கணற் குள்ளா யிந்தச் செகத்த மரிதர தேவ
சங்கமுஞ் சாருமாறு முடங்கலுந் தீட்டி விட்டார். 18

அவனியி னரச ரெல்லா மடைகவென் றறைந்து விட்டார்
தவநிறாஉந் தவசி யெல்லாந் ததைகவென் றியம்பி விட்டார்
குவிமுலைக் கணிகை யெல்லாங் கூடுகென் றுரைத்து விப்பா
ரவரெலா முடனே யந்தக் குருகையி லணுகி னூரால். 19

மூவகை யுலகி னுள்ள யாவரும் யாவு மோத
மேவரு மிந்த மண்ட பந்திரு மிளிரு மார்பன்
றுவரு முலக மெல்லாந் தாங்குமா றிடுக்க ணின்றி
யாவெனத் திறந்துட் கொண்ட வகட்டினை யடுக்கு மன்றே. 20

அம்மணி செறியு மண்ட பத்தொனி யலங்கு மாற்றூற்
செம்மலர்த் தடங்க ளாருந் திருநக ரியுமாங் கல்லும்
வெம்மைசேர் பகலும் வேறு யறிவுறு தமர ரோடு
மிம்மகி யிழிந்த தேவ நகரியை யியையு மாதோ. 21

சுயம்வர வமையத் திங்குத் துவைத்திடும் பணைக ளோடு
மியம்பின வியைந்து தேவ துந்துபி குலமு மிம்பர்
நயம்பட நடிக்கும் வார மாதரி னடனத் தோடுங்
குயங்குலுங் கமர மாதர் குனிப்பதுங் குலவித் தம்மா. 22

மதிமுகந் துளங்கா தங்கண் மானென மருண்டு நோக்கச்
சுதைநில வெறிந்து மின்னு முருந்துறழ் மூரல் தோன்ற
மதர்வுறு மயிலன் னாரிங் கிசைத்திடும் பாட லோடு
மிதுனகின் னரத்தின் கீத மிடைதரு மென்ப மன்னோ. 23

எனைத்துல கினரு மாங்கே யளவளா விருந்தே யின்பஞ்
சினைத்தெழச் செறிந்த வந்தச் செழுமணிப் பவள மூதூர்
வினைத்திரள் விலக்கி நாளும் விரசையிற் படிந்து கூடு
மனத்தினு நினைத்தற் கெட்டா வைகுந்த மதனை மானும். 24

சடசித ரருளி லந்தச் சதுரர் களிரு வரும்பின்
மடலவிழ் துளவத் தாரா னருச்சைகண் மஞ்தந் தம்மி
லடைவுடன் பொலிய வாங்காங் கிருத்துபு வவர்கட் கேய்ந்த
படிபல பகடு மாற்றிப் பணித்தனர் பிறகு மார . 25

புட்பவந் தருமா காயம் பொலிதர வணிவ தேபோ
னுட்பமா ரிடையா டன்னை நுவலரு மணிக ளார்ந்த
பற்பல பணிக ளானும் பன்மலர்த் தொடைய லானும்
வட்குமா ரிரதி தானும் வகையுற வணிந்தா ரன்னோர். 26

வகுளபூ டணர்முன் னாய தந்தையின் வருக்க முன்னும்
மிகுபுகழ் விமலை முன்னா மன்னையின் வருக்கம் பின்னு
மிகுளையர் தொகுதி யன்பா ரெழிலனுக் கிரகை யாதி
மகிழ்வொரு மருங்கும் போத மணமக ணடந்தாண் மன்னோ. 27

நடந்தவ ணவிலற் கெட்டா நகைமணி யொளியே சூழுந்
தடம்பெரு மணிமா மண்ட பத்தினைச் செறியத் தாவுஞ்
சடந்தனை முனிந்த வாழ்வார் தவிசினி லிலகும் வையங்
கடந்தவ னுருவ மெல்லாங் கைகுவித் திறைஞ்சி னரால். 28

துடியிடை யவளு மற்றைத் தொண்டரும் வணங்கப் பின்னர்
தடவயற் குருகூ ரண்ண றனையை விளித்துப் பாராய்
முடலையி னொருறாற் றெண்மர் முனைமணித் தவிசி னுள்ளார்
மட்வரா லுனது மன்றற் கெழுந்த மாலவதா ரங்காண். 29

கண்முகப் புறையு மிந்த விருவருங் கலசாம் போதி
யொண்மையிற் பொலியும் வைகுந் தம்மிவை யொடுவிப் போந்த
பண்மரு வமர சூரி படலமு மருவச் சூழும்
பொன்மனை வயருஞ் சூழும் புராதன புருட ரம்மா. 30

நாற்பதின் மர்களாம் பொன்னி நாட்டினர் வழுதி நாட்டிற்
கேற்பவ ரொருபத் தொண்மர் கேரளர் பதின்மூன் றென்ப
தோற்பருந் தொண்டீர்த்தா ரிருவர் சேரிரு பதின்மர்
மேற்படு நடுநா டார்வோர் மிளிரு மோரிரு வராமால். 31

உத்தரத் துறைவோ ரேகா தசரிவ ணெளிரு நாற்றெட்
டுத்தம தலத்தோ ரென்ன வுரைத்தருள் புரிந்தன் னோர்கள்
வித்தக மனைத்து நன்குவி சதமாத் தெருட்டு கென்று
சித்திர வனுக்கிர கைக்குச் செப்பினர் மறித்து மாதோ. 32

வேறு

மணிவரமு மறுவுநான்கெனு மலரின் கரங்களுந்
துணையறு சங்காழியுந் துகளறு நீனிறமொடு
மணிபெற வேறறிவுறு தலங்கரியின் மூர்த்திகள்
பிணைவிழியாள் கண்ணுறுப் பெருவரங்கன் றெரிவுறுள். 33

ஐயமுண்ட நெஞ்சினுட் கனுக்கிரகை யவரவர்
துய்யநாமம் விருதுக டொடக்கமாய யாவையுஞ்
செய்யவாய் திறந்தனள் செங்கையிற் குறித்துரை
செய்யுமுன் னிகழ்ந்தவோர் செய்தியுண்டு செப்புவாம். 34

அந்தவிண்டு மூர்த்திக ளவள்வனப்பை நோக்குறு
விந்தையெய்தி யிவண்மதன் வெல்விலோ தனங்கொலோ
செந்திருவின் பதித்துவ மிவடமூவுஞ் சீரினுக்
கெந்தமுலை யென்றக மெழுகுபோல வுருகிறு. 35

அங்கயட்டி பொற்கொடி யம்புயான னந்தனி
லெங்குமுத் தெழிற் சக் ணையரும்பு நீர்த்துளி
செங்கிடைக் கிணையிதழ் சிறிதுறக் குவித்தன
டங்குவெம் மையிற்சிறுகா லுயிர்ப்ப டண்ணென. 36

வெண்மைமின்னு கன்னமும் வேனில்வே ளணிசெயுந்
தண்மையாய முகுரமே தடற்றாரீஇய வாளெனுங்
கண்மருண்டு மானெனக் காண்வனப்பி தொன்றுமே
விண்மணெங்கும் விலைகொளு மென்னில் வேறியம்பலேன். 37

உள்ளமொன்று மாசயம் விழியுரைக்கு மென்பராற்
கள்ளமின்ன தென்றுநாங் கண்டறிய கிற்கிலே
முள்ளவெம்மு ளெவரிட மோகுமோ கருத்தெனு
வுள்ளியைய மென்னுமா வுததியுட் கிடந்தனர். 38

கடியுரத்துண் மன்னுறுங் கௌத்துபத்துண் மின்னுறுந்
துடியிடைப் படிவமத் துலங்குநாற் றோரெண்மரும்
முடிகுனிந்து கண்டவணம் முளத்துண் மோகமாய்ப்
படியுமென்று மதர்வொடும் பயப்பயப் பகர்வரால். 39

ஒருவர்கோதைப் பைங்கமு குறழுகந் தரத்தனை
பரிவினோக்கி யொளிர்கரப் பாஞ்சசனிய நோக்குவா
ரொருவருந்தி மண்டலமுற்று நோக்கி யொண்கர
மருவிமின்னு திகிரியை மற்றுநோக்கி மகிழ்வரே. 40

சிலர்பிறழுஞ் சேலெனும் வேல்விழியை விழிப்புறு
நிலவுதங் கரத்திடை நெடியவாள நோக்குவார்
பலர்கரும் புருவமே பார்த்துவிம்மி தத்துடன்
குலவுசார்ங்கங் கண்டுளங் கூர்வரின் களிப்பரோ. 41

மார்பமன்னு மணியினை நோக்கிச் சாக்கினிற்சில
ரார்வமுந்த வவண்முக வம்புயத்தை நோக்குவார்
கூர்வலாசை நோயினிற் கூர்நகைப்பு முதலெலாஞ்
சேர்வரோடு பேசுகாற் செய்வபோற் சிலர்செய்வார். 42

இன்னவண்ண மன்னவ ரிலகுகாலை யின்னவன்
மன்னுபூம் பொதும்பருண் மலருசாதி தன்னையே
யுன்னிநேடு மளியெனவோ ரரங்க நாயகன்
தன்னைநாடி நகையெழத் தானிருக்கு மேல்வையில். 43

ஆளிமுன்ன ராழுவா ரருள்புரிந்த வண்ணமே
வாளியன்ன கண்ணினுள் வகைபெறத் தெருண்டிட
நீளயாவு மவர்செயல் வேறுவேறு நிகழ்த்துவான்
வேளினுனை யன்னவள் விரல்பிடித்து முந்தினள். 44

வேறு.

பஞ்சூட்டும் பதமலரா யித்தவிசிற் பார்மகளு நீளை மாதும்
மஞ்சூட்டு மணிமாமைத் திருமேனி தனிவிறையு மகலா தொன்றி
நஞ்சூட்டு மயிலனைய நயனங்கள் செலுத்தியுற றகுமா மாயன்
செஞ்சூட்டுக் காதம்பஞ் செறிவயல் சூழுறையூ ரிற்றிலகு மென்றும்.

சோர்தரிலங் குதியடியைத் தொடுகுழலா
யித்திருமா றுயர்செய் தஞ்சைப்
பேர்தரித்த வவுணனுரம் பிளந்து
நரகரியா யப்பெய ராளூரில்
வார்தருசெங் குருதியினு லுடலெங்குஞ்
செவ்வானமெனப்போ தோன்ற
வார்தருமா வருந்தஞ்சை மாமணிக்
கோயின் மிடையு நீலமேகன் 46

ஆலினிளந் தளிர கட்டா யிவ்வரியு
மணிமுத்த மெனுமா வாற்றின்
பாலனைய நுளாசிதற வின்மணிகள்
படிந்ததெனப் பொலியுங் கோட்டிற்
காலனெனுந் தண்டகனைக் கடிந்து
கடிதடஞ் திகழுவனை யுஞ்சங்கு
மேலுமணி மாடமலி திருமுட்டி
னத்திலகு மெழில்வ ராகன். 47

செய்யவிள வரம்பையுநா ணத்திரண்டு
திகழ்குறங்கு செறியும் பாவாய்
பொய்யகலும் பிருகுமுனி முன்னொருகான்
மும்மூர்த்தி களிலும் போதந்
துய்யபரம் பொருளெதுவோ வென்றயிர்த்துத்
துகளொழியத் துணிந்து தாளான்
மெய்யமருந் திருமாலை மிகைத்துதைக்க
வப்பெருமான் களிப்பின் மீறி. 48

ஐயாவென் கண்மணியே யுன்பாத
மளியுமென வலமர் தேதன்
செய்யாரின் கரத்தவன்ற னடிவருடச்
செழுந்தவத்தோன் சிந்தை தேறு
மெய்யாரு மித்தகைய சத்துவமே
மிடைதருமிப் பெருமா னன்றோ
பொய்யாத பரம்பொருளென் றுளம்பூரித்
தப்பவத்தைப் போக்கும் வண்ணம். 49

எம்பெருமா னிணையடியை யிதயமலர்க்
குள்ளிருத்தி யிகவா தென்றும்

வெம்பரிய தவமிழைக்கு மத்தவத்திற்
கிரும்பயனாய் விமலை யோடு
மும்பர்தொழ வுரகணையி லுறங்கிடுமோ
லிப்பரம னுறங்கு மந்தச்
செம்பதிக்குக் காரணப்பே ரன்பிலெனச்
செப்புவர்கள் சிறப்பின் மன்னோ. 50

வயிரமணிக் குழையிலகும் வள்ளைதனைப்
பழித்த செவிவனையும் பூணாய்
செயிரறுமிப் பெருமானுஞ் செந்திருவாழ்
மலர்வயல்சூழ் கரம்ப னூரி
லயலமரு மயனரனா ராரணமுங்
திரிபதகை யரவ மும்பொற்
பெயர்நதியி னின்னிசையும் பூரித்துக்
கேட்டுறங் குத்தமனா ரன்றே. 51

சிந்தூரத் திலகமுறு தெழிற்பிறையுஞ்
சிவனொத நுதலாய் கேட்டி
யெந்தாயிந் திரையானைக் கெவ்வுலகுந்
தானுமியைந் திருக்க வண்ட
னந்தாத விப்பெருமான் கரிமறைப
வளர்சா லிப்பழன நண்ணுங்
கொந்தாரும் பொழிற்றிருவெள் ளறைகுலவும்
புண்டரிகக் கண்ணன் கோடி 52

திரிந்திடவிற் றீம்பாலு பொருவாத
தேமொழியாய் திகழு மிந்த
வரிந்தநெடுங் கோதண்டன் வானரத்தால்
வல்லரக்கர் பதியைச் சுட்டுப்
பெருந்தசகண் டன்முதலா மவர்குலத்தை
வேர்பறித்துப் பிணைந்து சீதை
யருந்திருவுஞ் சயத்திருவும் புள்ளம்பூ
தங்குடிவா யலங்கி ராமன் 53

சஞ்சலையுங் கண்டொளியு மொழிலாயிச்
சலசவிழிச் சங்கரர் கைய
னஞ்செறியும் பலாசவனஞ் சூழ்திருப்பே
ரெனுநகரு ளனந்தன் மீதே

செஞ்சுவைய பூபாளிறை கும்பத்துந்
திருமாதின் குயகும் பத்துங்
கஞ்சமலர்க் கரமனங்க ளமைத்துமுறை
துயிலப் பக்குடத்தான் கண்டாய் 54

கண்டுவரா னீரொளிக்கத் திகழ்கணைக்கா
லார்ந்த கருங்கண்ணு யிந்த
வண்டர்பிரா னுலகனைத்துந் திருவருளா
லளந்தளிக்கு முரக சாயி
யண்டர்களும் விழையாத னாரதிப
னண்டளிக்கு மையன் வேண்டி
லண்டியிவ னோடரவத் தேதுயில
வம்புயமென் கரத்தைப் பற்றாய். 55

நீராமைக் குருளைமுது குறமுமிளம்
புறவடியாய் நிலவு மிந்தச்
சீராருந் திருமார்பன் றேரமூந்து
ரெழுந்தருளுங் கோப னந்தக்
காராருங் கட்டழகன் சிறுபுலியூர்
கலந்தடியைக் கருது வோர்க்கே
பேரானந் தம்விளைத்துப் பிறங்கருமா
கடலமுத மென்னும் பேரான். 56

அறிவரிய தகையானே யாரணம்போ
னிலவுகையி னகன்ற கண்ணாய்
விறலரிய புட்கொடியிவ் விண்டுதிருச்
சேறையமரும் விமலன் பேரு
நறியசிசு நாயகனு நாடியிவ
னடிமலரை நெடுநாள் பொன்னி
யறையவருந் தவமிழைத்தே யடையவரும்
பேறடைந்தா ளென்ப மாதோ. 57

மாகந்தத் தளிர்நிறத்தா யிம்மாமன்
மண்ணமரர் மகஞ்செய் தாமம்
மேகங்க ளெனநாளும் வெயின்மறைக்குந்
தலைச்சங்க மெனுமூ தூரா
னுகும்பேர் நாண்மதியென் றறைதரலு
மவள்வதனங் கரங்க ளென்று

மோகங்கொண் மரைமலரை மறைக்கவிவண்
முறுவலித்து மொழியும் பின்னும். 58

நின்முறுவ னிகர்த்திடவோர் நித்திலநான்
றுறுதவஞ்செய் நிலவு நாசி
மின்மதியார் முகமாதே யிப்பெருமான்
மிகுநலஞ்சார் குடந்தை தன்னுள்
வின்மணியோ ராயிரமாஞ் சுடரேந்தும்
பணியுடல வமளி மீதே
மின்மருவு விமலையுடன் மேகமெனத்
துயிலாரா வமுதன் கண்டாய் 59

வேறு

பொற்றா மரையலரும் பொய்கையரு கிப்புனிதன்
முற்றா முலையின்பம் பருகமுயங் கெனவிவளு
எற்றா வெனவிரவி கண்டசகோ ரங்கடுப்ப
மற்றா ளியுநகையா மகிழ்ந்தமைய லுற்றனளால். 60

மானேயிம் மாமாயன் கண்டிநகர் மணந்து
மேனாள ரன்சாபந் தீர்த்தருளு மேன்மையினே
யானவ ரன்சாபந் தீர்த்தபெரு மாளென்று
வானாட ரும்புகழ வாழ்வருளி வைகுவனால். 61

பொன்னேயிப் புண்டரிகக் கண்ணன்முன் மாவலியின்
மன்னே கிளர்செருக்கை மூவடியின் மாற்றியவன்
பின்னேதன் றாளடையச் செய்தபெரும் பேருடையான்
றன்னே ரருதிருவிண் ணகரப்பன் றானென்பான். 62

தேனேயித் திருவுறையுந் திருமார்பன் றேன்சொரியுங்
கானாரி ரும்பொழில்சூழ் கண்ணபுரத்தே யடியார்
நானாவி தம்பெருக நண்ணுசவு ரிப்பெருமா
னீனாறி ருங்குழலா யொண்ணுமெனி னேர்குறியால். 63

கண்ணேயிக் கண்ணபிரான் காரணப்பேர் நண்ணியவன்
பெண்ணேவெண் பாற்கடலின் பெரியதவ மிழைக்க
வுண்ணேய மோடிவனே யுவந்து தழுவியதால்
வண்ணேர் வயலாலி மணவாள னென்றிலகும். 64

நாகநக ரழக னங்காயிந் நாரணனே
சாகரநா ணுமணிக டிரையென்னுந் தன்கரத்தின்

மேகவண னிவற்கு மிக்கசிறப் பாயுதவு
மாகுமெனி லுள்ளமனே கவிவனம் புயமே. 65

கோதாயிக் குரைகழலன் றிருநரையூர் நம்பியிவன்
மேதாவி யெனுமுனியு மிக்கவெழி லம்புயையும்
பாதார விந்தனைத் தாற்றும் படிவக்கங்
காதார மாயெழுந்தே யானந்தந் தந்துறையும். 66

கண்டேயிக் கட்டழக னந்திபுர விண்ணகரன்
பண்டே திருநகிலம் படிந்திடுசெஞ் ஞாழலுர
முண்டே சிவந்தனனென் றுரைக்கவிவள் வேறிருக்கை
கண்டேகக் காதலியு முறுவலித்துக் கழறுவளால். 67

இந்தீ வரவிழியா யிந்தமது சூதனன்காண்
செந்தீ வளர்ப்பவர்கள் செழிதரிந்த ஞூராள்வோன்
மைந்தா ரழகனிவன் மருவினிய னமந்தனென்பான்
சந்தா ரிளமுலையா யுள்ளமெனிற் சார்குவையே. 68

மின்னே டிறங்கு கரிமேக மெனப்பொங்கி
மன்னே நடம்புரிய நீலகண்ட மாலுடனே
பொன்னே பொருந்தவொளிர் சித்திரகூ டப்பெருமாள்
கொன்னுருஞ் தில்லைவனங் கூடுமிந்த மாதவனே. 69

காழிச் சீராம விண்ணகரக் காவலனிவ்
வாழிப் பெருமானவ் வையாயுத விமலன்
ருழற் கருங்குழலாய் தடவயல்சூழ் கூடலூர்
வாழப் பிறழ்வையங் காத்தபெரு மாளென்ப. 70

இம்மா றிருக்கண்ணங் குடியினெழுந் தருளும்
பெம்மா னுயர்பார்த்த சாரதியென பேருடையா
னம்மா றிருக்கண்ண மங்கையமர்ந் தருள்வோ
னம்மா வடைபத்த ராவியெனு நாமமுளான். 71

தாயே கபித்தலத்தித் தாமோ தரனெனிரு
மேயே ரபிதானங் கரிகாத்தோ னென்பதுவே
வீயே றலங்கலவன் வெள்ளியங்குடி யினிலகுஞ்
சேயேயின் கோதண் டராமனெனச் செப்புவரால். 72

ஓவியருந் தீட்டரிய பாவாயிவ் வுத்தமன்றன்
பூவடியை யன்பினருக் கன்றிப் புறத்தொருவர்

மேவ வருளாத மேலோன் றிருநாங்கூர்க்
காவல் புரிந்தருளுங் கார்வண்ணன் காணுதியே. 73

வேறு

காளமுகி லிடைபோழ்ந்து கிளரும் வல்லிக்
கனருசிபோற் சிமந்த நடுவே காணு
நாளலரி னறுங்குழலாய் பார்த்தன் பள்ளி
நன்மணிமா டக்கோயி னலமே நாடும்
கோளமருந் திருத்தெற்றி யம்பலம் வைகுந்த
விண்ணகரஞ் செம்பொன் செய்கோ விலலு
நீளமறு கரிமேய விண்ணகர் வண்புரு
டோத்தமம் வெள்ளைக் குளமு நின்றே. 74

திருத்தேவ னார்தொகையே மணிக்கூ டம்மே
திருக்கா வளம்பாடி யெனுமின் னாமங்
தரித்தோங்குந் திருப்பதிக ளாங்கூ ரூடே
தயங்குமிவை யிவற்றுளிருந் தாளத் தானே
விரித்தாரும் வெண்குடைக்கீழ் விளங்கு மிந்த
விண்டுதிரு மூர்த்திகணீ விழைந்து காண்கென்
றுரைத்தாளவ் வுரையுணரா தகன்று டிங்களொண்
கலைவா னுடுகணத்தைக் கடக்கு மாறே. 75

புவியாரும் வைகுந்தமெனு மரங்கப் பொன்னகரான்
போக மொன்றே விரும்பும் பூவை
சவியாருங் கனக கமலங்கண் மன்னுமான
தத்தைத்தனி விழைந்து செல்லுஞ் செஞ்சுட்
டவியாத வரசவன மிடையே காணுநீர்
நிலையாதி களகத்தி னடையா தாங்குத்
திவியா தனங்களிடைத் திகழு மாயன்றிரு
மூர்த்திகளை நசையா தகன்று வீங்கே. 76

அனுக்கிரகை மற்றுமுரை தருமாலன் னப்பேடு
மகன்றொழியு நடைய மைந்த பாவாய்
மினுக்கிடு மிம்மேக வணனகத்தை வீட்டு
நூபுரகங் கையினரவ மிடைந்த பாங்க
ரனைத்துலகும் புகழ்திரு மாலிருஞ் சோலைப்பே
ரம்மலையி னழகனிவன் மதுரை மூதூர்
தனைப்புரந்த முன்மலயத் துவசன் செல்வந்
தானுகி யடைபவர்க் கைந்தருவு மாகி. 77

சுந்தரவல் லிகைதனக்குச் சுரக்குமின்பச் சுந்தரனு
மிவனு ரத்தை முயங்கு கென்னக்
கந்தமுறுங் குடிலா ளகையு நாணத்திற்
கமுகுநிகர் கந்தரத்தைச் சிறிது கோட்டி
யந்தமுறு மயன்மஞ்ச முவந்து கண்டா
ளவளுமுவந் தம்மணியிவ் வனங்கன் றந்தை
பந்தமுறுங் கோட்டி புரத்துரக மெல்லணைய
னென்று பனுவலெல்லாம் பகரு மாதோ. 78

அரவமணி மேகலையா யந்தவம்மா னழகாருஞ்
சவுமிய மாபு ரத்தே யானுங்
கரகமலத் திருமெய்யன் காண்டி யிந்தக்
கட்டழகன் புல்லாணி யெனுமாதே யத்திரை
திரை யேழி ருங்கடலைக் கடகத் தூய வெழிற்
குசையின் சயனத்தே கிடந்த வீரன்
மரைமலர்க்கைக் கோதண்டந் தரித்தோ னென்ப
மற்றந்த மணிவண்ணற் காணாய் மாதே. 79

அவனரிய திருத்தண் காலதிப னிந்த
வழகனுமோ கூரொளிருங் காள மேகன்
இவன்மதுரை யுறைகூட லழக னுன்னை
யீன்றவர்க்கிர் திரையோடு மெதிரின் மின்னு
வுவர்புரி மங்களா சாசனங்க ளென்னு
மலரருச்சை யருள்பொழிந்தே யுவந்தான் முன்னர்
திவளொளிசே ரித்திருமால் வில்லி புத்தூர்
திகழ்வீதி யாரவரு வானே யன்றோ. 80

நடமாடு ஞமலிமுன்னீ சூடித் தந்த
நறுந்தெரியல் புனைந்திவ னன்றுளம் பூரித்தான்
குடமாடி யிவன்குருகைக் குலவுமாயன் பொலிந்து
நின்ற பிரானுமஞ் சடகோ பன்செய்
யிடமாரந் தமிழ்மறை யின்னமிழ்தந் தேக்கி
யெழிலுருவ நாடோறுஞ் செழிக்க வாழ்வோன்
வடமாடுந் தாள வனக்கனக கும்ப
வாரேறு பயோதரத்தாய் வழங்கக் கேண்மோ. 81

தொலைவில்லி மங்கலந் தென்றிருப் பேரை
வைகுந்தந் தென்குளந்தை சிரீவர மங்கையே
யுலைவிறிருப் புளிங்குடி வரகுண மங்கை
யுயர்திருக் கோளிவற்றின் முறைமுறையே யுள்ளார்
நலமுறுமா வரவிந்த லோச னன்னு
மகர நெடுங்குழைக் காதன் கள்ளர்பிரான்
பலமாயக் கூத்தன் றேவபிரான் கர்சின்
வேந்து விசயா சனனேனிக ரொன்றில்லா 82

திருவைத்த மாநிதி யென்றெவரும் போற்றுந்
திகழு மிந்தத் திருநாமம் தரித்ததேவர்
மருவுற்ற மணிக்குழையாய் குருகூரண்டை
மன்னுமிந்தத் திருப்பதிகண் மகிழ்ந்து பாராய்
பெருகுற்ற குறுங்குடியிற் பிறங்கு நம்பியிப்
பெருமா னீண்ட பொன்மேனி யனுமந்த
வுருவுற்ற வும்பர் பிரானயனு ரந்த
வுத்தமனை யெழுபதின்ம ருச்சித் துள்ளார். 83

இம்மாய னருகணைந்த வரற்கு முன்ன
மிட்டரிய வையமலன் சாபந் தீர்த்தா
னம்மாய னனந்தபுர பற்பநாப னலங்கு
மணிச்சுடிகை யொராயிரமார் சேட
னம்மாமென் போகமெனுஞ் சேக்கை மீதே
யங்கயிலை மிசையமர் கார்முகிலொன் றென்னச்
செம்மாந்தே யறிதுயிலி னுலகங் காக்குஞ்
சேக்கையிதிற் றிருவுளமேற் சேர்தி யென்றாள். 84

வேறு

அன்னுளம்ந்து ணராதயன் மஞ்சம்மனு குற்றுண்
முன்னுடலை முழுதும்முள மோராறுற வுஞற்றுங்
கொன்னுருமு மூலகந்தனை யென்றேயறை குவராற்
பின்னுளியும் பிறர்வினையும் பேசற்கடி யிட்டாள் 85

திருவண்பரி சாரத்திரு வாழ்மார்பனித் தேவ
னரியன்னவன் றென்காலக ரையப்பன்னறி குதியாற்
றிருமூழிக்க ளத்தார்குடக் கூத்தனிந்தத் திருமான்
மருவுத்திருப் புலியூரதி பதியாமந்த மாயன். 86

திருச்செங்குன்றூ ருறைவானிவன் சிற்றுயனென் றுரைப்பா
ரிருக்குந்திரு நாவாயவ னெழினாரண நம்பி
யுரைக்குந்திரு வல்லவாழி லுறையுங்கோ னுவரிவனே
பெருக்குந்திரு வண்வண்டூரின் கேசவனிப் பெருமான். 87

காணுயவன் வாட்டாற்றினுட் கண்வளரெம் பெருமான்
மாணுரிவன் வித்துவக்கோட் டம்மாறை மலியு
மேணுர்திருக் கடித்தானத்தி னிலகுமப்பவ னிவனே
பேணுய்திரு வாரன்விளை பெருகும் பரவனே. 88

வெவ்வேறர விந்தத்திரு மிடையப்பிறங் கிவர்கள்
செவ்வாய்மட மயிலேபதின் மூவர்விறல் செறியு
மெவ்வாயிலுந் தெங்கேசெறி கேரளத்திலி ருப்போ
ரிவ்வாரணர்க் குள்ளேநினக் கியைமாயவ னெவனே 89

என்றேயவ ளிசைத்தாளிவ ளின்னேரிடம் பெயர்ந்தா
ளொன்றேகட னசைத்தோடுமங் தாகினியு மூலையா
நன்றேயருள் படியிற்பல நாடுங்கடங் தயலே
சென்றேகிடு செயலேயெனப் புயலேய்செறி குழலாள். 90

சகியேயிவள் கலுழ்த்தரங் கிணியின்கரை சாரும்
முகிலாருயர் மாடத்திரு வைந்தைபுர முதல்வன்
புகலார்தெய்வ நாதனெனும் புனிதத்திரு நாமன்
மகவானிவன் பதசேவையை யிகவாதொரு நாளும் 91

சேடீயிவன் றிருக்கோவலூர் சிவனுந்தேக வீசன்
பீடாருன்றன் பெருந்தந்தையர் மூவர்க்கிடை கழியில்
வாடாமல ரவளோடுத ரிசனம்முனம் வழங்கா
நாடாவுவ ரிசைபாடலு நன்மேன்றருள் புரிந்தான் 92

திரிவிக்கிர மத்தேபொரு திருத்தாள்புவி மணக்கும்
மருவிக்குல வுறுமற்றது மாகம்மலர்க் கரங்க
ளருகித்திசை யலக்குந்திக ழுங்கந்திரு வுளமேன்
மருவித்தனி மகிழ்வாயஃதொன் றேமிகுந் துளதால் 93

இலவத்திதழ் மானேயிவன் கச்சிப்பதி யிடையே
நிலவத்திகி ரியினம்புயன் விழிசாதக நிதமுங்
குலவத்திரு முதமோடுபே ரின்பப்பெயல் கூரு
நலவித்திரும் பெருந்தேவியி னணுகும்வர தன்காண் 94

இன்றும்மிவன் கார்காலம தெழிலிக்குறு மெழிலா
லன்றந்திசை முகனூற்றிய வயமேதவேள் வியினே
துன்றுந்திகழ் ஹோமம்புரி குண்டந்தனி லெழுபோழ்
தொன்றுஞ்சவி யுடனன்றொளிர் கிற்கிற்பது முணராய் 95

உளமேலிவ னொருமார்பக மொன்றிங்கென வுவளுங்
கிளவாதெதி ரயனேக்கினள் கிளரும்புவி யொருவ
ருளமொன்றிடை யொன்றிற்பின ருயர்வரயதொன் றதுவே
கொளுகென்றெதி ருறுகிற்கினுங் குறுகாதஜை யன்றோ 96

மணியேயிவன் வெஃகாவுறி மன்னந்திரு மன்ன
னணி யாருமுன் பெரியப்பன்மு னறையுந்திரு மொழியின்
வணாகனை யுடனேயுடன் வந்தானது முதலிம்
மணிலேசொன்ன வண்ணஞ்செய்த பெருமாளென்று மொழிவார் 97

இத்தேவனின் மலரின்கர மினிதிற்பிடிப் புறினீ
யெத்தேமொழி சொலினுந்தடை யின்றிச்செயு மெனலு
மத்தேயெழில் வாயாளய லகன்றுள்பெருங் குறுகும்
புத்தேரிருந் திங்கட்கலை யுழையேயுளம் புகுமோ 98

பரமேசுர விண்ணகரன் பாடகமு முறைவோ
னருமாதிருத் தண்காவிளக் கொளிநீரகத் தானே
திருமாவேளுக் கையாளரி திகழ்காரகத் தேவன்
சொரிமாநிலாத் திங்கட்குண்டந் துலங்குந்துள வத்தோன் 99

கார்வானகத் துள்ளான்றிருக் கள்வனுமூ ரகத்தான்
பேராமலென் னெஞ்சின்னுளா னட்டபுயப் பெருமான்
சீராரிவ ராங்குள்ளவர் திகழ்கின்றவித் தேவ
ரூரார்மதி யணிசேர்முக முடையாயுணர் கிற்பாய் 100

திருநின்றவூ ரிறைவண்ணிவன் றிருப்புட்குழி யவனே
திருநீர்மலை யிவனப்பரன் றிருவிடவெந் தையனும்
மருவிந்திருக் கடன்மல்லையிம் மணவாளனம் மாமன்
பெருகுங்கடி காசலத்திற் பிறங்குந்தக்கா னென்ப 101

கேளாயிவன் றிருவவ்வுளூர் கிளரத்திகழ் பெம்மான்
வாளாரரி வழியாயிவர் வளரம்புனைய மார்போ
டாளாகுவ ரெவரேனுமோ ரமலற்புணர் கெனலுங்
கேளாவிவள் வாளாவகல் கிற்கப்பகர் தருமால். 102

வேறு

சோதியின் மயமாய்த் துலங்கு வைகுந்தத்
துனைபெருந் துகளறுஞ் சேடன்
மேதகு முருவாம் வடமலைக் குவட்டின்
மிளிர்சுர தருவினிம் மேலோன்
பாதமே பரவு மேதினி யவரின்
பலபடும் புறத்தகப் பிணியின்
காதர மகன்று களிப்புறற் கன்றோ
வவனியி லவதரித் திலகும் 103

பரிமளத் தலர்மேன் மங்கையின் மார்ப
மொழிவறப் படிந்துறும் பண்பான்
மருவுறுந் திருநி வாசனென் றொருபேர்
மருமலர்ப் படப்பையெப் பகலும்
பெருகுறப் பெருகுங் காவிரி யரங்கப்
பெருமணற் குன்றினிற் பிறழுங்
கருமுகி றனக்கு மிவற்குமோர் சிறிதும்
வேறுபா டின்றெனக் கருதாய் 104

அங்கயற் கண்ணி யருவியின் னரவ
மமர்ந்திருஞ் சாமிபுட் கரணிப்
பங்கயப் பரிமளத் திளம்பவனந் தவழ்தரச்
சுமன தத்தி ரள்கள்
பொங்குறும் புனித வேங்கடப் பொருப்பின்
றடத்திலிப் புங்கவன் கரவின்
செங்கையிற் பற்றி யுலாவரு மின்பந்
தினந்தின நுகர்கெனத் தெரித்தாள் 105

சூடியே கொடுத்த சுகமொழி யவளுஞ்
சொலற்கரும் வேங்கடத் துறைவான்
பீடுறு மரங்க னஞ்சமே யெனினு
மவன்வயிற் பெருகிய விழைவிற்
றொடொழு திவனே யசன்றன ளினிய
சருக்கரை சுவை மிகுங் கழையை
யாடிய விரத மெனினுநீர் வேட்கை
யவரதே விழைகுவ ராமால் 106

மின்கருங் குடிலா ளகைமினுய் நின்றன்
மிளிர்கடை விழிசிறி திவன்மே
லன்புடன் படிக வழகுறுஞ் சாளக்
கிராமமா வரைமிசை யலங்கு
நன்கிலக் குமிநா ராயண னிவனிந்
நானில விபணியி னனுகு
மன்பினர்க் கபவருக் கமாமழி யாப்பண்
டமின்ன ருளுட னருளும் 107

கருநிறத் திந்தீ வரக்கணு யிந்தக்
கார்வண விண்டுவிண் புரியின்
மருவி மாமல ராளொடு மணமாலை
யுடலெலா நான்றுறத் துயில்கை
விரிகருஞ் சவியார் மணிவரை யொன்று
வெண்ணறு மருவிநாற் புறமும்
பெருகுறப் பிறங்கும் பண்பினைப் பொருவும்
பெட்பினிற் கடைகணித் தருள்வாய் 108

அனிச்சமென் மலரின் மிதிப்பினும் பனிக்கும்
மடியினு யம்புயத் தணங்கின்
மனத்திரு மலருண் மனந்துறு மளியிம்
மாய வனைமிக மென்னும்
வனத்திவுட் சூதபு ராணிகன் முகமா
யறமெலாம் வண்டவ மிழைக்கும்
முனித்திரள் கேட்ப மொழிந்தரு ளெந்தை
மோகமா யிவன்கரம் பிடிப்பாய் 109

ஆரணத் தந்தத் தாய்பவர்க் கொன்று
யலங்குமிவ் வம்புய வழியோன்
வேரினைப் பவத்தின் வீட்டிருஞ் சானவி
யினெழிற் றடத்தினின் விரும்புஞ்
சீரினைத் தருகண் டம்மெனு கடிகக
ரத்திடைத் திருச்சிகி களிக்குங்
காரெனக் கிளரும் வண்புரு டோத்தமன்
கருத்து கந்துநீ காணுய் 110

தொண்டைவாய் மயிலே தோய்கவிப் பெருமான்
றேளெனத் தோழியாங் கிசைப்பக்

கண்டனை யளிக ணீலமென் றெண்ணி
யலமரக் கடிமலர்க் கரத்தாள்
விண்டன ளவனை யகன்றனள் காள
கண்டமென் பெடையகம் விழையுந்
தண்டலைத் தலைமாந் தளிரினைத் தணந்தோர்
தளிரினை தழைதலுந் தகுமோ 111

இளம்பிடி நடையா யிப்பரந் தாமன்
வதரியி னீரனொடங் கிணையா
வளம்படு தவத்தின் வைகிமுற் குணமே
வளர்தர விரண்டையும் வாட்டி
யுளம்பதந் தனதி னென்றுற நோற்கு
முத்தமற் குண்மைநா டோறும்
விளம்புறும் வண்ணம் வீற்றிருந் திருநா
ராயணன் விருப்பினேக் குதியால் 112

காரகிற் புகையுண் டிருமணங் கமழுங்
கதுப்பினு யித்தடங் கண்ணன்
சீருறு நெடிய சிங்கவேள் குன்றிற்
சுரநா ரொருவருஞ் செறியா
தாரவே யுள்ளி யடவிர ணியனை
யடர்த்தவெம் சீற்றமுந் தணிந்தே
பேரபி மானத் திலகுறு நாசிங்
கப்பிரான் பெட்பினேக் குகவே. 113

நினைந்தன வருளு மைந்தருச் சினையி
னீழலா ரரம்பையர் கணமு
மனந்தளர் வெய்தக் குமுறுமிந் கார
சிங்க மூர்த்தியு முமைதியா
இனந்தனுக் கிடுக்க ணிழைத்தவெம் பகையை
யீர்ந்தவா லுகிரொடும் பிருதி
யெனுந்திருப் பதியி னிலகிடு மினிய
வெம்பிரா னிவன்றனை மணப்பாய் 114

வெங்கதிர் மரபின் முனைக்கிலுந் தண்ணென்
விதுவென் விளங்குமிப் பெருமான்

பொங்குவெண் டயரத னெனுங்கட லிற்பூத்
துலக ருளனை யெனுமா
மங்கள சனகி யெனுமணி யுறந்து
மங்கையர்த் திரளையோ ரனுவா
யங்கலு மூளங்கொண் டயோத்தியி னெடோ
ளளித்தகா குத்தனென் றறிவாய் 115

இத்திரு மலர்க்க ணெம்பிரா னட்டம
ஙிடிக ளின்பமும் பருகி
யுத்தர மதுரை மாமகளிப் படுத்தோ
ஞனக துந்துபி யுளைந்து
பெற்றிடுங் கண்ணன் புதுமணப் பெண்ணி
னின்பமே பெட்டிடும் பெருமான்
சித்திர மனையா யிவன்புய முயங்குஞ்
செழுநற வருந்துதல் சிறப்பாம் 116

பூதனை சகடு மருதிவை சிசுவாய்ப்
பொலிகையிற் சிதைதரப் பொடித்தான்
காதலி னிவன்றன் வனப்பெனுங் கடலிற்
படிந்ததைக் கடக்கலா தந்நாண்
மாதரா ளொருகோ வலன்மனைக் கிழத்தி
மாழ்கியே மாய்தர வவளின்
றீதறு முயிரைத் திருடிய கள்வன்
வெண்ணெயின் றதியுட னிவனே 117

வேறு

துவரைவா யெண்ணிரண் டாயிரந் தோகையர்த்
துவரித ழின்னமிழ் தொருங்குணுந் துப்பினு
னவிரிழை யன்னமே நீயுமிவ் வாயனின்
னுவரா மின்பமே யொண்ணுமே லுண்மையால் 118

காண்டியித் தேவதே வன்றனைக் கண்முகப்
பீண்டுபூ மாதினிந் திரையினின் னகைநிலா
வாண்டொழும் வெண்டுளிப் படலமோ டம்புதத்
தேண்டிகழ் தன்றிரு மேனியெங் கணுமுறல் 119

நீலவா னெங்கணு நிமிர்நிலாக் கற்றையு
மேலுறும் முடிசெமு கங்களும் மிலகுறும்

கோலமே போலுமென் றெவர்களுங் கூறிடப்
பாவிரும் பரவையிற் பள்ளிகொள் பரமனே 120

இத்திரு மாயன்வை குந்தமா வெழினகர்
நித்தர்முத் தர்தொழ நிலவுசெங் கேமியா
னொத்தவூ காதிக ளுததிவா யலேகுமிழ்
தத்துவெண் ணுரைமுதற் றும்பல வெழுவபோல் 121

இம்முதற் பொருளினின் றெழுமரங் கேசனுஞ்
செம்மையப் பொருளிலோர் நித்திலஞ் சிவனுமா
லம்மலர்க் கரமுன திவனதை யாயுதக்
கைம்மலர்த் திருவிரல் கருத்தினிற் பற்றுக. 122

என்றவ ளியம்பலுங் குடிலகே சத்திவ
ளொன்றுசெங் குமுதமா திகளொரீஇ யோதிம
மன்றலா ரம்புய மன்னுமா றரியலார்
துன்றுறு தொருவினு மின்னிற ளரங்கமுன் 123

கண்டதைச் சிலதியுங் களிமிகக் கழறுமா
லொண்டொடீ யித்திக ழுவணகே தனனயன்
கொண்டமா தவசிலுக் களவுறுங் கூர்பயன்
மண்டருந் தனமினன் மரபினர்க் கொன்றுமே 124

மலயவெற் பீன்றமா மங்கையின் மடியெனக்
குலவரங் கத்திடைக் கிளிர்மதிப் பொய்கையின்
தலேபிர ணவவிமா னத்திலுட் டதைமணி
குலபணிப் போகமாங் குளிர்நறுஞ் சேக்கைமேல் 125

யோகநித் திரைசெயா வுலகினேப் புரந்திடும்
போகவை குந்தமா புரியினின் றுறிபிம்
மாகடற் புவிமிசை மன்னினுன் மலர்மக
ளாகனர்ச் சைக்குளே யாதியிவ் வனந்தனே 126

தாரகைக் குழுவினத் தண்கரன் போலுமாப்
பாரகப் பருப்பதங் களில்வட மேருபோ
னீருறும் மணிகளுட் கவுத்துப நிகரெனக்
கூர்தரு மிவன்குணங் குறிப்பதற் கார்கொலோ 127

மான்மதத் திலகமார் மதிநிகர் வதனமுங்
கான்மணத் திடுகலா ரத்தொடை கமழ்தரும்
வானிகர்த் திடுமகன் மார்பமும் மீனவன்
ஞனினைத் திடுபெருந் தகைமையுந் தன்மையும். 128

மன்னுமிம் மழகிய மாமண வாளனைப்
பன்னரும் பாவெனுந் தொடையலான் மறையினின்
முன்னணிந் தென்னவிம் முருகவிழ் கைத்தொடை
தன்னிலிங் கணிகநீ தாழ்த்திடா தென்றனள். 129

வேறு

இன்னண மிசைத்த லோடு மெம்மனை யெழுமா னந்தந்
தன்னினின் றுளிய ரும்பு மகரந்தத் திமைக டண்மை
மன்னுமிஞ் சகத் தூடார் கருமணி யளிய கண்க
ளென்றுதண் ணீலத் தார்முன் னரங்கன்றே ளியைச் சாத்தி. 130

மற்றுமோர் மலர்ந்த வல்லி யருகுறுந் தருவைத் தாவிப்
பற்றவங் கெழுவ தென்னப் படர்ந்துகைம் மலரிற் பற்றும்
பொற்றகல் லார மன்னும் புதுமணத் தொடைய ருனு
முற்றிழை யணிந்து முன்னர் முகமதி வணங்கி நின்றாள். 131

சுரகணஞ் சொரிந்த பூமா ரியினின்றும் பொய்கை யோகி
வரர்முத ரடியா ரானந் தக்கணீர்த் துளியின் மாயன்
விரவுறு மவதா ரத்தோர் விழைந்துகா ணுக்கத் தோடும்
விரைகமழ் தொடைய லந்த வரங்கன்றோள் வீழ்ந்த தம்மா. 132

சூடிமுன் கொடுத்தாள் சூட்டுஞ் செங்நிதக் குவளை மாலை
யாடிய வரங்க னோரா ரகலஞ்செங் கதிரோன் கீழ்பான்
மோடுறும் பொருப்பி னுச்சி நின்றுதன் கரங்கண் முந்த
லோடுறப் பரப்பு நீல வானென வொளிர்ந்த தன்றே. 133

ஆங்குதென் னரங்கத் தம்மா னறநெறி வதுவை யாற்றற்
கோங்குயர் பரவை மன்னன் மீதிவர்ந் தொலிய விட்ட
கோங்கிள முலையா ளோடும் வகுளபூ டணன்றன் கோயிற்
பாங்குற மிடையும் வையம் படர்மறு கெழுந்த காலை. 134

அவனருச் சாவ தார வரிகளு மயனே யாதி
திவிசரர் களுமின் பொய்கைத் திருமல செழுந்தோ ராதி

கவையறு மாழ்வா ராரு நானிலம் புகழ்ந்து போற்றக்
குவிகொடு தொடர்ந்து போந்த கோலமார் குறிக்கற் பாலார். 135

நித்திலக் கவிகை யாங்கே பணிபதி நிழற்றி னானாற்
கற்றைவெண் கவரி காற்றின் கடற்கிறை வர்களுங் கொண்டார்
சித்திரச் சிவிறி மின்னு மிருசுட ரெடுக்க வீச
சுத்திரா மர்களும் பொன்னந் தண்டமே சுமந்து போந்தார் 136

இயக்கர்தம் பதியு மாங்கே யேந்தினன் மணிக்கா ளாஞ்சி
மயக்கிடு முனிவ ரேனு மாதர்க ணடனஞ் செய்தார்
துயக்கறு மறைக ளோதித் தொழுதுநான் மறையோ ராழ்ந்தார்
புயற்குல மிடிப்ப தென்னப் பறைக்குலம் பொதுளி யார்த்த. 137

12-வது சருக்கம்

வேறு

பலவாய பொழிலாய பலகைக்க ணுலேயாத
பசுவென்னு மளவின்றியே
நலமாய கழகங்க ளவைசெய்த வினையென்று
நலியாது முறைநாடியே
வலமாய தன்செய்ய தயைகொண்ட வுருவாய
மலர்மங்கை யுந்தானுமே
குலவாவ கந்துய்ய வட்டாடு திருமாலி
னடிகண்டு குறைவிண்டதே. 1

பெருமாளெ ழுமவீதி நிரைகொண்ட வரையுண்ட
பெருமாட மண்ணீடெலாம்
விரைநாறு மந்தார மலர்மாலே யணிசெய்து
வில்வீசு மணிதுன்னிய
வுரையானு ஞற்றுந்த சும்பன்று பலவாரி
பூரித்த வொருநீரன
நிரையாய மைத்தோங்கு கடைதோறுங் குலைவாழை
முதலாய நிலைநாட்டினர். 2

மறுசெக்கு மாகர்ந்த வருபல்ல வணமுண்ட
துகிலந்து சங்கோடியே
நறுமின்ப ணிப்பாணி தேக்கிப்ப சுங்கால்க
ளைக்குள்ள நாறுவித

முறுமென்ம லர்க்குப்பை முழுதும்ப சப்பித்த
        ஞெளிவித்திலத் தொளிபதா
நிறைமாம ணித்தோர ணங்கண் மிசைத் தாங்கி
        நிலவப்பிணித் திட்டனர். 3

அம்மாம ணித்தோர ணத்தோளி நிலவுற்ற
        தாகாய தலமெங்கணு
மம்மாமி னும்வான வில்லாளி கொல்லென்ற
        யிர்த்தாரங் குள்ளாரெலா
மம்மான ரங்கத்தி னெழுமந்த வெழில்காண
        வம்மாந கர்ப்பெண்பணை
யம்மாம கந்தோறு நசையானெ ழுந்திட்ட
        கோலாக லந்தன்னமோ. 4

ஓருமாத ரொருகாத ணிந்திட்ட குழையோடு
        முயர்மாட மிவர்தந்தன
டிருமாதி னெருபூவை தீட்டஞ்ச னத்தேக
        வழியோடு செலவுற்றனள்
குருமாம ணிப்பொற்சி லம்புற்ற வொருதாளி
        னெருதோகை குருகுற்றனள்
வருமாமு லைக்குற்ற கலைசோர வொருதைய
        லுணராது வலிதோடினள். 5

மற்றோரெ ழின்மங்கை மணிமாட மீதேறு
        விரைவின்னெ திர்மின்னுறும்
பொற்றோம றுங்கஞ்ச னப்பித்தி யுண்மன்னு
        பொருவற்ற தன்னிழலை
நற்றோழி யெனவுள்ள மருளாம கிழ்ந்தன்பி
        னங்காய்வி ரைந்தேகுகண்
பெற்றோம தன்பேறு பெறுவோம ரங்கன்ற
        னுயர்கோல மிவணோக்கியே. 6

புரியாழ்ந ரம்பன்ன புகலாரு மொருநங்கை
        பிறையாரு நுதலிட்டிட
மருவாரு நறுநான மலராரு நுனியங்கு
        லிக்கண்வ கித்திட்டன
டிருவாழு வனமார்பன் வருகோல மதுகாணும்
        விரைவுற்ற செயலானெளிர்

விரியாடி யூடிற்ற மூகமேல் வளைமிற்க
விழைவுற்று வக்குற்றனள். 7

தன்றோழி யொருதானை யன்போடு செம்பஞ்சி
யின்சேறு தானூட்டுவான்
மென்றூம ரைக்கையின் மிசைகொள்ள வலளந்த
விழவிற்செ முஞ்சிந்தையி
னன்றேந்த மலரூடு நனிநாற சோகத்தி
லிடுதோக ளச்செய்கையுந்
துன்றேரி ரிங்கூந்த லத்தோகை மேற்செய்து
துணைவிற்ற ணங்தேகினுள். 8

பேரோர்கி தம்பத்து கில்சோர முகிலொன்று
பெருகோதி யுஞ்சோர்தர
நாராய ணன்றன்னை நனிவீழ்ந்த லங்கோல
மாயோடு மொருமெல்லியல்
சீராரு துவாரா பதிப்பேரை முன்கூவி
முறைமிட்ட செலவாயினு
ளோரார்ந்த ளள்ளேனு மிவளோரி டும்பைக்கு
மிடனுத லின்றிங்கரோ. 9

வேறு

மின்னு நூபுரந் தோளிலுங் கேயூர மிளிரும்
பொன்ன டிக்கணு மேகலை பொலியுகந் தாத்து
மன்னு தண்மணி வடங்கடி தடத்துமோ கமங்கை
யின்ன வண்ணமே யிழைபல வணிந்தனள் விரைவால். 10

நாறு கானவைம் பாலவி டுந் தலையவோர் நங்கை
யேறு போழ்துமே லகங்குழ லிருந் தவிழ் பிணையல்
வீற னங்கனி விரைகென விடுத்தவம் பலவக
ஞாற கின்றது கடுத்ததங் கவருட னடுவண். 11

கோதை யென்னயின் கோதையார் கோதையை யுதவி
மாத வன்புய மறைப்பனென் றுன்னினு ளெனவோர்
கோதை சோர்தருங் கூந்தலி ளொியல்கைக் கொண்டா
ளாதரத் தரங்கன்மு னின்றகங் குழைந்தன ளாமால். 12

நான மாசொடு நகைநிலா வெறிந்தொளிர் வதன
மீன நாயகத் திரள்பல மின்னனார் தங்கள்
வான நாடுறு மேலக வரிசைகண முழுது
மான பொற்பல கணிகளுள் ளவைவிதாறு மமர்ந்த. 13

உழையி னோக்கியர் நாணமொ டகப்பணி யொருவா
மழையி னின்னிற மாயவ னெழுதரு மருகிற்
கழையி னோர்கர தங்கணத் தொடும்பொறி சிதறி
நுழையி னுறலர்க் கணைகளா னொந்தகங் கண்டார். 14

மேலின் மின்னிய விமானம திடைமிடைந் திமையா
தேலு மின்விழ விதபெற நோக்குறு நாருங்
கோல மாரிமை யவர்களுங் குறித்துவே றுணரார்
நூலி னோர்களு நடுங்குறு மனத்தொடு நின்றார். 15

அண்ட நாயகன் மருகனு யமைவுறுந் திருவைக்
கொண்ட கோதையை யீன்றிடுங் குரவர்கள் முன்ன
மண்டு தீயிடை மணங்கரி திழைத்தசெந் தவம்போற்
பண்டு மண்ணிடைப் பரிந்திழைத் தவரெவ ருளரோ. 16

தெங்க ரம்பையுட் டிகழ்தரு வரங்கநா யகன்றன்
தொங்க லர்ந்ததா ருரத்தகல் கிற்கிலாள் குலவப்
பொங்கு மாசையிற் கோதையின் புதுமண முறலான்
மங்கை மார்களிற் பெருந்திரு மணந்தவ ளவளே. 17

கோதை வானவ ரியாவரு நோக்குறக் குலவுந்
தாது விழ்ந்தலர் கடம்புயஞ் சூட்டிய தலையான்
மாத வன்றிரு வருச்சைக ளனைத்திலு மறையு
மோத ரும்பகட் டாங்கனே யுயர்ந்தவ னுமால். 18

அங்கி யைம்முக னுதவ னுயிரங் கண்ண
னங்க மிலலவ னரியிவர்க் கருஞ்சுவா லையுமை
தந்த சாயையஞ் சசிரகு தாக்கனங் கிவர்போ
லங்கி ளர்ந்தகோ தையுமரங் கற்குரித் தானாள். 19

என்று ளங்களித் திசைத்திடும் புரியரி வையரின்
றுன்றி ருஞ்சுவைத் திருமொழி திருச்செவித் துளையா
னன்று கொண்டவர்க் கருளடைக் கணிப்புற நல்கிச்
சென்று மாறனின் திருமனை வாயிலிற் செறிந்தான். 20

ஏகு காலையிந் தீவர விழியினு ரின்மேன்
மோக மோடிருந் துய்த்திடு மாங்களின் முன்னர்ப்
போக மென்மலர்க் கந்துகம் புள்ளர சிறகின்
வேகவாயுவிற் றகைப்புறப் புறம்பெலாம் வீழ்ந்த. 21

ஓங்கு வாயிலி லுவணன்மீ துறைதர வுலகம்
பாங்கி னுய்ந்திட வெழுந்திடும் பராங்குச னுதி
யாங்கி ளர்ந்திடு மடியவர் சருப்புர முதலாந்
தீங்கி கந்தநீ ராசன விதிதெரிந் திழைத்தார் 22

மேரு வில்லின்ன மென்மலர்க் கரம்பிடித் துவணன்
சீரு றுக்திருச் செங்கயிற் புறத்திருந் திழியா
வார ணத்தயன் சுவத்திய யனஞ்சொல மாற
னேரி ருந்தடங் காட்டிட வெழுந்தன னென்ப. 23

வேறு

எங்குங் கதலி கமுகங்க ளியைந்து முத்தந்
தங்குந் தொடையன் மலர்த்தார்களுந் தாழ்ந்து பல்ல
தொங்கும் மணியின் சுடர்மின்னு மனேகந் தோகைச்
சங்கம் முதல பலபுட்ப டலங்கள் சான்ற. 24

மெய்யார் துகிலிகை யுளாண் பெடைமீது காதல்
செய்யா வனப்பிற் சிறகாடல் செறிந்து தூக்கி
யொய்யா ரமாயங்க தன்பின் படரொாண் மையாக
வேயாயி ரங்கோடிக ரெங்கு மலங்க வார்ந்தும். 25

தண்ணி லத்தின சரமேற் பலநா லவந்த
வெண்ணாற் சவியின் விசித்துள்ளது கூல மற்றும்
வண்ணத் துயர்ந்த தவளத்தொளி மல்கி மின்ன
வெண்ணாற் கரியவிருஞ் செம்மைக ளின்னு மேய்ந்த. 26

வதுவைக் கமைத்த மணிமண்டப நாப்ப ணூலிற்
சதுரத் திழைத்த மணிமேடையி னிட்ட சந்தம்
புதுநற் றவிசின் மணவாளனும் பெண்ணும் புக்கு
முதமுற் றிருக்கச் சடகோப முனிவர் செய்தார். 27

விண்ணின் குரவன் விளம்புஞ்சுப மூர்த்தந் தன்னிற்
பெண்ணும் பிளையு கறுநீர்படிந் தாடை சாத்தி

மண்ணும் மணியி னணியோ பெறுமற் றணிந்து
கண்ணுங் கருத்துங் கவர்ந்துள்ளவர் காட்சி தந்தே 28

மணைமீ திருக்க மலரோனவர் பூங் கரத்திற்
பணைபல் கறங்க மணிக்கங்கணம் பண்பி னார்த்துத்
துணையா மமரர்க் கெரிவானவன் றாய நெய்யி
னனையா தெழும் பச்சிலையோடவி யார்ந்து பெய்தான். 29

சீரார் பருமிணி யிணைசெம்மலர்ச் செங்கரங் கொண்
டோராய் வருடி யிலகும்வெயில் வேந்த னென்னப்
போரா ரயினோர் விழிமாதரின் பூங்கரத் தேக
காரா ரரங்கன் கரம்பற்றுபு மிக் கொளிர்ந்தான். 30

ஆசைப் பெருக்கத் தனங்கன் சொரி யம்பதென்ன
மாசற் றவத்தம் பதிகண்மலர் மானுங் கையில்
வாசச் சுவேத வளநீரரும் புற்ற தாங்கே
நேசத் தபாணி க்ரகணங் திகழ்தங் தநேரம். 31

ஒருவர்க் கொருவ ரவனோக்குறு மொத்த பார்வை
பெருகிக் களிப்பி னெழுவாயிற் பெருகி நாண
மருகித் தளர்ந்து மிகவாஞ்சையு மாங் கெழும்பப்
பருகற் கினியா யுடன்மற்றெழும் பாங்கி னன்றே. 32

அத்தம் பதிகள் வலஞ்செய்சிகை யாங் கெழுந்த
சுத்தம் பெருகு முயர்தீவலஞ் சூழ வந்தார்
புத்தம் புதிய வரவிந்த மலரை வைக
லொத்தங் கரச வனஞ்சுற்று பிரண்டை யொப்ப. 33

பொன்னன்ன வூர்தி புகலப்புகழ் கோதையை யன்
றன்னின்க ரத்தி லொளிர்தன் மலர்த்தண் கரத்தான்
மன்னுஞ்ச மழ்ப்பின் மருளும்மட மானி னோக்கின்
மின்னுஞ் சுடரிற் பொறியோம மிடைந்து செய்தாள். 34

அக்கா லவியின் மணமுண்டெழு மந்த வோம
மிக்கா ரொழுங்கின் கருந்தூம மிளிரு மின்னு
மொக்கா தகோதை யொளியார்முக வாரி சத்திற்
புக்கா லெழும்புங் கரும்புட்கல மாலை போன்ற. 35

மற்றா யிரங்கண் மகவானரன் சொல்ல மாயன்
சிற்றே ரிடையா ளிதயந்திகழ் செம்ம ணிக்க
ணுற்றே யிலகற் கொணும்பூவடி நான்கு கையிற்
பற்றா வெடுத்தம் மியின்மீது பரித்து வைத்தான். 36

இவ்வா றவளை மணந்தே யயனீ சனுதி
யவ்வா னவர் போற்றிசைப்பத் திகழ்ந்தன்ன வைய
னுவ்வா வமுத வுததிக்க ணொழுந்த காமர்ச்
செவ்வாய் மயிலைச் செறிகாலினுங் கண்ட தின்றால். 37

வேதன் கபாலி முதற்றேவரை விண்டுசேனை
நாதன் மதுர கவிநாரணன் மூர்த்தி யெல்லா
மோதும் மதுரைக் கிறைகாவலர் தம்மை யோர்ந்தே
யேதம் படாது சிறப்புச்செய வீங்கு மன்னே. 38

வகுளா பரணர் பணிக்காருடன் பொய்கை வந்த
தகையார் முதலாந் திருத்தேவியின் றந்தை யார்கண்
மகிழா வணைந்த திருமங்களா சாச னத்திற்
குகவா வரங்க னுயர்முத்தி யவர்க் களித்தான். 39

வேறு

சூடிமுன் கொடுத்த தோகைத் தாயருந் தாதி மாருஞ்
சேடியர் குலமு மெண்ணும் வரமெலாஞ் சிறப்பி னீந்தே
யாடியிற் கபோலத் தாளோ டறைதரற் கரிய சீரின்
மாடிய சயன கோல மணவறை மணந்தான் மன்னே. 40

ஆலிபோ லரிய மேனி யவையுமொன் றாக வாங்கே
காவியங் கண்ணு ளோடுங் கலந்துகண் வளருங் காலை
மேவிய புலரி கண்ட சடசிதர் முதல மேலாந்
தீவிய வடியா ரையன் றுயிலெழத் தெருட்ட லுற்றார். 41

ஐயதன் பதங்க ளாலே யடியுறு மாழ்ந்த மாசைச்
செய்யபற் பிணியின் செய்தி யுணர்ந்துருத் தெழுந்த செங்கேழ்
வெய்யவற் கிரிந்து தண்மென் விதுகலை தளர்ந்து சோர
வெய்யெனக் குடயில் வெற்பி னொளிந்துய வோரு மன்றே. 42

அம்பரந் தணந்து இன்ன மவிரவம் பராசை யாய
கொம்பனை யவளைக் கூடித் தாரகை மறைந்து மாழ்கத்
தம்பொலி விழந்து சோருங் கரங்களிற் றளருங் காமி
யிம்பரிற் கிடப்ப தென்ன விலகுமம் புலியு மாங்கே. 43

குமுதினி குடக்குப் பெண்ணின் மலைமுலைக் கோட்டில் வீழ்தர்
வமுதமா கிரணநாயக னகந்தையை யறிந்து சாம்பி
யமதிலாம் வதனங் கூம்பித் தயங்கிய நயன்மா னார
மழதைபி னிறைவ னுற்றன் மானினி கணமு முண்டே. 44

பரிதிமுன் னுதயஞ் செய்த வருணற்கே பரவிப் பாயு
மிருளெலா மிரிந்த தம்மா வொளியுளா ரிடஞ்சார் பற்ற
இருவினைக் கெதிரின் மாறுய்த் திரிதருந் திறத்த வன்மை
யரிகளு முளரோ வெந்த மரங்கமா நகரு ளானே. 45

கயங்களின் மலர்ந்த வின்பங் கயங்களின் மலியுங் கன்னே
நயங்கொள வருந்திப் பாடு நாகிள வளிக ளூத
முயங்குமின் முழவுத் தோள்கண் முண்டாக சனையின் பங்காய்
வயங்குமம் மலராள் பாத நூபுரத் திசையே மானும். 46

கூம்புமோர் குமுதத் தூடோர் பெடைமுரல் குரலைக் கேட்ட
வேம்பலா ரளியொன் றந்த விடுக்கணுக் கிரங்கி யாங்கே
யாம்பல படியே தாண்மூக் கவைகளா னுழுது செய்யும்
போம்படி புறத்துச் செய்ய முயற்சியைப் புரிந்து பாராய். 47

இன்னிசை யிழற்று மாங்கோ ரறுபத மினிது தோயு
மென்னறுங் குமுத நீத்து மலர்தர மிளிருஞ் செய்ய
நன்னய முளரி யூடே நணுகுமா லெவர்க ளேனுந்
துன்னிய விபத்தர் தம்மைத் துறந்துய லெழுவ ராமால். 48

முயலின்கூ டிறைவ னோடே முயங்கிய நிசியா மங்கைச்
சயனவம் பரத்தின் மின்னுந் தாரகைக் குலமாங் கோதைப்
புயலினின் றுதிர்ந்த பூவுந் திமிரமா நாணப் பூச்சு
மயலகல் வுறவா தித்தன் பதங்களா லகற்று மாதோ. 49

வைகறைப் பொழுதி னேந்து வாசவத் திசையா மாதர்
கைகளா யிரமாம் வெய்ய கதிரிளங் குழவி யீன
மைகலு ழுளிக ளென்னுஞ் சிறையினர் மணமே மிக்க
வைகலந் தலங்கு மம்பு யத்தினின் விடுபட் டாரால். 50

தருத்தளிர் வெற்பின் றூறு தடங்கிள ரரிய செந்தா
மரைத்திரு மலரின் மின்னூர் மார்பொளிர் மரவத் தோடித்
திருத்தகு பொருள்க டோறுந் திகழுசெஞ் சவியை யீங்கே
மருத்துவன் றிசையின் மன்னு மிளங்கதி ரிரட்டிப் பிக்கும். 51

பங்கய மலரை யீனும் பாசடை மிசையே பால
பிங்கலன் வெயிலாற் சேந்து பிறங்கம்பு கணத்தைப் பேடை
தங்குமுன் னுயிர்த்த வண்ட மெனநினைந் தவற்றைத் தைவந்
தங்குதன் சஞ்சு தன்னா லணைமலே துணர்ந்த சிக்கும். 52

கதிரவ னுதய வெற்பி னுயர்முடி கலந்து வையம்
புதைதரு திமிட வந்த காரமும் போகி வைக
லதுவர மலர்ந்த பூவி லளியின முரலத் தூய
மதுவிருந் தொழுகும் பள்ளி யெழுகவின் னரங்கத் தம்மா. 53

பனிப்பகை வெயில்க ளாசை யெங்கணும் பரவி விண்மீ
னினத்தொடு மதியின் சோபை யிகந்துபைங் கமுகின் பாளை
தனிற்படு மணத்தை வாரி வைகறைக் குரிய தண்கா
லினிப்புற வுலவும் பள்ளி யெழுகவின் னரங்கத் தம்மா. 54

பல்வகைப் பறவைத் தோடு பைம்பொழி லுறுங் கூகாவென்
றல்கலி விரட்டு மல்போ யாழியின் றிரையி னோதை
மல்குறு மமர ரீட்ட மருமலர்த் தொடைய லோம
புல்கிய புகழ்பூம் பள்ளி யெழுகவின் னரங்கத் தம்மா. 55

குடம்புரை செருத்தன் மேதிக் குலங்களைப் புடனே தோழத்
திடந்தனை யொருவி மேயற் கிருங்கழை வயலுக் கேகும்
இடம்பெரு கிடபத் துங்க ரத்தொலி திசைசூழ் வைய
மடங்கலு மெழும்பும் பள்ளி யெழுகவின் னரங்கத் தம்மா. 56

ஆனிரை பழுவத் துய்க்கு மாயர்வேய்ங் குழலி னோசை
தேனசைத் துழலுந் தும்பி யிசையொடு திசையின் மல்கும்
வானவ ரவனிமாண வகர்களுக் குரைக்குஞ் சாம
கானமும் கழுகும் பள்ளி யெழுகவின் னரங்கத் தம்மா. 57

அருக்கர்க ளிரதந் தம்மி லுருத்திரர் விடைமே லாடு
முருக்கிளர் சிகியிற் கந்த னாகிய விலரோ டுற்ற
இருக்கிளர் மருத்த ரட்ட வசுக்களுந் திரண்டுன் கோயி
னெருக்கிளர் நிலவும் பள்ளி யெழுகவின் னரங்கத் தம்மா. 58

இவர்சுர முனிவ ரீதோ மருத்துவன் மருத்தர் சூழத்
தவளமா வியக்கர் விச்சா தரர்கந்தி ருவரும் போத
நவமணி பதித்துப் பொன்னி னாட்டுமுன் வாயி னிற்கத்
தவநெருக் குடைத்துப் பள்ளி யெழுகவின் னரங்கத் தம்மா. 59

நிதிக்குவை கபிலை யோடு தருப்பண மினது பாதந்
துதிப்பதற் குரிய வெல்லாந் தும்புரு நார தாதி
மதிப்புறு முனிவர் கொண்டு மணந்தன ரிரவி மாகத்
துதித்தான் கொளிரும் பள்ளி யெழுகவின் னரங்கத் தம்மா. 60

மாடக மணியா ழின்ப மண்ணமை முழவ மாதி
நாடருங் கருவி யோடுங் கின்னரர் கருடர் நன்கு
பாடுகங் திருவர் சித்த ராதியர் படிந்துன் கோட்டி
கூடுறக் குவிந்தார் பள்ளி யெழுகவின் னரங்கத் தம்மா. 61

நின்னெழி லடியா ருள்ள நிகர்க்கும்பொன் னியினீர் தோய்ந்து
பொன்னிணைப் பொருவு மாதர் பூந்துகி லளகந் தம்மை
மென்னறுங் கரத்தா னன்கு பிழிந்தக மிடையும் வேளை
யின்னறும் புலரி பள்ளி யெழுகவின் னரங்கத் தம்மா. 62

என்றுதேன் பெருகுங் குல்லை யிணைந்ததார் மலரின் கூடை
யொன்றிய புயத்துத் தொண்ட ரடிப்பொடி யுவந்து பின்ன
ரின்றுயி லெழுச்சி செய்த வியல்பென விசைக்க வைய
னன்றுள மகிழ்ந்து பள்ளி நன்குணர்ந் தெழுந்தா னன்றே. 63

வேறு

காலைபுரி கன்மமதன் பின்னைமுறை யாற்றி
மாலைவன நாறுமண மார்பரிக டம்மை
மேலையொளிர் சூரிகளின் மேதினிபு ரக்குங்
கோலையடை கொற்றவர்க ளாதியரி னேக்கா. 64

வீமனொளிர் வெண்ணிடை விரைக்குழலி யோடு
மாமணிவ னேறியுடன் மற்றவரு மேகப்
பூமகண்மு கத்திலக மென்றவரும் போற்று
மாமறைம ணங்கமழ ரங்கமெழ லுற்றான். 65

அங்கமர ராதியனை வோருமவர் தங்க
டங்களுறு மூர்த்திகளி வர்ந்தனர்க டண்ணென்
றிங்களொளுங் கவிகைமுத லானவைதெ ரிந்தே
யங்கரமெ டுத்தருக ணைந்துசெல வுற்றார். 66

நாரணர்கள் வீயிறைக ளென்முதுகி வர்ந்தா
ராரணன ரத்தினும ரன்விடையெ ருத்துஞ்
சீரியவ லாரியயி ராவதசி ரத்து
மேருறுவி மானவல மிமையவரு மார்ந்தார். 67

மன்னவர்த மக்குரிய வாகனமி வர்ந்தார்
பன்னரிய பத்தரவர் பண்ணுமுறை யோக

மன்னுவல மாகியவி மானமதி வர்ந்தா
ரின்னவகை யெம்பரனை யேவருந்தொ டர்ந்தார். 68

அஞ்சிறையின் வேகமதி னம்புதமொ துங்க
விஞ்சியெழு முவணன்மிசை கோதையொடு விழைவிற்
கொஞ்சியெழு மெந்திருவ ரங்கன்களி கூர்ந்தே
மஞ்சனமா யின்னவனை மற்றறைய லுற்றான். 69

மாலெனுமெ னக்குமிரு மாலைவிளை விக்கும்
பாலெனுமொ ழித்திருவே பாரெதிரு யர்ந்த
கோலமுறு பொன்முடிகள் சூலவுறவ னேகம்
மேனுலகு மேனுறைய மின்னுமலை யீதே. 70

செங்குலைய வேலநறும் பைங்கொடி கிளைக்க
ணெங்கணும்ப டர்ந்துமுளை யைந்தருவி னேயுங்
குங்குமமுஞ் சந்தனமுங் கோடியுழை யோங்கும்
பொங்குதிரை யுண்டமுனி புக்கிலது வாகும். 71

சந்தகிலு மித்திலமுஞ் சார்ந்தொழுகு மிந்த
வுந்தியுயர் தாமிரப ருணியிதையிவ் வோங்கல்
சிந்துவெனு மருமகனு மொன்றினனி சேர
முந்துமனை யாளெனமு தத்தடைய வுய்த்தான். 72

அந்தவரை மாலிருஞ்சோ லைமலையென் றாருஞ்
சிந்தைமகிழ் வோடுசெறிந் துய்ந்திடுவர் சேணார்
விந்தையுறும் வேட்டையயர்ந் திந்தவரை யோர
மெந்தமயர் வேகவிவ ணிருந்தகங்க ளிப்பேம். 73

நூபுரந தித்தணறு துண்டிவலை கொண்டு
பூபலம லர்ந்தவையின் பொன்விரையை மொண்டு
தாபமக வத்தவமுந் தண்வளியை யிந்தத்
தாபாம ளிக்குமுப காரமென வென்றும். 74

ஏறுசினை யின்முளைக ளிந்துவுடல் பாய
ஊறமிழ்த டித்தலமு றைந்துவள ரோளி
நாறுமல ரின்மரமிர் நாகமிசை யொன்றுங்
கூறருந றுஞ்சுவையே கூர்பழன ளிக்கும். 75

பற்றிறையு மின்றியெ மம்பர தலத்தி
லொற்றையுரு ளன்பரியெ ழூற்றகளை யாறச்

சொற்றநதி தூயவிள வாயுகொடு வீசும்
பொற்றசிறு றுண்டுளிகள் கொண்டுநிதம் புரியும். 76

பானுகிர ணத்திரியி ருட்படலம் பம்பி
யானதுச ரண்புகலெ னப்பசுமை யான
மேனிறம ணித்திரளின் மிக்கவொளி யோளி
வானளவு மிந்தவரை வாயொளிர்தல் காணுப். 77

இருபுடையும் வெள்ளருவி யிழியமதி மீதே
மருவுறவ யங்குமிது மன்னுகுடை நீழல்
விரிநிலவெ ழிற்கவரி வீசவிரு பாலும்
புரிகுவது பூதரவி ராச்சியமே போலும். 78

நூபுரந திச்சிறிய நோன்மைபெறு கால்கள்
வீபுதிய மாதவியின் மேன்விரவி வீழும்
மாபெரிய மஞ்சுளம ராளநிவ கங்கள்
பூபருக ளித்திரள்பொ ருந்திவி கரிக்கும். 79

வேறு

பாரா யெந்தம் பைங்கிளியே முன்னே காணும் படர்வனத்தை
யோரார் சென்னி செழியர்களி னெல்லைக் கிடையே வருமீதிற்
பேரா யிரவெங் கதிரோற்குப் பீதி யடைந்த விருட்படலஞ்
சேரா வொருங்கு குடிகொள்ளுஞ் செப்பற் கரிய திதன்பகடே. 80

காணு ரிங்குக் கானவரின் கரிய குழன்மங் கையர்முழையுண்
மேனுர் சிகியின் றுஞ்சுவிடை யிடையு நாக மணிவிளக்கந்
தானு யெரியப் பொருதழிந்த தரணீ பாலர் குடைக்கதவ
மானு வாயி லதனுளுறைந் தன்பர் தம்பா லாடுவரால். 81

பொன்னித் தெண்ணீர் பாய்தரலும் புகழி னோங்கும் பூகங்கண்
மன்னித் திகழும் பொன்புரைபூம் பாளை தங்கண் மணநாறு
மின்னற் பசிய தேன்றுளிக ளென்று மெழுந்தம் பரமறைப்ப
மின்னிப் பெரிய துர்த்தினமாய் மேன்மைப்பொழிலேசோணாடாம்.

பாரா யிந்தப் பரவையிது பரசு பாணிக் கடுகளையா
யோரா ரிந்து வெழுமிடமா யிரத்தி னங்கட் காகரமாய்க்
காரார் குழலி யாமுணர்ந்தே சுண்டுஞ் சும்பேர் மணவறையாச்
சீரா ரவனி மடக்தையிடை சேருங் கலையா யிலகிடுமால். 83

ஆற்றிற் கெல்லா மாதரமா யயிரா ணிக்கேள் வன்கரத்திற்
கூற்றிற் கிளருங் குலிசத்திற் குடைந்து குலைந்து சரண்புகுநும்
போற்றற் குரிய பொருப்பினத்தை விரைவிற் போது மெமதகமென்
றூற்றிக் கூவு மெனலாகு மலையா மத்தத் தலங்கிடுமால். 84

தவளக் கரியுச் சைசிரவத் தமரர் கோனைத் தண்புனலா
லவனி புய்யப் பெய்முகிலைச் சோமன் றன்னு லைமுகனைச்
சுவையி னரிய வின்னமிழ்திற் சுரரை மணிக ளிறையினெமை
யுவகை பெருக வுஞற்றிடுமோ லொளிரும் வள்ளைக் குழைச்செவியாய்.

ஏற்று ரேற்ற படியெய்த வீயுஞ் சிந்தா மணிதேனு
வூற்று பொழுகு மகரந்த மலரைங் தருவா முவையின்று
கோற்றேன் புரையு மலரவளைப் பெற்றுக் கொடுத்த குரைகடலுக்
காற்று தாரே பகைத்திடுவா ரமையு முலகம் வள்ளியர்பால். 86

இவ்வா ரவ்வா றுறுவளங்க ளென்றெம் மன்னைக் கியம்பியெழுந்
தொவ்வா தொன்று முயராங்கத் தோங்கும் பொன்மா முடிச்சிகரி
யவ்வா யிற்க ணடைந்துவட மலையான் றன்னை யன்புமிகுஞ்
செவ்வாய் மொழியின் விடுத்தானை மலையான்றிருமா முகநோக்கி. 87

இன்மா முறுவ லிழைத்தனுப்பி யெழின்மா லிருஞ்சோலைப்பரனைப்
பொன்மாகடைக்க ணிப்பிழைத்துப் போக்கிச் சிரக்கம் பனம்புரியா
னென்மா வயல்சூழ் திருக்குடந்தை நிமலன் றன்னை விடுத்திந்த
மன்மா வுரத்தார் களைப்புருவச் சேகை தன்னுன் மகிழ்ந்தனுப்பி.88

திருக்கண் மலரை விழித்தனுப்பித் திசைமா முகனைச் சங்கரனை
புரைக்கும் பிரிய வுரையானே யொருவா நூறுமகன் முதலாந்
திருக்க ணீழல் வதியமரர் தமையுந் திசையின் பாலரையும்
பெருக்குஞ் சேனைத் தலைவனையும் பிறங்கு வையத் தரசரையும். 89

கூட லார்தன் கோவினையும் விரலை யசைத்துக் குளிர் கடைக்கண்
மாடி விடுத்து மறைமுதலோங் கார வுருவாய் மற்றொளிரு
நீடும் பொன்வி மானமதி லடியா ரோடு நீள்குழலிற்
சூடித்தந்த கோதையொடுஞ் சுகமுற்றெங்குமுறைந்தொளிர்ந்தான்.

## 13-வது சருக்கம்

### இள வேனில்

ஒருவி லாவொரு பெண்ணையொ ழித்தனை
யொருவி லாவொரு பெண்ணையு முற்றனை
பொருவி லாதலின் பொன்புரை யாடலைக்
கருவி லார்திரு வாளருங் காண்பரே. 1

சேர சோளர் சிறுமியர் தம்மொடும்
வார ணிந்த வனமுலைக் கோதையோ
டேர ணிந்த விலக்குமி தன்னொடு
மாரு மம்பொன்ன ரங்கத்தம் மானையே. 2

அண்டி மூவிரண் டாயவி ருதுகள்
கண்டு தம்முறை யின்வணங் கைதொழு
தண்ட நாயக னானந்த மேயுற
மண்டி மன்மத னோடும ணர்ந்தவால். 3

குரவ மாவொடு கூர்தருஞ் சம்பகம்
விரவு சிந்துவா ரத்தொடு வெம்மணம்
பரவு பாடலங் கன்னிகா ரங்களு
மரவ வண்டுகண் மூதுவ லர்ந்தன. 4

பூக மூகம் பொலிந்தும லர்ந்தன
நாக காடும சோகமும் பூத்தன
சாகை யள்ளுறுங் கூவிள சாலமுங்
காக லந்துக மழ்ந்தலர்ந் தோங்கின. 5

இந்த வண்ணமெ ழுந்திடு வேனில்வாய்க்
கந்த வாகன லர்ந்துக மழ்தரு
மெந்த வின்மல ரின்மண முஞ்சொரி
தந்த தேனையுந் தான்கொடு வீசினான். 6

வைய முற்றும் வயங்கொ ளிலங்கிடும்
வெய்ய பூங்கணை வேடனக் கேவலஞ்
செய்ய வந்த செழும்வயங் தந்தனின்
மைய லின்றிய மைந்தனர் யாவரே. 7

அந்த வம்பரு வத்திரு மேன்மையாற்
சிந்தை நன்கு சிமிழ்ப்புற ரங்கனுங்
கந்த வாரத் துடன்கள கண்டத்தின்
சந்த நாத நிறைபொழிற் சார்ந்தனன். 8

கோகி லத்திர ளங்கு குழுமிவள்
வானை நண்ண வருகெனக் கூவுமால்
சாகி தங்கள டித்தலந் தேங்குமேல்
வீக லந்து விழுந்த நறவமே. 9

வேறு

தாழிருஞ் சினைக ளாகுந் தனுவிடை நறவம் வேட்டு
வீழளி நிரைக ளாய நாரியி னிசையின் மேவி
பூழுற மலர்ந்த பூவா முளைவுறும் பகழி கொண்டு
காழுறு மனத்த காமன் கெடவரல் களிப்பி னூற்றும். 10

பன்மலர்ப் படலவல்லி படர்ந்தபைம் பவனந் தன்னுள்
வண்மையார் பவனன் றன்னு லருஞ்சுவை மதுவை வாச
மென்மலர்ச் சகடந் தண்ணுண் மிழற்றளிக் குடிகள் மேவி
யின்மையார் பெடையாம் பெண்டி ரிணைந்துறப் பருகி யார்ப்ப. 11

அறுபத நிகவம் வல்லி யடர்மனை யலர்ந்த பூவி
னறுமது வருந்திக் கோகி லங்களி னறிய பாடல்
செறிதரத் தளிர்க ளாய செங்கரச் சதியுஞ் சேர
வெறியுறு துளபன் காண விழுநடம் புரியு மாதோ. 12

கரும்புளோன் றலராம் பான பாசனங் கழுமுந் தேனில்
விரும்புறு பெடையி னீழல் விளங்குறு வதனில் வீழ்ந்த
தரும்பெடை யெனவே யார்த்தங் கீர்த்திடற் கனுகு மாற்றாற்
பெருங்குடி யர்களின் றன்மை யிற்றெனப் பிறங்கு மன்றே. 13

மென்பெடை யெனுமோர் நங்கை மிகுமதுப் பருகி யாடித்
தன்கருஞ் சிறகாந் தானை தனையெடுத் தகன்று நாணு
மன்புறு மளியாங் காமு கன்களித் தருகிற் காண
மன்பெரும் பொழிலி னூடே மகிழ்நடம் புரியு மாதோ. 14

வரிமணிச் சுரும்பின் கும்பர் வகையிலா துன்றி மெய்யி
னிரும்பொடி திமிர்ந்து தள்ளாட் டத்துட னியங்கிக் கண்க
டிரும்பியே சுழல வுள்ளக் களிப்பொடு திரிதல் கள்ளை
விரும்பியுண் டுழலு மாந்தர் விறலினை விளக்கு மற்றும். 15

நந்தனத் தரிய காம வல்லிக ணனிமேற் சுற்றச்
சுந்தரத் துடனே தோன்றுங் கற்பகத் துரும மென்ன
வந்தநற் பொதும்பர் நாப்ப ணரங்கனின் மகளி ரீட்டம்
பந்தமுற் றருகிற் சூழத் துலங்கினன் பவள வாயான். 16

மணிவளை யொலிப்பக் கண்கண் மானெனெ மருள மேலா
ரணிகோளே காசஞ் சோரத் துயில்வரத் தரளத் தாரம்
பிணையனார் முன்மு னென்று பேய்முலை சுவைத்தாற் காங்கே
மணநறு மலர்கள் கொய்ய முந்தினர் மயிற் குழாம்போல். 17

நாண்மல ருணர்ந்து கொய்யு நங்கைமா ரைம்பா னறுஞ்
சேண்மண மலரில் வீழ்ந்து சிலீமுகத் திரள்கள் சேர்ந்த
நீண்மகி தலத்தி லாயு நேர்மையை யறிவி னீண்டோர்
மாண்மலி பொருளில் வீழ்ந்து மற்றவை வணவ ரன்றே. 18

மயிலெனு மகவு மங்கை யொருத்தியின் மணமீ தூரு
முயர்வுறு மேரு பூத்த மலரெலா முவந்து கொய்தும்
பயில்வுறு நுனியின் மற்ற மலரையும் பறித்தற் கெட்டாண்
முயல்வுறும் விழுமி தென்றுன் முழுதுமே விழைவ ரன்றே. 19

தழைகிளை குழையப் பூத்த தமனியச் செண்ப கத்தோ
ரிழைபுரை நுசுப்பின் மின்னு ளெய்துபு பறிக்கு மெல்வைக்
குழைபொரு நயன நீழல் பாய்ந்தவண் குலவன் முற்று
நுழைதரு கரும்புட் சங்கச் சங்கையை நுவலு மன்னே. 20

நடைமணிச் சிலம்பின் னுதங் களிலன மெனுமோர் நங்கை
விடையெனக் குலவுங் கண்கண் மீதுமென் பதம்வைத் தேறும்
புடையுயர் தருவின் மல்கும் பூப்பறித் திடுதெ ரும்பர்
மடவர லவர்மீ தேறி யாடுதற் கெழுவ மானும். 21

மற்றொரு நர லுங் கோவை மணியொளிர் நிதம்ப மாதர்
சிற்றிடை யிடுகச் சென்ற லத்தகஞ் செறிந்த தாளி
னெற்றலு முயர சோகஞ் செம்மல ரொருங்கு பூத்த
துற்றிடுங் கருவித் தன்மை காரிய முலகி னென்ப. 22

கூடுறுங் குடத்தி மார்கள் குவிமுலைக் கண்ணின் வண்ண
மாடிய வரங்க முன்னே ரணியிழைக் கமர ரூரி
னீடுபூந் தருவை யிங்குக் கொணர்ந்துட னிலவச் செய்த
வாடலார் நினக்கு மிந்த வருஞ்சினை குறித்த லென்னே. 23

சேவடி செறிவோர் தங்க டமசிரச் சுக்க டேய்க்கும்
பாவனை யதனு னின்றன் பன்னியர் விழிமேல் வீழும்
பூவிரச் சையும் பொங்கு மளிநிரைத் தமசை யும்பே
ராவலின் மலர்க்கை தன்னு லகற்றுபு வருந்து கின்றாய். 24

என்றுமா டகயாழ் நாண விசைத்திடு மகளிர் தம்மை
நன்றுவந் தருளிமாய னறுமலர் பறித்து வாசத்
துன்றிடுங் குழலிற் சூடி யெழிற்புயம் புளகம் பூர்க்க
மன்றலின் மலர்க்கை தன்னு னீவலு மகிழ்வு பூத்தார். 25

கோதையுள் ளிட்ட கோதை யாரினி வசன நோக்க
மேதகு பொருளிற் றண்ணென் னிலவெறி முறுவ லின்ன
கோதறு விதியி னுகு நகைமலர் குளிர்ந்து பூத்த
மாதவ னுகும் பாரி சாதத்திற் பயனும் வாய்ந்தார். 26

## முதுவேனில்

### வேறு

வேனி லின்னணம் விலகலுஞ் சுடுமுது வேனில்
கான்ம லிந்தலர் பாடல மலருரு கல்லாத்
தேன மர்ந்தமா லதிமணத் திறைப்பொருள் கொணரா
நீனி றந்திக ழரங்கனுக் கெதிருற நிகழும். 27

வேனி லின்றுணர் வீந்திடச் சுசிமலர் மலரா
வானி யஞ்சில வவற்றிடை யிரதியி னன்பன்
பான லந்தரு மொழினர் பானலங் கடைக்க
ஞான வாகைசே ராசுகந் துரந்தடல் செறிந்தான். 28

திங்க ளின்குடைச் செல்வனுந் திறலுரு நிருபன்
பொங்கு தென்றலா மூர்திமுன் வயங்கொளப் புவன
மெங்கு மெய்திய வயர்வொழித் திடங்கினைந் ததனைத்
தங்கு மந்துரஞ் செறிதரத் தளைத்தனன் சுசியில். 29

ஒற்றை யாழியான் படியமர் பயமெலா முறிஞ்சி
யெற்றி ரும்பெருங் கானலா யியற்றின னியதி
செற்ற மோடரு வளமெலாஞ் சிதைத்தரு வினையின்
மற்று மின்னலின் மனிதரைப் புடைப்பது கடுப்ப. 30

பூவை யார்களின் பொலிகுயக் கலசமேற் றரளக்
கோவை போலரும் பிடிவியர் வையின்றுளிக் குலங்கண்
மேவு றும்பய மலிதர மிளிர்குட மென்னுந்
தாவ ரும்பெயர் தருந்தகு மெனவிளக் கிடுமால். 31

கோடை யித்தகைக் கொடுமுது வேனில்வா யரங்க
நாட லுற்றக நறும்புன லாடகங் கொழிக்கு
நீட லைக்கரக் காவிரி நினதுழைப் படரும்
பாடு பெற்றெனப் பகர்வதற் கெழுந்தன முடுகும். 32

பொதிய வெற்பரை யன்றிருத் தனையயாய்ப் பொங்கும்
விதுக ரத்தலைக் கடலெனும் வேந்தனின் மனையாய்ச்
சுதையெ னப்பெரு குறும்பொனி யுவளகந் துன்றும்
மதுகை பெற்றநல் வாயில்காப் பாளனு மாகி. 33

கான வங்கியின் கவின்பெறு நண்பனும் மலய
மான மானநா கஞ்செலுத் துயிர்ப்பென லாகி
மேனி வந்தொளிர் தருக்களின் சினையெலாம் வீழ்த்தி
வான நாடச லங்களுஞ் சலித்திட வலிந்து. 34

அருவி யின்கட மலைகளுஞ் சலிப்புற வசைத்துக்
கருவி மாமழைத் திரள்களும் புரண்டிடக் கலக்கி
யிருவி லின்னிரை யிடிதர விசைத்தெழிற் பொன்னி
மருவி மீதெழு திரைகளுந் தகர்ந்திட மாடி. 35

வெள்ளை நுண்மணல் விசைத்தெழுந் தம்பரஞ் சிதறி
தெள்ளு தாரகைக் குலமகற் பொழுதினுந் திகழ்மென்
றெள்ள யாவரு முளுற்றுபு திசைதொறுந் தாவங்
கொள்ளு மன்னுநீ ராசன விதியெனக் குலவ. 36

ஆற்றி யுஞ்சலித் திடுமெயின் சலலமா மயிலார்
கூற்று மஞ்சுறு மெயிறடைந் தெரிதரும் கொடிய
மாற்ற ரும்வன வன்னியின் சிகையெனு நாவு
மேற்று வேய்தருங் கூறையை மிசையெடுத் தெறிந்தே. 37

ஆவெ னத்திறந் தமர்ந்திடு மகமெனும் வாயும்
மேவி மண்ணெலாம் விழுங்கிட விரும்பிய தெனவே
யேவ ரும்வெரு வரும்பயி றவத்தரு வேய்ந்து
நாவி னுஞ்சொல நடுங்குறும் படிநனி கிளர்ந்து. 38

வீசு வெம்மையின் வெற்பிருந் தருமுக டிடறிப்
பூசி மெய்ப்படும் புண்ணிருந் தொழுகுசெம் புனலா
லோசை யுற்றெழுந் ததுவெனச் செந்துக ளுடனே
யாசு கம்மது குணகடல் குறித்தெழுந் ததுவாம். 39

வேறு

ஓவா முறையி னெழுந்துகரை யுடைக்குந் தரங்கச் சீகரங்க
டாவா வெளியிற் பாய்ந்துதிசை யெங்குந் தரணிக் கதிர்மறையப்
பூவா ழுழவர்க் கநுந்தனமாய்ப் பொங்கிப் புதிய செம்புனலின்
மேவா வளியிற் கவேர னெழின் மகளே மிக்குப் பெருகினளால். 40

முடுகும் பவனத் தெழுந்தெழித் திடுபே ரலையின் முழக்கினளாய்த்
தடமார் பாத பங்களினைத் தன்னுட் படுக்குந் தன்மையளாய்க்
கடமா மலையு மீர்த்திடுமுட் கரே மாகும் சுழியினளா
யடருந் தவள நுரைத்துளிக ளசைந்து செல்லு மழகினளாய். 41

அவனி மாதி னுரத்திலகுந் தண்ணந் தரளத் தனிவடமாய்
நவையிற் பொதிய வரைமதமா நனிநின் றூற்று மதப்பெருக்காய்ப்
புவனத் திருவை குந்தமெனப் பொலியு மாங்க மெனும் பூவை
யவிரு மிடையி னளிந் தொளிரு மழகார் வெண்பட் டாடையுமாய். 42

அள்ளிற் கினிய விசையின்மே யன்னத் தொழுங்கா மம்புயமு
மெள்ளற் கரிய திரைமறியும் புருவத் திலங்கும் பங்கயமாங்
கொள்ளற் குரிய வதனமொடு துனிமீ தூர்ந்து கலக்கமுட
னுள்ளற் கரிய விரைவினளா யரங்கத் தம்மா னுழையுற்றாள். 43

ஆடித் திங்க ளீரொம்பா னய திவசத் தகல்பொன்னி
யோடிக் கரிய திருவரங்க னூரைச் சூழ்ந்து கரைபுரளா
வாடற் பெரிய திரைக்கரத்தா லணியு பணியு மாடைகளு
மேடேற் றலரு மலங்கலொடு மெல்லா மேற்றுப் பெருகினளால். 44

காழார் வாசக் காரகிலுங் கரியும் பரியு முதற்பலவு
மாழா ரோதத் தடித்தொழுகு மதனன் மூடுற் றேமுருவாய்
வாழா மொருவி மானமதில் வளரு மரங்கன் பிரளயநீர்
சூழா லிலையி னென்றினிடைத் துலங்கு மாறு தோன்றினனே. 45

உல்க முண்ட பெருவாய னவன்பா லாடற் குள்விழையா
விலகுந் திருமா மணிப்பணியு மெழிலார் பூம்பட் டாடைகளுங்
குலநற் கன்னி வேட்பவர்முன் னருளும் பொருள்கள் கொண்டினமும்
மலரா ளாதி மனைவியர்கள் சூழப்பொன்னித் தடஞ் செறிந்தான். 46

சென்று மதுவைச் செகுத்தபிரான் செம்பொற் பணிமின் சீரைமுத
லொன்றும் பலவு முவந்துதவி யுற்று நோக்க வவள்புதிய
மன்றன் மகளி ரென நாணி மறியு மீன விழியினளாய்த்
துன்றுங் கீழ்பான் முகத்தினளா யொழுகும் வனப்பிற் றுலங்கினளாம். 47

நீரே யாட நீலவண் ணிமிருங் கோட்டி னின்றதனுட்
காரார் கரிய குழலரவக் கணமா மணிசேர் மேகலையார்
வாரார் முலையி னுடன்போத வனமா மதத்த வாரணமொன்
றேரார் பிடிக ளுடனுடற் கிழிவ தென்ன விறங்கினளால். 48

காயா மலரின் மேனிதனிற் காளிந்தி யென்ன வெண்ணகையிற்
பாயா நின்ற பாகிரதி யெனவே பைம்பொ னம்பரத்தின்
வீயா வொளியிற் சோணையென விளம்ப நோக்கும் விழுமியரு
மோயா தொழுகு மொருநதியை யுவண கேத னுளுற்றினனே. 49

பன்னற் கரிய பன்னியரப் பராந்தா மன்றன் பாகுகளைப்
பொன்னற் கழைநோ புயல்தையிற் புகன்று பிடித்துப் புனல்குடைய
மின்னற் கொடியோ ரீரிண்டின் மிளிர்ந்து தொடங்கு மேன்மையினே
மன்னப் பொலிந்தா ளுற்புயமு மணந்த பயத்தை மாயவனே. 50

தாழுங் குழலார் தரங்கிணியூ டிழிய நிதம்பந் தாம்புகலுஞ்
சூழுங் கறையிற் புரண்டருகிற் சொல்லா ரகன்ற வயல்பாய்ந்த
வீழுஞ் சுவையா ரின்பயமும் விளங்கு நாபி யழுந்திடலு
மாழுங் குன்றிச் சமமுறவுள் ளடங்கிற் றென்ப மீண்டடனே. 51

## வேறு

மாயவன் கந்தர மட்டுமவ் வருபுனற்
றூயமார்ந் திடவவன் றுணைவியாத் தொடிபுனே
வேயெனும் புயநதி விரிதிரைக் கரமொடத்
தூயநற் களந்தனைத் துணைவுறப் பற்றிய. 52

பாடகச் சேயடிப் பாவைமார் தோயவே
யாடகக் கடநிக ரவர்குயம் படிதரு
மீடிகத் தினனதி யிமயநற் சேய்முன
நீடகத் தாழ்ந்தநீ ளுததியை நிகர்த்ததே. 53

கஞ்சநேர் கண்ணினர் கங்கணங் கறங்கவே
மஞ்சிநேர் மாயவன் மீதுநீர் தூவினர்
விஞ்சுமோர் கடகரி மீதுவெம் பிடிபல
துஞ்செனுங் கைகொடு தாமிறைத் தென்னவே. 54

பிறழுமஞ் சேலுடன் பிறங்குகண் ணெத்தன
நறியசை வலத்தொடுஞ் செறிகுழ னண்ணின
நிறைதருங் கோகமுங் கொங்கையு நிகர்த்தன
வெறிமலர்க் குழலினர் வெம்புனல் குடையவே. 55

ஒருமயிற் சிவிறியா லொருதுயி லெந்திரத்
தொருசுகங் கைகளி னுந்தியின் புனல்கொளா
வொருபொருப் பஞ்சனத் துச்சியிற் பலமுகின்
மருவுபு பெய்தென மகிழ்வொடுந் தூவினர். 56

ஒழுநீர்நாள் பங்கய மொராடர வல்குலாள்
வழுவுறு தோச்சவவ் வாரிசக் கண்ணனுக்
கெழுதரும் பூங்கணை யென்னவே வீழ்ந்ததாற்
பழுதறும் பாவைமற் றெப்படி,வெல்வதே. 57

அம்பினுண் மூழ்குமோ ராயிழை தன்னுட
னெம்பரன் மூழ்கிமே லின்கரத் தேந்தினன்
முன்பிர ளயவுத திக்குளே மூழ்கிய
வம்புவி தனையெடுத் தாதரித் தென்னவே. 58

கந்தரத் தளவமிழ்ந் தமர்தருங் காந்தையர்
சுந்தரத் திருமுகஞ் செந்நிறத் தோடகத்
தந்தமார் மலர்நிகர் தவிருபோ தவர்குழல்
வந்துவீழ் வைமிசை வண்டினஞ் சிவணுமே. 59

பூந்துகி னெகிழ்தரக் களபமும் போதரக்
கூந்தலுஞ் சோர்தரப் பணிகளுங் குலைதரக்
காந்தையர் கண்ணினிற் கழுமு நீராடின
ரேந்துபூம் பகழியா னுடல்செய்த தென்னவே. 60

ஆடியிவ் வாறரிச் சிலம்பினு சோடுமா
னீடுரும் பிரணவ நேர்விமா னத்துளே
யாடலா ரொருகளி றருகுபல் பிடியொடுங்
கூடுநீ குஞ்சமூ டென்னவே கூடினன். 61

வேறு

தோகைக் கருந்துணையாய்த் தோலினத்திற் குறுமதமா
யேகத் திரளெகினக் கெறுழசனி யாய்க்கழிந்த
வாகைச் சுகிக்கபிசா ரத்தினெழும் வலியபுகை
யாகிக் கனசமய மாங்கடைந்த தென்பவரோ. 62

மினனலெனுங் கூத்தியர்கண் மேவும் யவனிகையாய்
மன்னுமுக லம்பரத்தின் மன்னும் விதான மெனக்
கன்னன் மதனன் கரக்கணையி னின்றெழும்பும்
பன்னரிய தூமமெனப் பரந்தனபைங் கொண்டலெங்கும். 63

பூவின் கணைக்குமரன் போர்முரச வென்முழக்காய்
மேவும் விகங்கத் திரளிரியும் மந்திரமாய்த்
தூவும் கரடமலைத் தொழுதுபுரி யும்பிளிறாய்
வாவும் கருமுகில்கள் வானெங்குஞ் சென்றிடிக்கும். 64

கரிய முகிற்படலங் காண்டலுமன் னப்படல
முரிய வலவெனவாங் கோடிக்க ரந்தனவிப்
பெரிப படியுழிவெண் டேயவரும் பெற்றியர்கள்
கரிய வியல்புடையார் கண்முகப்பிற் காண்குவரோ. 65

தணந்திங் குழல்பவர்க்குத் தருமன் விடுதூதாய்
மணந்தங் கரவிந்த மலர்வீட்டும் வெம்பசையாம்
புணர்ந்தின் புறுகவெனப் போதிக்கு மந்திரமாய்க்
கணந்தண் புனல்சிதறுங் கொண்டல் கலந்தெங்கும். 66

சீதப்பு யல்வளியாற் செறிந்தெங்குந் தான்பரவு
மேதக்க செந்தாழை மென்குடசத் தின்மலரின்
றுதிற்க மழ்பொடிவே டன்றுதார் தமைவலிக்க
வூதிக்கி ளர்மாயத் தொண்பொடியி னேக்கியதால். 67

கொண்ட லெனும்வெய்ய வுயிர்ப்பெறிந்து குரைகடலை
மொண்டு கிளம்பம்புதகா கங்கவற்ற மொய்ம்பழியுந்
திண்டிறலி னிளைஞர்களுக் கார்வமுறுந் தேமொழியார்
தண்டரளத் தாரகலந் தழுவுகையே யின்மருந்தாம். 68

பெய்யுமுகில் விண்டெழிக்கப் பேரா ரெதிரொலிபோல்
வையமதில் வாரணமண் டேகிகி சாதகங்கள்
செய்யுந் தமதிதயஞ் செம்மாந் திருமுழக்க
நையும் விரகியர்பா னஞ்சாய்ப் பரவியதால். 69

தாமரையி னுபத்துத் தணந்தோர் படுங்களம்
மீமழையென் குஞ்சரங்கண் மேவும்பெருங் கொம்பா
நாமமுறு யிரவி நலியுங் கொடுவெயிலும்
போமரிய வெஞ்சாபப் பொங்கும் புனலாகி. 70

கண்ணு யிரனுடனேர் கலவமயி னல்வினையாய்
நண்ணு வருந்துபுன னலிந்தேங்குஞ் சாரங்க
முண்ணு மகிழ்மருந்தா யும்பர்முழு தும்பரந்த
பண்ணூர் புயல்சொரியும் பைம்புனலும் வீழ்ந்ததரோ. 71

பாரெங்கும் வென்றியுறப் படையெடுத்த வங்கசற்குக்
காரன்பிற் செய்முகிலாங் கவினுபட மண்டபத்தின்
சீரொன்றுந் தந்துவினாற் செய்திடுவெண் ணுனினம்போ
லேரொன்றுந் தாரைமழை யெத்தலையுஞ் சொரிந்ததுவே. 72

மேலோடுங் கால்விசையின் மேகபட லங்கரிய
வாலாலம் போலிரைந்தாங் கம்பரத்து ராய்தரலும்
பாலாமு டுக்கணங்க ளுக்கதெனப் பார்முழுதுங்
கோலா கலமாகக் குடமலர் பூத்தனவால். 73

கொண்மூ வெனும் விசைய கொய்யுளையை யூர்ந்தொழுகும்
பெண்மோகத் தாயிரங்கண் பெற்ற சதமகவான்
கொண்மா மலர்க்கரத்திற் கூருங் கசைநிகர
வொண்மா சபலையொழுங் கம்பர தலத்தொளிர்ந்த. 74

பாயும்ப யோதரத்தால் வெங்கதிருந் தண்கதிரு
மாயும் பொழுதுவெயின் மற்ற மதிக்கலையும்
வேயும் மலர்க்குழலார் விம்முங் குயங்களினு
மேயுந் திருமுகத்து மிருந்து சுடர்விடுமால். 75

ஆவணியிற் பின்பக்கத் தட்டமிரோ கிணிநிசிவாய்ப்
பூவலயந் தானுய்யப் பூத்த திருவிழவை
மாவகலும் வாய்பிளந்த மன்னு திருவரங்கன்
றேவர்களும் போற்றிசைப்பத் திருவிழியிற் கண்டருளும். 76

சிங்கமதி யிடையிற் சீரார் திருவரங்க
னங்கபரி வர்த்தனமா கரிவாசர திவசத்
தெங்குமுள வெம்பரம ரெல்லோருந் தாங்குழுமப்
பொங்கும் பவித்திரமா வுற்சவத்தாற் பூரிக்கும். 77

செம்பொற் கலுழன் முதற் செம்மை யுறுமூர்தி
அம்பொற் கலேயரங்கன் மும்முன் றிரும்பகலும்
பம்பிப் பலர் தொடர வூர்ந்தின் விழாவயர்ந்தே
விம்பர்க் கிதமாகு மவபிரத மாடுமரோ. 78

வேறு

ஈங்கிந்தக் கார்ப்பருவ மிகந்திடலும்
வெண்முகிலா மேகா சத்திற்
றீங்குரலின் மராளகதி யுடனுருவி
னிரையெனுநித் திலவா ரத்திற்
பாங்கினில கம்புலியா மின் முகமும்
பங்கயமா விழியுந் தாங்கித்
தேங்கமழின் றளவேனேச் சரற்காலத்
திருமங்கை திகழ்ந்து சேர்ந்தாள். 79

வெண்டிங்க ணிலவானும் வெண்கால
மலரானும் வெள்ளே வண்ணக்
கொண்டல்களின் குழுவானுஞ் செங்கானுஞ்
செஞ்சூட்டுஞ் செறிந்து வெண்மை
யுண்டவெழி லோதிமநே ரோணியினுங்
கூதிரெனும் வனிதை யேனே
வண்டலம்பும் போதலரு மிருதுகளே
முறுவலிக்கும் வகையே மானும். 80

ஆசையெனு மங்கனேக ளிளவேனி
லலர்புட்ப வதிகளாகி
வீசனிலத் தான்முதிய வேனிலெழுந்
துகளாலே திமிர்ந்து காரின்
மாசொழியப் பெழிதருபைங் கொண்டலெனுந்
தசும்புகளின் மண நீராடி
யாசகலுங் கூதிரிடை நின்மலமா
மம்பரமு முடைய ரானர். 81

கலசசல நிதியென்னும் பாயன் மிசைக்
கண்டுயிலுங் காமன் றந்தை
யிலகுசரத் திருதுவினிற் றுயிலெழுந்தா
னென்பதுவுஞ் சாத மின்றேற்

பலசனமு முத்தமுறவப் பரந்தாம
னிருவிழியாய்ப் படைக்க மின்னுங்
குலசசியு மேழ்பரியைக் கொண்டவிர
தத்தோனுங் குலவு வாரே. 82

வெண்கடலுட் கண்டுயில்வோன் விழித்தருளு
மரிவிரத திவசன் தன்னி
லொண்பெரிய நிசியுளியே பிற்பொழுதி
லும்பர் தொழு மரங்கத் தம்மான்
பண்பொழுகும் பாணர்குலம் பாவலனாற்
கௌசிகமென் பண்ணுமுள்ள
மண்குலவக் கௌசிகனுன் மிழற்றியதைச்
செவியுற்று மகிழ்ந்தான் மன்னே. 83

வேறு

படியெலாம் களிகொள் செய்ய நளிமதி யிசையிற் பாயற்
கடுவிறை யுடைய கண்ணன் கார்த்திகைப் பருவ வைகல்
விடுநில வெறிக்குந் திங்கள் வெண்கலை யவையுந் தாழ
மடநிகழ் மகளி ரேற்றும் விலக்கமின் சிறப்புங் கண்டாள். 84

புலரியி னறுநீ ராடிப் பொலிபல கலனும் பூண்டு
கலவமா மயில்க ளென்னுங் காளையர் மகளி ரோடு
மிலகுறு முபகாரங்க ளேந்தியின் கரத்தி னிற்ப
நலமுறுந் தனது சேவை நல்கின னருளி னேக்கா. 85

தரணியோர் பற்று மின்று மம்பர தலத்தின் வரவு
முரணுறுங் குரக தங்கள்:குளித்திடக் குடபான் முந்நீர்
விரவுறு வெழுவான் போல வெங்கரஞ் சுருங்க மீண்டு
மரணெனும் படியி னேங்கு மத்தவெற் படைந்தா னன்றே. 86

முயலொழு குதிர மென்ன முதிர்சிவப் புடைய வெய்யோன்
வயங்கொளுங் கரங்கண் மேலே யிடருமேல் வளாயு மன்றேன்
செயிரறு மயங்கண் மார்பிற் சிகரியின் சிகரந் தேய்க்கப்
பெயலுறுங் குருதி தோய்ந்த செலெனப் பிறங்கிற் றம்மா. 87

வையக முய்யும் வண்ணம் வானகம் படருஞ் சூரன்
செய்யவெம் பதங்க ளெல்லாஞ் சிவந்திடுஞ் செயனு நோக்கின்
மையுறு மளவொன் றில்லா வைகலி லிருந்து மாகத்
தொய்யென வொழியா தகே வுற்றதென் றுரைக்கலாமே. 88

முழுமையுஞ் சேந்து தோன்று மொய்ம்புறுந் தபன விம்ப
மெழுமலை நிரைகண் மேலை யார்கலி யிடத்தொன் றேடொன்
றிழைதர வெழுந்து மாய னெழிற்புயத் திடையின் மன்னி
மளவிறங் கதிரெ றிக்கு மணிவணத் தழகே மானும். 89

அருணமாங் கிரண கேச ரங்களின் வருண னுசை
மருவியே தூங்குஞ் சோதி மண்டல மூலக மூன்று
முரிமையின் வேறற் கெண்ணு மொழுகுதேன் மலரம் பெய்வோன்
பிரிவின ருடலம் போழ்வா னெய்த்திற் பிறங்கு மாதோ. 90

ஆயியம் பெரிய வெள்ளத் தழுந்தினன் கரங்க ளந்தோ
விழுகுவன் விரிந்த வெண்ணி னெடுத்தனை விடுவா ருண்டேல்
வாழுவே னெடுநா ளென்று வாய்வெரீஇ யுடலஞ் சேந்து
மாழ்கிமே லெடுத்த கைக ளெனவவன் கிளரு மாதோ. 91

நளினியாங் கற்பின் மிக்க நாயகி யெனது நாயக
னளிபெருங் கடலுண் மூழ்க னுண்கணிற் காணே னென்னுக்
களிமது கரங்கள் பாடுங் கமலக்கண் முகிழ்த்து மாய்ந்தா
ளளிப்புறுங் கற்பின் மங்கைக் குயர்நெறி யிழிந்தா மன்றே. 92

பனிப்பகை குடக்கு வாரி தியினிடைப் பருப்ப தத்தி
னனித்தலத் திருந்து வீழ்ந்தா னெனவிரைந் துள்ளஞ் சாம்பிச்
சணக்குரைத் திடுவ னென்னப் பறவையின் சங்கங் கூவா
வினிப்புற விழைத்து நீடத் துண்ணுழைந் தொடுங்கிற் றன்றே. 93

மூடிய வசனத் தூடு முரலளி முடங்கிற் றென்றே
யாடுறும் போக்கின் வெய்யோ னுந்தவன் பட்டா னென்ன
வாடிய விமைா ருத நளினியாம் வனிதை வாயிற்
பாடறுங் கரிய நஞ்சைச் சரதமே பரிந்து பெய்தாள். 94

அளிகுல மழுங்க னண்பன் புலரியி லடைவா னென்று
நளினியா நங்கை தன்னை யிசையெனு நறிய மாற்றங்
குளிர்வுற மொழிந்து புன்கண் குலைதரத் தெருட்டிற் றம்மா
வளியின தியற்கை நோனு தயல்வர் பழங் கணன்றே. 95

பரவைமேற் படருந் துப்பி னிழன்மிசைப் பாய்ந்ததுண்டோ
விரவிமேல் வரையின் செய்ய தாதுமின் விறங்கிற் றேயோ
வருணனின் மனைவி யங்க ராகமேல் வழங்கிற் றுமோ
வருணமா யாய மேல்பா லம்பர முழுது மாங்கே. 96

அம்பர வுவரி மீதே யலர்ந்த செந் துகிரோ பூவி
னம்பினன் வலிய தோளி னடலழற் சிகையோ மேல்பாற்
கொம்பனை யடியி லூட்டிக் குலவலத் தகமோ மேலே
யும்பரின் முடியார் வெற்பி னொளிர்செவி யசோக மாமோ. 97

கற்பகத் தளிரின் சோதி கலந்ததோ திமிர வண்டின்
பொற்புறுங் குழுவிற் பொங்குஞ் செய்யபங் கயத்தின் காமே
விற்பன நடரா சற்கு விளங்குசெந் திரையோ நீங்கு
மற்பொழு திரதப் புள்ளி னுசைநோ யனல மேயோ. 98

* * * *

வேறு

உதயவெற்பி ருங்களிற்றி னொளிருகண்ட சங்கமாய்
மதனமன்ன வற்குமுத்த மன்னுவெண்க வீகையாய்
விதுவிருந்த ணிந்த விம்பம் விரியுநீல வானமாஞ்
சதமுறுந்த டத்தெழுந்த புண்டரீகஞ் சான்றதே. 110

அமுதநெய்க ரத்திரீய மர்ந்ததிங்கள் விம்பமா
மிமிழுறுந்த களியதன்க ணுதயராக மென்றிடு
நிமிர்தருஞ்சு டரையந்தி யென்னுமின்னு நேரிழை
முமதமாவின் கொம்பொசித்த வற்குமுன்ன ரேற்றினள். 111

மங்களத்தி னேரை தன்னின் மணிமயத்த தகளிவா
யெங்குமெண்ணி னனெய்யி னேற்றருஞ்சு டரெலா
மெங்களைய னரங்கனுதி யிண்டையின் விழிகளிற்
பொங்குடன்கண் டருள்புரிந்து பொன்விமானம் விண்டபின். 112

ஒன்பதாய மணிகுயிற்றி யொளிருதண்டி கைக்குளே
யன்பினுற் றெழுந்து வெம்ப டைக்கணத்தி னரசனுந்
தன் பெருந்தி கீரியண்ண றன்சினக ரந்தனின்
முன்புகீட்டி சைக்கணுட்டி முகடுவான முட்டவே. 113

திசையினெங்குந் தெரியுமாறு தீபமொன்று முனையுற
வசையிகந்த தாளவோலை வரையிகந்த திற்புரிந்
தசலமென்ன வோங்கதின்ன டித்தலத்தி னெரியிட
மிசையெழுந்து சடசடென்று மிக்குமூள நோக்கினன். 114

* [நூலாசிரியர் எழுதியுள்ள கையெழுத்துப் பிரதியில் ஓரேடு செல்லுக்கிரையான மையால் இவ்விடத்தில் 11 செய்யுட்கள் விடப்பட்டன.]

தாளநாள மின்பொறிக்க ணங்கடங்கு கேசரம்
மூளருஞ்சி கைத்தளங்கண் முடுகுதூப நிரையுமே
லோளியாயொ ருங்குபோது மதுகரத்தொ ழுங்குமாய்
வாளலர்ந்த பங்கயத்தை யொத்ததந்த வன்னியே. 115

மீதுமூளு மந்தவெய்ய வனற்சிகைகண் மிக்கெழுந்
தீதலிற்சி றந்தவைந்தி ருந்தருக்க ளேவளேந்
தாதிநாய கன்முனங்கெ ரிந்தபோத வேகளுஞ்
சோதிவல்லி யென்னவாருஞ் சொல்லுமாறு ளிர்ந்தவே. 116

புரமெரித்த புனிதன்வீரி யந்தகித்த பொங்கழல்
வரநதிக்கண் வெம்மையாற்று வானெழுந்த துண்மையே
சுரர்தமக்கி வன்கொடுக்கு மவிகளைச்சு மந்துசென்
றெரிகரத்தி னீயவங்கெ ழுந்ததென்று மிசைத்துமே. 117

நீடுசொக்கப் பனைதணிந்த பின்னர்நீல மேனியா
னுடுபாம்ப ணைப்பரன்றி ரும்பியங்கு நின்றுபொற்
கோடுயர்ந்த நாயகிதன் கோயின் முன்வ ழிச்செலா
நாடரும்வ ரவரமண் டபநடுவணண்ணினன். 118

அங்குசேர பாண்டியன்சிங் காதனத்து விற்றிருந்
தெங்கு மோகை போயமங்கை யெழிற்கலிய னிசைதலும்
பொங்கு முள்ளத் தொடுசெவிப்பு லன்கொளாம கிழ்ந்துபோ
தங்கிரும்ப தின்மராழு வார்கடர்ம திக்கவே. 119

சடமகற்றி னரிழைத்த தமிழ்மறைப்பு துநருக்
குடமெடுத்து கூத்தினோடு கொண்டுளங்க ளிக்கவே
யிடமடுத்த வாடன்மூன்றி னேதுவாய சாசனம்
மடமகற்று மாலையாதி யோடவர்க்க ளுய்த்ததின். 120

அந்தமாற னுறுதைல கந்தரத்தி னுங்கெழுந்
தெந்த மாய னுணை தன்னை வீழ்ந்துவீழ்ந்தி றைஞ்சியே
சந்தமாய தந்தலைப்பு றத்தியைந்து கானமங்
கந்தமாயு வந்துபாடற் காமுவந்து சென்றனர். 121

வேறு

முன்பனியெ ழுந்ததுபின் முளரியுரு மென்ன
மன்பெரிய மாகமொடு மெண்ணகமு மொன்றாய்க்
கொன்பனிவி ழுந்திடுகு றுந்துளிகண் மூடப்
பொன்புரையு மேனிகளும் பொற்பொருவ மாதோ. 122

மூடுபனி முன்ன ரெழு வோர்கடெரி யாமே
நீடிரவி யின்கதிர்க ணீக்கும்வலி யின்றாற்
கூடுறின னுத்திரனுங் கொண்டவக மொன்றே
பாடிலது பாரினதை யேன்றெதிர் படுக்க. 123

அவ்விருது வானவன டர்ந்துபெயி மத்தின்
கவ்வைபுரி நுண்டிவலை கொண்டுகம லத்தின்
செவ்வியொடு செந்தவன கன்றமட மாத
ரொவ்வறுமு கத்தலரி னொண்மையையுங் கொண்டான். 124

ஆங்கயில்வி ழிச்சுரிகு ழன்மகளி ராடும்
பாங்கினொடு வன்பவள வாயிதழ்வ லிந்து
தேங்கமுத முண்ணவவர் சீற்கரமுஞ் செய்யா
ரேங்குவர்க ளூடுவர்க ளின்பனிவெ டிப்பின். 125

அத்துகின மாதவன டர்க்கும்வலி யின்று
லொத்தவ வனுக்குரிய நீரசமொ றுக்கும்
குத்தலைவ லப்பகைவர்க் குறுகும்வலி யில்லார்
மொத்துவர வர்க்குரிய மொய்ம்பிலரை யென்ப. 126

தண்ணிமக ரன்றுகின நுண்டுளிக டம்மா
னண்ணெழிலை நளினமது நன்கபக ரித்தான்
றன்னொடுபி றந்ததிரு வதனமலர் தன்னை
யொன்மையினு றழ்ந்ததிது வென்றுளம ழன்று. 227

நூறிதழ்ம ணத்தினோடு நாண்பனிய ளைந்து
வீறிளைய தண்வளித வழ்ந்துவிளை யாட
நாறுமல ரின்கணைய னண்ணரிய வெந்தீ
மீறியதி கந்தவர்க ளுள்ளமும்வெ தும்ப. 128

மாயனுரு வாயமதி வைகறையி லாரும்
பாயொளிய மைம்பொனில யக்கதிர்ப டிந்து
சேயநறு நெய்யடிசி லேமுதல செய்ய
வாயகர மார்ந்துதிருப் பள்ளியெழுப் புற்றார். 129

அம்பொனொளிர் கம்பமவை யாயிரமு யர்ந்தும்
வம்பவிழ்ம லர்த்தொடைய னித்திலமு நாலும்
உம்பருறு கொட்டகையு மொன்றெதிரி னோங்கும்
இம்பரெதி ரின்றியவின் மண்டபமெ ழுந்தே. 130

வடகலையுந் தென்கலையும் வைப்பமர ரோதப்
புடையொழுகு பொன்னியரங் கன்னிடைபொ லிந்து
நடமுதல கண்டருளி நாலைந்திரு வைக
லடைவுடனெ ழிற்றிருவி ழாவதின கற்றும். 131

வேறு

பின்வெங்கதிர் மகரந்தனிற் பிணையும்பொழு தரங்கன்
பொன்வெம்பிதிர் பொருவுஞ்சுணங் கிளமாமுலை யவரின்
மின்வெம்மணி யூசற்றிரு விழவாடலும் விலைழயா
மன்விம்மெழு நூறூர்மணி மண்டபமு மணைந்தான். 132

பூமாமுத லெமதன்னையர் பொதுளத்திரு வூசல்
நாமாயிர னனுகாமத களநங்கையர் நசையாக்
காமாகர டோலைத்தலை கலந்தாடுறு கவினும்
வாமாகர வீழிகண்டுள மகிழாவருள் செய்தான். 133

பெண்மாமணி களின்மேலடி யாகச்சுழல் பெரிதும்
மண்மாமணி மிளிரெந்திர மதனன்வய மடைவா
னெண்மாவுரு வேற்றுஞ்செப மாலைக்கிணை யிதுவென்
றெண்மாவளை யொளிர்கைப்பர னுவந்தெண்ணுபு கண்டாள். 134

சுடுவெந்தப னனும்வெங்குளி ராற்றும்வலி தெர்ய்யா
முடுகுங்கனன் முதல்வன்றிசை முன்னிச்செறி தரமா
குடைதந்தெழு வாசங்கமழ் குந்தத்திர ளலரும்
படிபின்பனி பின்வந்தது பரந்தாமன துழையே. 135

மாயன்மல ருறைவோனரன் மார்வம்முக மரைமெய்
யாயுந்திரு வெழினுமக ளயிராணியென் றிவர்க
ளேயும்படி தினையும்வரை வின்றேயெழுந் திலரேல்
வாயும்பெரு நளிரப்பொழு தெவ்வாறவர் வதிவார். 136

அடலாரர விந்தக்கணை யலகக்கனல் வில்லோன்
மடலார்குழ லவர்மைந்தரை மருவப்புரி வகையே
விடலார்கணை யொன்றின்றியவ் வேலைப்படு குளிரே
மிடலார்விசி கங்கள்ளென மேவித்தொழி லாற்றும். 137

காழாரகி லூட்டும் புகை கமழும்பவ னத்தும்
வீழாவன மகளிர்முலை மிடையுஞ்சுடு கையினுந்
தாழாதெரி தணலார்தரு குண்டத்தரு கிடையும்
வாழாவுறை தருவாரந்த மதிவாசர முழுதும். 138

மீனந்தனி லாதிப்பிர மச்சாறுளம் விழையா
வானந்திகழ் வோரைக்கூய் வரிவார் முர சறையா
மானந்துரோ கிணியிற்கர மதுகங்கண மன்ன
வானந்தாமோ டவிருந்துச வாரோகணம் வளைந்தான். 139

குமுதாதிக ணேசர்களிற் குலவேழவ ரணத்தி
னமுதற்குரு பலிதந்தனற் கருமங்களு மயரா
விமிழின்னிர ணியசப்பர மிவர்ந்தெல்லியின் மறுகின்
முமதக்கரி முரசார்பொடு படர்ந்தாலய மணந்தான். 140

மறுவைகலின் மணியிற்புரி சதுரந்தயா னமிவர்ந்
திறைவன்னுப வனமன்னியங் கிருவைபவம் பருகா
வுறையார்குர கதமூர்ந்தவன் மறுவைகலை யுலையா
நறையார்குக நகரோபவ னந்தங்கினன் கழித்தான். 141

நாலாவது தினநாகவ சனன்மண்டப நணுகா
மேலாயவன் மணதோரண மிளிரும்மறு குலவாக்
கோலாகல மொடுமாலையிற் குளிரப்பல வியமும்
மேலாவெவர் களுமேத்திட வெழுந்தானில யத்துள். 142

மூன்மாகடி புரியுந்திரு மூதூருறை யூரிற்
பின்னுளெழுந் தவனுடரும் பெருமைக்குறு பலவும்
மன்னுநிசி மலரின்சிவி கையினூர்ந்தம ரருங்கார்
மன்மாகம திடைநின்றுகை தொழுமந்திர மணந்தான். 143

ஆறுவதி னருங்கும்பமு னியினுசையி னணுகா
வீறூர்பகல் விபவத்தொடு கழியாவிரை மதமே
யூருவொழு கும்பற்றிரு வூர்திப்பிட ரூர்ந்தே
மாருமறை வடிவத்துவி மானந்தனை மணந்தாள். 144

மற்றும்படர் மறுகின்விளை யாடல்வளைந் திரவி
லுற்றுங்குச மொளிர்வானக மபிடேகமு னெல்லாம்
பெற்றங்கிருந் திருமாமறை பின்முன்னரு மிசைக்கக்
கொற்றங் கொளுந் தெருமேடைந்தம்பொற் கோயில்கொண்டான் 145

இருநான்கினிற் புரியின்கிழக் கெய்தித்தின முகத்தின்
மருமாமலர்க் கதம்பம்மெனுந் தீர்த்தக்கரை மருவில்
பரிமாமிசை யூர்ந்தேமறு படியந்தியங் கிருந்தே
கிரிமாமனை மறுகிற்செல வயர்ந்தாலயஞ் செறிந்தான். 146

புலரித்துயி லுணர்த்தும்படி வத்திற்பரன் பொலியா
வலகற்றெளிர் மனைதோறிடு முபகாரமு மடையா
மலமற்றிடு தீர்த்தம்பலர் மகிழ்விற்கொள வருளா
நலமுற்றெளிர் நவமத்தினின் மாவாலய நடந்தான். 147

நின்றங்குயர் நிமிரும்புட் பகத்தேரினி லிவர்ந்தே
மன்றன்மல ரவள்பூமகண் மருங்கெய்துற முன்னம்
மின்றங்கிடைச் சனகன்மக ளுடன்ராகவன் மேவிப்
பொன்றங்குவி மானத்தொடு போனுனெனப் போகி. 148

துவசஞ்செறி தெருவெங்கணுந் தோன்றிப்படர்ந் தந்தித்
திவசம்மவ பிருதம்புரிந் ததன்பின்மறு தினமே
யவசங்களை புட்பயாகத் தருஞ்செய்கையு மாற்றி
நவசந்திர நுதலாரொடு நணுகும்பரை நோக்கா. 149

இனிநீர்நும தகஞ்சென்றுறை கிற்பீரென விசையாப்
பனிநீரரு ளொழுகுங்கடைக் கண்பார்வையிற் பகரா
நனிநீர்முகில் படியேழர ணளியின்வலம் வந்தே
தனிநீருறு மோங்காரவி மானத்துறை தந்தான். 150

கோயிற்றிரு மலேகச்சியை முதலாகிய குலவு
நேயத்துறு தனகோயில்க டொறுமித்திரு நிமலன்
மேயற்கரு விழவித்தகை வருடந்தொறு மேவாப்
பாயிப்பெரும் படியார்நலம் பருகத்திகழ் கிற்கும். 151

பொய்கைக்கிள ரடியாரெழு வாயாயொளிர் புனிதர்
மெய்கற்றனை வோருந்திரு மாமன்பத மிடைவான்
செய்கைக்குறுந் தமசீடர்கள் வழியிற்பயின் மிருகத்
தெய்தப்பிற விலங்கேவையு மீர்க்குஞ்செய லெனவே. 152

அன்னோர்தமை யருளித்தம தழகார்பிர பந்த
மென்னும்பல சினையெங்கணு மெய்தித்தழை தருவின்
மன்னுங்கனி திருநாடென மனமுன்னுபு யோகந்
தன்னின்னெறி தவறாதது தழையப்படி தந்தார். 153

ஆண்டாள் வைபவம் முற்றிற்று.

---

## *உறையூர் நாய்ச்சியார்

### 15-வது சருக்கம்

தன்கலை யலைக்கட றனக்கரிய போனு
மன்பினொரு மாமறைய னண்டைநவில் குற்றும்
பின்பவனி றந்தமக வைத்தருபி றங்க
லென்பெரிய மாமணியெ னக்கரிய பேறும். 1

இன்மணிகொ ழிக்குமலை யேறுதட மோங்கும்
பொன்னியது தென்புறமி ரும்புவிபு ரக்குங்
கொன்னவில யிற்செனியு றைந்துமகிழ் கொள்ளு
நன்னகர மொன்றுறையூ ரென்னவெழின் மன்னும். 2

பத்திமணி மாடமிசை வைத்தமணி பாயு
மத்துநிற வென்முழுது மம்பரந திக்கண்
ணித்தியமி லங்கவதி லந்தரணி நீடு
மொத்தவெயி லென்றுதிகி ரிப்புண்மய லொன்றும். 3

காந்துமணி பூமியிடை யும்பரொளி காலுஞ்
சேர்ந்திடுமு டுத்திரளின் செய்யநிழ லின்றேன்
மாந்தளிர்ம லர்க்கணைம தன்சிலைவ ளைக்க
வீழ்ந்தொளிர தன்பருவ வெண்டரள மானும். 4

நீடுமணி மாடமிசை யைந்தருவி னீழல்
வாடுமிடை யார்களொடு வானவர்க ளென்றும்
பாடலுட னுடல்வளைந் தங்குறையும் பண்பா
லாடுவர தற்குறையூ ரென்னுமெழி னும்ம். 5

வேறு

இன்ன நன்னக ரிரவியின் மரபினி லெழுந்த
தன்ம வன்மனின் குலத்தினிற் றராபதி யொருவ
னென்ன லார்மணி வாயில்வா யுறங்கவும் பொலிந்து
மன்னு மேழுல கொருங்குறப் புரந்தனன் மாதோ. 6

---

* இது தொண்டரடிப்பொடி யாழ்வார் வைபவத்தைத் தொடர்ந்து வருதல்வேண்டும். [ஆண்டாள் வைபவத்துக்குப் பிந்தி அச்சிடவேண்டிய ஷை தொண்டரடிப் பொடியாழ்வார் வைபவம், 8-வது சருக்கமாக முந்தி அச்சிட்டிருத்தல் பிழையென்பது முன்னரே அறிவிக்கப்பட்டது நேயர்கள் கவனிக்கத்தக்கது.]

கந்தடு ங்களிற் றவன்புயக் கந்தினிற் சுமையை
யந்த வாயிரம் பணவர விறையுற வமைத்துப்
புந்தி யாலவன் பொருவருங் குணகணம் புகழ்ந்து
மைந்து றுந்தன சிரங்களை மகிழ்வொடு துளக்கும். 7

வீறு மன்னவன் சீர்த்தியி னெங்கணும் வெளுக்க
வேறு நீலவம் பரமத னிடைநனி யிலக
நாறு பைந்துழாய் மணிவணன் பாற்கட நடுவட்
டேறு மின்றுயில் புரிந்தொளிர் திறத்தினைப் பொருவும். 8

பேண லார்தமை வயங்கொளப் பெரும்படை யெடுப்பிற்
சேணி லாங்குர கதங்களிற் செறிந்தெழு துகளின்
மாணி லாங்கருங் கடலெலாம் பங்கமாய் மற்றுங்
காண லாங்கரித் திரண்மதக் கலுழியிற் கழுமும். 9

மற்று மின்னன மாண்பளப் பிலனவன் றவத்திற்
பெற்ற னன்கம லாகரந் திகழ்வுறப் பிறந்த
கற்ற தூப்புலன் பரவதற் கனகமும் பொழிந்த
பொற்ற தாமரைப் பூமக டனைமக ளெனவே. 10

அந்த விந்திரை யொருபகற் சிலதிய ரடரக்
கொந்தி ளங்குழைச் சினைபொதுள் குளிர்பொழில் குறுகிச்
செந்த ளிர்க்கரச் கொடுமலர்த் திரள்பல கொய்து
சிந்தை யின்படி யுலவினள் சிறையனந் திகைக்க. 11

ஆங்கு மாமறைக் ககோசர வரங்களின் வேட்டம்
பாங்கி னுடுறப் படர்தலு மவனெழிற் படிவந்
தாங்கு மாமையிற் படிந்தவே றனதிரு விழியும்
வாங்கு மாறுரு தவன்மயல் வளர்தரத் தயங்கி. 12

தைத்த வாள்விழி வலிதினிற் பெயர்த்தவள் வாங்கிப்
பைத்த பாம்பக லல்குலார் பரிந்துசூழ் போதத்
தத்து நீள்கொடி மந்திரம் புகுந்துதன் றுதைக்
கெத்திறத்தினு மெனையவற் களித்தியென் றிசைத்தாள். 13

ஆறு பாதமுண் டிமிழ்தரு நறுவொழு கலங்க
லூறு திண்புயன் செவியுற நனியிறும் பூதின்
மீறி யின்களிப் பினுமவண் மிழற்றிய திறமே
சாறி திற்புவி யெங்கணு மிலையெனச் சாற்ற. 14

மும்மை சாலுல கெங்கணுஞ் செவிடுற முரச
மிம்மெ னத்தெழித் தெழுப்பல சிறப்பொடு மகளைச்
செம்மை சாலர வணைத்திரு வரங்கனின் செங்கை
யம்ம லர்தழு வுறமறை முறைப்படி யளித்தான். 15

பத்து முப்பதோ டறுபது செறிந்திடும் பார
மொத்த தண்டுலம் பைம்பொனிற் புரிந்தவை யுடனே
சித்தி ரத்தெழில் செறிதரு மரம்பையர் சிவணும்
முத்த வெம்முலை நூற்றுவர் தமையவட் குதவி. 16

மருக னுமணி வண்ணனு மரங்கனுக் களவில்
குரும ணிச்சுடர் மண்டபங் கோபுரங் குலவுங்
கருமு கிற்குலந் துஞ்செயின் முதலன கனகத்
தருமை யிற்புரிந் துதவினன் பொருளெலா மவற்கே. 17

பின்ன ரப்பெரும் பிணையனு ளரங்கனேர் பெருகும்
பொன்ன கன்மரு மந்தனை மகிழ்வுறப் புல்லி
மின்னு மாமணி யிடையொளி மிளிர்வது கடுப்பத்
தன்ன மும்வரை யாதருந் தனிச்சுகந் துய்த்தாள். 18

## திருப்பாணாழ்வார்

### 16-வது சருக்கம்

குயிலென் னவளர்ந் தொருகோ குலமார்
மயிலன் னமருங் கருமா னினியார்
பயில்கொள் குரவைக் கிறைபா தமலர்
மயிலீர் தருமன் னுபெருஞ் சுகமே. 1

முன்னம் புகன்மூ தெயில்சூழ் தருமப்
பென்னம் பெருநன் னகர்பீ டுபெறுஞ்
சென்னென் மலிநீள் குலையிற் செயிலார்
பன்னன் முனிபா ணரெழுந் தனரே. 2

காரார் மதிகார்த் திகையிற் கமழுஞ்
சீரா ருமுரோ ணியிலெந் திருமா
லோரா ரகன்மார் பகவின் மறுவே
யாரா வமுதா யவரா யதரோ. 3

முந்நூ றொடுநாற் பதுமூன் றுமிடைந்
தெண்ணுங் கலிதுன் மதியென் வருடத்
தந்நுண் மதியா ரவதா ரமதாய்ச்
செந்நெல் வயலின் னொளிசெய் துறவே. 4

ஒருதம் பதியார் முனமோங் குயர்நோன்
பரிதிற் செயுமக் குறையுண் டதனான்
வருபா ணர்களின் மரபிற் பிறவி
மருவா வறமன் னியபுண் ணியரே. 5

அம்மா பழனத் தடமாங் கடைபோழ்
திம்மா மகவின் னெழிற்கண் டுமகிழ்ந்
தம்மா வரிதந் ததிதென் றணவாய்த்
தம்மா கரமேந் திநடந் தனரே. 6

சேயின் றியுமுன் றவளச் சிசுவின்
வாயின் முலைவைத் திடவும் மழுதே
பாயும் பொழுதம் முலைபா ணர்பிரா
னுய்விற் பருகா மலமர்ந் தனரே. 7

வேறு

கண்டு பாணர் கருங்குழ லானறு
மண்டு தீம்பய மாந்தப்பு கட்டலு
முண்ட தின்புற வோர்ந்ததி:விம்மிதங்
கொண்டு நாளுங் கொடுத்தன ளன்னதே. 8

தூய பாலத ருந்தியத் தூயவர்
சேய ஞானஞ்செ ழிக்கவு டன்செழித்
தேயு மாக்கலை யாவையு மேன்றனர்
மாய வன்னருண் மன்னிய பான்மையால். 9

கான லோலன் கருணா கரன்குண
மான முற்று மமுதிற் றலைப்பெயுந்
தேனை மானத் தெவிட்டறு யாழுட
னானு முள்ளு முருகிடப் பாடினார். 10

பிரம ஞானியர் பெட்புட னெங்கணும்
வரைவி லாதுவ ழங்குத லுண்பரால்
பரம பாவனர் பாணரின் பாலுமித்
தரும சீலர் பருகித்த யங்கினார். 11

ஆயி னும்முல கத்திய லண்மியே
தீய புன்பறைச் சேரியு றைந்ததால்
தூய தன்மையர் தூர விலகவே
ருய நால்வகை யோரைய கன்றனர். 12

திருவ ரங்கன் றிகழ்மணி மந்திர
மருகி யம்மலர்த் தாடொழு மாறுரு
துருகி நாளு மொழுகுறுங் காவிரிக்
கரைசெ றிந்து கமழும் மணல் கொடு. 13

பூங்க ரங்களி னேழெனும் பொன்னெயி
லோங்க மாடி யொளிரும் பிரணவங்
தாங்கு மின்னுரு வத்துரு தாங்குமா
ருங்க தற்கிடை யாற்றிவி மானமும். 14

அதனி டைத்திரு மாதின ரங்கனைத்
தனைம ணிப்பண நாகணை தன்னக
மிதமு றத்திகழ் கிற்கவி ழைத்தியா
ழதுக ரங்கொட கங்களி கூரவே. 15

பாடு முன்பரந் தாமனைப் பண்பினம்
பாடு வானெனப் பாடவு நாளுமவ்
வீட ருள்பெரு மானகம் விம்மியே
நாட ருந்துயி னண்ணிம கிழ்வனால். 16

ஈங்கு நாளு மிவரிழைத் தார்கையி
லாங்க ரங்கன் றிருப்பணி யாற்றுவோ
னோங்கு லோகசா ரங்கமு னியென்பான்
பாங்கின் மஞ்சனத் தீர்த்தம் பரித்திட. 17

துப்பி தழ்முலைத் தொய்யில் மகளிரும்
முப்பு ரிப்புய முந்துகு லத்தரும்
மைப்பு யற்கிணை மன்னுக யங்களு
மொப்பி லின்னுமு யர்பரி வாரமும். 18

சூழ்ந்து போதரச் சொல்லரும் பல்லியங்
தாழ்ந்தி டாதொலி தந்திடத் தண்புன
லாழ்ந்து பாய்தரு மாடக வாற்றினிற்
சூழ்ந்தி ருந்தவச் சுந்தரர்க் கிட்டினான். 19

கிட்டி யப்புறம் போகெனக் கேழ்கரங்
கொட்ட வன்னவர் கொண்டல் வணன்பதத்
திட்ட சிந்தைய ராகியி யன்மறந்
தட்ட வங்கயோ கந்தனி லார்ந்தரோ. 20

குற்றி போலவர் நின்றகு றிப்புணர்
வற்று வெஞ்சினத் தன்னவ னோர்கலி
னெற்றி மேலவர் வீசிட நெஞ்சுணர்ந்
தெற்ற பாரத மென்றகன் றோடினார். 21

செய்ய புண்ணீ ரொழுகிடச் செந்தவ
ரைய தாளென் றகன்றது மம்முனி
துய்ய நீர்படிந் தங்கந்து லங்குற
மையி லாறிரண் டம்மண்ம ணந்தரோ. 22

பொற்ற சும்பினிற் பூம்புனன் மொண்டுமா
மத்த கத்தினின் மங்கையர் சாமரை
பற்றி வீசப் பரந்தரு டைநிழ
லூற்றி யங்க்ளி கறங்கிட வூர்ந்தனன். 23

முன்ன ரேதிருப் பாணரு மூதெயின்
மன்னு தன்னில யத்தைம ணந்துற
வின்ன ருள்கொ டிருந்தவ ரங்கனுந்
துன்னி னன்சினந் தொல்பணி யானகம். 24

அந்த வேலை யளவில்சி றப்பொடும்
வந்த சாரங்க மாமுனி வான்முடி
மந்தி ரத்துட்பு குந்தும ணிக்கடந்
தன்ற லைப்புறந் தாங்கி யருகியே. 25

பாம்ப ணைப்பரன் பள்ளிய றைக்கணி
யாம்ப சும்பொற்க வாடம டைந்துறத்
தீம்பி தென்கொலெ னத்தன திண்கரத்
தேம்ப விற்பல காலிடித் தெற்றினான். 26

முட்டி யுந்திற வாதுற மொய்ம்பினிற்
கட்ட ழிந்துக ருத்துவெ ருக்கொளா
மட்ட விழ்துள வத்தொடை ம்மாயவா
பட்ட தென்பிழை யென்றுப ரவியே, 27

ஒன்று மோர்கில னென்றங்கு ணங்கலும்
பொன்றி கழ்கத வங்களும் பொள்ளென
நன்று நீங்கந னிமகிழ்ந் துட்புகுந்
தென்ற ணுயக னின்முக நோக்கினன். 28

வேறு

வைகறை யிற்பெரு வண்கயம் விண்ட செங்கம லத்தலர்மேல்
கைகளொ ராயிரங் காணும ருக்கன் செங்கதிர் பாய்வதென
வைகம ழெந்தைய லர்ந்தமு கத்தே யார்ந்திழி செங்குருதி
மைகிளர் மேனியில் வீழ்தர நோக்கி மங்கிய சிந்தையனாய். 29

ஆரண னேபரி பூரண னேயன் றைவரை யாண்டவனே
காரண னேயிந் நீசனி ழைத்த காய்வினை யைக்கருதா
தேரண வாவித் தீயனை யாள்வா யென்றவன் கண்கலுழா
நாரண வென்றும னேக முறைத்தா ணடிவ ணங்கினனால். 30

தாளடை கிற்பவர் தம்வய மாகுந் தன்மையெ ழிற்றிருமான்
மூளுசி னந்தணிந் தோரடி யார்மேன் முந்துறு மாவெசமாய்த்
தோளில வன்றனை நீகொடு முன்னந் துன்னுக விங்கெனலும்
மீளவு மம்முனி மிக்கசி நப்பின் மேவினன் காவிரிவாய். 31

மேவிய வர்க்கரு காயிரு கைகண் மீதுகு வித்தெழலு
மாவடி யேனோர் நீசன டாதே நீரரு காயுறலென்
றேவென வோட வந்தண னைய வெந்தீமை யாள்கவென
வாவலி னோடிவி ழுந்தவர் தாளின் னங்கை மறித் துடனே. 32

முப்புரி நூல்செறி தோளி லிருத்தி முன்னரும் பின்னருமா
யற்புத வாரண வோதையு நாணு தூரிய வாரவமு
முப்புற விம்மவெ ழுந்தகல் வீதி யுள்ளன முற்றுநடந்
தொப்பி லரங்கன் சன்னிதி யிற்சென் றுெண்பத மிட்டனனே. 33

விட்டதும் வெம்பிய கன்றனை யாவின் வெம்முலை பற்றுவபோன்
மட்டவி ழுந்துள வத்தொரு மாலின் மண்முன ளந்தபதந்
தொட்டொளி சேர்தரு தூமுடி காறுந் தோன்றுமெ ழின்முழுது
மிட்டமு டன்பரு கிக்கணி லந்த வெல்லையில் சீர்பலவும். 34

பாடிய ருஞ்சுவை பாயும் மமல னாதிபிரா னெனமண்
ணாடியு யும்வண மோரெழி னூலை நற்றமி ழாரணமென்
றூடிய கங்களி கூரவு மண்டர் மாடியு ணர்விலிகள்
வீடுற வையம ரங்க னெழிற்பொன் மேனிக லந்தனரே.

# திருமங்கையாழ்வார்.

## 17-வது சருக்கம்.

சகடுதைத் துரலி ஞேடு மருதிறத் தவழ்ந்து பாம்பி
னருமணிச் சுடிகை யேறி நடம்புரிந் தைவர்க் காக
விகலுறுங் குருடன் சேய்பா லெழுந்தருந் தூதா யிந்த
மகிதனை யளந்த தாள்கண் மறந்திடேம் பிறந்தி டேமால். 1

கரம்பயில் சகரன் மைந்தர் கனமகப் புரிவிக் காக
வுரம்படத் தொட்ட கீழ்பா லுததியின் மேல்பாற் பொன்னி
மரம்பயில் கரையி லன்ன மரைமல ருறங்க நாரை
யரம்பையில் வதியு மாலி நகரென வுளதென் ருங்கே. 2

அன்றரும் தவப்பேற் ருனே யலரவ னடர்ந்து வீறு
மன்றலங் கூவி ளங்கண் மலிதரு பொழிலி னுங்கே
கன்ெருரு குணிலாக் கள்ளக் கனிதனை யுகுத்த தேவாற்
குன்றிரு குருக்கண் மார்பிற் குளித்திடப் புல்ல லுற்ருன். 3

அதனிரு புடையு மின்னு மணிமணி யார மென்னத்
ததைவுற மலரு நீல நீரசங் களிலே தங்கும்
விதவளி பருக வீழ்ந்து பாய்நற வுடனே பாயுஞ்
சிதைவறு நூபு ராப காவெனுஞ் சிறந்த வாறே. 4

அதனரு கரன்றன் சாப மகற்றிய விமலை கேள்வன்
மிதமறு கருணை பாயு மென்மலர்க் கடைக்கண் பாயச்
சுதைபரு கமர ரூரின் சுந்தர மிடைந்த வோரூர்
பதலையி னரவ மாறு மங்கையென் ருெளிரும் பண்பின். 5

அம்மணி மலைநேர் மாட வணிபல நிரைந்த வூரிற்
செம்மணிக் கோலன் சென்னிச் சேனையின் றலைவ னீலன்
மும்மையேழ் முறையார் தன்னன் மரபினர் முன்னும் பின்னுஞ்
செம்மைசேர் தரவோர் செல்வ மைந்தனைப் பயந்தான் மன்னே. 6

இவ்வுகத் தொருமுந் நூற்றுத் தொண்ணுூற்ற டிணைந்த வெட்டா
மொவ்வறு நளவாண் டொண்மைக் கிருத்திகை மதிநாண் மாயன்
றிவ்விய தனுவின் பாக மாயுதித் திட்ட வந்தச்
செவ்விய சிறுவன் ருனே கலியனென் றிசைக்குஞ் சீரான். 7

அத்திரு மங்கை யாழ்வா னவதரித் திடலு மாழி
நித்திரை நிமலன் செய்ய கடைக்கணின் னமுதி னூட்டச்
சித்திர பானு வெய்ய வரணியிற் செறியு மாபோ
லெத்திறத் தகையு மன்னோ ரிடங்குடி யிருந்த மாதோ. 8

மங்கையா மதன னென்று மாற்றலர் மறலி யென்றும்
மங்கிய வறிஞர் வானத் தலர்ந்தவைந் தருவே யென்றும்
பொங்கிய புலவர் நான்கின் கவிபாடும் புலவ ரென்று
மெங்கணு மவரை யேத்தி யிசைத்தனர் களிப்பின் மிக்கார். 9

மலர்க்கரத் தொளிரு மங்கை மன்னவ னயில்வா ளெண்ணார்
சொலற்கரும் வனப்பு வாய்ந்த சுரிகுழன் மகளிர் கண்க
ளலைத்திழி யருவி யேய்க்கு மஞ்சனங் கலந்த நீரின்
விலக்கருந் தமது சீர்த்தி வெண்முளை வளர்க்கு மாதோ. 10

உலம்பொரு திரண்ட தோளா ருக்கமு முரனுங் கண்ட
வலம்படு மபய னன்னார் வயிற்சிறி தவனி பார
நலம்பட வளிக்க வைத்தா னனில மதனின் முற்றும்
பலம்படு மவர்தண் முத்தக் கவிகையுட் பட்ட தாங்கே. 11

காற்றினுங் கடிய மாவின் றிரள்களுங் கடம்பாய் கன்ன
மாற்றடக் கரமாத் தோடும் வெகுளியின் விழிக்க மாணார்
தோற்றொழி வலத்த வாளின் றொகைகளு மருளும் பொன்னி
னாற்றல்சா லவர்தங் கோயி லளவொழிந் தடரு மாதோ. 12

தாளுதுந் தகைய னீர்மே னடப்பவ னிழலின் மாய்வான்
றோலாத வழக்க னென்னு நால்வராந் துணைவர் துன்னக்
கோளாரு மசலை யெங்குங் குறைவுறு துவந்து போற்ற
வாளாலே வலிய டக்கிப் பகையினை வலிதின் வாழ்ந்தான். 13

இன்னண நிகழ வீங்கே யில்லறம் பருக வாழ்வான்
கன்னலின் குதலை வாய்ந்து கனமணிக் குழையைப் போழ்ந்து
மன்னகன் றரிப ரந்து மானின மருளுங் கண்கண்
மின்னிய வொருமின் னன்னாண் மணந்தது மிழற்று கிற்பாம். 14

திருமங்கைக் கருகி னுங்கூ ரென்றருந் திருநா மத்தை
மருவிய புரியொன் றுண்டு மகிமையை யறைத றோற்றுங்
கரியிறை புரந்த காயா வண்ணனத் தலத்தி லொன்றோ
டருகிய வீரைந் தாய சினகரத் தமரு மென்றும். 15

உலகெலாம் புகழ வாங்கின் னமுதெனு மூதகந் தேக்கி
மலர்தரு குமுத நீல மரைமல ரொழுகுந் தேனை
விலகிடா தருந்தி மையல் விம்முற வளியி னீட்டங்
குலவுமோர் குளமும் வெள்ளைக் குளமெனும் பெயரின் மன்னோ. 16

உம்பர்தம் பதிது றந்தவ் வுததியை யுறமூ நீரிற்
சம்பர விளையாட் டிற்கே தலைப்பெயு மமர மாதர்
தம்பதச் சதங்கை யோதை தனிநடை யிரண்டுங் கண்டு
கும்பரி னரச வன்னந் தனித்தகங் குழைந்து நிற்கும். 17

அரக்கெரி குமுத மாங்கே யளவிலா தலர்ந்த வாற்றாற்
பரப்புள சிவந்த வந்தப் பயமெலாம் பவள வாயார்
வரைக்குல நிகர்க்குங் கொங்கை வாய்ந்தகுங் குமபங் கங்கள்
கறைப்புறக் குளிப்ப மற்றுங் கமழ்வொடுஞ் சேர்ந்த தம்மா. 18

நறுமணஞ் செறியு மந்த நாண்மல ரொன்றின் மாயோ
னுறுமன மங்கை மன்னற் கோதநீ ரவனிக் கேகென்
றறைதர முருந்தே மானு மணியிள முறுவ லாளோர்
சிறையனம் பொருவுந் தெய்வ மாதெழுந் திலகி னளால். 19

முராரியின் முளரித் தாள்கண் முன்னியப் பதியில் வாழும்
விராவுநற் றகைய பாக வதனொரு வணிக வேந்தன்
றிவாகர னுதயஞ் செய்யத் தீம்புனல் படிய வந்தப்
புராதனப் பொய்கை போந்தப் பொருவரு மகவைக் கண்டான். 20

வந்திய னுகை யாலே வாஞ்சையி னதனை யேந்தி
மந்திரம் புகுந்து தன்னின் மனைவியின் கரத்தி லீய
விந்தையி னவடன் கொங்கை விம்மிவெண் பயமும் சோரச்
சுந்தரி யதனை யூட்டிச் சுகமுற வளர்த்தா ளன்றே. 21

பெற்றவ ரவளை நொந்து பெற்றதிற் பிரியம் விஞ்சி
நற்றவம் பழைய துண்டா னினிநே ரிவளைப் பெற்றே
மெற்றென விதயம் பொங்கிக் குமுதத்தி னெழுந்த நீரா
லுற்றநற் குமுத வல்லி யெனும்பெய ருவப்பி னிட்டார். 22

பெண்மணி யவளு மாங்கே பிரமனைப் பெற்ற தாதை
யொண்மலர்ப் பதமே யுள்ளி யொழுகுபு செழித்துக் காமன்
திண்மையா கமத்தின் வாய்மை தெரித்திடு மெவரு மோகங்
கொண்மதர்ப் பகல்கி லாத பருவமுங் கூர்ந்து நின்றாள். 23

வேறு

குரும்பைமென் முலேயுங் குமிழ்செறி மூக்குங்
கொவ்வையங் கனிநிக ரிதழுங்
கரும்பினின் மொழியுங் கழைபடு புயமுங்
கமுகடை பசியபொற் கழுத்து
மரும்புகண் முல்லே நிரல்பட வமைத்த
தாமெனப் பவளவள் ளத்துள்
விரும்புறு முறுவ லொழுங்குநீ ளிருவாள்
விரையசெம் மரைமலர்க் கிடையில். 24

கிடத்திய தொக்குங் கெண்டையின் விழியிற்
கிளர்தரு வெண்மதி முகமுந்
துடைத்துமின் படிமக் கலமெனத் துலங்குந்
தோமறு கபோலமுந் திங்கள்
புடைத்தெழத் தளேத்துப் பின்புறத் தடைக்கப்
பொருந்துறு மிருட்பிழம் பென்னக்
கடைக்கணைத் தகைந்து நானமும் புழுகுங்
கமழ்தரப் பொலிகருங் குழலும். 25

இன்னமு மிசைத்தற் கியல்கிலா வனப்பே
யேய்ந்திடும் பிறவவ வயமு
மன்னிய வவளின் மாணலங் கண்டு
மதர்வுறு மீன்றவ ரினியிக்
கொன்னவில் கூர்வேல் விழியிளங் குயிற்குக்
குணமுறுங் கொண்கனை மணக்கத்
தன்னிருங் குலகோத் திரஞ்சிறி தறியே
மெனமனந் தளர்ந்தன ரிருந்தார். 26

அயிற்கரத் தாளேச் செருகிய கனகக்
கிம்புரி யலங்குவெண் கோட்டுக்
கயக்குலஞ் செறியு மங்கையர்க் கிறைவர்
கயிரவத் தெழுந்தவக் கனியின்
வியப்புறு சுவையி னெழினலங் கேட்டு
வீழ்வுறு வகைநனி துளங்கி
மயக்கினிற் சுழன்றம் மலர்க்குழன் மயிலே
மணந்திடும் வகைமனந் துணிந்தார். 27

பாதசர் மரபிற் பிறந்தநா மந்த
ஞூருசன் பயந்தபைங் கிளியைக்
காதலிற் கருத லொண்ணுமோ வவனுங்
கான்முளை யிலனெனப் பகர்வ
ராதலி லனைத்து மறிதுமென் றவன்பொன்
மாளிகை யகம்புக வணிகன்
மேதக வவர்க்கோர் மிளிர்தவி சளித்து
மிழற்றினன் முகமனும் பலவே. 28

அவன் செயு மாதித் தியமடைந் தாழ்வா
ரவனுலா வருமவ ளழகைக்
கவர்மனத் தினராய்க் கண்களிற் பருகிக்
கமலமார் கடவுளுந் தனது
நவமெனப் பயின்ற கைவலங் கொண்டு
நானில வனப்பெலாந் திரட்டி
யிவளுரு வமைத்த தாங்கொலோ விவளோர்
வாசவ பிஞ்சமோ வறியேம். 29

வானவர் மகளி னெல்விடு மாழை
வல்லியின் மிளிருமிவ் வனிதை
கானுறை தவத்தோர் ரடங்குமைம் பொறியின்
கவாடமே போழ்கரும் படையோ
தேனிருந் தொழுகைங் கணைமலர்க் கிழவன்
றெரித்திவண் விடுத்தசா சனமோ
வூனையு முளத்தி னுடனுருக் கிடுமென்
றுழந்தனர் துணிந்தனர் மற்றும். 30

வணிகருக் கிறையைப் பணிவொடு நோக்கி
வந்திய முனிவராய் வதியு
மணிகிள ருமக்கிவ் வங்கனை மகளா
யடைந்தவா றேதென வவனு
மணியெழு வனைய மல்லடு புயத்தா
யொருதின நறும்புனல் படிய
வணுகினன் கயத்தை யதினொரு குமுதத்
துதித்திவ ளவனொளிர்ந் தனளால். 31

கண்டெடுத் திவளைக் களிப்பினின் விஞ்சிக்
காதலாய் வளர்த்துயர் கதிசேர்
மண்டலம் புகழு மகப்பெறும் பேற்றை
மன்னினன் கண்ணுவர் முன்னங்
தொண்டையங் துவர்வாய்த் துடியிடை யரம்பை
வயிறுளைங் தீன்றபைங் தோகைக்
கெண்டைநீள் விழியார் சகுந்தலை யெனுமோர்
கிளிமொழி தனைவளர்த் ததுபோல். 32

ஈங்கிவள் கருப்பு வில்லியி னாணைக்
கிணங்கியின் னேவல்செய் பருவங்
தாங்கின ளிலகா நின்றன ளெழிற்குங்
தணப்பருங் குணத்தொகை தமக்கும்
பாங்குறப் பொருந்து மோர்பதி தன்னைப்
படைத்திலன் பருவர லெய்தி
யேங்கிய மனத்தி னிருந்துளே னுலக
மியம்புதற் கிலக்கென விசைத்தான். 33

இசைத்தது கேட்டவ் வெழிற்பர கால
னிருதயங் களித் தெழ விசையே
நிசிக்கிணை யெனலா நீனிறக் குழனுங்
நேர்பெறுங் தனையையா மிவடன்
நசைக்குறு சிறப்பி னலமெனக் குளவே
னுனிவ் ணளினமென் கரத்தைப்
பசைப்புடன் பற்ற லொண்ணுமோ வென்னப்
பரமபா கவதனும் பரிவாய். 34

சாளரவழியா யாளரி யுறழக்
கோளரித் தவிசின்மேற் குலவும்
வேளையும் வென்ற கலியன தழகால்
விழிக்கரு விருந்துசெய் தொளிரும்
வாளையின் மிளிருங் கருங்கணி வயிற்சென்
றவர்மலர் வலக்கரம் பற்றப்
பாளைவாய் பசிய கமுகுகங் தரத்தாய்ப்
பற்றுமோ வுளமெனப் பகர்ந்தான். 35

அற்பினிற் புரந்த வைய்னே யகிலாண்
டங்களு முடற்புறம் பற்றிப்
பொற்புறும் புயலார் வண்ணனேர் சங்கும்
பொலிதரு திகிரியும் புயத்தி
னிற்புறப் பொறித்து நிதமொரா யிரமாம்
புனிதராம் பாகவ தர்களுக்
கிற்புகழ்த் திருமூன் றின்சுவை யடிசி
லிடுபவற் கியைவனா னென்றாள். 36

வேறு

என்றலு மங்கை மன்னவன் செவியி னேவுறி னிவ் வணமே
நன்றிழை தந்தே நான்வரு கிறபே னென்றவண் விடை மருவிச்
சென்றெழி னறையூர் நின்றிடு நம்பிச் செம்மல ரடி தொழுது
துன்றிட நாடி வேண்டின ருள்ளந் துன்னிய நசை முழுதும். 37

சீதர னந்தச் சீர்கலி யன்றோ ளீரகமுந் திகழுந்
தீதறு பாஞ்ச சன்னிய வளையின் றிருவிலச் சினை யிலகப்
பேதைய ராருங் காணாத லின்றிப் பெட்புட னருள் புரியப்
பூதர மானும் பொற்புய வாழ்வார் பூரண வெனவா ராய். 38

சைவ மொழிந்தே பாகவ தர்கொள் சம்பிர தாய மெலாங்
கைவர வீரா றுமெழின் மண்ணங் கங்களி னன்கொ ளிர
மைவளர் மேனி மாயவ னாளாய் மன்னிய வனைவோ ரும்
வைவடி வேலார் சூழ்தர மற்றும் வாணிபன் மனை புக்கார். 39

பாகடு சொல்லாண் மண்ணிய மணியிற் பளபளெ னத்திக ழுஞ்
சேகுறு பொன்னின் மேனியி னாழ்வார் செவ்விய றிந்து மகிழ்ந்
தாகவி வாகமென் றருளது கூர வத்திரு வைப் பயந்த
மாகண கம்பொன் மாளிகை யெல்லா மாகநி றைந்தவ னும். 40

சோதிட னூலோ ரோதுமொ ரோரை சூழ்ந்துற வோர்பல ரும்
போதர மோதுந் தூரிய வோதை பூமுழு தும்ப ரவ
மாதர சின்கை மங்கையர் கோன்றன் கைம்மல ரிற் பற்ற
வாதரம் விஞ்சி நீரொடு கன்னித் தானம ளித்தன னே. 41

ஆரண நூலி னூற்றி விவாக மன்னந டைத்திரு வோ
ரேணை தந்தவ் வுத்தமி யுள்ள மோகையு றத்தி னமு
நாரண னூர்தா னூடிவ ணங்கு மாயிரம் பாக வதர்க்
காரண வோடு நால்வகை யுண்டி யாயவி ருந் திழையா. 42

அன்றலர் செய்ய வம்புய நோகா தின்னற வம்ப ருகுந்
துன்றளி யென்னத் தோகையி னின்பத் தூநற வம் பருகி
நன்றுற வைம்பால் வேள்வியு மில்வாழ் வென்றுந டந்திட வே
கன்றென வாளைச் சிந்தைக ளித்துக் காவல்பு ரிந்தன ரே. 43

பாகவ தாரா தனமதி ழைக்கப் பண்படை தம்பொரு ளும்
போகவு நேரி யற்குத வும்பொற் கப்பமும் போய பயன்
வாகையின் மங்கை வள்ளலி ழைக்கும் வண்மைய றிந்தித யம்
வேகவு மூளா வெஞ்சின மாங்கே வெம்பியி யம்பு மரோ. 44

மங்கையின் மன்ன னங்கரு ணைக்குண் மன்னியு முய்ந் திடுவ
திங்கும றந்தே யெத்திறை யீயா தேதுமிலா துலர்கட்
கங்குதி னஞ்சோ றிட்டிறு மாந்தே யுள்ளன னுகையி னீர்
நங்கட னங்க ளிந்நொடி யேகிக் கொண்டிவ ணண் ணு மினே. 45

ஏகுமி னின்னே யென்றுசொ லத்திண் ணேவலர் சென்று சிலர்
வாகைமி டைந்த வண்பர காலன் வார்கழ லைப்ப ணியா
நாகிள வண்டுண் ணுண்மலர் மாலை நண்ணிபு யன்பணி யின்
வேகமு ரைத்தவ் வேந்தன ளித்த சாசன மீந்தன ரால். 46

கண்டவ ரந்தக் காலைய ரங்க னன்பர்க ளின் புறவே
யுண்டநி மித்த மொண்பொரு ளெல்லாம் விண்டொரு பொன்னு மிலா
தெண்டிரு வுள்ளத் தோடுறை தந்தா ராசையி னென்று மிலா
மண்டிய வெங்க தத்தெரி யிற்கண் மன்னுசி வப்புற வே. 47

வேம்புலி யன்ன தம்மரு குள்ள வீரரை நோக்கு முனம்
வெம்பியெ ழுந்தவ் வீரரெ ருத்தில வன்கர மிட்டு கையாத்
தம்பெருங் கோயில் வாயில் கடக்கத் தள்ளுபு மீள வவர்
கம்பமு றக்கை காறடு மாற வோடியொ ளித் தனரே. 48

போயவர் பொன்னிச் சோழன வைக்கண் புக்குட லங்கு லையா
வாயெழ லின்றி நாகுழ றப்போய் வந்தகொ டுந்துய ரே
யாயவ னைத்து மஞ்சலி யத்த ராயுரை செய்ய வவன்
சேயம லர்க்கண் சேந்து சினந்த செய்திமி ழற்றுவ தே. 49

வேறு

பொங்கிய வடவையிற் புழுங்கிச் செம்பிய
னிங்கித முணர்ந்தவோர் படையி னேந்தலைத்
துங்கவெஞ் சேனையிற் போந்தத் துண்டனை
யிங்குறப் பிணித்துமீள் கெனவி யம்பினான். 50

கேட்குமு னம்மொழி கிளர்ந்து சேனைமன்
பூட்கையின் புரவியி னணியும் பொங்கழல்
வாட்படை வயவருந் திரண்டு சூழ்வரக்
கோட்புலிப் போத்தெனக் கொதித்துச் சென்றனன். 51

துரகதந் தெண்டிரை துலங்கு சாமரை
நிரைநுரை கரித்திர ணிறைதி மிங்கிலம்
விரவிய வாகினி வேலை யோடுசென்
றுரைபெறுங் கலியன தூர்வ லைந்தனன். 52

உருமென விடிப்புறு முரசவோ தையுங்
கரிபல பிளிறுவெங் கலிப்புங் காலென
விரைவுறு மைங்கதிப் புரவி வெள்ளங்கள்
வரைவில கனைத்திடு மிசையின் வன்மையும். 53

வெருளியிற் றுடித்தி வீசை மன்னர்க
ணகங்கர் புயம்புடைத் திரையு நாதமுஞ்
செகமெலாஞ் செவிடுறக் கிளரக் கேட்டுளம்
புகைதரப் புழுங்கினர் கலிய னுங்கரோ. 54

ஆடன்மா வலவனு யங்ஙனே யெழூந்
தோடுருச் சிறுவயப் படையி னென்னல
ராடுக ளிரிந்தெழ வடர்க்கும் வேலையின்
வீடுறத் தமினுயிர் வீழ்ந்து டற்றினர். 55

கதிர்விடு மசிதனிற் கரிக்கு லத்தினை
முதிர்சின மடங்கலொன் றுகிரின் மோதுபு
சிதைவுற வகிர்வது கடுப்பச் சேரலார்
வதைபட மறலியின் வலிந்து வாட்டினர். 56

வந்திடு மூவகை வருதி னித்திர
டந்துயி ரந்தகன் றனக்கு வீழ்தலும்
வெந்திற லனீகினி வேந்த னோடிய
விந்தையைப் பவனனே வியந்து நோக்கினன். 57

இட்டனன் புறம்வெரீஇ யேதிலா னெனக்
கட்டழ குரையுளாங் கலியன் சீற்றமும்
விட்டிழி குருதிவாள் விளங்கு பொன்றட
றிட்டன ரரண்மனைக் கெழுந்து மீண்டனர். 58

கதிர்மணி மந்திரங் கலக்கக் கைரவத்
துதிதருந் துடியிடை புலந்து புல்லினுண்
மதிமுகச் சனகிமுன் மறத்த ரக்கரை
வதைபுரி மணாளனை யணைந்த வாறெனு. 59

பின்னரப் பராந்தகன் பெருகு கிள்ளியை
யொன்னல னெனத்தமக் குணர்ந்து வேலைசூழ்
மண்ணெலா மெதிர்ப்பினு மடிக்கு மாற்றல்சா
லின்னமும் பெரும்படை யியையக் கூட்டினர். 60

வென்கொடுத் திரிந்தவச் சேனை வேந்தனும்
பொன்கொழித் திடுநதிக் கிறைவன் பொற்பதந்
தன்கரங் குவித்தனன் றாழ்ந்து நாவெழா
தென்கழ றுவதென விரங்கி நின்றனன். 61

கண்டது காவலன் கறுத்து வாய்மையை
விண்குறை யெனவவன் விதிர்த்து வேந்தனே
திண்டிற லவனது தெரிக்கற் பாலதோ
கொண்டென துயிரையே குலைந்து மீண்டனன். 62

தருமனுங் கலியனுந் தக்க வன்மையின்
விரிபடை யுயிரையும் விளங்கு மாமணி
யரியபொற் பணிமுத லனைத்தை யும்பகிர்ந்
திருவறு முறைவழு வின்றி யேகினர். 63

என்றலு மிறைவன திருகணுஞ் சுடர்
துன்றிய கொழுந்தினி லாலஞ் சூழ்ந்தபோ
லன்றிருஞ் சிவப்புற வகங்கொ தித்திட
வென்றிகொ ளமைச்சரை விளித்துக் கூறுவான். 64

## 18-வது சருக்கம்

### வேறு

தானைத் தலைவன் றனையன் றனைத்தாங் கவையங்
கோனைப் பொருவ விழைத்திட் டவென்குற் றமேயோ
ஆனைக் கெதிராம் வெருகென்னவென் னுணைமீறிச்
சேனைத் திரள்க ணமதும் மவன்சென் றழித்தான். 1

காணிற் கலங்குங் கருதா தவர்கா லனஞ்சுங்
கோனைக் களிறு முதல்வா கினிகூர்ந் தவெல்லாம்
மாணப் புனைந்து கடுகத் திருமங் கைமன்ன
னேணற் புரிசை வளைந்தெற் றுகவென் றுதாழான். 2

நண்ணுற் வணங்கு மிளிற்பொற் கழனன் குவிக்கிக்
கண்ணு ருசத்தின் மணிபோர்க் கவசங் கவித்துப்
புண்ணீ ரொழுகு மயில்வாண் முதற்போற் றும்வெய்ய
வெண்ணுன் குடற்றும் வயவே திகளேற் றுமன்னே. 3

கையாற் கரிய முகில்வெம் பகையென் றுகன்றி
மெய்யா வலிக்கு மொருவெங் கரிமீ திவர்ந்து
பொய்யாத் தருமற் கெதிர்போ யமுன்போர் கலத்த
வெய்யோன் பகதத் தனின்வா கினிவே லைசுற்ற. 4

கன்னங் கறுத்த சயிலக் கனகத் திரேங்கி
மின்னுங் குவட்டின் மிசைவெண் மதியூர் வதொத்த
வெண்ணின் கவிகை நிழலிற் புடைவீ சுவெள்ளைப்
பொன்னங் கவரி குளிர்கால் செயஈ்போ கினுஞல். 5

வனப்பிற் குறுகார் புறந்தந் தெழவாட் டுவீரத்
தனத்தின் மதனைத் தருமன் றனைவென் றநீரார்
தனக்கெந் தநாளுந் திறைதந் ததர ணிபாலர்
சினத்திற் கணக்கற் றவர்பாங் கரடர்ந் துசென்றார். 6

சோனைப் பெருக்கிற் சொரிதா னக்கவு ளும்வாழைக்
கானைப் பொருவு முடனும் பனைக்கையுமார்ந்த
வானைத் திரளம் புவிவெற் படையத் திரண்டு
சேனைத் திரளிற் கருங்கா லொடுசெல் வபோலும். 7

காற்றும் பறவைக் கிறையுங் கதிகண் டுமாலும்
பாற்றங் கெழிற்சா மரைப்பண் செறிபா ரசிகத்
தாற்றங் கரையில் வளர்ந்தா டமரிற் பயின்ற
வேற்றம் பயிலுந் துரகத் தணியெண் ணலென்னே. 8

தும்பிக் குலந்து ரகமான் களிற்றேன் றுமார்ப்புங்
கம்பிக் கவெங்குங் குணின்மோ துபறைக் கலிப்பும்
பம்பிக் கிளம்பப் பரவம் பரத்தோ ருமாங்கே
வெம்பிக் கலங்கி லிவர்செய் திவிளம் பலென்னோ. 9

எண்ணற் றவெய்ய வணிகத் தினெழுந் ததூளி
வண்ணக் கரும்பேர் மகரா லயந்தூர்த் துவானின்
கண்ணுற் றதிங்கள் கதிர்மாய்த் தெழக்கண் டதெய்வத்
தண்ணற் றரள நகைமா தர்கடாங் களித்தார். 10

சுடரும் பல்லே தித்திரை யும்பல சும்மையும்மிக்
கடருந் தளமா மகல்வா ரிதிக்கா னைவெற்பின்
கடநின் றெழுந்த கடமா நதிபா யுமந்தப்
படையின் பெருக்கைப் பரகா லனன்றார் படுப்பார். 11

பேணா ருடலைப் பிளக்கும் விளையா டலுந்தம்
வாணாண் மதியா விறலும் மிகுவீ ரரோடு
மாணான் கலியன் மறமுங் குறித்தும் பர்மாத
ரேணார் வதுவை யெழிற்கோ லமியைந் துநின்றார். 12

சென்றின் னவண்ண மிறைவன் பெருஞ்சே னைமாடக்
குன்றம் மனேகங் குழுமுந் திருமங் கையென்னும்
பொன்றங் குழூரின் புரிசைப் புறஞ்சூ ழவாழ்வார்
மின்றங் குதந்தம் மிளிரச் சிரித்தீ துரைப்பார். 13

தாளு துமென்றன் றகுமா மதிவல் லபத்தோய்
வாளா ரரியைப் பலதும் பிவளைக் குமாபோற்
பாளா கபயன் பலவா கினியோ டுநம்மை
யாளா கிவெல்ல வகந்தைக் கிறையா கிவந்தான். 14

நூறா யிரமா ளொருவீ ரனொருக் கவீழும்
வீறா ரளவில் விறலா ரினஞ்சே னைவெள்ளஞ்
சிறா வெழுக வினியென் றவர்செப் புமுன்ன
மாறா வலத்தி னவையா ரவத்தாங் கெழுந்த. 15

வேறு

கலியனு முடனே போரிற் கருதலார் காணின் மாழ்கும்
வலியுறு மணியி ஞன்கு மந்திரத் தலைவர் சூழக்
கலியொடு முத்தி யூழிக் கால்கரை புரண்டு வைய
நலிவுற வெழுந்த தென்னும் பதாகினி நடுவிற் சென்றார். 16

கரவான முதல காணார் கருத்தழி படைக டாங்கிப்
பரகாலன் படைக டேசாங் தரத்திருந் தெழுந்த கொண்கற்
குரமாருங் கற்பின் மின்னா ளுவந்தெதிர் படர்வ தொப்ப
நரபால னபயன் றானைக் கெதிருற நடந்த வன்றே. 17

எண்ணறு மிருவர் தானைச் சும்மையி னிறங்க லுற்ற
கண்ணகன் மங்கை யூரை யனந்தனங் கரிய மாலின்
பண்ணமர் வழிவிளக்கும் பராந்தகன் பதியென் றுன்னி
யொண்ணறு முடிகளாலே யுவந்துரத் தேந்தினாுல். 18

இன்னண மெழுந்த வந்த விருதிறப் படையு மார்ப்பிற்
கொன்னவில் பரியகோட்டுக் குஞ்சரத் தொடுகைம் மாவும்
பன்னரு பரிக ளோடப் பரிகளு மானோ டாளுந்
துன்னிய வமரர் காணத் துனிமிகப் பொருத மாதோ. 19

மறங்கெழு மொருவன் பார வாளெனுங் கொடியை மாற்றான்
றிறங்கெழு களத்தின் வீழ்த்து முன்னரத் திணிய கந்தி
லறங்கெழு விசும்பி னூர்வத் தெதிர்ந்துறு மமர மாதி
னிறங்கெழு கரத்தி னூறி நிலவுதார் வீழ்ந்த தம்மா. 20

மற்றொரு வயவன் வீட்டு மதமலைத் தலையோர் சென்னி
யற்றவ னடிக்கு முண்டத் திசைந்தாட லரவம் பூண்டான்
பெற்றநற் கரிமு கத்துப் பிள்ளையார் கலியன் வெய்ய
கொற்றம தறிந்தா னந்தங் கூர்தரக் குனித்தன் மானும். 21

ஆங்கொரு மறவன் சென்னி யறுப்புண்ட கவந்த மீதி
னோங்குமோர் குரக தத்தின் றுணிபடு சிரம்வீழ்ந் தொன்றத்
தாங்குறுந் தோற்ற மாயோ தனங்காண விசும்பி னின்று
மீங்குற விழுந்த திம்பு ருடனது வடவ மேய்க்கும். 22

காலனுக் கிணையோர் காளை யொருமத கயத்திற் கும்ப
மேலிருங் கதையிற் றாக்க மிகுசெருக் களத்தி னெங்கும்
வாலொளி சிதறச் சிந்துந் தரளங்கண் மங்கை மன்னன்
மேலுறும் வயப்பொன் மின்னாட் கிறைத்தவெண் பொறியின் மின்னும்.

ஒன்றினொன் றடியுண் வெய்ய வொளிர்படைப் புலிங்க மன்னர்
கன்றிடு சினத்திற் கண்ணிற் கான்றிடு மவையும் விஞ்சித்
துன்றிய குடைப தாகைத் தொகைகளி னெருக்கி னெங்கு
மொன்றிய கரிய மிக்க தமந்தனை யொழிக்கு மன்றே. 24

இன்னண மறவர் பொங்கி யெதிரெதி ருடற்ற மங்கை
மன்னவன் றிரித்துக் கேட கந்தனை மலர்க்கை பற்றுங்
கொன்னவி லசியுங் காரார் கொண்டலி னிடைய ருது
மின்னுறுங் கொடிமின் னென்ன மிளிர்தர விரைவி னுற்றும். 25

பங்கயஞ் செறியு மிக்குப் பரவுமோர் தடத்துட் பொங்கி
வெங்களி றுழக்கு மாபோல் விரைமனத் தடமே செல்லுந்
துங்கமாந் துரக தத்திற் றேற்றிவேண் டலன்பேர் தானை
யெங்கணு மொருவ ராகி வடவெயி னெரித்தா ரன்றே. 26

குணபமோர் குன்றினைத் தன்குவட் டிருந்து பாயு
நிணமிகு குருதி செந்தா திருந்திழி யருவி நேருங்
கணங்கொடு கழுது பாடக் கவந்தமங் கியைய வாடு
முணவுயி ருதரம் வீங்கி நமன்றெவிட் டுறவு நோக்கும். 27

படகளங் கிழித்துப் பாயு முதிரவா றிடையின் மாய்ந்தார்
வடுவறு முகமே செய்ய மலர்ந்தசெங் கமலஞ் சென்னி
மிடைகருங் கசமே சைவ லந்திகழ் கபால மேய
வடைதரு பகத்தின் சங்க மாங்குறித் தடைவோர்க் கம்மா. 28

மண்டையாஞ் சடக மாருங் குருதிகண் மதித்து மாந்திக்
கண்டையைக் களிற்றின் கஞ்ச மெனக்கொடு கணங்கொள் பூதம்
பெண்டுக ளுடனே யங்கு நாற்கவிப் பெருமாள் சீர்த்தி
பண்டனிற் செறியப் பாடுஞ் சதிமுறை பிறழ்வின் மன்னே. 29

வளவன்ற னளவில் சேனை யடவிமா வலவன் மங்கை
யுளவனுந் தாவந் தன்னி னீறெழ வுலைதல் காணு
வுளமிகக் கொதிப்புற் றாழி யுருத்திர னெனவே பொங்கித்
தளகருத் தர்களு மற்றத் தரணிபர் குலமுஞ் சுற்ற. 30

சதமகன் சதியி னன்று சலதரம் பலவு மாயர்
சிதைவுறப் பொழிந்த வண்ணங் கலியனுர் சேனை வெள்ள
மதமுற விசிகை யாதி யடுபடை யளவி லங்கம்
புதைதர வெறிந்த போழ்தில் விபுதருந் துளங்கினுரால். 31

குமுதமா வல்லி கொண்க னிழலின்கண் மறைவான் கூடத்
தமதுமா விவர்ந்து சீறித் தரியலார் தளத்திற் ருமு
நிமிருமா வசியுமாக நிலவுற நிமிடஞ் சுற்ற
வமுதராங் கறிந்தார் பேணு ரொருவரு மெதிர்க்கக் காணுர். 32

எலிக்குல மெரிந்து நாக முயிர்ப்பமாய்ந் தொழிந்த தென்ன
நிலக்கிறை தனது தானை நீறுபட் டொழிய நீலன்
குலக்கொழுந் தூழித் தீயிற் கூர்ந்துமேல் வருத னேக்காக்
கலக்கமுற் றிவனைப் போரில் வேறனுங் கடிதென் றுன்னு. 33

தனியனுய் மீண்டு போந்து தன்னக தணுக மங்கைப்
புனிதனும் வாகை யந்தார் புனைந்துவிண் பொழியும் வாசப்
பனிமலர் மழையி னூடே செயமுர சியம்பப் பாணர்
வினைபுரி விறலைப் பாட மீண்டுதங் கோயில் புக்கார். 34

காவிரி புரக்கு நாடன் கருதியோர் விரகு மற்றும்
பூவமர் விபுதர்க் குற்ற வேடமும் பொருந்திப் போந்து
தேவரு முவக்கும் வாகைத் திருமங்கைக் கிறைமுன் னின்றுன்
மாவலி யிடையி லேற்க வனைந்தமா மாயன் போல்வான். 35

போந்தவன் கரவி னுசி புகறலு மவரும் பூரித்
தேந்துமுப் புரிவெண் ணூலோ யியம்புக விழைந்த தென்னக்
காந்தையர்க் கனங்க னன்றுய் கருதிய தளிப்ப லென்றிங்
கேந்திடி னுறுதி வாய்மை யிசைக்குவ னிசையின் மிக்கோய். 36

என்னவக் குமுதவல்லி யிறைவனுங் கியைந்து தந்த
பின்னரப் பெருமகன்முன் கோசிகன் பிழையொன் றில்லா
மின்னினன் மரபின் வேந்தன் மெலிவுற விரந்த வண்ண
நின்னிருந் தரணி காவ னேர்கென நிகழ்த்தி னுனல். 37

உடைதிரைப் பரவை மீதூர்ந் தெழுவபோ லுறுகன் வந்தக்
கடையுமுள் ளுடைத லில்லாக் கலியனுங் குணர்ந்து வாய்மை
யுடையதம் முறைசெய் காவ லுதகமோ டுதவ வேற்று
நடைமிகுங் கோர மூரு நரபதி வெளியி னுங்கே. 38

வரையிலா வலிய ரேற்று வருகினு மடர்க்க வல்ல
புரையிலாக் கலியன் றன்னைப் புன்சிறைப் படுத்திப் பொன்னி
னிரையிலார் நறையூர் நின்ற நம்பியி னிலவு காலு
முரையிலாஞ் சினக ரத்துள் ளுறைந்திடக் காவல் செய்தான். 39

வேறு

எங்களிறைக் கிதிறையை யீந்திடென வமைச்சன்
றங்கியரு கெப்பொழுதுந் தான்வெகுளுந் துனியுஞ்
செங்கமலக் கண்ணனடி யாரமுது செய்ய
வங்குததி யாரதன மாற்றுகிலா விடரும். 40

பட்டினியின் பருவரலும் பட்டுமனங் குன்றிக்
கட்டழகன் வாய்மையெனும் பாசமதிற் கட்டுண்
டட்டவெழுத் தையனையுந் தாமரையா ளடியு
மிட்டமுட னிட்டதிரு வுள்ளமுட னிருந்தார். 41

ஈங்குநிகழ் காலையிலவ் வெழினிலயத் திலகும்
பூங்கமலப் பூமகளார் புத்திரனுண் புன்கண்
டாங்கவருந் தாயரெனத் தன்னுளமும் வெம்பி
யோங்கியுயர் நம்பிதிரு வுள்ளமுறச் சொன்னான். 42

தன்கருணை யின்னுருவாம் பன்னியுரை தன்கா
தின்கணுற முள்ளமுவந் தின்கனலிட் டட்ட
நன்கினிய பாறினமு நாடறிய மறையோன்
றன்படிவ மாகியவ ரங்கையுறத் தருவான். 43

செங்குமுத வல்லியிறை செய்தமுதப் பாலை
யிங்கிதுவு மெம்பெருமா னின்கருணை யென்றே
பொங்கரவப் பாயலரங் கன்னனனந்தப் பொருப்பன்
துங்ககரி கிரியனிவர் பாதமலர் துதித்தே. 44

எத்தனைநா ளிச்சிறையி ருந்தடியே னினைவல்
சித்திரமாஞ் செய்கையுன தாருணருஞ் சீரார்
நித்தனெயுன் னிகரரிய பொற்பதமென் றுர்வே
னத்திகிரி யருள்வரத வென்றுமனங் கசிவார். 45

இந்தவணம் பல்லளவை செல்லவுமோ ரிரவி
லந்தவர தன்கலிய னின்கனவி லையா
நந்தமிருங் கச்சிநகர் நணுகுவையே லுன்றன்
பந்தமறும் படியரையன் பொன்றருது மென்றான். 46

பொள்ளெனவப் புண்ணியரும் விண்டுதுயில் வாசக்
கள்ளமலர்த் தண்டலைசூழ் கச்சியரு ளாளன்
கள்ளனவ னீதனுரை கண்டுமனம் பொங்கி
யுள்ளவரு கிறைபணிசெய் வோர்கடமை விளியா, 47

முத்திதரு மெழுநகருண் முக்கியமாங் கச்சிக்
கித்தினமே வம்மினும தின்றமுழு துந்தருவேன்
கத்துதலுங் கண்டபடி விண்டெழுமின் கடிதென்
றத்தொழில ரதிசயிப்ப வாங்குவலிங் துரைத்தார். 48

கேட்டபடி கிள்ளியிடங் கிளக்கவிஃத வனும்
வாட்டிறலற் க்ங்குபொருள் வருகுவதே தறியே
மாட்குமறி வாந்தளரா ததிபதன மாகப்
பூட்டுவிலங் கொடுகொடுநீர் போதுகெனப் புகன்றான். 49

சென்னியுரை யின்படியச் சேவகரு மிளிர்வாள்
பொன்னுறையி னின்றுருவிப் பொருகரத்தி லேந்தித்
துன்னிவரத் தூயவரத் தொன்னகரந் தோய்ந்தும்
பொன்னறலின் றின்னனமி கப்புழுங்கி யலமந்தார். 50

அன்றுநிசி யானைமலை யையனவர் கனவிற்
சென்றினையேல் வேகவதித் தென்கரைமேல் வீசும்
மன்றலிளம் பூம்பொழிலி னிடைமலர்கண் மலியப்
பொன்றிகழும் புன்னைமர மொன்றுதழைந் துளதால். 51

அதனடியி னுதிவிரலி னம்மணல கழ்ந்தே
மிதமறுபொன் மேவுதிநீ யென்றுமிழற் றிதலும்
புதையிருள்போம் வைகறையப் புண்ணியர்கண் டிறவா
முதமொடுதங் கனவுநிலை முன்னிவியந் தன்றே. 52

சிக்கெனவெ ழுந்திறைவன் சேவகரிற் சென்று
புக்கரிய வப்பொழிலிற் புன்னையடி நண்ணித்
தொக்கமண றோண்டவள வுக்கரிய தூய
பொற்குவைபொ லிந்துளது கண்டுமனம் பொங்கி. 53

இச்சைகொளு மட்டுமெடுத் ஈதகுமென வாரிப்
பிச்சையிடு பீடுறுக ரங்களின ளிக்க
வச்சனமு மையகரந் தன்னிலுமே லாய
திச்சுமையெ டுக்கிலே மென்றதிச யித்தார். 54

கந்தரம்வ ருந்தமிகு பாரமொடு காவல்
வந்தவர்சு மந்துகலி யன்றனையே வாழ்த்தித்
தந்தரணி பன்றனைய ணைந்துதனந் தந்த
விந்தைமுழு துஞ்செலவி ளம்பினர்க ளன்றே. 55

வேறு

கண்டுகாவ லன்சொரிந்த காணநாண யந்தனைக்
கொண்டல்வண்ணன் குறியினிற்கு லாவுமின்ன தன்னதிம்
மண்டலத்தி லெங்குமின்று மன்னுநங்கொ சத்தினுங்
கண்டதின்று கண்ணனுக்கு கந்தநீர ரிவரரோ. 56

ஆதிநாய கன்றனக்க மர்ந்தபாக வதர்களைத்
தீதிழைப்ப தின்வலிந்த தீதுமில்லை யென்பரான்
மாதவத்த விவர்பசித்து மங்குவெஞ்சி றைக்குளாம்
பாதகத்தை யானிழைத்த தன்றுபண்ண பாவமே. 57

இப்பணங்கு றிக்கினன்று தீயினின்றெ ழுந்துளாள்
கைப்புறுஞ்ச வைக்கணைந்து கண்ணனைப்ப ழிச்சுகா
லிப்புவிக்கு ளரியவாடை யெண்ணலின்றெ ழுந்தவா
றெப்பவிங்கு மொளிருகின்ற தென்னவுள்ளு டைந்துபின். 58

அல்லிவல்லி யன்பனின்னை யாற்றருஞ்சி றைக்குளே
யல்லலிற்ப சித்திருக்க வாற்றுதீமை யகலுமா
றெல்லையில்ல திருப்பொருண்மு ழுக்கநீயே யேன்றுநின்
னில்லணைந்து பண்டுபோலு னெய்துகோலு மேந்தியே. 59

என்றகத்தி யைந்தபல்ல முகமனன்கி யம்புறுப்
பிள்றனத்தி னோடுமின்னு மணயணிகள் பீதக
மின்றழைத்த வாடையாதி மிக்கபல்ல மேம்பட
நன்றளித்து விடவெழுந்து நணுகினார்த நகரரோ. 60

வாளெயிற்றி னுரகமுண்டு மிழ்ந்துவந்த மதியென
நீளகத்து நிலவிநீல மேனியன்ப தத்தினர்க்
காளகத்த ராகிநாளு மதிதிபூசை யாற்றுரு
வாளடுத்த கண்ணியோட ருந்தியின்பம் வைகினார். 61

மதனைவென்ற மங்கைமன்ன னின்னவண்ண மாயவன்
பதமிடைந்த பண்பினர்க்கு வைகலும்ப டைத்தபின்
னிதியொழிந்தி னிச்செயற்கு நொர்தலின்றி ரும்பொருண்
மதிமயங்கி நின்றுசற்று மாழ்கியுள்ளந் தேறியே. 62

ஆதுலர்க்கோ ரைந்தையேனு மருளலின்றி யீட்டிய
பேதையர்ப்ப றித்துமேனும் பெரியவர்க்க ளித்திட
னீதியுற்ற முடிபெனத்து ணிந்துகான நின்றதர்ப்
போதலுற்ற பூரியர்ம றித்தலைப்ப லென்றுடன். 63

முன்னுரைத்த நாலமைச்சர் முன்னமென்ன முற்செலக்
கன்னிறத்த நெஞ்சர்கால படர்களன்ன கானவர்
வன்னியொத்த விழியரன்றி யிடியிடித்த வார்த்தையர்
பொன்னிழைத்த தனுவளைத்த னேகர் சூழ்ந்து போதர. 64

துடிகறங்க முரசிரங்க மீதுவாவுந் துரகதத்
தடிதுலங்க வைத்திவர்ந்த னேகவான கத்திரள்
படிகலங்க வேயொலிப்ப மாகமோங்கு பாதபம்
மிடைமருங்கு கான்மருங்கி னடையதிர்ந்து மேவினர். 65

கள்ளரேனு முள்ளமுட்குங் கரிகுலந்தி ரிந்திடும்
வெள்ளெயிற்று வேங்கைகோக மிங்குமங்கும் விரவிடும்
முள்ளடர்ந்த வுடலவேன முடுகியெங்கு முழன்றிடும்
புள்ளினங்க ளினியபல்ல புதுமையாய் மிழற்றிடும். 66

தடவரைக்கு கைக்கிடந்த தழைசிறைப்பஞ் சானன
மிடுமுழக்க மெங்குமாரு மின்னமதென்று ணர்வுறு
தடர்தருச்சி னைக்கலர்ந்த பலவிதத்தி னலர்களிற்
படுமணத்தை யனிலமுற்றும் படர்தரப்ப ரப்பிடும். 67

வீழ்ந்தசம்பு கப்பழத்தை வீழ்ந்துசம்பு கந்தினுந்
தாழ்ந்தமாங்க னியினைவேட ரேழ்ந்துகையிற் றாவுவார்
போழ்ந்துமண்ணெ ழுந்தமுட்பு றக்கனியைப் போழ்ந்ததின்
றாழ்ந்தவின்சு ளைகளங்கு வாழ்ந்தவில்லி யர்கொள்வார். 68

புதுமையின்னு மிதிகமாய பூவைவண்ண னின்புறும்
மதுமலிந்த கானகத்தை மங்கைமன்ன வன்மணந்
ததினடந்த பதிகர்கொள்ளை யாடிநாடொ றும்முனம்
மதுவைவென்ற வைணவர்க்கு மாடினர்வி ருந்தரோ. 69

கள்ளுங்காளை மாயவன்ற னருண்மிடைந்த காட்சியா
ளொள்ளியாரின் முகங்குறித்த வர்க்கெரூறு முனூற்றிடார்
கள்ளலர்ந்த குழன்மடந்தை வறியனென்று காய்பிணி
யுள்ளவன்சி றாவனின்னே ருடமையொன்றுங் கவர்ந்திடார். 70

வையந்தாய வன்பதத்து வாழ்நரண்டை யணுகுறுர்
செய்யுந்தான தருமமுள்ள சேயர்பொன்னும் வவ்வுறுர்
பொய்யுந்தீமை யும்பொருந்தி விழுமியோர்கள் போற்றிடா
நையுந்தீய ருடைமையொன்று நாடியேப றிப்பரால். 71

வேறு

இவ்வண்ணந் திருக்களவி னிருடீகேச
னடியவர்க ளருந்துவிருந் தியற்றுமேல்வை
யவ்வெண்ணற் கரியகொடு வனத்தினுப்ப
ருருமொரு பகலணுக வறியராகி
யெவ்வண்ண மித்தினநா மந்தணர்க்கே
யீதுமெனத் திருவுள்ள மிரங்கக்கண்ட
பைவண்ணப் பணிபதியாம் பாயன்மீதே
பள்ளிகொளும் பரந்தாமன் பரிந்துமன்னே. 72

அன்றுதிரு வில்லிபுத்தூ ராண்டாடன்னை
யணிமதிள்சூழ் திருநகரி யடைந்துவேத
நன்றுபசுந் தமிழேறப் பாடித்தந்த
நம்மாழ்வார் திருமுன்னர் மணந்துதன்னூர்
மன்றன்மலர்க் கோதையுட னெழுந்தகோல
மணந்தனந்த பரிசனமு மருங்குபோதச்
சென்றுகலி யன்களவு செய்யுமந்தச்
செழித்தகன்ற வாரணியஞ் செறிந்தானன்றே. 73

செறிந்தங்குப் பாங்கரொளிர் சூடித்தந்த
சேயிழையின் முகநோக்கி யமுதேமுன்ன
முறுங்கலியன் றனைநோக்காய் நெறியிற்செல்லு
முலோபியரின் பொருள்பறித்தெம் மடியார்க்கூட்டி
யுறைந்திடுவ னின்றெவரும் படாக்காண
னேங்குமந்தப் போதிமரத் துச்சியேறி
யறிந்துசொல வடைபவரை மறவர்தம்மை
யமைத்துமனத் தயர்வுமிக நின்றானங்கே. 74

பஞ்சூட்டும் பதுமமலர்ப் பதத்தாயுன்னைப்
பயந்தவற்குப் பின்பிறந்த பரகாலன்ற
னெஞ்சூட்டும் படர்களைந்தித் திவசம்பாக
வதாருந்தத் தனிவிருந்து நிகழ்த்தும் வண்ண

நஞ்சூட்டு மரவல்கு லரிவைநாமே
யவனுழையே யணுகுதுமென் றருளிக்காரின்
மஞ்சூட்டு மணிவண்ணன் மறையின் மூர்த்தி
யெனநிலவுங் கலுழன்மிசை யிவர்ந்தானன்றே. 75

கலியாணப் பிள்ளைத்னக் குரியவேடங்
கலந்தருகிற் பொற்கொடியிற் கோதைதுன்ன
வலியாரு மம்புயத்தா ளுயவேதத்
தரியபுரோ கிதன்செறிய வனந்தன்சோதி
மலியாடும் பணக்கவிகை நிழற்றவானை
முகன்முதலாம் பாரிடதர் மருங்குசூழ
வொலியாரு மங்களசா ரியத்தின்மண்ட
வுறுபுலியே றனையவனு மூவந்துகண்டான். 76

விலையரிய தெய்வமணி யிழைத்த பூண்கள்
வில்லெறிய மேனியெலா மஞ்சட்கூறை
குலவவரப் புதிதளிப்போர் புதியர்போதக்
கொண்மலர்ச்சி கொண்டுபல படையுங்கையு
நிலவுகளப் படர்களொடு நெருங்கியார்நீ
ரிந்நெறியி லெமைமதியா தேகலுற்றீர்
பலபணியுங் களைந்துவிரைந் திடுமின்பார்மே
லெனக்கரவா ளுனியசைத்து மறித்திட்டானல். 77

ஆனகங்கள் கணகணவென் றதிரச்சோர
ராம்வயவ ரார்ப்பரிப்பத் தடுக்கக்கண்ட
வானைமுகன் முதற்சேனை யதிபரோடு
மமரரெலா முடுகியெழு மளவிற்பாயுஞ்
சேனையிறை யெம்பெருமா னுள்ளத்தோர்ந்து
செங்கரத்துப் பொற்பிரம்பை யசைத்துநின்மின்
மோனமுட னெனக்குறிப்பி னுணர்த்தயாரு
மொய்ம்படங்கி வாய்புதைத்து நிலைத்திட்டாரே. 78

விபுதரது வேகமடங் கியதுவெய்ய
கந்திருவர் கருவமயங் கியதாஞ்சித்தர்
தபுதலறு வெந்திறலுஞ் சமழ்த்ததோய்ந்த
கடலெழுவிச் சாதரரின் யன்னனத்தி

னபரிமிதச் சிறைவளியு மயர்ந்ததந்தி
வண்ணன்ற னெருத்தொலியும் வலார்ரியேறு
மிபமுடுகி யிடும்பிளிறு மிகந்தவீமன்
னிருஞ்சிறகி னெழும்விரைகா லொடுங்கிற்றம்மா. 79

## வேறு

பற்வையின் களரவ மடங்கிப் பாய்சினத்
தெறும்வலி மடங்கவே முதல வெண்ணறு
முறுவிலங் கோட்டமு முடங்கி மாருதத்
தெறிதரு கமனமு மின்றி யெங்கணும். 80

தருக்களி னடைகளுஞ் சலிப்பொன் றின்றியே
யுருக்கிள ரோவிய மென்ன யாவையு
மிருக்கவுந் திரையடங் களக்க ரென்னவே
மருக்கமழ் துளவினு னசைவின் மன்னினுன். 81

கயிரவத் தணங்கினின் கணவ னங்ஙனம்
வயிரவத் தெழுந்துபூண் மலிந்த பேழையைச்
செயிரறக் கொண்டெழிற் செங்கண் மான்முகின்
மெயிலுறப் புனைபணி யடைய மீட்டரோ. 82

பறித்துயர் பதமருண் மூல மந்திரம்
பொறித்தொளிர் மணிவிரற் பொன்னன் மோதிரம்
பிறித்திடப் பெயர்கலா துணர்ந்து தன்பலிற்
கறித்திழுத் திடுதலுங் களித்துக் கண்ணனும். 83

நந்திருக் கலியனே வெனாந வின்றருள்
சிந்திடுங் கடைக்கணி னேக்குஞ் செம்மையிற்
புந்தியின் மெய்த்திற மொருங்கு பொங்குமச்
சுந்தரர்க் கப்பெயர் சொல்ல லாயதே. 84

கலியனுங் கதனையுங் கழற்றி யாவையும்
பொலிதரு பேழையுட் பெய்து பூட்டிடா
வலிகொடு பெயர்த்துமவ் வயிர மஞ்சிகை
சலிவறக் கிடக்கமெய் சலித்துச் சீறியே. 85

புரோகிதன் முகமது புகைந்து நோக்குறு
வராவகை மஞ்சிகை யென்ன மந்திரம்
பராவினை யதனையென் செவியிற் பாய்ந்ததில்
விராவிட முறைமையின் விளம்பு கென்றனர். 86

ஐயயான் வதூவர னளிக்குந் தெக்கிணைக்
குய்யவிங் குவாத்திய ஞகி யொன்றினேன்
பொய்யிலா மந்திரம் புகல வித்திரு
மெய்யனே வல்லவ னெனவ மூங்கினன். 87

மிழற்றலு மிளிருமால் வதன நோக்குறு
வழற்றரு மசியிதை யறிந்து பேழையிங்
கெழத்தகு மறையெனக் கியம்பு கென்றதைச்
சுழற்றலு மணிவண னகைத்துச் சொல்லுமால். 88

புலியினேர் புகலரு மதுகை மன்னுவெங்
கலியனே கழறுது மதனை யிங்ஙனம்
பொலியினே ரிரும்புனல் படிந்து போந்துநீ
வலியினே நின்னது வயமுறு தரோ. 89

என்னவப் பராந்தக னெழுந்து பாங்கரின்
மன்னுமோர் கயத்தினை மணந்து பூம்புனல்
பன்னிரு நாமனைப் பரவி யாடிமீண்
டன்னவ னருகுற வகங்களித் தவன். 90

கரையறும் பவக்கடல் கலங்கு மூழ்கியே
புரையுறு மவர்க்கரை புகுத்தும் வன்மையா
முரைபெறு நாலிரண் டெழுத்தி னென்றுமாம்
வரையிறு மந்திரங் களுக்கி ராசமாம். 91

ஆரணப் பொருளெலா மகத்த டக்கிய
நாரணன் பகட்டையே நவிற்றுந் தன்மைய
வேரண வெழுத்துகண் மூன்றங் கேய்ந்துள
காரண பிரணவந் தலைப்பிற் காணுமாம். 92

எய்திடுங் குறிபிழைப் பென்று மெய்துரு
மெய்திகழ் சனகியே மேவு நாயகன்
கய்தனின் விடுபடுங் கணையிற் சொல்பவர்
செய்திடுந் தீவினை செகுக்கற் பாலதாம். 93

சால்புறு மினும்பல சாற்றற் கொன்றிடா
மூலமந் திரமவன் முடியைத் தாழ்த்துபு
வாலிதிற் பொருந்துற வைச்செ விக்குளே
யாலிலைப் பள்ளியா னறைந்திட் டானரோ. 94

வேறு

இவ்வுப தேசமங் கெய்தலும் முன்னகங்
கவ்விய வந்தகா ரங்கழன் றோடவே
திவ்விய ஞானமாந் திகழ்சுடர் மூளமா
லொவ்வறுந் தனதுபே ருருவமுங் காட்டினன். 95

மறையுரு வாயசெம் பறவைமன் றோண்மிசை
நறைமலர் மன்னுமா நங்கையோ டன்றுகாண்
பிறைநுதற் கோதையும் பிணைந்துறத் தானவர்
கறைகெழும் படைகளோ ரைந்துமின் காலவும். 96

நாமகள் கணவனே நாரிபா கன்றருக்
காமலிந் திடுதுறக் கந்தனுக் கதிபனே
மாமயின் முருகனே யிவர்முதற் சுரரெலாம்
சாமமா யிரந்திரு நாவினிற் பாடவும். 97

சேனைநா தன்வலச் செயவிச யன்முத
லானவா னித்திய சூரிய ரங்கரம்
மேனகக் குவிகொளா மிதமறுங் குணமெலாங்
கானமா யினிதுறக் கவிதனிற் பாடவும். 98

தரிசனந் தந்திடுந் தாமரைக் கண்ணனைக்
கரிசகன் றிடுகணிற் கண்டதும் புளகமெய்
வருசலந் தன்னிலா னந்தமன் மறைதரக்
குரிசிலுந் தனைமறந் துள்ளகங் கூர்தரும். 99

வெள்ளவா னந்தமே விரிபெருந் துதியுரு
வுள்ளதாய்ப் புறமெழுந் தொளிருமென் றறைதரத்
தெள்ளரும் பெரியநற் றிருமொழி யாதியாங்
கள்ளருந் தொழுகுறு லாறுடன் கழறினன். 100

திருக்குறுந் தாண்டகந் திருநெடுந் தாண்டக
முருக்கிளர் திருவெழு கூற்றிருக் கையுடன்
பெருக்கமுஞ் சிறுக்கமும் மிணைந்தநற் றிருமட
லுரைக்குமா லென்றுமற் றைந்தையு முலகமே. 101

வேறு

ஆயிரத்தெண் பத்தொருநான் காம்பெரிய திருமொழியுண்
மாயிருஞா லங்கடந்த மாயன்ற னின்னுருவைத்
தூயதிரு வெட்டெழுத்தா ரேற்றுவித்தா னென்றனக்குச்
சேயபொ ருண்மலியு மீரைந்து செப்பினனல். 102

தெள்ளா ரமுதினிமின் றீஞ்சுவையே மிக்கொழுகுந்
தொள்ளா யிரங்கவியிற் றெல்லுலக முண்டுமிழ்ந்தோ
னெள்ளா திலகுமொரு நூற்றெட்டி ரும்பதியைக்
கள்ளா னனைதுளவக் காரரங்கன் முன் மொழிந்தான். 103

எம்பெருமா னேன்றவெழி லீரைந்த வதரிப்பை
யும்பர்தொழ நூற்றறுபத் தொருநான்க ருங்கவியா
லிம்ப ருயவருளி நின்றதிரு வீரைந்தின்
வம்ப விழுஞ்சோலை யரங்கனடி வாழ்த்தினனல். 104

பாம்போ டொருகுடியிற் பயிலு பவன்போலுந்
தீம்பா யெறிவளியிற் றிகைக்குங்க லம்போலும்
போம்பேர் புனலலைக்கு மாற்றங்க ரைபொருந்தி
யாம்பால தின்றி யடிசாய்ம ரம்போலும். 105

இருதலையுற் கைக்கிடையி லேங்கும்பு ழுப்போலும்
வருபுனலி னீர்ப்புண்டு வாடும் நரிபோலும்
எரிதருதா பத்திரய மெனுமலைசேர் பவக்கடலுட்
கருகுறுமென் றீவினையைக் களைந்தளித்தி மாயவென. 106

குறியதொரு தாண்டகத்திற் கூறியெழு கூற்றிருக்கை
நறுமலரின் கைப்பிடித்த சாரங்க நாதனினை
யறிவுதனிற் கண்டடியே னனந்தங் கொள்வதுபோன்
முறைதனிலுன் பணிபுரிய முன்னுமென்று நிற்றியென. 107

பெரியசிறுத் திருமடல்க ளென்னும் பெருநூல்க
ளரியபுரா தனபுருட னடியேன்பெ ரும்பேற்றி
னுரியவுபா யாந்தரமா யுற்றூ னெனவன்றித்
திருமா மணவாளன் றிருநெடுந்தாண் டகமதனில். 108

என்மனமிங் கெண்ணியவா றெல்லா மளித்தானென்
றின்ம துரமூறு மிருமூன் றருநூலு
நன்மைமிகு நம்மாழ்வார் நான்மறைகட் கங்கமெனப்
பன்மகியு முய்யப் பகர்ந்தா ரிவையடைவே. 109

பாளைகளில் வாளையுகள் பைங்கமுகுஞ் சூழரங்கன்
றாளையடை நம்மாழ்வா ராதியர்க டாங்களிக்கக்
கோளமரு மிவ்வாறுங் கேட்டுக்கு ளிர்ந்துளமு
நீளமுதற் பன்னியரு நேர்ந்துக டைக்கணிக்க. 110

அயர்வை யறுமமரு மயனுதே யாதியரு
முயர்விற் செவியேற்க வுத்தமனு மிக்கலியன்
மயர்வறு மெம்மடிய வருண்மன்னுஞ் சிறப்புடையான்
றுயரறுமித் தூயவனின் வாய்மொழியைச் செப்புகையே. 111

என்றேப கர்ந்தருளி யெருதேறி யாதியரா
யொன்றோர் சுரகணங்கட் குற்ற விடையருளித்
தன்றோப் பறவைமிசைத் தன்பரிவா ரங்களுடன்
குன்றேய் மணிமாடப் பொன்னரங்கங் கூடினனால். 112

## 19-வது சருக்கம்

உண்மையுணரா துழல்கிற்பீ ருண்டென்றுணரு நும்மிறையு
மண்முன்கடந்த மாலருளான் மன்னுமுலகி லெனப்பழநூல்
கண்முன்கழறக் கண்டிருந்துங் கண்ணன்கழல்கள் கருதியிடாத்
திண்மைபிடித்த பிடிதளரா விடங்கர்க்குற்ற திறமானும். 1

கோயிலணைந்த குரைகழலன் கொற்றக்கலியன் குளிர்புனல்சூழ்
சேயவரங்கன் விடையருள்கொண் டிமையோரேத்துஞ் சேடகிரி
மேயவலர்மேன் மங்கைமண வாளன்மிளிரும் பதம்பணியக்
காயும்படைஞ ருடன்போதக் கடுகிவடபா னடந்தனனால். 2

சின்னுளகன்றோர் தினமருக்கன் சிரமேனிலவு நண்பகலிற்
பொன்னுடனைய கச்சிநகர்த் தென்பாற்புனித நீரொழுகும்
மின்னூர்வெள்ளி மணல்செறியு மிருந்துபரந்த பாலாற்றின்
கொன்னூர்கரையிற் கூடியவண் கூர்ந்தவெயிலில் வெதும்பினனே. 3

சேனுவீரர் களுந்தவித்துச் சில்லென்றேழுகு நீரிழிந்து
பானுறதனை யடுபசியிற் பருகிக்கமலக் கிழங்குகளேந்
தானுதையின்று படுந்துய்ரை யறிந்துதொண்ட ரலந்தலையை
நோனுனன்று கரிபுரந்தோ னுடியின்முதிய வந்தணனுய். 4

ஈருரிட்த்தின் பட்குறியு மிலகுந்துளவக் கமலமணி
யாராவளிமின் கந்தரமும் ததிசேரன்ன முடிக்கரமு
மாராநடையிற் றளர்ந்தொருதண் டங்கையூன்றி யவனிதனைப்
பாராவழிச்செல் பாந்தனெனப் பரகாலன்முன் றேன்றினனுல். 5

கள்ளக்கிழவன் றனைக்கலியன் கண்டுவியந்து கஞ்சமலர்க்
குள்ளூற்றிடுவோ னெனவொளிரு முரவோயுன்றன் கரமிலகுங்
குள்ளச்சுவடி யெதுவின்று குறுகுந்தாரா ததிகரண
மெள்ளத்தனையு மிவைபிறழா தென்பாலருள்கூர்ந் திசைத்திவையே. 6

யானுமென்றன் வாகினியும் யாதுமருந்தற் குணவின்றி
யூறுமுணர்வு முலருகையி னுன்றன்கரமா ரோதனமென் [மான்
மேனின்னருளி னருளுவையேன் மிசைத்துப்பிழைத்து மெனப்பெரு
ருனன்குவந்து தராபதியே தகுமென்மொழியைச் செவியுறுவாய். 7

அரிதாரகையின் றரிதிதியா மரிமாகரண மரியோக
மரிவாரமிதி னையமில்லை யறிவாயிந்த வடிசினுமுன்
பரிவாரமதற் கொருசிறிதா மேனும்பகுத்துப் படைப்பலெனத்
தெரியாவொவ்வோர் பிடிவல்சி தேர்ந்தெல்லோர்க்கு மளித்தனனுல். 8

அந்தவன்ன மனைவர்க்கு மிருமூன்றுருசி யமைந்தபல
விந்தையாய பணிகார வகையாயோரை விதம்பலவாய்
முந்தநிரம்ப நாசிவழி முன்றின்னவிழும் புறம்போதத்
தந்தம்வயிறு தடிப்புறவே யந்தக்கரணந் தாங்களித்தார். 9

சடையார்க்கந்த கனுமாங்கே யருந்திக்களித்து விண்ணவரும்
படையாப்பகடார் பான்மையநின் பதியேதீங்கு படர்ந்ததெவன்
கிடையாவுன்னை மணத்தொளிரும் பெயரேதென்று கிளக்கவுமைம்
படையார்நான்கு கரமூன்று குணவீர்விளையாட் டொருவனுமே. 10

தண்ணித்திலவெண் ணிலவெறிக்குந் தந்தத்தொளியா மின்னமுதின்
மண்ணுக்கிறையை யாட்டுவபோன் மலர்ந்தமுகத்தின் மனுநெறியா
யெண்ணுக்கியலா முடலையினிக் கச்சிநகர்க்குண் மேல்பாலில்
வெண்ணற்சுதையி னேங்குமொரு விமானநிலயத் துறைகுதுமே. 11

நாமமிருநான் கொளிருகர நரசிங்கனுமென் றறைகுவர்நீ
வேமிப்பசியி னுழல்வதுகண் டடைந்தேமிங்கு விரும்புவதொன்
றேமுக்கில்லை யிதுசரத மென்றுவழங்கி மாயமெனக்
காமற்பயந்த காயாவின் வண்ணன்கரந்தங் கெழுந்தனனால். 12

கண்முன்சால மெனக்கரந்த பின்னர்க்கலியன் விம்மிதனாய்
மண்முன்னளந்த வெண்புயத்து மலராளிறையே யெந்தமுறு
கண்முன்களைய வெழுந்துந்தன் செய்தியனைத்துங் கழறியதே
யென்முன்னிந்த்ர சாலமென வெழுந்தானந்தோ வென்செய்கேன். 13

நீயாரென்றே நிகழ்த்தினனே நிலத்துவாழும் மனிதனெனத்
தாயாரென்னத் தன்னிலைக ளடையவெற்குச் சாற்றினனே
பேயார்முலையை யுண்டிடுமென் பெம்மானஞ்சா யுதத்தொடுபேர்
வாயார்பலக பங்கயபா ணங்கள்வாய்ந்த வெண்கரத்தான். 14

இவனேயாயன் வாமனனே யிவனேகாகுத் தனுமிவனே
யிவனேபூமி யிடந்துமுன மேனமாயு நின்றவனே
யிவனேயெந்தங் குலதெய்வ மென்றீரைந்தா மின்கவியா
லவனேரில்லாக் குணகணங்க ளடையத்துதித்தா னங்கடைவே. 15

உள்ளம்பூரித் திவ்வண்மே யுய்யும்பாடன் மிழற்றியுடன்
கள்ளம்பூரித் தடலுறுதன் கணத்தோடந்தத் தலந்தணந்து
வெள்ளம்பூரித் தொழுகுபல யாறும்விபினங் களுங்கடந்து
பள்ளம்பூரித் திருலருவிப் பைந்தேன்பாய்வேங் கடஞ்செறிந்தான். 16

வேறு

மாயமா வேடன் பாத மலர்பட முழுதுந் தூய்மை
யாயதா ளதனி லாழ்வார் தீர்த்தமே முதல பல்ல
தூயமா லருவி வீழ்ந்து முனியுந்து வன்ற வாறு
மேயமு வருந்துந் தும்பி மிழற்றிடு மிசையு மின்னும். 17

திருநிவா சனைமேப் கானத் தொறும்பிணி யகலு மாறு
வருமன வரத மெண்போ டற்கெனு மிடமொன் றின்றிப்
பெருகுறுஞ் செல்வர் கோவிந் தாவெனும் பெரிய வார்ப்பு
மிருமுழக் கமுமன் னோர்க ளிசைத்திடும் பறையின் மாதோ. 18

வரையெலா மலியு மன்றிச் சாமிபுட் கரணி யென்னும்
புரையறு கயத்தி னூடு பொதுளியே மலருஞ் செய்ய
மரைமலர் விரையை யேந்தி யிளவறி மலையி னெங்கும்
விரவிய வமர ரின்ப மெய்திட வீசு மென்றும். 19

ஒண்ணறு நீல கண்ட ரும்பரு மிடைவி டாது
நண்ணுகார் முகிலைக் கண்டு நடிக்குமப் பொருப்பு நாளும்
தண்ணில வருவி யென்னுந் தடங்கொடோர் நீல கண்ட
வெண்ணக மதனை நோக்கி மென்னகை புரிவ போலும். 20

முடிமிசைப் பொதுளி யோங்குந் தருக்களின் முனையி னின்றுங்
கடுவனைந் தருவின்மீதே முடுகியாங் குகளக் கண்ட
துடியிடை யவரி னுட்கித் துறக்கநாட் டிமையோ ரைய
கடிமதி லிலங்கை யன்றீ தெனக்கரங் குவிப்பர் மாதோ. 21

கதிர்வ னுதலிற் சுட்டி யெனத்தடங் கலந்து மின்னு
மதிநிறை கருவின் மாழ்கு மங்கைமார் படர்வ தென்னத்
ததைநிலா வெறிந்து மெல்லத் தவழ்தரு முடுக்க ணுறு
விதமணிப் படமே லெங்கும் விரித்தென விளங்கு மன்றே. 22

இன்னுமித் தகைய வாடற் கியைகிலாக் குவவு வாய்ந்த
பன்னகப் பதியின் வெற்பி லிவர்தரல் பழுதென் றுன்னிக்
கொன்னவின் முனைவா ளாழ்வார் குலவுமப் பொருப்பின் பாங்கர்
மன்னினர் திவச மூன்று மாயவன் மலர்த்தா ளெண்ணி. 23

வேங்கடக் கிறைவன் பாத தரிசனம் வினையேற் கெந்தப்
பாங்கினிற் பலிக்கு மென்று பரிந்தவ னுறைய வந்தத்
தீங்கலுந் திருநி வாசன் றிருவுள மிரங்கி யாழ்வார்
பாங்குற வெழுந்து முன்னர்ப் பழிச்சுறத் தோன்றி னானல். 24

நிதிகொண்ட விதமே யேழை நிகழ்த்தரு முவகை பொங்க
மதிகொண்டு துதிக்க வொண்ணு மாண்பினை யுணர்ந்து நாவால்
சுதைகொண்ட மொழிக ளாலே சுவைபடத் துதிக்க மாய
னதுகொண்டு கடைக்க ணித்தே யாங்குடன் மறைந்தானன்றே. 25

அங்கிருந் தகன்று பின்ன ரரும்பெறற் சுற்றஞ் சுற்றக்
கொங்கிருந் தலர்ந்த தாரான் றென்முகங் கொண்டு மீண்டு
தங்கிருந் தடத்தில் விண்டு தலமெலாந் தொழுது போந்து
பொங்கிருந் திருவ ரங்க மெனும்பதி புகன்று புக்கான். 26

தாஞ்சென்ற தடத்தி னுங்காங் கீட்டிய தனத்தி னோடு
மான்சென்ற வழியிற் சென்றோன் வழுத்திய வரங்கன் பாதம்
வான்சென்ற மறையி னோதி வணங்கிநின் பணியின் வண்ண
நான்சென்று மீண்டே னேழு மலைக்கென நவின்று நின்றார். 27

நின்றவர் தம்மை மாய னீள்கடைக் கண்ணி னேக்க
வொன்றியக் கருணை யாங்கே யோங்கெயி லிழைக்க வுன்னி
மன்றலா ரகன்ற செய்ய மடைப்பள்ளி முதலா யங்குத்
துன்றிய புரிசை வானந் துன்றுறப் புரிந்து போந்தார். 28

புரிசையங் கொருநான் காய திழைக்கையிற் புவியி னூடே
கரிசகன் றெழுதிய நோற்கு மொருமுனி யிறையைக் காணு
வரிசையிற் பணிந்தி யோகம் வல்லனே படிமீ தைய
தரிசனஞ் செய்த தெத்த னைத்தலந் தகவி னீயே. 29

ஆடிய புனித தீர்த்த மெவ்வள வவையு மெல்லா
நீடிய வருளிற் சாற்று கெனவவ னிலவும் விண்டு
நாடிய தலநூற் றெட்டு நான்கண்டு தொழுத தைய
வாடிய விறுவ தின்றே யாடிய புனலு மென்றான். 30

இஞ்சியின் பணியீ டேற விருடியை யினிமை யாய
செஞ்சொலால் கற்ற வப்பால் செவ்விதி னுணர்ந்து வாழ்வார்
மஞ்சுள முனிவ மன்னும் பனிவரை மிசையின் மேல்பா
லஞ்செறி முழையொன் றுழ மாயுள ததன்க ணம்மா. 31

பொன்னன துரத்தைப் போழ்ந்து பொலிதரு முகில்கள் வாய்ந்து
மின்னிருங் கரமோ ரெட்டின் மேவுவார் விழைம றந்து
மன்னுமெம் பெருமா னைய நரசிங்கன் மறைசேர் மூர்த்தி
தன்னைநீ யறியாய் போனு மென்றனர் தடங்கை கூப்பி. 32

பரசித னுரைத்த மாற்றம் பட்டதுஞ் செவியு னன்னான்
விரைவுட னெழுந்து போந்து விழைவுடன் குறுக வாங்கே
முரசித னடியன் வார்த்தை மொய்ம்புற விழைப்ப லென்றவ்
வரையரு குகையி னூடே வைகினன் வழங்கும் வண்ணம். 33

கண்டிர ணியனைக் காதுங் கண்டீர வமதை யோகி
கொண்டிறும் பூதுநீடக் குகையுழி யுறைய வீங்கே
விண்டுறை யரண்க ளாற்றி விண்டனன் பணங்க ளெல்லாங்
கொண்டனன் சீர்த்தி வாசக் குமுதமா வல்லி யாளன். 34

பின்புமூன் றுய தோங்கிப் பிறங்குவ திழைக்கக் கையிற்
பொன்சிறி துள்ளல் லானைப் புந்தியி னுணர்ந்து கள்ள
மன்பெருந் திறலார் தம்மை மறைவினி லழைத்து மாயன்
றன்பெரும் பணியீ டேறத் தடஞ்சிறி தறியேங் கண்டீர். 35

திருட்டினும் புரட்டி ஞனுந் தீயரைத் தெறுதற் கண்ணுந்
தெருட்டிடாத் தெளிந்த நீவிர் தேர்ந்துரைத் திடுமி னென்ன
விருட்டிரு ளிழைத்த தென்னுங் கருமெயு மெரியார் கண்ணும்
வெருட்டிய மிடறு மாரவ் விளைஞரும் விளம்ப லுற்றார். 36

மாதவன் பணியின் மன்னு மாதவர்க் குழைக்க கில்லாப்
பேதையார் பிற்போ தைய பெற்றவ ரிளமை பல்லிக்
காதவன் பிறப்ப தன்றோ வடியரே மடலி னிற்க
நீதிரு வுள்ள நைய னிகழுமோ நிகரொன் றில்லாய். 37

பகலினும் பதிகர் கைத்துப் பறிப்பமல் லகத்துட் செல்ல
விகலுறுஞ் சுவரைக் கிண்டி கோலிருட் பொருளைக் காண்பான்
பகல்விளைத் திடுமை யோடு சலபமின் சுடரை மாய்க்குஞ்
சிகதைநீள் கயிறு தோண்டி யின்னன சிறக்க வுள்ளேம். 38

நீகவ லற்க கீழ்பா னீரதிக் கரையி லோரூர்
நாகப்பட் டணமென் றுண்டே யதனிடை மறையை நாடா
யூகபுத் தர்களின்புத்த விம்பமொன் றுளிரும் பொன்னி
னேகியப் புணர்ப்பி னேனுங் கொணர்துமீங் கதனை யென்றார். 39

செவிப்புலத் தவரின் வாய்மை யெனுஞ்சுதை தெவிட்ட வுண்டு
புவிக்கிறை பவுத்தர் வேடந் தாங்கிவெம் புரவி யூர்ந்து
தவிப்புற வயலார் வீறுந் தானையிற் பமந்தின் சோலை
கவிக்குமப் புரியை நண்ணிக் கண்டன னிலயந் தன்னை. 40

மாருத மசக மேனு நுழைகிலா வலிய காவ
லாருமக் கருப்ப விட்லுட் புகுதரு மாற்ற லில்லான்
யாரிதின் மறையைச் சொல்வா ரெனநினைந் தலமந் தந்த
வூரதின் முதிய பாண னொருவனை யணுகி மெல்ல. 41

வானகத் தச்சன் போற்றும் வலிகெழுந் தொழிலில் வல்லோய்
மேனகிச் சுகதன் கோயின் மேவரக் கரவின் வாயி
றூனகத் துளதோ வென்னத் தச்சனுங் கெம்மு னோர்க
ளுனகத் துணர வீங்கு நவின்றனர் நவில்வன் கோடி. 42

புத்தர்தங் கடவுட் டங்கும் பொன்விமா னத்தின் மீது
வைத்திடு முடியி னின்றோர் வன்சிருங் கலங்கீழ் வந்து
சித்திரத் தமைத்த தூம்பிற் செருகிய முளையிற் சேர்த்துப்
பத்திரத் துணர்த லின்றிப் பிணித்துள ததனைப் பற்றி. 43

ஏறுபு முடியின் வாய்ந்த வெழிற்கட மதளை வாமத்
தாறுறத் திருகி வாங்கி யதனுளத் தொடரை வீழ்த்தி
யூறுறு திறங்கி யேறற் கொன்றுமப் புழையோ மிக்க
சீறிது சிறிய காயற் கன்றது செலவற் றன்றால். 44

என்றவ னுரைப்ப மங்கைக் கிறைவனு மகிழ்ந்து துள்ள
குன்றிடை மேல்பா லேகு மமைய முங் குறித்து நிற்க
நன்றவற் கிரங்கி னான்போ னரலுமேற் சலதி யன்னான்
சென்றமூந் திடனு மிக்க தமமெங்குஞ் செறிந்த தம்மா. 45

வேறு

கள்ளற்குங் காமுகற்குங் களிபுரியுங்
கனவிருளுங் கலந்த காலை
மெள்ளச்சென் றக்கலியன் சிற்பிமுன
மிழற்றியவா றிவர்ந்து சோதி
கொள்ளப்பொற் சிகரமதிற் குலவுசூடந்
தனைத்திருகி துவக்கை யூடே
தள்ளப்பின் மெலிந்தவுடற் றங்கைபுரு
டன்றனையு ணிறைக்கி னானால். 46

அவனடியி விழிந்ததுகண் டாடகப்பொற்
பதுமையரு கமர்ந்த பல்ல
சவிமழுங்குஞ் செம்பாதித் தாதுவினாற்
சமைந்தபிர திமைக ளஞ்சி
யிவையுதவா லோகமெமை யெடுக்கற்க
வென்றிரங்க விரணி யத்தைக்
கவனமொடு நோக்கவதிற் கலந்துள்ளான்
கனகவுடற் பயனீ தென்றே. 47

கோண்டுவெறுப் பிகந்தகல விக்கிரகந்
தனைக்குதித்துக் குசலன் றோலாற்
கொண்டுவந்த வடமதனிற் பிணித்ததனைக்
குறித்திடமேற் கலிய னீர்த்துக்
கொண்டருளிப் பின்பிழிந்தோன் றனைவலிக்கக்
கோபுரமுன் னிழைத்தோன் சூது
கொண்டிழைத்த கைத்திறத்திற் பின்புழையுங்
குறுகவவன் கொள்ள லின்றே. 48

எவ்விரகா லென்செய்து மைத்துனனை
　　மேலெழுப்ப வியலா தாழ்வான்
கவ்வைமிகக் கருத்தழிந்து கண்ணருவி
　　காயமெலா நனைப்ப மாழ்கி
யிவ்வினையே னென்செய்கே னென்றேழா
　　வினியுனையீங் கிகந்து போதல்
வவ்வுபொரு ணந்தொழிலுக் கூறுறுமே
　　யாமுய்யும் வகைவே றின்றே. 49

எனவிரங்க வெதிராச னெனுமவனு
　　மெழிற்கலியா வினிநீ வேறு
நினைவின்றி யென்சிரத்தைக் கொய்துகொடு
　　நீளரங்கஞ் செல்வா யென்னக்
கனலெரியுஞ் செவ்வேலைக் காதினுழைத்
　　தாலதுபோற் பதைத்துச் சோரும்
வனநாறுஞ் செவிகளைத்தன் வண்கரங்க
　　ளாற்புதைத்துப் பொருமு வானல். 50

உயிரனைய வுளையிழந்து முயிர்பிழைப்ப
　　தெங்ஙனநா னுறவின் மிக்காய்
செயிராறுநற் குணமணியாய்ப் பாகவத
　　கைங்கரியச் செல்வி யாகிக்
கயிரவமென் வாயினளாய்க் கன்னலினின்
　　குதலையளா யாண்டா ளென்னும்
பெயரினையு முடையவெழிற் பின்பிறந்தாள்
　　வைதவமும் பெறுத லென்னே. 51

இனியரங்கன் கைங்கரிய மேதுக்கிப்
　　பொன்வடிவப் பாவை யேதுக்
குனையிழந்திங் கலமரவோ வரவணையான்
　　திருவுள்ள முவந்த வாறென்
றினைவதுகண் டெதிராச னின்முகனா
　　யூக்கமுட னெழிற்கை கூப்பி
வினைவெருவும் பாகவத சேகரனே
　　பேதையினீ விம்ம லென்னே. 52

திருமாலி னருள்கொண்டன் றவன்கரத்துத்
திண்டனுவி னஞ்ச மாய்நீ
யிருமாவிம் மண்ணெழுந்து சேதனர்க
ளீடேற விலகா நின்றாய்
பெருமாளின் பணிதனக்கிப் பெருமுடைநாற்
றந்ததும்பு முடலம் விண்டு
வருமாவின் னரியபத நானணுகி
னீயதற்கு வருந்த லென்னே. 53

மின்னனைய நிலையில்லா மெய்யிருந்தென்
றெம்முன்னோர் மிழற்றக் கண்டு
நின்னனையா ரிதற்கழுங்க னெறிமுறையோ
சிவிமுதலோர் நிலமீ தன்னு
ளின்னனைய தந்தனுவை யிழந்தனரெ
சின்னெறியி லிணைமே லில்லாப்
பொன்னனைய திருவரங்கன் பொருட்டடியேன்
போக்குவதும் புதுமை யொன்றோ. 54

கங்குலினிக் கழிந்தது நீ கார்வண்ணற்
கர்ப்பிதமென் றெழுந்து தாழா
திங்கடியே னின்சிரத்தை யீர்ந்தெடுத்துத்
திருவரங்க மெழுந்து கோயி
லெங்குமெழில் குலவுவகை யிரும்பணிசெய்
தொருதிருவை குந்த மேறி
னங்குநின தடிபணிவேன் கடுகவினி
யறிகுதியென் றறைதல் செய்தான். 55

எம்பொருமான் திருவுள்ள மிக்குளதா
லெழிற்கலிய னவதா ரஞ்செய்
திம்பருய வெழுந்தமையா லிதரகதி
யின்மையினு லிறுகி யுள்ளந்
தன்பெரிய கரவாளங் கையேந்தி
யதிராசர் தகுமுப் பாதத்
தம்பெருவி பூதியிறை நீயன்றோ
வெனக்கிளர்ந்தா வேசங் கொண்டு. 56

அவன் சிகையைப் பற்றிவலித் திடக்கைகொடு
பொன்னரங்க மமர்ந்த மாயா
விவன்றனுயிர்க் கடைக்கலநீ யென்றிறைஞ்சிக்
கந்தரத்தை யீர்ந்தா னங்கே
யிவர்தருமோ திமனொருத னுதியிமை
யவர்வியந்து விழைந்தெதங் கேனு
மவிரசியி னஞ்சிரத்தை யளிப்பவனு
மறுப்பவனு முண்டோ வந்தோ. 57

நஞ்சுயிர்க்கும் வெம்பணியி னடித்தரிய
துயில்புரிவோற் கிதுவு மின்பம்
விஞ்சுமொரு விளையாட்டோ வெனவிரங்கி
யவர்ப்பழிச்ச மங்கை வேந்த
னஞ்சிரமு மெதிராச னுடைகவிக்
கிரகமுங்கொண் டகன்றவ்வூரை
நெஞ்சுழல வத்தலையை நெறியருகோர்
புதரிடையின் மறைத்துச் சென்றான். 58

வேறு

இங்கிந்த வணமாக வெழில்சேர ரங்கத்திருங்கோயி லுட்
கொங்கம்பு யந்தங்கு திருமாது கொண்கன்மு கங்கண்ணுறு
நங்கண்வ ரும்மன்பி ளங்தொண்டி மைக்கச்சி ரங்கொய்தனன்
றங்கம்பு ரைதங்கை மணவாளன் றனமங்கை தனகா வலன். 59

நின்னெஞ்ச நானென்று நீங்காது றும்பொன்ம லர்நே ரவே
மென்னெஞ்சென் றிதுகாறு நினைதந்தேன் வெளியாய தின்றே கடுங்
கன்னெஞ்ச னலையேனி யெனையன்று கருதாதி லங்கைக் கனே
பின்னஞ்செய் பிசிதாச ரிடைநீடி ருக்கப்பி ரிந்தார் வையோ. 60

என்றேசு ளித்தேற வில்லொத்த புருவத்தி ஊணமின் னிளங்
கன்றேர்ம திப்பொன்னு தற்கண்மு கங்கோடல் கண்டெம் பிரா
னன்றேந கைத்தென்ற னளினப்பெ ருங்கோயி னங்கா யுளங்
கன்றேல வன்றன்னை யுய்ந்திங்கு றக்காணு கென்றங் கனே. 61

கனுழன்ற ஊணக்கூவி யெதிராச னுய்யக்க ணத்தேயி மைத்
துலையுந்த ணந்தந்த வுயர்தங்கை நாய்கற்கு றுந்தொண்ட னின்
னிலைகண்ட வன்கண்வி டுத்தேகெ னக்கண்ட நிமிடந்த னின்
மலையும்ப றிந்தோட விரைவிற்ப றந்தானம் மறைமெய் யனே. 62

போயவ்வி மானத்து முடிமூக்கி னைக்கொண்டு போழ்ந்தங் குறுங்
காயந்த னைக்கொண்டு வந்தச்சி ரத்திற்க லந்தெம்பி ரான்
மாயன்ற னடியெண்ணி யிருநான்கெ ழுத்தாய மறையோத லும்
போயின்னு றக்கம்மெ ழுந்தன்மை போலங்கெ ழுந்தான வன். 63

தாள்வின்ற வன்றன்னை முதுகிற்கொ டேசென்று தன்மைத்து னன்
வாழுந்த லக்கண்வி டுத்தங்கி ருந்தேகி வருகா விரி
சூழும்ம ரங்கப்ப ரன்பாத மலர்கண்டு சொலினன்பி ழைத்
தேழுந்த னெதிராச னெதிர்கண்டு பரகால னிறுமாந் தரோ. 64

கோவென்று கதறிக்க ரங்கொண்ட ணைத்தென்கு ணக்குன் றமே
பாவம்ப ரித்துப்ப டுத்தேனு னைப்பங்க யத்தா ளிறை
யேவங்க டிந்துள்ள நின்னெண்ண ருஞ்செம்மை யிதயங் கொளா
வாவிங்கு மீளப்பி ழைத்தார வேயைய வருள்செய் தனன். 65

சாந்தீப னின்பிள்ளை தவவைதி கன்பிள்ளை தாமுய்ய முன்
னந்தண்ண ருள்செய்த வடைவேயெ ழிற்கண்ண னவனுன் னையீங்
கீந்தானெ னத்துள்ள வெல்லோரு மானந்த நீர்வார வே
தாந்தாமெ னத்தாண்ட வஞ்செய்த தகவென்ன யாஞ்சொல் வதோ.

பரகால னெதிராசன் முதலாய வந்தப்ப ருந்திண் ணியர்
விரகால யன்மூன்று விழியோனு முதலாய வெவர்வந் துநம்
மொருகாரி யத்திற்கொ ருறுகண்வி ளைத்தாலு முவரேபுறந்
தருகாரி யஞ்செய்து தளராத ரங்கன்ப ணிகளாற்று வேம். 67

என்றங்கெ ழுந்தேத ழிருதோள்பு டைத்தந்த விரவிற் பினே
சென்றந்த மில்லாச்செ ருக்கோடு கண்ணன்கு டியையண் மினார்
மின்றங்கு சூரன்கு ணக்குன்றின் மீதேறு மமையம் முறக்
கொன்றங்கு மாழ்வானும் பின்றங்கு வண்ணங்கு றித்தாற்றி னன். 68

வேறு

ஆடக விக்கிர கந்தனை யங்கோ ரின்னலி ருஞ்சேரு
நீடுவ யற்க ணகழ்ந்துபு தைத்தே நின்றிட வங்கதனை
மாடுக லப்பையி னேடுழ வந்த மன்னுப ணைக்குரியா
னுடிய டைந்தபி னென்புல மீது நாடியி டேலெனவே. 69

வந்தச துத்தனும் சிந்தை மயர்ந்தென் விந்தையி தென்றுணரா
வெந்தமு ஞோர்களே யிந்தநி லீத்தை யந்தம றும்பகலாய்த்
தந்தமு றைப்படி துய்த்திட நீயார் வந்துத டுத்தனையா
லிந்தவ மூக்கினை யிந்தவூ ரம்பலத் தின்னிடை வைத்துமெனை. 70

அப்பழ னத்தனு மாரவாரிக்க மெய்ப்பர காலனுமாங்
கெப்படி தன்னினு மிப்பகலேக லெற்குறு மென்று கொளா
வப்படி யாகுக வென்றுழை யோரை யங்குற வைத்தவனே
டொப்புற வப்பதி யேகிய வைக்கண் ணுற்றது செப்பின்னல். 71

நன்னெறி துன்னிய நல்ல வகைக்க ணண்ணுறு மைவர்களும்
பன்னிய வன்னவர் செய்திய னைத்தும் பண்புற வாய்ந்து-னிந்
தின்னல மன்னிய வெம்பர காலற் கிச்செறு வுள்ளதென
மன்னிய சத்திய மாகுக வென்றார் மாயன ருந்திடவே. 72

துய்த்தனு மின்றது பத்திர மின்று தொல்கிரி யின்றதனு
லத்திரு மங்கைமன் சத்தியமாட வாங்கவர் சொற்றிடலும்
பத்தியின் விஞ்சிய வன்னவன் மாயன் பாதமலர் பரவா
வித்தம மாயிடு வெஞ்சப தத்தின் விம்மிதம் விம்மிதமே. 73

எம்மவர் கட்குமுன் வாமன னென்பா னின்னிலமன்னவனே
செம்மையி னீட்டிய செம்மல வன்றன் கால்வழி வந்தவனு
னிம்மறை யுண்மையே யாகையி னிச்செய் யென்னது கேளிதுவென்
றம்மனு நூலவை யார்கள் வியக்க வங்ஙன றைந்தனனே. 74

கோட்டிய ரன்னது கேட்டது மங்கைக் கோன தெனப்புகலக்
கேட்டது பாதமெ ழுந்தவ னுசை கெட்டக மீளவுமம்
மோட்டிய ரூரிடை மன்னுமு ராரி யர்ச்சகன் மூலமதாய்
வாட்டறு தன்பிர சாதம வற்கங் கீயவ ழங்கினனல். 75

தன்பரி வாரமுந் தானும துண்டு தந்தவ தெம்பெருமா
னின்புறு மையிரு பாடல வற்கங் கின்னமு தென்னவிழைத்
தன்புறு சுற்றமொ டவ்விர வின்கண் ணப்பொ னெடுத்தகலா
மன்பெரு மண்ணி நதித்தட மீதே மற்றுந டந்தனனே. 76

வேறு

அத்தரங்கி னித்தடத் தாருமாயன் சன்னிதி
முற்றுமொவ்வோர் வைகலங் குற்றவன்றன் முளரிநேர்
சித்திரப்ப தந்தொழு தின்கவிகள் செய்துகொண்
டொத்தசேனை சூழ்வர வொழுகுகின்ற காலையில். 77

தாமரைத்த டங்கணன் றங்குமோர் தலந்திரு
நாமஞ்சங்க மபுரமென்று யாவருநவிலுவா
ரேமமார வங்கொர்நாளி ராவிலுண்டெ ழுந்துதன்
னுமவேளர் கண்விழித் திந்தவண்ண நவிலுவான். 78

இத்தடங்கொ டுந்தட மேந்துவில்லுங் கையுமாய்
வித்தகத்தி னொருவிறல் வீரன்முன்னர் விழிப்புடன்
பத்திரத்தி னேகுகென்ற றைந்தியாரும் பம்புறப்
புத்தவிக்ர கத்துடன் போயினன்வ ழிக்கொளா. 79

அந்தவேளை யத்தலத் தமருமாழி யங்கரன்
மைந்தமைந்த சூரனைய மன்னுகையுந் தனுவுமா
யிந்தமங்கை மன்னவற் கெய்தினன்வ ழித்துணை
தந்தயைக்கு ளாவரே தங்கிரும் பகட்டினர். 80

குமுதவல்லி கொண்கனக் குனிசிலைக்க ரத்தனை
யமுதுகண்ட தெனவுளம் பொங்கியைய யார்கொனீ
யெமதருங்கு லத்திறை யென்னநிற்றி யென்னலு
முமதயானை மன்னைமுன் காத்தமாயன் மொழிதரும். 81

ஐயவித்த லத்தையான மர்ந்துகாவ லாற்றுவேன்
வையங்காத்த வன்னென வழங்குவார்க ளென்பெயர்
பொய்யிதென்றெ னப்பல புகன்றுகொண்டு போந்துமுன்
செய்யபானு வுதயம்பின் செய்ததும்ம றைந்தனன். 82

மாயன்மாய மானபின் மங்கைமன்னன் பாலகா
நீயெவண்ப டர்ந்தனை! கழ்த்துகில்லை யொன்றுமென்
சேயவெய்ய வில்லியே வையங்காத்த செம்மலே
மாயமாய் மறைந்ததென் மாற்றமொன்ற ளிக்கலாய். 83

என்றுபன்மு றைவிளித் தெதிருருமை கண்டுளந்
துன்றிமிக்க விம்மிதந் தோன்றிவந்த தூயவன்
கன்றுகொண்டு முன்விளங் கனியுகுத்த மாயனே
யின்றெமைப்பு ரந்திடற் கெய்தினனெ னக்கொளா. 84

கண்டுகன்ன லின்னமிழ் தொன்றுமாது ரியங்கலந்
துண்டுமுண்டு வருமுவோரீரைந்து பாடலங்
கண்டரும்ப ருகியா னந்தமாரு மாறுவாய்
விண்டுபாடி யெய்தினன் வீறரங்க மென்பவே. 85

திருவரங்க னடிமலர் தொழுதெழுந்து தீஞ்சுவை
விரவுபாட லாற்பல பரவல்செய்து விம்பம
துருகிவிற்ற வளவறும்ப ணம்படைக்கு முரங்கொளாப்
புரையிகந்த சினகரம் பொலிவிழைக்க வடியிடா. 86

சாலிசாலை மானசஞ் சாலகோபு ராதிகண்
மேலுறும்வ ணம்வளைந் தின்னவண்ண மேவவங்
காலையம்பு குந்துவை கறையிலாதி யடியவ
ரேலுமேக தேவனைக் காணுறுதி டிந்தரோ. 87

விண்மணீயின் வெயிலுறு விம்முபங்க யம்மெனக்
கண்மழுங்கி வாடுதுண் டத்துடன்க லங்குறுத்
திண்மைகொண்டொ ருவழி திரண்டுநன்கு ணர்ந்துபின்
விண்மிடைந்த பொன்விமா னம்பிளந்த விதங்கண்டார். 88

அடிபிடிக்கு மாற்றல்சா லாட்களைக்கொண் டங்கிருந்
தடுகளர்ப டர்ந்தமே லாறுகொண்டு சென்றிருங்
கடிமலர்த்த டம்பொழில் காவிரித்த டஞ்செழித்
திடுமெயில்க ளேழ்வளை திருவரங்க மெய்தினர். 89

எய்தியூகை யாலுணர்ந் தெழிற்கலீய னணுகுறு
மெய்திகழு மன்னவன் மெல்லடிச் சுவடுகண்
டைதிகழு மதுபிடித்த டைந்ததோடி யைந்ததால்
செய்தியுண்மை கண்டனர் சிந்தையையம் விண்டனர். 90

வேறு

மெல்ல மங்கையர் மன்னனை மேவிநீ
நல்லை நங்கன கத்தொளிற் தெய்வதத்
தொல்லை யாயப துமையைத் தோன்றுறு
தல்லெ டுத்திங்க ணுகினை யென்றலும். 91

கொண்டு கோபநீ ராருங்க டவுளர்
கண்ட வாறுக மறுகின் றீர்நுமை
மண்ட ருங்கிர கங்கண்ம ணந்தவோ
பண்டு பேயிற் பயித்திய முண்டதோ. 92

புந்தி போனப டிபுகல் கிற்கிலா
துந்த மூர்முக மாயொன்று ணர்கிலா
திந்த வூரையி கந்துவி ரைந்துநீர்
வந்த வந்தவ ழிக்கொளு மென்றனன். 93

கலிய னேகொணர்ந் துள்ளது கண்டவர்
வலிமி டைந்துள மங்கையின் வள்ளலே
பொலியு மெங்கட வுட்குறு பொன்முடி
நிலைய மங்குத கர்த்தனை நீயரோ. 94

ஊடி முந்தெம தொண்பொற்க டவுளை
நீடி ருக்கர நீகொண்ட டைந்தனை
தாடி ருச்சுவ டுன்னது தானுணர்ந்
தாடு கின்றனங் காணுதி யையநீ. 95

உண்மை கண்டபி னென்றுமோ பொய்யெதிர்
ஒண்ம ணிச்சுடர் முன்னிரு ளோங்குமோ
தண்மை கொண்டெம தங்கப்ப கவனைத்
திண்மை கொண்டுத வென்றுதெ ரித்தனர். 96

கள்ள மின்னவர் கண்டனர் நாமினி
உள்ள தன்மையொ ளிக்குவ தொன்றிடா
துள்ளி வேறு விரகி வருக்குவ
மெள்ள வென்றுது ணிந்துமி ழற்றுமால். 97

நுந்த மந்தநுவ லும்ப துமையான்
சந்த மாய்விர றன்னள் வீகுவேன்
வந்து மேலைவ ருடம்வ ழங்குமி
னிந்த வோலையென் றீந்தன னென்றரோ. 98

தந்த பத்திரங் கொண்டவர் தாமுத
மந்த மற்றத டைந்தகன் றேகலுஞ்
சந்த வங்குலி தன்னைய ரிந்துவைத்
தந்த விக்கிர கத்தைய ழித்தனன். 99

சிகரி யிஞ்சிமு தலறு செந்தொழி
னிகரி லாதுக லியனி கழ்த்திமேல்
புகரி லாதபொ ருள்கரத் தின்மையான்
மகரி லாதம னையென நின்றனன். 100

கோயி லின்பணி நன்கு குலவுற
வாய பின்ன ரஃதிழைத் தோரெலாஞ்
சேய யாமிது காறுஞ்செ யுந்தொழிற்
கேய கூலியிங் கீகென வேண்டினர். 101

சிந்தை தேறியச் செல்வனு நந்தமக்
கந்த மில்பொரு ளோவல தற்பமோ
வெந்த வூதிய மீதுமெ னவவர்
முந்து சொன்ன தருள்கென மொய்ம்பனும். 102

வம்மின் பொன்னி நதிக்கு வடகரை
செம்மி னத்திரு வெள்ளறை சேர்ந்துநுந்
தம்ம னப்படி தந்திடு தும்மெனப்
பொம்மெ னப்புறப் பட்டனர் பொங்கியே. 103

அந்த யாணர ரனைவரை யும்விரைந்
துந்து மம்பியி னேற்றியொ ழுகுறுஞ்
சந்த மாததி யேகுஞ்ச மயமவ்
விந்தை வெள்ளத் திடைகவிழ்த் தானரோ. 104

நாவி கர்க்கு நவின்றதின் முன்னரே
மேவி வேறவர் தந்ததின் மீண்டுடன்
தூவி யன்னமு றங்கிருந் தண்பணைக்
காவி வாவிய ரங்கங் கலந்தனன். 105

மீண்டி டாத கதியை மிடைந்தவச்
சேண்ட யங்குமெ யிற்பணி செய்தவ
ராண்ட பெண்டிர்கண் மக்கள னைவரும்
மாண்ட தம்மவர் மாயம றிந்தரோ. 106

வாய டித்து வயிறு மதுக்குறுப்
போய டிக்கண் விழுந்துமப் புங்கவ
னீய டித்தெமர் நீணதி வீழ்த்தினை
யேய டித்திடெ மையுமென் றேங்கினர். 107

கண்டு காமருங் காமுறுங் காளையம்
மிண்டு செய்யு மிடுக்கரைத் தேற்றிநுங்
கொண்ட கொண்கரை நாளைக் கொணர்வனீ
ரண்டு நுந்தம் மகமென விட்டனன். 108

விட்ட ரங்கன் விரைமலர்த் தாணினைந்
தெட்டெ ழுத்தைப் பலவுரு யேற்றியிக்
கட்ட மென்னைக் கலக்கி யடாவகை
வட்ட நேமிய வந்தருள் செய்குவாய். 109

வீட ணற்கு விழுத்திரு தந்தவெம்
மாட ராவணை யாயென் வேத்தவத்
தோட லர்த்தொடைத் தோன்றல் கனவிடை
யேட விழ்துள வன்னிதி யம்புவான். 110

வேறு

எம்பக டுணர்ந்து சீவ ரெழிற்பத மேறும் வண்ண
மம்புவி யெழுந்த சீரா யமுங்கலை யவர்வந் துன்பால்
வெம்பிடின் விடிய வன்ஞோர் விழுநதி யமுதிஞடி
நம்பெரு நிலயந் தன்னுட் பிரணவத் தருகி னண்ணி. 111

துஞ்சிய தமரி ஞமந் தூய்மையின் விளிக்கும் வண்ண
மஞ்சலை யறைதி யென்ன வாங்கருந் துயில்விண் டாழ்வான்
பஞ்சவர் மயிலுக் காடை பாரமின் றருளுங் கண்ணன்
மஞ்சுள வருளை யெண்ணி மனமகிழ்ந் திருந்தா னன்றே. 112

புலரியி லெழுந்தப் போன தொழிலரின் றமர்கள் போந்தெந்
தலைவரைத் தருதி யென்னக் கலியனுந் தனைவி னீவி
ருலைவரும் பொன்னித் தெண்ணீ ருவப்பொடு படிந்து தூய்மை
நிலவுற வம்மி னெம்பா னிகழ்த்துது மெனமற் றுங்கே. 113

சொல்லிய வண்ண மன்ஞர் தூயநீர் தோய்ந்து மீள
மல்லடு புயத்து மங்கை மன்னவ னவர்க்கொண் டேகி
யெல்லெறி ப்ரணவத் தெம்ம ரங்கனின் விமான மெய்தி
வல்லைநும் மிறந்தோர் நாமம் வாய்விடுத் தழைமி னென்றான். 114

என்னலு மிருகை கூப்பி விளித்திட விறந்தோ ரெல்லாம்
மின்னிய விமான மீதே தென்புலத் தவராய்த் தோன்றித்
துன்னிய தமரைக் கூவித் தொல்லைநல் வினைமுன் செய்த
தின்னெழி லரங்கத் தம்மா னிரும்பத மிணைத்த தெம்மை. 115

இத்திருக் கலிய னுலெம் மிருவினை யகன்று மீளா
முத்தியின் பருந்துகின்றோ நீருமிம் முனிவன் பாதம்
பத்தியிற் பணிந்து வாழ்ந்து மிறுதியிற் பரந்தா மன்றன்
சத்திய வுலகஞ் சார்ந்தே யவனோடமை யடைதி ரென்றார். 116

ஈங்கவர் தெருள முன்ன ரிசைத்துடன் மறைய விண்ணு
ரோங்கிய வுவகை விம்மி தங்களுக் குறையு ளாகிப்
பாங்கினிற் பரகா லன்றன் பதமலர்க் கடியராகித்
தாங்கின ரரிய வின்பந் தழைப்புறச் செழித்தார் மன்னோ. 117

ஆண்டொன்று கழிந்த பின்ன ரறவன்ற னடியார் போந்து
காண்டிடக் கலியன் புத்தன் கடைவிர லதுவொன் றீய
மூண்டிடு சினத்தி னன்னார் சென்னியின் முன்ன ரேகி
நாண்டுறந் ததுவுஞ் சீட்டும் வைத்தனர் நவின்றா ரெல்லாம். 118

புலிக்கொடி யிறைவன் பொங்கிக் கலியனை விளித்து நீமுன்
னளித்திடு முறியின் வண்ண மளித்திடற் கென்ன வென்னக்
கலக்குறு கருத்தி னாய்நீ கண்டிறந் தமர்ந்து நோக்கின்-
புலப்படு மதன்ற னுண்மை யென்றனன் புகழின் மிக்கான். 119

கொற்றவன் சிறிது சீட்டைக் குறித்துநோக் கினனா யந்தக்
கற்றவன் கருத்தைக் கண்டு முறுவலித் தைய காணீ
யெற்றிருங் கடவு ளால யத்திடை யிலகுந் தெய்வக்
குற்றவிம் பத்தைப் போழ்த னானெறிக் குறுவ தொன்றோ. 120

எற்குமிப் புவிக்கு மாகா திஃதெனக் கலிய னைய
நிற்குள நெறியின் ஞான நேர்படு மெனது கேண்மோ
பொற்புறு மறைநெ றிக்குப் புறம்பினர் வழுத்துந் தெய்வ
விக்ரக மதனை வீட்டி னாறெவ ருழையு மின்றால். 121

எனமணிப் பணியன் மற்று மிலக்குமிக் கிறைவ னேயவ்
வனந்தலோ சனனாய் வந்திங் கவதரித் துளதி னந்தக்
கனகவிம் பத்தைப் போழ்ந்தால் கலைக்கடல் கடந்த நீயவ்
வனகனுஞ் சுளித்து நின்னை யருள்கெட வகற்று மன்னோ. 122

தெரிந்தவ ரிழைக்குந் தீமை திண்ணிதென் றுரைப்ப ரென்ற
முருந்துறழ் முறுவ வல்லி வல்லியின் கொண்கன் முன்னி
யிரிந்திட விகலோ ரேந்து மில்கயிற் கரத்தா யெள்ளிற்
பரந்தமர் தைலம் போலும் பரந்தாம னெங்கு முள்ளான். 123

அவனல துலகி லொன்று மசைதலின் றுயிர்த்த லின்றாற்
புவனமூன் றொடுங்க வாட்டு முப்புரத் தவுணர் புந்தி
கவிழ்தர வவனே யந்தக் கடவுளா யுதித்தா னேனுந்
திவளொளி யறிவி னாரத் தேவனை வணங்கல் செய்யார். 124

இன்னுமொன் றியம்பக் கோடி யெம்பிரான் வசன மைய
மின்னுநன் மறையின் மாறாஞ் சமயங்கள் மேவு மென்னை
யன்னையை யிருது காலத் தப்புறத் தகற்று மைந்த
னென்னவாங் கிகந்து வேத நெறியின ரொழுகற் பாலார். 125

எள்ளியிவ் வுரையைத் தேவ தாந்தர மிறைஞ்சு மாந்தர்
தள்ளிய வெனதின் னுணை யகந்தனைத் தாங்கிப் பூதி
யுள்ளுறைந் திடுவ ரென்றே யுரைத்தன னருளிக் கண்டாய்
வள்ளலே யெனவே மற்றுங் கிளர்ந்தனன் வழங்க லுற்றான். 126

பொழிதரு முகில்போ லார்த்துப் புத்தர்வாய் புதைப்பப் பொங்கி
யிழிபுறச் சமய மெல்லாம் பாதல மழுந்த வெங்குங்
கொழுமலர்க் கணையான் றந்தை கொள்கையே கொழுக்க லாத
மழைசுகம் பெருகப் பெய்தான் மன்னன்கை குவித்தல் செய்தான் 127

ஆயிரம் பரம பாக வதர்தின மருந்த லூட்டுஞ்
சேயனே செங்கண் மாலுங் கலியனென் றிசைக்கப் பெற்ற
தூயநின் னருளி னாலே தொல்வினைத் தொடரும் விண்டேன்
போயதென் னைய மைய பொருந்தினேன் வாய்மை யின்றே. 128

உட்பகை யுடனே மற்றைப் புறப்பகை யிரண்டு மோடுந்
திட்பமார்ந் துளதி னன்றே தெரிக்குவர் தெளிந்தோர் நின்னைக்
கட்கினி துடைய காட்சிப் பரகால னென்றே யெங்கும்
புட்பக மனையா யென்று போற்றினன் புலவு வேலான். 129

கரடமுற் றிருந்து பாயுங் களிறுகண் முதல பல்ல
வரிசைக ளளித்துப் போகி வருகென வழியும் விட்டான்
றிரடன மனைத்துங் கொண்டு திருமங்கை மன்னன் பின்னர்க்
கருடவா கனன ரங்கன் கழலிணை வணங்கி மாதோ. 130

ஓங்கார விமானத் தூடே யுரகபோ கணையை யென்று
நீங்காத நிமல னந்த நியமன மியைந்து தன்பாற்
பாங்காய பரிவா ரங்கள் புடைவரப் பட்டர்ந்தான் செய்ய
தேங்காயின் பொழில்கள் சூழுந் திருவாலி நகரை நாடி. 131

வேறு

பனிமலையு யிர்த்தவெழிற் பைங்கிளி யளித்த
தனியமத ருந்துதிரு ஞானமுனி தானுங்
குனிசிலைவ யக்கலியன் கொற்றவன வைக்கண்
ணினிமைபெறு வாதவமர் புத்தருட னேன்றே. 132

வென்றவரை வேந்தனுத வின்பரிச டைந்த
நன்றினைய றித்தவனை நண்ணியெதிர் காணப்
பொன்றருமின் சாலிவிளை பொங்குவயற் காழி
யென்றதிரு வூரினிலி ருந்துபுறப் பட்டான். 133

காகளமு தற்கருவி காதினைநி ரப்ப
வேகுவழி தன்னிடையெ திர்ப்படுமி டுக்கண்
பாகுநிகர் நாலுகவிப் பரசிதனைக் காணு
வேகமுறு தன்றுரகம் விட்டருகு சென்றான். 134

ஈருததி யென்னவிரு வோருமெதிர் பேசு
சீரதொரு வர்க்கொருவர் செவ்விதின் வினவ
நீரதுத தும்புகலி யன்வசன நேர்ந்தே
யாரெதிரி வற்கெனவ வன்முதம டைந்தே. 135

கன்னலடு வெம்புகையுங் காசினியி னும்பர்
மன்னுமக விந்தனமு மாகமெழ நாளும்
பன்னவரு கார்ப்பருவ மென்னவரும் பண்பா
ரென்னகர நீவருக வென்றுபரிந் தழைத்தான். 136

காவலணி லாநகருங் கஞ்சமறு கயமும்
பாவலரி லாவவையும் பன்னியிலா மனையும்
பூவைவணன் பொற்பமருங் கோயிலிலா வூரு
மோவலுறு மென்னுமுல கம்முறையி னோர்ந்தே. 137

காழிநக ருங்கடல்வ ணன்சினக ரம்விண்
டூழிலதி னங்குவர யானுளமு மொல்லேன்
வாழிதிரு ஞானவென வன்கலியன் மற்றும்
வீழமன மொன்றவனீ கேளெனமி ழற்றும். 138

ஐயமுனந் தாசரதி யரக்கர்குலம் வீயத்
துய்யவன வேட்டமொடு துன்றினனவ் வூரின்
மெய்திகழ்கா ழிச்சிராம விண்ணகர மென்று
செய்யவொரு செந்தலமுண் டாகையின தன்சார். 139

அங்குமது கைடபரை யன்றடுமு ராரி
தங்குமெழி லாலயமுந் தங்கியது முன்னம்
பொங்குமறை யின்புறம தத்தரது போழ்ந்து
மங்கநில மட்டமுற மாடினர்செ ருக்கின். 140

அன்றுமுத லவ்வரியின் விக்கிரக மந்த
நன்றுவளர் பூசனைந டத்துமர புள்ளா
ரொன்றியம னைக்கணுற வைத்துநவை யொன்றுந்
துன்றுதலி லாவகைபு ரந்துதொழு கிற்பார். 141

ஆதலினத் திருப்பதியும் விண்டுப்தி யாமால்
போதுகெனப் புண்ணியனும் பொங்கிமனம் போகித்
தீதகல வெண்ணெயுணுங் தேவனடி மேலங்
கோதினனே ரின்பதிக மொன்றுமறை யென்ன. 142

அப்பதியு றைந்தபல சைவர்திரண் டாங்கே
யொப்பறுமெ ழிற்கலிய னேடுசெய வாதந்
திப்பியக வித்திருஞா னன்றனிடஞ் செப்ப
விப்பெரிய னேருகுறளா யென்றுகவி பாடி. 143

வேறு.

நாட னலி நண்ணலர் தீய மரூண்மாரி
நாடுங் கொங்கு மலரக் குழலியர் நல்வேளா
பாடுங் கொற்ற வேற்பர காலன் கலியன்சீர்
சூடும் மங்கை வேந்திவன் சொன்ன தமிழென்றே. 144

வீறு ருந்தன் சீருறு நாம விதமெல்லாங்
கூறு நின்றக் கொற்ற மிடைந்த கவிதன்னை
யாறே வெல்ல வன்னவ னின்னே னருள்வாய்நின்
ஆறு நின்ற வொண்மொழி யென்னு மமுதுண்டே. 145

பாற்கட றுஞ்சும் பண்ணவன் றுளே பரவும்நீ
நாற்கவி யேயிங் நானிலமீது விருதெல்லா
மேற்குரி னக்கென் றிவ்வண மேத்தியி வன்மீதோர்
மாற்கவி பாட மற்றவ ரெல்லா மகிழ்ந்திட்டார். 146

தன்பான் மிக்க தண்மன முள்ள தழைகொண்ட
பொன்பாய் கங்கைப் பூஞ்சடை யான்ற னடியாரை
யன்பாய் நோக்கி யாடுது மீங்கொண் றதுகேண்மி
னின்பா நீவிர் விண்டழுக் காறென் றிசைக்கிற்பான். 147

ஊரு மோங்கும் புகழு மோங்கு முலகோங்குந்
தார கன்னிவ் வெண்ணெ யருந்துந் தாடாள
ஞருங் கோயி லும்பெரு கச்செய் தவற்கென்றுஞ்
சீருங் குன்று தெய்துசி றப்புஞ் செயுமென்றான். 148

ஆங்கே யந்தச் சைவரெ லோரு மதுகொண்டே
யோங்குங் கோபு ரத்தொடு சால முயர்கூடந்
தாங்கும் விமா னத்துட னெல்லாந் தயங்கச்செம்
பாங்கிற் செய்தோர் பைம்பொ னிலயந் தனிலம்மா. 149

தன்கா னீரா னம்முகன் வேணி தழைத்தோங்க
மின்கார் வண்ணன் றன்னை யதற்குண் மிளரச்செய்
தின்கா லத்திற் கேற்றசி றப்போ வெவையுந்தா
நன்கா யாற்றிப் போந்தன ரென்ப நவையின்றே. 150

சம்பந் தன்பின் னுள்ளமு வந்தே சவிசேரு
மம்பொற் பிச்ச மாதிய யாவு மயல்சூழ
வெம்பப் பேணார் வீறுறு மங்கை மனனேகப்
பம்பும் பல்ல சீர்க ளிழைத்துச் செலவிட்டான். 151

ஊதக் காள மாதிக டன்பே ருயர்வெல்லாம்
போதப் பாடி யன்பர்கள் போகச் சிவிகைக்குள்
வேதக் கோனு ரின்றிரு வாலி மிடைந்தந்த
நாதற் காணு நல்லடி போற்றி யருணண்ணி. 152

சென்றத் தேய நின்றுத னேயத் திருமங்கை
துன்றத் தேவி கண்டுகு ருக்கண் டுணைமீதே
யொன்றப் புல்ல வுள்ளமு வந்தா னவள்பூரித்
தின்றக் கண்ண னேவலின் வண்ண நிறைவுற்றேன். 153

மாயன் பாத மன்னிய வன்பீ டுலகெங்கும்
பாயின் பாரப் பண்ணுமு னக்கென் றனையந்தச்
சேயன் விண்ணி னின்றிழி யென்னச் செலவிட்டா
னேயன் னீயென் றன்னதி னிங்கே நினக்கானேன். 154

எண்ணும் வண்ண மன்றிலங் கைக்கண் ணெரியேறப்
பண்ணும் வேத நாயகற் குற்ற பணியாவுந்
திண்ணங் கொள்ளச் செய்தனை யென்று தெரித்தந்தத்
தண்ணந் தாரா னோடுடன் றந்தைப் பதிபுக்கான். 155

புக்கங் கேதன் பொன்புரை நாய்கன் புகழ்முற்றும்
மிக்கங் கோதித் தந்தையுந் தானு மிளிர்மங்கைக்
கொக்குங் காவ லன்னெதிர் வந்த வுயரல்லி
நிற்குங் கும்பர்க் குள்ளிழிந் திட்டா ணிகரற்றாள். 156

மற்றும் பொன்வி மானமதூடே குருவோடும்
பற்றுந் தேவப் பண்புரு வத்தம் பரநின்றே
கொற்றங் கொள்ளுங் கொண்கனை நோக்கித் திருவுள்ளஞ்
சற்றுந் தாழா தையவ ரங்கன் றனைநண்ணி. 157

ஆடுஞ் செங்கே ழும்பண நாக வணைமாலின்
வீடுங் கொள்வாய் மற்றவன் மிக்க வருண்மேவி
நீடும் விண்ணு டேகுவ லென்று நிகழ்த்திப்பின்
போடும் மூர்த்தி யோடும மைந்தா னுயர்வானில். 158

பேணார் காலன் விம்மித மெய்திப் பிணையன்னுண்
மாணார் தேவ மங்கையென் றன்ன ளுடனாடி
வீணா மார்வ வேரைய ரிந்தே மகிழ்விற்பின்
பேணார் பொன்னி சூழும ரங்க மிணைந்திட்டான். 159

அங்குப் பெம்மா னம்மரங் கத்தா னடிதம்மிற்
தங்கப் பாரம் வைத்தரு வைகுந் தமதன்கட்
பொங்கிக் கண்ணன் பூம்பணி யென்றும் புனைந்தார
விங்கிப் பொன்ன ருச்சையி னென்று மிலகிற்க. 160

ஏரா ருள்ளத் தெண்ணியொ ரர்ச்சை யிடையேதன்
சீரார் சத்தி முற்றுமி ருத்தித் திருமார்பன்
னேரா ருங்க டைக்கணுநேம கமுமார்ந்தே
காரார் காவா ரின்குறுங் குடியிற் கழுமுற்றான். 161

நம்புந் தாளை யாவரு நாளுஞ் சுகநண்ணும்
நம்பியின் பாதந் தன்னை நாடி யவணாழ்வான்
நம்ப னுதி தேவரு நாடாத் திருநாடே
நம்பி யோக நண்ணுச மாதி தனிலார்ந்தான். 162

---

20-வது சருக்கம்

## ஸ்ரீமந் நாதமுனிகள் வைபவம்

மனித னென்ன மனைவியைத் தேடியும்
பினதி மன்னன் பிழைகண் டெரித்துமென்
றுனது தெய்வ வொருமையைக் காட்டிய
வனக னேயடி யேந்தமை யாளுவாய். 1

காரு ணுங்கா விரிக்கரைக் கண்ணெழில்
வீர நாரா யணபுர மென்றொரு
சீரு றணந்தணச் சேரியொன் றுண்டதை
யாருங் கானத் தகமெனச் சாற்றுவார். 2

கண்ண னங்குக் கருணைக் கடைக்கணி
னண்ணி மன்னு ரெனுந்திரு நாமமே
பண்ணு மோர பயன்றவம் பண்புறு
மெண்ண றும்பய னுயங் கிலகுமால். 3

பாலி ருங்கட லீத்த பரன்றனைச்
சாலி ருஞ்சர சாயவண் சாந்ததென்
றேல யாருமி யம்பவந் தீம்புனன்
மேலு றுந்தட மிக்கதொன் றுண்டரோ. 4

வேத மாதி விரிந்த கலையெலா
மோதி யங்கை யொழுகுறும் வேதிய
ரேத மின்றொரு நாலா யிரவர்கண்
மாத வத்து மணந்துறை கிற்பரால். 5

அன்ன பாவனர் தம்முள ருந்தவ
மன்னு சொட்டைக் குலத்தினுள் வந்தவர்
மின்னு மீச்சுர பட்டரெ னும்பெயர்
துன்னி யோருந் தூயவர் தோன்றினர். 6

இத்தி ருத்தவர்க் கேய்ந்த குமரரா
யொத்த நாதமு னிகளு தித்தனர்
பத்தி யார்படை மன்னவன் பத்தரு
ளத்தி மாமுக னஞ்சமெ னவரோ. 7

மக்தி யாழ்கர மாமுனி யன்னவர்
நிகர றுஞ்சுவை நீளிசை கேட்டலும்
மிகவு நாணி மிளிர்திரு மேனிவெண்
முகிலை மானமு ழுதும்வெ ளுத்தனர்.

ஆய ருங்கரு வாய்ந்தவ மயமே
மாய வன்கடைக் கண்செய் மாட்சியாற்
சேய பல்கலை யாவுஞ்செ றிந்துளந்
தூய தாகித்து லங்கின ரென்பவே. 9

தக்க காலையி லில்லறந் தாங்குறற்
கொக்க கன்னியை நேடியு றைகையின்
மிக்க லங்குவங் கீபுரத் தாய்ச்சியிவ்
வெக்க லைக்குமி றைக்குணங் கண்டரோ. 10

இன்றை விந்தப் பாடையெ னும்பெயர்
மன்னு தந்திருக் கன்னிகை மாமணி
தன்னை வேதநெ றிப்படி தாரைவார்த்
தன்ன மாதவர்க் காங்களித் திட்டனர். 11

ஆட கத்தின மார்ந்தொளிர் மாமணிப்
பாடு பெற்றவர் பண்புறு மில்லற
நாட கத்தக நனிவியந் தேன்றுற
மாடி மிக்கம கிழ்ந்துறை காலையில். 12

பூங்க ரும்புகு ழைந்தொரு முத்துயிர்த்
தாங்க ரவிந்தப் பாவையு மங்கருத்
தாங்கி வையந்த ழைப்புறத் தக்கவோ
ரோங்கு புத்திரன் றன்னையு யிர்த்தனள். 13

இனிய யோகிபு தல்வனு மீச்சுர
முனிக ளென்றுமொ ழிந்துதி ருப்பெயர்
நனிவ ளர்ந்துவ ரத்தகு நாள்களிற்
புனித வேதமு தலபு கட்டியே. 14

கற்ற நாவலர் கண்டுக ளிப்புறற்
குற்ற வாறுவு ஞற்றுபு யோகமுஞ்
சொற்ற வண்ணம் வளைந்துசொ லிப்புற
முற்று ஞானமு திரவி ழைத்தனர். 15

நாடு நாடுறு நாதமு னிகளும்
பீடு யோகப்பெ ருந்துறை யிவ்வணங்
கூடி நன்கு லவலி லோர்தின
நாடி யுள்ளமொ ருநெறி நன்கரோ. 16

பெண்டு பிள்ளைக ளோடுபி றங்கிடுங்
கொண்டல் வண்ணனி லயங்கு றுகியவ்
வண்டர் நாயக னம்மலர்த் தாண்முடி
மண்டு மாறுவ ணங்கியெ ழுந்தரோ. 17

தேவ தேவதி ருவடி நம்புவோ
ரேவ ரேனுமி ருஞ்சுக நண்ணுமா
றேவ லின்றியு வந்தரு ளுன்றிருக்
கோவில் கொள்ளும்வ டமது ரைமுதல். 18

ஆன திவ்விய தேசம வைதொறு
நான டைந்துவ ளருமுன் னற்பதத்
தேன மர்ந்ததி ருமலர் கைதொழு
வான யந்தருள் வாயென வாழ்த்தினார். 19

அந்த மாயன ருச்சகன் மூலமா
யெந்த மூர்த்தியி லகுந்த லமெலாஞ்
சிந்தை யின்படி சென்றுதி ரும்புகென்
றிந்து வென்னக்கு ளிர்ந்திசைத் திட்டனர். 20

கடைக்க ணிப்பிறை யும்மவர் கைக்கொடு
புடைப்பு தல்வனும் பன்னியும் போதரப்
படப்பை யார்பல நாடும்ப டர்ந்துசென்
றிடைப்ப டுந்தல மெங்குந்தொ ழுதனர். 21

மதுரை சாளக்கி ராமமே வைகுந்தம்
முதுவ யோத்திது வரைமு தலிய
பதிக ளியாவும் படர்ந்தவண் பாவன
மதுபொ ருந்தும்பு னிதநீ ராடியே. 22

அந்த வந்தத லத்தொளி ரெம்பிரான்
றந்த சேவைபு ரிந்துத ளிர்த்துளஞ்
சிந்து தீவினைச் செம்புனற் காளிந்தி
யுந்தி யின்கரை யோரம ணுகினார். 23

அங்க ரும்புரி கோவர்த்த னமென
வெங்கு மேத்துவ தின்னிடை வீற்றிடுஞ்
செங்கண் மாலெமு னைத்துறை வன்பதி
கிங்க ரச்செயல் கேண்மையிற் செய்தரோ.

பெண்டு பிள்ளைக ளோடுபெ ருமிதங்
கொண்டு வாழ்வுறுங் கோதறும் போதினில்
விண்டு வீரநா ராயண புரத்தனற்
றொண்டர் தம்மைத்து றந்துத ரிக்கலான். 25

நள்ளி ருட்கன வின்னிடை நண்ணிநீ
பொள்ளெ னப்புறப் பட்டுநம் பொன்னெயி
லுள்ள கோயிலு றைதியெ னவவர்
விள்ள வெந்துயில் கண்விழித் திட்டனர். 26

இந்தச் செய்தியெ முணைத்து றைவனுக்
கந்த யோகிய றிக்கைசெ யவவன்
சிந்தை யுண்மகிழ்ந் தின்னருள் செய்துபோய்
வந்தி டென்றுவ ழங்கிய ருளினன். 27

வேறு.

கொண்டா ரந்தக் கோதி லளியும் விடைதானும்
விண்டா ரந்த வெம்பதி வாரா ணசிதன்னைக்
கண்டார் கண்ட பின்ன ரகன்றார் கடிதேகித்
தண்டா வின்சீர் தங்குச கந்நா தமுநண்ணி. 28

அந்தச் சகந்நா தன்னடி யிணையில் முடிசாய்த்துப்
பந்தப் பாசம் பற்றற லாகென் றிசைத்தேத்திச்
சிந்தத் தீவினைத் திரள கோபி லஞ்சார்ந்து
நந்துப் பொன்ன னாகம் வகிர்ந்த நரசிங்கன். 29

செம்பொற் பாதஞ் சிந்தையின் வீழ்ந்து தொழுதேத்தி
யும்பர்க் கேயு மொண்முடி வேங்க டமுநண்ணி
நம்பற் கேயு நாரி யுருவா மதைமுன்ன
மம்பொற் கைக ளஞ்சலி யாகத் தொழுதப்பால். 30

ஏறு மீதே யெம்பெரு மான்பொன் முடிமின்னும்
வீறார் கோபு ரந்தனை நோக்கா விழிநின்று
மாறு யானந் தக்கணீர் வார வணங்கிக்கொண்
டாறு வன்பிற் சாமி கயத்தை யணுகுற்றார். 31

உள்ளுந் தூய்மை யொன்ற வுளூற்று மதினடிக்
கள்ளஞ் செய்யும் வெண்ணெயெ னத்தாள் களைநாளு
முள்ளுந் தொண்ட ரொன்றுசெ டியுந் திருமார்பன்
கொள்ளுங் கூரா னந்த தரிசன முங்கொள்ளா. 32

அந்தச் சீனி வாசன் விடையு மருளுங்கொண்
டெந்தத் தேவ ரீட்டடு நாடு மிணையில்லாச்
சந்தச் சோளங் கபுர மென்றல மாங்கெய்தி
முந்தச் சிங்கன் றன்னை வணங்கி முதமுற்றார். 33

பின்னே முத்தி யின்னக ரேழிற் பெருகுற்ற
பொன்னேர் மாடக் கச்சி யணைந்து பொருவற்ற
மின்னேர் பெருந் தேவியெ மன்னை மிடைதந்த
தன்னே ரில்லா வத்திகி ரியின் றலையார்ந்த. 34

எண்ணும் வரங்க ளெண்ணி யளிக்கும் வரதன்பூ
நண்ணும் பாத நண்ணிவ ணங்கி நடந்தேபின்
கண்ணும் வேத வேதிய ரீட்டங் கவின்கொள்ளும்
விண்ணும் வீழு மயிந்தை நகரந் தனைமேவி. 35

செங்க மலவல் லியெ மன்னை செறிதந்த
துங்கன் றேவ நாயகன் றாய மலர்ப்பாதம்
பொங்கிக் கண்டும் போற்றியெ ழுந்தே புகழ்பெண்ணைப்
புங்கத் தீரக் கோவலூர் தன்னிற் புகுந்தன்றே. 36

ஆய ஞர்த மம்மலர்ப் பாதந் தொழுதேத்தித்
தாயும் பிள்ளை தாமுடன் போதப் படர்ந்தேகி
யேயும் பொன்னி யின்னிடை யேரா ரரங்கம்புக்
காயுஞ் சேடப் பாயல ரங்க னடிகாணு. 37

மற்றும் மாகந் தேவரு தென்னம் பொழில்சூழுங்
குற்றங் குன்றுந் தண்குடந் தைக்கண் மிளிர்நாகப்
பொற்றண் பாய லின்றுயில் கொள்ளும் புனிதன்று
ளூற்றங் குள்ளம் பொங்கிவ ணங்கி யுடனேகி. 38

தம்மூர் நண்ணித் தம்பெரு மாளைத் தொழுதேத்த
வம்மூர் மன்னர் வேறொரு தேய மடையுந்தன்
செம்மூர் மைந்தன் சேரம கிழ்ந்த வளையென்னக்
கம்மூர் மேக வண்ண னுங் கண்டு களித்திட்டான். 39

வேறு.

கண்டிருகட் கடைநின்று மருளூற்றுங்
காகாயஃ தறிந்து நின்ற
நுண்டிருவின் னறிவாளர் நுவலரிய
நாதமுனி யோக நாதா
கொண்டவெழிற் பத்தியையுஞ் சிரத்தையையுங்
கூரருளுங் குறித்து நாமித்
திண்டிறலா ரியர்வழியே திருமன்னன்
பதமடைவே மென்று தேறி. 40

திரடிரளா யவரடியி னுச்சிரயித்
திருந்தனர்க ளவரு மாங்கே
மருமாலைக் கயிங்கரிய முதலாய
விழைத்தருநூன் மறையின் வண்ணந்

திருமாலே பரமென்று தெருட்டியுறை
கையிற்றிரு நகரி னின்று
மிருமாவை ணவர்சிலர்க ளெழுந்தனர்க
ளத்தலத்திற் கொருநா ளென்ப. 41

வந்தவர்கண் மன்னுரைத் தொழுதுகொடு
வகுளாப ரணன்முன் சொன்ன
செந்தமிழோ ராயிரத்துட் சிருறுமா
ராவமுதே யென்று செப்புஞ்
சந்தமுறும் வாய்மொழியைச் சாற்றியவன்
குணகணத்துட் பயிலக் காணு
விந்தையொடு பெருநகையும் விம்மியவ
ரிவ்வண்ணந் துணிய லானுர். 42

காராருங் கண்ணபிரான் றனேயோகத்
தானுகர்ந்து களிக்கு மாற்றிற்
சீராரு மித்திருவாய் மொழியானே
பருகுவது சிறப்பா மென்றே
யோராவவ் வுத்தமரைத் தாள்பணிந்து
கொண்டதனே யுரைத்து நெஞ்ச
நீராக நெகிழ்ந்துவகை நீளவவர்
மீண்டவரை நிகழ்த்த லானுர். 43

பாகவத சிரோமணிகா ளிப்பத்தும்
பராங்குசனு ரருளிச் செய்த
மோகமுறு மாயிரத்துட் கண்ணபிரா
னவதரிப்பை யுளத்தின் முன்னி
நாகநிகர் திருக்குடந்தை யமுதனேயே
நாடியுரைத் திட்ட தன்றே
போகவிது மற்றவையும் புகன்றருள்வீ
ரெனப்பணியப் புகல்வ ரின்னோர். 44

முனிநாதா யாமுதித்த தலநகரி
யென்னுமிதை மொழிவா ராங்கே
தனியாரு மின்றவனி தலங்கடொறும்
படர்ந்துதிருக் குடந்தை சார்ந்தே

கனியாரா வமுதினைக்கண் டடிபணியுங்
காலையந்தத் தலத்தின் மேலோர்
நனியாழிற் கலந்துதிரு வாய்மொழியை
நவிற்றிடயாங் களிப்பின் மாந்தி. 45

மற்றவரைக் குறையிரப்ப மகிழ்ந்தவரிவ்
வீரைந்து மருளி னாரென்
றுற்றதுரைத் திடவவர்க்கு யோகியுள
மகிழ்ந்துகண்ணன் பிரசா தங்கண்
மற்றுதவி விடுத்தரிய மன்னாரின்
விடைகொண்டு குடந்தை மன்னிப்
பெற்றதிரு வமுதானே பேசியந்த
வமுதனைத்தாள் பணிந்து போற்றி. 46

அங்குள்ள வடியாரை யாயிரமு
மருள்கவென நயந்து கேட்பப்
பொங்குள்ளத் துடனவர்க ளிப்பத்தும்
போற்றுதுமற் றறியே மென்ன
வெங்குள்ள வோவவையென் றேங்கியவ
ணின்றெழுந்து நகரி னண்ணிக்
கொங்குள்ள வகுளமலர்த் தாரானைப்
பொலிந்துநின்ற பரனைக் கூடி. 47

வந்தனையும் வழிபாடுஞ் செய்தந்த
வளநகரு ளுறையு மான்றோ
ரந்தமுறுந் தாள்பணிந்தவ் வாயிரமு
மளித்தருள்கென் றறைய வன்னோர்
தந்திரளிற் பராங்குசரென் றொருதாசர்
தடக்கைகுவித் தடியே மீங்குச்
செந்திருவாய் மொழியென்பு தொன்றறியே
மிருந்ததெனச் செவியுற் றுள்ளேம். 48

மறையுருவா மரியதமி ழவைமறைத்து
மண்டலத்திற் கரந்த போது
மறையவரு மவைமொழிந்த வாழ்வாரை
மதுரகவி யறிந்து போற்றுங்

கறையகலுங் கண்ணினுண்சி றுத்தாம்பு
கழறுதுமக் கவின்கொள் பாட
லறைகுதிரே வீராரு யிரந்தரநுங்
கண்முகப்பி னாழ்வா ராவார். 49

என்றதனை யுபதேசித் திடவிவரு
மேன்றுபுளி யெழிலார் நீழ
லொன்றியரு நேமமுட னவ்வண்ண
நவின்றபடி யுறைய மாயோன்
மன்றலுறு மலர்மாதி னிவ்வமயம்
வாய்த்ததென மகிழ்ந்தாழ் வாரை
யின்றெழுந்து நாதமுனிக் கீந்துவர
மீள்கவென விசைத்தா னன்றே. 50

நம்மாழ்வார் நனிமகிழ்ந்து நாரணனர்
நவின்றபடி நடத்த நாடி
மும்மாய மலமுருக்கு மதுரகவி
யுடனெழுந்து முனிவர் ஞானஞ்
செம்மாந்த விழிப்புலனிற் றிகழ்ந்திியையுஞ்
செய்யவரம் வரிக்கு கென்ன
வம்மாமை யகத்தினரும் விம்மிதமுற்
றாழ்வாரி னடிகள் போற்றி. 51

ஆயேயு மருள்சுரக்கு மந்தணநீ
யறைந்ததமிழ் மறைக ளோடு
வீயேயுந் திருமார்ப னிராசியமும்
விளம்பியருள் கென்ன வேண்ட
வாயேயு முலகருந்த வனமாலிக்
குரியதிரு மந்தி ரத்தை
நீயேயும் வண்முறுகென் றிருத்தமுடன்
குருகையர்கோ னிகழ்த்திப் பின்னும். 52

நால்வேதங் கடைந்தெடுத்த நல்வியாச
சூத்திரத்தைப் பொருளி னல்கி
மால்வேதத் தமிழ்களையு மற்றருளிப்
பின்னுமுள மறைக ளெல்லா

மேல்வேறொன் றிலதாகி மிக்கருளத்
 தெருண்டவரு மிரண்டை வீட்டி
நால்வேதங் களிற்றுளங்கா நுண்ணுர்வி
 னுண்மையுணர்ந் தொளிர்ந்தா ரன்றே. 53

திருஞானக் கொழுந்துவிட விவ்வண்ணந்
 தெருண்டமுனி யோகி யாழ்வா
ரிருமாமை யடிகளையும் பொலிந்து நின்ற
 வெம்பெருமான் பதமு நாளும்
மருவாநன் கருச்சனைசெய் துறைந்திடலு
 மந்நகரை மணந்தோ ரெல்லா
மருகாவவ் வுத்தமரி னருங்குணத்திற்
 கதிசயித்தாங் கறைய லானார். 54

ஒருமாற னிருவிழிக்குக் கோசரமாய்த்
 திருமந்தி ரமுமுய்ந் தோங்கு
மருமாநற் பொருள்களுமற் றித்தகைய
 விராசியமு மறைந்தார் நிற்கிப்
பெருமாபே றுரடைந்தா ரிதுநிற்க
 பிறங்கெழிலோய் கலியன் முன்னாண்
மருமாலைத் துளவரங்கன் பதம்பழிச்சி
 மற்றவன்ற னருளின் வண்ணம். 55

இச்சடகோ பன்றன்னைத் திருவரங்கத்
 தெழுந்தருளப் பண்ணி யாரு
மெச்சவுயர் மார்கழிசுக் கிலவேகா
 தசிமுதலீ ரைந்து வைக
துச்சமுறு மறைத்திருவாய் மொழியோரா
 யிரந்தமையு மோர்து வித்தே
யச்சொலருஞ் சிறப்பினுக்காங் கத்தியய
 னோற்சவமென் றறைந்தோர் நாமம். 56

ஆண்டுதொறு மிவ்வண்ண மாகுகவென்
 றருளின்னு மந்த வண்ண
மாண்டவெழிற் குணத்தினர்கண் டத்தினரா
 மன்னுபக லதன்பின் காலம்

பூண்டதொரு வேற்றுமையாம் புகராலவ்
வேற்பாடும் போகி யெங்குந்
தேண்டிடினுங் கிடையாதித் தமிழ்மறையுங்
கரந்ததெனத் தெரிக்கக் கேட்டேம். 57

வேறு

என்றியம்ப வந்தயோகி யிதயநன் குவப்புற
நன்றெனைக்கொ டென்னையாளு நாகமீ துறங்குவோ
னென்றிருங்கு றைதணித்த தென்னவின்னு மொன்றையு
மின்றொழித்தெ னைப்புரக்க வென்றுதோத் தரித்தரோ. 58

கோயிலேகி யரங்கநாதன் குரைகழல்வ ணங்கவம்
மாயவன்ம கிழ்ந்துயோகி மனத்தின்வண்ண நிகழ்த்திடற்
கேயுமாணை யீயமற்று மெழிற்கலீய ணணையு
நேயமோடு நேரவோலை நகரிசெல்ல விட்டிடன். 59

ஆழுவா ரெழுந்தரு வாற்றுவத்து பாங்கமாம்
வாழுமுத லாயிரமுந் திருமொழியும் வாமனன்
சூழுமார்க ழியினடைந்த சுக்கிலத்தீ ரைந்துநா
ளாழிநாத னிலயந்தன்னு ளடியரோத வாற்றியும். 60

அந்தவேகா தசிதுடங்கி யையிரண்ட ரும்பகன்
முந்தருந்தி ருவாய்மொழி யும்மறுதி னத்தினிற்
சாந்தமாகி யற்பாவோரா யிரங்களையும் சாற்றுவித்
திந்தவாறு மேழுமெட்டு மாகிரும்ப கல்களில். 61

ஆகரும்சி றப்புமத்தி யயனவுற்ச வம்மென
நாகமும்பு கழுமாறு நல்லநாம மும்புனைந்
தேகியின்கு டந்தைதன்னி லிலகுமாரா வமுதனின்
வாகைசூடு மடிகண்மற்றும் வணங்கியும்ப ழிச்சுறு. 62

அங்குமாற னருச்சைதன்னை யெழுந்தருள மைத்துநீர்
பொங்கரங்கத் திழைத்ததென்னப் பொருவிலாத மார்கழித்
திங்கடோறுந் திருவிழாந டத்துமாற மைத்துவான்
றங்குசார்ங்க பாணிநாதன் றாள்களைப்ப ணிந்துபின். 63

இத்தமிழ்ம றைகளிந்த வெம்பரன்னி லைகொளச்
சித்தநன்கு செய்ததாலா ராவமுதாழ் வானென
வொத்தநாம மினியிவற்கு ரைக்கலாகு மெனவுவந்
தத்தமாம லரிரண்டு மங்குகூப்பி நின்றனர். 64

நின்றநாத முனிகளெங்கு நிகரிலாத தன்மையை
நன்றுவந்து கடைக்கணித்து நாகணைத்தி ருவுர
னென்றுவோர்த மக்கிவற்றை யோதியெங்கும் பரவுறச்
சென்றுசெய்க வெனமிழற்றி விடையளித்து விட்டனன். 65

அப்பரன்பு ணைந்தளித்த துளபமாலை யருள்களு
மொப்பொழிந்த வுவரடைந்து மாடவோளி யூர்மிடைந்
தப்பனுமன் னரடியை வணங்கிநின்றெ னையனே
துப்பனேநின் றுணிபுநன்கு நீபுரிந்த கருணையால். 66

தொண்டனேன்மு கத்தினெங்குந் துலங்கலாய தெனமுதங்
கொண்டுதோத்தி ரிக்கமாயன் குளிர்கடைக்க ணேக்குறுக்
கண்டுநம்வி றல்களிந்தக் காசினியு யும்வணம்
வண்டமிழ்ம றைபெருகும் வழிதுலங்க வளைந்தையால். 67

ஆகையாலி னிச்சுகித்திவ் வருந்தலத்தி லுறைதியென்
றுகைமாலை முதலவாய வரிசைக ளளித்தலும்
வாகைகொண்ட வந்தயோகி வரிசையோடு மிறைமிடைந்
தோகைகொண்டு மத்தலத்தி லோகமுற்றி ருந்தனர். 68

வேறு

பின்னரப் பெரிய யோகி மேலைகீ ழகத்தை யாழ்வார்
முன்னுறும் பலர்க்குத் தேவ கானத்தின் முறையி னுனே
யின்னறுந் தமிழ்வே தங்க ளிசையுறப் பயிற்று வித்துத்
தென்னரங் கனுக்குப் பாட வவர்களிற் சிலரைப் போக்கி. 69

சிலர்களைத் தமதூர் மன்னர் செஞ்செவிக் கியையப் பாட
நலமுற வமைக்க வந்த நறுஞ்சுவை யொழுகும் பாட
லலைகட லவனி யெங்கு மகலங்கொண் டொளிரக் கேட்போ
ருலைவறு மமுதந் தன்னை யுண்பவர்க் குவமை யானர். 70

பராசரன் மகன்முன் வேதம் பாங்குறத் திருத்தி ஞன்போற்
சராசரம் பிழைக்க விந்தச் சான்றவர் மதுரங் காலும்
மராமரம் துளைத்தான் பாடு மன்னிய தமிழ்வே தத்தை
யராவிடுஞ் செயலே யென்ன மணியைநன் கலங்கச் செய்தார். 71

இப்படி யவனி யெங்கும் பரவிய தேவ கான
மொப்புற வுணர்ந்தா ளான வொருசிறு கணிகை போந்து
தப்பறப் புரக்குஞ் சோழன் றன்னவை யணுகிப் பாட
வப்பொழு தொருத்தி மானு டத்தையு மிசைத்தா ளாங்கே. 72

மன்னவன் மனுட கான மருந்தையே மகிழ்ந்து மாந்தி
யன்னவட் கணிக ளாதி யருஞ்சிறப் பளித்து மற்றைப்
பன்னருந் தேவ கானப் பாவையை யவம தித்தான்
கன்னலுங் கசக்கு மொட்ட கத்திறுக் குமென்ப மாதோ. 73

பரத்தையிற் சிறந்த வந்தப் பைங்கிளி பரந்தா மன்றன்
றரைக்கணா் தலங்க டோறுந் தகையுறுந் தேவ கானஞ்
சிரத்துற விசைத்துக் கொண்டே சிறந்தநா தமுனி வாழு
முருக்கினர் வீர நாரா யணபுர முவந்து புக்காள். 74

புக்கவண் மன்னர் முன்னர்ப் பொருவருந் தேவ கானம்
பக்கமார் கல்லு மாங்கே யுருகிடப் பாடக் கண்ட
வக்கலைக் கிறையா நாத முனிகளு மதிச யித்து
மிக்கதோர் சிறப்புஞ் செய்து மேம்படப் புகழ்ந்தா ரன்றே. 75

முன்னவ மதித்த பொன்னி முதுபொழி லிறைவ னிந்தப்
பன்னரும் புதுமை கேளாப் பரமயோ கியுந்தன் பாங்கர்
மன்னெறி லவைக்குப் போத வொற்றரை மகிழ்ந்து விட்டா
னன்னவ ரணுகோ மென்று ரவர்க்கவ னடலு மென்னே. 76

ஆங்கரு குறையுந் தொண்ட ரவனுமக் கிணையின் றேனும்
பாங்குறுந் தேவ கானப் பரத்தையின் பொருட்டா லைய
வீங்கெழுந் தருள்க வென்ன விதுவுமோர் முறைதா னென்று
தாங்குற வவளை மன்னன் றன்னவைக் கெழுந்தா ரன்றே. 77

புரவலன் புனிதர்க் காங்குப் பொள்ளென வெதிர்கொண் டேன்று
மரைமல ரடியில்வீழ்ந்து மண்மிசைப் பணிந்தெ ழுந்தே
யரசவை யடைசிச் சிங்கா தனத்தினி லிருத்தி யாற்றும்
வரிசைகள் பிறழா வண்ணம் வகைபெற விழைத்து மாதோ. 78

வேதியர் குலத்து வேந்தே தேவகா னத்தின் பாடு
மீதென வறியே னென்ன வெழின்முனி வருமங் குள்ள
மேதகுங் கற்றாண் மீதோர் கஞ்சத்தை யமைத்து மின்னின்
சோதியார் தேவ கானச் சுந்தரி முகத்தை நோக்கி. 79

ஓமென வவளு மாங்கே யொருகுயி லிசைப்ப தென்னத்
தூமணி முறுவ றோன்றத் தொண்டைவாய் திறந்து பாடக்
கோமகன் கம்ப நீரா யுருகிடக் குறிப்பின் மற்றுந்
தேமொழி விலைமா தோர்ந்து நிறுத்தின டிவிய கானம். 80

நிறுத்தலு முனிவர் சொல்லா னிறுபனு மெடுக்கத் தாளம்
பறித்திடற் கரிதாய்க் கம்ப மிறுகிடப் பரத்தை மற்றுங்
குறிப்பறிந் திசைக்க மீண்டு நெகிழ்வுற வெடுத்துக் கொண்ட
நெறிப்படு வளவ னுள்ள நெகிழ்ந்திறும் பூதுற் றனன். 81

பின்னரு மொருநா ளாறு பிறங்கஞ்ச னங்க டம்மை
யன்னவ ரொருங்கி சைப்பித் தவைகளி னிறையொவ் வொன்று
மின்னதென் றிசைக்க வேந்த னிதயமிக் குவந்தி யோகி
மன்னரின் பதத்த னேகந் தரம்விழுந் தெழுந்து மற்றும். 82

ஆரிய மணியே யுன்ற னருந்திற லறிவு றாத
பூரிய னவைக ளெல்லாம் பொறுத்தியென் றிறைஞ்சிப் போற்றிச்
சீரிய மணிகண் மின்னுஞ் செய்யபொற் பணிக ளாதி
கூரிய சிறப்புப் பல்ல கொடுத்திவை மணக்க வென்றான். 83

மலரவள் கொழுநன் பாத மலரலான் மற்றத் தெய்வ
வுலகிருந் தொருகோ லோச்சு மதனையு மொதுக்கு மந்தக்
கலைவலா ரவற்றை யேற்கா திறைவனைக் கடைக்க ணித்தே
நலமுறு முகமன் கூறி நடந்துதந் நகரஞ் சார்ந்தார். 84

காவலன் தன்பின் றேவ கானத்திற் கைபோ யுள்ள
பாவையின் றிறத்திற் கேற்பப் பைம்பொனு டைகளு மின்னுந்
தீவிய மணிக ளாழுந் திகழ்பணி களுமே யாதி
மேவரும் பொருள்க ளெல்லா மேன்மையை யளித்து விட்டான். 85

வேறு

மருவி முனியூரை மன்னுரை வணங்கிப்
பெருகு காலையந்தப் பெருமையோர் திறத்திற்
குருகைக் காவலப்பன் குளிர்புண்ட ரீகாக்கன்
றிருநம்பி கருணு கரதாச னென்றும். 86

திருக்கண்ண மங்கை யாண்டா னுருப்பட்டூ
ருருக்கிளரு மாச்சான் பிளேயோடு மற்றும்
பெருக்கமுறு வேறு டையான் பத்தி
யிருக்கு ஞானவான் மாதேவி யாண்டானும். 87

சோகத்தூ ராழ்வானு மாகுமிந்தத் தூயோ
ரேகிப்பி ழைத்துப்ப வடைந்தி றைஞ்சியேத்தப்
பாகொக்குந் திருவாய் மொழியு மதன்பண்பு
நாகர்க்கு மரிய மறைகளு நவின்றூர். 88

செம்மை பெறுஞாய தத்துவ முஞ்செய்ய
உண்மை பெறுயோக ரகசியமு மென்னு
மம்மை பெறுநூல்க ளமைத்தடி யார்களுக்
கெம்ம கிடைகளுமி யையும்வண நின்றூர். 89

வேறு

ஈங்கிவ ரொளிரக் கிள்ளி யொருபக லிவரின் யோகப்
பாங்கினைச் செவியுற் றேகிப் பார்த்திடும் விழைவிற் றன்னின்
மாங்குயி லனைய வாசை மகிடிக ளுடனே போந்து
நீங்கருந் திருமன் னுரை நீள்பதந் தொழுது போற்றி. 90

மற்றரு முனிவர் பாத மண்மிசை விழுந்தி றைஞ்சிப்
பெற்றிடற் கரிய யோகப் பெருமைகண் டதிச யித்துப்
பொற்றதாட் புனலு மன்னுர் கருணையும் புகன்று கொண்டு
சிற்றிடைச் சிகளி னூரைச் சேர்தரப் புறப்பட் டானல். 91

திருவுடை மன்னர்க் காணிற் றிருமாலைக் கண்டே னென்னும்
கிரமமா யவனுந் தேவி மார்களுங் கிளருங் கண்ணன்
மருவிய கோபி மார்க ளெனமருண் டவர்பின் போக
வருகினி னுறையுஞ் சீட ராங்கிரு வியப்பிற் காளாய். 92

முனிவரி னடிக ளாகு முளரிமென் மலரைத் தத்தஞ்
சென்னிகளிற் புனைந்தெ ழுந்து செங்கரங் குவித்தெம் மைய
தனியுறும் பிரம ஞான மென்றிடுந் தழலின் முற்று
நனிபுணப் படுகை யாலே யோகியாய் நலத்தின் மிக்கான். 93

ஆரண சிரத்தி னூர்ந்தே யடிமையங் கிழைக்கா னென்னுந்
தோரணை மருவி நீயுந் தூவியி னெகின வூர்தி
யேரணி யெருத னாதி யிமையவர் தமக்கு மெட்டா
நாரண னடியின் றொண்டை நனிமறந் தனையோ வென்றார். 94

கேட்டது கிளரு ஞானக் கெடலரும் பெரிய யோகி
மீட்டெழுந் தொக்கு மொக்கு மிழற்றுதற் கரிய தொண்டி
னாட்டமார் நுமக்கவ் வாறு நலமுறு தெனவே மீண்டு
தீட்டரும் பரமன் சீரைத் திகழ்தர விளக்கிப் போந்தார். 95

இன்னண நிகழ வோர்கா லெழின்முனி மனைவி யாரை
நன்னயம் பெருக வீன்ற நலமுறுந் தந்தை காண
மன்னிய வொருவன் றன்னை மனைக்கழைத் தடைய விட்டா
ரன்னவ னதனை யேகி முனிவரர்க் கறிவித் தானால். 96

கண்டதை யவரு முள்ளக் களிப்புடன் றகைமைக் கில்லாம்
புண்டரீ காக்கர் தம்மைப் பொருந்துறுந் துணையாய்க் கூட்டித்
திண்டிற லரிய கற்பிற் றேவியை விடுக்க வன்னார்
கொண்டுபோ யாச்சி யார்தங் குலவுமா ளிகையிற் சேர்த்தே. 97

அடிதொழு தவரை யைய விடையருள் கென்ன வாச்சி
யடிசிலுண் டெழுக வென்ன வவரதற் கியைய வாங்கே
தடிநிகர் சிலகு றும்பர் புரச்சிகை தரித்த தாலே
விடுவென விழித்தன் னாரை மனைப்புறத் திருக்க வைத்தே. 98

நெருநனீ ரிட்டு வைத்த பழையதை யளிக்க நேர்ந்தே
யரிதிதென் றமுது செய்தே யகங்குளிர்ந் தாச்சி தந்த
திருவிடை மணந்து மீண்டு திருமுனி யகத்தை யண்மி
மருமல ரடியி றைஞ்சி மலர்முகத் தெழுந்து நின்றார். 99

யோகியு மலர்மு கத்தை யுற்றறிந் துளத்தில் விஞ்சு
மோகையை யுணர்ந்தி தற்கே காரண மெனவென் றுன்னி
யோகமா நெறியி னுண்மை யுணர்ந்துகந் துனக்கங் கென்ன
வாகருஞ் சிறப்பு நேர்ந்த தெனவவ ரடங்கிச் சொல்லார். 100

மேனிலை யருளு வென்றன் மிகுபுகழ்க் குரவ ரேறே
யானடைந் துய்ந்த பேறு யாரடைந் துலகி னுய்ந்தார்
போனகஞ் செய்த சேடந் தருவரேற் புனித மென்றே
யானவர் விழுமி யோர்முன் னுவந்துள மறைந்த வண்ணம். 101

தண்ணிய புனலின் முன்னாட் டகைபெறப் பெய்து வைத்த
வொண்ணறும் பழைய வல்சி யூறுமன் புடனே யாக்கி
பண்ணிய நியம னத்தாற் பண்புட னருந்தப் பெற்றேன்
விண்ணவ ரமுதும் மீதின் விறலினுக் கிணைவ துண்டே. 102

எனவவ னிறைஞ்சி நிற்க முனிவரு மிதயம் பொங்கி
யனகனே யெம்மை யுய்யக் கொண்டனை யழகா வென்று
பனிமலர்க் கரங்க ளாலே பரிவுட னிறுகப் புல்லிச்
சென்னிமிசைத் தமது பாதம் பொலிவுறச் சேர்த்தி னரால். 103

முழுமதி யெழலு முந்நீர் கிளர்வது கடுப்ப வாங்கே
விழுமிய விவரும் பொங்கி வினையினேன் சிரத்தி னுந்த
மழகுறு மடியாம் பங்க யந்தனை யணியப் பெற்றேன்
விழைவது மினியொன் றுண்டோ விமலவென் றிறைஞ்சி னரால். 104

வேறு.

இச்செயல றிந்தருகி ருந்தவர்க ளிந்த
வுச்சமுறு மாசிரிய சீடரிரு வோரும்
பச்சைமுகின் மாலொடுபி ராட்டியது பண்பே
யிச்சையொடு மேன்றிலகு கின்றனர்க ளென்றே. 105

பொங்கிமுனி பூவடிவ ணங்கியெம தைய
விங்கிவர்த மக்கியக்கொண் டாரெனுமெ ழிற்பேர்
தங்கவருள் செய்திடினி னித்தரையி லாரு
மெங்குமிகு கொண்டியுநெ றிப்படுவ ரென்றார். 106

மாமுனியு மற்றவர்மொ ழிந்ததொலு மென்றே
நாமமது தந்தவரை நன்குறம தித்துத்
தாமரைய ணங்கிறைவன் றன்மையுல கெங்கு
மேமமுற நன்கிலக விழைத்தனரி ருந்தார். 107

அங்குநறு பரியுடிதம் போச்சியமென் றைய
சங்கையற வுணர்ந்தவர்கள் சாற்றுவதின் முன்னு
டங்கியச லத்தசனந் தக்கதென வின்றே
யெங்கருநெ றிக்கியையு மென்றுசில ரோத. 108

உம்பருமு வந்துதொழு மோகமுனி யாபத்
தம்பதரு மத்தரிய தன்மையுண ராதார்
வம்புரைவ ழங்கிவின வன்மறையு ணர்ந்த
நம்பெரிய நல்வழியை யென்புரியு மென்றார். 109

இத்தகையி னத்தகைய ரொழுகுதலு மிந்த
வித்தகமெ லாமவரின் வீழரிய மாமன்
சித்தமுற நன்குசெவி யுற்றுமகிழ் செறியா
வத்தகைந மக்கிலதென் றெண்ணலுமிஃ தானார். 110

ஓர்குடியின் றன்புதல்வ னொருவனுள னாகி
னேர்பெறுமீ ரைந்துதலை நேர்ந்திடினோர் கன்னி
யேர்பெறுமீ ரைம்பதென வின்னறமு ணர்ந்தோ
ரார்கலியி னுடையவ னிக்கணுரை செய்வார். 111

ஆகையினெம் பெண்மணியி னத்திருவ டைந்தே
நாகமுந மக்குநிக ரன்றெனம கிழ்ந்தே
யேகிமரு கன்மனையி ரும்புகழ்ப டைத்த
வாகறிவி னுய்யமுனங் கொண்டவரை யண்டி. 112

ஐயவுண ராதுனத ருந்திறலி ழைத்த
வெய்யபிழை யுண்டதுபொ றுத்தருள்க வேதந்
துய்யவறி வாளரகந் தோன்றிடுவ தென்றும்
பொய்யெனவு ஞானியபு கன்றிடுவ ரன்றோ. 113

என்னவவ ராச்சிகளி னின்னடிவ ணங்கி
நின்னருளி னுனரிய நேர்மைபெரு குற்றேன்
முன்னவவெ னக்கரைய மூதறிவி னன்னார்
மன்னியொரு மைப்படம கிழ்ந்துளமி ருந்தார். 114

வேறு

சிலபக லிவ்வணஞ் செறிய யோகியுங்
குலவுறு குருகையங் காவ லப்பனுக்
கிலகுறு யோகசாத் திரத்தை யேன்றதி
னலமுற நவின்றுபி னடத்திக் காட்டியே. 115

மற்றுயக் கொண்டவர் முதல மாதவர்க்
குற்றநற் றமிழ்மறை யோதி யெங்கணும்
பொற்றவே தாந்தமே பொலிய வாற்றுமா
றிற்றிதென் றெழிலுற விசைத்து மற்றரோ. 116

நந்திருக் குமரனுக் கரிய நன்மக
வுய்ந்திட வுதித்திடு மவற்கு நாமமுஞ்
சுந்தர யமுனையின் றுறைவ னென்றளித்
தந்தமார் மறைரக சியங்கள் யாவையும். 117

புண்டரீ காக்கரே புகட்டற் பாலரா
மண்டரு மறிவுறு யோகத் தற்றினைக்
கண்டருங் குருகையங் காவ லப்பனே
கொண்டிடக் குறிப்பறிந் துரைத்து கென்றரோ. 118

உரைத்தருள் புரிந்துபின் யோகத் தார்ந்தனர்
தரைத்தலை தரிசனர்த் தங்கள் யாவையு
நிரப்பினர் நிகரறு முய்யக் கொண்டவ்
ரிருக்கையி னிகழ்ந்த்வி யம்பு வாமரோ. 119

சேட்டலூர் செண்டலங் காரத் தாசருந்
தீட்டருந் திகழ்புகழ் மணக்கா லும்பியுங்
கூட்டறுங் கொமடவிண் ணகரத் தப்பனுங்
காட்டரும் புண்டரீ காக்க தாசரும். 120

அல்லியங் கேணியி னமர்ந்து வாழ்தருஞ்
சொல்லுறும் பாண்பெரு மாள ரையரு
நல்லுல கப்பெரு மாணங் கையொடு
மெல்லுறு மிவரெலா மிணைந்தங் காங்கரோ. 121

அவ்வுயக் கொண்டன ரடிம ணந்தனர்
திவ்விய ஞானமே தெருண்ட டைந்துற
வொவ்வறு முவர்களின் மணக்கா னம்பியே
கவ்வையின் றீரறு வருட காலமே. 122

பணிவிடை புரிந்தனர் படரும் போழ்தினின்
மணியெனு மாரியர் மனைவி துஞ்சவே
யணிபெறு மனைப்பணி யதுவு மாற்றுறுக்
கணிவிமை யெனநிதங் காத்து வந்தனர். 123

நிகழ்கையி லிவ்வண நிலவு மோர்பக
லுகவொடு மோதன வகைகள் காவிரி
யகமுண வந்நகர்க் கன்னிமா ரெலாஞ்
சிகிகளின் குலமெனத் திரண்டு சென்றனர். 124

தங்குரு புதல்விய ரிருவர் தங்களை
யங்கவ ருடன்கொடு படர வாற்றினைச்
செங்கயல் புரைவிழிச் சிறுமி யார்களும்
பொங்கிய மனத்தராய்ப் புசித்து மீள்கையில். 125

சென்னெறி தவறியே யோர்கா லவ்வழி
தன்னிலா முழுகிய வன்று தாண்டுதற்
குன்னியே திகைத்தவ ணுறுதல் கண்டிவர்
வென்னிடைப் படர்கெனக் கவிழ வீழ்ந்ததில். 126

சிறுமிய ரகன்றதுங் குளிக்கச் சென்றனர்
நறுநுத னங்கைமார் நடந்த செய்தியைக்
குறுகினர் தந்தைபா லுவந்து கூறினர்
பிறகுசென் னம்பியு மீண்டு பெட்புடன். 127

ஆரிய ரடிகளி லங்க மெட்டுடன்
பார்மிடைப் படிதரப் பணியுங் காலவர்
சீருறுந் தமதுதாள் சீடன் சென்னிமே
ரேர்பெற வமைத்தன ரிதுமொ ழிந்தனர். 128

குரவரி னுயர்ந்திடுங் குரவன் யானெனச்
சிரமிசைக் கரமெடுத் தெழுந்துஞ் செப்புவேன்
புரையறும் புகழுறுந் தொண்ட ரூகவே
வரைநிகர் குணத்தநீ வாய்ந்த தன்மையால். 129

இதுவெனக் கெனகுரு வுவந்து முன்னருள்
கதிதரும் வெகுமதி களங்க மற்றதா
மதுநினக் கற்பினீங் களித்தேன் காணென
மதுவழி யருள்சிறக் கணிப்பு மாடினர். 130

நம்பியு நனிமகிழ் தைய நாடொறு
நும்பணி யிழைத்துறுந் நோன்மை யார்பத
வம்புய மடைந்தன னரிய பேறிதற்
கிம்பரு மும்பரு மிணைவ தெங்ஙனே. 131

உபயவே தங்களுக் குறைவு ளாயெனக்
கபயதா னம்புரிந் தளித்த வையனே
விபவமெற் கிதுவென வளம்ப வாரியர்
சுபமுனக் கெனவருள் சுரந்து வந்தனர். 132

---

## ஆளவந்தார் வைபவம்

### 21-வது சருக்கம்

கண்ணுவுயர் குருவின்றிருக் கருணை தனை மணந்தே
னெண்ணுவுன தடிநாண்மல ரிகவாதென்று மிருந்து
நண்ணுநெறி யடியேன்மன நாடாநடு நடுங்கப்
பண்ணுவருள் புரிவாயிது பண்பேங்கின தெழிற்கே. 1

பின்னேயுயக் கொண்டாரெழில் பெருகுந்திரு வரங்கந்
தன்னேமணந் துறைபோழ்தினிற் றமதாரிய மணியா
முன்னேயுணர் முனிநாதரு மொழியும்பணி புரியற்
கென்னேபடைத் திலனேயென விதயந்தளர் வெய்தி. 2

குமுதாக்களி னஞ்சந்தனிற் குதலத்தெழுந் தொளிரு
மமுதேயெனு மணக்கானம்பி தமையண்டையி னழையா
எமதாரியர் பணியாற்றிடற் கின்றேமுது மையினே
யுமதாடலி னதுநேர்பெற வுனினுமென லோடும். 3

திருநம்பியு மவர்தாடொழு தெனையாண்டரு டேவே
யொருநாதமு னிகள்பேரனுக் கடியேன்வழி யுஞற்றும்
பெருநன்மைகள் பெருகுந்நம தருநன்மைக ளலவோ
வருள்கொண்டஃ தடியேற்கருள் கென்றங்கரங் குவித்தான். 4

கோளாரவ ரதுகொண்டுளங் குளிர்கொண்டுறை தந்தார்
வாளாரறி வினர்நம்பியும் வனமாலியின் விறலைத்
தாளானனி தரணித்தலை முழுதுந்தயங் குறவே
கேளாவனை வருமுய்ந்திடக் கிளர்ந்தேகிளர்ந் தனரால். 5

பின்னேரெழி லாடித்திங்கள் பெருகுத்திரா டத்திற்
கொன்னுருமீச் சுரமாமுனி குளிரும்வகை யொருசேய்
மன்னேயுதித் தொளிர்கின்றனன் மணக்கானம்பி முனியே
யென்னுவொரு திருவ்வணவ ரெழுந்தன்னவர்க் கிசைத்தார். 6

சுருதிக்கிடை சுருதிக்கிணை யெனுமம்மொழி யுறலு
மருகிக்குழ வியினையணி னத்தங்கொடு சரத
கருமத்தொடு நனியாவையுங் கருதிப்புரி வித்தே
மருவுற்றிடு மெழுனைத்துறை வன்னென்பெயர் வைத்தார். 7

அந்தத்திரு மகனைந்தரு வடியின்முளைத் தோங்குஞ்
சந்தச்சிறு குழவிக்கிணை சார்ந்தேவளர் தரலும்
பிந்தித்தகும் வயதின்மறை பயிலும்படி பெற்றோர்
தந்துப்புனை தருகன்மமுந் தகவிற்புனை தரவே. 8

மகியுய்ந்திட வுதிதந்திடு மணக்கானம்பி மற்று
மகியிந்திர னெனநுண்ணிய வறிவப்புதல் வற்கு
நகுசங்கொடு திகிரிப்பொறி யிருதோளினு நாட்டி
மிகுமந்திர ராசந்தனை மேவச்செவி சேர்த்தார். 9

வேறு

பின்னங் ககலச் சிலவைகல் பெருகு யோகந்
தன்னின் னெழுந்த முனிநாதருந் தம்புதல்வன்
மன்னும் மகனை மகிழ்கொண்டு சிறக்கணித்தே
மின்னுங்குரவன் மிளிர்சேயு மவன்றன் சேயும். 10

தாங்கற்ற கல்விகளை யீந்திடத் தக்கா ரென்றும்
பாங்குற்ற ஞானத் துயர்ந்தோர்களும் பண்பினென்றற
காங்கொற்ற வாசிரிய ராகுவ ரென்று மெல்லா
மோங்குற்ற நீதிநெறி தன்னி னுரைத் தொளிர்ந்தார். 11

ஆங்குற்ற காலை யொருவைகறை யாட நன்னீர்
வாங்குற்ற தீரத் தடமேகி மனைக்கு மீளப்
பாங்குற்ற தம்பொற் பதுமைக்கிணை பாவைமார்க
ளோங்குற்ற தாதையுயர் பொற்பதம் போற்றிநின்றே. 12

அம்பொற் கரத்தி னமர்வில்லுட னுட னண்ணும்
வம்புற்ற குஞ்சி யிருவில்லியர் வல்லி யொன்றி
னம்பிப்பொ ருந்துங் குரங் கொன்றுட னுடியைய
னெங்குப்ப டார்ந்த தெனவேகிய தீங்கிசைத்தேம். 13

மற்றந்த வெய்ய மதுகைக் கிடமான மைந்தர்
பொற்றந்தை நுந்தம் பொருக்கென்றெமை நண்ணும் வண்ணஞ்
சொற்றந்து காண்மி னெனவின்புறச் சொல்லி யாங்கே
குற்றந்த விர்க்குந் திசை தென்புறங் கொண்டு சென்றார். 14

என்றே யவர்க ளிசைத்திட்டதை யேன்ற வையன்
பொன்றூ யுமுள்ளம் புழுங்கிப்புகு தந்த சேயார்
மின்றூ யயில்வேற் றயர்தன்றிரு மேவுமக்க
ளன்றே சனகி யனுமானுட னுளவந்தார். 15

பண்டே யிழைத்த தவமுண்டதிற் பார்த் துகந்தீர்
கண்டே பிழைக்க வினையேனலங் கண்டதின்றே
தண்டேன் றளிக்குங் குழலீரென நைந்து தாழார்
கொண்டே நமன்றன் றிசையின்றடங் கூர்ந்து சென்றார். 16

காகுத்த வெற்கிங் கருள்செய்திடு காண நின்னைப்
பாகுற்ற சொல்லி யுடனென்று பரிந் திரங்கி
யேகுற்ற காலை யெதிர்கங்கை காள் சோழனூரிற்
போகிக்கு ழைந்திங் கிருவில்லியர் பேர்யதுண்டே. 17

என்றங்கெ திர்ந்த வரையெய்தி வினையவெல்லை
கொன்றங்கு மிந்த வழிச்சென்றன ரென்றுகூறச்
சென்றங்கு பின்னர் செறிதீப்பிழம் பென்னவோங்கு
மின்றங்கு தந்த நரசிங்கனின் மேனிகண்டார். 18

முன்னங் தமாலை முருகார்தொடைப் பீதகன்சேய்
மன்னுந் தகவிற் றெழுதென்ன வணங்கிமற்றுங்
கன்னங் கரிய மணிமானு மிராம னென்றன்
முன்னங் குறுக லிலையென்ன நன்மூர்ச்சை யானார். 19

எற்றேடி வந்து மிரவிக்குலத் தெந்தைதன்னை
யெற்றே யிருகண் கனிகூர்தர வெய்துகில்லேன்
பெற்றே கரத்தி லமிழ்திங்ஙனம் பெய்திலேன்வா
யற்றே னருந்தனமு மென்றகஞ் சாம்பிவீழ்ந்தார். 20

தாயைப் பிழைத்த கொடிதன்னையுந் தாங்குமையன்
வேயைப் பழித்து விளங்கும்புய மானும் பின்னு
நேயத் தருகு நிலவத்தணைப் பின்றி நின்று
சேயர்க் கெதிர்வந் தனுமானுடன் சேவைதந்தான். 21

ஆரா வமுதம் பருகும்மவர் மானுமன்னர்
காரா ரெழிலன் கருணைக்கட லாடிமற்றுஞ்
சீரா ரிவன்ற னழகுண்டவென் செய்யகண்கள்
பாரா வினியிங் கெவையேனும் பரிவினென்றே. 22

வீறு ரவன் றுரகநாமம் விளம்புவாயி
ஞேறு விறங்காத் திருநாடு மலங்கரித்தார்
பேறாக முந்நூற் றெருநாற்பதும் பெற்றவரா
ளேறாக விங்கெம் மெழிஞத முனிகளன்றே. 23

வேறு

குருகையங் காவ லப்பனே முதலோர்
கொடுந்துய ருழந்திதைக் குறியா
விருகணீர் வார வீச்சுர முனியை
யிரங்கலீ ரெனமனந் தேற்றிப்
பிரமமே தத்துத் தீக்கடன் முழுதும்
பிழைபடா தவர்கரத் தியற்றி
மருமலர்ப் படப்பை வீரநா ராய
ணன்புர மெழுந்தனர் மற்றும். 24

ஆங்கருஞ் சரம கைங்கரி யங்க
ளளவறும் பொருட்செல வயரா
வோங்கிரு மறைமந் திரப்புரை யனுகா
தும்பரின் விழவென வுஞற்றிப்
பாங்குட னெவரு மகன்றபின் குருகைக்
காவலப்ப னும்முனம் பகர்ந்த
நீங்கரும் குருவி னியமனப் படியோ
கந்தனை மணந்தனர் நின்றார். 25

உரைப்பரு முய்யக் கொண்டவர் முனிக
ளுயர்பத மிடைந்ததை யுணராக்
கரைப்புறு மனத்திற் கலங்கினர் தேறிச்
சுணப்பரி பாலனம் புரியா
விரைத்தெழுங் கரிய கடல்வணன் பகட்டை
யெழின்மறை முறைதரு வழியிற்
பரப்புற மூலக முணர்ந்துயும் வண்ணம்
பகர்ந்தன ரொளிர்ந்தனர் பரிவின். 26

இன்னண மிருப்ப விவரொரு பகலி
னெழிற்கண மங்கையாண் டானும்
பன்னரு மறைசேர் மந்திர செபஞ்செய்
துறைகையின் முகத்தெதிர் பரிய

மன்னிய சினத்தீ ரெகினம ரிழைக்க
வவற்றினுக் குரியபுன் மறவர்
துன்னிய பிரகி ருதிபுணர்ப் பதினே
தொலேவறுஞ் சமர்தொடங் கினரால். 27

ஒருவரோ டொருவ ருரத்தினி லிடித்து
முறுப்பெலா மொன்ருெடொன் றுறுத்தக்
கரிகளோ ரிரண்டிற் கனற்பொறி சிதறக்
கண்களிற் பொருதுபின் மடியப்
பரிவுடன் கண்டப் பகுதியின் புணர்ப்பிற்
குரியனப் பைந்துழாய் முகிலே
தெரிதலி லவன்றன் சேடரா நமக்கத்
தெறுநகை புரிவதுந் தீதே. 28

பிறப்பினுக் கொருவா வித்தெனு மதனிற்
பெருகுறும் விழைவினே யறுத்தே
யிறப்பெதிர் விகந்த வவன்பதத் தெமது
பரந்தனே யிறுத்தபி னென்று
மறப்பினும் புரியே மெனத்துணிந் துணவு
நித்திய கருமமும் வரைந்தே
வெறித்துள வெழிலி வண்ணனே யகத்து
ணிறுத்திய நினேவுடன் விளங்கி. 29

அப்பரஞ் சோதி யரும்பத மதன்பி
னடைந்தன ரெனச்செவி யுணரா
விப்பெரும் புவியி லுணவுறக் குளர்க்கே
சந்தியே முதலவா மெவையுந்
தப்பற விழைத்த றகுமென வருளித்
திருக்கண மங்கையாண் டானம்
மொப்பறு நாத முனியினு முயர்ந்தா
ரெனவுவந் துயர்பதம் புக்கார். 30

பின்மணக் கானம் பியுமுளம் வெம்பிப்
பெருந்தன மிழந்தன னுறழப்
பொன்மலர்க் கிணேயா மாரியர்க் ககலம்.
பொலிதரச் சரமகைங் கரியந்

தொன்மறை முறையிற் றேமற வியற்றி
யடியர்தந் தொகுதியிற் குழுமி
யுண்மைசே ராா ணத்துறு பொருளை
யுலகெலாம் பரப்பின ரொளிர்ந்தார். 31

வேறு

மற்றினி வருக்கை வாழை மாங்கனி யிரத மூறிப்
பொற்றநெல் விளையும் வீர நாரண புரத்து வாழுங்
கற்றவர் களிக்கு நாத முனிகளின் பேரன் செம்மை
யிற்றிதென் றெவரு முள்ளங் குளிர்ப்புற வியம்பு கிற்பாம். 32

ஒருமுறை புகல யாவு முய்த்துணர் கிற்கு மிந்தத்
திருவனர் திறமு மென்னென் றெவர்களுந் திகைக்க வந்தக்
கருவிலே திரும ணந்த யமுனையந் துறைவர் கற்று
விரிதரு மறைமு னெல்லாம் விளம்பின ரென்ப மாதோ. 33

தந்தையா ருலக மிந்தத் தனயனை யுயிர்க்கச் செய்த
தெந்தமா தவமோ வென்ன விலகுறும் புதல்வற் கேன்ற
வைந்தலங் காரம் வாய்ந்த வாயிழை மணியே யாமோர்
செந்துவ ரிதழி னாளை மணந்திடச் செய்து மன்னோ. 34

கரிமருப் பொசித்த கண்ணன் கழலிணை கலந்தங் காரப்
பிரிவினி லுழந்து மற்றும் பிரமமே தமெனத் தந்தைக்
கெரிதழற் கரும முற்றி யேவரு முவக்கும் வண்ணஞ்
சரமகைங் கரிய மைந்தர் சதுருறப் புரிந்தா ரன்றே. 35

யாமுனு ரியரிவ் வாறே யாவையு முடித்துப் பின்னர்
வாமமே கலையாள் வாழ்க்கைத் துணையொடு வரைவி லின்பத்
தேமமோ டில்கி யீறி லிருங்கலை யனைத்துந் தேர்ந்தா
ரேமபா டியமா பட்ட ரெனுமறை வலவ ரோடும். 36

இன்னண நிகழு நாளி லெறும்ழ்வலித் தடந்தோண் மன்னர்
மன்னவன் றனக்கு நண்பாய் மகிழ்வனே ராக்கி யாழ்வா
னென்னுமோ ரபிதா னத்துப் புரோ கிதன் கலைஞ ரெல்லாந்
தன்னைவென் றிடுதல் காறுந் தனக்கிறை தருக வென்றே. 37

நிண்ணயித் தவனி யெங்கு நிகழ்த்தினன் புகுது மெல்லை
துண்ணென வவன்றன் றூத னொருவனிப் பட்டர் தம்பால்
நண்ணினன் றருக வென்று திறைதனை முறியு நல்க
வுண்ணனி நலிவு கொண்டா ருக்கமுந் துறந்து மன்னோ. 38

ஆயபோ ததனை யன்னு ரறிந்தகங் கொதித்துத் தந்த
தீயதா முறியை வாங்கிச் சிதைவுறக் கிழித்தெ றிந்து
சேயவர் புகழு நல்லீச் சுரமுனிச் சிறுவர் சீட்டைக்
காய்தரு சினத்திற் போழ்ந்தா ரென்றுபோய்க் கழறு கென்ருர். 39

என்னவாங் கேவ லாளன் மீண்டெழுந் தாக்கி யாழ்வான்
றன்னுழை யணுகி யையன் றருமொழி விளம்ப லோடு
மன்னவ னிறும்பூ தெய்தி யவர்வெறுங் கலைஞ ரேயோ
மன்னிய கவியோ கேண்மி னெனவிடுத் திசைத்தான் மற்றும். 40

கண்டது கவியுங் கற்ற கலைஞரே யல்லோம் வாத
மிண்டராங் கரிகண் மத்த கம்பிளந் தடக்கு மேன்மை
கொண்டவெஞ் சீய மாவே மென்றவர் முறியிற் கோட்டி
யண்டரும் புகழும் வண்ண மடலுற விடுத்தா ரன்றே. 41

அம்முறி யவனுங் காணு வெகுளியும் வியப்பும் பொங்கத்
தெம்முனை யடக்கும் வைவேற் றிண்டிற லிறைவற் கோத
நம்மெதிர் விரைந்து வம்மி னெனவவ னடத்து மாணை
வெம்மையின் முடங்க லொன்று விகத்தகர்க் கெழுதி விட்டான். 42

செருக்குட னெழுதி விட்ட சீட்டினை யுணர்ந்து சேயார்
திருக்கிளர் முறுவல் பூத்துத் தெரிவிலா னிவனென் ருரும்
வெருக்கொள வதனை வாங்கி விரனுதி கொடுகி ழித்துப்
பொருக் கெனக் கொணர்ந்தோன் மீது போகட்டுப் போதி யென்ருர். 43

போயவ னிதனை வெம்பப் புரவலற் குரைக்க வன்னாள்
காயெரி சினிமீ தூரக் கடுகடுத் திடுதல் காணுச்
சேயரி பரந்த கண்ணு ளவன் மனைக் கிழத்தி செய்ய
வாய்மலர்க் கரங்கள் கூப்பி யருகணைந் தறைத லானாள். 44

படியெலா நெறிகோ டாது பண்பினிற் புரக்கு மன்னன்
றடவரைப் புயத்து நாப்பண் டங்குவ தெனினு மன்னுன்
மிடலெலாம் பயின்ற வேத மிகுபுகழ்க் கவிஞர் நாவின்
அடலுறு முனையிற் றங்கு மென்றிடு முலக மம்மா. 45

தம்மைமுற் கொணர முன்னுந் தரணிப ரவர்பா னேயஞ்
செம்மையிற் புரிவ ரைய வாதலிற் சினந்த விர்ந்தே
யம்மையி னவரை நின்ற னவைக்களத் தழைத்தி யென்றுண்
மும்மையி னுலகும் விற்குங் கற்பினின் முதிய ளன்றே. 46

வாமமே கலையி னுளி னெறிமொழி மன்றையின் வெய்ய
தாமல கையும் விண்டோ டவண னுந் தெருண்டு தந்தி
காமரு சிவிகை வாசி யாதிகள் கடிது விட்டான்
ஏமுற வுலகம் வந்த வெழுனையந் துறைவர் தம்பால். 47

காவலன் பரிவா ரத்தைக் கண்டதுஞ் சிவிகை யூர்ந்து
பூவனை யுத்தி யார்ப்பு மடங்குறப் புடைக்கும் பல்ல
வோவறு பறையி னேதை யுலகெலாம் போர்ப்ப முத்த
மேவிய கவிகை நீழற் பொற்பிடிக் கவிரி வீச. 48

குணகடல் குமரி மேலைக் குரைகட லிமைய நாப்பண்
பணிபதி சுமக்கும் பார்மே லிரண்டுமீ மாஞ்சை யெம்போ
லணிபெற வுணர்ந்தோ ராரு மறிகிலே மெனவே பாங்கர்
தணிவறப் புகழ்ந்து பாடத் தரணிப னவையுட் புக்கார். 49

தன்செவி தழலும் பாயி ரந்தனை நோன னந்த
மன்புரோ கிதனு மன்னன் மதிமுகங் குறித்து வாதந்
துன்புற விழைத்தே யிந்தத் துடுக்கனை யடக்க வல்லே
னன்புட னிதற்கு நின்ற னுணையும் பிறக்க வென்றான். 50

கொற்றவன் யாமு னேயர்க் கன்னது குளிர்ந் துரைக்க
மற்றவ ரிதனுக் குற்ற நடுநிலை யுடையார் வைக
லுற்றதென் றருள வன்னு ளெண்குணத் தறிஞர் பல்லோர்
பெற்றதன் சவையிற் சான்றாய்ப் பொருந்துற விழைத்திட் டானல். 51

பொழுததி லிறைவன் பன்னி புரவலற் றொழுது கேண்மோ
பழுதறு சைவ வைண வந்தனிற் பரிய வாதங்
கெழுதகு முனக்கு மெற்குங் கிளர்ந்ததி லடியாண் முன்ன
மெழுதரு புகழா யெண்ணி யிழைத்திடு சபதந் தன்னை. 52

நிறைவுறப் புரிய வாதி நின்மலன் கருணை தன்னு
லறைதரு தகைய ராய யாமுன ரியரும் போந்தார்
கறைகெழு கதிர்வேற் கையாய் வென்றவர் விழுந்தோர் தம்பான்
முறைமையிற் புரித லாய தெதுவது மொழிக வென்றார். 53

கேட்டது முறுவல் பூத்துக் கிளிமொழி வயங்கொண் டோரென்
பேட்டுட னெகினந் துஞ்சு முண்டகம் பெருகும் பண்ணை
நாட்டினி லொருயி லாள நவில்பணி யவர்க்கி ரிந்தோர்
வாட்டமில் வண்ணஞ் செய்வ ரென்றனன் வழங்குங் கையான். 54

இவ்வரை யறையை வள்ள லவைக்களத் தியம்பி யாரு
மவ்வயி னிருந்த பின்ன ரணிமணி முறுவ லாளி
னெவ்வகை மணியு மின்னு மிருக்கையி னிருந்து வாதஞ்
செவ்விதிற் புரியும் போருஞ் செய்வுறத் துவக்கு கென்றான். 55

வேறு

மன்பு ரோகிதன் மற்றவர் மதிமுகங் குறியா
முன்பு நீயுள திலதென மொழிகுவன் பிறழப்
பின்பு நான்வயம் பெறும்வணம் பேசுவ லென்னு
வன்பு மீங்குளார் வழங்குவர் புகலுதி யென்றான். 56

செய்கை வல்லவர் செருக்கொடு முற்படக் கிளவார்
பொய்கை வல்லநீ பொறுத்தலிற் கண்ணியுட் புகுவாய்
மெய்கை வல்லயான் மிழற்றுவன் மும்மொழி யிவற்றி
னுய்கை வல்லையே லுரைத்தெதி ருய்குவை யுரவோய். 57

இந்த மன்னவற் கியைந்திடுந் தேவியின் கற்பின்
முந்தி யுள்ளவ ளிறைவனு முதிர்திரைக் கடல்சூ
ழுந்த வையக மளித்திடு மவனிபர்க் கிறைவன்
றந்த தாயுனை மலடியு மல்லள்சாற் றுதியால். 58

மும்மை யாயவிவ் வுசாவினுக் கெதிருரை மொழியா
னம்ம வாய்புதைத் தசைவுறு திருந்துசற் றதன்பின்
வெம்மை யோடினி விரிதரு நூல்வழக் கிடுவேஞ்
செம்மை யுண்டெனிற் றெரிந்தெதி ரறைகெனச் செப்பும். 59

அத்து வைதிது வைதிகண் மதந்தனை யடக்க
மித்தி யைபிர பஞ்சமு மிதனையே மருண்டு
சுத்தி வெண்பொனிற் சொலிப்பதென் றுணர்வது கடுப்பப்
பித்தின் மாறுறப் பேசுவர் சிலரெனப் பகர்ந்தான். 60

நன்று நுதுநீ நவில்வது பொய்யெனி னுலகம்
ஒன்றி யூடுறு மதனுழை யுரைத்தமித் தியையும்
பின்றொ லைந்திடின் மித்தியை பிறங்குவ தெதுவோ
மன்ற மின்னிடும் பொருள்களை யெங்ஙன மறைப்பாய். 61

ஊள்ள தொன்றினை வேறென வுணர்குதி யென்று
யுள்ள தென்குவை யில்லதை யெனமறுத் துரைப்பாய்
பிள்ளை யொன்றுணர் விலதெனப் பேசினின் சமயங்
கொள்ள லெவ்வணங் குலவுவ திலதெனுங் குணத்தோய். 62

பேத மின்றெலா மொன்றெனப் பிறழ்தர மொழிவாய்
பாதி யுண்டறுப் புளமருப் புடையதோர் பசுமற்
றேது மின்றியே முண்டமா யிலகுமொன் றெல்லாம்
போத வொன்றுள திவையெலாம் பொருந்து மென் றெனலே. 63

என்ன வின்னமும் பலபல வாதம ரிழையா
வன்னவன் செருக் கடங்குற வரனையன் றுயிர்த்தோன்
மன்னு நாபியந் தாமரை மருவிய மாலே
பன்னு மாரணப் பொருளெனப் பனுவலி னிறுவி. 64

யாமு னரியர் விளங்கிட யாவரும் புகலா
னேமு ளத்துட னவனுற நுண்ணறி வுடையார்
தாம வாகையீச் சுரமுனி தனயரே புனைந்தார்
வாம மாயென வழங்கின ரரசவை மகிழ. 65

துப்பி னேரிதழ்த் துடியிடை யரசியும் பூரித்
தப்ப னேயெமை யாளவந் தீரென வணக்க
விப்பெ ரும்புவிக் கிறைவனு மிவர்க்கெழி னுமஞ்
செப்பு கென்றினி யாளவந் தாரெனச் செப்பி. 66

பன்னி யாயதன் றிருவரங் கத்தமை பகர்ந்த
வண்ண மேயுவர்க் கருத்தநா டுவந்துடன் வழங்கிப்
பொன்னின் மாமுடி புனைதலும் பூமழை யமரர்
மன்னு மாறுபெய் தார்த்தனர் முரசவண் மாதோ. 67

ஒட்ட முன்னைய துரைப்படி யாக்கியாழ் வானை
வட்ட வெண்குடை வாகுச னுளவந் தார்பா
லிட்ட விண்பணி யிழைக்கென விசைத்தனு மவரு
மிட்ட மின்றுமூத் தவன்செய லெனமறுத் திட்டார். 68

பாவ லாளருங் காவல ராகினர் பலரு
மாவ லாகியின் பயின்றனர் புகழ்தர நெறியின்
மேவ லாளரு மடங்குற மேதினி புரந்தே
யேவ லாளரு மிதங்கொடு மகிழ்வண மிருந்தார். 69

வேறு

வடமீனும் வணங்குறுகற் பரசியெனும்
பன்னியொடு வரைவி லின்ப
நெடுநாளுண் டுறைபொழுது சொட்டைநம்பி
தெய்வத்துக் கரசு நம்பி

திடமாருந் திருவரங்கப் பெருமாளரையர்
பிள்ளை யரசு நம்பி
யுடனுமிவ் வுத்தமர்கள் புத்திரரா
யுதித்திட்டா ருவர்க்கு மன்னே. 70

ஈங்கிவரு மொழுகுகையி லிவையடையச்
செவியுற்ற மணக்கா னம்பி
யோங்கியுய ருவ்கையனிவ் வுத்தமரைக்
கண்ணுறவே நசைந்து போந்து
தூங்குமுகிற் புரிசைவளை மந்திரவா
யிலினமனுந் துணுக்க மெய்த
நீங்கரிய காவல்புரி மறவர்களைக்
கண்டுலையா நெஞ்ச முட்கி. 71

பன்னுளங் குழன்றெருகாற் பாசகனோர்
வேதியனை யணுகிப் பையக்
கொன்னரு நும்மிறைவர் கூர்நசையிற்
புசிப்பதெது கூறு யென்ன
வன்னுனின் றாதளையே யவரயில்வ
ருத்தியினென் றறைய நம்பி
பின்னரு மதைக்கொணரா வவன்கையிற்
பிரியமுடன் பெய்து வந்தார். 72

ஓராறு மதியவ்வா றெருழுகுகையி
லொருபயனு மிலதா யுள்ளந்
தீராத சங்கையுட னவர்தியங்கித்
தினமொன்றில் வாளா நிற்க
நீராரந் நின்மலரு மித்தினமே
னவ்வடகு படைத்த லின்றென்
றேராக வினவுகையின் மானசிக
னிருகைகுவித் திறைஞ்சி நின்றே. 73

அறிவானும் வயதானு முதிர்ந்திடுமோ
ரந்தணர்வந் ததனைத் தந்தும்
வறிதாகாத் தரிசனக்கு வைகல்பல
காத்தனரிவ் வைகல் காணே

னறியேனம் மூலமென வதிசயித்துப்
போந்தவுட னவரைத் தங்கண்
முறையானே படர்தரநீ யழைத்தடைக
வெனமொழிந்தார் முழுதுந் தேர்ந்தார். 74

வேறு

மறுபகன் மடைத்தொழின் மன்ன னம்பியை
யிறையவ ரிடையழைத் தேக வன்னவர்
நறியபொன் னிருக்கையி லிருத்தி நற்பதஞ்
செறிதரச் சிரந்தனிற் றொழுதெ ழுந்தரோ. 75

முகநக வின்மொழி பகர்ந்து மூவருட்
பகாரு முயிர்களைப் படைக்கு மூர்த்திபோ
னகுதரு நீவிரிங் கெழுந்த நன்மையைப்
புகறரத் திருவுளம் பொருந்து கென்றனர். 76

எனவவ ராளவந் தாரி னின்முக
நனிமகிழ் கொடுகுறித் தைய நாமொரு
தினையெனுங் கொளற்கிவண் விழைதல் செய்கிலே
முனமும தரியமு தாதை மூப்பினில். 77

கிடைப்பரு நிதியமொன் றரிய கேண்மையாற்
படைத்ததை யெமதிடம் பரிந்து வைத்தன
ரடைத்தது செழிக்கநீ ரறியக் காட்டுதுங்
கடைத்தலை கரித்திரள் பிளிறும் பெற்றியீர். 78

சிலபக லதற்கியாஞ் சென்று நும்முகம்
பலரறி யாவணம் படர்தல் வேண ம்மன்
றலகறு முணர்வின ரறைய வன்னரு
மிலகவிங் குளப்படி யெழுக வென்றனர். 79

அன்றுதொட் டவருழை யெழுந்து நம்பியுங்
குன்றுதொட் டெடுத்துமுற் கோவைக் காத்தமா
னன்று தொட் டருளிய கீதை நாடொறுந்
தொன்றுதொட் டுளபொரு டோன்றச் செப்பினர். 80

மூவறு பகலதை முழுது மோதவே
யாவலு மதனிடை யதிக ரித்திடத்
தேவரு மறிவருந் தெரிய வப்பொருண்
மேவர விழிவிர கருளு கென்றனர். 81

அவருறு மருத்தியை யறிந்து நம்பியு
மெவர்களு மறிவுறு திராசி யந்தனி
னவையறுஞ் சரமசு லோக நண்ணுற
வுவகையிற் பொருளொடு முதவி மற்றரோ. 82

பரமபு ருடார்த்தமாங் கைங்க ரியமீங்
குரம்படு ப்ரபத்தியா முபாயங் கொண்டுளந்
திரம்படப் பரவினத் திரும ணாளனு
நிரம்பிடுங் கருணையி னேரு மென்றனர். 83

என்னலுஞ் செந்நெலுக் கேறப் பானித
மின்னறுந் தலைநித மிறங்கு மாறவர்
பொன்னுளம் ப்ரபத்தியுட் புகப்பு கப்பரன்
றன்னுழை வணக்கமுந் தலையெ டுத்தரோ. 84

நம்பியை யதன்முனே நணுகு மாரிய
ரெம்பிறப் பறுவிவ ணெழுந்து ளாரெனத்
தம்பொரு வறுமுளத் துணர்ந்து தன்னமும்
வெம்புமில் வாழ்க்கையில் விழைத லின்றியே. 85

ஒளிர்குவ துணர்ந்தன ருவந்து நம்பியு
மளியொடு மவரொடு மந்த கன்றம
ருளம்வெரு வுறுங்கணி னுற்று நோக்கவு
மளகுறு மரங்கமா நகர நண்ணினர். 86

நண்ணியங் கமரர்க ளுளுந் தாழிடாழும்
புண்ணிய விரவியங் குலத்துப் பூபர்முன்
பண்ணிய பூசையெம் பரனைக் காட்டிநங்
கண்ணிய மரபினர் படைத்த மாநிதி. 87

இதுவென விசைத்தனு மெழிலி மேனியை
மதுவழி துளவவண் டாரின் மன்னுவ
ததிசயித் தடிமுதன் முடியி னெல்லையாய்
முதமொடு திறந்துகண் முழுதுங் கண்டவர். 88

விழிவழி யொழுகுநீ ரருவி மெய்யினை
முழுமையு மூடவீண் கழிந்த நாளெலாந்
தொழுதன னரவணைத் துலங்கு சோதியின்
றெழுதரு நகையுட னிருகை கூப்பியே. 89

பருகிடப் பருகிடத் தெவிட்டு றுதவிண்
சுரர்களுங் கண்டிலாச் சுதைய ருந்துமா
றுருகிட வுளமுமவ் வனுப வந்தனை
யருகணைந் திரும்பொழு தயின்று மற்றரோ. 90

தந்திருப் புதல்வரீ ரிருவர் தம்மையுஞ்
சுந்தரத் தமகுரு துணைப்ப தங்களி
லுய்ந்துமற் றுயர்தர வுளுற்றி னூரடும்
பந்தமற் றவரெல்லாம் பரவும் பண்பினர். 91

ஆயபின் பாரிய ரருளிச் செய்தசெம்
பாயிரங் கொண்டரங் கத்திற் பாம்பணை
மேயவன் மிளிர்பத மலர்க்கட் டம்பரந்
தோய்தரச் சமர்ப்பணம் புரிந்து தூய்மையின். 92

இத்திருப் பொருளுணர்ந் தெங்கு முய்ந்திடச்
சித்திரத் திருப்பிர பதனஞ் செய்ததை
யொத்தநற் சதுச்சுலோ கியெனு மொன்றுநூல்
வித்தகத் திணையற விளம்பி மற்றரோ. 93

தோத்திர விரத்தின மெனுமோர் தூயநூல்
பார்த்தனின் வலவனின் பதத்திற் சேர்தலை
யேத்திட வுலகெலா மியற்றி யெய்தினர்
நீத்திரண் டாவதை நான்கி னின்றதை. 94

வேறு

அக்கா வைரடியி லாளவந்தா ராழ்வாரு
மிக்கார் விழைகோட்டி யூர்பெரிய நம்பிகளு
மொக்காப் பெரியதிரு மலைநம்பி யுத்தமருந்
திக்கா மடையவர்க்குத் திருமாலை யாண்டானும். 95

வையம் புகழ்தெய்வ வாரியாண் டானுடனே
யைய ருயர்வான மாமலையீ சாண்டாரும்
மெய்யன் றிருமோகூ ரப்பனொடு நின்றானுந்
தெய்வப் பெருமா டிருக்குருகூர் தாசனுடன். 96

பின்மாற னேரிநம்பி பெருமகனின் காதலியாந்
தென்மாத் திருவரங்கத் தம்மைதிருக் கச்சிநம்பி
நன்மா லிருஞ்சோலை தாசருமிந் நந்நான்காம்
மன்மா மகிமையவர் மன்னினர்க ளுய்வண்ணம். 97

ஆங்குமணக் கானம்பி யாளவந்தா ரின்பகட்டி
ஞேங்கு முவகையுடன் கண்டவரி ஞெண்முகத்தைத்
தேங்கு புகழ்க்குருகைக் காவலப்பன் றேத்துமக்குப்
பாங்கினரு ளப்பகர்ந்தார் பாட்டனெரி ராசியமே. 98

என்றே யிசைத்தருள விவரவரின் றுடொழுது
நன்றே யென்னையாள நாளருளி யாட்கொள்ளா
மின்றே யினடையைவர் மெல்லியலின் றுயர்களைந்த
பொன்றேயும் புட்கொடியான் றிருமந்தி ரம்புகன்று. 99

மற்றுமுள வருத்த மெல்லா மகிழ்ந்தளித்துச்
சிற்றறிவி னேனுய்யச் செய்தருணும் மாணையினைப்
பெற்று வளைகுவதே பேறடியேற் கென்றேத்தி
முற்றுந்தந் தரிசனமே மொய்த்திலகச் செய்துறைந்தார். 100

மாமணக்கா னம்பியடி மன்னினர்க ளாளவந்தார்
தீமையகல் சொட்டைநம்பி தெய்வத்துக் கரசுநம்பி
யாமத்தி ருவரங்கப் பெருமாள ரையருடன்
காமர்சிறு பிள்ளையுடை யாரிங்கச் சோளாண்டான். 101

பிள்ளை யரசுநம்பி பின்னே ரரசுநம்பி
வள்ள லிரும்பகடார் வங்கிபுரத் தாச்சியெனு
மெள்ள லறுமொன்ப தின்மரின்னோர் வியனுலகம்
விள்ளவகம் பேரின்பம் வீறக் கிளர்ந்தனரால். 102

ஆளவந்தார் சேயடிக்க ணவ்வொன்பா னுத்தமருட்
கோளமர்ந்த திருவரங்கப் பெருமா ளரையர்மிக
நீளவந்த பத்தியொடங் கின்மலனுர் நன்குதவும்
வாளமர்ந்து வாழ்பொருள்க ளெல்லாம் வகித்தருளி. 103

ஓவாத வைகளையே சிந்தனைசெய் துற்றவர்கண்
மேவாவு யிர்பிழைக்க மிழற்றுவதுங் கண்டுகந்து
தாவாப்பெ ருங்குணத்தோர் தந்தனரோர் பேரவர்க்கே
யாவாவென் றுளவந்தா ராழ்வா ரெனநயந்தே. 104

ஆன்றோ ரறைதருமவ் வாளவந்தார் மற்றுமவர்
தேன்றோ யியலிசையிற் றிருவாய் மொழிபாடும்
வான்றோய் வகையுணர்ந்து வண்மைபெறு மூதாதை
ஆன்றோர்ந் தருள்புரிந்த வாணை யதுவழியே. 105

கீழை யகத்தாழ்வா னென்னக் கிளரரங்கற்
காழி நிகர்பிரபந் தங்களைநீ ராமாறே
வாழும் வகையுணர்ந்து பாடுகென வார்கருணை
வீழும் படியவர்மேல் வீழ்ந்து கடைக்கணித்தார். 106

அன்பா யவர்பாவ ராக மொடுதாள
மின்பா யியைந்தமுத மேன்றோர் செவிபருகப்
பொன்பா யுரவரங்கன் பொன்முடியுங் கண்டசைப்ப
மின்பாய் முகிலெனவே மேன்மையுறப் பாடினால். 107

அம்மா வெனவவரு மார்வ மொடுபுகழா
விம்மா வுணர்வினர்க்கிங் கேன்ற திருநாமஞ்
செம்மாத் திருவரங்கப் பெருமா ளரையரென
விம்மா நிலமுரைக்க வென்றதனை யீந்தனரே. 108

மண்டலமெல் லாமணக்கும் மாமணக்கா னம்பிமறங்
கொண்டயமு னாரியரைக் கூவியினி நீருலகிற்
றிண்டிறலார் நம்போனந் தர்சனத்தைத் திகழ்வுறுத்தப்
பண்டைநெறி யொருவர் பயின்றெளிரப் பண்ணுகென. 109

திருவாய் மலர்ந்தருளித் தேசிகர்தந் தாண்மலரைப்
பரிவா யுளத்திருத்திப் பயின்றுகொடு பண்ணவர்கண்
மருவா வழிகாட்ட வண்டமுக டுங்கடந்து
திருவாழ் வலமார்பன் றிருநாடு புக்கொளிர்ந்தார். 110

முனிகள் பவுத்திரனார் முதலா முனிவர்களுங்
கனிவா யுளமுருகிக் கரைந்தே தெளிந்ததன்பின்
னினியா ரரசுநம்பி யெழிற்கையா னுங்கவர்க்குத்
தனியார் சரமகயிங் கரியந் தாமுடித்தார். 111

வேறு

கோட்டின் மோதுங் குரைகடலின் றிரைசேர் மேதை குலவுளத்துத்
தீட்டும் புகழி;னாளவந்தார் பின்னே சின்னா ளவணகலக்
காட்டுங் கைதை முகைகுருகிற் கழனி சூழுங் கவலையெலாம்
வீட்டும் வீர நாரணமா புரமாந் தம்மூர் விழைந்தடைந்தார். 112

ஆண்டு குருகைக் காவலப்ப னடைவே யோகந் தனிலிருப்ப
மாண்ட தவக்கோர் மறையுறுமென் றஞ்சிப் பின்னே மறைந்துறைய
வீண்டெஞ் சொட்டைக் குலத்தவரீங் குளரோ வென்ன வவர்வினவ
மீண்டன் றொரு மிகவிரும்பூ தெய்தி யப்ப னடிதொழுதே. 113

அடியே னெமுனைத் துறைவனும தழகார் வெரினின் புறத்திருந்த
படியே கண்ட படியேதென் றங்கை குவித்துப் பரவவர்
கொடியேம் பின்னைக் கெருதேழுங் குன்ற வடர்த்த நங்கண்ணன்
கடியேய் சொட்டைக் குலத்தவர்தங் காக்குங் கடவு ளாகையினே. 114

குலவா மகனை யீங்கவனுங் குளிரத் திருமிக் கண்டிடயா
நலமா யறிந்தே நுமையென்ன நகையும் வியப்பும் விஞ்சவிவர்
பலமா மயினேர் பொதுவியர்பால் குரவை பிணைந்த பரனையகப்
புலவா வுணர்ந்து பொருவருமின் புறவே நும்போல் விழைந்தனால். 115

ஐயே யதனா னகவிழியா னளைத்து முணரு மருயோகங்
கையே கமழக் கருணைபுரி யெனவே யடியிற் கிடந்திடனு
மெய்யே கமழு மவரிவரை மெல்லச் செங்கை கொடுவெழுப்பி
மையே றிந்த வுடலொருவு மைய்த் ததுவு மகிழ்ந்தளிப்பேம். 116

வருதைம் மதியி லதுவுமென வரைந்தோர் திருமா முகமளிக்கக்
கருதற் கரிய களிப்பினதைக் கையேன் றவர்பூங் கழறொழுது
நிருதர் வீயப் பொருதழித்த நிமலன் றுஞ்சு மயர்வகலக்
கரிதோய் முகில்கள் கண்ணுறங்கு மெயில்சூ ழரங்கங் கலந்துறைந்தார். 117

ஆங்கோர் வைக றிருவத்திய யயனோற் சவமா மமயமதிற்
பாங்கே பெருகுந் திருவரங்கப் பெருமா ளரையர் பலர்மகிழத்
தீங்கே கெடுமிட ராயவெலாங் கேசவ வென்னுந் திருமொழியை
யோங்கும் பொருள்சே ரபிநயத்தி னுரகசாயிக் கெதிரோத. 118

முனிகள் பேரன் றிருமுகத்தை முன்னிப் பல்கா லெதிர்நோக்கிக்
கனிவாய் நடமி னோர்நமர்க ளுள்ளீ ரென்று கழறவவர்
நனியார் புகழி னம்மாழ்வார் நவிலு மாணை யிதுவெனவே
பனியா ருள்ளங் கொடுவனந்த புரத்திற் கன்றே படர்ந்தனரால். 119

சின்னா ளங்கு செலவப்ப னருளுஞ் செய்ய திருமுகத்தை
யுன்னா நோக்க வதன்றவனை யொருவக் காணா வுளமெலியாத்
தென்னா தெனவென் றளிமுரலும் பொழில்சூ ழரங்கந் திருமியெழு
தென்றா ருயிர்க்கோ ருயிராம ரங்கன் பாத மிறைஞ்சினராம். 120

தம்மா சிரியன் பிரிவழுலே தணற்றத் தளர்ந்து கிடந்தவவ
ணிம்மா வவனிக் கிசைபறப்புந் தெய்வ வாரி யாண்டானை
யம்மா நீரிங் கழுங்கலென்னே யாசா னடியிற் பரமளித்துச்
செம்மாந் தொழுகும் பிரபன்னன் செஞ்சொற் குரவர் பணித்ததையே. 121

வனைந்து வைக லதுவன்றே வழங்கும் வண்மை யெழிற்குரவர்
புனைந்து களிக்குங் கயிங்கரிய மென்றே தெருளப் புகலவவர்
நினைந்து தேறி நிலவவவ னின்றே ராய முதலிகளு
மினைந்துதெருண்டவிவரினறத் தியற்கைதுணிந்தோ மெனமகிழ்ந்தார். 122

வேறு

அந்தவண்ண மானியம் பலநிகழ்ந்த பின்னுல
கிந்தமுந்து தரிசனத்தை யினிவிளக்கு மாறெரு
சந்தமுந்து குருவரங்கன் றந்தளிக்கு கென்றுள
நொந்திரந்தி யாமுனேயர் நோக்கிநின்ற வெல்லையில். 123

ஒழிவில்கால மெல்லாமென்னு முயர்திருவாய் மொழியினை
வழுவிலாத பொருளுடன் செவிப்புலத்து மாந்துபு
கெழுதகைத் திருமலை நம்பியும்மொர் கிளர்தினத்
தெழுதருந் திருமலைக்க ணேகவாவெ ழுந்தனர். 124

கண்டைதை யரங்கனங் கருத்தையிப் பெரியரால்
கொண்டருண் முடிப்பனென்று கூரிருங்க ளிப்புடன்
றெண்டிருப்ப தத்திலங்கு தீர்த்தமீந்து விட்டன
னுண்டுவந்து விடைமணந்து மாளிகைக்க ணுட்புகா. 125

தந்தைதெய்வத் துக்கரசு நம்பியோடு தம்முடன்
வந்தநான வடர்குழலி ரண்டுதங்கை மாரொடு
மைந்தருவின் சினையடர்ந்த லங்குபொன் முடிகள்சே
ரிந்துவூரும் வேங்கடத்தை யேகியெய்தி னாரரோ. 126

கலியுகக் கடவுளென்று கழறுமந்த மாயனைப்
பொலியவெப்பொ ழுதும்பூசை புரிந்துவைகு போதுபேர்
மலிபெரும்பூ தூராசூரி கேசவப்பெ ருமாளும்
மழலைமங்க லக்கமல நயனபட்ட ருஞ்செலா. 127

நும்முடன் பிறந்து மின்னு நுண்ணிடைக் குயில்களை
யெம்முடன் மணந்து வாழ்வீ ரம்புனலி னீகெனத்
தம்மனம் விழைந்தவர்க்குத் தாபமாதி யைந்தையுஞ்
செம்மையின் விளங்குமாறு செயலுணர்ந்து செய்துமுன். 128

முன்னவர்பூ மிப்பிராட்டி யென்னுமாதை முயங்கவும்
பின்னவர் பெரும்பிராட்டி யென்னுமாதர் பிணையவும்
பன்னரிய தூரியம் பரவையிற் கறங்கவு
நன்னராகு மோர்கடிக்க ணடத்தினர்வ துவையே. 129

தயரதற் கரும்புதல்வர் தரணியுய்ய வாகுகென்
றுயர்கலைக்கோட் டொருமுனிவ ரருளின்முன் னுரைத்தவா
மயர்வகற்று மதலையிந்த மாதவர்க ளுக்குமிங்
கியலிருக்கும் வகையுதிக்க வென்றுமாசி கூறினர். 130

ஆயபின்ன ரவ்விரண்டு தூயரும்வி டைகொளாச்
சேயரிக்கண் வதனமன்னு திருவனரொ டுஞ்செலா
நேயமாய சேவலோடு நீலகண்ட முறைதிருத்
தேயரம்பை வளர்தம்பாடி யெய்திவாழு மெல்லையில். 131

கண்ணனு ரணத்தினுண்மை காசினிக்க ணுளிருமா
றெண்ணியாதி சேடனுயி ரம்வதன நோக்கிநீ
முன்னனந்த னிலக்குவன்பின் மோதிலாங்க லீமிசை
நண்ணியிந்த வவதரிப்பை நானிலத்து மற்றுமே. 132

இக்கலிக்க ணின்னுமோ ரவதரிப்பை யெய்துவா
யொக்கவென் றுரைபுராண விரத்தினத்தி னுரைவணஞ்
சிக்கிமாயை யின்மயங்கு சீவராசி யுய்யுமா
றிக்கணத்தி ராமானுச னென்றுதிக்க வென்றனன். 133

---

## எம்பெருமானர் வைபவம்

### 22-வது சருக்கம்

இச்சையினெ திர்ந்தபகு திக்கணெழு மைந்தை
வைச்சவிர விற்கிளரி தற்குளிவண் வாழு
நச்செனும்வி னைக்குரியர் நாடினொரு மூன்றைப்
பச்சைமுகிற் பாதமிணைந் தென்றுமவண் வாழ்வார். 1

வையமெனும் வார்கடலு டுக்கைவள மாதின்
மெய்யமரு மிப்பரத கண்டமெனு மின்னுஞ்
செய்யவத னத்துறுதொண் டீரமெனுஞ் சேணு
டையவொளி செய்யுமணி யந்திலக மாமே. 2

நாடதனு ணண்ணுபெரும் பூதூரெனு நல்லூர்
நீடுதில கத்துளிடை நேருமத னேரிற்
பீடினையெ ழுந்திலகு பேருலக முய்யச்
சேடனெனி னுஞ்சகலரு செப்பவரி தாமால். 3

நம்பரிய பாயலினி யந்நகர நண்ணு
மிம்பரின வன்பிரிவை யெய்துகில மென்னு
வம்புயையு டன்கரிய மாலவண டைந்தா
னும்பருமு வந்தறையுங் கேசவனெ னப்போய். 4

அந்தணர வண்புரியு மவ்வரிய வேள்விச்
செந்தணலி னின்றெழுசெ ழுங்கரிய தூம
மிந்திரனி ருந்தவுல குக்கிவரு மேனிச்
சுந்தரமி டைந்ததுவெ னச்சொலுவ ரென்றும். 5

செய்யவெதி ராசனில யக்கெதிர் செகத்தோ
ரையவுயர் வும்பரும னும்மறிய லாகாத்
துய்யகருங் கல்லெழுவைத் தூக்கியதிற் பூதம்
பொய்யகலும் பூதபுரி யென்றதுபு கல்வார். 6

அஞ்சொலிய ரன்பருமை யிற்றெருக லாமும்
பஞ்சணையி லன்னவர்ப கர்ந்தவொரு பொய்யு
மஞ்சுநிக ரோதியர்வி ழிக்கணைம லைப்பும்
விஞ்சிடுவ தன்றியவண் வேறுபுரை யின்றால். 7

இருகடையிற் கச்சிமணி யிந்திரன தூரே
புரையரிய சென்னைமணி பொருந்துமொரு பொன்செய்
வரையருமி ரத்தினவ டக்கிடைவ யங்குந்
தரையினது தங்குநடு நாயகமெ னத்தான். 8

இன்னநகர் தன்னிலன வரதமுல கேத்தும்
பன்னிரபி தானன்பத பங்கயநி னைந்தே
மன்னரிய வாசுரிகே சவரெழின்ம ணாட்டி
தன்னொருத வத்தினிலெ ழிற்கருத ரித்தாள். 9

முப்புரமெ ரித்தவனை முன்னருளு மாய
னப்பொழுது ரைத்ததிரு வாணையுள முன்னாத்
திப்பியக ருப்பையத னூடுதலைப் பெய்தான்
மைப்புயனி றத்தரியின் மன்னமளி யானாள். 10

ஆயிரமு நான்குசத மொன்றுருபத் தொன்பா
னேயகலி பிங்களமெ னும்வருட மேய
தூயமதி சித்திரையி னுதிரையிற் றோன்றிப்
பாயொளிப ரந்திடவொ ளிந்தனன வன்பின். 11

வேறு

இவ்வண்ண மெம்பெருமா னுருதித்தா
ரெனுமமுதி னினைந்த மாற்ற
முய்வண்ணம் பெரியதிரு மலைநம்பி
யுளங்குளிரச் செவியின் மாந்திச்
செவ்வண்ணச் சிசுவைமிடைந் திதம்பெருகக்
கடைக்கணித்துச் செய்ய வைய
வொவ்வெண்ணற் கரியமுக வொளிவிடுமுத்
தமகுணங்க ளுற்று நோக்கி. 12

இலக்குமியின் சம்பன்னு யிலகுவதி
னிலக்குமண னெனுமந் நாம
நலக்குரிய விளையபெரு மாண்முன்ன
நண்ணியவா நண்ணற்பாற் றென்
னலக்கணறத் திருநாம கரண்மிழைத்
தரியதிரு விலச்சினை செய்
துலப்பரிய வுலகறிய விளையாழ்வா
ரெனமுவந் துரைத்திட் டாரால். 13

மற்றவரு மணிவடமா வனமுலையார்
மருங்கணைய வதியும் பாங்க
ருற்றபல முழைபொது ளு முரைமுடிக
ளாயிரமா யோங்கு மின்பம்
பெற்றதமிழ் வளம்பொழிலின் வடக்கெலையாய்ப்
பிறங்குதிரு மலையைச் சார்ந்தார்
கற்றவர்க ளுளங்களிக்கு மிளையாழ்வார்
கன்னலென வளர்ந்தார் நாளும். 14

ஈன்றவெழிற் குரவருமவ் விளையாழ்வார்க்
கியல்சாத கரும மாதி
யான்றவுப நயனமுடி யாயியற்றற்
காமனைத்து மடைவே யாற்றி

வான்றருமா ரணநான்கும் வகைபெறவே
யோதுவித்து வயதீரெட்டி
லேன்றகுல மெழுவாயா யெவற்றினுமோர்
நன்னுதலை வேட்பித் தாரால். 15

மூவகையோர்க் காதரமா மொழிவரிய
மனையறமு மணந்த வன்னா
ராவல்கொடு வேதாந்தத் துறைபடிய
வதன்முதற்பங் காய முன்னம்
பாவலர்க ளனவரதம் பாடியுந்தன்
பண்படைய வளக்க லொல்லா
மீவருடுந் துகிற்படலம் வெயின்மறைக்குங்
கச்சிநகர் மேவா மன்னே. 16

ஒருதடியே யுள்ளவொரு துறவியவன்
யாதவப்ர காச னென்போ
னருகணையா வவன்முகங்கொண் டஃதோதி
யுறைந்தனராங் கவரங் காரத்
திருமழலை மங்கலத்திற் றிகழ்கமல
நயனபட்டர் தமக்கு மீங்கே
யொருகருவிற் றிருமணந்த வுரைப்பரிய
தகைச்சிசுவொன் றுதித்த தம்மா. 17

கொன்னாருங் குரோதனத்திற் குலவுறுதைப்
புனர்வசுவி லுதிக்கக் கேட்ட
தென்னாரங் தணரிறையாந் திருமலைநம்
பியுமெழுந்தாங் குவந்து செய்ய
மின்னாரங் குழவிதனைக் கடைக்கத்து
மிகுகுணங்கண் மிளிரக் காணப்
பொன்னாரங் கோவிந்த பட்டரெனும்
பொருவறுமோர் பெயரு மிட்டார். 18

தந்துபெய ரிலச்சினையுந் தகவிழைத்து
மிகவழுத்தித் தமதூர் சென்னார்
பிந்தியுயிர்த் தவர்புதல்வர் பெருகுதொறு
மமையமெலா மியற்றற் கேய்ந்த

வெந்தவிதி களுமியற்றி யெழின்ஞானப்
பிறப்புமளித் தீரிரண் டாய்
வந்ததனி மறையாவும் வரன்முறையே
யோதுவித்தார் வளர்செந் தீயார். 19

பட்டருமே னிரம்புதற்குப் பண்புறுபன்
னூற்கடலைக் குடைந்து தீர
மெட்டியபின் பஞ்சலகா ரம்பொருந்து
மொருமயிலை யில்லா ளாக்கி
மட்டவிழுந் துளவமணி வண்ணனையே
மனத்திருத்தி மறையி னந்தம்
பட்டவொரு பரம்பொருளப் பண்ணவனே
யெனத்துணிந்து பணிந்து போந்தார். 20

வேறு

பின்னே யவர்பெட் புறுகச் சிநகர்
மன்னே யடைந்தெம் பெருமா னிரு
பொன்னே ரடிகண் டுபொருந் தியுட
னன்னூல் பயில்வுற் றவணண் ணினரால். 21

அங்குப் பலவை கலகன் றிடனுங்
துங்கத் தடியொன் றுளவத் துறவி
சங்கத் துறுசீ டர்சவைக் கிடைநூற்
சங்கைத் திரள்சா டிடவோர் தினமே. 22

சீவான் மவிசிட் டமுஞ்செய் யவுரு
வோவா வுயர்ஞா னமுமா யொளிருந்
தாவா |வொளிதங் குபரம் பொருளென்
றுவாழ் பொருளா மறையொன் றினையே. 23

வேறு யதுமா றிடவீண் பொருளைக்
கூறு வருகோ ணலுணர்ந் ததுபின்
மாறு விழுமன் னுறுமெய்ப் பொருளை
யாறு யிளையாழ் வாரறைந் தனரால். 24

அவரோர் தினமா ரியனின் றலைமே
னவமார் தயிலந் தணைநன் கிடலு
திவளுந் தினநா தன்செழுங் கதிரா
னவிழும் புரியம் புயமா மலர்போல். 25

கண்ணன் முகங்கா ணுமெனும் பொருளே
நண்ணும் மொருநன் மறையின் பொருள்வே
றுண்ணும் வகையுய்த் துணர்வின் றிளிவாய்த்
திண்ணங் கொளுமா றுதெரிக் கவவன். 26

செவியுற் றதுசெய் யவராற் றுகிலா
தவியத் திருவுள் ளமழும் விழிநீர்
சவியுற் றெரிதீ பிகைதன் னெயென
வவனிட் டகுறங் கிடைவீழ்ந் ததுவே. 27

வீழா வதுவெம் பவெரித் திடலுங்
காழா ருளன்கம் பழுறத் துடியா
மாழாந் துளமற் றழவிங் கெவனீ
தாழா துரைதா வெனவெங் குரவர். 28

உபமா நிடதத் துறுமொண் பொருளுஞ்
சுபமா மிதுவென் றுசெலச் சொலிவீ
ணபவா தமுறும் பொருளா டியநீ
நிபமா மனநெக் குறுகின் றனனால். 29

என்னு வவரேங் கியிம் பிடலும்
முன்னு வவன்மூ ளுசினத் தொடுநீ
யென்னு வுரையேன் றிடினீங் குகலை
யுன்னு துளமோ திலதே லகல்வாய். 30

வேறோ ரிடமென் றுவிளம் பிடலும்
பேறா யுலகுக் கெழுமென் றியவர்
தேறா தயலெத் தலஞ்செல் குதுமே
லூறா கியதென் னவுயங் கினரால். 31

வேறு

அள்ளலங் கரிய பங்கத் தாமைகண் படுக்கும் பூந்தார்
வள்ளலுண் கையினின் வாயின் வல்சியைப் பறிகொ டுத்த
கொள்கையா யுழல வந்தக் குத்திரன் மறைவிற் றன்னை
யள்ளுநர் சிலரைக் கூவி யறைந்தனன் பழித்த தொன்றை. 32

பரலொடு கலந்த நீரிற் பயில்வுறும் பண்பி நீர்கம்
மேனுறு மதமு மிந்த மேதையிற் சிறந்த நீரான்
சேனுகள் செழுநீர்ப் பண்ணை செறிபெரும் பூதூர ரனல்
வேலைசூழ் புவியி னெங்கும் விளங்குறு தவியுந் திண்ணம். 33

முண்மர முளைக்க வாங்கே யுகிர்கொடு களைத லின்றேற்
பின்மலிந் தடர்ப்போர் கையும் பிழைபடப் போழு மன்றே
தண்மையி னிவனைக் கொண்டே தடம்புனல் படிய வேகி
யொண்மைசேர் வரந திக்கண் வீழ்த்துவ துறுவ தாமால். 34

அஞ்சலி ரிதனு னங்க ணகமொன்று மனுகா தென்று
செஞ்சொலாற் றெருட்ட வன்னூர் தெருண்டொருப் படனு மந்த
வஞ்சகன் பூதூர் வள்ளல் வருகென வருகே கூவி
யெஞ்சலை யகநீ யைய வியந்ததுன் பொருளே கண்டாய். 35

நின்கருத் துணர்வா னீங்கு நிகழ்த்துமிம் மாற்றங் கொண்டே
பொன்கருத் துணரேல் வேறுன் றென்றவன் புகல வைய
னன்கருத் தவையே நாடி நாடொறும் பயின்று வந்தா
ரென்கருத் திவனுக் கென்றே யோர்ந்திடார் தினையு மென்றேன். 36

சிலபக லகல வேக தண்டியு மொருநாட் சீடர்
பலரொடு மினையாழ் வாரைப் பண்புறத் திரட்டிக் கொண்டு
மலர்தலை யுலகி னெங்கு மல்கிய புனித நீரி
னலமுறப் படிது மென்று நவின்றன னடந்தான் மன்னே. 37

செல்லனு மொருநா ளெய்யுஞ் செழுமத கரியு மாதி
யல்லல்செய் விலங்கின் சங்க மடர்தர வுலவு மாமோர்
புல்லருங் கரிய கானிற் கால்கழூஉங் கருமம் பூணத்
தொல்லரும் பூது ரையர் தனித்தொரு துறையி னின்றார். 38

ஆங்கொரு தடிய னிந்த வாரியர் திறத்திற் கொண்ட
தீங்கது தெரிந்த முன்னங் கோவிந்த பட்டர் பைய
நீங்குக வயலே யென்று நிகழ்த்தின ரதனை யன்னூர்
பாங்குறப் பரிவின் மற்றுங் குழூஉக்கொடு படர்ந்தா ரன்றே. 39

சிக்கிய கொலைஞர் தம்பாற் செவ்வியோ னொருவன் பைய
முற்புரி தவத்தி னுய்ந்த செயலென முதிய ஞானத்
திப்பெரும் பூதூ ராரும் வெருவுறு விகந்து வேறோர்
கப்புறு நெறியிற் பாய்ந்தார் கலங்குறுங் கானத் தம்மா. 40

பனிப்பகை யிளையாழ் வாரைப் பைம்புன லிடையில் வீழ்த்த
லினிக்கணிற் காண லொல்லே னிதன்முன்னர் யானும் வீழ்வே
னெனக்குட கடலுட் பாய்ந்தா னிருளெங்குங் கொடிய மாந்தர்
மனத்துறழ் தரவே பாய மண்விணுங் கறுத்த மாதோ. 41

அரணிய மடையப் புண்ட ரீகங்க ளுலவ லாய
முரணிய வலகைத் தோடு முடுகியே திரிய லாய
கரணமூன் ஞெருமை யாமக் கலேஞரக் கங்கு லாங்கேரர்
மருணனி மனத்தின் வான்ரூேய் மரத்தடி யொதுங்கி மன்னே. 42

ஆவாரார் துணைநீ யன்றி யருளாளா வென்ன மாழ்கி
நாவாரப் பழிச்சி யேத்த நான்முக னயர்ந்த வேள்வித்
தீவாருங் குண்டத் தன்று திகழ்தர வெழுந்த தேவன்
பூவாரும் பெரியதேவி புடைவரப் புறப்பட் டானல். 43

மருங்கிலா விலிச்சி யன்பின் மருங்குறப் படர வேகுங்
கருங்கலா ருரத்த ஞமோ ரிருளனே யென்னக் கண்ண
னெருங்கலாற் குரவ ரைய நீவிரா ரென்ன மாய
னிருங்கலா ரிந்தக் கானில் வதிதரு மிருள ராவேம். 44

நாமமும் வரத னென்ப நானிலத் தவர்க ளென்னைப்
பூமலி நறும்புன் ஞகம் பொதுளிய மறுகே யார்ந்த
காமுறு மமரர் நாளுங் கச்சியம் பதிக்குச் செல்வேந்
தேமரு குழலா ளிந்தத் திருவுமெற் குரிய ளென்ருன். 45

யானுமப் புரியே போவ லென்னையு மழைத்துப் போதி
நீனிறப் படிவத் தாயென் றியம்பவந் நிமலன் மாயன்
பானிறப் படிவத் தாய்நீ படர்கவெம் புறமே யென்னுத்
தேனிமிர் துளவத் தாரான் றிகழ்தர நடந்தான் முன்னம். 46

ஆரிய மணியு மாங்கே யகங்குளிர்ந் தவர்பின் போக
நேரிய னெறியு மிக்க நிகழ்தர நிலவே காலுஞ்
சீரிய வதனத் தாளுஞ் செல்வனை யினிது நோக்கி
வேரியந் தொடையா யுண்ணீர் வேண்டுமீங் குளதோ வென்ருன். 47

வரதனு முறுவல் பூத்தோர் வாவியை யவட்குக் காட்ட
வருகுறு மிளையாழ் வாரு மான்றரு முதவி யாய
திருவின ரிவர்க்கு நாமோர் கைம்மாறு தெரிந்திங் காற்ற
லரியதோர் தரும மாமென் றிழிந்தன ரதனு ளாங்கே. 48

நறும்புனன் முகந்தி வர்ந்து நல்கலும் பருகி யந்த
மறங்கிளர் மறவ னுசை மங்கையின் மறையின் வல்லோய்
பிறங்குவ ததுகாண் செய்ய பீதக முடிய னென்று
மறங்கினர் புணியகோடி விமானமென் றறைவ ரம்மா. 49

என்றிசைத் தவரு மாங்கே விழிப்புலன் கதுவா தேக
முன்றிசை வெளுத்து வைகன் மணந்தது முராரி கோயிற்
பொன்றிருப் புணிய் கோடி விமானமும் பொலிவ துங்கண்
டென்றிருக் குரவ ருள்ளந் திகைத்தன ரிறும்பூ தெய்தி. 50

மூலமே யெனவாய் விண்டு முன்னர்ற் றியநால் வாயை
நீலமே கமென வோடி நேர்பெற் வளித்த நீண்ட
தாலமே வியவி ராமன் றம்பியே யெனையு மிந்தக்
காலமே நெறியுங் காட்டிக் காத்தன னருளி னன்றே, 51

எய்த்தவர்க் கெயில்போ லைய னெம்மனை யுடனே வந்திப்
பித்தனை யளித்த வாறே யென்றவ னருளைப் பேணி
மெய்த்திரு வுளமு மாழ்கி முசித்தனர் கிடந்து மோகித்
துய்த்தறி வதனின் மற்றுந் தேறின ருவப்பி னுங்கே. 52

அஞ்சனைச் சிறுவ னீந்த வாழியா னன்று மோதம்
விஞ்சிய சனகி யென்ன விளம்பருங் களிப்பி னுடி
யெஞ்சலி னுதயகன்ம மருகுள விருந்த டாகத்
தஞ்செறி புனலி னுடி யாற்றுபு நகருட் புக்கார். 53

புக்கவ னனந்தப் பொய்கைத் தடத்தினிற் பொலியு மத்தி
வெற்பிடை யருளா ளன்றன் விரைமலர்ப் பதமு மன்னைச்
செக்கரின் மலரந் தாளுஞ் சிரங்கொடு வணங்கிக் கானிற்
றக்கதங் கரத்துத் தண்ணீர் பருகிய தயையு முன்னு. 54

ஆனந்த பரித ராகி யன்றுதொட் டருளிற் காட்டுந்
தேனுந்து தெளிநீர்ச் சாலைக் கிணற்றுநீர் திரட்டிக் கொண்டு
வானுந்து புகழார் செய்ய மஞ்சனம் புரிய நாளுந்
தேனந்து துளவத் தாற்கே யுதவினர் திகழ்ந்தா ரன்றே. 55

வேறு

எங்கருங் குரவரிங் கிலகவவ் வடவியிற்
சம்பரன் மானுமச் சன்னியா சியுமவ
ரெங்கழிந் தனர்கொலோ வெவ்விலங் கயின்றதோ
சங்கையின் றினியெனப் பொங்கினன் றன்னுளம். 56

பெருகுகோ விந்தபட் டரையவன் பெட்பினந்
திருவளர் பூதுரன் றிறமுமொன் றறிகிலே
னுருகுமென் னுளமென வுண்மைபோ லுரைசெயா
மருவின னகங்கையை மற்றவ ருடனரோ. 57

மாகமா நானமா டுறவவண் மற்றவன்
மோகமா விஞ்சையின் மொய்ம்பொடோ ரிலிங்கமவ்
வாகையார் பட்டரின் வலக்கரத் தொன்றிட
வேகமா யியற்றியே விம்மிதம் பெறவுடன். 58

பட்டரே நுமதகத் தரனருள் பட்டவா
றிட்டமே காணுநும் மிட்டதே வதையிதே
கட்டமே யகலுமிக் கடவுளே கதியெனத்
திட்டமே தொழுகெனத் தெரித்துளம் பிறழவே. 59

மயர்வுறும் படியதோர் மோகன மந்திர
வயமுறுஞ் செபமிழைக் கலுமவர் வளமன
மயர்வுறத் தருமென வரனையே நாடினர்
பெயர்வரும் விதியினும் பெலமுளா ரெவர்கொலோ. 60

அன்றுதொட் டுள்ளங்கைக் கொணர்ந்தநாய் ஞரெனு
வொன்றுடைப் பெயருட ஞெழுகமற் றவரெலாஞ்
சென்றுதத் தமதலஞ் சேர்வுறப் பட்டரு
மொன்றியுத் தமதரூ ரொண்டிலிங் கந்தனை. 61

வைத்தருச் சனைசெயா வருபொழு தருவளந்
தத்துகா ளத்தியிற் றகையுளோர் பலர்கள்வந்
தொத்தழைத் தேகவங் கேகியவ் வுயர்தலத்
தெத்திறத் தவர்களு மேத்துமா வதிந்தனர். 62

ஏகதண் டியுமெழிற் கச்சியே யெய்தியங்
கோகைகொண் டொளிருமெங் குரவரைக் கண்டுநீ
ரேகிலெங் கானிடை யெமையக்ன் றெத்தகைச்
சோகமுற் றலேந்திரோ வெனவகந் துளங்கினேன். 63

மணியிழந் தழிவுறும் மாசுணம் மற்றதை
யிணைதரக் களிகொளும் பெற்றியே யிங்கியான்
றுணையிலா வுமையிணந் துளமகிழ் தூங்கினே
னணிகெடா வந்தவா றறைதிர்நீ ரென்றனன். 64

கரவடந் தினையெனுங் காண்குறு வவருமப்
புரையறும் வில்லியின் புகழுறுஞ் செய்தியை
யுரைசெயப் பின்னவன் னுளநடுக் குற்றிவர்
வரையறும் பீடினர் வலியுறும் பத்தரே. 65

இப்பரம் பாகவ தரையிழித் திடுவதிங்
கொப்பதன் றென்றவ ருழைதவ நசைகொளா
வப்பொழு திருந்தவ ரகவழிக் கூறுரு
தெப்பொழு தும்மவர்க் கியலுமா றெழுகினன். 66

வேறு

ஈதிங்கி யங்கவிரு பாகவத ரிங்கிருந்து
மீதெங்குப் பொற்கிழிகள் மிக்குவெ யின்மறைக்கு
மாதங்கத் தேழெயில்சூழ் மன்னரங்கம் போயரங்கன்
பாதங்க ளவணங்கி யாளவந்தார் பாலணைந்தார். 67

அம்மா ;முனியடியு மஞ்சலிசெய் தாங்கெழலுஞ்
செம்மாந் துளமவரை நல்லுதவுஞ் செய்ததற்பி
னும்மா நகரிலெது நோன்மைபெறுஞ் செய்கையென
வெம்மா விளையாழ்வார்க் கிருளநளித் ததுமுதலாம். 68

எல்லா விளைவுகளு மியம்பவெமு னைத்துறைவ
ரெல்லா ரரவணையா னெம்மரங்கன் றாளிணையிற்
புல்லாச் சரண்புகுந்து போற்றியதும் பலித்ததியா
மல்லார்ந்த திண்புயமா மர்யன்பி ராட்டியுடன். 69

பேரா ரணிய மெழுந்தெம் பெருமானார்க்
கேரா வழித்துணையா யெழினகர நண்ணுவித்துச்
சீரார் புனல்பருகித் திருமஞ் சனநீரு
நேரா வுகந்துளனந் நின்மலனார் தாங்கொணர. 70

கோயிலெழு வாய்மூன்று கோளார் திருப்பதிகண்
மேய திருமாலின் மிக்கவருண் மேயினரா
லேயுந் தரிசனமிவ் வெம்பெருமா னார்வழியே
தோயும் பெரும்பகடென் றுள்ளந் துணிந்துடனே. 71

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயி ரத்தாண்டென்
றெல்லார் திருவரங்கற் கியம்பிமகிழ் மங்களமுஞ்
செல்லா விளையாழ்வார் கண்டருளச் செய்யவிடை
புல்லா முதலிகளிற் புறப்பட் டனரடைவே. 72

தேமொழிகண் மாமுகமென் றிருமா மலரலரு
மேமமுறும் பெண்ணை யிருங்கோட்டி னிடையிலகும்
வாமமுறுங் கோவ லூரின் வழிநடந்து
காமுறுபொற் கச்சிநகர் கண்டு களித்தனரால். 73

வந்தங் கெதிர்கொ டிருக்கச்சி நம்பியையுஞ்
செந்தண் கடைக்கணிப்புச் செய்தே யவர்கொணர்ந்த
பந்தங் களைசடகோ பஞ்சிரத்திற் பணிந்தேன்று
கந்தங் கமழ்துளப தீர்த்தங்களு மறைந்தார். 74

ஏகா விபமலைக்கே யெம்மான் வரதனையும்
பாகா ரெழின்மொழியே பசுருபெருந் தேவியையுங்
காகா வெனத்தொழுது கண்ணீரு டன்மறைப்ப
நாகா சனக்கொடியா யென்று நனிபோற்றி. 75

வாழ்வாய் வலம்வந்து வண்கரிய மாணிக்கத்
தாழ்வா ரொடுமிரகு நாத னடிதொழுது
பேழ்வா யரக்கியுரம் போழ்ந்த பெருமானே
போழ்வா ளெயிற்றுகிரின் புலிதிரியுங் கானத்தே. 76

ஒப்பரிய நின்பகடே யுலகெங்குந் தானொளிர
விப்பெரிய மண்ணெழுந்த வெம்பெருமா னூர்க்களித்த
செப்பரிய செய்கையினீ யிளையாழ்வா ரென்றிசைக்குந்
தப்பரிய பேர்பொருளிற் றனிலகுந் தன்மைத்தே. 77

மாலே யெனப்பரவு மன்னமயத் தோர்சிறையோர்
கோலே யுளன்பயில்வோர் கூட்டத்து டனெதுங்க
நூலே யிளையாழ்வார் நூற்றுவரு ளேவரெனப்
பாலே யிவரென்றோர் பாகவதர் சுட்டினரால். 78

கண்டா மரைமலரக் கண்டருளி யித்தகையார்
தண்டாநந் தரிசனத்தைத் தாங்குநரா யோங்கவென்றுந்
தொண்டாயிவ் வொருதடியன் றாயவர்பா லாகவென்றுங்
கொண்டார் திருவுளத்திற் கூப்புகரத் தோடிருந்தே. 79

காதற் றவர்கேட்பக் காலற் றவரோட
வோதச் சுவைபடவே யூமன் விழியிலிகண்
மோதத் துடன்காண முன்னித் தொழுதிறைஞ்சிற்
சீதக் கருணைபுரி யருளாளா செய்கருணை. 80

கண்ணு வெனத்தொழுது கட்டழகா ரோடளவித்
தண்ணார் மொழிபகரத் தக்கதென்றென் றிக்கடியும்
பண்ணார் முதலிகளின் சங்கம் பலசூழ
விண்ணார் புரிசைபல விளங்கரங்கஞ் சென்றனரால். 81

வேறு

பின்னே கச்சி நன்னக ராளும் பெருமானின்
மன்னே ரேயு மின்மகன் றன்னை மறையோதுங்
கொன்னே யோர ரக்கன் வலித்துக் கொடுநாளு
மென்னே யென்னே யென்றுபு லம்ப விழைத்திட்டான். 82

வையம் போயே மாற்றலர் வீய வயமேவா
வையங் காவன் மன்னிய வள்ளன் மகன்வாதை
செய்யும் பூதம் வீயுமு பாயஞ் சிறிதோரா
னையுங் காலை நண்ணின ஞேரா ரணநாவான். 83

காளா யாத வப்பிர காச னெனுநீத்தோன்
கோளா ரெந்தக் கூனி கணங்க ளெனினும்விண்
டாளா யாளா யேகுது மென்றே யழுதோட
நீளா தின்னே யாற்றுவ னுங்கே நிகழ்த்தென்றான். 84

தேனே யன்ன வம்மொழி கொண்ட திறன்மன்னன்
பானேர் வெள்ளிப் பல்லின னந்தப் படிவத்தோன்
பானே ரேகித் தன்றுய ரோதப் பலர்போத
நானே வல்லோ னென்றுந வின்றே நடந்தன்னோன். 85

கோவின் புத்தி ரன்றனை யண்மிக் குணநாடி
மேவும் வெய்ய ராக்கத விண்டே விலகென்ன
வாவுந் தாளை நீட்டிந கைத்தவ் வளர்பூத
நாவின் மந்தி ரம்புகல் வாய்கே ளெனமற்றும். 86

ஓதும் முன்றன் மந்திரங் கொண்டென் னுளமஞ்சேன்
றீதின் முன்னர்ச் செய்திடு நந்தஞ் சனனங்க
ளோதும் வன்பிங் குண்டெனி னன்றே யுரையென்ன
வேதும் வல்லே னெண்ணுவை யேனீ யிசையென்றான். 87

விட்டோ னந்த வீதமி சைக்க விரும்பேய்நீ
மட்டே வாருந் தண்பொழில் சூழு மரங்கத்தி
னட்டோர் பாத நன்குற வீறு நளினைக்கோன்
முட்டா ளிண்டைத் தாளிணை முன்னு முனைவோர்கள். 88

பல்லோர் வேங்க டந்தொழு தேத்தப் படர்போழ்தி
னல்லோர் வாழு மாமது ராந்தகந் தனைநண்ணித்
தொல்லோர் போற்றுந் தொல்பதி யேரித் துறைநீரி
னெல்லோ ருந்தம் மின்புறு நீம மியற்றிப்பின். 89

கொண்டல் வண்ணன் கொண்டருள் சேடச் சுவைமூர
லுண்டங் கேக வன்மிக மொன்றி லுடும்பாநீ
விண்டங் குள்ள வேதிய ரெச்சில் விழைந்துண்டே
யெண்டங் கிந்த வேதியர் சன்ம மெடுத்தின்னும். 90

முன்னு நூலே முன்பல மூந்நீர்க் கரைகண்டா
யென்னு ழிந்தச் சன்ம மியம்பு வதுங்கோடி
மூன்னு ளியானே ரந்தண னுகி முதுவேள்விப்
பொன்னு டுண்ணப் பொன்செல விட்டே புரிதந்தேன். 91

அப்பே ரிட்டி மந்திர லோப மடைகுற்ற
தப்பா னிந்தத் தன்மைப டிந்தே னினதாட
லொப்பே னேகற் குன்முத லோது மிளையாழ்வார்
செப்பான் விண்டே செல்குவ னென்றன் செடியும்போம். 92

உய்வே னிந்த வுத்தமர் செய்ய வருளாலென்
செய்வேன் வேறு சேர்கதி யில்லே னெனவேகி
மெய்வே ருன்றம் மிக்கவர் தாளின் மிசைவீழ்ந்தே
பொய்வே ரற்ற புண்ணிய காவென் றிரைந்தன்றே. 93

அக்கா லேக தண்டியு மன்னர் முகங்காணு
விக்கா லேக வீ துரை தம்மி னெனவாழ்வார்
புக்கா விந்தப் பூருகம் வீழப் புரிந்தேபின்
பெக்கா லேனு மேகுதி யென்ன வலைதன்றே. 94

மன்னன் சேயை விண்டும ருங்கே மலராதி
துன்னும் பேரோ ரந்துரு மத்தைத் தொலைவூட்டிப்
பின்னங் கோடப் பேரொலி யோடே மரம்வீழப்
பொன்னங் குன்றிற் பூபதி மைந்தன் பொலிவுற்றுன். 95

கண்டே காவ லன்முத லாருங் களிதூங்கத்
தண்டா வந்தத் தாபதர் தன்மை தனைநாடிக்
கொண்டா டக்கோ லொன்றுள ளுள்ளுங் குளிர்தூங்க
மண்டா னின்னின் மாணுறு மென்றே மடம்புக்கான். 96

வேறு

வெயிலேநுழை வின்றிக்குயி னுழைதண்பொழில் வீறு
மயிலாடுயர் மனைசேரெழிற் பூதூரிறை மற்றும்
பயிலாவரு பொழுதன்னவ ஞெருகாற்பிர பஞ்சம்
வெயிலாரிறை வற்கேயொரு விசேடண மாகும். 97

என்னும்பொருள் படுமாவுப நிடதந்தனக் கியையாத்
தன்னின்மத மியையும்வகை மற்றோர்பொரு டரனும்
பன்னும்பொரு ளதுவென்றன மறியாநலம் படியத்
துன்னுந்திரு வாய்மைப்பொரு டுறையிற்றுலக் குற்றார். 98

நெறியேபடு மதன்மேலவ னிகழ்த்தும்வலி யில்லான்
பொறியேபட வெகுளிக்கனல் போநீரயல் பயில்வா
னறியேனுமக் கறையும்வகை யென்னுவகல் விக்க
வெறியேகமழ் துளவத்தரி விரையார்மல ரடியை. 99

சிந்தித்தகஞ் சிதைவுற்றவர் திருமாளிகை செறியா
வந்தித்தனை யடிமேலதை வழங்கிக்கரை தரனும்
புந்தித்திரு மாதாமனந் தெருளும்படி புதல்வர்
செந்துப்பெனுந் திருவாய்மலர்ந் திதமுண்மொழி செப்பும். 100

எம்மாவுயர் மரபும்படி யெங்கும்பக டுறவே
யிம்மாநில நீவந்தனை யெல்லோர்களு நின்பா
லம்மாவுள கலையென்பன வடையப்பயில் வமையும்
மும்மாமல முழுகும்மவ னுழையேகுத லென்னே. 101

தன்றாளடை தருவோர்விழை தருமேவையு மருளுங்
கன்றாலடல் விளவின்கினி யுகுத்தோன்கழல் களின்மா
சொன்றாவகை யுயருழியம் வனைவாயென நாளும்
பொன்றாழூர வரதற்கவர் பணிசெய்தனர் போந்தார். 102

வேறு

ஈங்கிது நிகழ விரும்புன லரங்கத்
திலகுறு மெமுனையந் துறைவர்
தாங்குறு மமையத் தாமயம் பெரிய
கோட்டியூர் நம்பிக டகையே

யோங்கிய பெருமா ளரையரை முதலிட்
டெழுந்தன ருவர்மல ரடியைப்
பாங்குடன் பணியா வெமக்குயு முறுதி
பகர்திரே யருளியென் றிரந்தார். 103

ஆரிய ரருளிற் பிரபன ராவோர்
திகழ்தரு மாரியர் நிரைவாய்க்
கூர்தர நன்றி யறிதரு குணமுங்
குருக்களே பாகவ தர்களே
சீரிய பெரியோ ரேயிவர்க் கியையச்
செய்கடன் சிதைவுறு தியற்றி
நேருறு தரிய பிழைகளெந் நெறியி
னுயினு மகநிலை நிறுவி. 104

தகைபெறு மயலோர் தாமுமீ ரிரண்டா
முறுபயன் றணப்பற நுகர
நகைபெறு வதனத் தியம்பிய வண்ண
நாடொறு நாரணன் பதமே
பகைதடிந் தருளு மெனவலிந் துறலே
பான்மைய தெனம்பகர் தரலும்
வகையுடன் செவியுண் முதலிகள் பலரின்
றிரியையம் வரைந்துளந் தெளிந்தார். 105

மற்றிரும் பூதூர் மாதவ ரியாத
வன்றனை விலக்கினர் மலரின்
புற்றன ருறைத திருச்செவி யுறலு
முவந்தன ராளவந் தாரெம்
பற்றிய பிரபத் தியும்பயன் படுமா
றருளினன் பேரரு ளாளன்
பொற்றதா நமது கொள்கையே பொலிந்த
தெனத்தமர் முதங்கொளப் புகலா. 106

தருந்தகை யிளையாழ் வாரைநீ ரேகித்
தண்மையி னழைத்துமீள் கெனலு
மிருந்தகைப் பெரிய நம்பியு மடவார்
மேலகை நிறைமிசை யைம்பால்

வருந்தகை யினராய்ப் புலர்த்துலா வருதன்
மஞ்ஞையின் வரிசைக ளகவிற்
புகுந்தகை யெனலாம் புனிதநீர் வாவி
பொதுளுமங் கச்சியுட் புக்கார். 107

புக்கவண் சாலைக் கிணற்றரு கிருந்து
புரையறு மெமுனையந் துறைவர்
தொக்கவின் னமுதிற் புகன்றரு ணூலிற்
றூய்மைய சிலவெடுத் துரைப்ப
வக்கலைப் பூதூ ரவர்செவி மடுத்தா
ரருளின ரிவையென நம்பி
யெக்கலை வலரு மிறைஞ்சுமெம் முனைத்து
றைவரே யிசைத்தன ரென்றார். 108

எழுதிடாக் கேள்வி யின்றுணி பியைந்த
வினைதபு மிவைபுகன் றருளுந்
தொழுதகு பெரியோர் துணையடி யின்னே
தொழுவனென் றுளத்தகந் துணியாக்
கெழுதகு திருமஞ் சனந்தனைக் கொடுபோய்க்
கிளர்திரு வரதனுக் குதவிப்
பழுதறு விடையு மணந்தனர் படர்ந்தார்
நம்பியின் பதஞ்செலும் படியே. 109

இங்கிது நிகழ விரும்பெரு வைய
மிடையறு துருளகன் மறுகா
ரங்குல வரங்கத் தாளவந் தாரு
மடுபிணி முதிர்தர முதலிச்
சங்கமுஞ் செறியத் தளர்வொடும் போகிச்
சக்கரத் தடங்கரத் தரங்கன்
பங்கயப் பதங்கண் முடியுறப் பணிந்து
பரிவுட னெழுந்தெதிர் நின்றார். 110

பூவையார் மேனிப் புங்கவ னவரின்
பொற்புணர்ந் தருச்சக முகமாய்ப்
பூவைநீ ரிகந்தெம் பெரும்பத மின்னே
புகுமினென் றருளமற் றவரு

மேவரு விடையு முருகவிழ் துளப
மாதிகண் மிடைந்தரு ளுடனே
தாவருஞ் சூழன் மீண்டணைந் துள்ளந்
தயங்கிமுத் துருத்தனர் விழியின். 111

முதலிகள் காணு வியப்புட னவரின்
முளரியா ரடிபணிந் தெழுந்து
முதமுறு நமது திருவுளஞ் சிதைய
முதலெனே வெனக்கரங் குவிப்பப்
பதமுறு மனத்தீர் மைம்பொழிற் பூதூ
ருதித்தவர் பங்கய முறழும்
வதனமென் கண்கள் காண்குருச் சிறுமை
வாட்டுமா லென்செய்கேன் மற்றும். 112

வேதமே விழுப்பம் பெறவகுத் தருளும்
வியாதசூத் திரப்பொருள் வாய்மை
மேதினி வழங்கப் பாடியம் வனைந்து
மேம்படு திருமகள் கொழுந
னேதமின் மிறலே யிலகுற விரித்த
பராசரன் பெயரையோர் மகற்கு
மோதுமின் றமிழ்மா மறையுயர் மாற
னுமமோர் மகற்குமிங் குதவி. 113

கூட்டுணக் கூருந் தவத்தின ரமுத
மென்றிடு மமுதினைக் கொடுக்கும்
பாட்டுள வாயி ரம்பெருந் திருவாய்
மொழியினைப் பாரகம் விளக்கி
மாட்டினுக் கருளு மாயவன் பெருவீ
டணைதர விருந்தன னிவைக
ளூட்டிடா நலிவி னுனெழத் துணிந்தே
னெனநவின் றழுங்கினர் நனியே. 114

வேறு

அந்தா மரையிற் பாய்நறவி ளங்கண் மலரி னீருகுப்ப
நொந்தே மூன்று விரன்முடக்கி நுண்ணே ரறிவின் முதலிகளுங்
கொந்தார் துளவன் கூட்டுவிப்பன் குறையீ ரினியிங் கிழைப்பனக
ளெந்தா யணையீ ரியம்புகவென் றிறைஞ்ச வவரு மியம்புவரால். 115

கேளீ ருரகப் பாயன்மிசைக் கிளரும் பெரிய பெருமாளுங்
கோளா ரபிசின் முகூர்த்தத்தின் றுயரெம் பதநீ கூடுகென
மீளா வருளின் மிழற்றினனுன் மேலோர் பாத தீர்த்தமுவந்
தாளா யருந்தற் காரிவணீங் கறைமி னென்ன வவர் பணியா. 116

ஆயே மானு மாரியரே யடியே மிங்க ணனைவோருஞ்
சேயே யுந்தந் திருவடியைச் சேர்ந்தே யுள்ளே மாகையினீர்
தூயேய் பாதந் துலக்கியநற் றோயங் கொள்ளற் காருளரே
நோயே காணே நுவலுகென நோற்றார் மற்று நுவலுவரால். 117

முன்னே நாத முனிகளுயக் கொண்டா ரம்பொன் முடிமீதே
தந்நே ரிரண்டு தாள்களையுந் தயங்க நயந்தே யணிந்திடலும்
பொன்னே புரியு மோர்படத்திற் பொருத்தி யந்த வடிச்சுவட்டைப்
பின்னே பெரிய பரதாழ்வா னெனவே யதனைப் பேணினராய். 118

ஆரா தனைசெய் தவர்கடையின் மணக்கா னம்பி யாங்குருவிற்
கேரா யருள வெமக்கவரு மீந்தா ரதனை யதன்றீர்த்தஞ்
சீரா யருந்திச் செந்நெறியே சேறு மென்ன முதலிகளு
மாரா தித்தவ் வடிநிலையின் றீர்த்த மவர்க்குப் புகட்டியரோ. 119

அடிகே ளெமக்கு நும்மடியி னிலையும் பாதத் தரும்புனலுஞ்
செடியே போகிச் சீர்பெறயாஞ் செய்வீ ரருளென் றவர்வேண்டும்
படியே தந்து வுபநிடதந் திருவாய் மொழியும் படிக்கவெழுங்
கடியா ரொலியுந் திருச்செவியிற் கமழத் துவயோச் சரிப்பினொடும். 120

ஆசா ரியர்க ணிரையடியை யகவா யிருத்தித் திருமுடிமேற்
பூசார் நாத முனியடிகள் பொருந்து நிலையைப் போர்த்தடைவிற்
பேசா மோனி யாய்ப்பிரமத் துளையே திறந்து பெறற்கரிய
காசா மலரிற் கருமாய னுலகங் கழுமிக் களித்தனரே. 121

தேவார் செய்ய திருவரங்கப் பெருமா ளரைய ரெழுவாயா
நாவார் முதலித் திருக்குலங்க ளெண்ணும் வேரற் றடிசாயும்
பூவா ரரிய பூருகமே போலப் புரண்டு விழுந்தரற்றி
யாவா வென்றே யழுங்கியுள மறிவிற் றேறி யாற்றின்வே. 122

சூழுந் தொகையி னடியார்கள் சுருதிப் பிள்ளை யரசுநம்பி
வாழுங் கரத்திற் றிருச்சுண்ண பரிபா லனமும் வனைவித்தே
வீழு மரங்க னருளியதண் விரையார் தொடையன் முதலடைய
ஆழி னணிந்தே பிரமரதத் தொழுதும் பொன்னித் தடமுப்த்தே. 123

கடியா ரிஞ்சி பலபுடைசூழ் புரியிற் கழுமு மனைவோரு
மடியோ டொருங்கு படர்ந்துதிருக் கரம்பன் றுறையி னகங்குழுமிப்
பொடியே கமழு நீர்மலரின் பொன்னே பொருவு நுண்மணலி
னிடையே பள்ளி யிடச்செம்பொ னிரும்பிற் பள்ள மெடுத்தனரே. 124

அம்மா வமயத் திளையாழ்வா ரரிய பெரிய நம்பியொடுஞ்
செம்மாந் துள்ள மின்றெமுனைத் துறைவர் சேவை செய்குவலென்
றெம்மா ரியம்பற் கின்னசையி னெழுவோர் சிறிது சேணிருந்தே
யிம்மா குழுவைக் கண்டனரீங் கென்னோ வென்றா ரெதிர்ந்தோரை. 125

குருவின் பச்சை யமுதுண்டு கோடா ஞானங் கொண்டவரின்
றொருருவை குந்த முவந்தனரவ் வுயரின் கோட்டி யெனக்கரையத்
தெருமந் துள்ள மிருவோருந் திருக்கென் றவனித் தலைவீழ
வரிதி னுணர்ந்த நம்பிமுன மெழுந்தே யாழ்வார் தமைத்தெருட்டி. 126

சூறா வளியி னுடன்சாருஞ் சருகே நேரத் தொல்லுயிர்கள்
வீறார் வினையைக் கதிசாரு மென்றே விழுப்பம் பெறுநூலி
னாறா னாழ்வார் தெருண்டாள வந்தா ரருகி னணைந்தவரின்
பேறா மரிய திருமேனி யெங்கும் பேணிப் பணிந்தனரே. 127

அன்பே யுருகி வழிவதென வழிநீர்க் கண்க ளவைகாணா
முன்பே யுளவோ விவ்விரல்கண் மூன்று முடங்கி யெனவுழையார்
பின்பே யவரி னகத்துணிபும் பெருக யாவும் பேசவிவ
ரென்பே யுருகக் கரைந்துள்ள வெவருங் கேட்ப வீங்கிசைப்பார். 128

கற்றா கன்றின் கடையுறல்போற் கழறற் கரிய வவரருளென்
பற்றா யுளதி னருளாள னென்னா னந்தப் பாகவதர்
கற்றா ருள்ளங் கருதியன கடைபோ மாறிங் கருளுமெனப்
பொற்றா மரையிற் பொலிகையினம் முடங்கங் குலிக ணிமிந்துடனே. 129

ஆற்றற் கரிய பேராற்ற லானே முற்று மவர்முகம்போற்
போற்றற் கரிய வவர்வதனம் பொலியக் கண்ட வனைவோரு
மாற்றற் கரிய விளையாழ்வார் மாட்சிப் பெருக்கி னமதுமதந்
தோற்றிப் பொலியு மெனவெண்ணித் துணிந்து மகிழ்ந்து துதித்துப்பின் 130

முனிகள் பேரன் றனையகழ்ந்த மூடும் பள்ளிக் குள்வளர்த்தக்
கனிகொண் மனத்திற் பூதூரார் பெரிய நம்பி கான்மலரைச்
சென்னியின் வணங்கி யரங்கனையுஞ் செந்தாள் பணியா துடன்மீண்டு
துனிகொண் டுள்ள மத்திகிரித் தொல்லோன் பணியே துவக்கினரால். 131

## வேறு

இவ்வா றுள்பூ தூரிறை யோர்பகற் கச்சிநம்பி
யொவ்வா தவின்கைங் கரியங் களுளூற் றுமாறுஞ்
செவ்வாய் வரத னவர்பா லருள்செய் யும்பண்பு
மெவ்வா யுமின்றென் றிதயங்குளிர்ப்பே றிமற்றும். 132

நம்மா ளவந்தா ரருணண் ணுநலத் தரென்றுந்
தம்மா வுளங்கொண் டவர்கோ யிறனித் தியங்கக்
கைம்மா மலர்கூப் பொடுந்தம் மனைக்கண் ணழைத்துச்
செம்மாந் திருநான் குறுப்பும் படிசேர்த் தவுள்ள. 133

கண்டந் தநம்பி கலிநீங் கவெழுந் தநீரே
விண்டிங் குவன்றுச் சிரமத் தடம்வீட்ட லென்னே
புண்டங் குவேலா னரையன் புறம்போக ஞானக்
கண்டங் குநாத முனியார் முனமுய் யக்கொண்டார். 134

நூலா றகற்ற னுமக்குற் றதன்றென் னவன்னர்
மாலா மனத்தை மறித்தீர்த் தனர்மீ ளலுற்றார்
மேலா மிறைசேர் திருக்கண் ணமங்கைக் கணண்டா
னேலா துறக்க முணவுந் துறந்திட் டவாற்றான். 135

கன்மந் துறந்தார் கருதும் பணிக்கா கவுண
மின்மென் றுயிலா திகளே வையுமேய்ந் தநும்மின்
றன்மந் தெரிந்த தகையோ ரறந்தா யலென்னே
மன்மின் புதல்வன் றுயர்தீர்த் தநன்மாண் புளீரே. 136

என்றே தெருட்டத் தெளிந்தெம் பெருமா னுரைய
நன்றே நுமது திருவாய் மொழிநா டுநூலி
னன்றே யரிய பெருநூற் பொருளான் றோர்வாய்மை
மின்றோ யுளத்தீ ரொருவேண் டுகைமே வுகின்னும். 137

மற்றென் றுமின்றம் மறைபே ரருளா ளன்மாட்டிற்
பற்றென் றுமின்றென் மனம்பற் றியபண் பையொன்றி
னுற்றங் குதவி படியேற் குரைத்தாள் கவென்னப்
பெற்றங் கிருந்து பெயர்ந்தா ரதைப்பெட் பினன்றே. 138

பூதூ ரிறைவ ரவர்பின் சிறிதா றுபோகி
மீதூர் விழைவி னிறைகொண் டனர்மீ ளவில்லின்
மாதே விதன்மத் தருஞ்சூக் குமஞா னமற்று
ளேதோ விதர குலத்தா ருயர்நம் பியென்றே. 139

அன்னே ரிருந்த வழகா தனந்தன் னைநீரின்
முன்னே யலம்பி யதுதொட் டதின்மூழ் கிநிற்க
வென்னே யிஃதென் றெழினு யகன்கேட் பவில்லா
டன்னே ரொழுக்கந் தனைமெச் சுபுதாள் புகன்றுள். 140

கேட்டா ரதனைக் கிளருள்ளங் கலங்கி யந்தோ
நாட்டார் புகழு நலம்வாய்ந் திடுந்தன் மவில்லாள்
கூட்டா தவென்றன் கொடுமா வினைதன் னைநோக
மாட்டே னலெனே வெனநொந் தனர்மற் றுமன்னே. 141

நன்மா மணத்த வடைகவ் வியநா கவெற்பன்
பொன்மா மரைப்பூங் கழல்கண்டு வணங்கிப் போற்றிக்
கன்மா மனத்தென் கடியாளபசா ரநின்ற
னின்மா மனத்தி னியையா தருளென் றிரந்தார். 142

திருக்கச் சிநம்பி யொருகாற் றிகழ்தே வராசற்
குருக்கத் தினேமத் தொளியா லவட்டத் தின்வீசும்
பெருக்கத் திற்பை யப்பெரும்பூத புரிய ரென்ன
டுரைக்கத் திருமா லுணர்ந்துள் ளமுவந் துரைக்கும். 143

## வேறு

கறையறுங் கச்சி நம்பி கணிப்பருங் குணத்தி யாமே
மறையுறும் வாய்மை யாய பரம்பொருள் விலக்கின் வேறு
நிறைதரப் பொருத்தி னென்றுய்த் நிகழ்வதுஞ் சமய மாமே
சிறையறு பிரபத்தி யொன்றே செயற்கரு முபாய மன்றே. 144

அந்திம நினைப்பும் வேண்டா வவசான தசையின் முத்தி
வந்திடும் பெரிய நம்பி யடியிடை வதிவ தொக்கு
மந்திலென் றிரிய வாறு வார்த்தைக ளருள வன்னர்
சுந்தரர்க் கதனைச் சொல்லச் சொலற்கரு முவகை பூத்தார். 145

இன்னண நிகழ வீங்கே யிரும்புன லரங்கந் தன்னின்
மன்னுறு முனிகள் பேரன் மலரடி யடைந்தோ ராருந்
துன்னினர் பெரிய நம்பி துணைப்பதந் தொழுது நீரே
பொன்னகர் பொருவுங் கச்சி யெழினகர்க் கெழுந்து மாதோ. 146

இப்பெருந் தரிச னத்திற் கிறையென் விளையாழ் வாரை
யொப்புற வமைக்க வீங்கே யுவகையிற் கொணர்க வென்ன
வப்பக டுடைய நம்பி யமையுமென் றரிய தேவி
மைப்புயற் குழலா ளோடு மனமுற நடந்தா ரன்றே. 147

கடநக நதிக ளெல்லாங் கடந்தனர் நெறியி னேகிக்
கடனிகர் கரிய வேரி காத்தரு ளிராமன் வைகுந்
தடவயல் செறியுஞ் செய்ய தண்புனன் மதுராந் தத்தே
யடைதர விளையாழ் வாரு மருளாள னருளும் வண்ணம். 148

நம்பியா னடியை நாடி நளிர்புன லரங்கஞ் செல்ல
வம்பவிழ் பொழிலின் கச்சி வளநகர் தணந்து போகி
யும்பரு ருறமூ மந்த வுயர்மது ராந்த கஞ்சென்
றெம்பிரா னிராமன் கோயி லுழைந்தன ரிறைஞ்ச மன்னே. 149

நுழைதலும் பெரிய நம்பி நோன்மையப் பரமன் பாதம்
விழைவுடன் பணியக் கண்டிவ் விழுமியோ ரியாவ ரென்ன
வுழையுளா ருண்மை செப்ப வுவப்பெனுங் கடற்கு ளாடிப்
பழமையி னவரின் பாத பங்கயம் பணிந்து மற்றும். 150

கும்பிடப் போன தெய்வங் குறியெதிர்ப் பட்ட தேபோ
னம்பியே நுமது பாத நாடியா னுய்யும் வண்ணங்
கம்பமாக் களிறு காத்த கரிகிரி வரத னேவ
நம்பியே படர்ந்த வென்றன் கட்புல னணுகி னீரால். 151

கேசியைப் படுத்தோன் வாழுங் கெடலரும் பூதூர் வந்தேன்
பேசிடு மிளையாழ் வானென் றளியனைப் பெரிய வையந்
தேசிக மணியா யென்ற னுயிர்க்களிம் பொழியச் செய்வீ
ராசறு மடிகே ளென்ன வங்கரங் குவித்தி ரந்தார். 152

இன்முகத் தவருங் கேளா விபமலை வரதன் கோயின்
முன்மனப் படியி னைத்து மெனவிவர் முகமுஞ் சாம்பித்
தன்மநற் றுறையீர் காலந் தாழ்ப்பது தகுமோ வைய
தொன்மறைத் தடமே தோயுந் தெழுனையந் துறைவர் தம்பால். 153

கண்டதே யமைவு ளுதோ கலைவலார்க் குணரா துண்டோ
கொண்டலின் சபலை மானுங் கொளற்கரு மனித யாக்கை
மொண்டுள வினையை வீட்டி முதமுறற் கிதுவே யன்றோ
திண்டிறற் கருவியைய தேவரீர்க் கறைவ தென்னே. 154

உம்பரு மூலைய வீறு நிசிசர ரொழிய முன்ன
மம்பெனுஞ் சோனை மாரி யளவறப் பொழிந்த விந்தக்
கொம்பனை சனகி மின்னிற் குலவுறுங் கரிய மேகத்
தம்பொனி னிலயுத் தூடே யளியனை யளித்தி ரென்ருர். 155

ஞானமா வுறைய நம்பி நன்குணர்ந் தவரி னூற்ற
நானவார் குழலி னுண்டா ணிலயக்குப் புறம்பே நண்ணுந்
தேனிமிர் மகிழின் கீழே திருத்தமைந் தினையுஞ் செய்து
மானமார் துவய மாதி மந்திரம் பலவு மீந்தார். 156

அத்தின முதலே யந்த வழுத்துறுந் திருப்ப திக்குத்
தொத்தறுந் துவயம் விளைந்த திருப்பதி யெனும்பே ருண்டாம்
வித்தகக் குருவே சீட ரெனுமிரு விழுமி யோரும்
பத்தருக் கருளி ராமன் சானகி பதமும் போற்றி. 157

இருவரு மிருந்தங் கேகி யிணைதபுங் கச்சி யெய்திப்
பொருவரு மருளா ளன்றன் பொற்பதந் தொழுது நாளு
மரியநூல் பலவு மாராய்ந் தடைபவர்க் கருளி யாங்கே
யொருபெரு மனையுள் வாழ்ந்தா ரும்பரு முவக்கு நீரார். 158

ஆங்குறை பொழுதிற் பூதூ ரவதரித் தவரு நம்பி
பாங்கினில் வியாத சூத்தி ரப்பொருள் பலவு மற்று
மோங்குவாய் மொழியோ ராயி ரந்தமை யொருவி மற்றத்
தேங்கமிழ் தொருமூ வாயி ரங்களுந் தெரிக்கப் பெற்ருர். 159

நிகழவின் னணமோர் வைணி கர்செலா விளையாழ் வார்தந்
திகழ்திருச் சென்னிக் கெண்ணெய் தேய்த்தவோர் வைண வர்க்கு
நுகர்தரப் பணியா ரங்க ளளியென நுவலத் தேவி
பகர்தரச் சிறிது மின்றென் றகத்தினுட் படர்ந்து கண்டார். 160

மெபயதமெசம் பெரிய பாண்ட நிறைவுறச் சினந்த வற்றை
வெய்துயிர்த் தெடுத்த வர்க்கு விருப்புட னருளிப் பின்போர்
செய்தியி னவத ரித்த செழும்பதிக் கெழலு மீங்கே
நெய்திகழ் நெடுவேற் கண்ணூர் தேவியோர் நிமித்தத் தானே. 161

ஆரியர் பெரிய நம்பி யன்புறு மனைவி யோடுஞ்
சீரிய லுணரா ரென்னப் படுகலாஞ் சினந்து செய்யக்
கூரிய வுணர்வி னந்தக் கோதிலா ருடனே யின்பூ
வேரியங் குழலி னுளி னடந்தனர் விரைவி னங்கே. 162

பூதலத் திருவை குந்த மாந்திரு வரங்கம் போகப்
பூதலூ ரிறையு மீளாக் கச்சியம் பதியுட் புக்குத்
தீதுற நிகழ்ந்த செய்தி யாவையுந் தெரிந்து தேவி
மீதுளம் வெகுளி பொங்க மெல்லியன் முகத்தை நோக்கா. 163

முச்சக முவக்கு ஞான முனிவரா யிலகு மம்பொற்
கச்சிநம் பியையி ழித்தாய் கமழுண விருந்த தின்றென்
றச்சமின் றதுக ரந்தா யாரியர் மனைவி மாட்டு
நச்செனுங் கலக மாடி நகர்தணந் தகலச் செய்தாய். 164

ஆகையிற் றரும பன்னி யன்றுநின் பிறந்த கத்திற்
கேகுதி யெனவே யேன்ற துணையொடும் விடுத்துப் போக்கி
நாகவெற் பருளா ளன்முன் னணுகியஞ் சலிசெய் தைய
காகமும் பிழைக்க முன்னங் கர்த்தனே யெனநொந் தேத்தி. 165

இல்லறந் தணந்து மற்றைத் துறவற மியைய யானே
நல்லருங் குருவாய் நீயே நயந்தருள் புரிகவென்ன
மல்லடு திணிதோண் மாய னியமன மருள முன்னம்
புல்லிய வுரிய மந்தி ரோபதே சத்திற் பொங்கி. 166

மும்மையா முலகங் காக்கு முத்திருக் கோலும் வண்ணஞ்
செம்மையா முடையுங் கொண்டே திகழ்தரச் செங்கண் மாலுங்
கொம்மையார் விழியி னேக்கிக் கூர்தரு முவப்பிற் பூசை
யம்மையா யிழைக்கி ஞானத் தருச்சகன் வதனத் தானே. 167

கதிராயி ரஞ்செய் தேவன் காசினி விரவ மூசும்
விதிராருந் திமிர மோச்சும் விதமக விருளை வாட்டும்
யதிராச னெனவே யாரு மிசைக்குமின் பெயரு மீந்தே
மெதிராடும் வாதி சங்க மடர்த்தினி யிலகு கென்றான். 168

வேறு

இன்ன வண்ணமெ திக்கிறை யாயவர்
பின்னர் தாமெழுங் காரியம் பீடுற
வுன்னி யோர்திரு வைணவ ரொண்முகந்
தன்னை நோக்குபு தாமருள் செய்குவார். 169

பெரிய பேர்திரு மாமலை நம்பியை
யருகி யந்திருக் கோவிந்த பட்டரை
யுரிய நந்திரு வொண்மத மொன்றிடப்
புரியு மாறுபு கல்கெனப் போக்கினர். 170

முதலி யாண்டான்மு தன்மைபெ ருங்கூர
மதனில் வாழ்வுறு மாழ்வான டாதூரின்
முதமு ருழ்வாரெ னுமிந்த மூவரு
மெதிப திக்கழன் மாமல ரெய்தினர். 171

யாத வன்றனை யீன்றவள் யாவரு
மோது சீர்த்திய திபதி யொண்கழன்
மீது நம்மகன் மேவிடி னுய்குவன்
பூத லத்தெனப் புந்தியி னோர்கையில். 172

ஒக்கு மொக்குமெ னவய லோர்மொழி
மிக்கெ ழுச்செவி மேவிவி யந்தவள்
புக்க ரும்புதல் வற்கது புந்தியி
னிற்கு மாறுநி லவுறச் செப்பினள். 173

கேட்டி யாதவன் கேண்மையி னீன்றவ
ளூட்டு நன்மொழி யுற்றுயற் பாலதே
மாட்டு நூலுஞ்சி கையும றந்தநம்
வாட்டு பாவம்வ ரைந்தொழி தற்கரோ. 174

ஆழி யாடையி னம்புவி யையவலஞ்
சூழ வந்திடச் சொல்லுவ ராகையி
னேழை நாமினி யென்செயற் பாலதென்
றூழ வுள்ளம ருந்துயர் வாடினன். 175

அன்று கங்குல வன்கன வின்னிடை
நன்று சூழ்வரி னம்மெதி ராசனை
யொன்று ஞாலம்வ லம்வரி னெண்பய
னென்று தேப்பெரு மாளிசைத் திட்டனர். 176

மற்றை நாளவன் சொப்பன மாயதை
யுற்று ணர்ந்துவி யந்துட னேகையி
னற்ற வத்திருக் கச்சியி னம்பியின்
பொற்ற நன்மையின் புக்கது ரைத்துமேல். 177

எண்ணு மெண்ணமெ ழுந்தரு ளாளனுக்
கண்ண லேமொழி தந்தவ னேமனம்
பண்ணு மாறடி யேற்கருள் பண்ணுகென்
றுண்ண யந்துக ரங்குவித் தோதினன். 178

ஆதி நாயக னக்கன வாயதே
நீதி யாமென நேர்ந்தவர் மீண்டவற்
கோத வன்னவ னேங்குவ கைக்கட
லோத மூடுப டிந்துது ளேந்தரோ. 179

அக்க ணத்தெதி ராசரி னண்டையிற்
புக்கொ டுங்கிவ லங்கொடு போகியு
மொக்க நாலிரண் டாயவு றப்புமண்
மிக்க மூழ்ந்தவி ழுந்துத ரம்பல. 180

ஆய செய்திய னைத்துமி பம்பியிந்
நாயி னேனுய்ய நாடித்தி ருவுள
மேய செய்யவி லச்சினை யாதிக
டேய னுருந்து றையினி ழைத்துடள். 181

ஒற்றை யித்தடி தன்னையொ ருவியே
பற்றி மூன்றுப யன்றரு கோலினைச்
சொற்ற நன்னெறி சூழ்ந்தடி யேற்கினி
மற்றொர் சன்மம ணந்திட வின்றியே. 182

வாழும் வண்ணம் வளரருள் செய்கெனத்
தாழ வெம்பெரு மானர்த மதுளங்
காழி றும்பூது றக்கரு ணாதம்
வீழ மீதுவி ழிக்கடை செய்தரோ. 183

வேண்டு மாறுவி ழுப்பமு றவிழைத்
தாண்ட மூன்றுத டியரக் காடையுங்
காண்ட கப்படைத் தாயிரங் கண்ணனுந்
தேண்டு மாறுதி ருத்திப்ப ணிகொளா. 184

செய்ய கோவிந்த சீயரெ னும்பெயர்
வைய கம்புகல் வண்ணம ளித்துல
குய்யு மாறொரு நூலையு ஞற்றுவான்
பொய்ய றும்புனி தர்புகன் றாரரோ. 185

துன்ம ஞத்தர்து களகற் றும்பதி
தன்ம சமுச்சய மென்னும் பேர்பெறு
மின்ம றைப்பொரு ளேன்றவந் நூலினை
நுண்ம னத்தொடு நோக்கியு வந்தனர். 186

வேறு

இங்குறி கழ்ந்த வெல்லவு மேரா ரின்னரங் கத்திடையே
தங்குதொ ழுனைத் துறைவரின் பாத தாமரை யாளரெலாம்
பொங்குசெ விப்பு லன்கொ டரங்கப் புகழ்பெரு மாளரைய
ரங்கம லப்பூ வானனங் காணு வங்கைகு வித்தடைவே. 187

எண்ணுறு மேமப் மொன்முடி யாரு மின்சிக ரித்தளிக
ணண்ணிய கச்சி நன்னக ரேகி நான்முகன் வேள்விமுதன்
மண்ணக முய்ய வந்தருள் கண்ணன் மன்னும ருண்மணவாக்
கண்ணிய சன்னி யாசி யிறையைக் கண்டுவ ணங்கியரோ. 188

இத்தலை யேகு வித்திடு கென்னக் கெஞ்சி யிரந்திடவவ்
வித்தக ரேகிக் கச்சியை நாடி விண்ணவர் கட்கிறையி
னித்திய செல்வ நேரிரு தாளை நீண்முடி கொண்டிறைஞ்சி
முத்தமிழ் வேத முந்திய தேவ கானம தின்விரவ. 189

கன்னெகிழ் போகக் கன்னலும் வெள்கக் கானமி சைத்திடலும்
பின்னைம ணுள னின்னமிழ் துண்ட பெற்றிய னுகியுவந்
தென்னவி ழைந்தீ ரென்னவ ரைய ரெம்மெதி நாயகரைப்
பொன்னிய ரங்கம் போதவ ருள்க வென்னவி ரந்தனராம். 190

ஆகுவ தோரா வவ்வண மேகு கென்னவருச் சகனு
லோகையி னேத வோமென வன்னு ருத்தர வேதியனைக்
கோகன கத்தின் ருடொழு தேயங் கூரமெ ழுந்தவர்முன்
னுகவி ளங்கும் பாகவ தத்தோ டன்றும ருங்கெழவே. 191

அரையரு டன்பு றப்பட வாங்கே கச்சியி னம்பிமுதற்
புரையறு கேள்விப் புந்தியர் தன்னம் போந்துபு றம்வழிவிட்
டுரைசெய மங்க ளம்புய லோதி யொண்ணுதல் புக்கவகந்
துரிசுமு வப்புந் தோன்ற நடப்ப தென்னவெ ழுந்தனரே. 192

பொன்புரை சாலி யின்கழை யோங்கும் பூகமு தற்பலவும்
மன்பெரு பண்ணைச் செங்கயல் பாயு மன்னுபு னல்வளநா
டன்பொடு பல்ல பிற்பட வேகி யற்பகல் வேறுபடா
மின்பல செங்கேழ் மாமணி மாட மேவரங் கம்மிடைந்தார். 193

## வேறு

இருமை யும்புவி யெய்திட வொழுகுதீம் புனலிற்
பரவு காவிரித் தடமவர் படர்தரல் செவியுற்
றரவ ணைப்பர னடியவ ரனைவருங் குழுமி
மரும லர்த்தொடை முதற்பல வரிசையு மகிழ்வாய். 194

கொண்டு போதரக் குதலமீ துறுப்பெலாம் படியக்
கண்டி றைஞ்சினர் களித்தன ரவைசிரம் வகியா
மண்டு மாடநீண் மறுகிடை வலமுறப் போகிக்
கொண்டல் கண்படு சினகரங் குறுகினர் நுழைந்தார். 195

பண்டை யின்முறைப் படிமுன மரங்கநாச் சியரைக்
கண்டு தாடொழு தழகிய மணாளனின் கழல்க
ளிண்டை தன்னையு மிறைஞ்சினர் திருமணித் தூணி
னண்டை நின்றனர் பெரியநம் பெருமாளி னழகும். 196

அமல னாதிப்பி ரான்படி யடிதொழு மளவிற்
கமலை நாயகன் கழல்கழூஉந் தீர்த்தமே முதல
மமலம் வீயுமா றுதவினன் முகிழ்நகை யுடனே
நிமல ரின்முகங் கடைக்கணித் தின்னண நிகழ்த்தும். 197

நம்பெ ரும்பக டவனியி னாருணர்ந் துய்வா
னிம்பர் போதிரென் றியாமுன மிசைத்திடு மியைபி
னம்பு வித்தல மவதரித் தனிரதி னாய்ந்
தெம்பெ ருந்திரு விருவிபூ தியையுமீங் கிழைக்க. 198

உலக மூன்றுநம் முடையவ ரென்றினி யுரைக்க
விலகு நாமமு மீன்றன நுமக்கென விசைக்க
வலகில் கேள்வியவ் வுடையவ ரங்கண்முத் துகுப்ப
விலகு நாயக னியமன மியைந்துமீண் டிருந்தார். 199

மற்று மன்னரு மிருவிபூ தியையுநா மணக்கப்
பெற்ற தும்பெரு நம்பியின் பெய்கழற் கழலென்
றுற்ற வுள்ளமு முவந்தக ளங்கநாட் டாழ்வா
னற்ற வன்றனைக் கொடுதிரு விழாமுத னடவி. 200

கோயி லின்பணி குறைவறப் புரிதரற் கவ்வே
யேய திண்டிற லிறைவரா யியற்றுறு நாளுந்
தேய மெங்கணுந் திருவரங் கத்திரு விழவே
சேய தென்றுகொண் டாடிடச் செய்தன ருறைந்தார். 201

## வேறு

உடையவரிவ் வாறுறையப் பெரியதிரு
மலைநம்பி யுழைமுன் போய
மிடைதிருமட் குறியீரா றங்கமினுந்
திருவைண வருமுன் மேவி
யிடைமலரி னடிதொழுதே யிருகரமுங்
குவிந்துசிரத் தேறு நிற்கப்
புடையிலகு முதலிகளின் சமவாயஞ்
செவிமடுப்பப் புகலா நின்றூர். 202

திருமலைநம் பிகண்முதலித் திரளோடுந்
திகழ்தருகா ளத்திக் கேகி
யரனுழையன் பொடுபூசை யாற்றிவருங்
கோவிந்தப் பட்டர்க் காணுப்
பிரியமொடி லௌகிகமாச் சிலபகரத்
திரும்பமனம் பேணு தந்த
வுரையுதறி மலர்கொய்தற் கிவர்ந்தனரோர்
பூந்தருவி னுரவோ ராங்கே. 203

நம்பியவர் கருத்தடலை நாங்காண்டு
மெனவலியா நறவே சோரப்
பம்புமலர்த் தருவின்கீழ் மகிழ்மாற
னருடிருவாய் மொழியுட் பண்ணூர்
வம்புசெறி பூவும்பூ சையுந்தகுமே
வாமனனுக் கல்லா லென்னு
மம்பொருளும் வாக்கியத்திற் காம்பொருளு
மாரணத்தின் முறையே யோத. 204

செவியுறுமப் பட்டருடன் றகாதுதகா
தெனமொழிந்தே சினைநின் றங்கட்
புவியிழிந்தி லிங்கமுதற் புராரியுறுஞ்
சின்னமெலா மிரிந்து போகட்
டவயமெனை யாதரிப்பா யெனநம்பி
யடிமலரின் முடிசாய்த் தார்ந்தே
யுவமையறு முபயவிபூ தித்திருவிற்
கொண்மகுடஞ் சூடா நிற்க. 205

முடைவீசுந் தலையோட்டின் முன்னிரந்தான்
றன்னுழையே முடிசாய்த் தேனே
கடையேனைக் கடைத்தேறக் காத்தருள்க
வெனவழுது கரைந்து நைந்தே
யுடையேனுந் திருவடியே யொருவேனு
னெனவிழுந்த படியே போற்ற
வடைவேயா மவையுணர்ந்த வவரிவரை
யெடுத்தருளித் தெருட்ட வாங்கே. 206

தலத்ததனி லுளர்சிலர்போந் தகங்கொதித்துத்
தீவிழித்துத் தகவின் றெங்கள்
வலத்தவரை யிங்ஙனநீர் வகைபிறழ
மருட்டுவதும் வலமோ வென்னக்
குலத்துயரம் பட்டருமக் கோயிறிறந்
திடுகோலே யெழுவா யாய
நிலத்தெறியா நின்மலரா நம்பிமல
ரடிவழியே நின்றே மற்றும். 207

அடல்செறியு மந்திரவா தியினருகே
யுறைபவரை யலகை வாட்டுந்
திடமுளதோ நுமதுயிர கினியென்மாட்
டொருதினையுஞ் செல்லா தென்னக்
கெடலரிய திருஞான நம்பியுமப்
பட்டருடன் கிளர்ந்து போந்து
படவரவி னல்குலரம் பையர்வதியும்
வடவரையைப் பணிந்து சேர்ந்தார். 208

சேர்ந்தங்கே சவுளமுதற் செய்வனகண்
முற்றுவித்துத் திருத்த மைந்துங்
கூர்ந்திலக வணைந்தனர்நம் பெரியாழ்வார்
திருமொழியே தொடங்கிக் கூருஞ்
சேர்ந்திரத மொழுகுபல செந்தமிழ்வே
தங்களையுந் தெருள வூட்டிப்
பேர்ந்துவனஞ் சென்மகவைப் பின்மணந்தா
ரின்மகிழ்ந்தா ரென்றூர் பெட்பின். 209

### வேறு

பொற்புடன்பு கலுமப்பொ ருள்கண்முற் றுஞ் செவிகொளா
வற்பினந்த வைணவர்க் கருள்சுரந்து மகிழ்வுறு
நிற்பயதி ராசர்நம்பெ ரியநம்பி நிலவுமக்
கற்புயர்ந்த கனமிகுந்த கண்ணியர்க் கியம்புவார். 210

சென்றுதிருக் கோட்டியூர் நம்பிசெய்ய தாள்பணிந்
தொன்றுமந்தி ரார்த்தமோடு முயர்சரம சுலோகமுந்
துன்றுசெய்ய பொருளினேன்று தொல்லுலக முய்வணம்
பின்றரங்க நதியரங்கம் பெட்பினெய்து கென்றனர். 211

அந்தவண்ண மவர்நடந்து கோட்டியூர ரடிகளில்
வந்திறைஞ்சி யஃதுரைக்க வாய்திறந்த வர்வளம்
முந்துமந்தி ரார்த்தமொய்ம்பி யாவருக்கு முணருமா
றிந்தவேளை யேகிமற்று மெய்துகென்றி சைத்தனர். 212

மீண்டரங்க மிடைந்துசில்ல பகலகன்று மீண்டெழுந்
தாண்டருள்க வென்னவன்று மவ்வணம்பு கன்றிட
மாண்டதொல்ல ரங்கமேகி மற்றுமற்று மவ்வண
நாண்டுறந்தீ ரெழுமுறையு நடந்துமொன்று மின்மையான். 213

ஆசையன்ற கங்கலங்கி யவரிருக்க வொருபக
லோசைபெற்ற கேட்டியூர ரூரரங்க முற்றுளிர்
காசையுற்ற பணிபடுத்த காரரங்கன் றுளிணை
மாசைமொத்த மங்களாசா சனமிழைக்கும் மையமே. 214

முதலிகள்வ ணங்கியங்கு வாழ்வுளார்கண் முகிழ்தரத்
துதவலின்றி யுடையவர்க்கிங் கொதுக்குமாறெ வென்னென
விதயமாண்டொ ரெல்லைகாணு கென்றுநான்மு கத்துமுன்
மதுவின்வைரி வழங்கிஞனென் றவருமற்று மாடிஞர். 215

ஆண்டரங்க னருச்சகன்மு கத்தினம்பி நீரினிக்
காண்டலின்றி யிவர்கருத்து வக்குமாறு கழறுகென்
றேண்டயங்க வியம்பநம்பி யேன்றெழுந்து தங்கர்
மாண்டயங்கு முடையவர்க்கோர் மறைவலாரை விட்டனர். 216

விட்டவேத வாணர்வந்து விளம்பநம்பி யாணையை
மட்டொழிந்த மகிழ்விராமா னுசனடாதூ ராழ்வானுந்
தட்டொழிந்த நூன்முதலி யாண்டான்கூரத் தாழ்வானு
நட்டொருங்கு மருங்குபோத நடந்துகோட்டி யூருறு. 217

மூவர்தம்மை யயனிறுத்தி நம்பிபாத முளரியை
மேவியொன்றி யாயிறைஞ்சி மிக்கொடுங்கி நிற்கவப்
பூவமரர் யாமுரைக்கும் பொருளெவர்க்கும் புகல்கிலா
தாவலிற் புரக்கவென் றருள்சுரந் தளித்தனர். 218

கொண்டுபிற்றை யவ்விரா சியந்துலங்கு கோட்டியூ
ருண்டுவெண்ணெ யொளிருமாய னுயர்திருவோ லக்கமங்
கண்டியுள்ள வனைவருந்த மள்ளகங்கொண் டுய்யுமா
றண்டரும் பழிச்சமுன்ன ராய்ந்துதூற்றி விட்டனர். 219

நம்பியிந்த நலமுணர்ந்து நாடியந்த யதிபனை
யெம்பகர்வி னுக்குமாறி ழைத்துவந்த தென்னென
வம்பொருந்து குருவினாணை யகற்றியெய்து பூதியே
வெம்புவண்ண மடியனேற்கு விளையுமூதி யம்பிற. 220

என்னவன்ன யதியிராச ரேனறிந்த கந்தனை
முன்னலின்றி ழைத்திரென்ன மீளவந்த முதியரு
மன்னியிந்த நிரயம்வெய்ய மதியிலேனு ழல்கினும்
பின்னனேக சீவகோடி பிழைக்குமென்றே யவர்தொழ. 221

கோட்டியூர ரவருரைத்த குணநிரம்பு மொழிகொளாக்
காட்டொழிந்த வவர்கருத்தின் கண்ணியர்க்கு வியப்புறு
வாட்டமுற்ற மனத்தினிந்த வகையிழைக்க வறிகிலேம்
வீட்டிருந்தே மெனவெதும்பி மற்றுணர்ந்து விளம்புவார். 222

இற்றைநாடொ டங்கியைய வித்தரிச னத்தினை
முற்றவிரா மானுசசித் தாந்தமென்று மொழிகயாஞ்
சொற்றவாணை கடந்தபாவ மில்லையென்று சொல்லவங்
குற்றயாருந் தாமிடைந்த பேற்றையுள்ளி யுவப்புறு. 223

சொல்லருந்தி றல்படைத்த விம்முனிவர் தோன்றலு
மெல்லுறுமெம் பெருமானாரே யென்றிரைந்து கொண்டவர்
மெல்லரும்ப தத்துணையின் மேயிறைஞ்சு மெல்வையி
னல்லிரும்பு கழ்க்குமூல நம்பிமற்று நாடியே. 224

எந்தஞால முங்கரியி ருக்குமாறி யம்புகே
னிந்தஞானி யெம்பெருமா னாரேயிந்தத் தரிசனஞ்
சந்தமாரு மிவரதென்று சாற்றயாருங் கரமெடுத்
தந்தமாக வாகுமாகு மென்றரற்றி யாடினர். 225

### வேறு

பின்னம் பெருமானர் நம்பியடி மேல்வணங்கி
யின்னன் முகமனெடு மேந்துவிடை முதலிகளிற்
றென்னம் பொழிரங்கந் திரும்பிமணந் தங்குறையும்
பென்னம் பெரியதிரு நம்பிமலர்த் தாடொழுதே. 226

பேசா தவருறையப் பின்போந்தார் கோட்டிநக
ராசா ரியருழையே யாயவெலா மாங்குரைக்க
நேசா பிமானமொடந் நின்மலரு மிக்குவந்தே
வாசா லகரிளையாழ் வாரை வருகெனவே. 227

சென்றே திருவரங்கப் பெருமாள ரையரிட
நன்றே திருவாய் மொழியாவு நன்குணர்ந்து
பின்றே டரியசில வார்த்தைகளும் பெற்றிடுக
வென்றே யருளிவிட வேன்றங் கெழுந்தனரால். 228

அவ்வரையர்க் காறுமதி யாற்றி யரும்பணிகள்
செவ்வியெதிர்ந் தொருகாற் செம்மஞ்சட் காப்பியற்றுஞ்
செவ்விக் கடைக்கணித்துச் செம்மாந் துளமவரை
யெவ்வ மகன்றெழிய மின்மொழிக ளீங்குரைப்பார். 229

பீதகவா டைப்பரனே பிரமகுரு வாகிவந்தென்
றோதுமு றைப்படியே யுறங்கும் பெருமாளே
நாத னெனவுலவு நம்பெருமா ளாய்வந்த
வாதரமே மிக்கவெழி லாசாரி யன்புடையே. 230

திருமந் திரமருவிச் செஞ்சரம சுலோகத்தில்
விரவும் விரகொன்றே விழுமி தெனவலியாத்
தெரியேன் குருவலதோர் தெய்வமெனத் தேறியவன்
மருமா மலரடியின் மன்னும் விழைவுடனே. 231

பத்தி புரிபவர்க்கே பரமபதப் பேறுகு
முத்தி யணுகுமிது முன்றெழுணே யந்துறைவர்
நத்து பவர்க்குரைத்த நல்வார்த்தை யென்றருளி
வித்தகத்தின் மாமதுர கவிகள் விளம்புமுனம். 232

கண்புரையுங் கண்ணிளெழி னுண்சிறுத்தாம் பின்பொருளும்
ப்ண்பெருகுஞ் செய்ய பரகாலன் வாய்மொழியும்
பண்பொழுக வோதவிவை பான்மையுறக் கொண்டவரு
நண்பினவர் தாள்பணியா நண்ணிவிடை மீண்டனரோ. 233

மீண்டும் பெருநம்பி மெல்லடியில் வீழ்ந்தெழலுங்
காண்டுங் நுமதுதிறங் காலமிகத் தாழாமே
வேண்டும் விழுப்பமுறுந் திருமாலை யாண்டான்பா
றேண்டுந் திருவாய் மொழிப்பொருளுந் தேறுகென. 234

அம்மாண் பினரருள மற்றவரு மாங்கேகி
யம்மா மவரடிமே லன்பிற் படிந்தெழுந்தே
தம்மா வரவுரைக்கத் தண்ணளியி னுங்கவருஞ்
செம்மாந் தகமந்தச் செம்பொருளுந் தாமுரைக்க. 235

கேளா வவரறியாக் காலத்து ளென்றுரைக்குங்
கோளாரும் பாசுரத்திற் காண்டான் கொடுத்தபொரு
ளாளா தொருபொருள்வே றுய்ந்தறைந்தீ தாகிடுமோ
வாளா வழங்கினனே யென்று வணங்கினரால். 236

ஆண்டா னதுகேளா வாராய்ந் தகமகிழ்ந்தே
யேண்டாங் கிருங்கோட்டி யூர்பெரிய நம்பிகளுஞ்
சேண்டாங் கருமுதலிச் சங்கமொடுஞ் சேரவையில்
வேண்டார் களும்விழையு மப்பொருளைச் செப்பினரே. 237

மிக்குயரு மப்பொருளின் மேலோ ரவர்வியவாத்
தக்கவிது முன்னாள் வந்தவரே தாமுரைத்தா
ரக்கருணை யிவ்விளையாழ் வாருழையே தான்மலிந்த
பக்குவமுண் டுள்ளபடி யானேயிப் பண்ணவரும். 238

சாந்தீ பினியிடமன் றின்னறவைத் தண்ணளிகண்
மாந்தித் திருவிளரி மன்மிழற்றுந் தண்டுளபப்
பூந்தார்ப் புயல்வண்ணன் பொற்கலைக ளேன்றதெனத்
தேர்ந்தே நமதகமே தெண்ணூல் பயிலுவரே. 239

ஓரா திவருளதோ வென்றே யுவந்துரைப்பச்
சீரார் திருமாலை யாண்டான் செழுநகையி
னோராய் மொழிந்தருள வெம்பெருமா னார்வக
ணோரார் நெறிபிறழா துண்ணிலவ நேர்ந்தனராம். 240

## 23-வது சருக்கம்

### வேறு

*தன்னினைவி னாகியசை தந்துமசை வின்றி*
*மன்னுபல வண்டநிரை மண்டுபொரு டோறு*
*மெண்ணினிறை யெண்ணெயென வெங்குநிறை நாத*
*னென்னிதைய மென்றுமொளிர் தந்தெமையுங் காக்கும்.* 1

*வேங்கட மதிற்குலவு நம்பிமக வென்ன*
*வோங்குமதி யைப்பசியி னென்றுபூரா டத்திற்*
*பாங்குபெறு சண்டனது பாகமென வந்த*
*தாங்குகுரு கேசரது தாடலையி ணைப்பாம்.* 2

*ஆடவரு மங்கனைக ளேயரிம லர்க்க*
*ணாடிமறை யுங்கயல்க ணற்குவளை சாய*
*நீடுபுன லாருதட நிறைபெரிய பூதூ*
*ரூடவத ரித்தவரு மிங்குறைய வோர்கால்.* 3

*திருமலைநம் பிக்குரிய தேவிதன தத்தை*
*கரியகுழ னங்கைதனைக் காணவட வெற்பிற்*
*கரியகிடாம் பித்தலைய வாச்சானெனு நாமன்*
*பரிவுடனெ ழுந்தவிடம் பலபகலு றைந்தார்.* 4

*நம்பிபயந் துள்ளவிரு நற்புதல்வர் தம்மு*
*ளம்பெரிய பிள்ளானவர் வாலிபர்க ளன்ன*
*வம்பழுகை யுந்நகையும் வனைகுவது மின்றித்*
*தம்பமென வேவறிது தங்குபவ ராகி.* 5

*அரியபெரு பனுவல்களை யாய்ந்தவையு ரைக்கும்*
*பெரியவர வைக்கணவை பெட்பினொடு கேளா*
*மருவியக மன்னுமுத மண்டவெழில் வதனம்*
*விரியுமல ரென்னவொளி விம்முற விருப்பார்.* 6

*கண்டதுப யந்தவரும் புதுமையிது காணு*
*மொண்டொடிநஞ் சோதரியி னுளிர்கருவின் வந்த*
*வண்டர்புக ழையதிரி தண்டரிறை யென்ன*
*மண்டலமெ ழுந்தனரோ வென்றிவர்ம கிழ்ந்தார்.* 7

ஆரணமு தற்பலவு மன்பொடுப யின்றே
யேரணியு மின்றமிழ்ம றைக்கணசை மீரு
நாரணன லக்குரிய பிள்ளானிலை நாடிப்
பேரணியு மாச்சானகை பெருகியுறை காலை. 8

கோயிலுறை வைணவர்கள் கூடிவட வெற்பைப்
பாயொளிய வெம்பெருமா ளுருறப கட்டை
வாயினுரை செய்யமலை நம்பிகொடு மற்று
மேயவறை கேபவரை கென்றுதெவிட் டின்றே. 9

தரம்பலதி ருச்செவிக டாமமிழ்தி னுண்ணு
வரம்பறமு தத்துவட வரையனடி மலரை
நிரம்பமன னிவ்வணநி கழ்த்தினனெ னத்தங்
கரம்பலகு வித்துமுறை கண்டுதொழு தாரால். 10

செந்திருவ யோத்திவிளை யாடலவை செய்யு
மந்துவரி தம்ச்சிறுவ ரடையமலர் விழியன்
கந்தடுக ளிற்றிரகு நாதனிசை களையே
யந்தமொடு பான்மிகவ யர்ந்துதிரி கிற்பார். 11

அன்னவண மெம்பெருமா ளார்புகழை யென்றும்
மின்னுகுரு கைப்பிரான்பிள் ளான்மிகமி ழற்றி
யின்னசையி னிற்றிரித லீன்றவரு ணர்ந்தே
யென்னவிது வென்னவிது வென்றதிச யித்தே. 12

கன்னனிக ரின்மொழியோர் கன்னிகையை யன்னார்க்
கின்னறமு கூர்த்தமதி லேர்வதுவை யாற்றிப்
பின்னெதிம னின்னடியிற் பொட்பொடுவ ணங்கப்
பொன்னனைய புத்திரனை யாச்சானொடு போக்கி. 13

வசுந்தரையு யும்வணமு தித்தயிதி மன்னைப்
பசுந்துளவ னித்திரும லைப்பரன்ப தத்தைக்
கசிந்துமன முருகும்வகை கண்டடிவ ணங்க
நசைந்திவணெ ழும்படிநீர் நவில்கெனவி டுத்தார். 14

## வேறு

தகுந்தவர் புகழு மாச்சான் பிள்ளானுந் தாமு மாயம்
மிகுந்தவர்த் தொழுது தென்பா னடந்தனர் மிசையி னெங்கு
நகுந்துகிற் படலம் வான முரிந்தது நாலு மென்னத்
தகுந்தடர்ந் தசையுங் கச்சித் தனிநக ரடைந்து மன்னோ. 15

ஆனைமா மலையான் பாத மடைவொடு தொழுது போற்றி
வானையார் முடிகள் பொன்னும் வடமலை நிகழ்ந்த யாவுந்
தேனையார் மொழியி னீன்று டெரிவுறப் புகன்று மற்றுங்
கானையா றுகளை யூரைக் கடந்தன ரரங்கங் கண்டார். 16

சென்றுகா ணெழில ரங்கஞ் செழிப்புற வதியு ஞால
நன்றுகாண் குறய தீச னளினநே ரடியில் வீழ்ந்தே
பின்னுகா ணெழுந்தி ராது கிடந்திட வயிர்த்துப் பெட்பி
னின்றுகாண் மொழிக வெண்ணத் திருந்தது துணிபி னென்றார். 17

என்னலு மலையி னம்பி யெழிற்கருத் திசைக்க வையன்
பொன்னெனு முளமு வந்தப் புனிதரின் முடி பிடித்தே
முன்னெழ நிறுத்திக் கையென் முளரியி னயலி னோக்கா
வின்னதன் மையனோ பிள்ளா னெனவிசைத் தருள வன்னார். 18

அடியனேன் றெழும்ப னென்றே யங்கமோ ரெட்டு மண்மேற்
படியவே விழுந்து பல்காற் றெழுதெழக் கடைக்கட் பார்வை
வடிவெலாம் பரவ நோக்கா வளவிய தொழுனை யாற்றின்
வடுவறு துறையார் நம்பி யிருவரும் வழங்கு நம்பால். 19

வனப்புறு கடைக்க ணிப்பு நும்வயின் வளரு மென்னு
மனக்கினி யனவே பேசி மற்றுயற் பால முற்றுங்
கனக்குமா றருளி யாச்சான் கருத்துற வளித்து வையந்
தனக்கொரு கதிரோ னென்னத் தயங்கினு ரொளியின் மாதோ. 20

வேறு

எம்பெருமா னரிங்க னிலக வோர்நா
ளேதுமிலா வொருகசட னிவருண் டுப்பில்
வெம்பிவிழு நஞ்சினையில் லாளின் கையி
னினிதளிக்க விளம்பவவள் கற்பின் மிக்க
கொம்பனையா ளாதலினக் கொடிய வூணைப்
படைத்தவரின் கோகனகத் தாளில் வீழ்ந்து
கும்பிடுத விழைத்தயலே யொதுங்க வன்னார்
குத்திரமிச் சொன்றியெனக் குறித்துப் பின்னும். 21

அண்டர்களு மழுங்குறமூ வுலகும் வாட்டி
யடல்செறியு மரக்கர்குலங் களைந்தான் பின்னுய்
மண்டலத்தி லெழுகையிலாண் டரே மூண்ணு
துறைந்ததென வுபவாச நெறியே மன்னிக்

கொண்டிருந்த துணர்ந்துதிருக் கோட்டி யூரிற்
குலவுநம்பி பெரியநம்பி யெனுமிக் கோளார்
புண்டயங்கு மனத்துடனே நடந்து வெய்ய
நண்பகலிற் பொன்னிநதி யிடையே போந்தார். 22

தங்குருமார் வரவறிந்த தகையா ரன்னார்
தமையெதிர்ந்து படர்ந்துதழன் மணலின் வீழ்ந்தே
யங்கமலத் தடிதொழலும் பெரிய நம்பி
யமையுமென விருகரங்கொண் டெடுத்த ணைக்கத்
திங்கணிகர் வதனத்து மறித்துங் கோட்டித்
தேசிகரை யடிபணியப் பலகா லன்னு
ரிங்கிதத்தி னொருபுகலும் புகலார் வாளா
விருந்தனரவ் வெரிவெயில்கா லெல்லின் மன்னே. 23

வெம்புமணன் மிசைப்பலகால் வீழ்ந்து வீழ்ந்தே
விதிர்விதிர்க்க வுடறளர வெதும்பக் கண்ட
வம்பவிழுந் துளபமணி வடஞ்சூழ் மார்பா
வளர்தருமாச் சானயர்ந்து கலங்கிக் கண்ணீ
ரம்பொனுடன் மறைப்பவழு தந்தோ வாக்கை
யுயிரகலு மளவுமொரு பரிக்கை யாமோ
வெம்பெருமா னார்நசையு மின்றே விண்டே
னென்செய்கே னெனவரற்றிப் பொருமி னால். 24

தேங்கொலிநீ ரின்பழன நிரையார் செய்ய
திருக்கோட்டி யூரினருந் தெளிந்தாச் சானே
யீங்கிதுகா றுந்தடவி யிருந்தா நும்போ
லெவருளரோ வெனவினிநீ ரிவர்பொன் மேனி
பாங்குபெற வுணவளித்த றலையா மெல்லாம்
பரிந்திழைத்துப் பரிபாலித் திடுக வென்ன
வாங்குளர்கள் பெரியநம்பி தொடக்கத் தாரு
மாமாமா மெனநயந்து மகிழ்ந்தா ரன்றே. 25

## வேறு

அன்றுதொட் டாச்சா னுங்கே யவர்க்குறும் பணிக ளாற்றக்
கன்றுதொட் டெறிந்து முன்னங் கனிகளை யுகுத்தோன் வீறே
தொன்றுதொட் டடையா வண்ணந் தொலைபிறப் பருளிக் காக்கு
மென்றுதொட் டெவரு முய்யத் தெருட்டின ரிவரும் போந்தார். 26

ஒருதடித் துறவி யஞ்ஞ மூர்த்தியென் றொருவ னாங்கே
விருதுபெற் றவனி யெங்குங் கல்வியின் விறலான் விண்ணிற்
பொருதொலித் திருவெங் காலிற் பொற்பதா கைகளே மல்கும்
பெரிதுடைத் திருவ ரங்கம் வயங்கொளும் பெட்பிற் புக்கான். 27

புக்கவ னிரும்பூ தூரார் பொன்முக மணுகி நீவிர்
தக்கநஞ் சமய மாற்றித் தயங்குற நுமதே யாற்றி
னக்கணந் தொழும்ப னாவே னுமதடிக் கன்றே னீயி
ரெக்கருத் துடைய ராவீ ரெனவவர் முறுவல் பூத்தே. 28

அரியொடு கரியா டற்கோ ரொட்டமு மமைப்ப துண்டோ
வரியுட லுழுவை தன்னை யானும்வந் தறைகூ யென்னே
புரிதரும் வாதப் போரி லுனக்குநாம் புறந்தந் தேகில்
விரிதருங் கலைகண் மற்றும் விடுக்குதும் பயிலா தென்றார். 29

என்றிலெள கிகவா தங்க ளிருவரு மினைய முன்னங்
கன்றிய மனத்த ராகிக் கேட்பவர் கருதும் வண்ணம்
நன்றுசிற் பொழுது நாவி நடத்தினா ரரிய நூலிற்
பின்றுகற் றவரின் சங்கம் பெட்புற விழைக்க லுற்றார். 30

ஒன்பதிற் றிரண்டு வைகல் வரையிழைத் துஞற்றும் வாதத்
தன்புதத் திளையாழ் வாரின் மருங்கினிற் பதினே ழாநாள்
வன்புசற் றிறங்க வன்னார் வரதனை வழுத்தி யைய
நின்பெருத் திலகு மிந்தத் தரிசன நிகழு மென்னால். 31

இறுதிபெற் றிடுமோ வென்னோ வெனவிரங் கினரக் கங்குற்
குறுதினை யுணவுங் கொள்ளா ருறங்கிய கனவிற் கண்ண
னறுதிருத் தொழிலை யாற்றி னற்றிருத் துறைவர் முன்னந்
தெறுதிறன் மாயா வாத கண்டன முதல தேறு. 32

ஆற்றிய வரிய நூல்க ளயர்ந்திரோ வென்ன வையன்
போற்றிய துயிலெ ழுந்தே பூமகள் கணவன் சொற்ற
மாற்றமோ டரிய வந்தப் பனுவல்கண் மனத்திற் கொள்ளா
வாற்றலின் விடிந்து வாத மாற்றிட வவனும் வீழ்ந்தான். 33

இரிந்தவ னவர்பூந் தாளி லிறைஞ்சியிச் சிறியே னுந்தங்
திருந்திய வடியே னென்னச் சிகைமூன் றுதடிமுந் நூலும்
பொருந்துற வளித்தைந் தாய திருத்தமும் பொலிய வாற்றிப்
பெருந்திரு வருளா ளன்ற னருளினிற் பிறங்க லாலே. 34

அருளாளப் பெருமா ளெம்பெம் மானுரென் றளித்து நாமந்
திருவாயின் மொழிக ளாதி திவ்விய பிரபந் தங்கண்
மருள்வியும் பொருள்க ளோடு மற்றளித் தகமு மேனுந்
தெருளாளு மொளியார் வண்ணந் திருவரு டிகழச் செய்தார். 35

இன்னண நிகழ வோர்காற் பிரபந்த மிசைக்க வாழ்வார்
மன்னிய வொழிவில் கால மவையெலா முடனுய் மன்னி
யென்னும்வாய் மொழிக்கு முன்ன மெமுனையந் துறைவர் கூறுந்
தன்னிக ருரைவி ளக்கத் தகுமெனக் களிக்க யாரும். 36

நசைந்ததை யனந்தாழ் வானு நாயினேற் கரிய வந்த
விசைந்திடு பணிக ளாற்ற வெழிலருள் புரிக வென்னக்
கசிந்துளங் கடைக்க ணித்தம் முனியிறை விடுக்க வேகி
யுசந்தபூங் கயிங்க ரீய முளுற்றின ரவரும் போந்தார். 37

போந்தபி னவரை தீசர் புனிதரா மலையி னம்பி
யாந்திரு நியம னத்தை யகங்கொளா முதலி வெள்ளந்
தாந்ததைந் துடனே போதத் தடவய லரங்க நீத்தே
யேந்துபூம் புனலின் பொய்கை மலிதருங் கச்சிக் கேகி. 38

வரந்தரு வரதன் பாதம் வலங்கொடு வணங்கி யாங்கே
நிரந்தரந் தமது தாள்க ணினைந்துறு மடியா ரோடு
மரந்தைக ளறுக்கு மேமு மலையடித் தலத்தை யண்மிச்
சுரந்தரு டமது பூந்தா டொழுபவர்க் குசவி நன்றே. 39

புதியராய் வந்து பாதம் புகுந்தமுப் பதின்மர் தம்மைக்
கதியென வருளி யங்கி கரித்தடுக் கவின்மீ தேற
மதுமலர் வனம்வ ளர்க்கு மதுரிபுக் கனந்தாழ் வானும்
பொதுளுவை ணவர்க ளோடும் பூரண கடத்தெ திர்ந்தார். 40

பரமபா கவத ரெண்ணற் கரியவர் பலர்கள் சுற்றத்
திருமலைக் குரிய நம்பி யெதிருற விடுத்த தேடற்
காரியமாற் பிரசா தங்க ளவையெலா மடைந்து கோயிற்
கருகெழ நிலயக் கேய்ந்த பரிசன மவைக்கண் முற்றும். 41

மரியாதைப் பொருள்க ளியாவு மணந்தெதிர் படர வேவிப்
பாரிவாகப் படர முன்னம் பார்த்ததும் யதிக ளீச
ரருளாளுந் திருவுள் ளத்தா ரவரடி மலரி லங்கந்
திருவாரும் படியி லொன்றத் திருவடி தொழுதெ ழுந்தார். 42

எழுந்தெம திறையே முன்ன மித்தகைக் கடியே னுக்க
குழந்தையம் பருவத் தன்றே குளிர்கடைக் கணிப்புச் செய்தீர்
விழுந்துவெங் கருவின் மாழ்கா திவ்வணம் விழைவி னுற்றி
யெழுந்தரு ளுமக்குக் கைம்மா றிழைப்பதொன் றுலகி லுண்டே. 43

அத்தகை யடிக ளும்மை யடிதொழற் கமய மின்றே
யித்தலை விதித்த தென்றன் விதியென விதயம் பொங்கி
வித்தகர் விளம்புஞ் செய்ய முகமனும் விரையார் தேனூர்
தொத்துள தொடைய லாதிச் சிறப்பெலாஞ் சிரத்திற் கொள்ளா. 44

பெருந்திரு மறுகின் வளவார் முரசங்கள் பிளிற வேகி
விரிந்தவெண் குடைநி ழற்ற வலமென விரைய நீரிற்
பொருந்துறு மலர்கள் பூக்குஞ் சாமிபுட் கரணீ யாடித்
திருந்துஞா னப்பி ரானைத் திருநிவா சனையுங் கண்டார். 45

பவக்கட லழுந்தி மாழ்கும் பாமரர்க் கரையி னுய்க்குந்
தவக்கிறை யதிக ளீசர் தண்டுளிப் படலங் கண்ணி
னெவர்க்குமெய் சிலிர்க்கும் வண்ண மிழிந்துடன் மறைப்ப வாரு
முவக்கநாத் தழுத முக்க மலர்க்கரங் குவித்து ரைப்பார். 46

நிகமவெஞ் சிரத்தி லாடு நிருபமப் பொருளா நீயே
முகமதித் திருவி னோடு முதம்விளை யரங்க மூதூர்
நகுமணிச் சுடிகை நாக வணையிகந் தவனாய் நின்ற
வகமதன் முடியினீங்கே யலங்குதி யுலக முண்டோய். 47

இக்கலிக் கிதுவை குந்த மென்றுமிந் திரையி னோடும்
புக்கிவண் பொலிந்து பாதம் போற்றுமா னிடரே யன்றி
மிக்கவைந் தருவி னீழற் சுராசுரர் மிடைவ ரேனுந்
தக்கவா றருடியைய தமதகம் விழையும் வண்ணம். 48

கருணைவாழ்ந் தொழுகுங் கண்ணு காமினி கணங்கள் கண்ணிற்
பருகெழிற் பரவு மார்பா பாந்தண்மன் பருப்ப தத்தோய்
முருகவிழ் துளவத் தாரா மூவரா யொளிரு மூர்த்தி
யருணனி யடியேற் கென்றே யருமறைப் பொருளா னேத்தி. 49

தமதெழின் மேனி யாவுஞ் சேயொளித் ததைந்து தோன்ற
வடூதநன் கொழுகுஞ் செய்ய வஞ்சனுத் திரியன் பார்வை
விமலவெங் கடைமேல் வீழ விழித்தருள் புரிய வாங்கே
கமமுறு முவப்பி னோடு மூன்றுநாள் கழித்தா ரன்றே. 50

மலைநம்பி யுடனே மற்றும் பருப்பதத் திழிந்து மாண்பு
நிலைகொண்ட வவரி லோராண் டிருந்தந்த நிமலர் தம்பாற்
சிலைகொண்டு நிருத வெள்ளஞ் செகுத்தபைம் முகிலின் காதை
தலைகொண்ட முதத்து மன்னித் தாஞ்செவி மடுத்தா ரன்றே. 51

வேறு

ஏத்துதற் குரியநல் லிராம காதையைச்
சாத்திய பினையவர் தமது மைந்தரைக்
காத்தருள் கெனவுடை யவரின் கான்மலர்
யீத்தொழு தடைந்திட மிழற்றி மற்றுமே, 52

செவ்விதி னறைந்துபிள் ளானின் செம்மையை
யொவ்வறு மமதருட் குரிய ரின்னவ
ரெவ்வம தறுக்குமின் னெறியி னெய்திடத்
திவ்விய கருணையிற் றெருட்டிக் காண்கரோ. 53

என்றவ ரிசைத்தலு மிருவ மன்னவர்
நன்றுறு மகர்க்கொரைந் திருத்த நல்கியே
துன்றரு விசேடநற் பொருள்க டோன்றுமா
றென்றிய வுவப்பொடு முரைத்துப் பின்னரோ. 54

உதகமோ டுமதுகோ விந்தர் தம்மையெற்
கிதமுற வளித்தருள் கென்ன நம்பியு
முதமதி னுதவிட முன்னும் வண்ணமே
பதமுறு மனத்தின ரடைந்து பான்மையிற். 55

விடையையு மகவையு மறைந்து நம்பிபாற்
புடைபல வைணவர் புகழ்ந்து போதர
நடைகொடு நமன்றிசை நாடி யேகியே
கடைபல கனுமங் கச்சி யெய்தினர். 56

எய்தியங் கிருந்துழி யிகந்து சிற்பக
லைதிக ழுரியகோ விந்தற் கீன்றவர்
வெய்துறு விதப்பின்மெய் விளர்க்கக் கண்டுநம்
மெய்திக ழுடையவர் கருணை மேவியே. 57

ஏகிநுந் தந்தையை யிறைஞ்சி வம்மினென்
றுகையை யறிந்தன ரனுப்பச் சென்றவர்
போகியீன் றவரடி புரிந்து கைதொழு
மோகமோ டிவர்க்கவர் முகங் கொடாமையான். 58

நிலையறு முடலது தொடர்பி னோர்தரும்
புலையுறும் விழைவிது புன்மை புன்மையே
யுலைவறு முயிர்க்குறுந் துணைசெய் சுற்றமே
விலையறு மணியென விளங்கத் தேர்ந்தரோ. 59

மீண்டெழுந் துடையவர் சரண மேவுறப்
பூண்டரு ளவருளம் பொலியத் தோற்றுபு
காண்டகு முதலிகள் கணத்தி னோகமற்
றாண்டன் றுயில்கொளு மரங்க மெய்தினார். 60

அங்குமந் நம்பிக ளுயிர்த்த கோவிந்தர்
துங்குணம் பலதினந் தேர்ந்து தம்முளஞ்
சங்கையின் றுவப்புறத் துரியத் தன்மையைப்
பொங்குட னவர்கொடு பொலியத் தந்தனர். 61

அக்கரஞ் சிலதம தரிய பேரிடை
நிற்பன வகற்றியே நிலைவெம் பாரெனுந்
தக்கபே ரளித்துப்பின் றயங்கு நூலெலா
மொக்கவே யுணர்த்திட வுணர்ந்தொ ளிர்ந்தனர். 62

வேறு

மேலெம் முடைய வருஞ்சொரூபோ பாய புருஷார்த் தங்களெலா
மேலுந் திருமந் திரப்பொருள்கட் கிகலாப் பூர்வ பக்கங்களைந்
தாலந் தளிரிற் பள்ளிகொள்வோ னவனே பரமென் றறைமறையின்
சீலம் படிசித் தாந்தமதைச் செலவே யெங்கு நிலைநிறுத்த. 63

மெய்யே பெருகும் விசிட்டாத்து விதத்தின் பரமாய் மிழற்றுமுனம்
பொய்யே பொருவுஞ் சுகற்பயந்தோன் புகலும் பொருவிற் சூத்திரக்குச்
செய்யோர் தவத்தோர் தெளிகொடுப்பச் செழும்பா டியமொன் றிழைத்தி
னையே ருளங்கொண் டதற்குறுமம் போதா யனவிர்த்தியைநசையா.[டுவா 64

வடபா லதுவுண் டெனவறியா வலமார் முதலி யாண்டானும்
நடதூ ராழ்வா னெம்பாருந் தலையா யுள்ள நல்லடியார்
புடையே போத வவணெழுந்து போத முயன்று மிடைந்ததுபின்
படைவே கண்டோ ரொருமுறையே யாய்ந்தா ரதனி னருத்தமெலாம். 65

பெற்றோ மென்றெம் பெருமானார் பிறங்குந் தருண மதிலடையா
ருற்றோர் விரகி னதைக்கவர வுலையா வுள்ள முறைபொழுதிற்
கற்றோர் கருது மாழ்வானுங் கருணைக் கடலே கவலற்க
முற்றோய்ந் துள்ள வடியனுள முழுதுங் கொண்டு பிணித்துளதால். 66

என்ன வணங்க விளையாழ்வா ரிறம்பூ தெய்தி யிடையிடையே
பின்னு வினவ வவையாவும் பிழையா திசைக்கப் பெருமிதமாய்ப்
பொன்னு டனைய வளநாடாம் பொன்னித் திருநாட் டெழின்முகமாய்
மின்னு மிளிருந் திருவரங்க மேவிப் பெருமா ளடிதொழுதார். 67

வேதப் பொருட்சங் கிரகமும்வே தாந்த சாரந் தீபமெனு
மோதற் குரிய பனுவலொடு முயருங் கீதா பாடியமும்
போதப் பொலிவார் திருப்பாடி யமுமென் றின்ன பொருவரிய
கோதற் றருளிரு நூல்களிழைத் தெமுனைத் துறைவர் குறைமுடித்தார். 68

மற்றோர் பொழுதிற் பங்குனியுத் திரமென் றோது மகமதனி
லுற்றோர் தவசிற் றிருவரங்க னுலக மாதா வுடனொளிர்ந்தே
கற்றோர் கழுமி மறைபாடத் திருமஞ் சனங்கண் டருளியுறப்
பற்றோ ரயலின் றவராடியிற் பரிவிற் பிரபத் தியையிழைத்தார். 69

அதனைத் திவ்விய தம்பதிக ளகமுற் றபயந் தந்ததனைக்
குதலத் தெவருங் கொடுபிழைக்கக் கதியத் திரய மெனுநூலா
யிதமுற் றருளிர விழைத்துப்பின் னிலகும் பாடி யாதிகளாற்
கதியுய்த் திடுநல் லுபாய முணர்ந் திலகுங் கதியத் திரயத்தான். 70

ஒழுகும் புலவர்க் குயர்புருடார்த் தங்கண் முழுது மும்பர்பிரான்
பழுதிற் பாத விழுதியிடைப் பயிலும் பொழுதிற் பயின்றொழுக
வெழுதற் கரிய நித்தியமென் றிலகும் பனுவ றனையியற்றித்
தொழுதற் குரிய நடைத்தெய்வ மென்றே துதிக்கத் துலங்கினரால். 71

கூரத் தாழ்வான் றலையாய குணமா நிதிக ளுடன்வரப்பின்
பாரத் திருயாத் திரைபுரிய வனிகக் கிணையா மடியர் குழா
நேரொத் தடைய நிலவுறுமுக் கொடியிற் பொன்னி னிலவொருகுன்
றேரிற் படியிற் படர்வதென வெழுந்தெல் லோருந் தொழநடந்தார். 72

போய போய தலமெங்கும் பொருவில் வாதப் போர்புரியா
மாய மாய விதார்மதம் மடித்துக் குடந்தை யழகர்மலை
தூய வாய புல்லாணி தொடக்கத் தொளிருந் திருப்பதிகண்
மேய மாய னடிதொழுதே மிளிருஞ் சேது மிடைந்தனரால். 73

சொன்னத் தேயீ சுராபாயீ தொடக்கத் தைந்து பாதகருந்
துன்னிக் கண்டே யுடன்செடிக டொலையத் தூய கதியிவரும்
பொன்னிற் பொலியுந் திருவணைகண் டலையார் கடலிற் புகழ்ந்தாடிப்
பின்னைத் திருமா நகரியெனப் பெருகும் பதிவா யெழுந்தனராம். 74

மாரன் மறலி யெனுமிவரே மறுக மற்ற வுலகனைத்தும்
பேரன் புடனே வழுத்துதிரு வகுளா பரணன் பெய்கழலுஞ்
சேருந் திருவிற் பொலிந்துநின்ற பரமன் செய்ய தாண்மலருஞ்
சீரின் படியே தொழுதவரின் சேர்தற் கரிய வருள்மிடைந்தார். 75

வரைந்தத் தலத்தை வழிநடவா வளமே மலிய மறைவாணர்
தெரிந்தத் திருவா ரணம்பயிலுந் தெளிவா ரோதை யனவரதம்
விரிந்தப் பொழிலுஞ் செவிடுபட வீறும் பேரார் குறுங்குடியைப்
பொருந்திப் புடைசேர் முதலிகளிற் பொய்கைப் புனலிற் குடை
செடியைக் களையு மப்பதியி னகலா தொளிருந் திருநம்பி [பொழுதே. 76

வடிவிற் பொலிந்தோர் வைணவராய் வந்தெம் பெருமா ஞர்மருங்கிற்
படியிற் றிருவார் பாகவத மணியோ ரந்தா மனுமுனநாண்
மிடியற் றெளிரு மிரவிகுல மேலோன் கண்ண னெனவுதித்தே. 77

அழகார் நெறியை யடைந்தொழுக வரிதிற் றிருத்தி யருளியும்பின்
பழகா ததனை மயர்ந்துபடும் பகுதிக் குழலும் பாமரரை
மழகார் முகிலின் பதமருவா மகிழப் புரியு மந்திரநுங்
குழகா ருளத்திற் குலவுமதை யெற்குங் கொடுமி னெனவிரந்தான். 78

படுவார் பீழை தனையாற்றுப் பாந்தட் கிறையினவதரிப்பா
யடியா ருய்ய வெழுமவரு மவனுக் கைந்து திருத்தமொடு
நடியா நின்ற தவனறியார் நல்கித் திருமந் திரநாமம்
படிவா யொளிரும் படிதிருவை ணவநம் பியெனப் பகர்ந்தனரால். 79

வேறு

படிமீது மும்மை யடியே யுயர்ந்து படருஞ் சினைக்க ணிழியா
வடிவில் விடுக்கு மணியந் தலத்தி லகவுஞ் சிகண்டி பலவாழ்
வடியுங் களந்தண் பொழில்சூழ் குறுங்கு டியினம்பி வந்த வழியே
தடியும் பவங்க ளவர்கண் ணுறுது தனிவிண் படந்த னனரோ. 80

பொள்ளென்று கட்பு லனுறு தெழுந்த புதுமைக் கிறும்பூ தடையுங்
கள்ளந் தவிர்ந்த குருநாத ருந்தங் கழன்மன்னு வோர்க ளெவரும்
வள்ளங் கலந்த வோவாவி விண்டு வரையிற் பொலிந்த நிலயத்
துள்ளங் கெழுந்து முவணப் பதாகை யொருவன் பதந்தொ ழுதுபின். 81

திருநம்பி காள முகிலுண்ட மேனி முழுதுந் திறந்து விழியை
பருகுஞ்சு வைத்தெ ளமிழ்தென்ன நோக்கு பருவத்து முன்ன ரிடுவெண்
டிருமண் முனிந்த வொருமண்ண ளந்த திருமன்னு தற்க ணிலகப்
பெருவிம்மி தத்தி னிளையாழு வார்பொன் னடிமேல் விழுந்து பிறகும். 82

தேவாதி தேவ குறளாகி யாதி யொருவன்னு கர்ந்த திருவை
நாவானி ரந்த பகரித்து மற்று மொருவற்கு நன்கு தவினை
தீவாய கத்த னொருவன் மனைக்கு டிகழப் பிறந்து மொருவன்
கோவாழ கத்து வளர்தந்து முந்து கொடியற் படுத்தி லகுவாய். 83

நின்னைந் துயிர்க்கு நிகராய வைவர் நெடிலாடு கான நலிய
முன்னந் துரத்து முடியோனு மூல மொடுவீய வெய்ய படைகள்
பொன்னங் கரத்து மிடையா தழித்த விரகா ருயர்ந்த பொருளே
சின்னஞ் சிறுத்த வடியேனு முன்றன் செயனன்கு காண வலனோ. 84

என்றே துதித்துஞ் சரணு கதிக்க தியமென்னு நூலை யிசையா
நன்றே யதிற்ற மபராத மேக னனிசெய்து கையெ னளின
நின்றே தலைக்க ணிலவக் குவித்த நிலைகண்டு நம்பி நிமலன்
பொன்றேர் மலர்க்க ணழகந்த மேனி பொலியப் பொருந்த விழியா. 85

வன்பங் கயத்தி னடிநீர் மனத்த தளமார் துழாயு முதல்
வன்பின் னளி[illegible] விடையோ டனைத்து மாவேச மூல மதனுன்
மன்பொங் கினங்கி க[illegible]ம் புரிந்து மனமங் கழுந்த வடியார்
பின்பொங் கியேக மற்றங் கிருந்து திருகிப் படர்ந்து பிறகே. 86

திருவெண் முதற்ற பரிசார மாதி திகழுந் தலங்க ளிலகுங்
கருவண் முகிற்கு நனிமங்களாச சனமாடி நன்கு கடுகி
முருகுண் வடக்கு முகமாக வேகி மறுரைத் தலங்க டலையாய்ப்
பெருகெண் கொளற்கு மரிதா மனைத்து மடைதந்து பெட்பி னவர்பின். 87

அங்கங் கிருந்த குமதிக் குழாங்கள் வைசிந்த வென்று மடலா
னெங்கும் புகழ்ந்த கலைமாது பீட மியையப் புகுந்த பொழுதிற்
றிங்கண் முகத்தி னவனே யெதிர்ந்து திகழக் கொணர்ந்து தவிசிட்
டங்கம் பெருக்க மகிழ்விற் புகன்று முகமன்ன னேக மணவாய். 88

சாதந் துலங்க வறைதந்த பாடி யந்தன்னை யைய சவியா
ளிருகண்கள் கொண்டு விழைதந்து கண்டு மிதயங் குளிர்ந்து சிரமேற்
புரிதந் தணைந்து புகழ்சங்க ராதி யவர்போனு மன்றி யுளதே
விரிதந் திலங்க விழைதந்தி ரிந்த வியனூலை யிங்க னதனுல். 89

இதுமன்னு சீபா டியமென்று சீபா டியாகார ரென்று முமையே
நிதமெங்கு மாரும் புகழ் செய்து பாடு நிகரற்ற நாம மினியா
முதமன்ன யானு மிழைதந்த பூசை யயமா முகத்த னிவனை
யிதமன்ன நீவி ரடைகென் றளிக்க விவரும் மணந்த னரரோ. 90

மிடியன் வெறுக்கை மிதமின் றிணைந்த தெனமன்னி மீண்டு மவணின்
றடிகொண் டெழுந்து மடமே மிடைந்து மங்குள்ள வாத பரரை
முடிகண்டு வேத வமராடி வாத முடுகிச் செறிந்து வயமே
யடிகண்டி ணங்க வத்தேய மன்னை யடியா னெனச்செய் தனரோ. 91

### வேறு

பின்னங் குளபெட் பறுமாற் றலர்க
ளின்னன் மைகளே வையுமாற் றுகிலார்
மன்னும் மபிசா ரமவர்க் குறுகண்
டுன்னும் வகைதோ யவியற் றினரால். 92

எறிபித் திகைமீ தெழுகந் துகமும்
மறிவுற் றவன்பற் றுடருக் குமென
வறிவற் றதையாக் கியபே தையர்பா
லுறவுற் றதுமீண் டுமொறுக் கியதே. 93

கண்டா ரதுகா வெனவெங் குரவர்
தண்டா மரைத்தாள் சரணு யடைய
விண்டே கிடவன் னதுவெங் கருணை
கொண்டா ரவர்கூர் தருமின் புறவே. 94

பேணு ரவரே வரும்பெட் புடனம்
மாணுர் குருமன் னியதொண் டரெனக்
காணுர் களுங்கண் டுகளிக் கவுறப்
பாணு றிசையன் னவர்பற் றினரே. 95

நம்பா டியகா ரர்நடக் தவணின்
றைம்பா வமுமா றிடுகங் கையினி
னம்பா வடிநண் ணியயா வரொடு
மம்பா டியகங் களிகூர்ந் தனரே. 96

சிகூர் மமுஞ்செம் புருடோத் தமமும்
மாகா முறுமன் னுசிங்காத் திரியு
மாகோ பிலமா தியயா வுமெழுந்
தேகா வடவேங் கடமெய் தினராம். 97

அம்மா மலைமீ தொளிரம் புயைமன்
செம்மா வடிசேர்ந்து முனங் குறைகூ
றம்மார்ந் திடுதொண் டமானங் கையுற
வெம்மா வளைசங் கையும்விட் டனனுல். 98

அரையன் றனதொன் னலரா டமரில்
விரைவின் னவைகொண் டுவிழுத் தவெழ
மரையின் மலர்மங் கைமணு ளன்வெறும்
வரையென் புயந்தம் மொடுவை குறவே. 99

சிவனு ரடியார் கள்செறிந் துமலே
யவிர்நம் பிமருங் கருவேங் கடவன்
னவிலெந் நயினு ரெனவே கலகந்
தவவங் கிழைதந் துகிறர்ந் தனர்தாம். 100

அமையம் மதிலங் கெழுமா ரியருங்
கமைகொண் டதுகண் டவர்தம் மைவிளித்
துமைநீ ருணரா துரையா டுதிரே
யமைவுண் டவர்பொய் யிலமுந் துவரோ. 101

எக்கா லெனுமிக் கிரிமா யவனைத்
தொக்க...வொருபூ சனைதொன் மையினீ
ரக்கான் மலரண்...யமைத் தனிரோ
தக்கா வுரைதந் திடலென் னலுமே. 102

அவர்வெஞ் சினமங் கெழவிப் பெருமாள்
சிவவை ணவசின் னமொன் றின்மையினு
லெவரும் பொதுவென் றுதொழத் தகுமா
னவிறும் மினுமொன் றிதுநா டுதிரே. 103

இக்கங் குலினிக் கடவுண் முனமே
யொக்குஞ் சிவவை ணவவொண் குறிகள்
வைக்கும் மறுவை கறைகாண் புழியெப்
பக்கம் படுசின் னமணிந் துளனே. 104

அதுவொத் தவருங் கடவுள் ளவனே
யிதுவுத் தமமென் னயதிக் கிறைவர்
முதமுற் றவைமுட் டமுனம் படிமேல்
விதமுற் றுவிளங் குறவைத் தடைவே. 105

வண்ணம் பலவீ சிவழங் குகதிர்
மண்ணும் மணிமண் டுகுயிற் றியபொற்
பண்ணுங் கதவங் கடைபத் திரமே
திண்ணம் பெறுமா றுசெறித் தனரே. 106

தாழிட் டடன்மீண் டெவருந் தமதிற்
சூழிட் டிருந்தென் முழுதுஞ் சொலிசெய்
யேழிட் டபரிக் குயவே றிரவி
கீழிட் டதிசைக் கிரிசேர் தனுமே. 107

மிகுவை ணவர்மே வருசை வர்களுந்
நகுமின் மணிநற் கதவந் திறவாப்
புகுதுட் பொலிபூ மகணு யகனை
யுகவிற் கணினுற் றறிவுற் றனரால். 108

நம்மா யனகுஞ் சிவசின் னமெலா
மம்மா முறிதந் தடிவா யடைசி
வெம்மா வளைவில் விடுவெண் மனவும்
பொன்மா புயமே ருமிசைப் பொலிய. 109

திருநாச் சியுமார் பினகந் திகழ
விரிவெங் கதிர்கோ டியெனக் குலவ
வருசை வர்கள்வா யகமும் புதையாத்
தெருளின் மனதோ டுதிரும் பினரே. 110

பின்பா டியகா ரர்பிறங் கரியை
முன்போ லெழிலா ராதனம் முதல
வன்பா கவறிந் தருள்செய் வணமே
யின்பா கவியற் றவிழைத் தனரால். 111

மலைநம் பியுமற் றவர்பெற் றியினை
யிலையெங் கணுமிப் படியென் றுபல
சொலியின் னுரைசொல் லருபுத் திரரை
நிலைகொண் டிடவங் குநிறுத் தினராய். 112

இனியெங் கிலையென் னுசிறப் படைய
நனிசெய் திறைதன் னையுநல் கியிடக்
கனிகொண் மனவெம் மெதிகட் கிறையு
மனிகங் களினத் தலம்விட் டகல. 113

கச்சிப் பதியா கியகார் வணனன்
கிச்சித் தொளிரெப் பதியும் படரா
நச்சித் தொழுதப் பரனல் லடியை
மெச்சிப் பினரங் கமிடைந் தனரே. 114

## 24—வது சருக்கம்

அந்தி வண்ணன் முந்தெ ணுதொ ரவுண னுக்க டும்வரந்
தந்து பின்ற னுயிர்ப்பி ழைக்குந் தனிமை யின்றி யிரிகையில்
வந்த ளித்த சிந்து வண்ணன் மலர டிக்கண் வணங்கிலா
ரெந்த வண்ண முய்வர் பாவ மிஃது ணர்ந்து முழல்வரே. 1

இடியு மின்னு மொருதி னத்தி லிருவி சும்பி னெழிலிகள்
படிய வொன்றின் மீதி ஞென்று பம்பி விட்டெ ழுந்துபெய்
கடுமை கண்டு கூர நாதர் கடினை கொண்டி ரந்திடார்
நெடிய மானி னைந்த வண்ணம் வறித கத்து வைகினர். 2

அந்த வேலை யரங்க நாத னமுது செய்ய வழங்குறுஞ்
சந்த மான சன்னி தித்தி ருச்சி னத்தி னின்னிசை
கந்த வார்க ருங்கு ழற்கண் கயல னைய தேவிகேட்
டெந்த நாதன் பசித்திருக்க வெம்ம ரங்கனுண்பனே.

எனநி னைக்க வெழு...ங்க ளிதய மிக்கி ரங்குறுத்
தனத யின்ற சேட மாய தக்க வோத னந்தனை
முனமவர்க்க ளிக்க வென்று கருணை முந்த மொழிதர
வனக வுத்த மநம்பி யும்ம வைகண் முற்றுஞ் சிரங்கொளா. 4

கூர நாதர் வளவி லேகிக் கூர நெய்பெ ருகுமக்
கார நாறு மடிசி லந்தக் கலைஞ ருக்க ளித்திது
தார நாறு குல்லை யைய தனிய ரங்க னணையா
னீர நாவி னீவி ருண்ண நேர்ந்த தென்று நிகழ்த்தினர். 5

அடிய னென்ன தவமி ழைத்த தந்த நாளி லென்றவர்
முடியி னன்வ கித்து முந்து முதமொ டுந்த மூரலைக்
கொடிய னுட னக்கு மீந்து கோவிந் தாவெ னப்புகன்
றடியி னுனை ளந்த வைய னருளை யுன்னி யயின்றனர். 6

அந்த வன்ன மேய கட்டின் மைந்த ராய மைவுற
விந்து மாமு கத்த தேவி யெழில்க ருப்ப மெய்தியீ
ரைந்து திங்க ளகன்ற பின்னை மாத வத்தி னனுடநாண்
மைந்தர் மன்னு மிருவர் தம்மை மற்று யிர்த்தொ ளிர்ந்தனள். 7

அன்ன வாக னற்ப யந்த வரங்க நாத னருளினுன்
மன்னு கூர மகிப ருக்கு மகரு தித்த தறிவுரு
மின்னு பாடி யம்பு ரிந்த மிகுகு ணத்த ரெழுந்தவட்
பொன்னி னன்ன பொலிவ மைந்த புத்தி ரர்க்கண் டருளியே. 8

மூந்து தித்த மைந்த னுக்கு மூன்னி யெம்பார் மூலமா
நந்து றற்ப ராச பட்ட ரென்னு நாம நல்கியே
சந்த யாமு னேயர் தம்மி ரண்ட னுட்க ருத்தையு
மிந்த வாறு முற்றி மற்று மிருத யங்கு ளிர்ந்தரோ. 9

மற்ற மைந்த னுக்கு நல்வி யாச பட்ட ரெனவளித்
துற்ற யாவு மூவரை யேயு ஞற்று வானு ரைத்திடப்
பெற்ற நாளி னும்ம லர்ச்சி பெருகு மாறு பெற்றவர்க்
குற்ற வேலை யுள்ளி முற்று மொளிரும் வண்ண மூட்டினர். 10

இப்ப ராச பட்ட ரிங்கு ணர்ந்தி டாத தின்றெனத்
தப்பு றுத தன்மை யாளர் தாமு வப்ப யாவையுங்
கைப்பு றுது கற்றி லங்கு மவர் கனத்தை யதியிறை
மெய்ப்ப ராவி யருக மைத்து மேம்ப டப்பு கலுவார். 11

ஏத்து நற்பு லம்ப டைத்து மேத மற்ற சிந்தையார்
கோத்தி ரைக்க னுய்யும் வண்ண மதுப ரப்புங் குணமிகாப்
பூத்து மின்பு றத்த மைத்தும் பொருந்து மின்ப லன்கொடா
தூர்த்த லத்தி னுள்ளி ருக்கும் பூருகத்தை யொப்பரே. 12

பணிப திக்குஞ் சிரம சைக்கும் பான்மையாய கல்வியின்
மணிவ ணற்கு மன்னு நாம மாயிரத்து மகிமையை
யணிபெ றக்கொண் டுய்யு மாறோர் பாடியத்தை யாற்றுமின்
மணிலெ வர்க்கு மன்னு மாமை யருளினென்று சாற்றினர். 13

குருமொ ழிக்கொர் மறுவு றுத கோள மர்ந்த பட்டரத்
திருமொ ழிக்கி ணங்கி யாருந் தெருண்டு வக்கு மாறொரு
மருமலர்ப்பொன் மன்னு மார்பன் மகிழு பாடி யம்வனைந்
திருமை முற்று மீயு மந்த யதிப திக்க ணிட்டனர். 14

இட்ட பாடி யந்த னைத்த மிருக ஞார வுளமுணர்ந்
திட்ட மாயி லங்கல் கண்டு மிதுமு ஞய பாடியம்
வட்ட வர்க டற்கு ளாய வைய கத்தி லிதுவுமேம்
பட்ட காலக் கேப கூடம் படிக வென்று பகர்ந்தனர். 15

வேறு

கோணை யார்மதக் குறும்பரின குலங்களைந் தடலா
ராணை யானுயர்த் தியவயத் துகிலென வயங்குங்
காண யாவருந் தண்டமூன் றணைதரு கரத்தெம்
பாண யாழினர்ப் பதந்தொழும் யதிகளின் பதியே. 16

மற்று மோர்பகன் மதுவழி மகிழ்மனத் தொடையார்
நற்ற வன்றிரு வாய்மொழி தனைமன நாடிப்
பொற்ற தந்திரு மடத்தினு ளுலாவரு போழ்திற்
கற்ற நங்குரு கைப்பிரான் பிள்ளானங்கு கழுமி. 17

மாழை யால்வனை மணிபுனை கவாடம திடையே
தாழை வாங்குகோ னுழைதரு புழைவழித் தமகண்
வீழ நோக்கியவ் விமலனு ரபிநயங் குறியா
யாழி னேர்திரு வாய்மொழி யிதுவென வறிந்தார். 18

இங்கு மாலிருஞ் சோலைமா மலையென்றே னென்னும்
பொங்கு பாசுரப் பொருளனு பவங்கொலோ வென்னத்
தங்க ருத்தினு ளடங்குறுத் தனிமதர் வெய்தி
யெங்க ருத்தினுக் கியைந்தபிள் ளான்கொலோ வென்றார். 19

என்ன வாரிய ரிவருமா மடியனு னென்னப்
பொன்னி னற்கவா டம்பொருக் கெனவவர் போக்கிப்
பின்னை யத்திருப் பிள்ளான்றனை யெடுத்துர மணையாச்
சென்னி முத்தமிட் டெழிலெலாஞ் சிறக்கணித் தன்றே. 20

பெரிய நம்பிமுன் னாகிய முதலிகள் பிறங்கு
மரிய கோட்டியி லற்புத மதுசெல வறையாத்
தெரிய யாவருங் கேண்மினித் திருவுளார் சரிதம்
பரிய பாடியா திகள்வயிற் பகாருந் திறமே. 21

இன்ற மிழ்ப்பிர பந்தம திடைவள ராற்ற
னின்ற பாகவ தர்வயி னிகழ்தரு நேய
மொன்று நல்லனுட் டானம துழையரு வூக்க
மென்ற னின்னபி நயக்குறிப் புணர்ந்தநல் லீடும். 22

ஆய வித்தகை யடைபவு மறிந்திடு மளவி
னேய மாமலை நம்பிமுன் னியமனப் படியே
யேயு நம்பெருங் கடைக்கணிப் பிவரிலக் கென்ன
வாயு மப்பெரு முதலிகள் வயங்குபே ரவையில். 23

ஞான புத்திர ரிவரென நயந்தடைந் தருளி
வான நற்குரு கைப்பிரான் பிள்ளானென வழங்கும்
மான மாறன தெழிற்பெய ரளித்தன ரொருமூன்
றான யாமுன ரியர்கருத் தமைவுற விழைத்தார். 24

சில்ல நாள்கள்பின் செலவுற யதிகளின் செம்மன்
மெல்ல மீறிய கலிதனின் மிழற்றரு மாறன்
சொல்லி மின்றிரு வாய்மொழி சுருதியின் பொருளைப்
புல்ல லின்றயற் புரைபடும் பொருளெலாம் புகல்வார். 25

நாம தன்முன நலம்படு மோருரை யதற்குக்
காமு றும்வண முஞற்றுத றகுமெனக் கருதா
வாம மார்குரு கைப்பிரான் பிள்ளானை வருவித்
தேம மார்வரெ ழின்முக நோக்கியங் கிசைப்பார். 26

தேனை யன்னசெந் தமிழ்மறை திருமந்தி ரமுத
லான மன்னுவே தாந்தமா மெய்ந்நெறி யடைய
வான நாடிழுந் தொளிர்தரு வகுளபூ டணன்பா
லேனை யாவரும் வியப்புற வெளிதினிற் பயின்று. 27

அவையெ லாமிடை யறுதலிற் குருபரம் பரையா
னவையு றாவண நலமுற நனிநிலை நாட்டுஞ்
செவை கொணாதமா முனிகளின் செழுங்குலத் துதித்த
சுவையி னாம்பெருந் தொழுனையந் துறைவரா ணையினை. 28

நிறைவு றப்புரிந் தொழுகிய திருமலை நம்பி
பொறையு யிர்த்தசெம் புதல்வராய்ப் பொலிந்திடு கையினா
மறையி னற்றமி ழியல்பினான் மகிமையுற் றதினா
மறைது நுந்தமக் கொருசெய லயர்தரற் கீங்கே. 29

ஈரி ரண்டென விலகுமா யிரந்தமிழ் மறையு
ளேரி டுந்திரு வாய்மொழிக் கியையுமோ ருரைநீர்
சீரு றும்புரா ணங்களுக் கிரத்தினக் கெனவே
யேரி னாற்றுகா றாயிரப் படியென வென்றார். 30

## வேறு

ஆரியரின் றிருவாணை யாமெனவஞ்
சிரம்வகித்த வவரங் குன்றா
நேரியசெந் திருமந்தி ரார்த்தமென
நிகழ்தருசூத் திரவர்த் தத்தைப்
பாரினர்கள் கூட்டுண்ணப் பைந்தமிழிற்
பரகால னருளும் பண்பா
னேருமதன் பாடியத்திற் குடையவர்செய்
மங்களமே யிதற்கிங் கொன்றாம். 31

எனவிதர மங்களமொன் றியற்றுகிலா
ரேன்றதையே குருவின் பாத
மனமருவி மண்ணகமும் விண்ணகமு
மகிழுவண மியற்றி யொன்றைக்
கனமருவு முடையவரின் றிருமுன்னர்க்
கழல்பணிந்து காட்டக் கண்டு
நனிநகையி னலஞ்செறியு நம்மெமுனைத்
துறைவரதா ணையினுன் முன்னம். 32

திருக்குருகைப் பிரான்பிள்ளா னெனுநாமந்
திகழ்தரவே நுமக்குத் தந்த
துருகிளறப் பலித்ததிதற் குயர்பகவத்
விடயமென வுரைக்கும் பேராந்
திருக்கிளர யாமியற்றுந் தெள்ளரும்பா
டியத்துடனே காலக் கேபத்
திருக்கவினி யிஃதுமென விசைத்தருளி
யெவருமுய விதயங் கொண்டார். 33

பெரியநம்பி மலைநம்பி முன்னுய
பெரியவரிப் பெற்றிக் குள்ளம்
பெரிதுவந்து கொண்டாடப் பின்வடுக
நம்பியதன் பொருள்கண் முற்று
மருவியுள மெதிராச விபவத்திற்
சுருக்கமுடன் மணக்கச் செய்தா
ரரியவதன் சுவையுணரா வக்மொழியப்
பேரின்ப மடையா ராரோ. 34

பின்புதிருக் கோட்டிநகர்ப் பெருகுநம்பி
திருமாலை யாண்டா னின்னோர்
மன்பெரிய திருநாட்டுக் கெழுந்தனரென்
றுடையவரு மறுகக் கேளா
வன்பினெழின் மனமுருகிச் சுண்ணபரி
பாலனமு மயர்ந்த பின்னர்
பொன்புரையுந் திருவரங்கப் பெருமாளென்
னரையருமப் பதமே புக்கார். 35

அச்செஞ்சொன் முனிவருக்கும் பௌத்திரராஞ்
சொட்டையம்மா ளழகார் கையா
னுச்சங்கொள் சரமகயிங் கரியமதை
யொருபுரையு மருவா தாற்றி
யச்சங்கொண் டயன்மதஞ்சொல் வாதியராங்
கரிகுலங்க ளழுங்க நல்லோர்
நச்சுங்கே சரியெனவே நாரணனர்
புகழ்பெருக நனிவீ றுற்றார். 36

எம்பெருமா னாரிய விபவமெலா
மிதரமதப் புலவர் காண
வெம்பியுள நன்னெறியே வாதமெனும்
வெஞ்சமரம் விளைத்து வெல்லு
மொய்ம்பிலரா யழுக்காற்றின் மூழ்கியொரு
விரகுணர்ந்து முழவுத் தோளி
னம்புவியைப் பரித்திடுமோ ரபயனுழை
யணுகியவற் குபதே சித்தே. 37

சைவத்திற் பற்றதிகஞ் சமைந்திடவே
யறிவூட்டச் சழக்க னன்னு
னுய்வித்தை யுணரானுய் முன்னமொரு
தென்னவன்பொற் கிழியி னெட்டஞ்
செய்வித்துச் சரதமுணர்ந் துய்ந்ததுவுஞ்
சிறிதோரான் சிவத்தெல் லோருங்
கைவைத்துக் கலந்துறவே காசினியின்
வலிமைசெயக் கருதி னுனல். 38

நன்றுசிவாத் பரதரமே நாத்தியெனு
முறியொன்றை வரைந்து நல்கி
நின்றதிரு வைணவரே தலையாகி
நிலவறிஞ ருலகில் யாரு
மொன்றுமிது வெனவுவந்து கையொப்ப
மிட் டவர்க்கே யுயிர்மே லாசை
யென்றுசொலி விடுக்கவதை யெங்கெங்குங்
கண்டவர்க ளிறும்பூ தெய்தி. 39

பொருள்வேட்கை கொண்டுசிலர் புந்திகலங்
கிச்சிலர்கள் வெருவிற் பல்லோ
ருருளாழிப் புரவலன்பா லுறுகண்ணேட்
டப்பிணிப்புண் டுழன்றுஞ் சில்லோர்
மருளாவின் னனபலவாற் றுனதனின்
மன்னுறுகை யொப்பந் தந்தா
ரிருளாரு மிதயத்தா லூரா
னென்பவன்கண் டதன்பின் மாதோ. 40

திரையாகிக் கடலுடுக்கை திகழவனிக்
கிழத்திதனைப் பொதுவொன் றின்றி
வரையாரும் புயவலியி னுகாந்தொழுகும்
வயவேந்தே வையத் திந்த
விரையாரு மோலைதனில் விழுப்பமுள
வுடையவரை விலகி மற்ற
நிறையாருங் கலைஞர்களின் கையெழுத்து
நிகழிலெனை நிகழா தென்னே. 41

அம்முனைவ ரொருப்படினம் மரன்மதமே
யன்றியயன் மதமொன் றின்றாந்
தெம்முனையின் மறலியெனத் திகழ்தருவை
வேலவெனத் தெரிக்க வன்னா
னிம்மெனுமுன் படர்ந்தவரைக் கொணர்திரென
விறுமாப்பிற் சிலரைத் தூண்ட
வெம்மையொடு மவர்வருமுன் விழுப்பமுறு
நடாதூராழ் வானுங் கண்டே. 42

நீராடப் போந்தவரந் நித்தியகன்
மம்புரியார் முனைவின் மீண்டு
சீராரு முடையவருக் கதுமொழியச்
செவியுறுமச் சிறப்பின் மிக்கா
ரோராரும் பாகினேய ரென்பவரு
நீரன்றோ வெனக்கொண் டாடிக்
காராருங் கடல்வண்ணா விக்கடியி
னிழைப்பதுநீ கருதா யென்றார். 43

வேறு

கூரத் தாழ்வா னங்கவர் பாதந் தொழுதேபின்
வீரத் தந்த வேலரை யன்ப டிறுசூழ்வோ
னேரத் தேவ ரீரவ ணேக ளிக்ரன்றே
சேரச் செல்வல் யானென வூக்கஞ் செறிதிந்தே. 44

ஏரா ரெம்பூ தூரவர் செங்கே ழுடையாதி
நேரா வாருங்நேடரு நீத்தா ரெனமின்னிச்
சீரா ரும்பேர் நம்பிமு தற்சிற் சிலர்போதப்
பாராண் மன்ன னின்பட ரோடும் படர்குற்ருர். 45

மற்றும் பூதூர் மாண்பினர் சோத ரியின்மைந்தர்
கொற்றங் கூரும் புந்திந டாதூ ரெழிலாழ்வான்
சுற்றங் கூருஞ் சொன்முத லியாண்டா னெழுவாயா
யுற்றங் குள்ளா ருள்ளின ரன்ன னடிபோற்ரு. 46

இங்கே யையே யின்னினி நியி ரிருக்கொண்ணு
தெங்கே யேனு மேகுத றக்க தெனவாழ்வார்க்
கங்கே செய்ய வந்துகி னீக்கி வெளேசாத்திப்
பொங்கே பூக்கும் மேலெழி ணுட்டிற் கொடுபோனர். 47

போயங் கேயோர் பொங்கடி பல்ல வடர்ந்தெங்கும்
மேயுங் கானஞ் சூழ்தர விண்ணின் முடிபல்ல
தோயும் மள்ள ரேனு மருளுந் தொடர்வெற்பின்
பாயுந் தாளின் மன்னினர் மன்னும் பருவத்தில். 48

மண்ணு ராழி மாக மனைத்து மலிந்தென்னக்
கண்ணு ரம்பு தம்பல கண்ணு யிரனேவப்
பண்ணு ராயர் பாடியி னன்று பொழிந்தன்ன
வெண்ணு வன்னு ரெண்ணி நடுங்கச் சொரிந்திட்ட. 49

ஆடும் போர்முன் ணர்க்கு முரச மெனவார்த்துப்
போடும் வீரர் வாணனி போழ்ந்த நெடும்புண்ணி
னேடும் வேழத் தோளியின் மின்னி யுலகெங்கும்
மூடும் வெள்ளம் முந்துற மேகம் பொழிந்தன்றே. 50

நம்பூ தூரார் நண்ணுந ரோடு நனேந்தங்கம்
வெம்பா வந்த வெங்குளி ரானே விதிருண்டு
பம்பும் பூரு கத்தடி யொன்றிப் பசிநோயு
நம்புந் தொண்டர் தம்மையு டற்ற நலிந்தாரால். 51

அந்தச் சார லொன்றியு றைந்த வடல்வேடர்
சந்தச் சீட ரின்மலை நல்லான் றனக்கென்று
மிந்தச் சேயா ரெம்பெரு மானு ரெனவுன்னு
வந்தத் தூயார் வண்பத நாடி வணங்கிப்பின். 52

மன்னே செலவ மன்னிய ஞான மலைவேடர்
முன்னே தான முன்னிய ளிக்கக் கொடுவந்த
பொன்னேர் கூறை யொவ்வொரு வர்க்கும் புதிதீந்து
பின்னே சீதப் பீழைய கற்று மெரிமூட்டி. 53

தேனும் மேனற் றீங்கதிர் மாவுந் திரளாக
வானும் பாடும் வண்புக ழாளர் முனம்வைத்துக்
கானம் வாழுங் கானவ ராய வடியேம்பொன்
மானுற நல்லான் சக்கர வர்த்தி மகிழ்தொண்டர். 54

ஆசொன் றின்றே யிங்கிது நீவி ரயின்றெம்மை
மாசொன் றின்றி மன்னுயி ருய்யும் வணஞ்செய்வீ
ரேசின் முன்ன மெங்குல மாத ரிடுமூணை
நேசங் கொண்டே நேர்ந்தன னன்றோ நெடுமாலும். 55

பூவே லுந்தம் பொற்பத மேயெம் புகலென்றெந்
தேவே நீவி ரென்றவர் தேமா மலர்ப்பாத
மேவா வீழ மேயினர் நீடுங் களியன்னார்
பூவா வின்னம் பொன்முறு வற்செங் கடைநோக்கால். 56

கண்டே வேடர்க் கின்மொழி கன்ன லெனவீந்து
கொண்டே யந்தக் கோதறு மாவு நறுந்தேனும்
பண்டே போலத் தம்வர தற்குப் படைத்துப்பின்
னுண்டே யாரு முண்டபின் வேடர்க் குவந்திட்டார். 57

வேறு

தம்பக டுணர்ந்து கானிற் றகுவிருந் திழைத்த மாக்க
ளும்பரு முணர்தற் கெட்டா வுயர்கதி முறையி னென்ற
நம்பெரும் பூதூ ராரு நனியுவந் தளித்துத் தன்மம்
பம்பிய வுறுதி சில்ல பகர்ந்தனர் பரிவின் மாதோ. 58

வானுறு படரு நல்லா னெனும்புயல் வளருங் கானுந்
தேனுக வெமக்குப் பெய்து திகழ்ந்ததென் றிருளிப் போற்றிப்
பூநாறு முழையிற் சிங்கம் பொருப்பிடை முழங்கு மோதை
கானற்றங் கரையி னன்று நிசிதனைக் கழித்தா ரன்றே. 59

புலரியி லெழுந்த ரங்கப் புதுமையை யறிந்து மீள்கென்
றிலகுமோ ரடியார்க் கோதி யெய்தினரின் னெறியே காட்ட
நிலவுற வருணன் றிக்கு நேர்ந்துற வெழுந்து சென்று
ரலகறு முதலிவெள்ள மருக்குறப் படர வாங்கே. 60

சேணெறி நடந்து சென்றோர் செழுமறைக் கிழவர் பல்லோர்
மாணுற வுறையு மூரின் மன்னுமோர் வளவிற் றங்க
வாணவ மகலு மந்த மறவர்க ளடைந்தோர்க் கெல்லா
மூணமிழ் தெனவே யார்தற் குற்றன பலவு நாடி. 61

தந்தளித் திளையாழ் வாரின் றுடொழு திறையுங் கொண்டு
தந்திருக் குன்றக் கேகத் தமனியப் பொருப்பா ராழ்வார்
முந்தென விலகு செங்கேழ் முதிர்துகின் முக்கோ லாதி
யைந்தவித் தவர்கட் குற்ற யாவையு மணந்து மன்னே. 62

தாந்தினம் புரியு மாரர் தனத்திரு வரதன் பாங்கி
னீந்ததா யவன்முன் வைத்திட் டெடுத்தவை புனைந்து தோன்றத்
தேர்ந்துசிற் சில்கர ளையன் றிகழுடைய யவரே யென்று
போந்தடைந் தடியே நுந்தந் தொண்டுறப் புரக்க வென்றார். 63

அங்குவந் தடுத்தோர் தம்மை யடியரா யருளி னேன்று
மங்களம் பெருகு மாறு விலச்சினை முதலா மாடித்
தங்கியங் ககன்று சின்னாட் டடவரை பலவுந் தாண்டிப்
பொங்குசெம் சாலக் கிராம மெனுந்தலம் புரிந்து புக்கார். 64

புகுதலு மவண னேகம் புரிந்துமுள் பொதிந்து வைத்த
நகுதவ முடைய பல்லோர் நணுகித்தஞ் சரணம் போற்ற
மிகுதர வவர்க்கு மேன்மைந் திருத்தமைந் தனைத்து மீந்து
தொகுதரு மவர்கள் கேட்பத் தூநகை துலங்கச் சொல்வார். 65

இன்றிருந் திதற்குச் சாளக் கிராமமென் றியையு நாம
மொன்றுக வெனவு ரைத்தாங் குயர்தரு வருக நம்பி
நன்றுறு தரிச னார்த்த மடையவு நணுக நல்கி
நின்றவ ணெழுந்து சிங்கர் கோயிலை நிலவச் சார்ந்தார். 66

பதிகளி லுயர்ந்த வந்தப் பதியதி பதியும் புக்குக்
கதியென வடைந்தோர்க் கெல்லாங் கரையறு மின்பங் காலுங்
கதியுறத் தெருட்டி நிற்கக் கமழுமத் தலத்திற் பூசை
மதுரிபுக் கியற்றி வாழு மருச்சகர் சிலர்கண் மன்னி. 67

தேசிக மணியின் பாதந் திருந்திப வணங்கி யைய
ஞசியை மணந்து மேஞு டவரெழற் காய கந்தம்
பேசிட வுடையார் கேளாப் பெருமகன் சோழ னன்றே
மூசிடு கிருமி கண்ட ஞயவன் முடிக வென்றே 68

உருத்தெழுந் தபிசா ரத்தி ஞேமமங் குஞற்ற லாஞ
ரிருக்க விவ்விளைவு முற்று மிங்ஙன மெழிலா ரந்தத்
திருத்தகு பொழிலை யாள்வோன் விடலமா தேவ ராயன்
முருக்கிதழ் முருந்தின் மூர லொருமகன் முயன்று பெற்றுன். 69

கண்ணென வயிலி ரண்டு கமலமென் முகத்திற் கொண்ட
பெண்மயி லவளை யன்ஞன் பெட்புடன் வளர்க்கு நாளி
னுண்ணென வலகை பற்றித் தொலைவுறச் சுழற்ற வன்ஞட்
கண்ணலங் களிற்று வேந்த னகம்வறி துலைந்து மாழ்கி. 70

மந்திர மலியக் கற்ற சமணர்கள் பலரி னென்ன
தந்திர மிழைத்து மஃதோ தளிர்க்கரம் புடைத்து நக்கு
மிந்தநும் விரகி ஞனே யிகந்தொழிந் திடுதற் கொல்லேன்
வந்தநும் வழியை நோக்கி வழங்குகென் றறைந்த தன்றே. 71

குரிசிலக் கொடுமை காஞக் குழைந்தகம் பெரிது மந்தோ
வரிசெலப் படிந்த சேலி னங்கையி னகன்ற கண்ஞள்
கரிசினை யகற்று மேலோர் காசினித் தலையி லுண்டேல்
வரிசைகள் பலவு மீதும் வாய்மையென் றறைந்திட் டாஞல். 72

தொண்டனூர் நம்பி யென்று துலங்குறு மொருவர் கேளாக்
கொண்டலின் வண்ணன் வீறு பெருகுறக் குறித்தும் போந்து
மண்டலத் திறைவன் மாடே மன்னியெம் பெருமா ஞர்த
மண்டரும் புகழ்தற் கொத்த வலகறுங் குணங்கள் போற்றி. 73

முன்னொரு முழுவுத் தோளான் மூரியந் தானை வேந்தன்
பொன்னெனும் புதல்வன் வாட்டும் பிரமராக் கதனைப் போக்கித்
தொன்னலங் கனியைச் செய்த தோமறுந் திறலை யோதி
யன்னவ ரெழுந்து ளாரீங் கென்னவு மறைந்தா ரன்றே. 74

வெங்கதிர் வெயிலிற் சாம்பு மிளையபைங் கூழ்க ளோங்க
மங்குலங் கெழுந்து பெய்தன் மானுமவ் வுரையைக் கேளாப்
பொங்கிய வுரத்த ஞய பூபதி யவரை முன்னிட்
டங்கெழுந் தவரின் பாத மடைவொடுந் தொழுது போற்றி. 75

தங்குறை யிரப்ப வந்தத் தாபதர் கருணை யானே
யங்கவன் மொழியிற் கட்டுண் டரண்மனை குறுகி யந்தண்
பங்கயப் பதத்தின் நீரைப் பருகிடப் புகட்டப் பேயு
மங்கிள ரரையன் பெற்ற வணங்கினை யகன்று மாதோ. 76

இத்தகை யிறைவர் பாதத் தெழிலுறுந் தீர்த்த மிந்தப்
பித்தனுக் கென்று வாய்க்குங் கொல்லெனப் பிணியா ருள்ளத்
தெத்தனை பகலா ராய்ந்தே யீங்குறைந் திதனை யேன்றே
தொத்துறு பவங்கள் விண்டே தூயநற் கதியுங் கொண்டேன். 77

பிறப்பினை யகன்று மீளாப் பெரும்பத மணுக வேண்டின்
தறைக்கணைத் தகைய ரேனுந் தண்மைசா லிவர்பொற் பாத
நெறிப்படி புகுத லொல்லு மென்றது நிகழ்த்தி நோக்கின்
பொறிப்புலன் கதுவை யார்க்கும் விசும்பினிற் புக்க தாமால். 78

கன்னவில் குவவுத் தோளக் காவலன் கருத்துட் கொள்ளா
தின்னகை யிறும்பூ தென்று மிரண்டுமே லெழுந்து பொங்க
வென்னரும் குலத்துத் தெய்வ நீவிரே யென வீழ்ந் தன்னூர்
பொன்னடிக் கமலம் போற்றிப் புரந்திட விரந்தானன்றே. 79

படியெலா முய்தற் கென்றே பரம்பத மிழிந்து போந்த
வடுவிலா வலரும் வைண வந்தனை வளர்க்க வுன்னு
வடியனு வவனை யாக்கி யைந்திருத் தங்க ளாதி
நெடியமா லேற்கு வண்ண மடையவு நிகழ்த்தி மற்றும். 80

விண்டுவர்த் தனநா ராய ணன்னென விளங்கு நாம
மண்டல முவக்கத் தந்து மண்ணிய மணியின் மாடப்
பண்டைய வினையின் விண்டேன் பாம்புரி கழன்ற தொத்தேன்
றுண்டனே னென்ன மன்னன் றுதித்தன னடித்தா னன்றே. 81

வேறு

கனுழிக்கவுண் மதமாபல கஞலப்புவி காப்போ
னிலகத்திரு வடியாரென வெழிலிக்கரு வண்ணற்
குலேவுற்றனர் சமணக்குரு மார்காவலி னுழைபோய்
விலகிப்பழ வழிதீயுறல் வேறென்னிது வென்றூர். 82

நிருபன்குறு முறுவல்புரி தந்தேநிவி ருணராத்
திருவுள்ளவர் திகழெம்பெரு மானுரெனுந் திறமுங்
கருகுந்நும கருத்தேயிவண் டெரிவுற்றுள தன்றே
பெருகுங்கதி யெதுவோவது பேணுற்றன னென்றூன். 83

கேளாவதை யாசீவகர் கெடுவெஞ்சின வளலே
மூளாவெழுந் தொருபேயினை முயன்றோட்டிய விறலெந்
தாளாண்மையின் வளர்பற்பல தகுநூல்வல மாமோ
கோளார்கலு ழன்முன்னிகல் கொளுமோ சிறு புறவும். 84

அவரெந்திசை வாதாடுக வடலாரிக லதனி
லெவர்பிந்துவ ரெனினும்மவர் கற்காணம திடையே
யவிர்தம்முட லழியத்திரி வுண்பாரென வரைய
னுவருண்மன துடனன்னவர் கடினந்தனை யுன்னு. 85

சிந்தித்துற வெமதெம்பெரு மானாது தெரிவுற்
றந்தப்புர வலனின்முக நோக்கிக் களிறனையா
யிந்தச்சம ணர்களின்மன மியையும்படி யிழைத்தும்
புந்திக்கொரு புன்கண்பட லென்றின்னருள் புரிந்தார். 86

அப்போதிறை வன்சாவக ரவையெய்துகென் றறைய
வெப்போதென விருந்தார்களீ ராறாயிர மருகர்
தப்பேதவி ரரையன்னவை தனில்வந்தனர் குழும
வொப்போதரு மிளையாழ்வாரு முக்கங்கொடு புக்கார். 87

புக்கங்கொரு மறைவிங்கிடு கெனவாடலும் பூபன்
பக்கந்தனை நோக்குந்துணை யதனுட் பணிபுரிவோர்
தொக்குங்கதி ரெறியும்மணி துதையும்பொனி னெழினி
மிக்கங்கொளி ரெமதாரிய ரெதிர்மேவர விசித்தார். 88

படகத்தக முறைதந்தவர் பாராவண மெவரு
மடலுற்றொரா யிரமாமுக மவையானுரை யாட
வுடைவுற்றன ரொன்னார்களு மெதிராடட லோயத்
திடமுற்றொரு சமணக்குரு திகைத்தேமனத் தகத்தே. 89

புரமாடுதல் போக்காவிவ ரக்மாடுத லென்றே
யறநாடிடி லொருவன்றிரை யகத்துள்ளவ னுரையோ
திறனேடொரா யிரநாவலர் தெரிக்குந்திற மானும்
விறனுடுது மெனவுன்றுபு வீக்கித்திரை மெல்ல. 90

காணப்பண மோராயிரங் கவினத்திகழ் பணிகட்
கேணுற்றிடு மிறையாயொளிர் கிற்கத்திடுக் கெனவே
மாணற்றன மெனமீண்டுதன் மலிசுற்றமு மறுகக்
காணற்கரி தவர்வெந்திறல் கழலுற்றன வியப்பின். 91

கெட்டேமென வவரேவருங் கேளாநடு நடுங்காப்
பட்டோடிய முனமானிரை கவரப் படுபருவத்
தொட்டாரென நரனுக்கெதி ரோடப்பல நெறியான்
மட்டேவழி மலர்மாலையம் புயமன்னவன் வெகுளா. 92

வயமள்ளரி னிரிந்தோடிய முழுமக்களை வளையா
நயமின்றுமு னவில்வின்படி கற்செக்கிடை நலிய
முயலும்பொழு தத்தெம்பெரு மானாருண் முளையாப்
பயனொன்றிய மொழியொன்றிது செவிசேர்கெனப் பகர்வார். 93

நெறிதப்பிய நெறியுற்றவர் நீக்கப்படு நெறியை
யறிவுற்றழ காறேகுத லன்றேநம தகமும்
வறிதிற்பல வாய்விண்டொகு வயமும்பெற லின்றிக்
குறிதப்பியு முயிர்தப்புற விரிந்தோடுவர் கோவே. 94

மனுவின்னெறி தவறுதொழு குந்திண்டிறன் மன்னர்
முனிவெங்கள முனையும்பொழு தொன்னார்முது கிடனும்
பிணையன்னவ ருயிர்வௌவுதல் பிழையென்பது மறிவா
யினியென்னிவர் தம்பாலென விறைவன் சினம் விண்மன். 95

கடிமார்முர சொலியோவறு கடையோங்கிய நிருபன்
கொடுமாவருள் விடவன்னவர் கொண்டார்பெரு நகையே
தடமாரெதி ராசர்க்குள தயையாதிய தகைகள்
படிமீதெவர் பாலுள்ளன வெனவிம்மிதப் படுவார். 96

தாழாதெதி ராசன்மலர் தகையும்பத மிசையே
வீழாவெமை யருள்கென்னலும் விரகார்குரு மணியுஞ்
சூழாவவ ரனைவோர்களுஞ் சுகமேயுற வென்று
மூழாவிலைச் சினையாதிக ளுவந்தேயளித் திட்டார். 97

என்னுவிஃ தென்னுவிஃ தெல்லாமதத் தினரு
முன்னுவிவர் திருவேயுயர் திருவென்றுவந் துள்ள
மன்னுவிவ ரடியுய்குவ ரெனயாவரு மகிழ
மின்னுவளர் திருவைணவ மிகவாற்றுபு போந்தார். 98

வேறு

இங்ஙனந் திருவை ணவப்பெருக் கிலகக்
குடதிசை யெங்கணும் பெருக்கி
மங்கள மலிசா ளக்கிரா மத்தின்
மற்றெழுந் தருளினார் சில்ல

திங்களங் ககலத் திருமண்முற் கொடுபோந்
தது தினந் தொறுஞ்சுருங் கிடலா
லிங்கினி யிஃதெத் திறம்பெறற் குறுமென்
றினைந்துகண் டுயிலுமோ ரிரவில். 99

ஆதியி லயனு வருச்சனை மிடைந்து
மதன் மிசைச் சனற்குமா ரன்றன்
மேதகு பரசு மேயினன் மிகைசே
ரெதுகிரி மிசையெழுந் தருளும்
வேதநா ராய ணன்னவர் கனவில்
விளங்குபு வேதியர்க் கரசே
யாதவ கிரியி னிலங்கிருங் கலியா
ணத்திருத் தீர்த்தந்தென் மேற்கில். 100

மணங்கமழ் மகிழொன் றம்பரத் தடவு
மதனது தென்புறத் தைய
கணங்கொளுங் கருவண் டுண்டுமிழ் தரவின்
னறவொழு கருங்கதிர் பொதுளும்
வணங்குறுந் துளபம் வளர்ந்துள தொன்றி
னடியொரு வளமிகப் பெருகுந்
நுணங்கொளு மதனுட் குலவுறு மெம்பேர்
கூறுவர் நாரண னெனவே. 101

திகழ்தருந் திருமண் திருக்கலி யாண
தீர்த்தத்தின் வடதிசை மிசையே
யிகலுறு மெமதின் னூர்தியே முன்ன
மேகிவெண் டீவினிற் கொணரா
மிகுதர வதனை வமைத்தன னங்கே
மேவுதி யகழ்தொறும் பெருகும்
பகலவன் குணபா லெழனுமப் பசிய
துழாயடிப் படர்கெனப் பணித்தான். 102

துயிலுணர்ந் ததனை முதலிகட் குரைத்துத்
தோமறு முதத்துட னயிலா
ரயில் கரத்தரைய னணையா னடவி
யழித்தவ னதியர் பலரும்

பயின்றுடன் பாவிப் போதரப் படர்ந்து
வேதபுட் கரணியிற் படிந்து
செயிரருந் துளபத் தடியுறும் புற்றைச்
செறிந்ததைத் தொழுதெழுந் தனரால். 103

வலமுறச் சூழ்வந் தங்கரங் குவியா
வழங்கலும் புரவலன் பணியாற்
பலர்கிளர் கருவி கொண்டுவன் மீகந்
தகர்வுற வகழ்தரப் பைம்பொன்
னிலகுமோர் விமானங் கட்புலன் காண
வெடுத்துமண் புடைவெளி யியற்ற
மலரவ னுதித்த மலர்தரும் கொப்பூழ்
மாமனு மதனகம் பொலிந்தான். 104

ஆயிரத் திருபத் தொன்றெனுஞ் சகாத்த
மாம் வெகு தானிய வருட
மேயபங் குனிவெண் பக்க மீரேழாந்
திதிதனின் மிளிர் புனர்ப்பூசத்
தாயமா மகளிர் குரவைமுன் னயர்ந்த
வாதியஞ் சோதிமுன் வழுத்துந்
தூயனைத் திருநா ராயணன் றன்னைத்
தொழுதனர் கண்டெடுத் தடைவே. 105

தனதனைப் பொருவுந் தராபதி தன்னாற்
றபனிய நவமணித் திரளின்
சினகரம் புதுப்பித் தடுக்கலி னிரை போற்
றிகழ்பல மணிபணி செறியக்
கனமிகு மிருநான் காகிய வருணத்
தவர்களுங் களித்துறற் கேற்ப
நனிவளர் நகரொன் றிழைத்தனர் நாரா
யணபுர மெனும்பெயர் நணுக. 106

புனிதராம் பலரை வகைவகை யதனுட்
குடிபுகப் புரிந்தகம் போக்கு
நனிமிளிர் திருமண் டிருக்கலி யாணப்
பொய்கையி னகுவட மேல்பா

வினிதுறக் காணு வெவர்களும் வனைவா
னிழைத்தனர் பாஞ்சராத் திரத்தின்
புனைதரு வழக்கின் புகழ்தரு தேவ
ராசபட் டரின்பொலி கரத்தான். 107

வேதனும் விழையா ராதன முழங்க
விண்முர சரம்பையர் நடிக்கக்
கோதறப் பணுவித் தருட்கடன் மாற
னருளிய கொழுந்தமிழ் மறையுண்
மேதகு மொருநா யகமெனுந் திருவாய்
மொழியினை மிளிர்தர விசையா
வாதரம் பெருக வவணுறைந் தனரா
லனைவரும் விறலெடுத் துரைப்ப. 108

வேறு

இன்னணம னேகபக லெய்தவெதி மன்னர்
முன்னிரகு நாதனயர் பூசனைமு கந்து
மின்னுவிழ வுண்ணுதிரு விக்கிரக மேவார்
மன்னுதிரு வுள்ளநனி மங்கியுறு காலை. 109

ஓரிரவி னெண்கனவி னூழிமுத லுதன்
சீர்கெழுமு டில்லியரை யன்மனைசெ றிந்தே
நீரவனெ ழுந்தெமையு நேர்ந்துகொணர் கென்ன
நாகுளமு வந்தனர்வி ழித்துநய னம்பின். 110

மற்றுடனெ ழுந்துதம மாண்படியர் வெள்ளஞ்
சுற்றவிரா ருயிரவர் சோதிவடி வென்னக்
கொற்றமொடு சேணெறிக டந்துகுறு கக்கண்
டுற்றவய வாகுதுருக் கன்மன முலைந்தே. 111

ஆனைநிறை தானைவல மம்புயவ லங்கொண்
டேனைநில மன்னவர்க ளேவரையும் வென்றே
யூன்மற மண்முழுதொ ருங்குபுரந் துள்ளே
மானமொடெ திர்ந்திடுமோர் மாற்றலரு மின்றே. 112

வங்கநெடு வாரிதிபு ரண்டுவர லென்ன
விங்கெழுபெ ரும்படையு மெப்பொழில தாமோ
சங்கமில கஞ்சமில சாற்றுமுர சின்றே
துங்கமறை வாணர்களின் றொகுதியுறழ் கிற்கும். 113

எல்லவரும் வில்லெறியு மட்குறி யியைந்தோ
ரெல்லவரு மாரணமி சைக்குமெழில் வாயா
ரெல்லவரு நூனெறியி யங்குமன முள்ளா
ரெல்லவரும் வைணவரெ ழிற்குறிம ணந்தோர். 114

சுற்றுமலை நாப்பணெளிர் சொன்னமலை போலோர்
நற்றவர தற்குநடு வட்பொலியு கிற்பார்
மற்றவரெ வர்க்குமுயு மன்னுநெறி காட்டுங்
கொற்றமுறு மாரியகு ருக்களிவ ராமே. 115

என்னமன முன்னுபுவி பம்பெருகு மன்னன்
பொன்னினுயர் மேலகம்பொ ருந்தியறி போழ்திற்
றென்னெறிது லங்கவெழு தூயர்பலர் சூழ
வன்னவன ருஞ்சவைய க்குழுமி னூரால். 116

ஓய்யெனமி லேச்சபதி யுற்றெதிர வர்க்குத்
துய்யமணி யாதனம ளித்துமகிழ் தூங்கச்
செய்யவுறு செம்மைபல செய்துவுயர் சேயீர்
பொய்யொழியு நும்புனித பூமியெது வென்றான். 117

வேறு

என்னனுங் குருவிறை யேந்தல் வாழிநின்
றன்னமுந் தவறுறுக் கோனும் வாழிநின்
மன்னுறு கிளைஞரும் வாழி வாழி நின்
கொன்னவில் கூரவே லறமும் வாழ்கவே. 118

மறங்களைந் தறம்பொலி மாட்சித் தாய்நெறி
திறம்புறுப் புரப்பது தெரிந்து பூண்டவ •
ருறங்கினு முறங்கிடா தொளிரு மாணையாற்
புறம்படு நவையெலாம் புதையு மென்பரால். 119

அனையசெந் தனிப்புயத் தமல மன்னவ
வனைகழல் வலியின்மண் முழுதும் வாழுமா
னினைவுறு கடவுளந் நிமலன் மேலுறு
மெனவிரி கலைஞரும் விரும்புவா ரரோ. 120

கற்புறு மகளிர்தங் கண்ணென் கூரயில்
பொற்புறுங் குறிதனிற் புகுந்து பாய்வது
நிற்பது மழைபெய நிலஞ்சு ரப்பது
மற்புறு மவரதி னாட்சி யென்பரால். 121

தகையவை தணப்பிலாத் தரைக்குக் கேள்வனே
வகைபெறக் காண்டலும் வலத்ததென்பதான்
முகையலர்த் திடுமளி மூசுமா லையாய்
நகையினிற் காண்குவா னசைந்திங் கேழ்ந்ததாம். 122

பூவெலாம் போற்றுநற் புகழ்க் குவீடெனு
மேவலாந் தகைபல மிடைந்த தொண்டநா
டேவெலாம் பணிகொளு மெழிற்கை வில்லினு
யாவலா யாமுறை யரிய நாடுகொண். 123

இலக்குவ முனியென விசைப்ப ரெம்மையே
புலக்குற வரும்பொருள் பொலியப் போற்றுவேன்
நலக்குறு மிவரெலா நமது சீடரென்
றிலக்கண மமைவுற வியம்பி ஞரரோ. 124

யவனமா பூபதி யாவுங் கேட்டவர்
நவையறு திருவுடற் பொலிவு நாமக
ளவிர்தரு மரியவாக் கினைய யாவுங்கண்
டுவகையிற் கிளர்ந்தன னுரைத்தன் மேயினுன். 125

அளப்பரும் பகடுடை யரிய மாதவ
ருளப்படுங் குருவிறை யொளிய வாள்கொடு
முளைப்புறு புறப்பகை முரிய வாட்டுமிவ்
வளப்படு மரசரின் வலியொர் வன்மையோ. 126

ஞானமாந் தானையி னலியு முட்பகை
தானிரிந் தொழிதரத் தகர்த்து மீள்கிலா
வானமா மூரைப்பரு வாழ்வு தந்தருள்
கோனெனத் துலங்குநின் குணத்துக் கீடெவன். 127

என்றன பலவிசைத் தெவர்க்குங் கேளிர்நும்
பொன்திரு வுளமிவட் புரிந்த தேதுகொல்
என்றவப் பயன்றனி னெதுவெ னுந் தரற்
கொன்று பட் டெனஃது ரைக்க வென்றனன். 128

ஆழியா யரியவ தரிப்பொ ரைந்த னுண்
மாழையா மருச்சையு மொன்று மற்றத
னூழுறு படிவமொன் றுளதுன் பாலதே
வாழ்வுற வெமக்கினி வழங்கு கென்றனர். 129

கேட்டன னடையல ருடலங்கீண் டொளிர்
வாட்டிற லவனிபன் வரைவின் றம்பொனிற்
றீட்டுபல் படிவமே செறித்த சாலையைக்
காட்டினன் கொள்கெனக் கருத்துட் கொண்டரோ. 130

அளவறு கோடியா மவைகண் முற்று நன்
கிளவலா முனிவரு மினைந்து நாடியுங்
களைகணு மெதுகிரிப் பரனைக் காண்கிலா
துளைவுற வுளமவ னுற்றவர்க் கண்டு பின். 131

எமதிறை யிவணிலை யென்ன வள்ளனு
மமுதெனு மொழியினு ளரையன் கன்னியி
னமைவுறு பவனமூ டௌதொன்று மென்க்
கமையொடு மவரிவர் கருத்துட் பொங்கியே. 132

காவலற் குறுகியெங் கடவுள் காசினி
யாவலிற் புரந்துவா ழரையர்க் கேறனுய்
பூவையைப் பொருவுநின் சுதையின் பாங்கரி
னேவறத் திகழுமென் றுணர்ந்தே னென்றனர். 133

வேறு

வேதபாகி யத்துருக்க வேந்தனின் முறுவல்செய்
தாதிநாய கன்னெழுந்து மங்கிருந் தடைதரக்
கோதொழிந்த குணமலிந்த கொள்கையீ ரழைக்குகென்
றோதினு னவர்க்குயர்ந்த வொண்மை வீறு மாறரோ 134

நன்றெனப் புகன்றெழுந்து நன்முனிக் கிறைவருங்
குன்றெடுத்த கோவலன் வழுத்துமந்த மாயனை
மன்றலங் கருத்திருத்தி மூலமந்தி ரம்புகன்
றென்றனைப் புரக்கமன்றி லெழுகவென் றிரந்தனர். 135

அழுங்குமானை காத்தவைய னைவர்கொண்ட பைங்கிளி
தொழுங்கணத் தளித்தவையன் றாயவம்ப ரீடன்முன்
புழுங்குவெய்ய முனியினுய்ந்து போகுமைய னெங்குரு
வழங்கிரந்து வார்த்தையே ருளத்துவைத்து மற்றரோ. 136

பொன்னரிச் சிலம்பொலிப்ப வன்றுதூது போயதும்
மன்னுமண்ணும் விண்ணுமொன்றி நன்றளந்து கொண்டதுங்.
துன்னுமா மருதிறத் தவழ்ந்துதூய்மை செய்ததும்
மின்னதன்மை யாயதா ளெடுத்துவைத் தெழுந்திடும். 137

ஐயெனப் படர்ந்திராம னனுசனூர் மடித்தலஞ்
செய்யதா யமர்ந்தசெய்கை செய்யகோல னாதியோர்
மெய்யதா யுணர்ந்துமெய்ம் மயிர்ப் புளக மேவநந்
துய்யவாரி யன்பகட்டை யேவியந்து தொழுதனர். 138

தானயானை மன்னவன் தகைவிழைந்த வாரியர்க்
கானமான முழுதிழைத் திராமநேய ரையு மளித்
தேனையோரு மேன்றநன்மை யேயுமா றிழைத்திடும்
வானநாய்க னுறுசிறப்பு மளந்துசெல்ல விட்டனன். 139

வந்துதங் குறங்கிருந்த வான்வணங்கு மையனை
நந்திருப் பொலிந்தசெல்வ நந்தனுவென் றணைதரு
மெந்தமாரி யருமெழுந் தருள்விழைத் தகன்றன
ரந்தவூரை யடிதுருக்க ரியல்புணர்ந்து விரைவினே 140

வேறு

வீயா வெய்ய பவக்கடலின் கோடே யுய்த்து விளங்கு மலர்
வீயா ரந்தா ளிலக்குவமா முனிக ளீங்கே விலகியபின்
தோயாவின்செவ் வரிகள்பல துலங்கும்சேலேய் விழிமகளு
நீயாவினிய துயிலெழுந்தே நெடுமாலருகே நேடினளால். 141

அந்தத் திருநா ராயணன்ற னஞ்ச மாய வழகிரியை
கந்தக் குழலா ளருத்திமிகக் கங்குன் முழுது முயங்கிநுகர்ந்
தெந்தப் பகலுங் கண்டுயிலா விரவி படுகா லெழுந்தணவா
ளந்தப் பொழுதும் விழித்தயலி லவனைக் காணா தயர்வுறவே. 142

உழையோர் தம்மை யுயர் பாவை யொழிந்த தன்மை யுரைமினெனக்
கழையே புரையுங் கருந்தோளீ பயந்தோ னின்னைக் கண்டிரந்த
மழையே யொருமா மறையவனுக் களித்தா னென்ன வவர்மறுகிக்
குழையே தடவுங் கூர்விழியாள் குரைபொற் கழலான் றனைக்குறுகா. 143

ஐயே யென்ற னுயிர்ப்பாவை யாருக் களித்தா யதுவின்றிப் [ருதாய்
பொய்யே யினியா னுயிர்பொறுத்தல் பொய்த்தாள் புதல்வி யெனக்க
மெய்யே பாவை யளிக்கிலையென் மேலாமுயிரே வழங்கினையென்
செய்கே னென்று விளந்தளிரா ரகடு செங்கை யதுக்கினளால். 144

தந்திக் கோடுந் தளருமுலைத் தையன் மாற்றந் தனிலரையன்
சிந்தித் தடையார் சிதைவயவர் சில்லோர் தம்மை விளித்துடனீ
ரந்தப் புவிவா ழமரர்திர ளிரிய விழைத்தம் பொன்னுருவை
யிந்தக் கணமே கொணர்திரென விசைத்தா னவருங் கிளர்ந்தனரால். 145

திரையிற் பொங்கித் திகடரைமேற் றெழித்துப் படரும் பரவையென
வரைவிற் படரும் வயப்படையின் வருகை யுணர்ந்த குருவிறையும்
விரையச் செல்லு மதர் பிறழா வேறென் றெழுந்தேர் பாணருறை
கறையற் றகலுஞ் சேரியிடைக் கலந்தார் கழுமுந் திரையுடனே. 146

அந்தச் சேரி யுறையடலா ரறுநா ருயி ரவர்திரளா
முந்தச் செய்த திருவினையான் முளையா ஞான முனிவரிவ
ரிந்தப் பறைய ருயவெழுந்தா ரென்றே யவரை யன்றிரவி
னெந்தப் புரையு மின்றயலி லிருந்தார் காவ லிழைத் தடவே. 147

கதிருங் கிழைக் கடன் முளைக்கக் கமழும் புலவார் வேற்கரத்தி
னதிருங் குரலி னெம்பெருமா னுரேமுதலா மனைவரையுந்
துதியும் புரிந்து சூழ்போகி சொலவும் பெயரை யங் கழுவும்
பிதிரும் பொன்பா யருவியெது வரையே பேணிப் புகவிடுத்தார். 148

அனந்தன் பங்கா மாரியரவ் வைந்தா மவர்செய் யருநலக்கே
நிலந்தன் னிடையின் றிணையெனவே நிலவுந் திருவுள் ளகமகிழா
முனந்தொல் லிரவி குலமுதல்வன் முன்னி வழுத்துஞ் செல்வனையின்
மனந்தன் னுடனே திருநாரா யணன்றன் மாடே யிலகுவித்தே. 149

ஆதி நூலின் வழிபிறழாப் பிரதிட் டையுநன் காற்றுவித்துக்
கோதில் விழவும் வானவருங் குழுமு மாறு குறித்தயரா
மாதம் பக்கம் தினம் வருட மலிய விழைக்குஞ் சிறப்பெவையு
மீதி லென்றுந் நிகழும்வணம் படியும் மிளிர வருளினரால். 150

காணு வுதவிக் கண்டிழைத்த கருதும் பாணர்க் கவணென்று
மேணுர் சிறப்பொன் றுண்டுதொறுந் திருநா ரணன்ற னெழில் விழவிற்
பூணு மகிழப் பொன்னருள்செய் துலகம் போற்றும் புகழ்வுடனச்
சேணுர் சிகரிச் சிகைத்திருநா ரணமா புரத்தே திகழ்ந்தனரே. 151

வேறு

ஈங்கிது நிற்க வெம்பெரு மானுர்த் தொடர்ந் தேகும்
வீங்குறு தோளர் விற்படை யாளர் விறல் வீரர்
பாங்குறு மந்தப் பாகவதர்போம் படிகாணு
ரேங்கின ருள்ள மெங்கு முழன் றரிளைப் புற்று. 152

மீண்டனர் மற்றும் மேவினர் தம்மூ ரிறைவர்க்கண்
டாண்டகை யேயவ் வந்தணர் போமா றறிவின்றே
தேண்டின மெங்குந் திண்மை யழிந்தே திருமுற்றேம்
பூண்டிகழ் மார்பா வெம்முரை பொய்யன் றருள்கென்றார். 153

பொன்னொளிர் கொங்கை மின்னிடையாளப் பொருவார் சொல்
லென்னு மடும் வேலள்ளுற வெம்பி யினி யந்த
வென்னுயிர் வாழும் பொன்னுயி ராய வெழிலுதன்
பொன்னுரு வென்றே புல்லுவ தன்றிப் புவிவாழேன். 154

தாமரை யின்பூ பாசடை மானும் விழி மெய்யுங்
காமரு செங்கே ழந்துவர் வாயுங் கதிர் வீசும்
பூமரு பீத வாடையு மொன்றிப் பொலியந்த
வாமன னன்றே யானுயிர் வாழும் மணவாளன். 155

என்னை யுயிர்த்த மன்னவ வொன்று மினையாமே
யன்னை யினின்றும் புக்கக மேவுமவளுய்க்கும்
மன்னிய சீரி னென்னையு மந்த மலையுய்ப்பாய்
என்னவு மார்வத் தீன்றவன் றுள்மே விறைஞ் சிட்டாள். 156

கந்தடு செம்பொற் கிம்புரி கோட்டுக் களிறன்ன
னிந்திரை யன்ன ளின்னுரை கோளா விறும்பூதிற்
சிந்தை மகிழ்ந்தே சீர்பல செய்தச் சின வேற்கட்
பைந்தொடி யாளைப் பற்பல வேமத் தொடு விட்டான். 157

மைம்முகின் மானுங் கைம்மலை மீதின் முரசார்ப்ப
வெம்முனை வேலா ரெண்ணிலர் சூழ விரைந் தேகிப்
பொன் மலை போலு மம்மலை யுச்சிப் பொலிந் தோங்குஞ்
செம்மலர் மங்கை சேருநா நாதன் மருங்கெய்தி. 158

வெள்ளிய தந்தத் துள்ளியிழைத்தே விலை யோரா
தொள்ளொளி காலுந் தண்டிகை நின்றே யொருவிப்போந்
தள்ளுறு பந்தி யின்மணி யாழு நிலயக்குட்
பொன்னென வேபுக் கங்குள யாரும் புதிதெய்த. 159

நின்ற திருக்கோ லன்றிரு நாரா யண னேரில்
பொன்றி கழின்பூந் தாளிணை நாப்பண் பொனின் மின்னு
நன்றுறு தெய்வத் தின்னுரு வோடு நளினத்து
டொன்றி யிலங்கும் மின்னென வாங்கே யொளிர்குற்றுள். 160

கண்டன ராரும் கையிணை கூம்புந் தலையேறக்
கொண்டி வளந்தக் கோகனகத்துக் கொடிமின்னே
பண்டென விந்தக் கொண்டலின் வண்ணன் பதமுற்று
யெண்டிசை யுய்வா னிங்கினி யென்றே யிரைந்திட்டார். 161

மாடு படர்ந்தோர் மற்றுட னேகி மதலேழுத்
தோடு மலிந்த தொன்னக ரண்மித் துருக்கன் பால்
பாடு கிடந்த பைங்கிளி யாடன் பகடெல்லா
மாடலே வன்மிக் காய விறம்பூ தடைந்தன்றே. 162

செம்மல ராளே யெம்மனே செய்ய வவதார
மம்மமு னென்ன வாற்றிய நோன்பென் றகம்பொங்கி
நன்மல ரூடே நாரைக ளண்ட மெனநாடி
மம்மரி னீன்ற வால்வளே முத்தத் தடைவைகும். 163

பல்வள மாரும் பள்ள வயல்சூழ் பதிபல்ல
செல்வ மனேகஞ் சேர வவட்குச் செலவிட்டான்
மல்வரை மார்பன் மஞ்ச ளூறுங்கா ணிகளென்ன
நல்வரை நாடர்க் கன்னது தொல்லே நடையன்றே. 164

பின்னெதி ராசர் பற்ப கிரிக்கண் பெருகுற்ற
பன்னரு புத்தச் சங்க மிரிந்து படவென்று
பொன்னகர் நாடும் யாதவ சைலம் பொலிவுற்ற
வென்னரு நாரண னின் னடி கண்டே யிருந்திட்டார். 165

## சருக்கம் 25.

மண்முதற் பூதமாய் மலரவன் னரனேமுன்
விண்முதற் றேவராய் விளங்குமன் றுமறைத்
தண்மலர்க் கண்ண னின் றுளடைந் துறுமெம்மைப்
புண்மனத் தடைவுரு துய்வுறப் போற்றுவாய். 1

எம்பெரு மானுரவ் வெதுவரைத் தலேமிசைத்
தம்பெருந் தரிசனுர்த் தம்வளர்த் தமையவின்
கம்பெருங் கூரமா ராழுவா னரசவை
முன்பு சென் றுயதும் மொழிகுவா மங்கரோ. 2

நீத்தவர் வேடமாய் நிருபன்மாட் டடைந்தவ
ரேத்துறும் பனுவலா னேன்றவ ரெவர்களுந்
தோற்றிரிந் தொழிதரத் தொடுத்துவா தச்சமர்
பார்த்தநுண் ணறிவினுர் பரவவே வேறலும். 3

நஞ்சிவாத் பரதரம் நாத்தியென் றெருமுறி
யஞ்சுவே லரையனங் கெழுதியத் தோட்டினுள்
றுஞ்செலுங் கையெழுத் திடுகெநீர் நொய்தினென்
றுஞ்சலின் றெழிகுவா னுதறியங் குளறினுன். 4

உரமுளா ருதினுழைத் தூரோணமத் தித்ததப்
பரமெனும் பண்புறுங் கையெழுத் திட்டதும்
முராணுறச் சீறியம் முழுமக னுருமென
வரனறும் வார்த்தையொன் றறனிலா தறைகுவான். 5

கண்டக ரிவர்களின் கண்களைக் களைகெனத்
துண்டிவல் லேபெரு நம்பியின் றுணைமலர்
கண்டமைக் களைதலுங் கடுகியாழ் வான்சினங்
கொண்டுகோ டுறுநெறிக் கொற்றவா கோடியால். 6

பாவிகட் குயருநிற் பார்த்தவிவ் விழிகளை
மேவுறே னீண்டியா னேவிடுப் பேனெனாப்
பூவியல் விழிகளைப் பொள்ளெனப் போக்கினார்
தீவியத் திருவகக் கண்மிகத் திகழ்வுளார். 7

இருவருங் கண்ணிழந் தெழிலரங்கம் படிந்
தருளுகா னெறியினம் பிகளுமிக் கரந்தையான்
பொருவரும் பரம்பதம் புகுதலுங் கூரேச
ருருகிமற் றவர்தமக் குறுகடன் புரிந்தரோ. 8

வெண்சுதை தீற்றிமேல் விளங்குமா டங்நிறை
தண்புனற் கோயில்புக் கடியவர் தாந்தொழப்
புண்களின் றெனினுநேர் பொலியுமா ஞானமாங்
கண்களா லடையவுங் கண்டுவந் துறைந்தனர். 9

அனநிழல் கண்டரும் பெடையுமீ யகல்கெனாச்
சினவிவே றுளதுனக் கென்றனைச் சேர்கிலா
யெனுமதைத் தேற்றியின் சிறகரா லேதழூஉம்
புனல்வய லரங்கநின் றேகிலர் போகியே. 10

ஆழுவா னம்பியா ரடைவெலா மறைதலும்
வாழுவார் வாழ்வெனும் பூதலூர் வள்ளல்கேட்
டேழையே மாயினே மினியெனா வெம்பியே
மாழ்கினா ரெம்புயம் மற்றொழிந் தனவெனா. 11

கன்றொழிந் துழலுகற் றாவெனக் கலங்கினார்
பின்றெய்வா தீனமாய்க் கூரமன்னாயினும்
பொன்றிடா துய்ந்தாரே யென்றுதம் புந்தியா
னன்றுதே றெய்தினார் நலமுறுங் கேண்மையார். 12

நம்பிக்குச் சுண்ண பரிபாலன நன்கி ழைத்து
வெம்புற்ற வாழ்வான் தனைத்தேற்றிட வேண்டு மென்று
வும்பர்க் குயர்ந்த சிறியாண்டனை யோர்ந்து விட்டார்
செம்பொற் சிகரி யரங்கத்தவர் சென்று சேர்ந்தார். 13

சென் றங்க ளுழ்வான் தனைத்தேறிடச் செய்யும் வேலை
மின் றங்கு வேலைச் செனிகண்ட மிகப்பு ழுத்தே
பொன் றங்கொ ழிந்தா னெனப்போந்தவர் போற்ற லாண்டான்
கன் றுங்க லியிப் படிவிண்டது காண வென்று. 14

அம்மங்கி யம்மா ளுடனுடைமைத் தோளி னுரின்
கம்மென் றலரைந் தருநீழலி னண்ட ராடும்
பொம்மன் முடியோங் கெதுமாவரைப் போந்து பூதூர்
செம்மன் மகிழ வபயன்படை செப்பி னுரால். 15

ஓண்டார் தமக்கு முறுகண்சகி யாத வன்னுர்
கண்டாங் கவன்சா வுளம்பொங்கினர் காசி னிக்க
ணுண்டா மெவர்க்கு மினியோம்படை யென்று கோயி
லண்டா வரங்க னடிகாண விழைந்து மன்னே. 16

பொன்னன் மகன்முன் பொலியச்செயும் சிங்கன் தானு
மின்னுந் திருக்கா ருரநாரணன் மிக்க தானுங்
கொன்னென்று செல்வப் பிளையின்மலர் கொண்டதானு
மன்னும் படிதஞ் சிரநன்கு வணங்கி மற்றும். 17

தீர்த்தப் பிரசா தமுமேன்று மருங்கு சுற்று
மேத்தற் குரிய முதலித்திர ளோடு மேகிப்
பேர்த்துப் புகுது மெனவோதிய பின்ன ரன்பிற்
பார்த்துச் சிலரின் முகபங்கயம் பண்பி னன்றே. 18

திருநா ரணற்கிங் கருந்தொண்டுகள் செய்ம்மி னென்ன
வுருகா விதய மவர்நும்மடி யென்னு மொண்பூ
மருவா திறையு மகலேமென மற்றி றைஞ்சப்
பரிவாற் சிலேயிற் றமைப்போலொரு பாவை யாற்றி. 19

தஞ்சத்தி தன்னை யதினூட்டி யவர்க்க ளித்து
முஞ்சிப் படிவத் தொழுகுமென வோதி யாற்றி
மஞ்சுற்ற கூட மலேயன்ன தகன்று போகிக்
கஞ்சத் தனங்கள் படுநீர்வயற் கோயில் கண்டார். 20

அண்டர்க் கிடையி லெழுமாயிரங் கண்ண னாகத்
தொண்டர்க் கிடையிற் குருவந்தன ரென்று சொல்லப்
பண்டைப் பரிய பதியுற்றவர் பத்தி யோடுங்
கொண்டுற் றெதிர்ந்தார் நிறைபொற்குடங் கூர்ந்த யாவும். 21

அந்நா ளருங்கா னகம்போயவ யோத்தி மன்னன்
பின்னாள் வரவந் நகர்பொங்கிய பெற்றி யென்ன
வுன்னா வுவகை யொடுமன்னவ ரொன்றி யேத்தப்
பொன்னா ரரங்கம் புகுந்தார்புகழ் பூப்ப மன்னோ. 22

நானா மணியாழ் கருப்பக்கிர கத்து ளானும்
பானா றனந்த னறுமேனியிற் பள்ளி கொள்ளா
நீனாறு மைங்கொண் டலினம்புய நேர்ந்த பாதந்
தானா தரமா மென வீழ்ந்து பணிந்து மற்றும். 23

கோடாத கோலா ரொருபஞ்சவர்க் கொத்த தூதாய்க்
கோடாத வன் விண்குளிர்வெண்மதி யம்ப கந்தூ
வீடாத வாமா விரையார் மல ராரு மந்த
வீடாத வாவும் விரகுள்ளதற் கெங்கு மென்றும். 24

முற்றத் துறந்த முனிவர்க்கருண் மூர்த்தி நிற்பொன்
முற்றத் துறந்த முழுமாமணி யேனு மாவேன்
கற்றத் துறந்த ரரும் வீடருங் காத னன்க
கற்றத் துறந்தண் மலர்ச்சேவடி கண்ட வெற்கே. 25

கண்ணா றலங்க றுளபத்தொடைக் கார ரங்க
கண்ணா றலங்கு முனக் காங்கொலென் றைய காணெங்
கண்ணா றலங்கண் டுயில் வாயருட் காத லேமுக்
கண்ணா றலங்கண் டிரும்புள்ளிறைக் கந்த ரத்தே. 26

வேதங்க ளாதி விரிநூல்பல கற்றும் மற்ற
வேதங்க ளாட றலையாயவை விண்டு நன்குய்
வேதங்க ளாவி னிறத்தைய நின்வெம் பதப்பூ
வேதங்க ளாவி யுயுமாறென வேண்டி டார்க்கே. 27

என்றின் னவாய வெணுதற்கருந் தன்மை யெல்லா
நன்றுன்னி யேத்தி யவனின்னரு ளண்ணி மற்றுங்
குன்றன்ன செய்ய குணங்கூர முதித்த வையன்
பொன்றங்கு மாளி கையினூடுற நொர்ந்து புக்கார். 28

வேறு

புக்கங் கன்னவர் பொன்னி னன்முகத்
துக்கங் கண்டிரு தோன்று கண்களு
முக்கங் கேயுக வொண்ணு மிப்புவி
யக்கங் குல்லென வென்று மாயதோ. 29

ஐயா வெற்குள மாழ்கி யங்கெழுந்
தெய்தா வின்னனு மெய்தி யெய்த்தனிர்
பொய்யா ரிக்கலி யென்றும் பொய்த்தலின்
மெய்யா ரேர்பட ரெய்தன் மெய்ம்மையே. 30

மண்ணெங் கும் முய மற்றெழுந்து நீர்
விண்ணெங் கும்புகழ் வெய்த வென்றகக்
கண்ணெங் குந்தவிர் காண லாரையூன்
கண்ணெங் குஞ்சொல விண்டு கன்றினீர். 31

மின்னே ரிவ்வுடல் கொண்டு மெய்ந்நிறாஉம்
பொன்னேர் புந்தியர் நும்மி னேங்குவர்
மன்னே யுள்ள முவந்து மன்னுவீர்
முன்னே யென்று மொழிந்து தேற்றினர். 32

தேரு வன்னவ ரைய செய்வினை
வீரர் மூவர்க ளேனும் விள்வரோ
பேரு மென்றது பேணி யுண்பதே
யாரு மென்ப தறிந்து ளீர்களா. 33

எம்பே ருகிய நீவி ரேயினி
தம்பே ரம்புவி மேல லங்கிடி
னம்பேர் கண்டிரு வாளன் றெண்டரோ
மின்பே யெய்தி யிருத்து மென்றரோ. 34

ஆனந் தக்கணீர் வார வாரியர்
வானம் வாழ வணங்கு தாடொழ
மானந் தன்னொடு மற்று கந்தகன்
றானம் போமட முற்று றைந்தனர். 35

வேறு

அங்கன மரங்கந் தன்னி லத்திய யனமென் சாற்றிற்
கெங்களின் மாறனுரை யெழிற்றிரு நகரி நின்றும்
பொங்குடன் கொடுபோ தற்குப் பொருந்திடாப் புயல்கண் மின்னி
னெங்கணும் கலந்து பெய்ய வெம்பெரு மானு ரெண்ணி. 36

விபவமே போன்ற தாமோர் விக்கிர கமதை யாற்றுத்
தபுதலின் மறைநூ லிற்பி ரதிட்டையுந் தகவி னாற்றி
யுபயவே தாந்த நாத முனிகளி னுரையின் வண்ணஞ்
சுபமுற வெவரு மந்த விழவினைத் துலங்கச் செய்தார். 37

பின் பெருங் கூரத் தாழ்வா னடிகளிற் பெருகும் செய்ய
வன்புறுந் திருவ ரங்கத் தமுதனு ராழ்வார் மீதே
முன்புசெய் மதுர வாக்கார் முனிவரும் பனுவ லார்ந்த
வின்புசெய் பொருளுஞ் செய்யு ளொன்றதை யீரைந் தாக்கி. 38

ஈங்கதன் பொருளை யெல்லா முடையவர் விடய மெய்தப்
பாங்கினோர் நூற்றந் தாதி யென்றரும் பனுவ லாக்கி
யாங்கதை யவரந் தாளி லிட்டிறைஞ் சிடலு மன்னார்
தாங்கடைக் கணிப்பு மின்றி வெறுப்பொடு தவிர்ப்ப மற்றும் 39

முதலிக ளவரின் பாத முளரியை முடியிற் சேர்த்தி
யிதமுற விறைஞ்சி யையன் மீரிதை யிகக்க லாமோ
முதமுற முன்பு நாத முனிகளுக் கிணையின் மாறன்
மதுமலி பிரபந் தத்தை மனமுறப் புகட்டுங் காலை. 40

இலக்குவ முனிக ளென்பா ரின்னினி யுதிப்ப ரன்னார்
புலக்குறும் படிவ மின்ன தன்மையாய்ப் பொலியு மென்னு
நலக்குறும் பொருளை யன்று நவின்றிடும் பொலிக வென்னும்
விலக்கரு மெவர்க்கும் பாவி னிலங்கிட விளக்கங் காட்டி. 41

அவர்திறத் துதிக்குஞ் செய்ய பனுவலுஞ் சிவணி யாரு
மிவர்தமிழ் மறையு நாலா யிரமெனக் குலவு மென்று
மவிர்தர வருளிச் செய்தா ரென்பது மடிகள் கேட்டு
மெவர்களு மிசைப்ப ரீதோர் மரமென விரந்தாரன்றே. 42

இன்னண நிகழும் வேலை யருச்சக முகமா யேழு
மன்னிய மதிள ரங்கன் மாறன்முன் னளித்த வண்ணந்
துன்னுக விதுவுமந்தத் தமிழ்மறை துலங்க வென்னப்
பன்னக பதியின் பங்கார் பரிவுட னகத்துட் கொள்ளா. 43

மற்றதை யியற்பா வீறு மணந்திட விசைத்து நான்கா
யுற்றவின் பிரபந் தங்க ளுயர்தரு கவிக ளாலுங்
கற்றவர் புகழ நாலா யிரமென க்கவின மாடி
யெற்றிக ழியற்பா வோதல முதனூர்க் கருளி யென்றும். 44

திருவிழ வதனை நன்கு நிறைவுறத் திகழ வாற்றி
யிருமையேய் பல்லாண் டென்று மங்களா சாச னஞ்செய்
தருள லுங் கண்டு பிள்ளா னுங்கெழுந் தருளி மற்றுஞ்
சருவதே சதசா காலே யெனுமதைச் சாற்றிப் பின்னும். 45

கண்டிரா மாநு சரர்ய திவ்வியாஞ் ஞாவென் னுள்ளங்
கொண்டரு முதலி யாண்டான் கூறவெம் பெருமா னரும்
பண்டுசீ மன்சீ ரங்க ச்ரியமநு பத்ர வாமென்
றண்டர்நா யகனைப் போற்ற வங்குளா ரிறைஞ்சி நின்றே. 46

கற்புறும் பிரபந் தங்கண் முடிவிலிக் கவின்செய் மூன்றும்
பொற்புண்மங் களங்கள் போற்றப் புரிகரு ளெனவும் வாழ்த்த
வற்புட னவரு மாங்கே யருளிமற் றாழ்வா ரெல்லாஞ்
சொற்பெரு கரங்கந் தன்னிற் சொலிப்புற நிறுவி னூரால். 47

வேறு

இவ்வண்ண மியற்றுபுநன் கிசைத்தங் குள்ளார்க்
கெழிறிருவத் தியயனமாச் சிறப்புஞ் செய்யச்
செவ்வண்ணத் திருமலர்மாக் களிறு மாய்க்குஞ்
செந்நெலினுள் வளருசெழும் பணைசூழ் போய
வெவ்வெண்ணத் தவர்களுநன் கெடுத்துப் போற்று
மெழிற்குருகைக் கெழுந்தருளிப் பொலிந்து நின்ற
மைவண்ணத் தண்ணலையும் வகுள மாலை
மாறனையு மறைமலர்த்தாள் வணங்கி மன்னோ. 48

முக்கனியின் சுவையிரியுந் தமிழ்வே தத்தை
முதலிகளி னிருந்தாரா யமைய்த் தன்னூர்
தொக்கமலர் முகநோக்கித் தூயோர் கேளீர்
தொலையிகந்த வாழ்வார்கட் டொகுதி தன்னுண்
மிக்கபராங் குசர்விடய மிளிறு மாதா
பிதாவென்னுஞ் சுலோகமதை மிழற்றி முன்னந்
தக்கபிர பந்தமதன் பிறகே யோதிற்
றகையறுமாழ் வாரையெலாம் வழூத்தற் கீடாம். 49

எனவருளப் பிள்ளானங் கெழுந்து கூம்பு
மிருகரத்தோ டாழ்வார்க ளொருகோ வைக்குண்
மினவுறபூ தஞ்சரச்ச வெனுஞ்சுலோ கத்தின்
மிடைதரியோ நித்தியவென் பதையுஞ் சாற்ற
வினியருள வேண்டுமென வவரு மாகி
லிலக்குமிநா தமாதா பூத மென்னுந்
தனியனெலா முறையின்முனஞ் சாற்று கென்று
தாமருளி மீண்டரங்க மணந்தார் மற்றும். 50

ஈங்கொழுக மலைநம்பி திருநாடேன்று
ரென்றுபிள்ளை மலைநம்பி யிசைப்பக்கேளா
வாங்கவர்க்குச் சுணப்பரிபா லனமுன் னூற்றி
யனந்தனுரு வாயொளிர்வேங் கடத்தே யெய்திப்
பாங்குபெறக் கலியுகத்திற் பரவுந் தூயோர்
பருப்பதத்தி னிடையிலகும் பரந்தா மன்றன்
றேங்கொலிநீர்த் திருவுருவைத் தெரிசித் தாயன்
றிருவுருவை மிடைந்தனரங் குறையுங் காலை. 51

திகழுதிருச் சித்திரகூ டத்தை யொன்று
ரிதரசம யத்தவர்கள் சிதைத்தா ரென்று
நிகழுமதைச் செவியுற்றங் கிலகுத் தில்லைக்
கோவிந்த ராசனெனு நெடிய மாலைப்
புகழுதிரு மலைபடிமுன் பொலியச் செய்து
புரையறுமாழ் வார்களெலாம் புகலற் கெட்டா
மகிழுதிரு வேங்கடமா மலையே கண்டு
மற்றிறைஞ்ச வமையுமென விழைந்த வாற்றால். 52

அண்டமெலா முயிர்த்தளிக்கு மன்னை யாகு
மழகுகுடி யிருந்துமகி ழாண்டா ளோடும்
பண்டைமறைப் பயன்விளக்கு மாழ்வா ரேனை
யாரியர்க ளனைவரையும் பொலிவித் தாங்கே
மண்டலமு முய்வணமத் தியயனச் சாறு
மாடுகென நியமித்தே மலைவா ழப்பன்
புண்டரிக நிகரடியைத் தொழுது மீளாப்
புண்ணியத்தி னுறையுளெனுங் கச்சி புக்கார். 53

வேறு

வான நாடரும் விழைதரும் வளம்படு மதனுட்
போன மாதவர் புரைதபுங் கூரவா ரியனைத்
தேன வாங்குலலைத் தெரியலான் வரதனை விழிவேட்
டான வன்னவன் றவம்வனை கெனவருள் செய்தார். 54

வரத ராசனின் றவமென வழங்கிடு மதனுள்
விரத சீலருண் ணயனமே யருள்கென வேண்டப்
பரர டைந்துயர் பார்க்கொணுப் பண்பெதிக் கிறைவர்
பரத வித்துள மலமர வருந்தினர் பரிவால். 55

இன்பு றக்கணை யியைபுற வரிக்கென வென்றூ
வன்பு றக்கணை விடுத்தகக் கண்ணையே வரித்தீர்
நன்பு றப்புவி நசைகிலீ ரிழந்தனி ரென்ளுத்
துன்பு றத்திக முறிஞருந் துணைக்கரங் குவித்தே. 56

நேர லார்களும் புகழ்திட நிலவுறு மடிகே
ளார லாமெனி லகவிழி புறக்கணு மாகும்
பாரெ லாம்பர வுமக்கிது பழுதறத் தெரிந்து
நீர லாதவென் னிலைகொள நிகழ்த்தினீரென்னே. 57

ஆனை மாமலைத் தலையொளி ரயன் மகத் தழகன்
மேனி யார்ந்ததின் மிக மிளிர் முழுமணிப் பணிக
ளான யாவையு மிதுவிது வெனக்கரஞ் சுட்டி
யேனை யாவரும் வியப்புற வெடுத்துரைத் தனரால். 58

கண்ட வெம்முடை யவர்பெருங் களிப்பெனுங் கடலுட்
கொண்டு லைந்தும் கூரநா யகர்தமைத் தழுவிக்
கொண்டல் வண்ணனின் கூர்தரு மருட்கிட நீரே
மண்ட லந்தனி லெனமனங் குளிர்ந்தனர் மற்றும். 59

அத்தி ரித்திரண் மேய்த்தெனு மழகுறுங் கச்சி
முத்தி யீன்பதி வதிகெனு முதுமொழிக் கிடனு
மத்த லத்தினும் பிறுண்டினு மாழ்வாராரியராம்
பத்தர் தங்களைப் பழமறை விதிப்படி நிறுவி. 60

மன்னு மத்திய யனவிழா விழைத்திடப் பணித்துக்
கன்ன லின்கணிற் கழன்றிடு மணிவளை யுயிர்க்கு
மின்னு நித்திலக் குவை யொடு நிலவுமிழ் வயல் சூழ்
செந்நெ லின்னிடைத் திருமது ராந்தகஞ் செறிந்தார். 61

செறிந் திருங்கடற் சிவணுறு நீர்நிலை யாடி
யறும்ப வந்திரு மட்குறி யாறிரண் டணியா
வெறிந்த வின்மணி யிழைத்தபொற் சினகரம் புக்கு
நறுந்தி ருத்துள பத்தொடை நாயகற் பணியா. 62

வேரி மாமலர்ப் பூங்குழல் விரைமலர்த் திருவின்
பாரை யாண்முடிப் பரதனைப் புனைந்தருங் கானஞ்
சேரி னண்டனை யவணிவண் சிறப்புறப் புரத்தற்
கேரி னுளமற் றிகந்தனை நிசிசரன் பதியில். 63

குரக்கு நாயக ரிருவரி லொருவனிக் குதலம்
புரக்க மற்றவன் பொன்னுல களித்திடப் புரிந்தாய்
தரைக்க ருங்கட லணைசெலத் திண்மையி னிழையா
வரக்க ரூரினை யெரித்திறைத் தசசிர மரிந்தாய். 64

பின்ன யோத்தியிற் சனகியை மருங்குறப் பிறங்க
மன்னி மாமணிமகுடமும் புனைந்து வாழ் வண்ண
மின்ன வெந்திருப் பதியினு மிலங்குதி யென்னுப்
பன்னி யன்னையின் பதமலர் தொழுது முற் பரவி. 65

ஏரி காத்தவ னருளொடும் பிரசாத மெய்திச்
சேரி காத்தபுன் பறையருக் கருளிய செய்யோர்
வேரி காத்தபூம் பொழில்செறி யரங்க மீண்டேகி
மாரி காத்தபாம் பணைப்பரன் மலர்ப்பதம் பணிந்தார். 66

வேறு

பின்பவ னிருந்துமு தலித்திரள் பெருக்கத்
தன்பினரு பாடியமும் மந்தமிழ்மா மறையு
மின்புறவி ளைத்திடலு நாறுநறும் பொழிலென்
பொன்புரையும் பாடல்களும் புகன்றெழிய வாங்கே. 67

கோதையது வேண்டுகைகு ணம்பெறமு டிப்பா
னுதரவி னங்ஙனமெ ழுந்தருளி யேகி
சீதகிர ணன்னகடு ரிஞ்சுசிக ரஞ்சே
ரேதமறு மாலிருஞ்சோ லைப்பதியை யெய்தி. 68

நாறுவெணெ நாட்ரு மக்காரவடி சில்லு
நூறுதடா வீதமுற நோன்மையி னருத்தி
வீறுமழ கன்றனைவி ழுந்தடிப ணிந்தே
கூறருமவன்கிருபை கொண்டுநனி மீளா. 69

விண்ணவர்வி ழைந்ததிரு விண்டுசித்த ரூரா
நண்ணுவட நாடுபெருங் கோயிலுடை யானை
பெண்ணரசி யாயபெரி யாழ்வாரன் றுபெற்ற
வொண்மணியை யும்பதமு வந்துதொழு தோறும். 70

செய்யவள ளித்தபிர சாதமது சேரா
வையகம ளித்தபுகழ் வருநகரி யேகித்
துய்யவகு ளாபரணன் தோமறுப தங்கண்
டையெனவெ ழுந்துபின டந்தனர ரங்கம். 71

வேறு

தந்தரிச ஞர்த்தமவு ணகலமுறச்
சிலகாலந் தகவிற் போற்றிப்
பிந்தியவ ரிணையடியைப் பெட்பினடை
முதலிகளின் பெரிய சங்க
மிந்தவள வெனவுணர்தற் கியலாமே
யிருந்ததினே ரிதமே யெண்ணி
யந்தமுறும் வரையறையொன் ருற்றுகிற்பான்
ருெடங்கினரென் றழியாவண்ணம். 72

நான்கிறுதி நண்ணுமெழு பானளவாந்
திருவாழி திருச்சங் கங்கள்
பான்மையுற வனைந்துதிருப் பாடியமோ
ரீரிருகோ சங்கள் பண்ணித்
தேன்செழியத் தமதருளின் றிருக்குருகைப்
பிரான்பிள்ளான் றேறச் செய்த
வான்கமழுந் திருவாறு யிரப்படியா
மிவையடைய வகித்துப் போகி. 73

தந்திருவா ராதனமாய்த் தயங்குதிரு
வருளாளன் திருமுன் வைத்துக்
கந்தமலர்ப் பதம்பணிந்தீர் முப்பானே
ழாந்தமது முதலி கட்குப்
பந்தமறும் திகிரிவளை தமையுமவர்
தமிலொருநால் வர்களின் பாணிச்
சந்தமுறும் பாடியகோ சங்களையு
மவரிலொரு சதுரர்க் காங்கே. 74

திருவாரு யிரப்படியுந் தந்தருளி
யவ்வெழுபான்றேசி கர்க்கு
விரிவாருங் கடனுலகில் வேண்டுபவர்க்
கிலச்சினையே முதல நல்க
வருளாவச் சிங்காச னுதிபதி
யார்களினுல் வர்க்கே கர்க்கு
நிரலேப்பா டியவுபய வேதாந்தா
திக்கியமு நேர்ந்தா ரன்றே. 75

இவ்விருதை யேன்றவர்க ளன்றியுமோ
ரெழுநூறு சீயர் மற்று
மெவ்வமறு மீராரு யிரம்பாமை
காந்திகளே யிருந்தொண் டாற்றும்
பெளவமெனும் கைங்கரிய பரர்பரம
பாகவதர் பதமே நாடிக்
கவ்வையறுந் தாசநம்பிக் கண்ங்கணக்கி
லம்மையர்கள் கருதுந் தூயோர். 76

இத்தகையோ ரவரவர்கட் கியன்றபணி
யிழைத்தொழுகக் கூர நாத
ரெத்திசையும் புகழெம்பா ராதியர்கண்
ஞானமக னெனவே யேய்ந்த
பத்திமிகும் பிள்ளானைப் பண்பினுயர்ந்
தாரென்றே மதித்துப் போதச்
சித்தமுவந் தெம்பெருமா னுாரியின்
சிறப்புமிகச் சிறந்து நின்றார். 77

திருக்குருகைப் பிரான்பிள்ளான் கூரத்தாழ்
வானடாதூ ராழ்வான் நேர்ந்த
வுருக்கிளரு மெங்கடெற்கோ டிணைகோம
டம்சேட்ட லூர்வே தாந்தி
திருக்கிளர னந்தநடு வின்மிளகு
நெய்யுண்ட னக்க றோடுந்
திருக்கோவ லூர்திருமோ கூர்கோயி
லருணபுரத் தாழ்வான் கண்மேல். 78

படியெங்கும் புகழ்கணிய னூர்சிறியாழ்
வான்திருமா மலைநல் லானுந்
திடன்செறிகி டாம்பிவங்கி புரவீச்சம்
பாடிகொங்கி லாச்சான் மார்க
ணடுநிலையார் திருக்கண்ண புரத்தாச்சா
னண்ணுபுக ழெம்பா ரோடு
முடைசிறிய கோவிந்தக் கிடாம்பியம்மங்
கிப்பெருமாட் களும்மற் றோரும். 78

ஆசூரிப் பெருமாள்பிள் ளையப்பன்
பிள்ளை திரு மலையினம்பி
மாசோடும் வங்கிபுர சொட்டைமுடும்
பைநம்பி களுமே மற்றுந்
தேசார்ப ராங்குசதி ருக்குறுங்கு
டியினம்பிகளுமே தேர்ந்த
ஆசாந மருந்தொண்ட னூர்குணபு
ரமருதூர் நம்பி யார்கள். 79

பின்னுமழை யூர்வடுக குரவிநம்பி
களும்புண்ட ரீககரத் தனரும்
முன்முதலி கந்தாடை மாருதியி
யுண்ணிமது ரையாண் டான்கள்
பன்னுதிருச் சோமாசி சியர்பெரி
சிறியீசான் டான்கள் பாடே
மன்னுமம்மங் கியாளவந்தா ராண்டான்கள்
சுந்தரத்தோ ளுடையார் மன்னே. 80

உக்கல்பருத் திக்கொல்லை சொட்டைமுடும்
பையம்மாள் களுமே யோங்குந்
தக்கவைத்த மாநிதியார் பராசரசீ
ராமபிள்ளைப் பட்ட ரோடு
மிக்கசிறு பள்ளிதேவ ராசபட்டர்
பிள்ளையுறைந் தையுடையா
ரெக்கலையும் வல்லபிள்ளைத் திருவாய்மொ
ழியரைய ரென்ப மாதோ. 81

பிள்ளைதிரு நறையூர்பிள் ளைராச
மகேந்திரப்பெ ருமா ளரையர்
வள்ளலதி காரிதிரு நகரிகுமாண்
டூர்ப்பிள்ளை களுமே வையங்
கொள்ளனந்தக் காஞ்சிசோம யாசியர்கள்
கூடியிந்தக் குறையா ஞான
முள்ளமெழு பானுல்வ ருயர்சிங்கா
சனதிபர்க ளுலகஞ் செய்வார். 82

வேறு

திருக்குருகைப் பிரான்பிள்ளான் திருநடாதூ ராழ்வானே
யுருக்கிளர்மு தலியாண்டா னெங்கிடாம்பி யாச்சானிப்
பெருக்கமுறு நால்வருமப் பெரியோரிற் பாடியத்திற்
குரைக்கனுறுஞ் சிங்காச னதிபரா யொளிர்பவரே. 83

இன்னோரிற் பிள்ளானே யிரண்டுசிங்கா சனத்திறைவர்
பொன்னூரு மருளாளப் பெருமாளெம் பெருமானர்
தென்னூரும் சீரங்க நாராய ணச்சீயர்
முன்னூரீச் சம்பாடிச் சீயர்முதன் முனியிறைவர். 84

ஆடினெழு நூற்றுவரா மலங்கார வேங்கடவர்
கூடுநம்பி குறுந்தேவர் முன்பரமை காந்திகளுங்
கேடிலொரா யிரத்திருநூற் றுவரென்றே கிளந்திடுவ
ரேடுதிருத் தூயமுனி வேழனெழு வாயார. 85

நற்கைங்க ரியபரர் நாமறைதற் காமளவோ
பொற்காவல் புரிந்தொழுகும் புனிதர்களெம் பெருமானர்க்
கற்கசத் திருவரங்க மாயோ னவர் முதலோ
ரொற்காநத் தத்துமுத லிகண்முதலோ ருரைக்கினின்னும். 86

அறிவன்ப கன்றவரே யவாவறச்சூழ் வாரவரே
பொறியின்வ ழிமனத்தைப் போகவிடாப் புனிதநலஞ்
செறியும்பிள்ளையுறங்காச் சீர்வல்லி தாசர்முத
லறையுஞ்சீ ரம்மைகளே யாயவிவ ரளப்பரியார். 87

இத்தகைய வெல்லோரு மெம்பெருமா னர் கழலிற்
பத்திமிகத் தொண்டிழையாப் பரம்பாக வதரென்று
வெத்திசையு மேத் தெடுப்ப வீங்கொழுகப் பூதூரா
ரத்திகிரி யான்பகடே யாங்கிலகச் செய்தொளிர்ந்தார். 88

வேறு

பின்பெருகு கூரபதி பெரியபெரு மாளையடி
 பெட்புட னிறைஞ்சி யடியே
னின்பெருப ரம்பதநி ரந்தரமி ருந்தொழுக
 நின்மல வருள்பு ரிகென
வன்புடன வன்னுளமு வந்துதிரு மாலையடி
 யாமவைய னைத்து முதவத்
துன்பறம ணந்தரிய தூயபிர சாதமவர்
 மீண்டெதி மனைத்தொழு தரோ. 89

அந்தவிவ ரம்சொலிநு மம்புயம லர்ப்பத
 மலம்புபுன லீந்த நுள்கென
நொந்திவரு மெற்குமுன நீரெழுவ தோவெனலு
 நோன்மைசெறி யவ்வ திஞரும்
முந்தவண டைந்தடியன் பிந்தியெழு காலடிகண்
 முன்னெதிர்கொ ளும்ப ரிசினு
மெந்தநல முள்ளதென வாயிடையி ருந்தவர்க
 ளெய்தினரிரும்பு துமையே 90

சிட்டியர்த மக்குரிய செய்யகுண மேவையுஞ்
 செறிந்துளவ ரிப்பெ ரியரே
மட்டவிழ்த ளத்துளவ மாலையன ருட்கிடனிம்
 மாசகலு மாண்பின ரேயென்
றிட்டமுட னேபுகழ வேதமுறு பூதபுரி
 யெம்பெருமா னுரு மகிழா
விட்டவல மின்றிருவ டிப்புனல ளித்தனரும்
 வேண்டுதுவ யத்தி னுட்னே.

பெற்றதவ ருஞ்சனனென் றூட்டுணிவி னேயதிப
 திக்கமலம் பேணு மடிகள்
சொற்றபடி யேபெரிய வீடுசெல வன்னவருஞ்
 சொன்னவண் ணாதமுனி முன்
கொற்றமுறு சுண்ணபரி பாலனம தாதியொரு
 பன்னிரு தினத்து மயரு
முற்றமறை யின்கிரியை யாவையுமு ளுற்றியுயர்
 பட்டரி னெழிற்கர மதின். 91

பிற்கவுத மாதிபர யர்ந்தபடி பேணியயர்
சங்கிதா பாராயண மதிற்
கற்கவரு பொற்றதிரு வாய்மொழியு முக்கிய
மெனக்கொடு கலந்து பரவி
நற்கதிய ளித்திடு நூறந்தாதியி ஞனேயியல்
சேவையிழை தந்து நவிலற்
கொற்கமறு சீர்வகுள மாலையினக் கோதசம்
பாவனை யுஞற்றுக வெனு. 92

வேறு

வழங்கிட முதலி வெள்ளம் வகையினத் தகவிற் செய்யாத்
தழங்கு தன் முரச மார்ப்ப த்தனிமையத் தியனச் சாற்றை
முழங்குநீர் வைய முய்ய முனைத்தவம் முனியீ சர்க்கும்
பழங்கணங் ககலச் சம்பா வனையது பரிந்து செய்தார். 93

செய்ததை யவரு முள்ளக் களிப்பொடு சிறப்பிற் கொள்ளா
மைதவழ் மணிவண் ணன்றன் மலர்ப்பத மடைவோர்க் கீங்கே
யுய்திட வுலகி னென்று முஞற்றுக வினியென் றோதி
மெய்திகழ்ந் துயர வெங்கு மேதினி புகழ நின்றார். 94

ஈங்கிவ ரிருள்சூழ் ஞாலத் தெழற்கரு மன்றா டாழ்ந்து
தேங்குழல் புருடர் தேர்ந்து தத்துவத் திரய நன்கு
பாங்குறு மரிய நூலின் படிநசைந் தமர்ந்து பாவம்
வாங்குமா ரியரி ஞணை வருகடைப் பிடித்து வாழ்வான். 95

சாதியாச் சிரம தன்மந் தவிர்கிலா தவற்றிற் குற்ற
நீதிசா லொழுக்க நிட்டை நிறைவுறப் புரிய மாடிக்
கோதிலாத் திவியதம் பதிகளுங் குளிர வைய
மீதெலாம் புதுமை யெய்தத் திருத்தருண் மேன்மை யானே. 96

எம்பெரு மானு ரோங்குந் தரிசன மிதுவென் றன்று
நம்பெரு மாளு முள்ள நனிவிழைந் தருளிச் செய்தா
ரிம்பரி விதனை நன்கு தலைப்பெய்துய்ந் திடுத றேற்று
ரும்பரு நயக்கு மிந்த வுடலெடுத் துறுவ தென்னே. 97

வேறு

ஆனியஞ் சிலபிற ககல வாரியர்
கோனுமெம் மரங்கனின் குறைக முற்றெழு
தூனமின் றுயர்தரு முனது மேலக
நானினி நணுகுறற் கருளி னல்குவாய். 98

நின்பெருந் திருப்பணி நிகழ்த்தி யித்தலை
யென்பரங் கழிந்ததிங் கிணையில் வீடினி
யன்பொடு மடைந்தள வகன்ற காலெலா
மின்புறு மிரும்பணி யிழைத்தற் கெண்ணினேன். 99

மரையிதழ் புரைவிழி மாயகா வெனக்
கரைமன தொடுமிரு கரங்கள் கூம்புநம்
புறையறு விழிவழி யொழுகு பூம்புனல்
விரையுறு மேனிமெய்ப் புளகில் விம்மவே. 100

பராவிடக் கண்டவப் பரமன் கூர்ந்தருள்
விராவிய மணத்தொடை முதல வேய்ந்தன
குராமலர்ப் பொதுவியர் குழலில் வேய்ந்தவன்
றராவவ ணெழுதரற் கிறையுந் தந்தனன். 101

தந்தவப் பொருள்கடந் தலையிற் றூங்குறா
வந்ததம் மடத்தகம் வணைந்த சீடர்க
ளிந்தவெஞ் செயலுணர்ந் தினைந்த சிந்தையர்
பந்தமற் றவருடன் படர்தற் குற்றனர் 102

நீளவந் தெரிந்தவந் நிமல னீவிரிவ்
வேளையி னெருங்குடல் வீடி னெந்தொடர்
பாளவந் தாரினே ரடியி ணணையே
தாளரிந் தனிரெனத் தழங்கச் செப்பினர். 105

செப்பலுஞ் செவிசுடச் சிதைந்த சிந்தையா
ரெப்படி யடிகடா ளிணையைக் காண்குறு
திப்படி யிருத்துமென் றினையத் தேற்றுவார்
முப்படி யினுமிசை முதிர்ந்த தேசிகர். 106

வேறு

கேளிரிப் புவியி னுள்ளங் கிளர்தர விசயன் றேரின்
மாளவப் பற்றி ரண்டு மகவிளக் கேற்று மாயன்
றூளடை பிரபன் னர்க்குத் தயங்குமான் மாவின் காப்பக்
காளமா முகினேர் வண்ணன் கடமையாங் கலங்கல் செய்யீர். 107

தேகயாத் திரையுங் கன்மா தீனமா மிவற்றி லன்னேர்க்
காகவோ ருரிமையின்று முண்டென வருளி லன்று
ரேகமுற் செய்த வான்ம சமர்ப்பண மிறையுந் தங்கா
தாகையி னுடலம் போற்ற வகமருண் டிழ்வ ராயின். 108

நாத்திக ரவரே யிந்த நானிலத் ததனு லந்த
யாத்திரை யிரண்டன் பாலு மவர்க்கொரு கரும மின்றே
யேற்றதிங் கிதுவா மென்னி லேன்றமுக் கரணத் தானும்
பேர்த்துள மெழுந்த வண்ண மயர்தலும் பெறுமோ வென்னில். 109

அங்கனன் றுபாயத் தன்னு ரவற்றையன் வயிக்கா ரேனும்
பங்கய நயனன் பொற்கைங் கரியத்திற் படுதற் பண்பா
மிங்கிஃ துறையு நாளி லியற்றுதற் கியன்ற வைந்து
பங்கெனச் சிறந்த தம்மா பகருதும் பரிவிற் கோடிர். 110

பாடியம் படித்துப் பல்லோர் செவிகொளப் பரப்ப லின்றே
லாடிமற் றருளிச் செய்த னனிவிழைந் துகவிற் கேளா
னேடிய வெவர்க்குஞ் செப்ப னிலவுமைந் ததற்கு மின்றே
லாடுறு குடக்கூத் தன்ற னுலய மதனுட் சார்ந்தே. 111

அலகிடன் மெழுக லுறு மலருபூந் தொடைய லாற்ற
னிலவுமின் றமிழைத் தந்த குறுமுனி நெடிய வெற்பிற்
குலவுசெஞ் சாந்தந் தேய்த்தல் கொழுமணி விளக்க மேற்றல்
விலையறு மிவைக ளாதி விழுப்பணி புரித லின்றேல். 112

இரண்டையின் பொருளி னென்று மிடைவிடா தநுசந்தித்தற்
றெருண்டிவர் நமது செய்ய திருநெறிப்படர்வரென்னு
முரண்டபுங் கருணை செய்யு முனிவறும் வைண வர்க்கண்
ணரண்டரும் விழைவி னென்று மகல்கிலா தடுத்தி ருத்தல். 113

என்றிவை யரிய நூலி னிருந்தட மெனவங் கோதி
நன்றுறத் தெருட்ட வன்னார் நனியுணர்ந் தையஞ் செற்றுத்
துன்றுறு கவலை போகித் துணையடி தொழுது நிற்பக்
கன்றிய கலியும் பூதூர்க் கலைஞர்முன் கலந்தா னங்கே. 14

கலந்தவன் கரங்கள் கூப்பிக் கழலிணை பணிந்தெ ழுந்து
நலந்திக ழிருடி நாயக நாடிதி னணுகா வண்ண
முலந்தியா னெருவி யோட வொதுக்கினீ ரினிநீ ரிந்த
நிலந்தனி லொருசா ரேனு நிலைத்திடற் கிடங்கொ டீரேல். 115

நுந்திருப் படிவ மெய்தி நுமதுசித் தாந்தந் தோய்ந்தே
சிந்தவம் பகடு தன்னைச் சிதைக்குவல் விரகி னென்னு
மைந்துறப் புகல வன்னார் மறுமொழி பகரார் நிற்பப்
பிந்தியக் கலியு மொன்றும் வழங்கலன் பெயர்ந்தா னன்றே. 116

சிபெரும் பூதூர் வள்ளல் சிந்தித்துச் சிறிது பின்னர்க்
காபல கமழும் பொன்னிக் கரைவள ரரங்க மேயினம்
மாபெருந் தரிசனக்கோர் மன்னனு மதனுனந்த
வாய்பரம் பொருளே யூன மடையுரு திதனை யாற்க. 117

எனவவன் கழலை யெண்ணி யிபற்றினர் பிரபத் திப்பின்
னனகமா மரிய மேனி யாமய மடைந்து நிற்க
மன்னயர் பிள்ளா னுங்கே மலிர்க்கரங் குவித்தாழ் வார்க
ளெனநும தெழிலார் விக்கி ரகமெமக் கியற்றி யீக. 118

இனியுளா ருய்யும் வண்ண மருச்சனை யிழைத்தற் கென்னக்
கனிவுளார் முதலி யாண்டான் கருணையங் கிழைத்திடீரே
னனியுளார் சிறந்த விந்த நலந்திகழ் துறையு நாளும்
பணியுளார்ந் தகன்மே யென்று பரிவொடு மிரந்தாரன்றே. 119

கருணையங் கடலன் னுருங் கருத்துகந் தருளித் தாழார்
திருமலி வடிவ மூன்று செம்பொனிற் றிகழத் தீட்டி
யரியதங் கரங்க ளேய வவையுறத் தழுவி மற்று
மிருள்கெடும் பிள்ளா னுண்டா னுச்சானென் றிவர்கட் கீந்தே. 120

முறைமையின் முகில்கண் குஞ்சு முழுமணி யெயில்களேழா
ரறைதருங் கோயிற் கண்ணு மணியிரும் பூதூருள்ளு
நிறைதவத் தினரே நேரு நாரண புரத்தின் மேனு
மிறைகொள விருத்தி யுய்மி னென்றருஇ புரிந்தார் மன்னே 121

ஆரணம் பழுத்த நாவி னந்நாடா தூராழ் வானங்
கேரணி புகழி னெந்தம் மிலக்குவ முனிகா ளந்தப்
பேரரு ளாளன் செய்த பிழையென்னே வறியே னென்ன்
நாருள முவந்தன் னுரு நகைதரு முளத்தி னேக்கா. 122

குலைமுதிர் கனிய ரம்பைக் கொடுவயற் கூரத் தாழ்வா
னிலவுறும் பிரிய பாகி னேயரென் றும்மைச் சொற்ற
நலமுறும் வாய்மை வாய்மை நன்றுநன் றென்று நாடி
யிலகுறுந் திருமா னின்ற வெழிலுறுந் தலங்கண் முற்றும். 123

நுந்திருக் கருத்தின் வண்ண நுவலுமெம் படிவம் பண்ணித்
தந்திழைத் திடுக பூசை தகுமென வருளி நிற்பச்
செந்துகிற் பாள வாயான் சீதர னரங்கற் குற்ற
வந்திருப் பணிக ளாற்று மவர்திரண் டெழுந்தா ரங்கே. 124

## வேறு

வந்திலக்கு மணமுனிப் பதந்தலைக்கண் வணங்குரு
வந்தலத்தை யடிகள்விண் டகல்கிலிந்த வடியவர்மே
லெந்தமற்ற விறையிறுய்வ தென்றகங் குழைந்திட
வந்தமற்ற பரிசினன்ன ரருள்சுரந் தறைகுவார். 125

நம்புஞான மகனெனச் சிறந்த விந்த நற்பிளா
னிம்பர்நன் கிருக்கநீவி ரேனகம்கள ரதிரா
லெம்பிரா னரங்கருக் கியைந்தசெம் பணிகளெலா
மும்பர்கண் டுவக்குமா றுஞற்றுகின்ன ருரை கொளா 126

இனியெனப் பகர்ந்துமற்று மிணையிலப்பிள் ளானையுங்
களிவொடுங் கிடாம்பியாச்சா னையுமலர்ந்து கண்டழைத்
தினியசில்ல் மறைபொருள்க ளேனுமா றியம்பிமுற்
சனகி கொண்க னறுமறுக் கருள்புரிந்த தன்மை போல். 127

காலதத்து வம்படிக்க ணுள்ளகாறுங் கமழுமிச்
சீலமுற்ற தரிசனஞ் சிறக்குமா றவர்களின்
கோலமுற்ற முடிமிசைதங் குரைகழல்க டமையணிந்
தேலமுத்த மிலகுமா றியம்புகிற்ப ரிஃதரோ. 128

எம்மதெம்ம தெம்மதென் றியம்புபல்ல சமயமுஞ்
செம்மையின் வழுத்தநின்ற வொருவனுய சீதரன்
தன்மதந் தழைக்கவென்று நும்முகம் கொண் டசலமே
லம்மவுள்ள மினிவிழைந்த தன்மையாமு ணர்ந்துளேம். 129

ஆகையானி ஃதரியபாத்தி ரத் தளித் தலர்த்துமின்
வேகவெங்க லியின் புளர்ம்பின் வேறு சில்ல ரிளியோர்கா
லாகுமிந்த வருநெறிக்கி ரண்டிழைப்ப ராயினு
நாகணைப்ப ரன்பினன்றோர் நற்குருவை நல்கியே. 130

குன்றுறாது மற்றிலங்கு குணமுணர்ந் திழைப்பனு
லென்றுவாய்ம லர்ந்துதாமா ராதனஞ் சேய்தேத்திய
வென்றனின்ன ருள்வரத னயமுகத்த னிவர்களை
நன்றுபிள்ளா னைச்சிறக்க ணித்தவர்க்கு நல்கினர். 131

நாடுபிள்ளா னற்கிடாம்பி யாச்சானிந்த நல்வரின்
பீடிணைந்த வொக்கறம்மின் முடிகழல்கள் பேணிவைத்
தாடியன்ன முகமலர்ந்து கண்வளர்ந்த ருள்கையின்
மாட்டார்ந்த முதலியாண்டான் மற்றுமுள்ள பெரியரும். 132

பிரமவல்லி யாதியாய பெருகுப்பிட தங்களும்
விருதருஞ்சூழ் விசும்பெனுதி வெந்திருவாய் மொழிகளு
நிரைநிரையி னின்றுபாட நேருதாச நம்பிகள்
பானவயோதை யன்னபல்லி யம்பணில முழக்கவும். 133

பெரியநம்பி யடிநினைந்து பெட்பினுரு மேல்வையிற்
பிரமரந்தி ரந்திறந்து பெயர்ந்துமே லெழுந்தெழ
வரிசையா யிலங்குமண்ட லத்திறையும் வானவர்
பரிசினேடெ திர்ந்துசெய்ய நெறிபணிந்து காட்டவும். 134

இந்தவண்டம் விண்டுமின்வை குந்தமெய்தி யெம்பிரான்
றெண்டரோட ளாவியந்தத் தூமணிமா மண்டப
முந்தடைந்த கூரநாதன் முதலியோரி னேய்ந்துமா
ரந்தமில்பே ரின்பநண்ணி யாங்குறைவ ரென்பவே. 135

வேறு

பிள்ளா னெழுவாயாம் பெரியமுத லித்திரள்பின்
கொள்ளாத் துயர்க்கடலுட் கொண்டழுந்திச் சேர்ந்துகிடந்
தெள்ளாக் கலையுணர்வி னெண்ணித் தெளிந் தெழுந்து
விள்ளாத் திருமிடறு வெம்புற் றுற்றினவே. 136

மற்றுமொரு வர்க்கொருவர் மன்னித் தெருட் ட்வுணர்
வுற்றெழலு மெல்லோரும் பிள்ளானு ரொண்கரத்திற்
பொற்றசர மப்பணிகள் புறையின்றன் னுளவந்தார்க்
குற்றுவனேந் தென்ன விழைத் துடையவருத் தாப்படியே. 137

அத்தியய னச்சாறு மாங்கடைவே யாற்றுபுசெம்
பத்திமிகச் சிபாத தீர்த்தம்ப ருகினர்பின்
முத்திதரும் பிள்ளானு் முன்பேமுன் னுருபிர
பத்தியனை வோரும்ப ணிந்திழைத்துய்ந் தொழுகினரால். 138

பின்பிள்ளான் கோவிலினும் பெரும்பூதூ ரென்பதியுள்
ளன்புள்ளா ரம்முதலி யாண்டாள்கி டாம்பியாச்சான்
வன்புள்ளா நல்லானு தியர்சிலர்மண் வாழ்த்துபவர்
நன்புள்ளா டுந்துகின்மே னுராய ணபுரத்தும். 139

செம்பொன்னு னெம்பெருமா னுர்முன்னஞ் செய்தளித்த
தம்பொன்னு ரும்முருவை மூலவரிற் றுமிருத்தி
யம்பொன்னு டாள்பவரு மன்றுடம் வந்துதொழ
வெம்பொன்னு ரும்பணிய விழாவயர்த்து போந்தனரால். 140

வேறு

கச்சிதனிற் கனம்பெருகு நடாதூ ராழ்வான்
　　கலையுறையும் பிள்ளைதிரு மலையினம்பி
மெச்சரிய திருமலையி னடிநாப் பண்மேன்
　　மூவுழியு மிருந்ததிருத் தலங்க டோறும்
பச்சைமுகிற் பரமனையங் கங்கே பாடிப்
　　பணிந்தொழுகும் பாகவத ரிளையாழ் வாரி
னிச்சைகொளு மிக்கிரக மெழிலின் பாடி
　　யிலகுவித்தா ரடைந்தெவரு மென்று முய்வான். 141

இவ்வண்ண மீரறுபா னுண்டு லீலா
　　விபூதியிடை யெம்பெருமா னிணையில் வாய்மை
தெவ்வெண்ணும் பரசமயத் தவருந் தீண்டாப்
　　பஞ்சமருந் தெளிந்துபரம் பதமே சேர்வா
னுய்வெண்ணு மழுக்காறு னிகளொன் றின்றி
　　யுயர்மறையைக் கோபுரத்தி னிவர்ந்து தூற்று
மவ்வெண்ணற் கரியகுணத் தவரின் பாடு
　　மரவணையான் பகடெனவே யலங்கு மாதோ. 142

---

## வேதாந்த தேசிகர்

### 29—வது சருக்கம்

திருத்தகும் பாய லனந்தனைப் பூதூர்
　　தேசிக ரென்னமுன் னுதிப்பித்
துரைக்கருந் தனது வாய்மையை வைய
　　முய்யுமா றுணர்வறப் பரப்பித்
திருப்பவின் னிசையார் கண்டையைத் தூப்புற்
　　றேசிக ரெனவுதிப் பித்தும்
பெருக்கிய வதனை வேங்கடத் திறைவன்
　　பேர் சொலார் நேர்செலா தவரே. 1

பின்திருக் குருகைப் பிரான்பிள்ளா னிலக்கு
　　மணமுனி நியமனம் பேணி
நன்றினுக் கியையு மெங்களாழ் வான்முன்
　　நலந்திகழ் முதலிகட் குவமை

யின்றிமற் றொளிரும் பாடிய பகவத்
விடயமுன் னரும்பொரு ளவையு
நன்றுளத் தொளிர நவின்றருள் புரியா
நாளிலம் புகழ்தர நடந்தார். 2

ஆரியர்க் கமுத மடும்பணி யிழைத்த
வழகரெங் கிடாம்பியாச் சானுஞ்
சீரது விளக்கிச் செல்கையி லவர்க்கோர்
செகஞ் சொலும் திருமக ருதிக்க
நேர்பெறி ராமா னுசப்பிளா னென்றந்
நின்மலர்க் கெழிற்பெயர் நிறுவி
யேர்பெறும் பருவத் துடையவ ரளித்த
பொருளெலாம் புதல்வருக் கீந்தே. 3

இப்பெருஞ் சமயத் திறைவரா யிலக
விழைத்தன ரிணையில்வை குந்தத்
தப்புறம் படர வெங்களாழ் வான்முன்
முதலிக ளவர்மகர்க் கரங்கொண்
டெப்பெரி யவரு மியம்புமா சரம
கிரியையை யியற்றினர் பிறகத்
தப்பறும் பிள்ளார்க் கவதரித் தனர்சீ
ரரங்கராச ரும்புவி தழைக்க.

அவர்தமக் கறைதற் கருந்திரு வாருங்
கச்சியிற் சித்திரை மதியி
லிவர்தருந் திருவா திரையிலோர் புதல்வ
ருதித்தன ரிவரிட கேசற்
கவிர்கண நாதன் சுப்ரதிட் டன்ற
னஞ்சமா மவர் பிதா மகன்பே
ரெவர்களு முவகை யெய்துமா றெண்ணி
யிட்டன ரீன்றன ரவர்க்கே. 5

அத்திருக் குமர ரிளமையிற் றானே
யருமறை யாதியாம் பனுவ
லெத்தனை யியைவ வவையெலாம் பயின்று
புரையிகந் தொழுக்கமு மேன்று

முத்தரிற் சிறந்த முனிவரா யொழுகக்
கண்டிடு முனேவர்க ளிவரொண்
புத்தியப் புள்ளா ரோவெனப் புகழ
வதுமுதற் பரந்ததப் பெயரும். 6

அப்புளா ரனுசை யாயெழிற் கிடமா
மணங்கினு ளொருத்தியங் குதிக்கத்
துப்பிதழ் மடந்தைக் கீன்றவர் தோதா
ரம்மனென் றரும்பெய ரளித்திங்
கொப்பருந் தனயர்க் குயர்திரு மந்தி
ரார்த்தமு முதல்விசே டங்கண்
மெய்ப்புறப் புகன்று மிசையுறுந் திருநா
டெழுந்தனர் விழைந்துபே ரின்பம். 7

தநதையாக் குரிய தனயர்செய் கடன்க
டகவினின் வனேந்தெவற் றுள்ளு
முந்துவே தாந்த நூன் முறைப் பயிலு
முதிர் நசை மிடைந்தன ரிருப்பப்
பிந்தியங் குருகைப் பிரான் பிள்ளா னெங்க
ளாழுவா னுதியர் பெருக
நந்துநற் பொருள்கண் மொழிந்தனர்பாத
தீர்த்தமு நல்கியின் பரிவால். 8

தாமுமின் பூதூ ரிரைவரின் பாத
தாமரைத் தண்புன லருந்தி
நாமமீ ராறு நவிறரும் பரம
னுடெழுந் தருளனு மவர்க்குத்
தோமறும் பிரம மேதமா யாவுந்
தொல்முறை பிறழ்தலின் றயர்ந்தா
ராமவர் புதல்வர் புண்டரீ காக்க
ரங்கரத் தடியவர் திரளா. 9

ஆனமா மலையா னமர்தருங் கச்சிப்
பதிதனிற் சித்திரைத் திங்கட்
கானசித் திரையி னடாதூராழ் வானுக்
கருந்திருப் பேரனு யதன்பின்

மாணையா ரிசைசேர் தேவரா சப்பெம்
மானிடத் தவதரித் தொளிரு
மானடா தூரம் மாள்சுபத் திரன்ற
னஞ்சமாய் மகிதலம் புகழ்வார். 10

சிறுதிருப் பருவத் தேகலை யனைத்துஞ்
சிக்கறக் கற்றனர் மற்றும்
மறுவருஞ் சீபா டியந்தனைப் பயில்வா
னின்றவர் மலரடி தொழுது
மறிந்தவர் தமது மூப்பையுந் தாதைக்
கஞ்சினார் தனயரென் பதையு
முறுபர பரப்பு முவரிரும் பனுவ
லோதலின் மற்றுளந் துணியா. 11

எங்குலம் வளர வுதித்திடுஞ் செல்வ
வெங்களாழ் வானிடம் படரா
வங்குமுன் குருகைப் பிரான்பிளா னருளிச்
செய்துள வரும்பொரு ளோடும்
வெங்கதிர்க் கடவு ளெனவொளிர் சீபா
டியத்தையும் விழுமிதாப் பயிலச்
சங்கையொன் றின்றி நினதுகண் டேதி
யடங்குறச் சாற்றுவ ரென்றார். 12

ஓமென வதனை யேன்றவர் மீளா
வுவர்தமைக் குறுகினர் தொழுது
தாமுளம் விழைந்த தன்மையு மதற்குத்
தாதையார் மொழிந்ததும் செப்ப
நாமகம் கொள்ளும் புத்திரத் தன்மை
நணுகுது மென்றுகூ றுரைக்கி
னாமள வுமதுள் ளருத்தியிங் கொழிய
வறைகுது மென்றன ரன்னார். 13

வேறு.

அம்மா ளந்தத் திருமொழியை மீளா வையர்க் கறிவுறுத்தச்
செம்மாந் தவருஞ் செய்குதியச் சேயா ருரையின் வண்ணமென
வம்மா வென்று திருகிமகிழ்ந் தாழ்வா னடியிற் றாழ்ந்தவர்முன்
செம்மா பாடி யஞ்சிரமேற் சேர்த்தே சபத மாங்கிழைத்தார். 14

அன்னா ரின்னார்க் ககமகிழா வரிய வுசவி னிறையோடும்
பொன்னார் பாடி யந்தொடங்கிப் பொலியும் பொருள்க ளவையாவுஞ்
சொன்னார் சொன்ன படியடையச் சோர்வின் றெழும்பு நிரைநிரை
முந்நீ ரலையிற் கிளரகத்துண் முதிரக்கொண்டார் முகமலரா. 15 [யாய்

ஆரா வமுதம் பருகுவபோ லவைகண் முற்று மவாவுபவ
ரோரா யடையப் பின்பம்மா ளிசைக்குங் காலக் கேபமதை
நேரா நோக்கி யருளாழ்வா னிகரி லவரின் பெருந்திறலுஞ்
சீரார் குருவி னிடையகலா வன்புங் கண்டு சிறக்கணியா. 16

பின்னும் பெருகும் விசேடமெனப் பிறங்கும் பொருள்கள் பெறவருளி
முன்னெம் பெருமா னாறைந்த முதன்மை செறியு நித்தியத்திற்
சொன்ன பரமை காந்திகளின் சொல்லற் கரிய தன்மையரே
யுன்னற் குரியா ரெனவுமந்த யுலையா நிட்டை யுறுகைக்கே. 17

தேடற் கரிய கத்தியத்திற் றெரித்த வுபாயா னுட்டானங்
கூடற் குரிய தெனவுமதின் கோடற் குரிய பொருடெரிவா
னாடற் கரிய பாடியமு மழகார் கீதா பாடியமும்
வீடற் கரிய வெனமதியா விழவிற் பயில வேண்டு மென்றும். 18

இப்பே ருணர்விங் கில்லவர்க ளெழிலா ரோரா ரியரடையா
வெப்பேர் பரமு மவரானே யிருடீ கேச னடிநிறுவித்
தப்பே தொன்று மிலராகித் தனிய ராயுய் குவரென்றுஞ்
செப்பா விதனை நற்பாத்தி ரத்திற் செலுத்து கெனவருளா. 19

பேரா நந்தம் பெருகுதிரு நாட்டிற் குடனே பெயர்ந்தருளச்
சீரா ரம்மா னுளமாழ்கிச் சிந்தை தெளிந்தே யவர்க்கியன்ற
நீரார் ஞானப் புதல்வரெனா நியாயங் கொண்டு கிரியையெலா
மேரா யாரு மெடுத்துரைப்ப விழைத்தார் பரக்க வீங்கென்ப. 20

பயந்தோர்க் கியற்றும் பண்பெனவே சரம கிரியை பரிந்திழையா
நயந்தேல் புத்தி ரத்துவத்தை ஞாலம் புகழ நனிநாட்டி
யுயர்ந்தா ராய வாரியரி னோங்குங் கருணைக் கடைக்கணிப்பான்
மயர்ந்தார் தெருளும் வகைவனையு மறுவின் ஞான பூரணராய். 21

அருந்தத் துவசா ரம்மெனும்பே ரடையும் பனுவ லாதிபல
மருந்திற் பெருகப் புரிந்தருளா மதிளோங் கருளா ளன்மணிக
ளிருந்தெக் காலும் வில்லெறிய விரவும் பகலும் வேறறியாப் [ரும். 22
பரந்தொப் பின்றிப் பரம்பதம்போ னிலவுந் தளியுட் பாய்ந்தொளி

கச்சி வாய்த்தா னெனக்கழறுங் கால்கள் பல்வார் மண்டபத்துண்
மெச்சுஞ் சீபா டியபகவத் விடய மாதி மெய்ந் நூல்க
ளிச்சித் தடையு மெழின்மதியார்க் கிமையா நாட்டத் தருங்காவா
கச்சிச் செவிசேர்த் துவந்தொழுக நாளும் பகர்ந்து வந்தனரால். 23

காணு வதனை யிதுதக்க கருதுங் குருவின் நலமெனவே
பேணு விழைந்து கிடாம்பியெனும் பேரா ரப்புள் ளாருமொழின்
மாணுர் குசையி னுதிமதிசேர் வடக்குத் திருவீ திப்பிள்ளையு
மேணு ரவர்பா லியைந்திருவே தாந்தங் களையு மேய்ந்தனரே. 24

எங்கெங் குள்ள விருபிறப்பி னியையுந் திருவை ணவர்களெலாஞ்
சங்கங் குழுமி யம்மாளின் சவிசேர் சன்னி தியின்மிடையாத்
திங்கண் மருவு மெண்ணரிய திவிமீன் றொகுதி யெனச்சூழ்ந்து
பங்கம் பறியும் பனுவல்களின் காலக் கேபம் பண்ணுழியே. 25

சில்லோ ரிங்ஙுச் சீர்காலக் கேபஞ் செய்தற் கேதேனுஞ்
சொல்லா ரேது வுண்டுகொலோ சொல்லீ ரென்ன வம்மாளு
நல்லோ ரேத்துந் திருக்கச்சி நம்பிக் கிவனே யருளாள
னெல்லா ருய்யு மிருமூன்று வார்த்தை புகன்றா ளெனப்புகன்றார். 26

## வேறு

பின்னோர்தினம் பெருகுந்திருப் பாராசர பட்டர்
பன்னுந்திருப் பேரனாகும் சுதரிசன பட்டர்
மின்னும்பல சிகரிச்சிர மேயெங்கணும் வசுவின்
பொன்னினகர் சிக்குமெனப் பொலிகச்சியிற் புக்கார். 27

அம்மாளருள் புரியங்காலக் கேபத்தழ கறியா
வம்மாவிதி னழகேயழ கென்றேயவ ரடியின்
னன்மாமுடி யிறையுஞ்சாவவ ரருளுங்கொடு நாளுஞ்
செம்மாந்துளம் வேதாந்தகா லக்கேபமுஞ் செய்தார். 28

அந்தப்படி யொழுகத்திரு ஞானத்தொளிர் பட்டர்
வந்துற்றில ரொருவைகலி லெனவம்பொழு தம்மா
ளந்தப்பெருங் காலக்கேப மறையாதவர் வரவைச்
சந்தத்திரு வுளமுன்னுபு சமழ்த்தேயிறை தாழ்த்தார். 29

அப்பேரவை தனிலன்னத ரொருமூலையி னமரா
வெப்போழ்திறு மலரினறை வளியுண்டுவ தெனலா
யொப்போதரு முறையின்பொரு ளுளமேவுவ ரதனு
லிப்பேதையை யென்கண்டன ரென்றேனைய ரெண்ணு. 30

சுவைமாமது வெனவாய்விளு மம்மாளடி தொழுதே
யவையன்னவ ரடையாதுள தொருமூலையே வறிதே
நவையென்றது வேனுள்ளுபு நவிலாதவ மேயிங்
கெவையுந்தரு பொழுதுங்கழி வெய்தப்புரி வென்றார். 31

ஆசாரிய ரிவரன்னவ ரடறனனமு மறியார்
பேசாதுள நாணும்வகை யவரீடறு பெருமை
வீசாவொளிர் தரமாடுது மெனவுன்னிய வேளைத்
தேசாரவர் துணைவிற்படற் குற்றூரவை தேத்தே. 32

வந்தோர்முக நோக்காவிவண் வைபகல்பல வெம்மான்
மைந்தர்தரு சீபாடிய மருவிச்செவி மடுத்தீ
ரெந்தேடதி லிலகும்பொரு ளேனுஞ்சிறி திசைப்பீர்
சிந்தாவகை யுளவோசிறி தறிதும்மென் றுசெப்ப. 33

கையஞ்சலி செய்யாவவர் கருதுங்குரு மணிகாள்
வையஞ்சொலும் வகைபன்முறை வழங்குற்றணி ரவையுண்
மெய்யெஞ்சலி லெதுதொண்டனேன் மிழற்றற்குள மெனவே
யையஞ்செல லின்றேயவை யடையப்புகல் கென்றார். 34

கேளாவவர் கேட்போருளங் கிளரும்வகை யாசா
ரளாலுரைத் தருளும் பல முறையின்பொரு ளடிக்
கோளார்க்கருங் கொண்மூபல குமுறிப்பொழி வதுபோல்
வாளாவிசை தந்தோரகம் வட்கப்ரசிங் கித்தார். 35

குருவுந்தம தோள்கொண்டவர் குளிரத்தழு வினராய்
வெருவும்வணம் முன்னேசினர் விழைவிற்புகழ் தரலுந்
தெரிவின்றிவர் திறல் சொற்றன மெனயாவரு மவர்பான்
மருவும்பெரு மதிப்பின்னது முதலுற்றனர் மாதோ. 36

ஆங்கேசுதர் சனபட்டரு மாசானுரை பலவுந்
தாங்கேட்டருள் வணமேமட றன்னிற்றினம் வரையாப்
பாங்கேபெரு கம்மாடிரு முன்னிட்டனர் பணிய
வாங்காவவ ரடையத்திருக் கண்சாத்துபு மகிழா. 37

இப்பாடிய வுரையேவையு மியையுஞ் சுவடிக்கே
யெப்பாலினுஞ் சுருதப்பிர காசிகையென் றெழிற்போர்
தப்பாதொளிர் தருமாலிகை யினிநீாதரை யெங்குஞ்
செப்பாவிரி தரவேநனி செய்வீரென வறைந்தார். 38

படியிப்படி யரியின்மதம் பரவச்செய வம்மா
ளிடியிர்கிளர்ந் தயலார்மத வாதச்சம ரிழைப்பா
னடிவைத்தறை கூவச்சவை யமரப்புளா ரடிகே
ளடியற்கரு டரினன்னவ ரகன்றாரினி யென்றார். 39

கண்டன்னவ ருக்கந்திரு வுளங்கூர்தரு களிப்பி
னுண்டெம்முடைய யவரின்னருள் போய்வம்மினென் றுதவக்
கொண்டத்திரு மொழியேகியக் கூடார்திர ளிரியப்
பண்டைப்பெருந் தருக்கந்தனின் வயங்கொண்டனர் பண்பின். 40

அவலீலையி னவ்வாதிய ரழிந்தேகவப் புள்ளார்
தவவெற்றிமி டைந்தேசய கோடந்தமர் தழங்க
வவிர்வெங்கதி ரெனமீண்டெழு மழகுண்முகங் காணு
நவின்றார்வா திகசாம்புத ரென்னுந்திரு நாமம். 41

வேறு

இன்னண மிளையாழ் வாரன் றெழில்பெறத் திருத்தி யென்று
மின்னுறு சமய மென்னு மிக்கெழு மமுத வெள்ளம்
பன்னரும் பிள்ளா னுச்சா னென்றிடும் படியிற் பாய்ந்து
தன்னிக ரரிய வைண வப்பயிர் தழைக்க மற்றும். 42

அப்புளா ரென்னுஞ் செய்ய வகலமார் தடத்துட் டங்கி
நிற்பவே றுடற்று மூண்மை நேர்கிலாச் சமயத் தோரு
மொப்பருந் திறலைக் காணு வுவந்துளங் கரையுந் தூப்புற்
செப்பரும் பிள்ளை செய்தி செப்பிதும் பிழைக்க மற்றும். 43

முத்தியின் பதிக ளேழுண் முக்கிய மெனும்பொற் கச்சி
யுத்தம தலத்துள் ளோங்கு முயர்தரு மெழுபா னுங்கு
சித்தரச் சிங்க வாத னுதிபர் களிலோர் சீர்மை
பெற்றவா னந்த சோம யாசிய ரெனும்பேர் பெற்றோர். 44

அவர்திருக் குமரர் நூலா மாழியின் கரைகண் டாழி
யவர்கரத் தரிய னன்பிற் குறையுளா யலங்கு மெங்கு
நவிறரும் புண்ட ரீகாக் கயச்சுவா வென்னு நாமச்
சவிகொளும் புதல்வர் வையந் தழைப்புறு மனந்த சூரி. 45

வேதமா மூர்த்தி யென்ன விளங்குமவ் வனந்த சூரி
யோதிடா தொழிந்த நூலிங் கொன்றுமின் றெனவே யோதிக்
கோதறு மடியுந் தேசும் பருவமும் வனப்புங் கூர்ந்து
மாதவர் புகழா நிற்க வீன்றவர் மற்றுங் காணு. 46

நங்குலம் பெருகு மாறோர் நங்கையை வதுவை யாற்ற
விங்குவர்க் கிழைத்து மென்று வெண்ணினர் படர்ந்தப் புள்ளா
ரங்கரம் பிடித்து நுந்த மனுசையாந் தோதா ரம்ம
னெங்களின் புதல்வற்கில்லா ளெனவர வருள்க வென்றார் 47

நாளையே நவில்வ னுள்ளா னடியென் றவரைப் போக்கி
வாளையேய் விழியாள் செய்தி வரதனே யருள்க வென்று
தாளையே யவன தெண்ணித் தாந்துயில் கொள்ள வந்த
நாளையே யவரின் சொப்ப னத்திடை யவனு நண்ணி. 48

நாகநா சோரு வானுந் தங்கையி னலத்தின் மிக்க
தாகுமா லகட்டி ராமா நுசனதின் சித்தாந் தத்தைப்
பூகலத் தொளிர வெங்கும் புரியுமோர் புதல்வ னந்த
வாகைசே ரனந்த சூரிக் குதிப்பனீ வழங்கு கென்றான். 49

அப்புளார் துயிலு ணர்ந்தென் னருளாள னருளை யுன்னித
தப்புளா வுள்ளம் பொங்கித் தக்கதோர் முகூர்த்தந் தன்னில்
வெப்புளா ரமரர் வாழ்த்தத் தூரியந் துவைப்பத் தங்கைக்
கப்புளார் கொடிய ஞணைப் படிமண மிழைத்தா ரன்றே. 50

குன்றுருக் குணக்குன் றன்ன கோதறு மனந்த சூரி
பின்றிருக் கற்புக் கில்லாம் பெண்ணவ ளுடனே நாளு
நன்றுறும் பஞ்ச கால பராயண ராகி நண்ணிக்
கொன்றிகழ் மனையின் வாழ்க்கை குறைவற வனைந்து போந்தார். 51

## வேறு

இங்கிவ ராரக் கலிதோடத் தேன மிழைத்தொன் றுணர்வின்றி
மங்குப வர்க்கேழ் மலையானே மன்னு சரண்வே றின்றென்று
வெங்குமு ரைக்கும் படியோங்கு மென்றிரு வேங்க டம்முடையான்
சங்கொளிர் சக்க ரங்களைமுன் றாளடை வோர்க்கே தாளொருவா. 52

தன்றன மின்றித் தாளொளிர மற்றவை யின்றே தன்னியல்பு
மொன்றிட வுள்ளம் பரித்திழைத்த வெம்பரு மானுர் தரிசனத்துட்
கன்றிடு வெய்ய கலிப்புணர்ப்பின் காசினி மீதே சிலரயரா
நன்றுற வங்கங் குளதொல்லை வைபவ வாதங் களைநாடார். 53

தம்முள மோடுந் தடமோடித் தக்கது ரைக்கும் பனுவல்களுக்
கம்மவ யிர்த்தங் களையோதி யாரும ணங்குஞ் செயலானு
மம்மட முள்ளா ரினிமண்மே லாருவ ரென்ற வருளானுஞ் [54
செம்மையி னின்றே ரணைகட்டிச் செய்குது மோர்கைம் மாறெனவே.

ஏருறு முள்ளத் தென்றுபுவெந் தானவ ரேங்கி யிரிதாவுஞ்
சீருறு மண்டர் வீறுகளி கூரவு மோதை செய்தொளிர் தன்
பேருறு நேரின் மணியாழ்வான் பீடுறு தூப்புற் றனினுதிக்கக்
காருறு மேனித் திருமார்பன் கண்டுக ருத்திற் றுணிவுற்றனன். 55

அஞ்சன வெற்ப னஃதிழைப்பான் பின்பொரு வைகற் காமிரவிற்
றஞ்சரு ளந்தச் சூரிகளின் தோமறு சொப்ப னத்தினெழா
வெஞ்சலி லென்றன் வேங்கடமா வெற்பினை நீயி ரெய்துவீரேன்
மஞ்சனை யீடின் மற்றருள்வே னென்றன னேகக் கண்விழித்தார். 56

கண்டிறந் தந்தம் பொற்கனவைக் கண்மணி யென்னுந் தங்கிழத்திக்
கொண்டளிர் மேனி வெண்ணகையா ளுண்மகிழ் வெய்த வோதலுமக்
கெண்டையங் கண்ணு ளொற்குமொரு கேடரு மங்க லந்தரித்தா
ளண்டம ளாய வம்மலைக்கே வாவென் றைந்தா ளென்றனளால். 57

காணவ ருங்க ளுவொருங்கே கண்டதி னந்தத் தம்பதிக
ளேணுறு விம்மி தத்துடனே யீடரு மோதத் தோடணையாப்
பேணின ரன்றே சென்று திருப் பீடுறு வேங்க டம்படரா
மாணுறு சாமி புட்கரணி மன்னெழி றாநீ ராடினராய். 58

தங்கன விற்கண் வந்ததெனத் தானுளிர் சீநி வாசனடி
யங்கமொ ரெட்டு மம்புவிமேற் றங்கவி றைஞ்சிப் பல்படியே
பங்கம கற்றுந் தீர்த்தமுடன் பைந்துள வுங்கொண் டின்னருளி
னெங்களிராமா நுசனடியு மீண்டினர் பல்கா லிறைஞ்சுபுபின். 59

ஆயிடை யோர்பா லின்னிசிவா யின்றுயில் கூர வங்கனவின்
மேயினன் வேங்க டத்துறைவான் மிக்கொளி வீசும் வாலிபனு
மேயும றைச்சீ வைணவனு யேதமி லந்தச் சூரிகளி
நேயமுடன் செந் தாமரையை நேரெழி றுண்ட நோக்குபுமுன். 60

வாரிதி யாடை வையமெலாம் வாழ்த்துமோர் சேயை யீதுமுமக்
கேருள தீதோ வென்றுதவ வின்னிசை யாருங் கண்டையினை
நேரிதி னன்னுர் கொண்டதுதங் கேரிழை யாளின் கையினிடச்
சீரதி ளந்தப் பைந்தொடியார் சிக்கென வுண்டார் கொண்டதனை. 61

## வேறு

இத்தகைக் கனவினை யெழுந்து வைகறை
யத்திருப் பேறுள ரகத்துட் பொங்கியே
சித்திரச் செயலின னருளை யோவறப்
பத்தியி னினைந்தனர் வியந்து பாடியே. 62

அற்புறுந் தன்னூநற் கதனைச் சொற்றலுந்
தற்பரன் செயலினை யவரும் தம்முளம்
பொற்புற நினைந்தனர் நினைந்து போற்றியக்
கற்பினர் திறத்தையும் வியந்து கண்டனர். 63

ஈங்கிது நிகழவங் கெழுந்த ருச்சகர்
வீங்கிய வெயின்மணிக் கதவம் வீக்குபு
வோங்கிய சினகரத் தூடு சென்றுகண்
டாங்கனை குரன்மணி யாழ்வா னின்மையை. 64

தங்கர நெரித்தனர் தயங்கி யுள்வெரீஇப்
பங்கயத் தவளுறை பரிய மார்பனே
யெங்குநின் திருமணி காந்த தென்செய்கும்
மங்களம் பெருகுற வழங்கு மாயவா. 65

கேசவா வென்றடிக் கிடத்தித் தம்முடி
யேசறுந் திருப்பணிக் கிறைவர் மாட்டிதைக்
கூசின ருரைத்தலுங் குழுமி யன்னவ
ரோசனை புரிந்துமற் றொன்றுந் தேர்கிலார். 66

அருந்தொழில் புரிகில ரகத்த யிர்த்துடன்
னிருந்தன ரொருத்திடற் கிருந்த போழ்தெலாந்
தெரிந்துளத் திருமலைச் சீயர் போந்தவண்
வழிந்தலீ ரறிந்தது வழங்கக் கெண்மினே. 67

அம்புவி புகழ்திரு வனந்த சூரிகட்
கெம்பிரா னெழின்மணி யீந்த தென்னயான்
வம்புறுங் கனவுகண் டெழுந்தேன் வைகறை
நம்புமி னெனவவர் நவில மற்றரோ. 68

சூரிக டமைவிளித் தசவ சூரிகள்
சீரிய தம்துசொப் பனமுஞ் செப்பிடத்
தேர்கில ரவர்பினுந் திகைத்து நிற்புறக்
காரிய முணர்ந்தருள் கருணை யாழியான். 69

சீயர்மே லிவர்ந்தவர் செய்ய வாய்கொடு
தாயயா மில்வுல கனைத்துந் தாங்குறற்
கேயுமெம் மிலக்குவ முனியி னின்மதஞ்
சாய்வுறு தீண்டினி தழைத்தற் கெண்ணியே. 70

தேசிக ரொருவரித் திகழுஞ் சூரிகட்
காசறு புதல்வரா யவதா ரஞ்செயத்
தேசுறுங் கண்டையைத் தெருள்க வீந்தனம்
வீசுமி னுமதுளத் தையம் விள்ளவே. 71

ஆதலா லின்றுதொட் டாட்டுங் கைம்மணி
தீதிலா விவணினித் தெழுத்தற் றீர்மினென்
றோதினா னாகையி னுயரு மத்தலத்
தேதமில் சிறுமணி யிசைத்த லின்றுபின். 72

உண்டுமி முலகினற் குளுற்றும் பூசையிற்
கண்டையின் றெனிலது தனுசற்காய்விடு
மண்டலத் தெனினுமங் கரிய மாமணி
விண்டலஞ் செவிடுறத் தெழித்து வீறுமால். 73

இத்துணைப் புதுமையங் கிருந்து கண்டவர்
பித்தனுக் கருளிய பீதத் தூசின
னுத்தம வருடனை மணந்த வுத்தம
ரத்தவப் பேற்றினை வியந்தங் காடினார். 74

அனந்தமா சூரிக ளதன்பின் றேவியி
னனந்தலை யுலகொருங் களந்த நாயகன்
மணந்தரு மலரடித் துளவுந் தீர்த்தமு
மினுந்திகழ் வனபொருளெவையு மேய்ந்தனர். 75

தொழுதெழுந் தவனடி துதித்து மீண்டுவிண்
முழுதுபொற் சிகரிபொன் முடிகள் வெங்கதி
ரெழுதரு மெனபல விலகுங் கச்சியுட்
பழுதறு தூப்புலென் பதியை யண்மினார். 76

வேறு

தோகைநிக ருந்தகைய தோதாரம்மன் கண்ட
வாகையுறு சொப்பனதி னத்துமுதல் வேய
மோகையுறு மொண்கருத ரித்ததுவு நாளு
மீகையின்வ ளர்ந்தகல மென்னவளர்ந் தன்றே. 77

அக்கருமி டைந்தமணி யாழுவானு மந்நா
ளெக்கலைஞ ரும்புகழ்ப ராசரனை யேய்ந்தே
யொக்கவரு டங்களுமீ ராறவ னுறைந்தே
பக்குவம றிந்துபினு தித்தனர்ப டிக்கண். 78

ஆயிரநான் கோடுசெறி முந்நூற்றெழு பான்மே
லாயனமுஞ் சுக்கிலம டைந்தமதி கன்னி
தூயதிரு வோணமது தோன்றுதின மென்ப
மாயிருஞா லங்கிளர மாயனருள் கொண்டே. 79

அத்தகைய பேறுடனு தித்ததைய றிந்தே
யெத்தகைய ரும்புகழ வேய்ந்தவரப் புள்ளா
ரொத்தமரு மான்றனையு வப்பினெழுந் துள்ளம்
சித்திரமு றக்கண்டருள் செய்துவகை பூத்தே. 80

சாதகரு மம்வனைந்து சூரிகள்க ரத்தின்
னேதமறும் வேங்கடவ னேய்ந்ததிருத் தீர்த்தத்
தோதருவி ழாவினிட யுதயமதி னானு
மாதரவி னப்பரம னவதரித்த தானும். 81

அத்திரும கர்க்கருளி யக்கடவு ளாமம்
வித்தகவி லச்சினையும் வேண்டிவனை விக்க
வெத்திசையு மப்புதல்வ ரின்சொல்வளர்ந் தென்ன
நித்தமொரு வண்ணமுற நேரிதின்வ ளர்ந்தார். 82

ஆயபரு வந்தனைய றிந்தனம ருத்தி
யேயபணி ரண்டுமதி யெய்தியபி னாண்டிற்
காயதிரு வுற்சவமு மாற்றியரு ளாளன்
சேயதப னீயவொளி செய்ந்நிலயஞ் சேர்த்தே. 83

முந்தியெம தன்னைபெருந் தேவியருள் முன்னிப்
பிந்தியரு ளாளனிரு பீதகவ டிக்கண்
வந்துதொழு திட்டிடலும் வணங்கரிய வன்னான்
சிந்துகரு ணைத்துளியன் செய்துகடைக் கண்ணால். 84

பூசகன்மு கந்தனிலிப் பொருவரிய மைந்தன்
மாசறுமி ராமாநுச மாமுனிவ னென்ன
வாசறும வன்றரிச னக்கிளற வனாகக்
காசினியி டைப்புகல்க வின்பெறுவ னென்றே. 85

இன்னருள்பு ரிந்துதன தினியபிர சாதந்
தன்னையும ளித்துவிடு தன்மையதி னன்றே
யன்னவரன் றேயடைக்க லங்கொணம தத்தி
மன்னுமலை யானெனப்பின் மகிழ்ந்துமொழி குற்றார். 86

மற்று மூன்றினிற் சௌளமும் வனைத்துபின் னைந்தி
னுற்ற சூரிக ளக்கரப் பயிற்சியு முனுற்றக்
கற்ற யாவருங் களிப்புற வேங்கடா ரியருஞ்
சொற்ற தோர்தரஞ் சொலிப்புற மதியினுட் பயில்வார். 87

பயிலு பாலிய பருவம திடையொரு பகலே
வெயில்வி டுந்திரு மேனியிவ் வேங்கடா சிரியர்
மயல றுந்திரு மாமனோ டெழுந்தன ரம்மா
ளுயலு றும்பொரு ளுரைத்தருள் கோட்டியைக் குறுகா. 88

விருத்த ராமிரு விதத்துமம் மாள்பதம் பணியா
வருத்தி யோடெழுந் தொருசிறை யடங்குபு நிற்கக்
கருத்து மம்பகங் களுமவர் மேனியிற் கலக்கச்
சிரித்த வானனத் தொடுமிவர் திகைத்திருந் திட்டார். 89

வடக்கு றுந்திரு வீதியிற் பிள்ளையும் வனப்பிற்
கிடப்பெ ருங்குணத் திணையிலாச் சிறுவரியா ரென்ன
வடுக்கு மென்மரு மானென வப்புளா ரறைய
வடக்க லின்றுளத் ததிசயங் கிளர்ந்தன ரவரும். 90

பின்ன ரெங்குநா நிருத்தினம் பெருகுநூ லென்ன
மன்னுஞ் சீடரை வினவலு மலர்முகத் தம்மாள்
பன்ன ருந்திருத் தூப்புலன் பழுதறு வடிவின்
மின்னு கண்கருத் தழுந்திட மெய்ம்மறந் தவர்கள். 91

விட்ட தானமு மயர்ந்தனர் வெருமனே விழிக்க
மட்ட றுமலர்ச் சோலையந் தூப்புலார் மன்ன
னிட்ட மாயிவ ணெழுகையி லெளியனேன் விடுக்கப்
பட்ட தானமு மிதுவன்றோ வெனவதைப் பகர்ந்தார். 92

கேட்ட வத்திரு மொழிதனைக் கிளர்தரு மம்மாண்
மீட்டு மிக்கிரும் பூதொடும் பெருமித மெய்தித்
தீட்ட ருந்திற லவர்தமை திகழ்புயத் தணையா
வேட்டு மோந்துபின் புச்சியை விழுமிதிற் பல்கால். 93

முன்ன ரின்புலத் தியன்பாா சரனெனு முநிவன்
றன்னை யின்னருள் புரிந்தவத் தகையென வருளிப்
பொன்னை யொத்தவே தாந்தமிப் புவியிடை யிலகப்
பண்ணி வேறுபுன் மதமெலாம் பாறிடத் தகர்த்தும். 94

வேத பாரகர் பணிதர விளங்குபு மற்றுங்
கோத றும்பல குணனிலாங் குன்றெனக் குலவும்
பூத லந்திகழ் குருவெனப் பொலிகெனும் பொருளான்
மேத குந்திருச் சுலோகமொன் றிலகுற மிழற்றி. 95

ஏயு மோரவ தாரமா மிதுவென வாழ்த்தித்
தூய பூதமா புரியிறை துடக்கமாங் குரவர்
வாயி லாய்வரு மரபினின் பொருளெலாம் வழங்கற்
காய பாத்திர மாமவ ரொருவரே யென்றும். 96

மூப்பி ஞெந்தன மாதலா னுமிவர் முகப்பக்
கோப்பு டன்புகன் றுவப்புறக் கொள்கிலே மென்றும்
யாப்பி னுள்ளயர்ந் தப்புள்ளா ரருகுற விளித்துத்
தூப்பு லையனுந் துணைகெடத் துலங்குறு மிவர்க்கு. 97

மந்தி ரார்த்தமு மருவுசீ பாடிய மதுவுஞ்
செந்த மிழ்த்திரு மறைதனிற் செறிந்தசெம் பொருளு
முந்து நம்முடை யவருள முவக்குமா முழுதுந்
தந்து காண்மினென் றவர்கரம் பிடித்தனர் தந்தார். 98

வேறு

சின்னு ளாங்குச் சென்றபி னம்மா டிருநாடே
வுன்னு வேகத் தேசிகர் பாத முளங்கொண்டே
துன்னு வப்புள் ளாரெழு வாயாந் துகளற்றோ
ரன்னார் செல்வப் புத்திர ரம்பொற் கரத்தானே. 99

வீறூர் வேத மந்திர லோபம் விளையாமே
யாறு மாயி ரம்பொ னதற்குச் செலவிட்டுக்
கூறு வாருங் கூர்தர மோதஞ் சரமத்துப்
பேறுஞ் செய்கை பேணியி ழைத்துப் பெருகுற்றோர் 100

ஆடுஞ் சீலக் கம்பர மெங்கும் வெயில்காணு
நாடுந் தூப்புன் னுதனுபன யனங்கொள்ளாப்
பாடும் வேத மேவையு மோர்கால் பயில்வுற்றே
தேடும் யாமு னைத்துறை வாரிற் றெருண்டாரால். 101

அப்புள் ளாரப் பிள்ளையி னுண்மை ரறிவிற்கிங்
கொப்புள் ளாரா ரென்றுளம் பொங்கி யொளிர்சத்தம்
வைப்புள் ளாடும் வாதநூ லெல்லாம் வழங்கப்பின்
னப்புள் ளாடுங் கேதன னுண்மை யறிவிப்பான். 102

வாயா மந்தி ரத்துட னேயப் பொருளும்பண்
பேயா வீறும் பாடிய மாதி யெழின்மன்னுங்
காயாவண்ணற் காகுவ வெல்லாங் கலைவல்லோ
ராயா விம்மி தங்கொள வல்லே யறைதந்தார். 103

சத்தஞ் சோதி டத்தொடு சாலுஞ் சுவையாவுந்
தத்துங் காவி யங்க ளலங்கா ரமுமெல்லா
நத்துங் கன்ம நாடு பிரம நவின்மீமாஞ்
சத்தின் னூலுஞ் சாற்றிட வொன்றே முறைகேளா. 104

என்னே கற்று ரெல்லையி லின்னூற் குவையாவும்
முன்னே யெட்டெட் டென்றுல கோது முது நூல்கண்
மன்னே செய்தற் காமுர மற்றும் மலிந்துள்ளார்
பொன்னே யொப்பார் போல் பவ ரிந்தப் புவிமீதார். 105

கண்டா ருள்ளங் காமுற விந்தக் கலைஞர்க்கண்
மண்டா மாழ்வார் மற்றுயர் நாத முனியுள்ளக்
கண்டா மாநற் பேரனு முன்னுங் கலைவல்லோர்
கொண்டார் வாசங் கூர்தர வென்றுட் குளிர்ந்திட்டார். 106

## வேறு

ஞானமோ டொழுக்க மாதி நற்குணக் கிடமா யிங்க
ணுனிலத் ததிச யித்து நாலைந்து வயதி னெல்லா
நீனிற முகிலைப் பேணு நின்மல ரடியு மாசா
னுவ ரிவரோ யென்ன யாவரு மறைய நின்றார். 107

நின்றவப் பொலிவைக் காணு வப்புள்ளார் நிலவு மில்வாழ்
வென்றெடுத் துரைப்ப தேமிக் கினியதென் றிரண்டி னுன்னு
மின்றெடுத் தனைய மேனி மங்கையா ரெனுமின் பேரோர்
துன்றறற் குழலி னாளைத் தூயமா மரபிற் பேசி. 108

பல்லியங் கறங்க வேத பாரகர் மறைக ளோத
மெல்லியற் சுமங்க லிகள் சோபன மிடைந்து பாட
நல்லியன் முகூர்த்தந் தன்னி னுவல ராசி கூறச்
சொல்லிய விதியின் வண்ணஞ் சூழ்மணம் புரிவித் தாரால். 109

குழைகிழித் தகன்ற கண்ணு டிருமங்கை யெனும்பேர் கொண்டா
ளழகினுக் குறையு ளாளவ் வணங்கனு ளுடனே யையன்
பழகியிற் றரும மெல்லாம் பண்புற விழைத்து வையம்
விழைதரத் தரிச னத்தை விளக்குபு விளங்கி னாரால். 110

பிள்ளையார் திருவா கத்தை யப்புளார் பெரிதுங் காணு
வள்ளனம் வசத னன்று கனவிடை யளித்த மாற்றந்
தெள்ளிதிற் பலித்த தென்று திருவுள மகிழ்மீ தூர
வெள்ளரு மவர்க்குக் கண்ணி னெச்சிலொன் றெய்தா வண்ணம். 111

பரமதம் பறக்கப் பண்ணிச் சுயமதம் பல்கச் செய்தற்
குரமிகும் வணமு முன்னி யுவர்தமை யருக மைத்துக்
கருடமந் திரத்தைக் காதிற் புகட்டுபு யதிமன் செல்வந்
தரணியிற் றழைக்கு மாறு தாங்குகென் றருளிச் செய்தார். 112

கழிவுறப் பகலுஞ் சில்ல வங்ஙனங் கருதப் புள்ளார்
மழைநிறக் கரிய மாலின் மகிழ்பதம் புகுத வீழாக்
குழைதருந் திருநோய் மேனி கூர்தர மருகற் கூவி
விழைவொடுங் கடைக்கண் செய்து விளம்புவ ரிதனை மாதோ. 113

தடைவயற் பூதூ ரையன் றரிகின நுமது வாயா
லுடைதிரைப் பரவை ஞாலத் தோங்கிட வவரி னுள்ள
முடையதென் றுரைத்துள் ளார்நம் முயர்நடா தூரம் மாளத்
தடமதி னடையு மிந்த வவரடி நிலைக டாமும். 114

அகமெனு மாணி யத்தை யழித்திடுஞ் திகிரி சங்கும்
வகையுறப் பெறுதி ரென்று வழங்கிட வவரும் வாங்கி
யுகவொடு சிரத்திற்சூடி யுஞற்றுநா டோறு முய்வான்.
மிகுதருந் திருவாராத னத்துடன் மிளிரவைத்தார். 115

வைத்தவர் வனச மானு மடிகளைத் தமது கண்ணி
லொத்துபு விழிநீர் வார வுளைந்தன ரொதுங்கி நிற்பத்
தொத்தறு மவரும் பிள்ளை யாரொடு துதைந்து நிற்கும்
பத்தர்கட் கருளிப் பாத தீர்த்தமும் பரிவின் மற்றும். 116

தந்திருக் குரவர் பாதந் தகவுற நினைந்துகொண்டே
மூந்துறத் திருவை குந்த முதமுடன் மிடையத் தூப்பு
லெந்தையா ரெழுவா யாய முதலிக ளிரங்கிச் செய்தா
ரந்தவப் புதல்வர் கையாற் சரமகைங் கரிய மார. 117

வேறு

அதன்பிறகே வேங்கடவா ரியர்காசி
யாதியெழி னகரி யெல்லா
மிதம்பெருகுங் கச்சிதனக் கிணையாகா
வெனவிலகு மதன்வா யொன்றி

முதம்பெருக மொழிமுனிவ ருரைகளெலா
முகில்வண்ண னுவக்க வன்னன்
மதம்பெருக மொழிகுறவர் வார்த்தைதனக்
கிணையாகா வென்னும் வண்ணம். 118

எப்பொழினும் பேர்போய வெழிற்குரவ
ரிசைத்திருவாய் மொழிகள் கொண்டே
யொப்பரிய சிந்தாத்தப் பிரவசன
முனுற்றுபுநன் கொழுகு நாளிற்
செப்பரிய வீரவல்லிப் பேரருளா
ளையனேடுஞ் செறிந்த ஞானத்
தப்பெரிய கிருட்டினமா சாரியரே
யாதியர்வந் தடைந்தா ராங்கே. 119

வந்தவர்க்குத் திருவிலச்சி னையைமுதலா
வனைந்தருளி வையந் தாயோன்
மந்திரமந் திரார்த்தமினு மங்களஞ்சேர்
விசேடமெலா மயர்வின் றீன்றே
பிந்தியுய்யப் பெரியதிரு வடியரைநேர்ந்
தடிபணிந்து பிறங்கக் காண்பான்
முந்துமயல் கொடுநினைந்தம் மூர்த்தியருள்
புரியுமிட முளத்தா ராய்ந்தார். 120

அன்றுலக முண்டுமிழ்ந்தா னுணைதனிற்
றன்மூக்கி னகழ்ந்து போழ்ந்து
குன்றடரும் குடதிசையிற் றொணர்ந்ததனு
னப்பெயரி னெழுகிக் கூறுந்
துன்றுபுனற் றரங்கிணியின் கரையினவ
றுளமுவக்குந் துணைய தாயும்
மன்றலரும் செங்கமல வல்லிமண
வாளனிதம் மணப்ப தாயும். 121

விண்முடிசே ரோடதியென் விழுப் பெயரார்
வெற்பருகே யொளிர்வ தாயுங்
கண்மனமுங் கண்டவரைக் கவர்வதுமா
வளரைந்த புரத்துட் காண

வுண்மகிழத் துணிவெய்தி யெழுந்திடையே
யோங்குமது ராந்த கத்தின்
மண்மலிய வெழுந்தருளுஞ் சானகியி
ராமனடி வணங்கி வாழ்த்தி. 122

கடலாடைக் காசினிநற் கதிகொள்வா
னவதரித்த பூதூர் வள்ளன்
மிடலாகு மைந்திருத்த மிடைந்தமலர்
மலிமகிழை யிறைஞ்சி மீளா
விடலாகா விழைவதனுக் கிருப்பிடமாந்
திருவைந்த புரத்தே மேவி
மடலாறுந் தாமரையுட் பெடையொடன
மருவுகலு ழன்ற ளுற்றில். 123

நீராடா நித்தியகன் மம்புரிந்து
நிவந்தேறி யதனீள் கோட்டிற்
காராருங் கடிமதில்சூழ் கனகமுடிக்
கோபுரநீள் ககனந் தாவுஞ்
சீராருஞ் சினகரத்துட் சென்றுமுனஞ்
செங்கமலக் கொடியின் பாத
மாராவன் புடனிறைஞ்சி யன்னையருள்
மன்னியவ ணகன்று மற்றும். 124

அயனரனிந் திரனாதி யமரரெலா
மருஞேக்கா மானைக் கஞ்சி
நயனுறவே தந்தொழிலை நடத்துவதா
ளருந்தெய்வ நாத னென்னும்
பெயருடைய பெருமாளின் திருவடிமுன்
முடியளாவும் பெட்பிற் காணு
வியனழகைப் பன்முறையே வீழ்ந்தொழு
துளமுருகி விழநீர் வார. 125

ஆயிரநா வுடையானு மளவிறந்த
பொழுதுணர்ந்தும் பழிச்சற் காகா
மாயிருசெங் குணம்பலவு மெடுத்தேத்த
மகிழ்ந்துதிரு மலராண் மார்பன்

சேய்திருச் சிறக்கணிப்புஞ் செய்திவனுஞ்
சித்தியுறு மெனவே செம்மை
யாயைவிட் டொடுபிரசா தமுமளிக்க
வவைமணந்துட் களிப்பின் மீண்டார். 126

மீண்டிவரா வோடதிவெற் புயர்முடியை
மிடைந்தங்கா ரழகு சிங்கன்
வேண்டியுறைந் தருணிலயக் கெதிர்சோம
சவனமெனத் தழைத்து வீறித்
தீண்டுமல ரைந்தருவைச் சினைக்கரத்திற்
றிகழரசி னடியைச் சேர்ந்து
காண்டகுசெங் கருடனது மந்திரத்தை
யுருவேற்றிக் கடிது நோற்றார். 127

வேறு

வைகல் சில்லங் ககல மாமறை
மெய்க லந்தொளிர் மேனி வீமனும்
பொய்க முன்றவப் புனித ருக்கெதிர்
வைக வன்னவர் வளர்மு தத்துடன். 128

பாடி யாடியப் பன்ன காசனன்
றூட கப்பொருப் பனைய மேனியை
வீட ரும்வியப் புடனும் வீழ்ந்துகண்
டாட லேவையும் மறிந்து போற்றினார். 129

போற்ற வத்திருப் புட்க ளீசன்முன்
பாற்றல் சானும் மாழு வார்தூகண்
மாற்று மந்திரார்த் தங்க ளோடெலா
மேற்ற நாதமா முனிகட் கீந்தபோல். 130

பூத மாபுரிப் புனித ரின்றுறை
மேதி னித்தலை மிளிர்மி டுக்குறற்
கோதி னரவ ருயர்செ விக்குளே
யாதி மாவயக் கிரிவ னம்மறை. 131

அந்த மந்திரஞ் செறிந்த வாரியர்
செந்த லைத்திரு வயின தேயனைப்
பந்த நாகனே பதும நாபனின்
முந்து வாகன முடிவி லாற்றலாய். 132

ஆர ணக்கட லமுத மீதெழுங்
கார ணத்துவெற் பாய காவலா
சீரெ ணற்கருஞ் செவ்வி யோய்திரு
நார ணற்கடி யவரி ணுயகா. 133

தூயநின்றிருத் தூவி யானெழும்
வாயு வால்வட வரைந டுங்குமே
மாய வென்வினை யருள்க மற்றெனச்
சேய பொற்பதந் தொழுது செப்பினர். 134

காசி பன்றரு கனக வெற்பனு
ஞசி சொல்லிமற் றரிய தூப்புலார்
தேசி கன்றனைச் சிறக்க ணித்துடன்
வீசி வெஞ்சிறை மிசையெ ழுந்தனன். 135

பின்பு பிள்ளையா ரன்று வேதனுக்
கன்பி னரண மளித்த மாமுகத்
தென்ப ரன்பத மலரி ரண்டையும்
வன்பி னுண்மலர் வளர வைத்தரோ. 136

தாமொ ருதியந் ததையு மெண்ணிலார்
பூமி யெங்கணும் பூத வூரிறைக்
காம ருந்தரி சனம லங்குறற்
கேம வம்மறை யிமைய வெண்ணியே. 137

அன்ன மந்திரம் பகலு மல்லுமே
முன்னி நாவினன் முணுமு ணென்னவே
பன்னி யன்புமீ தூரு பான்மையார்
மன்னி ணுரெதிர்ந் தருளு மாயனே. 138

வேறு

உள்ளா யவாறு பகையோட வொறுத்த வையன்
விள்ளா தவன்பின் விறலீர்த்திட நாறு குல்லைக்
கள்ளாட லங்கள் கமழும்புய மாக்க ழுத்தன்
றள்ளா வருளி னவர்கண் ணுறத் தானெ ழுந்தான். 139

அண்டங் குலுங்க வதிருங்கணைப் போகு வெள்ளைக்
கண்டந் துலங்க வொளிருந்திரு மேனி கண்ணிற்
கண்டங் கமெங்கும் புளகுற்றிடக் கைகள் கூப்பித்
தண்டம் புரிந்து தாமற்றமு தத்தி னடி. 140

பாடிக் குதித்துப் பரவப்பல வாய கல்விக்
கூடுற் ருெளிரு மொருமூலம தாய வையன்
மோடுற்ற பூதூர் முனியின்னெறி முற்று மோங்க
நாடிப் பகர்ந்து நலமுண்கென நன்க றைந்தே. 141

காலுங் கருணு ரதமார்கடைக் கண்ணி னேக்கிப்
பாலுங் கறுக்கும் படிவத்துடன் விண்ணிற் பாயக்
கோலங் குலவுங் கொழுந்தூப்புலர் முன்ன ராங்கே
யேலுங் கலைக ளவையோவவை யாவு மெய்தி. 142

இந்தீ வரத்தி னெழிற்ருசர திக்கு முன்னர்
வந்தே வலுற்ற வகையத்திர வித்தை யெல்லா
மெந்தா யருள்க வெனநிற்புற வேன்ற வற்றைக்
கந்தா யுலகங் கரையேறிட மின்னி ஞரால். 143

முன்னே பரியின் முகன்ருேத்திர மின்ப முற்றும்
பொன்னேய் கருடற் குறுபைம்பதும் பொற்பி ணுற்றி
மின்னேய் கமலே மிடைதேவர்க ளுய்கன் பாத
மென்னே யமென்றங் கெழுந்தார்தொழு தேத்தி ஞரே. 144

என்ரு ளடைந்தார்க் கிடுக்கண்வினை கீழி றங்கு
மென்றே குறிப்ப தெனக்கைம்மலர் தம்மி லொன்று
பொன்னேய் விரல்கள் புவிநோக்கம லர்த்தி நிற்கு
மென்றே வகாத னிதயங்குளிர்ந் தன்பி னேக்கி. 145

செந்தா மரைக்குஞ் சிறுக்கந்தருந் தாளி னீருங்
கொந்தார் துளவுங் கொளவீந்துகு ணத்த கத்தீர்
நந்தார் காத்து நமதின்விட யம்பொ ருந்துஞ்
சிந்தா தநூலுஞ் செயுமிங்கெனச் செப்பி னுனே. 146

வேறு

சேலாரும் வேல்விழித்தோ தாரம்மன் செய்தவத்தின்
பாலால வதரித்த பார்புகழ்வே தாந்தகுரு
நாலாய வாரணமு நாடரியா னன்மொழியை
யேலாவி டையுடனே யெழின்மாளி கைமணந்தே. 147

என்றேவ நாயகபஞ் சாசத்து மின்பொழுகு
நன்றேயச் சுதசதக மென்னு நறுநூலு
பொன்னேய் வடமொழியிற் புகன்றுபுவ னஞ்சிறக்கப்
பின்றேன்பெ ருகதமிழ்வ ணேந்தருளப் பேணியுளம். 143

ஊசற்பா பந்துப்பா வொண்கழற்பா வம்மனைப்பா
வேசற்பா வெழில்வளரு நவரத் தினமாலை
தேசற்காத் திருவழியு மும்மணிக்கோ வையெனவே
பேசற்கா மொன்பதுநூல் பெட்புறவங் காற்றியபின். 149

ஏதேறு நிகரரிய வித்தகைநூ லின்முனைவா
யாதார ஞணதனை யாற்றியதே யரும்பயனென்
றேதாவ வையாவு மொண்டிருவாழ் மார்பனிரு
பாதம்பு யத்தளித்துப் பணிந்தவனைப் பழிச்சினரால். 150

ஏமாம்பு யக்கொடியு மெம்பெருமா னுங்காணு
வாமாமெ னவுகந்திதம் மாற்றறெலா மில்வரிய
வாமாக ரநூலின் வாயான்வி ளக்கியதா
ஞமாயெ திரியற்று நற்சிறப்பா நுந்தமக்கே. 151

நஞ்சடகோ பந்தனையே நல்குதுமென் றேயருள
வுஞ்சனனென் றேயவரு மேன்றுதலை யுண்மகிழ
வெஞ்சலிலென் றரிசனத்தை யீண்டுறைந்தே யெவ்வுலகும்
விஞ்சவி ளைந்துவி ளக்குகென மீண்டுரைத்தார். 152

மற்றத்தி ருத்திவிய தம்பதிகண் மாற்றமதைப்
பெற்றப்ப டியதிரா சன்மதமே பேறுளதென்
றற்றற்ற கம்வறிதே யயற்சமயத் தாரிரியக்
கொற்றத்தி றங்கொடுசெய் தங்கே குலவுற்றூர். 153

நண்ணுதா ரன்றிரிய நாட்டும்பெ ருநூலைப்
பண்ணூர்ப ரமதபங் கம்மென்றே பகருமுல
கண்ணுரு மேத்தெடுக்கு மப்பெரிய ராற்றுதவி
யெண்ணுத வைணவரும் வைணவரா மென்பதென்னே. 154

அம்மான்பின் றேரமைமைத் தரக்கர்கு லங்களைந்த
பெம்மான டிதொழுது பேரழகைக் கண்டிழைத்த
செம்மாம றைநிகருஞ் செப்பரிய தோத்திரத்தை
யெம்மார குவீர கத்தியமென் றறைகுவரே. 155

முல்லைமு கைமலரு மொய்குழலா ரின்குரவை
யல்லும்ப கலுமயர்ந் தவனைக் கண்டிழைத்த
சொல்லரிய தோத்திரத்தைக் கோபால விம்சதியென்
றெல்லவருங் கண்ணுற்றே யின்புறுவ ரன்புறவே. 156

சொல்லாருந் தூப்புலிறை யில்வண்ண மாங்குறைய
வல்லாரு யர்நூலில் வந்துபல ரக்குரவ
ரெல்லாருங் கேட்ப விசைத் தருளும் வைகரியு
மெல்லாரும் பூதூரி றைவரருள் பாடியத்தை. 157

கூடாருங் கொண்டாடக் கூர்ந்தொழுகு மின்சுவையே
நாடாரு நற்கவிக ணவிலும்பெ ருந்திறனுங்
கோடாக்கு லைகுலையப் பரசமயக் கொள்கையெலா
மாடாவ மர்வாதத் தாங்கடையும் வென்றிகளும். 168

காணுவி யந்துகளப் பென்னுங்க ட்லாடி
யேணுர்க விதார்க்கி கசிங்கமென் றிரைந்து
பேணுவி றைஞ்சிப்பெ யர்ந்தனர்க ளன்றுதொட்டுக்
கோணுடிக் கொண்டாடு மப்பெயரை யெப்பொழுதும். 169

## 27-வது சருக்கம்.

வீணைமா முனியு மஞ்ச விழுமிய பிரம சாரி
யானெனப் புகன்றவ் வண்ண மபிமன னயர்ந்த சேயுங்
காணவா னவரோ டாரு முயிர்த்தெழக் கருணை கூர்ந்த
மாணரா வணையின் பாத மனமுறூர் மனிதர்தாமே. 1

ஆனிய மதன்பின் சில்ல வாங்கிறந் தகத்தி னுடி
வானவ ரிறைவன் கஞ்ச வல்லியா ரடியுங் காணுத்
தேனிமிர் துளப தீர்த்தத் துடனவர் விடையு மேய்ந்து
கானமர் பொழில் சூழ் கோவ லூரினைக் களித்துச் சென்றூர். 2

அஞ்சிறை யெகினங் காரண் டங்களு மரிய நேமி
மஞ்சுள பதங்கந் தாமு மணந்துள பெடைக ளோடுங்
கொஞ்சிய படியு லாவுங் குளிர் புனற் பெண்ணை யாடி
விஞ்சிய கரும மெல்லாம் விழைதர விழைத்துப் பின்னும். 3

பொன்முடிச் சிகரி வாயிற் சினகரம் புகுந்து மூவர்
முன்மிட னுணர்ந்து போற்ற விடைகழி முளைத்த வாயன்
றன்மல ரடியிற் றூழ்ந்து தகைந்தவ னருளை வையஞ்
சொன்மிகுந் தேக ளீச தோத்திரந் துளைவிற் பாடி. 4

அவனருள் விடையு மேய்ந்தங் கக்னெழுந் தமரர் தம்மூர்க்
கிவணினி தெனவெப் போழ்து மீண்டின ருறையுங் கச்சி
யிவர்தரு நசையிற் சென்றங் கீர்ங்கதி ருடலந் தேய்ந்தே
யவிர்தரு மெயில்கள் சூழு மம்மணி நிலயம் புக்கார். 5

புக்கவர் பரிசத் தானும் புரோக்கணம் புரித லானுந்
தொக்கவெம் பவங்க ளெல்லாம் தொலைதருந் திவியா னந்த
புட்கர ணியினன் றாடிப் புரிந்துநாட் கரும முன்னர்
நெக்குரு ககத்திற் றாயார் நிலவுதாள் பணிந்து போற்றி. 6

கவ்விய வபையின் வேதன் கவின்பெறு மகத்தெ ழுந்த
கொவ்வையங் கனிவா யையன் குரைகழ றொழுதெ ழுந்து
செவ்விய சிறீக்க ணிப்பெற் கிளைமையிற் செய்தா யைய
வுய்வகை யெளிய னென்ன வுதவியை யுணர்ந்தன் றேத்தி. 7

அன்றெதிக் கிறைவர் கத்தி யந்தனி லருளிச் செய்த
வின்றிரு பிரபத் திக்கே யியைந்தசெந் நெறியை நாடி
நன்றுறப் புள்ளார் தங்க ணல்கிய படியே யுய்வான்
றுன்றுறப் பொலியு மங்க பஞ்சகத் துவக்கு மென்னோ 8

பரசமர்ப் பணத்தை யன்னான் பாதபங் கயமே விட்டுப்
பரசிநிற் பரராய் நிற்கப் பங்கய விழியோ னன்பின்
விரைசெறி துளப தீர்த்தமாதிதன் விழுமி தீர்ந்தே
யுரைசெறி பிரபந் தங்க ளுஞற்றுக வெமக்கென் றோதி. 9

ஆரிய ருடலமெல்லா மாதரத் தருளிச் சேப்பச்
சீரிய சிறக்க ணிப்பச் செய்தனன் விடுக்க வன்னார்
நேரிதி னவைக ளெல்லாஞ் சிரந்தனா னிவல வேன்றே
யாரினி யெமக்கெங் கீடென் றவனருள் கருதி மீண்டார். 10

மீண்டயன் மிளரு மாழ்வா ராரியர் நிலைய மேவிக்
காண்டகு முறையி னன்னார் கழல்களும் பணிந்து போற்றிப்
பூண்டவ ரருளு மீண்டு புரிபெங்கும் புரிந்து வாழ்த்த
வீண்டினர் படரத் தொண்டர் மாளிகைக் கெழுந்தார் மன்னோ. 11

வரந்தரு வரத னாணை நிறைவுறும் வகையே நாடி
யுரந்தரு முயர்வார் நியாச சதகமு முணர்ந்து போற்றிற்
புரந்திடும் வரத ராச பஞ்சாசத் ததுவும் பொற்பிற்
பரந்திடுந் தேவ பாடை பயனுற விழைத்து மற்றும். 12

அருத்தபஞ் சகமு நாடு படைக்கலப் பத்தும் வீறுந்
திருச்சின்ன மாலை சீவை ணவதின சரியை யோடு
முறைப்பவர்க் குயர்வே யோங்கும் பன்னிரு நாமப் பாட்டுந்
திரைங்கட லமுத மன்ன செந்தமிழ் கவியிற் செய்தார். 13

தித்திக்கு மத்தி யூரைச் சேர்பவர்க் கெனவே நாடி
யெத்திக்கு மிசைக்கு மந்த வைந்தினி னிறுதி யோதி
மற்றத்தி கிரிமா காண்மி யம்மென மகிழு நூலோன்
றத்தக்க திவிய தேசத் தண்ணலு மறைந்தா ரன்றே. 14

வேறு

பின்னமருங் கருகிருந்து கடைக்கணிக்கும்
விளக்கொளியான் பெருமை தன்னை
மின்னுசர ணுகதிதீ பிகையெனவே
மிழற்றறிய நூலா யாற்றி
மன்னுதரு வட்டபுயம் வெஃகாவே
ளுக்கைகளில் வதியு மாயன்
பொன்னடியும் புகுதிறைஞ்சி யங்கங்கே
பொலியுதிரு மூர்த்தங்கட்கும். 15

ஏத்தனுறு மட்டபுயாட் டகந்தனையு
மேமமுறு மெதோக்த காரி
தோத்திரமுங் காமாசி காட்டகமுந்
தோமறவே நிரலே யாற்றிப்
பூத்தலையிற் பவளவடி யோதிமமின்
பெடையோடும் பொருந்தியாடு
மார்த்தகவன் பனைசூழு மணிமதிலார்
புட்குழியை யடைந்தா ரன்றே. 16

அப்பதியி னலங்குதிரு மரகதவல்
லியனடியைத் தொழுது முன்னர்
முப்பொழுது முத்தொழிலு மூவுருவுந்
தானுகி மூல மாய
வொப்புயர்வின் ஞெளிர்விசய ராகவனைத்
தொழுததன்பி னவர்க்கே யொன்றுஞ்
செப்பரிய பரமார்த்த துதியென்றோர்
செழும்பனுவ லருளிச் செய்தார். 17

மீண்டொருகாற் சுதரிசனுட் டகஞ்சோட
சாயுதஸ்தோத் திரமு மேன்மை
பூண்டொளிரப் புகன்றருளி யுத்தமவ
மர்த்தலமென் றுவந்து போற்று

மேண்டிகழுங் கவிப்படியி ராகவனுங்
கண்ணறுமிவ் விறைவன் பங்கென்
றுண்டவறி வாளர்சொலு மருளாளன்
விடயமுற வருளிச் செய்தார். 18

பவக்கடலின் சுழிவலியைப் படலாற்றுந்
தேசிகர்கட் பார்வைக் குற்றே
னவைக்கிடனுந் தொழில்களிலார் நசையற்றே
னயல்விரகோ வெவையு நண்ணேன்
தவர்க்கரிய தத்துவஞா னக்கனிெனன்
சங்கையெலாந் தகர்த்துத் தேர்ந்தேன்
சுவைக்கனியே யளப்பரிய வருணிதியே
யடியர்படுந் துயக்கந் தீர்ப்போய். 19

மூலமென வோலமிடுங் கரிக்கருளுங்
கரிகிரியார் முதல்வா வுன்றன்
சீலமுறுஞ் சேவடிமே லென்பரத்தைச்
சேர்த்தினனு யினியோர் துன்பென்
பாலணுகா தென்றடியே னிர்ப்பரனாய்
நிர்ப்பயனுய்ப் படிந்தே னென்னுங்
கோலமுறும் பொருளமைந்த கவியொன்றை
நினைந்தனருட் குளிர்ப்ப நின்றார். 20

அக்காலப் புள்ளாரி னருமகளாங்
குடங்கையென வகன்ற கண்ணுண்
மைக்காரின் மலர்க்குழலாண் மலர்தருபுண்
டரீகாக்கர் மனைக்கி ழத்தி
தக்காரே புகழ்தருமோர் தனயசிகா
மணிவயிறு வாய்த்தாளென்ன
மிக்காய வுளமகிழ்வி னெழுந்தருளி
யிளிர்மகவை யருளாளேக்கி. 21

வேறு

தான வாரித யைக்கிட னுமதற்
கான காவலி லச்சினை யாற்றுபு
சீனி வாசனெ னுந்திரு நாமமு
நானி லம்புகழ்ந் தார்த்திட நல்கியே. 22

செய்தி யன்னதி ராயனோர் சீடன்பா
லெய்தி யுத்தர தேயமி ருந்தருண்
மெய்தி கழ்திரு மேவிய தந்தைபா
ணெய்து சேரநு வன்றுடன் விட்டனர். 23

விட்ட நன்மை யறிந்த விழுமியோர்
மட்டொ ழிந்தம கிழ்வுள மீறவே
தொட்ட ருந்தவெ ழுந்துளி தூயநீர்
பட்ட தென்புலப் பண்ணவ ராடினர். 24

ஆடி மைந்த னவதரிப் பென்விழா
நாடி நன்கு சொண் டாடிந லக்கெலாம்
வீடெ னுந்திருக் கச்சிமி டைதரற்
கூடெ ழுந்தந ரையுட னுற்றனர். 25

அன்றி ராவவர்க் காயக னவிடை
யென்றி ருக்குரு கைப்பிரான் பிள்ளானுக்
கன்று பாடிய காரா ருளிய
வொன்ற யத்திருக் கண்டனு முற்றரே. 26

ஐய நின்திரு மைந்தனுக் காகரஞ்
செய்யி லச்சினை யோடுதி ருப்பெய
ருய்ய நல்கிய வொண்டிருத் தூப்புலன்
கையி லெம்மைக் கலந்தளி யென்றனன். 27

கண்டி றந்துக ருதிக்க ணுவினை
மண்டி ராயனி டஞ்சொல மற்றவன்
புண்ட ரீகக்க ணர்பதம் போற்றியே
யெண்ட ணந்தப ரிசுக ளீந்துடன். 28

எம்மை யுய்யவி ழைத்தரு டேசிகர்
நும்மி ஞரென நுண்முக மன்பல
செம்மை யார்தரச் செப்பின னன் றுபோய்
வம்மி னென்றுவ ழிவிட்டு மீண்டனன். 29

பின்ன ரந்தப்பெ ருப்புக ழாரியர்
மின்னு பொன் மணித் தண்டிகை மீதிவர்ந்
தின்ன ருந்திற லேத்துற நான்மறை
மன்னு நாவல ரேந்தம திக்குடை. 30

அள்ள ருந்து மமுதென வின்னிசை
யெள்ள ரும்பல மேளமி யம்பிட
வினள ரும்பல வீறுட னேகியே
கள்ள ரும்பொழிற் கச்சியை யண்மினா. 31

அந்த வேலையி லானைம லைப்பரன்
சந்த வார்நில யந்தனைச் சார்ந்தவர்
கந்த மாலைமு தற்பல கைக்கொளா
வந்தெ திர்ந்தனர் வண்மைவ ரிசையின். 32

சீரி னன்னவர் சிதரன் கோயிலின்
காரி யங்கொளுங் காவல ரன்றியும்
பேரி ராப குருவெனும் பெற்றியா
ளுரு மவ்வன மன்பினெ திர்ந்தனர். 33

வேங்க டாரிய ரும்மய வெஞ்சிர
னீங்கெ ழுந்தன னென்றெதிர் போதரப்
பாங்கி னன்னவர் பண்புருந் தூப்புலர்க்
காங்கு பன்முறை யஞ்சலி யாற்றியே. 34

கண்ட சொப்பனச் செய்தி கழறியப்
பண்டை மாமுக ளைய பரன்றனைக்
கொண்டு நாளுங் குறைவறும் பூசனை
யண்ட யாவையையு மாற்றுகென் றீந்தனர். 35

பிள்ளை யாரடங் காது பெருமித
முள்ள நின்று புறம்பெழுந் தோங்குற
வள்ள வாய்மலர்க் கைகளி லேந்தியே
கள்ள ருந்திக்க ளித்தன ரென்னவே. 36

ஆடி யாடிய கங்கரைந் தேயிசை
பாடி நாடிக்கு ணங்கள் பலபட
நாடி யாவது நற்பய னெய்துமா
றீடி லாதவென் சொற்களி னேத்தியே. 37

அன்றி ழைத்தவ யமுக னின்றுதி
யின்றெ னக்குப்ப லித்ததென் றேயிரைந்
தென்று மெற்கொரி டுக்கணி லையெனு
நன்ற தைப்படித் தாரங்கு நாடியே. 38

## வேறு

வாகத்த சித்திக்கு வரையா திசைச்செப்பி வையத் துளீர்
போகத்தை யுற்றுப்பொ ருந்துங்கள் கவிதார்க்கி கச்சீயனு
லாகிச்சி றந்துள்ள தாமென்று மொருசுலோக மங்கேவணங்
தோகைப்பெ ருக்கத்தி னுதனீறி னேத்தேமு டித்தொன்றவே. 39

அம்மாமு கன்றன்னை யன்போடு தாநாளு மாராதனஞ்
செம்மாம லர்த்தேவன் செய்தென்ன வேசெய்யு மருளாளன்பா
லம்மாவி ருத்திப்பி னடைவோடு நாறும்பூ சனையாற்றியே
யெம்மா மதத்தோரு மிரிந்தோட வயமுண்டி ருந்திட்டனர். 40

ஏகச்சி னுளங்கெ ழில்வேகங்க டங்காண வேழச்சிலர்
பாகத்த வன்கண்டை தாமாகை யானப்ப ரந்தாமனின்
பூகற்ற வடிகண்டி றைஞ்சுங்க ருத்திற்பு றப்பட்டுடன்
மாகத்தை முடிபோழு கடிகாச லந்தன்னை மணந்தேறியே. 41

வீழாவ டைந்திட்ட விமலர்க்க கம்வீழு மவைதந்தவண்
வாழாவி ளங்குற்ற வக்காரக் கனிதன்ம லர்த்தா டொழு
தூழானு ணர்ந்தேத்தி யுவந்தப்ப ரன்றீர்த்த முதலுண்டபின்
ஞூழாவெ ழுந்தந்த வடவேங்க டப்பொற்பு தாங்கண் டனர். 42

அச்செய்ய மலையென்னு மனந்தாழு வானைக்கண் டங்கேகர
முச்சிக்க ணேறிக்கு விந்தேதொ ழுதுசொன்ன முகியுந்தியை
நச்சிப்ப டிந்தாடி யலர்மேவு மங்கைப்பொ னளினப்பதம்
மெச்சிப்ப ணிந்தன்னை யருளோடு பிரசாத மிடைந்தேகியே. 43

முன்னுளடிக்குன்றி லிலகத்தி ருப்பூதூர் முனிபுங்கவர்
பண்ணுவ ருச்சித்த வாழ்வாரா சிரியர்ப்ப தம்போற்றியே
பொன்னுரு மருமத்த கோவிந்த ராயன்றன் பொற்ருடொழு
தென்னுரு யிர்க்காய விறைவா வருள்கென் றெடுத்தேத்தினர். 44

நஞ்சீனி வாசன்க ருணையென் னுங் கழைநின்று நனியூறிடு
மஞ்சாற தின்வைக லாகிக்கு விந்துள்ள வடுசர்க்கரை
மஞ்சாடு மலையாம லிந்துள்ள தேயென்று மறைதற்குறு
மஞ்சாரன் மணிமன்னு மழகாய மலைதன்னை யடைகிற்பனே. 45

* * * *

திவ்விய சூரி சரிதம் முற்றிற்று.

---